1.7.96 to 16.9.96

14609







# இந்த இதழில்..


மனுநீதித்திட்டம் 2

"கண்ணதாசா!" - முதல்வர் கவிதை 4

கண்ணதாசன் கவிச்சுளைகள் 5

புதிய மாவட்டங்கள் 6

உடனடி விவசாய மின் இணைப்பு 9

தமிழக அரண்மனைகள் 11

சோளக்கொல்லை பொம்மை 15

கொச்சைத் தமிழ் 16

உயர்ந்த மனிதர் 21

விழுப்பொருள் 24

அறிவியல் துளிகள் 27

செய்திச் சரம் 30

தலைவலி 32

புயல் 40

ஆசிரியர் மடல் 48



தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027

ஆனித் திங்கள்: 17

மலர் :27 இதழ் :1

1.7.1996

# மனுநீதித் திட்டம்!

அரசாணை (நிலை) எண். 1769, வருவாய், நாள் 28.8.1969-ன் படி பொது மக்களுக்கும் அரசு அலுவலர்களுக்குமிடையே ஒரு நேரடித் தொடர்பினை ஏற்படுத்தும் பொருட்டும், பொதுமக்கள் தங்களுடைய குறைகளை அரசு அலுவலர்களிடம் நேரடியாக எடுத்துக்கூறி, தலத்திலேயே அக்குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டும், ''மனு நீதித் திட்டம்'' என்ற திட்டம் 15.9.69 அன்று அறிமுகப்படுத்தப் பட்டது. இத்திட்டத்தின் முக்கியக் கூறுகளாவன:-

(i) இத்திட்டம் 1969 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தொடங்கும், ஒவ்வொரு மாதமும் 5 ஆம் தேதி நடக்கும்: ஒரு துணை வட்டாட்சியர் தலைமையில், வருவாய் ஊராட்சி ஒன்றியம், பொதுப் பணித் துறை மற்றும் மின்சாரத் துறைகளைச்சார்ந்த அலுவலர் குழு, ஒரு குறு வட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று பொதுமக்கள் குறைகளைக் கேட்கும்; ஒரு வருடத்தில், எல்லாக் கிராமங்களுக்கும் சென்று குறைகளைக் கேட்டுக் களைய வேண்டும் என்பது அரசின் எண்ணம் என்பதால், ஒரு குறு வட்டத்தில் 12 கிராமங்களுக்கு மேலே இருந்தால், அந்த மாதத்தில் 6 ஆம் தேதியன்று, குழு அடுத்த கிராமத்திற்கு வருகை தர வேண்டும்; பொது மக்கள் கொடுக்கும் மனுக்கள் மீது முடிவெடுக்க, புலத் தணிக்கை தேவைப்பட்டால், மேற்கண்ட குழு அத்தணிக்கையை மேற்கொள்ள வேண்டும். தலத்திலேயே முடிவெடுக்க முடியாத நிலையில், மனுக்களைப் பதிவேட்டில் பதிந்து கொண்டு மனுதாரருக்கு ஒரு மாதத்திற்குள் முடிவான ஆணை கொடுக்க வேண்டும்.

(ii) கோட்ட அலுவலர், மாதம் ஒரு முறை, குறிப்பாக வியாழக்கிழமை அன்று ஒவ்வொரு வட்ட அலுவலகத்திற்கும் வருகைதந்து மனுக்களைப் பெற வேண்டும். அவர் வருவது பற்றி பொது மக்களுக்கு முன்னரே அறிவிக்க வேண்டும்.

(iii) மாவட்டாட்சியர், முன்னரே அறிவிக்கப்பட்ட திட்டத்தின் படி, ஒவ்வொரு கோட்ட அலுவலகத்திற்கும் வருகை தந்து பொதுமக்களிடம் மனுக்களைப் பெற வேண்டும். 6 மாதத்திற்கு ஒரு முறை, மாவட்டாட்சியர் வட்ட அலுவலகங்களுக்கு வருகை தர வேண்டும்.

2. மனுநீதித்திட்டச் செயல்பாடுகள் மற்றும் முன்னேற்றம் குறித்து, ஒவ்வொரு மாதமும் மாவட்டாட்சியர்களிடமிருந்து அறிக்கைகள் பெற்று ஆய்வு செய்யப்பட்டு வந்தது. இருப்பினும், மனு நீதித் திட்டத்திற்கு, அதை நடத்தும் அதிகாரிகள் போதிய முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மாதாந்திர முன்னேற்ற அறிக்கையை அனுப்பாமலும் அல்லது காலந்தாழ்த்தி அனுப்பியும், புள்ளி விவரங்களைச் சரியாகக் கொடுக்காமலும் பெரும்பாலான மாவட்டங்களில் வழக்கமாக இருந்து வந்துள்ளது.

3. எனவே, இத்திட்டம் மீண்டும் செம்மையாகச் செயல்படுவதற்கான ஆலோசனைகள் பின்வருமாறு கோடிட்டுக் காட்டப் படுகிறது:-

(i) மாவட்டத்தில் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் திங்கள் கிழமைகளைக் ''கூட்டம் இல்லா'' நாளாக அறிவித்து, அன்று முழுவதும் அலுவலர்கள் பொதுமக்களிடம் இருந்து மனுக்களைப் பெறுவதற்கு வகை செய்ய வேண்டும்.

(ii) சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் நாட்கள் மற்றும் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் திங்கட்கிழமைகளைத் தவிர ஏனைய திங்கட்கிழமைகளில் அலுவலர்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்ளக்கூடாது. அலுவலகத்தின் தலைமை அலுவலர் எதிர்பாராத வண்ணம்





சுற்றுப் பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்தால் அவருக்கு இரண்டாம் நிலையாக உள்ள அலுவலர் பொதுமக்களிடமிருந்து மனுக் களைப் பெற்றுக் குறைகளைக் களைய வேண்டும். திங்கட் கிழமை தோறும் பெறப்பட்ட மனுக்கள் அதிக பட்சம் 100 நாட்களுக்குள் முடிவெடுக் கப்பட வேண்டும்.

(iii) 15 நாட்களுக்கு ஒரு முறை கோட்ட அலுவலர், துணை ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் ஒரு வட்டத்தில் மிகவும் உள்ளடங்கியுள்ள கிராமத்திற்குச் சென்று, மனுக்களைப் பெற்று அந்த இடத்திலேயே அதிகபட்சம் எத்தனை மனுக்களில் ஆணை பிறப்பிக்க முடியுமோ, அத்தனை மனுக்களில் ஆணை பிறப்பிக்க வேண்டும். மிகுதியுள்ள மனுக்களை இரண்டு வாரகாலக் கெடுவிற்குள் முடிவாக ஆணை பிறப்பிக்க வேண்டும். மூன்று ஆண்டுகால இடைவெளிக்குள் வருவாய்த்துறை சார்ந்த அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களால் ஒரு வருவாய்க் கிராமமும் சென்று பார்க்கப் படாமல் இருக்கக்கூடாது.

(iv) பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் முடிவெடுக்கப்படாமல் 100 நாட்களுக்கு மேல் இருக்கக்கூடாது. ஒரு வேளை சில மனுக்கள் 100 நாட்களுக்கு மேல் முடிவெடுக் கப்படாமல் இருக்கும் பட்சத்தில் அலுவலகத்தின் தலைமை அலுவலர் நாள்தோறும் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய வேண்டும்.

(v) பொது மக்களிடமிருந்து பெற்ற மனுக்களை விரைவில் முடித்து தங்கள் கடமையைச் செய்ய வேண்டும்.

(vi) 200 நாட்களுக்கும் மேல் நிலுவையில் உள்ள மனுக்கள் ''நிக்னெட்'' மூலம் கணிப்பொறியில் ஏற்றப்பட வேண்டும். அவற்றின் முன்னேற்றம் குறித்த மாவட்ட ஆட்சியர் நாள் தோறும் தாமே ஆய்வு செய்ய வேண்டும்.

(vii) முதியோர் உதவித் தொகை பெறுவதற்குத் தகுதியுள்ள எந்த ஒரு மனுதாரரும் உதவி பெறாமல் இருக்கக்கூடாது. முதியோர் உதவித்தொகை வழங்குவதற்கு உச்சவரம்பு வைக்கக்கூடாது. அதிக பட்சம் 60 நாட்களுக்குள் அனைத்து முதியோர் உதவித்தொகை பெறக்கோரும் மனுக்கள் மீது முடிவெடுக்கப்பட வேண்டும்.



(viii) கருவுற்ற ஏழாவது மாதத்தில் பேறுகால உதவியை 30 நாட்களுக்குள் மாவட்ட நிர்வாகம் வழங்க வேண்டும்.

(ix) விபத்து ஏற்பட்ட 30 நாட்களுக்குள் விபத்து நிவாரணத் தொகையை வழங்க வேண்டும்.

(x) மாவட்டாட்சியரின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் கிராம, குறுவட்ட, வட்ட, கோட்ட, மாவட்ட அலுவலகங்களில் அனைத்து மக்கள் நலத் திட்டங்களைப் பற்றிய விபரங்களை அறிவிப்புப் பலகை மூலம் எல்லோருக்கும் தெரியும்படியாக முக்கிய இடத்தில் வைக்க வேண்டும்.

(xi) அலுவலர்கள் மீதான ஊழல் புகார்கள் மற்றும் ஊழலுக்கு வழிகோலும் தாமதம் பற்றிய புகார்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படும். நிரூபிக்கப்பட்ட ஊழல் குறித்த நேர்வுகளில் பதவி வெளியேற்றம் மற்றும் பதவி நீக்கம் போன்ற கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும்.

(xii) துறைத் தலைவர்கள் தங்களது சுற்றுப் பயணத்தின் போது ''திங்கட் கிழமை மனுப்பதிவேடு'' மற்றும் ''மனுநீதித்திட்ட மனுக்கள் பதிவேடு'' ஆகியவற்றைத் தணிக்கை செய்ய வேண்டும்.

(xiii) முடிவெடுக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை மற்றும் தரத்தின் அடிப்படையில் ஒரு சிறப்பு அறிக்கை தொடர்புடைய அலுவலர்களின் பணிப் பதிவேடுகளில் சேர்க்கப்படும்.

◆

# கண்ணதாசா என் இனிய நேசா

## கலைஞர்



என் இனிய நண்பா!
இளவேனிற் கவிதைகளால்
இதய சுகம் தந்தவனே! உன்
இதயத் துடிப்பை, ஏன் நிறுத்திக் [illegible]
தென்றலாக வீசியவன் நீ - என் [illegible]ல
தீயாகச் சுட்டவனும் நீ! அப்போ[illegible]ம்
அன்றிலாக நம் நட்பு திகழ்ந்ததே யன்றி
அணைந்த தீபமாக ஆனதேயில்லை நண்பா!

கண்ணதாசா! என்
எண்ணமெலாம் இனிக்கும் [illegible]
கவிதை மலர்த் தோட்டம் [illegible]க்
[illegible]மெனும் பூகம்பம் த[illegible]
தரைமட்டம் ஆக்கிவிட்டதே!

கைநீட்டிக் கொஞ்சுவோர் பக்கமெலாம்
கரம் நீட்டித் தாவுகின்ற குழந்தை[illegible]
கல்லறைப் பெண்ணின் மடியி[illegible]
அப்படித்தான் தாவி விட்டாயோ[illegible]
அமைதிப்பால் அருந்தித் தூங்[illegible]

இயக்க இசைபாடிக் களித்த [illegible]
மயக்க மருந்திட்டுப் பிரித்தார் [illegible]
தாக்குதல் கணை எத்தனை த[illegible]
தொடுத்தாலும்
தாங்கிக் கொண்ட [illegible]

[illegible]

அடடா! அந்த இளமைக் கழனியில்
அன்பெனும் நாற்று நட்டோம்!
ஆயிரங் காலத்துப் பயிர் நம் தோழமையென
[illegible]யிரங் கோடிக் கனவுகள் கண்டோம்!
அ[illegible]க்கு யாரோ வந்தார்!
உன்[illegible]டும் அறுத்துச் சென்றார்!

நிலை[illegible]ம் உனக்கு! ஆனால்
நிலை[illegible]ம் உனக்கு!
[illegible] விளைவிக்க – உன்பால்
[illegible]ள துணை நின்றாள்!

இ[illegible]
எத்தனை[illegible]லாட்டுப் பாடிய உன்னை
இ[illegible]லாட்டித்
தூங்[illegible]ள்!

எத்[illegible] பாராட்டுப் பெற்ற உனக்கு
இ[illegible]தாயின் சீராட்டுத்தான்
இ[illegible]
[illegible]! எமை மறந்தாய்!
[illegible] முடியாமல்
[illegible]ாம் நிறைந்தாய்!

(கவிஞர் கண்ணதாசன் 17.10.81 ல் மறைந்தபோது எழுதியது.)





## கண்ணதாசனின் கவிச்சுவைகள்

'பிள்ளை இரண்டுபெறு - அதற்குப்
பின்னர் மறுத்துவிடு!
கொள்ளைச் சுகமிருக்கும் - உடலின்
கோலத்தை வாழவிடு!'

'போற்றுபவர் போற்றட்டும், புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும், தொடர்ந்து
செல்வேன்;
ஏற்றதொரு கருத்தைஎன துள்ளம் ஏற்றால்
எடுத்துரைப்பேன், எவர்வரினும் நில்லேன்,
அஞ்சேன்!'

'மாற்றம் என்பது
மானிடத் தத்துவம்!'

'நாமெல்லாம் ஒருகுடும்பம்; ஆகா, அந்த
நயம்மிகுந்த வார்த்தையில்தான் என்ன
இன்பம்!'

'தன்னையே வியக்கும் தன்மை
தமிழுக்கும் எனக்கும் இல்லை!'

'ஒருமணி நேரம் ஊமையாய் இருங்கள்
சிலமணிப் பொழுது செவிடாய் இருங்கள்
மூன்றுநாழிகைகள் முடமாய் இருங்கள்
கூடுமானவரை குருடாய் இருங்கள்
இப்படியே தினம் இருந்துகொண் டிருந்தால்
மரணம் வரும்வரை மனிதராய் வாழலாம்!'

'சாதியைப் புலமாய்க் கொண்டு
தலைவர்கள் அமைந்தால் அங்கே
நீதியே அமைந்தி டாது!..'



'பொங்குமென் அருமை அண்ணாப்
புலவனின் சிரிப்பி னுள்ளே
சங்கமுத் தமிழும் நாட்டுச்
சனத்திரள் யாவும் தேங்கும்!'

'ஆற்றா அழுகை
அமைதியின் அன்னை;
அஞ்சும் நெஞ்சம்
அழுதால் தெளியும்!'

# புதிய மாவட்டங்கள் உருவாக்கம்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள 18.6.1996 அன்று திருவாரூரில் செய்தியாளர்களைச்சந்தித்தபோது நிர்வாக வசதிக்காக மேலும் சில மாவட்டங்கள் பிரிக்கப்படுமென்று தெரிவித்தார்; அவை குறித்த விவரங்கள் நிதிநிலை அறிக்கையில் வெளியிடப் படுமென்றும் அவர் கூறியிருந்தார்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் செப்டம்பரில் நடைபெற இருப்பதையொட்டி பிரிக்கப்படும் மாவட்டங்களை ஒன்றியங்களின் அடிப்படையில் பிரித்து முன்கூட்டியே அறிவிக்க வேண்டிய அவசியம் இருப்பதால் இன்று (22.6.1996) அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக விவாதித்துப் பின்வரும் ஒன்றியங்கள், நகரங்கள் அடங்கிய வகையில் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, அவற்றுக்கான பெயர்களும் அறிவிக்கப்படுகின்றன:

### செங்கை - அண்ணா மாவட்டம்

காஞ்சிபுரத்தைத் தலைநகராகக்கொண்டு (1) காஞ்சிபுரம் ஒன்றியம்; (2) உத்திரமேரூர் ஒன்றியம்; (3) அச்சரப்பாக்கம் ஒன்றியம்; (4) சித்தாமூர் ஒன்றியம்; (5) இலத்தூர் ஒன்றியம்; (6) மதுராந்தகம் ஒன்றியம்; (7) திருக்கழுக் குன்றம் ஒன்றியம்; (8) திருப்போரூர் ஒன்றியம்; (9) காட்டாங்கொளத்தூர் ஒன்றியம்; (10) வாலாஜாபாத் ஒன்றியம்; (11) திருப் பெரும்புதூர் ஒன்றியம்; (12) பரங்கிமலை ஒன்றியம்; (13) குன்றத்தூர் ஒன்றியம்; மற்றும் (1) ஆலந்தூர்; (2) காஞ்சிபுரம்; (3) செங்கற்பட்டு; (4) தாம்பரம்; (5) பல்லவபுரம்; (6) மதுராந்தகம்.

ஆகிய நகரங்கள் அடங்கிய பகுதி ''செங்கை-அண்ணா மாவட்டம்'' என்று அழைக்கப்படும்.

### செங்கை - எம்.ஜி.ஆர். மாவட்டம்

திருவள்ளுவரைத்தலைநகராகக் கொண்டு- (1) வில்லிவாக்கம் ஒன்றியம்; (2) புழல் ஒன்றியம்; (3) சோழவரம் ஒன்றியம்; (4) மீஞ்சூர் ஒன்றியம்; (5) கும்முடிப்பூண்டி ஒன்றியம் (6) எல்லாபுரம் ஒன்றியம்; (7) பூண்டி ஒன்றியம்; (8) திருவள்ளூர் ஒன்றியம்; (9) பூவிருந்தவல்லி ஒன்றியம்; (10) கடம்பத்தூர் ஒன்றியம்; (11) திருவாலங்காடு ஒன்றியம்; (12) திருத்தணி ஒன்றியம்; (13) பள்ளிப்பட்டு ஒன்றியம்; (14) ஆர்.கே. பேட்டை ஒன்றியம்; மற்றும் (1) அம்பத்தூர்; (2) திருத்தணி; (3) திருவள்ளூர்; (4) திருவொற்றியூர்; (5) ஆவடி.

ஆகிய நகரங்கள் அடங்கிய பகுதி ''செங்கை - எம்.ஜி.ஆர். மாவட்டம்'' என்று அழைக்கப்படும்.

### மன்னர் திருமலை மாவட்டம்

திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்டு (1) ஆத்தூர் ஒன்றியம்; (2) ஒட்டன்சத்திரம் ஒன்றியம்; (3) குஜிலியம்பாறை ஒன்றியம்; (4) கொடைக்கானல் ஒன்றியம்; (5) சாணார்பட்டி ஒன்றியம்; (6) திண்டுக்கல் ஒன்றியம்; (7) தொப்பம்பட்டி ஒன்றியம்; (8) நத்தம் ஒன்றியம்; (9) நிலக்கோட்டை ஒன்றியம்; (10) பழனி ஒன்றியம்; (11) ரெட்டியார்சத்திரம் ஒன்றியம்; (12) வடமதுரை ஒன்றியம்; (13) வத்தலக்குண்டு ஒன்றியம்; (14) வேடசந்தூர் ஒன்றியம்; மற்றும் (1) பழனி; (2) திண்டுக்கல்; (3) கொடைக்கானல்

ஆகிய நகரங்கள் இணைந்த பகுதி ''மன்னர் திருமலை மாவட்டம்'' என்று அழைக்கப்படும்.

### வீரன் அழகுமுத்து மாவட்டம்

தேனியைத் தலைநகராகக் கொண்டு - (1) பெரியகுளம் ஒன்றியம்; (2) ஆண்டிப்பட்டி





ஒன்றியம்; (3) தேனி ஒன்றியம்; (4) போடி நாயக்கனூர் ஒன்றியம்; (5) சின்னமனூர் ஒன்றியம்; (6) உத்தமபாளையம் ஒன்றியம்; (7) கம்பம் ஒன்றியம்; (8) கடமலைக்குண்டு - மயிலாடும்பாறை ஒன்றியம்; மற்றும் (1) கம்பம்; (2) சின்னமனூர்; (3) பெரியகுளம்; (4) தேனி; (5) போடிநாயக்கனூர்

ஆகிய நகரங்கள் இணைந்த பகுதி ''வீரன் அழகுமுத்து மாவட்டம்'' என்று அழைக்கப்படும்.



### மதுரை மாவட்டம்

(1) திருப்பரங் குன்றம் ஒன்றியம்; (2) மதுரை கிழக்கு ஒன்றியம்; (3) மதுரைமேற்கு ஒன்றியம்; (4) மேலூர் ஒன்றியம்; (5) கொட்டாம்பட்டி ஒன்றியம்; (6) வாடிப் பட்டி ஒன்றியம்; (7) அலங்காநல்லூர் ஒன்றியம்; (8) சேடப்பட்டி ஒன்றியம்; (9) திருமங்கலம் ஒன்றியம்; (10) டி. கல்லுப்பட்டி ஒன்றியம்; (11) கள்ளிக்குடி ஒன்றியம்; (12) உசிலம் பட்டி ஒன்றியம்; (13) செல்லம்பட்டி ஒன்றியம்; மற்றும் (1) மதுரை மாநகரம்; (2) மேலூர்; (3) திருமங்கலம்.

ஆகிய நகரங்கள் இணைந்த பகுதிகள் ''மதுரை மாவட்டத்தில்'' அடங்கும்.

### ராஜாஜி மாவட்டம்

நாமக்கல்லைத்தலை நகராகக் கொண்டு, சேலம் மாவட்டத்திலிருந்து (1) சங்ககிரி ஒன்றியம்; (2) திருச்செங்கோடு ஒன்றியம்; (3) மல்லசமுத்திரம் ஒன்றியம்; (4) எலச்சிபாளையம் ஒன்றியம்; (5) பள்ளிப் பாளையம் ஒன்றியம்; (6) நாமக்கல் ஒன்றியம்; (7) சேந்தமங்கலம் ஒன்றியம்; (8) கொல்லிமலை ஒன்றியம்; (9) புதுச்சத்திரம் ஒன்றியம்; (10) எருமைப்பட்டி ஒன்றியம்; (11) பரமத்தி ஒன்றியம்; (12) மோகனூர் ஒன்றியம்; (13) கபிலர்மலை ஒன்றியம்; (14) ராசிபுரம் ஒன்றியம்; (15) வெண்ணந்தூர் ஒன்றியம்; (16) நாமகிரிப்பேட்டை ஒன்றியம்; மற்றும் (1) ராசிபுரம்; (2) குமாரபாளையம்; (3) திருச்செங்கோடு; (4) நாமக்கல் ஆகிய நகரங்கள் இணைந்து "ராஜாஜி மாவட்டம்" என்று அழைக்கப்படும்.

### சேலம் மாவட்டம்

(1) கொளத்தூர் ஒன்றியம்; (2) மேச்சேரி ஒன்றியம்; (3) நங்கவல்லி ஒன்றியம்; (4) தாரமங்கலம் ஒன்றியம்; (5) ஓமலூர்

ஒன்றியம்; (6) காடையாம்பட்டி ஒன்றியம்; (7) வீரபாண்டி ஒன்றியம்; (8) சேலம் ஒன்றியம்; (9) அயோத்தியாபட்டினம் ஒன்றியம்; (10) பனமரத்துப்பட்டி ஒன்றியம்; (11) வாழப்பாடி ஒன்றியம்; (12) பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம்; (13) ஆத்தூர் ஒன்றியம்; (14) கெங்கவல்லி ஒன்றியம்; (15) தலைவாசல் ஒன்றியம்; (16) எடப்பாடி ஒன்றியம்; (17) கொங்கனாபுரம் ஒன்றியம்; (18) மகுடஞ்சாவடி ஒன்றியம்; மற்றும் (1) ஆத்தூர்; (2) சுரமங்கலம்; (3) சேலம்; (4) மேட்டூர்; (5) எடப்பாடி.

ஆகிய நகரங்கள் இணைந்த பகுதிகள் **"சேலம் மாவட்டத்தில்"** அடங்கும்.

## தமிழ்நாட்டில் உள்ள 29 மாவட்டங்கள்

தமிழ்நாட்டில் இப்போது வீரன் அழகு முத்து, ஏ.டி. பன்னீர் செல்வம், ராஜாஜி ஆகிய 3 மாவட்டங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றையும் சேர்த்து 29 மாவட்டங்கள் தமிழகத்தில் இப்போது இருக்கின்றன. இந்த மாவட்டங்களின் பெயர்களும், அதன் தலைநகரங்களும் வருமாறு:

| மாவட்டம் பெயர் | | தலைநகர் |
|---|---|---|
| 1. சென்னை மாவட்டம் | .......... | சென்னை |
| 2. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் | .......... | திருவள்ளூர் |
| 3. செங்கல்பட்டு அண்ணா | .......... | காஞ்சீபுரம் |
| 4. வடாற்காடு அம்பேத்கர் | .......... | வேலூர் |
| 5. திருவண்ணாமலை சம்புவராயர் | .......... | திருவண்ணாமலை |
| 6. விழுப்புரம் ராமசாமி படையாட்சி | .......... | விழுப்புரம் |
| 7. தென்னாற்காடு வள்ளலார் | .......... | கடலூர் |
| 8. தீரன் சின்னமலை | .......... | கரூர் |
| 9. பெரும்பிடுகு முத்தரையர் | .......... | திருச்சி |
| 10. திருவள்ளுவர் | .......... | பெரம்பலூர் |
| 11. தஞ்சாவூர் | .......... | தஞ்சாவூர் |
| 12. ஏ.டி. பன்னீர்செல்வம் | .......... | திருவாரூர் |
| 13. நாகை காயிதே மில்லத் | .......... | நாகப்பட்டினம் |
| 14. புதுக்கோட்டை | .......... | புதுக்கோட்டை |
| 15. பசும்பொன் முத்துராமலிங்கம் | .......... | சிவகங்கை |
| 16. ராமநாதபுரம் | .......... | ராமநாதபுரம் |
| 17. காமராஜர் | .......... | விருதுநகர் |
| 18. கோவை | .......... | கோயம்புத்தூர் |
| 19. வ.உ.சிதம்பரனார் | .......... | தூத்துக்குடி |
| 20. திருநெல்வேலி கட்டபொம்மன் | .......... | திருநெல்வேலி |
| 21. மதுரை | .......... | மதுரை |
| 22. வீரன் அழகுமுத்து | .......... | தேனி |
| 23. சேலம் | .......... | சேலம் |
| 24. ராஜாஜி | .......... | நாமக்கல் |
| 25. மன்னர் திருமலை | .......... | திண்டுக்கல் |
| 26. பெரியார் | .......... | ஈரோடு |
| 27. தர்மபுரி | .......... | தர்மபுரி |
| 28. நீலகிரி | .......... | உதகமண்டலம் |
| 29. கன்னியாகுமரி | .......... | நாகர்கோவில் |

### ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம்

திருவாரூரைத் தலைநகரமாகக் கொண்டு (1) திருவாரூர் ஒன்றியம்; (2) திருத்துறைப்பூண்டி ஒன்றியம்; (3) முத்துப்பேட்டை ஒன்றியம்; (4) மதுக்கூர் ஒன்றியம்; (5) கோட்டூர் ஒன்றியம்; (6) மன்னார்குடி ஒன்றியம்; (7) நீடாமங்கலம் ஒன்றியம்; (8) வலங்கைமான் ஒன்றியம்; (9) கொரடாச்சேரி ஒன்றியம்; (10) குடவாசல் ஒன்றியம்; (11) நன்னிலம் ஒன்றியம்; மற்றும் (1) திருவாரூர் (2) மன்னார்குடி (3) கூத்தாநல்லூர்; (4) திருத்துறைப்பூண்டி.

ஆகிய நகரங்களும் இணைந்த பகுதி "ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம்" என்று அழைக்கப்படும்.

### தஞ்சை மாவட்டம்

(1) சேதுபாவாசத்திரம் ஒன்றியம்; (2) பேராவூரணி ஒன்றியம்; (3) பட்டுக்கோட்டை ஒன்றியம்; (4) திருவோணம் ஒன்றியம்; (5) ஒரத்தநாடு ஒன்றியம்; (6) அம்மாபேட்டை ஒன்றியம்; (7) தஞ்சாவூர் ஒன்றியம்; (8) பூதலூர் ஒன்றியம்; (9) திருவையாறு ஒன்றியம்; (10) பாபநாசம் ஒன்றியம்; (11) கும்பகோணம் ஒன்றியம்; (12) திருவிடைமருதூர் ஒன்றியம்; (13) திருப்பனந்தாள் ஒன்றியம்; மற்றும் (1) பட்டுக்கோட்டை; (2) தஞ்சாவூர்; (3) கும்பகோணம்

ஆகிய நகரங்கள் இணைந்த பகுதிகள் **"தஞ்சை மாவட்டத்தில்"** அடங்கும்.

### 9. நாகை-காயிதேமில்லத் மாவட்டம்

(1) வேதாரண்யம் ஒன்றியம்; (2) தலைஞாயிறு ஒன்றியம்; (3) கீழையூர் ஒன்றியம்; (4) கீழ்வேளூர் ஒன்றியம்; (5) நாகப்பட்டினம் ஒன்றியம்; (6) திருமருகல் ஒன்றியம்; (7) குத்தாலம் ஒன்றியம்; (8) செம்பனார்கோயில் ஒன்றியம்; (9) மயிலாடுதுறை ஒன்றியம்; (10) சீர்காழி ஒன்றியம்; (11) கொள்ளிடம் ஒன்றியம்; மற்றும் (1) நாகப்பட்டினம்; (2) மயிலாடுதுறை; (3) சீர்காழி

ஆகிய நகரங்கள் இணைந்த பகுதிகள் **"நாகை காயிதே மில்லத்"** மாவட்டத்தில் அடங்கும்.

— இதை நடைமுறைப்படுத்துவதற்கும் பொதுமக்கள் கருத்துக்களை அறிவதற்கும் உயர் மட்டக்குழுக்கள் அமைக்கப்பட்டு இறுதி முடிவு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்படும்.







# விவசாயிகளுக்கு மின் இணைப்பு இன்னல் நீக்கி அரசு ஆணை!

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் மின்துறை அமைச்சர்
**திரு. ஆற்காடு என். வீரர்சாமி**

தமிழகத்தில் வேளாண் தொழில் செய்யும் விவசாயப் பெருங்குடி மக்கள், ஆற்றுப் பாசனம் மற்றும் ஏரிப்பாசனம் நடைபெறும் சில இடங்கள் தவிர, ஏனைய இடங்களில் கிணற்றுப் பாசனத்தை, நிலத்தடி நீரையே நம்பி உள்ளனர். கிணற்றுப் பாசனத்தை நம்பி இருக்கும் விவசாயிகள், தங்கள் மோட்டார் பம்புகள் மூலம் நீர் இறைக்கத் தேவையான சில மணி நேரம் தொடர்ந்து மின்சாரம் வழங்கப் பெறாமையால் பெரும் அவதிக்குள்ளாயினர். தமிழகத்தில் புதிய ஆட்சி மலர்ந்ததும் தங்கள் வாழ்க்கையில் இன்னல் தந்த இருள் நீங்கி ஒளி பிறக்கும் என்று விவசாயிகள் நம்பினர். தமிழகத்தின் மாண்புமிகு முதல்வராகக் கலைஞர் அவர்கள் பொறுப் பேற்றதும் அந்த நம்பிக்கைக்கு உயிர்கொடுத்து, மின்வாரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, விவசாயிகளுக்கு ஒரு நாளைக்குக் குறைந்தது பத்துமணி நேரம் மின்சாரம் வழங்க வேண்டும் என்று இந்த அரசு ஆணை பிறப்பித்தது.

மேலும் 31.12.91 க்குப் பிறகு, மின்கட்டண பாக்கியைச் செலுத்தி, இன்னும் மின்சாரம் கிடைக்கப்பெறாமல் இருக்கும் 2,224 விவசாயிகளின் மின் இணைப்புகளுக்கும் உடனடியாக மின்சாரம் வழங்கப்படவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் அடிப்படையில் மின்வாரியம் தக்க ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது. இதுவன்றி, மின்பாக்கியைச் செலுத்துவதற்குண்டான காலக்கெடுவை 30.9.96 வரை நீட்டிப்புச் செய்தும் அரசு ஆணைபிறப்பித்துள்ளது.

விவசாயிகளின் துன்பச்சுமையை வெகுவாகக் குறைத்திடும். அரசின் இந்தச் செயல் திட்டம் பற்றிய விவரம் வருமாறு:

தமிழகத்தில் 1979ஆம் ஆண்டிற்கு முன்பு விவசாய மின் இணைப்புக்களின் நிலுவைத் தொகையினை வசூல் செய்யும் பொருட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. இதனால்

பாதிக்கப்பட்ட விவசாயிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். போராட்டம் தீவிரமடைந்தது. அந்தச் சமயத்தில் அரசாங்கம் விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, 31.12.1988க்குள் மின் இணைப்புத் துண்டிக்கப் பட்ட விவசாயிகள் உரிய அபராதத் தொகையுடன் மின் கட்டண பாக்கியைச் செலுத்தினால், அவர்களுக்கு மின் இணைப்பு மீண்டும் வழங்கப் படும் என்று அரசு ஆணை எண். 1621 (பொதுப் பணித்துறை) நாள் 7.10.88-இல் உத்தரவிட்டது.

மேற்குறிப்பிட்ட தேதிக்குள் விவசாயிகளினால் மின் கட்டண பாக்கியை அபராதத் தொகையுடன் செலுத்த முடியாத காரணத்தினால், அரசாங்கம் மின் கண்டண பாக்கியைச் செலுத்த வேண்டிய தேதியை 30.9.96 ஆக நீட்டிப்புச் செய்து அரசின் கடித எண். 137324/2/89-1, நாள் 15.5.89 இல் உத்தரவு வழங்கியது. மேற்குறிப்பிட்ட சலுகையினை அரசாங்கம் மேலும் 31.3.90 வரை நீட்டிப்புச் செய்து அரசின் கடித எண். 140536/2/89-1, நாள் 8.11.89 இன் மூலம் உத்தரவிட்டது. மேலும் இந்தச் சலுகையானது 30.9.90 வரையிலும், மறுபடியும் 30.6.91 வரையிலும் அரசாங்கத்தால் நீட்டிக்கப்பட்டது.

இறுதியாகப் பிறப்பிக்கப்பட்ட அரசின் ஆணைக்குப்பிறகு உள்ள துண்டிக்கப்பட்ட மின் இணைப்புகளின் விவரம் பின்வருமாறு:

1) மின் கட்டண பாக்கித் தொகையினை செலுத்தாததனால் துண்டிக்கப்பட்ட விவசாய மின் இணைப்புகள் 19,005.

2) 31.12.91-ஆம் தேதிக்குள் மின் கட்டண பாக்கியை செலுத்தி மின் இணைப்புக் கொடுக்கப் பட்ட விவசாய மின் இணைப்புகள் 5,810.

3) 31.12.91-ஆம் தேதிக்குப்பிறகு மின் கட்டண பாக்கியைச் செலுத்தி, இன்னும் மின் இணைப்பு பெறாமல் இருக்கும் விவசாயிகள் 2,224.

புதிய அரசு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களது தலைமையிலே தமிழகத்தில் பொறுப்பேற்றவுடன் 31.12.91 க்குப் பிறகு மின் கட்டண பாக்கியைச் செலுத்தியுள்ள விவசாயிகளின் மின் இணைப்புக்களுக்கும் உடனடியாக மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்று முடிவு செய்ததன் அடிப்படையில் மின் வாரியம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் மின் பாக்கியைச் செலுத்துவதற்குண்டான காலக் கெடுவை 30.9.96 வரை நீட்டிப்புச் செய்யத் தமிழக அரசு ஆணை இட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஆணையின்படி இதுவரை மின் கட்டணப் பாக்கியைச் செலுத்தாத அனைத்து விவசாயிகளும் இச்சலுகையினைப் பயன் படுத்திக்கொள்ளலாம்.

வேளாண்பெருமக்கள் தங்களது மின் கட்டணப் பாக்கியை குறிப்பிட்டுள்ள காலக் கெடுவிற்குள் செலுத்தி மின் இணைப்பை மீண்டும் பெற்றுப் பயன் பெற வேண்டும்.

## அட்டைப் படச் செய்தி

**முதல் அட்டை:** அண்மையில், சென்னை மாநகரில் பெய்த கடும் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பார்வையிட்டார்.

**இரண்டாம் அட்டை :** தோல் தொழிலில் ஈடுபட்டுள்ளோருடன் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்திப்பு (15.6.96)

**நான்காம் அட்டை :** 24.6.1927-இல் பிறந்த கவியரசர் கண்ணதாசன் பிறந்தநாள் நினைவாக.

[illegible]

– [illegible]





# எழில்மிகு தமிழகத்தின்
# அழகு சிந்தும் அரண்மனைகள்

**அரண்** என்றால் அழகு-காவல். மனை என்றால் வீடு. அழகும் காவலும் கொண்ட இல்லமே அரண்மனை. ஆண்டாண்டு காலமாய் நம்மை ஆளும் அரசர்கள் வாழுமிடம் அழகும் காவலும் இல்லாமல் இருக்குமா என்ன? ஆனால் நமது பழந்தமிழ் மாமன்னர்கள் வாழ்ந்து மகிழ்ந்த இல்லங்களைப் பற்றி கதைகளிலே காணக் கிடைக்கிறதே தவிர கண்கூடாக் கண்டறிய முடியவில்லை. காரணம், காலத்தால் அழியாத நிலைத்த புகழ் எதுவென அவர்கள் அறிந்திருந்ததுதான் என்று சொல்லலாம். தாங்கள் வாழ்ந்த இடங்களின் மீது அவர்கள் கொண்டிருந்த அக்கறையைவிட, மக்கள் பணியிலும் மகேசன் பணியிலும் தங்கள் சிந்தையை வெகுவாகச் செலுத்தியதுதான். இதற்கு எடுத்துக்காட்டாக, கரிகாலன் கட்டிய கல்லணையும், இராஜராஜன் கட்டிய பெருவுடையார் திருக்கோயிலும் இன்னும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் நின்று நிலைத்து அவர்கள் புகழ் பாடிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமென்ன?

எனினும் பிற்கால மன்னர்கள் கட்டுவித்த பல அரண்மனைகள் கால ஓட்டத்தின் தாக்குதல்களை மீறி இன்னும் சிதிலமடையாமல் நமது முன்னோர்களின் கட்டிடக் கலைத் திறமைகளையும், நம் பண்டைய வரலாற்றையும் மக்களின் பண்பாட்டையும் சான்றாக நின்று விளக்கிக் கொண்டிருக்கின்றன.

### தரணி புகழும் தஞ்சை அரண்மனை

சூரிய வம்சத்தில் பிறந்த மனுமாந்தாதா, அந்த வம்சத்திலே புறாவுக்காக தன் உடலை அறுத்துக் கொடுத்த சிபிச்சக்கரவர்த்தி, அவருக்குப் பின் தோன்றிய இராஜகேசரி என்று தொடங்கி உலகமே வியந்து நோக்க தஞ்சாவூரைத் தலை நகராகக் கொண்டு சோழர் குலம் ஆண்டது ஒரு காலம். பின்னர் 15-16 ஆம் நூற்றாண்டுகளில் நாயக்க அரசர்களும், மராத்திய மன்னர்களும் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார்கள். தஞ்சாவூர் அரண்மனை அவர்கள் காலத்திலே கட்டப்பட்டது. கலை நயம்மிக்க 'தர்பார் மண்டபம்' மராத்தியர் ஆட்சியில் மராத்திய முறைப்படி மிகவும் சிறப்புடன் கட்டப்பட்டதாகும். கி.பி. 1600ல் கட்டப்பட்ட தர்பார் மன்றம் அழகிய பெரிய தூண்களும், எழில் கொஞ்சும் வளைவுகளும் சித்திர வேலைப்பாடுகளும் கொண்டு இலங்குகிறது. தற்போது தஞ்சை அரண்மனையில் உள்ள சரஸ்வதி மகால் கலைக்கூடமும், சரபோஜி மன்னரால் சேர்த்துவைக்கப்பட்ட அரிய நூல்கள் ஓலைச் சுவடிகள் அடங்கிய சரபோஜி மன்னர் நூல் நிலையமும் உள்ளன.

தஞ்சை மராட்டிய மன்னரான இரண்டாம் சரபோஜி, மனோரா உப்பரிகை ஒன்றை 1814ஆம் ஆண்டு கட்டுவித்தார். 9 அடுக்குகளுடன் 43 மீட்டர் உயரம் உடைய இந்த உப்பரிகை பட்டுக்கோட்டை அருகில் உள்ளது.

### மனங்கவரும் மதுரை அரண்மனை

தமிழகத்தில் இன்று காணப்படும் அரண்மனைகளில் சிதிலமடையாமல் அப்படியே அழகாகக் காட்சியளிக்கும் அரண்மனை மதுரை அரண்மனையே ஆகும். இந்த அரண்மனையை, நாயக்க மன்னர்களில் மிகவும் புகழ் பெற்ற மதுரை நாயக்க அரசின் மன்னரான திருமலை அரசர் 163[illegible] ஆம் ஆண்டு கட்டினார். மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையின் அழகே அதன் தூண்கள்தான். மொத்தம் 248 தூண்கள்

இருக்கின்றன. ஒவ்வொன்றும் 5 மீட்டர் சுற்றளவு கொண்டது. ஆறுபேர்கள் ஒன்று சேர்ந்தால்தான் ஒரு தூணைக் கட்டிப்பிடிக்க முடியும். இந்தியாவிலேயே இவ்வளவு அழகுடன் இவ்வளவு பெரிய தூண்கள் வேறு எங்கும் காணப்படவில்லை. தூண்களுக்கு இடையே உள்ள வளைவுகளும், குவிமாடங்களும் அழகு நிறைந்தவை. இந்த அரண்மனையைக்கட்டும் பணியில் ஒரு இடத்தில்கூட மரமோ இரும்போ பயன் படுத்தப்படவில்லை என்பதும் இதன் சிறப்பாகும்.

(மாநிலத் தொல்பொருள்துறை சேகரித்துள்ள அரிய பொருட்களையும், வரலாற்றுக் குறிப்புகளையும் வைத்து ஓர் அருங்காட்சியகம் இங்கே உருவாக்கப்பட்டுள்ளது. திருமலை மன்னரின் புகழ் விளக்கும் 'ஒலி-ஒளிக் காட்சி' நாள்தோறும் இந்த அரண்மனையில் நடத்தப்பட்டு வருகிறது.)

### சிந்தையை அள்ளும் சிராப்பள்ளி அரண்மனை

திருச்சிராப்பள்ளியை ஆண்ட இராணி மங்கம்மாள், மதுரை நாயக்க மன்னர்களின் பரம்பரையைச் சார்ந்தவர். இவர் தனது ஆட்சிக்காலத்தில் திருச்சிராப்பள்ளியில் தெப்பக்



குளம் அருகே மிக எழிலுடன் ஓர் அரண்மனையைக் கட்டினார். நாயக்கர் காலக் கட்டிடச் சிறப்புக்குச் சான்றாக விளங்கிடும் இந்த அரண்மனையில் உயரம் குறைவான, ஆனால் அழகு மிகுதியான தூண்களும், வளைவுகளும் நம் இதயத்தைக் கவரும் தன்மையனவாகும்.

(தற்போது இந்த அரண்மனையில் 'டவுன் ஹால்' என்னும் திருச்சி நகர் மன்றக் கூடம் அமைந்துள்ளது)

### புதிய - பழைய புதுக்கோட்டை அரண்மனை

புதுக்கோட்டையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட புதுக்கோட்டை மன்னர்கள் தங்களது தேவைக்கும் வசதிக்கும் ஏற்ப கட்டிய பழைய, புதிய அரண்மனைகள் இன்றும் புதுக்கோட்டையில் உள்ளன. புதுக்கோட்டை புதிய அரண்மனை 1929 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும்.

(இந்தப் புதிய அரண்மனையில்தான் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இயங்கி வருகிறது)

### சென்னை சேப்பாக்கம் அரண்மனை

ஆங்கிலேய அரசு, நம்மை அடிமை கொண்டிருந்த காலத்தில் அவர்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்த கர்நாடக நவாப் முகமது அலி, கி.பி. 1768ல் சென்னையில் ஓர் அழகிய அரண்மனையைக் கட்டினார். ஆனால், ஆங்கில அரசை இங்கே வழி நடத்திய டல்அவ்சி பிரபு, 1855 ஆம் ஆண்டு கர்நாடக நவாப்களின் பதவியைப் பறித்தார். ஆங்கிலேயர் அவரது பதவியைப் பறித்ததுடன்; அவர்கள் வாழ்ந்த அரண்மனையையும் கைப்பற்றி, அதனை அரசு அலுவலகமாக மாற்றி விட்டனர். (சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு தெற்கில் உள்ள இந்த சேப்பாக்கம் அரண்மனையில் தமிழ்நாடு அரசின்







சில அலுவலகங்கள் அமைந்து இன்றும் செயல்பட்டு வருகின்றன)

### சிதைந்த நிலையில் இருக்கும் சிவகங்கை அரண்மனை

சிவகங்கைச் சீமையை ஆண்ட மன்னர்கள் வழிவழியாய் வாழ்ந்து வந்த அரண்மனை இன்று சிதைந்த நிலையில் உள்ளது. கி.பி. 1730 ஆம் ஆண்டு, சிவகங்கை சசிவர்ணத்தேவர் இந்த அரண்மனையில் ஒரு பகுதியில் இராஜ இராஜேஸ்வரி கோயில் ஒன்றை எழுப்பினார். அக்கோயில் இன்றும் நல்ல நிலையில் உள்ளது. அதுமட்டுமின்றி, அரண்மனையின் நீச்சல் குளமும், கல்யாண மண்டபமும் ஓரளவு நல்ல முறையில் உள்ளன.

### எழிலுக்குக் கட்டியம் கூறும் எட்டயபுரம் அரண்மனை

கி.பி. 1852லிருந்து 1858 வரை ஆட்சி புரிந்த எட்டயபுர மன்னர் 'ஜெகவீரராம குமார வெங்கடேஸ்வர எட்டப்பர் அய்யன்' காலத்தில் எட்டயபுர அரண்மனை கட்டப்பட்டது. இந்த அரண்மனையின் எழிலுக்குக் கட்டியம் கூறுவனவாக முடிசூட்டுவிழா மண்டபமும், தர்பார் மண்டபமும் அமைந்துள்ளன.

### இராமலிங்க விலாசம் என்னும் இராமநாதபுரம் அரண்மனை

சேதுபதி மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இராமநாதபுரம் அரண்மனை கட்டப்பட்டது. இந்த அரண்மனைக்கு 'இராமலிங்க விலாசம்' என்று பெயர். இராமநாதபுர மன்னராக கி.பி. 1674 முதல் 1710 வரை ஆட்சிபுரிந்த கிழவன் சேதுபதி, இந்த அரண்மனைச் சுவர்களில் வண்ண ஓவியங்கள் நிறைந்ததாக இருக்கும்படி மிகக் கவனத்துடன் கட்டினார். இவ் வண்ண ஓவியங்கள் எழில் குறையாமல் இன்றும் பளபளப்பாகக் காட்சி அளிக்கின்றன.

### இடமே நமக்குச் சொந்தமான பத்மனாப புரம் அரண்மனை

குமரி மாவட்டத்தில் நாகர்கோயில் அருகே பத்மநாபபுரம் அரண்மனை அமைந்துள்ளது. 'கல்குளம்' என்பதே பத்மனாபபுரத்தின் பழைய பெயர் ஆகும். கி.பி. 1550ல் கல்குளம் வேணாட்டின் தலைநகராக விளங்கியது. கேரள மன்னன் மார்த்தாண்ட வர்மன் கி.பி. 1774ல் வேணாட்டின் பெயரைத் திருவிதாங்கூர் என்று மாற்றி அந்நாடு முழுவதையும் திருவனந்தபுரம் பத்மனாப சுவாமிக்குக் காணிக்கையாக்கினான். கல்குளம் அன்று முதல் பத்மனாபபுரம் என்று அழைக்கப்பட்டது. கேரள மன்னன் தர்மராஜன் தனது ஆட்சியில், தலைநகரை பத்மனாப புரத்திலிருந்து திருவனந்தபுரத்திற்கு மாற்றினான்.

நமது நாடு விடுதலை பெற்ற பிறகு 1956 ஆம் ஆண்டில் மாநில சீரமைப்பின்படி கன்னியாகுமரி தமிழகத்துடன் இணைந்தது. இம்மாவட்டத்திலிருந்த பத்மனாபபுரம் அரண்மனையும் அதனோடு தமிழகத்திற்கு வந்துவிட்டது. கேரள கட்டிட முறைப்படி கட்டப்பட்டுள்ள இந்த அரண்மனையின் மூன்று அடுக்கு கொண்ட



உப்பரிகையும், நவராத்திரி மண்டபமும் கலைநயம் மிக்கவை. உப்பரிகை மாடியில் உள்ள ஓவியங்களும், அரண்மனைக் கடிகாரமும் புகழ் பெற்றவை. அறைகளும் கூடங்களும் முற்றிலும் மரத்தால் அமைக்கப்பட்டுள்ளன.

(பத்மனாபபுரம் அரண்மனை கேரளத் தொல்பொருள் துறையின் பாதுகாப்பில் உள்ளது. அரண்மனை அமைந்திருக்கும் இடம் மட்டும்தான் தமிழகப்பகுதி!)

## தமிழரசு வாசகர்களே!
## தமிழகப் பொதுமக்களே!

இன்னும் தீர்க்கப்படவில்லையே என்று நீங்கள் ஏங்கி நிற்கும் பிரச்சினை ஏதும் உங்கள் பகுதியில் உள்ளதா? உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை, நிறைவேறாமல் கிடக்கும் நீண்ட காலக் கோரிக்கை இப்படி எதுவாயினும் உடனே *"தமிழரசு"* இதழுக்கு எழுதுங்கள். அப்பிரச்சினை தொடர்பான துறையின் உயர் அலுவலர்களிடமிருந்து பதில் பெற்று *'தமிழரசு'* இதழில் வெளியிடப்படும்.

இப்பகுதிக்கு நீங்கள் எழுதிட நிபந்தனை ஏதுமில்லை. வேண்டுகோள் மட்டுமே உண்டு. உங்கள் கோரிக்கை பொதுநல நோக்கோடு அமையவேண்டும் என்பதே அது.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி:

"எங்கள் ஊர்ப் பிரச்சினை"
தமிழரசு
அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை,
சென்னை - 600 002.







# சோளக் கொல்லை பொம்மை

ஒரு சோளக்கொல்லை பொம்மையிடம் கேட்டேன்.
தனிமையான இந்த வயல்வெளியில்
கால்கடுக்க நிற்கிறாயே –
கண்டிப்பாக நீ களைப்படைந்திருக்க வேண்டுமே?
அந்தப் பொம்மை –
அழகாகப் பதில் சொன்னது.
"அச்சம் ஏற்படுத்துவதிலுள்ள ஆனந்தம்
ஆழமானது; நீடித்து நிற்பது
ஆகையினால் நான் என்றுமே
களைப்படைவதில்லை."
ஒரு கண நேரம் சிந்தித்த பின்
சொன்னேன் –
'நீ சொல்வது உண்மைதான்'
நானும் கூட அந்த இன்பத்தை அறிந்திருக்கிறேன்'
பதிலுக்கு அந்தப் பொம்மையோ –
"வைக்கோலால் நிரப்பப்பட்டு
உள்ளவர்களால்
மட்டும் தான் அதனை உணரமுடியும்" என்றது!
என்னைப் பெருமைப்படுத்தியதா அல்லது
சிறுமைப்படுத்தியதா என்று தெரியாமலே
அவ்விடம் விட்டகன்றேன்.
உருண்டோடியது ஓராண்டு!
உருவெடுத்தது அப்பொம்மை
ஓர் ஞானியாய்-
மறுபடியும் - நான் அப்பொம்மையைக் கண்டபோது
அதன் தொப்பிக்கடியில்
காகங்கள் இரண்டு கூடுகட்டிக் கொண்டிருந்தன!



- 'கலீல் ஜிப்ரான்' எழுதிய 'மேட்மேன்' என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து.

# கொச்சைத் தமிழ்

சொல்லின் செல்வர்
ரா.பி. சேதுப்பிள்ளை

பச்சைக் குழந்தைகள் பேசும் பொழுதும் பாமர மக்கள் பேசும் பொழுதும் கொச்சை மொழிகளைக் கேட்கலாம். பாமர மக்கள் பேசும் தமிழில் பொருளற்ற அடுக்குச் சொற்கள் மிகுந்திருக்கும், ''பல்லு கில்லு தேச்சாச்சா? காப்பிகீப்பி சாப்பிட்டாச்சா? வீடுகீடு கிடைக்குமா? மழைகிழை உண்டா?'' என இவ்வாறு வரும் அடுக்குச் சொற்கள் பலப்பல. இவற்றில் முதல் சொல்லுக்குப் பொருள் உண்டு. அடுத்து, எதுகையாக வரும் சொல்லுக்குப் பொருளில்லை. இப்படி வெற்று எதுகையில் வரும் சொற்கள் ககர வர்க்கத்திலே தொடங்கக் காணலாம்.

இன்னொருவகையான அடுக்குப் பேச்சும் தமிழிலே உண்டு. 'வம்புதும்புக்குப் போகாதே; தக்குப்புக்கின்னு நடக்காதே, தண்டாமுண்டா பண்ணாதே; காச்சுப் பீச்சின்னு கத்தாதே' - இவை போன்ற அடுக்குச் சொற்களிலும் முதற்சொல்லை அடுத்துவரும் சொல்லுக்குப் பொருள் இல்லை. ஆயினும், தொடர்ந்து வரும் சொல் ககர வர்க்கத்திலேதான் தொடங்க வேண்டும் என்று கட்டுப்பாடில்லை. இத்தன்மை வாய்ந்த அடுக்கு மொழிகள் மெல்ல மெல்ல இக்காலப் பாட்டிலும் உரையிலும் ஏறிவிட்டன. 'வாட்டசாட்டமாய்', திட்டவட்டமாய், கொஞ்சநஞ்சம், பாக்கிசாக்கி, சாலமாலம்' முதலிய சொல்லடுக்குகளை நவீன நூல்களிற்காணலாம்.

இவற்றைப் பார்க்கும் போது எதுகைப் பேச்சில் பாமர மக்களுக்கு உள்ள மோகம் நன்றாகத் தெரிகின்றது. எதுகையும் மோனையும் பாட்டுக்குத்தான் அழகு என்பதில்லை; பேச்சுக்கும் அவை நன்று என்று பொதுமக்கள் கருதுகின்றார்கள். அதனாலன்றோ எதுகை மோனை என்பதை 'எகனை மொகனை' என்று ஆக்கினார்கள்? மோனை என்ற சொல்லோடு இசையும்



வண்ணம் எதுகை என்னும் இலக்கியப் பதத்தை 'எகனை' என்று ஆக்கிவிட்டார்களே!

இவ்வாறு எதுகை நயத்திற்காக மாற்றப்பட்ட மற்றொரு சொல் 'தன்மைக்கு மாறானது தீமை என்று இலக்கியத்தமிழ் கூறும். ஆயினும், நன்மை, தீமை நன்மைதின்மை என்று சொல்லும் பொழுது எதுகை நயம் இல்லையல்லவா? அதற்காகத் தீமை என்பதைத் தின்மை என்றாக்கி, நன்மை தின்மை என்று நாடோடித் தமிழில் வழங்கலாயினர். நாளடைவில் நன்மை தின்மை என்பது இலக்கியத் தமிழிலும் இடம் பெற்றுவிட்டது. கவியரசர் என்று போற்றப்படும் கம்பரே அதை எடுத்து ஆண்டுவிட்டார் என்பர்.

''நன்மையும் செல்வமும்
நாளும் நல்குமே
தின்மையும் பாவமும்
சிதைந்து தேயுமே.''

பாட்டில் நன்மையும் தீமையும் எதுகையில் அமைந்து அழகு செய்கின்றன.

கொச்சைத் தமிழில் பல்வேறு தொழில்களுக்கும் உரிய சொற்கள் கலந்திருக்கும். சேலைத் துணிகளுக்குச் சாயம் ஏற்றுதல் தமிழ் நாட்டுப் பழமையான தொழில். சாயம் ஏற்றுபவருக்குச் சாயக்காரன் என்பது பெயர். சாயத்தில் கெட்டியானதும் உண்டு மட்டமானதும் உண்டு. கெட்டிச் சாயம் சலவைக்கு நிற்கும். மட்டச் சாயம் ஒரு சலவையில் கரைந்து போகும். இதிலிருந்து 'சாயம் வெளுத்துப் போச்சு' என்ற வசனம் எழுந்தது. ஒருவனுடைய போலித்தன்மை நீங்கி, உண்மை துலங்கும்போது அவன் சாயம் வெளுத்துப் போச்சு என்பார்கள்.





இதைப் போலவே கொச்சைத் தமிழில் வழங்கும் மற்றொரு வாசகம், 'காது குத்துதல்' என்பது. காது குத்துதல் சிலர் தொழில். காதிலேகடுக்கன், தோடு முதலிய நகைகளை அணிவதற்காக இளமையிலே காது குத்தும் வழக்கம் இந்நாட்டில் உண்டு. காது நகையில் எவ்வளவுதான் ஆசையிருப்பினும் காதைக் குத்தும்பொழுது நோகத்தானே செய்யும? கூர்மையுள்ள கருவியைக் கையிலே தாங்கி, 'காது குத்தப் போகிறேன்' என்று சொல்லிக்கொண்டு குத்துவோர் வருவாராயின், குழந்தைகள் காதைப் பொத்திக் கொண்டு கதறி அழத் தொடங்கிவிடும். இதற்காகக் காது குத்தவருவோர்கைக்குள்ளே



கருவியை மறைத்து வைத்துக் கொண்டு,காதைப் பார்ப்பவன் போல நெருங்கி வந்து, வெடுக்கென்று குத்திவிடுவார்கள்!

இதிலிருந்து காது குத்துதல் என்ற பதத்திற்கே ஏமாற்றுதல் அல்லது வஞ்சித்தல் என்ற பொருள்வந்துவிட்டது. இப்படியே, காக்காய் பிடித்தல், குல்லாப் போடுதல், கம்பி நீட்டுதல் முதலிய சொற்களும் கொச்சைத் தமிழில் வழங்கக் காணலாம்.

## காலாடிப் பேட்டை

சென்னையில் கொச்சைத் தமிழ் வழக்கு அதிகமாக உண்டு. 'காலாடி, கில்லாடி, லம்பாடி' முதலிய சொற்களை அடிக்கடி கேட்கலாம். காலாடி என்பது சோம்பேறியைக் குறிக்கும். சோதா என்றும் அப்பேர்வழியைச் சொல்வதுண்டு. சென்னைக்கு அருகேயுள்ள திருவொற்றியூரில் காலாடிப்பேட்டை என்ற பகுதியொன்று உள்ளது. காலாடிகளுக்கும் அவ்வூருக்கும் பெயர்ப் பொருத்தத்தைத் தவிர, வேறு எவ்விதப் பொருத்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. நெசவுத்தொழில் செய்யும் மக்களே பெரும்பாலும் அப்பேட்டையில் வாழ்கின்றார்கள்.

'அப்படியானால் காலாடிப்பேட்டை என்ற பெயர் அதற்கு எப்படி வந்தது?' என்றால், அது ஒரு விந்தையான செய்தி. சென்னைத் துரைத்தனத்தில் 'காலெட்' என்ற ஆங்கிலேயன் மூன்று ஆண்டுகள் கவர்னராய் இருந்தான். தன்பேரை நிலைநாட்டுவதிலும் அவனுக்குப் பேராசை. திருவொற்றியூரில் புதிதாக ஒரு பேட்டையை உண்டாக்கி, 'காலெட் பேட்டை' என்று அதற்குப் பெயர் கொடுத்தான். 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது' என்பது போல,'காலெட் பேட்டை' காலாடிப் பேட்டையாய்விட்டது.

ஏட்டுத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் எத்தனையோ வகைகளில் வேறுபாடு உண்டு. அவற்றுள் ஒன்றைப் பார்ப்போம்; பொருளுடையவனைச் செல்வன் என்பது ஏட்டுத் தமிழ்; பணக்காரன் என்பது பேச்சுத்தமிழ். இரவலன்என்பது ஏட்டுத் தமிழ்; பிச்சைக்காரன் என்பது பேச்சுத் தமிழ்.

இவ்வாறு பல சொற்களில் 'காரன்' என்பது ஆண்பாற் பெயர் விகுதியாகவும், 'காரி' என்பது பெண்பாற்பெயர் விகுதியாகவும் வழங்கக் காணலாம். வீட்டுக்காரன், வேலைக்காரன், தோட்டக்காரன், சமையற்காரன் - இவை ஆண்பாற் பெயர்கள். வீட்டுக்காரி, வேலைக்காரி, தோட்டக்காரி, சமையற்காரி - இவை பெண்பாற்பெயர்கள். ஆங்கில வாடை அதிகமாக வீசும் இடங்களில் வேலைக்கார், தோட்டக்கார், சமையற்கார் என்று ஈறு கெட்டு வழங்குதலும் உண்டு.

இதற்கும் மேலாகக் கொச்சைத் தமிழ் சென்னையில் கொழுந்துவிட்டு வளர்ந்திருக்கிறது. அண்ணன், தம்பி, அப்பன், மாமன் - இவர்களை முறையே 'அண்ணங்காரன், தம்பிக்காரன்; அப்பங்காரன், மாமங்காரன்' என்று கூறுவதைக் கொச்சைத் தமிழிலே கேட்கலாம்.



அப்படியே அக்காளை 'அக்காக்காரி' என்றும் அம்மையை 'அம்மைக்காரி' என்றும் மாமியை 'மாமிக்காரி' என்றும் வழங்குவர்.

> உதடுகளை மூடு; உன் இதயத்தைத் திற.
> – சுவாமி விவேகானந்தர்

## முறை பிறழ்தல்

நல்ல சில சொற்களில் வேண்டாத எழுத்துக்கள் புகுந்து விகாரப்படுத்தும் பொழுது, அவை கொச்சைத் தமிழாய்விடும். எண்பது என்பது ஒரு நல்ல சொல். அதை 'எண்பளது' என்று விகாரப்படுத்துவர் தஞ்சை நாட்டார். இப்படியே 'சேவை, கோவை, தேவை', என்னும் சொற்கள், முறையே 'சேர்வை, கோர்வை, தேர்வை' என்று கொச்சைத் தமிழில் வழங்குகின்றன.

தமிழின் சிறப்பெழுத்து என்று பாராட்டப்படுகின்ற ழகரம் கொச்சைத் தமிழில் மெத்தச் சிதையும். பாமர மக்கள் நாவில் ழகரம் திட்டவட்டமாக வருவதில்லை. திருவிழாவைத் 'திருவிஷா' என்பர் சோழநாட்டார். சென்னையில் பழம், பயமாகும். கழுதை, கயிதையாகும்; கிழவி கேவியாவாள்; கேழ்வரகு கேவராயி, கூவாகாகும்.

இன்னும் கொச்சைப் பேச்சிலே எழுத்துக்கள் முறை பிறழ்ந்து ஒலிக்கும். மதுரையை 'மருதை' என்றும், குதிரையைச் குருதை என்றும் கொச்சைத் தமிழில் கூறுவர். அபராதம் என்பதை 'அவதாரம்' என்பர். காஷாயம் என்ற வடசொல் காயாசம் ஆகும்.

'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்', என்பது போல ஒரு பொருளைக் குறிப்பதற்கு இரு சொற்கள் கொச்சைத் தமிழில் வழங்கும். கூறைப் புடைவை என்பது அப்படிப்பட்ட சொல். தமிழ் நாடெங்கும் கூறை என்ற சொல் முன்னாளில் வழங்கிற்று. புடவை என்பது அதன் பொருள். புடைவை நெய்யும் நாட்டிற்குக் கூறை நாடு என்ற பெயர் அமைந்தது. அதுதான். மாயூரத்திற்கு அருகேயுள்ள 'கொரநாடு'. நாளடைவில் கூறை என்பது அரும்பதமாய்விட்டது; அதன் பொருள் மழுங்கிவிட்டது. அதனால் கூறைப் புடைவை என்று இப்போது வழங்குகின்றது.

பழுதை என்பது ஒரு பழமையான சொல். கயிறு என்பது அதன் பொருள். இப்போது இரண்டையும் சேர்த்துப் 'பழுதைக்கயிறு' என்று கூறுகின்றார்கள்.

இவ்வாறு இருவேறு மொழிச் சொற்களை இணைத்துப் பேசும் முறையும் கொச்சைத் தமிழில் உண்டு; 'கேட்டுவாசல், ஷாப்புக் கடை' முதலிய வார்த்தைகளில் ஆங்கிலமும் தமிழும் இணைந்து வருகின்றன.



'நல்லவருக்கு அடையாளம் சொல்லாமல் பறையாமல் போவது' என்று தென்னாட்டிலே ஒரு பழமொழியுண்டு, 'சொல்லாமல் பறையாமல்' என்பதில் சொல்லாமல் என்பது தமிழ்; பறையாமல் என்பது மலையாளம்.

## பிள்ளைகள் நிலை

ஆண் குழந்தையை 'ஆம்பளப்பிள்ளை' என்றும் பெண் குழந்தையைப் 'பொம்பளப்பிள்ள' என்றும் கொச்சைத் தமிழ் கூறும். ஆண் பிள்ளை என்ற சொல்லில் பிள்ளை என்பது குழந்தைப் பருவத்தைக் குறிப்பதாகும். அப்படியே பெண் பிள்ளை என்ற சொல்லிலும் பிள்ளை என்பது குழந்தை நிலையைக் குறிக்கும். நாளடைவில் ஆண் பிள்ளையின் சிதைவாகிய ஆம்பனை என்பதும், பெண் பிள்ளையின் சிதைவாகிய பொம்பனை என்பதும் பருவத்தைக் குறியாது பொதுவாக ஆண் வர்க்கத்தையும் பெண் வர்க்கத்தையும் குறிப்பனவாயின. ஆகவே, குழந்தைகளைக் குறிப்பதற்கு மேலும் பிள்ளை என்ற சொல்லைச் சேர்க்க வேண்டியதாயிற்று. அப்படிச் சேர்த்ததனால் ஆம்பனைப் பிள்ளை, பொம்பனைப் பிள்ளை என்ற கொச்சைப் பதங்கள் வழங்கி வருகின்றன.

இவ்வாறு கொச்சைத் தமிழில் வழங்கும் சொற்களால் சில வேளைகளில்

> உழைப்பு மூன்று கேடுகளிலிருந்து நம்மைக் காக்கிறது; அவை - சலிப்பு, தீய ஒழுக்கம், வறுமை.
> – வால்ட்டேர்





விபரீதமும் விளைவதுண்டு. சென்னையில் ஹாமில்டன் வாராவதி, ஆமிட்டன் வாராவதியாகி, அம்பட்டன் வாராவதி எனச் சிதைந்து, ஆங்கிலத்தில் 'பார்பர்ஸ்



பிரிட்ஜ்' என்று மொழி பெயர்க்கப்பட்டிருப்பது நாடறிந்த செய்தியன்றோ?

கும்பகோணத்திற்கு அருகே உப்பிலியப்பன் கோயில் என்னும் திருமால் திருப்பதி ஒன்று உள்ளது. அங்குள்ள பெருமாள் உப்பிலியப்பன் என்று வழங்கப்படுதலால், உப்பில்லாத நிவேதனம் அப்பெருமாளுக்கு அளிக்கப்படுகின்றது. இவ்வாறு செய்ய நேர்ந்ததற்குக் காரணம் கொச்சைத்தமிழ்தான். 'ஒப்பிலியப்பன்' என்று பெருமாள் திருப்பெயரை 'உப்பிலியப்பன்' என்று சிதைத்தது கொச்சைத் தமிழ்; தனக்கு உவமையில்லாத தலைவனாகிய இறைவனை ஒப்பிலி என்னும் சொல் உணர்த்துவதாகும். 'நின்னொப்பார் பிறரின்றி நீயே ஆனாய்' என்று ஈசனைத் தேவாரம் பாடியது போன்று, திருவாய் மொழியிலே 'தன்னொப்பார் இல்லப்பன்' என்று பாடினார் நம்மாழ்வார்.

அவர் வாக்கின் அடியாக ஒப்பிலியப்பன் என்ற பெயர், பெருமாளுக்கு வழங்கலாயிற்று. அப்பெயர் உப்பிலியப்பன் எனச் சிதையவே, உப்பில்லாத பண்டத்தை ஏற்கும் நிலை இறைவனுக்கே ஏற்பட்டுவிட்டது.

கர்வம் பிடித்தவனை 'அகராதி பிடிச்சவன்' என்று கொச்சைத் தமிழிலே கூறுவதுண்டு. அகம்பாவத்திற்கும் அகராதிக்கும் என்ன தொடர்பு? இவ்விரண்டுக்கும் ஒரு தொடர்பிருப்பதாகப் பாமர மக்கள் கருதுகிறார்கள். அகராதியை ஒருவன் முற்றும் படித்துவிட்டால் எல்லாம் தெரிந்துவிட்டது என்ற மண்டைச் செருக்கு உண்டாகிவிடும் என்பது அவர்கள் கருத்து. 'கல்லாடம் படித்தவனோடு சொல்லாடாதே' என்னும் பழமொழி புலவருலகத்தில் வழங்குதல் போல, 'அகராதி படித்தவனை அணுகாதே,' என்ற எச்சரிக்கை பாமர உலகத்தில் எழுந்தது போலும்!

'விண்ணாணம்' என்பது கொச்சைத் தமிழிலே வழங்கும் மற்றொரு சொல். 'விஞ்ஞானம்' என்ற அருமையான சொல்லே 'விண்ணாணம்' என்று சிதைந்திருப்பதாகத் தோன்றுகிறது. வக்கணையாகவும் தோரணையாகவும் பேசும் பேச்சுக்கு விண்ணாணம் என்று பெயர்.

குற்றாலக் குறவஞ்சி நாடகத்தில் சிங்கி என்னும் பெயருடைய குறத்தியை 'விண்ணாணச் சிங்கி' என்று கூறுகின்றான், அவள் காதலனாகிய குறவன். விண்ணாணம் பேசும் சிங்கியைக் காணாமல் கவலையுறும் குறவன் பாட்டு, சாலவும் இனியதாகும்.

## இதுதான் 'ஓசி'

கொச்சைத் தமிழிலே பல ஆங்கிலச் சொற்கள் கலந்து வழக்கக் காணலாம். 'ஓசி' என்பது அத்தகைய சொற்களில் ஒன்று. 'நாசிக்குப் பொடி ஓசி', வெறும் வாய்க்கு வெற்றிலை பாக்கு ஓசி'.

ஓசி என்பது சும்மா கிடைப்பது; விலை கொடாமல் பெறுவது. இந்தச் சொல்லின் வரலாற்றைப் பார்த்தால் ஏறக்குறைய இருநூறாண்டுகளாக இந்நாட்டில் இது வழங்கி வருகின்றது என்பது விளங்கும். ஆங்கிலக் கம்பெனியார் இந்நாட்டில் ஆட்சி செலுத்தியபொழுது இக்கம்பெனியின் சார்பாக அனுப்பிய அஞ்சல் கடிதங்களில் 'ஓ.சி.எஸ்.' என்ற முத்திரை இட்டார்கள், ஓ.சி.எஸ். என்பது' ஆன் கம்பெனி சர்வீஸ்' (On Company Service) என்பதன் குறுக்கம். ஓ.சி.எஸ்: தபால்கள் பில்லை ஒட்டாமல் எங்கும் சென்றமையால் ஓ.சி.யில்



போகிறது என்ற சொல்லுக்குச் சும்மா போகிறது என்னும் பொருள் வந்தது.

சிட்டுக் கச்சேரியில் 'ஆடுதன்' என்ற சொல்

அடிக்கடி வரும். ஆடுதன் என்பது Hearts என்ற ஆங்கிலச் சொல்லின் சிதைவு. வாட்டசாட்டமாயிருப்பவனைப் பார்த்து' ஆடுதன் ராஜா மாதிரி இருக்கிறான்' என்று சொல்வதுண்டு.

நாட்டுப்புறங்களில் 'ஏட்டையா' என்பவரைக் கண்டால் ஒரே ஓட்டந்தான். 'ஏட்டையா' என்பவர் எட் கான்ஸ்டெபிள். ஆங்கிலச் சொல்லாகிய Head என்பது 'ஏட்டு' என்று சிதைந்து வழங்குகின்றது. இவ்வாறு வழங்கும் கொச்சைத் தமிழ்ச் சொற்களை ஆராய்ந்தால் பாமர மக்களின் மனப்பான்மையும் தமிழின் நீர்மைக்குத் தக்கவாறு அவர்கள் பிறமொழிச் சொற்களை எடுத்தாளும் பெற்றியும் நன்கு விளங்கும்.

(நன்றி: இலக்கியச்சிந்தனை, 5 சித்தரஞ்சன் சாலை, சென்னை - 18.)

### பாரதி சொல்

*தமிழ்நாட்டில் உண்மையான கல்வி பரவ வேண்டு மானால், சகல சாஸ்திரங்களும் தமிழ் மொழி மூலமாகவே கற்றுக்கொடுக்க வேண்டு மென்ற கொள்கையை நமக் குள்ளே கொண்டிருக் கிறார்கள். ஆனால், இதை நடைமுறைக்குக்கொண்டு வருவதற்குத் தக்கபடி நமக் குள்ளே சக்தி பிறக்க வில்லை. இப்படிப்பட்ட நிலை விரைவில் நீங்க வேண்டும்.*

*– மகாகவி பாரதியார்*

சென்னையில் உள்ள பெத்துநாயக்கன் பேட்டையில், 1938-இல் மகளிர் கழகத்தால் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தப்பட்டது. அதில்தான் 'பெரியார்' என்ற பட்டத்தை அவருக்கு, வீராங்கனை டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையார் அவர்கள் வழங்கினார்.

பெரியாருக்கு '**வைக்கம் வீரர்**' என்ற பட்டம் சூட்டியவர் தமிழ்த் தென்றல் திரு.வி. கல்யாண சுந்தரனார் ஆவார்.

இப்போதைய உலக மக்கள் தொகை கணக்கின்படி, ஒரு நிமிடத்திற்கு 170 குழந்தைகள் பிறக்கின்றனவாம். இந்த விஷயத்தில் இதே வேகம் தொடருமானால், கி.பி.2050-இல்உலக மக்கள் தொகை 12,506 மில்லியனாக இருக்கும். இப்போதோ, 5,600 மில்லியன்கள். ஒரு மில்லியன் என்பது 10 இலட்சம் ஆகும்!

தமிழ்நாட்டில் முதன் முதலாகக் கத்தோலிக்கத் தேவாலயம் கட்டப்பட்ட இடம் தரங்கம்பாடி. அந்தத் தேவாலயம் கட்டப்பட்டு ஏறத்தாழ நானூறாண்டுக் காலம் ஆகிறது.

தந்தை பெரியார், மூதறிஞர் இராஜாஜி, அறிஞர் அண்ணா மூவரும் கடைசியாக மேடையேறிச் சொற்பொழி வாற்றியது சென்னை மாநகரிலேதான்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சென்னையிலேதான் 8.10.1972-இல் காந்தியடிகள் சிலையைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினார்.

தந்தை பெரியார் அவர்கள் 19.12.1973-இல், தியாகராய நகரில் நடைபெற்ற சமூக இழிவு ஒழிப்புப் பொதுக்கூட்டத்தில்தான் தமது கடைசி உரையை ஆற்றினார்.

அறிஞர் அண்ணா அவர்கள் 14.11.1969-இல் சென்னை தியாகராய நகரில்தான் கலைவாணர் என்.எஸ்.கே. சிலையைத் திறந்து வைத்து உரை ஆயாற்றினார்!







# உயர்ந்த மனிதர்

அது ஒரு பெரிய மருத்துவமனை. அந்த மருத்துவமனைக்கு வெளியே, ஆயிரக்கணக்கான கட்சித் தொண்டர் களும், பொதுமக்களும் காத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

எதற்குத் தெரியுமா? தங்கள் தலைவரான தமிழ்நாட்டின் முதலமைச்சர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். அவர் மிகவும் அபாய கட்டத்தில் இருந்தார். என்ன ஆகுமோ? ஏது ஆகுமோ என்று வெளியே எல்லோரும் கவலையுடன் காத்துக் கொண்டு இருக் கிறார்கள்.''

''முதலமைச்சருக்கு இன்று அறுவை சிகிச்சை என்று வானொலியிலும் பத்திரிக்கையிலும் செய்திகளைச் சொல்லிக் கொண் டும், வெளியிட்டும் இருந்தார்கள்.

புகழ்பெற்ற அந்த வெளிநாட்டு மருத்துவர்''அய்யா.. இன்று உங்களுக்கு அறுவைச் சிகிச்சை என்று முன்னரே கூறி யிருந்தேன். அதற்கு நீங்கள் தயார் நிலை யில் இருக்கின்றீர் களா?'' என்றார்.

அதைக்கேட்ட முதல்வர், ''டாக்டர், இன்று வேண்டாம்.. நாளை வைத்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

அதற்கு மருத் துவரோ ''ஏன்... சார், இன்று நல்ல நாள் இல்லையா? இல்லை, ஏதேனும் முக்கிய மான தகவல் உண்டா?'' என்று கேட்டார்.

அதற்கு முதலமைச்சர் சிரித்துக் கொண்டே சொன்னார்... ''அதெல்லாம் ஒன்றுமில்லை.. டாக்டர். இதோ... இந்த நூலைப் படித்துக்கொண்டு இருக் கின்றேன். இன்று இரவுக்குள் நிச்சயம் படித்து முடித்துவிடுவேன். ஒருவேளை நீங்கள் இன்று அறுவைச் சிகிச்சை செய்து; அதன்பின்... நான் பிழைக்காவிட்டால் இந்தப் புத்தகத்தை முழுமையாகப் படிக்க முடியாமல் போய்விடும், அதற்கு என் மனம் இடம் தரவில்லை''என்றார்.



இதைக்கேட்ட அந்த வெளிநாட்டு மருத்துவர். ''இப் படிப்பட்ட அபூர்வ மான மனிதரை என் வாழ் நாளில் நான் இதுவரைக்கும் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை; எங்கள் நாட்டிலும் இப்படி ஒருவர் இருந்ததுமில்லை; இனி இருக்கப் போவது மில்லை.'' என்றார் நெகிழ்ச்சி யுடன்.

அந்தத் தலை வர்தான் முன்னாள் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா.

– என்.சி. ஞானப்பிரகாசம் எழுதிய 'சின்னஞ்சிறு கதைகள்' என்ற நூலிலிருந்து.




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சென்னை தொழில் வர்த்தக சபை ஆண்டு கூட்டத்தில் கலந்து கொண்டு விழா மலரை வெளியிட, கனடா நாட்டு தூதர் திரு ஸ்டான்லி கூச் பெற்றுக் கொண்டார். அருகில் வர்த்தகசபை தலைவர் எல். லட்சமணன் உள்ளனர். (21.6.96)

# படமும் செய்தியும்



சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரி திமோதி அவுசர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசியர் திரு. க. அன்பழகன் அவர்களைச் சந்தித்து உரையாடினார். (19.6.96)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களை பிரான்ஸ் நாட்டுத் தூதர் திரு. பெட்டிட் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார். (21.6.96)



தமிழ்நாட்டின் புதிய மின் திட்டங்கள் தொடங்க அமெரிக்க நாட்டுத் தொழில் அதிபர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களை சந்தித்துப் பேசினார்கள். (25.6.96)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களை விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தைச் சேர்ந்த ஊனமுற்ற சிறுவன் ஆர். யுவராஜ் பள்ளியில் சேர்ந்து கல்விபயில உதவிபுரியுமாறு வேண்டியுள்ளார். அச்சிறுவனின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்பையனுக்கு சென்னை பாலவாக்கத்தில் உள்ள லைப் ஹெல்ப் சென்டரில் 4ஆம் வகுப்பில் சேர்க்க உரிய ஆணையைத் தன் கையாலேயே வழங்கினார். (25.6.96)

சென்னையில் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு, சென்னை ஸ்ரீ மகேஸ்வரி உணவு வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்ட உணவு தானியங்களை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் வழங்கினார். விழாவில் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு கு. பிச்சாண்டி அவர்களும் உடன் கலந்து கொண்டார். (24.6.96)



# விழுப்பொருள்



ஒவ்வொரு மொழியிலும் எல்லாச் சொற்களும் பொருள்களைக் குறிக்கும் குறிப்பாகவே உள்ளன. பல்வேறு மொழிகள் ஒரே பொருளைப் பல்வேறு சொற்களால் குறிக்கின்றன. இதன் எதிராகப் பல்வேறு பொருள்களை, ஒரு மொழியில் உள்ள ஒரே சொல் குறிப்பதும் உண்டு. ஒரே பொருளைப் பல்வேறு சொற்கள் குறிப்பதும், பல்வேறு சொற்களை ஒரே சொல் குறிப்பதும், அந்த அந்த மொழியின் வளர்ச்சிக்கும் செறிவுக்கும் ஏற்ப நிறைந்து காணப்பெறும். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டுத் தோன்றிய இலக்கணமாகிய தொல்காப்பியம், இதனை,

**'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'**

**(தொல்காப்பியம்-சொல்-பெயரியல்-1)**

**'வினை வேறுபடூஉம் பலபொருள் ஒரு சொல் ஆயிரு வகைய - பலபொருள் ஒரு சொல் ஒரு வினை வேறுபடாப் பல பொருள் ஒரு சொல்'**

**(சொல்-கிளவி-53)**

என்று கூறிச்செல்கிறது. வளர்ச்சி அடைந்துள்ள எல்லா மொழிகட்கும் இது பொருந்தும். இவ்வாறு கூறுவதால் ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களும் எவ்வித வேறுபாடும் இல்லாமல், தம்முள் பொருளைக் குறிக்கும் ஆற்றலைச் சுயமாகப் பெற்றுள்ளனஎன்பது குறிப்பாம். இரண்டு சொற்கள் ஒரே பொருளைக் குறித்தாலும், அவற்றுள் ஓசை முதலிய வேறுபாட்டால் ஓரளவு நுண்மையான வேறுபாடு உண்டு. இதனால்தான் கவிதை சிறக்கின்றது. கவிஞன் கூறவந்த ஒன்றைக் குறிப்பதற்கு, ஒன்றுக்கு மேம்பட்ட பல சொற்கள் இருப்பினும், அவற்றுள் சிறந்த ஒரு சொல்லைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துபவனே, சிறந்த கவிஞன்.

சிறந்த ஒரு சொல்லைத் தேர்ந்து கொள்வது அவனுடைய கல்வி, அறிவு, கேள்வி, அனுபவத்தின் அடிப்படையிலே நடைபெறும்.

> *Values என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் எது என ஆயும் இக்கட்டுரை சொல்லாய்வாக மட்டும் அல்லாமல் பொருளாய்வாகவும் பொலிவுறுகிறது*





### உயிரோட்டமுள்ளது சொல்

இதனால்தான், ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு ஆக்கஞ் செய்வது கடினமாக ஆகிவிடுகிறது. மூலத்தில் உள்ள ஒரு சொல் பன்னூறு ஆண்டுகளாக அம்மொழியில் உள்ள பல அறிஞர்களாலும், கவிஞர்களாலும் பயன்படுத்தப் பெற்று, மெருகு ஏற்றப் பெற்றுள்ளது. இக்கருத்தை விளக்கவந்த அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதியும், தலைசிறந்த திறனாய்வாளரும் ஆகிய ஆலிவர் வென்டால் ஹோம்ஸ் என்பார், 'ஒரு சொல் என்பது வைரம் போன்று ஒரே மாதிரியாக என்றும் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் என்பது சரியன்று; எண்ணங்கள் என்பவற்றின் மேல் போர்த்தப்பட்டுள்ள உயிரோட்டமுள்ள தோல் போன்றது சொல். அது தோன்றும் நேரம், இடம் என்பவற்றிற்கேற்ப அதன் பொருளும் இயல்பும் மாறுபடும்' என்று கூறுவது சாலப் பொருத்தம் உடையதாகும்.

ஆங்கிலத்தில் உள்ள பல சொற்களைத் தமிழில் பெயர்ப்பது இயலாத காரியம். அதேபோலத் தமிழில் உள்ள பல சொற்களை ஆங்கிலம், வடமொழி முதலிய பிறமொழிகளில் பெயர்ப்பதும் இயலாத காரியம். அறம் என்ற தமிழ்ச் சொல்லைத் தர்மம் என்று கூறுவது பொருந்தாது.

### ஓரளவு பொருத்தமுடையது

ஆங்கிலத்தில் 'வேல்யூஸ்' (values) என்ற ஒரு சொல் உண்டு. இதற்கு விளக்கம் தரவந்த ஆக்ஸ்பர்ட் அகராதி, 'எவற்றை வேறு பயன் கருதாமல் அவற்றுக்காகவே உயிரினும் சிறந்ததாக மதிக்கிறோமோ, அவையே 'வேல்யூஸ்' என்ற சொல்லின் பொருளாகும்' (That which is esteemed for its own sake) என்று கூறுகிறது. எனவே, இச் சொல்லை நேரடியாக மொழி பெயர்க்க முடியாவிடினும், இதனுடன் ஓரளவு பொருத்தம் உடைய தமிழ்ச் சொல்லைத் தேடினால் 'விழுப்பொருள்கள்' என்பது ஓரளவு, பொருந்துவதாக உள்ளது.

### குறிப்பே சொல்லின் உயிர்நாடி

ஒருவன் ஒரு சொல்லைப் பயன்படுத்தும் பொழுது, அச்சொல் ஆயிரம் ஆண்டுகளாக அவன் முன்னோர்கள், அறிஞர்கள், கவிஞர்கள் என்பவர்களால், பயன்படுத்தப்பட்டிருத்தலின், அத்துணை நுண்மையான பொருள் வேறுபாடுகளுடன் கேட்போன் செவியில் நுழைகின்றது. கேட்பவனுடைய தகுதி, கல்வி, கேள்வி, அனுபவம் என்பவற்றிற்கு ஏற்ப அவன் மனத்தில் அச்சொல் பொருளை ஆழத்துடன் விளக்குகிறது; இத்தனை பொருள்களையும் நேரிடையாக அச் சொல் விளக்குவது இல்லை. குறிப்பால் உணர்த்தும் இயல்பு சொல்லுக்கு உண்டு.

### விழுப்பொருள்கள் இருவகை

இம்முறையில் 'விழுப்பொருள்கள்' என்று கூறும் பொழுது வேறு ஒரு பயனையும் கருதாமல், எவ்வெவற்றைத் தம் உயிரினும் சிறந்தவை என்று இத் தமிழர் கருதினார்களோ, அவற்றையே ஈண்டு குறிக்கிறோம். இந்த விழுப்பொருள்கள் தனிமனிதனுக்கு உரியவை, சமுதாயத்துக்கு உரியவை என இருவகைப்படும். இவ்வாறு கூறுவதாலும், விழுப்பொருள்கள் என்று பெயர் கூறுவதாலும், இவை பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக மாறாமல் இருப்பவை என்று யாரும் கருதிட வேண்டா. இவ் விழுப் பொருள்களுள் 'மாறும் விழுப் பொருள்கள்' 'மாறா விழுப்பொருள்கள்' என இருவகை உண்டு.

### மாறும் விழுப்பொருள்கள்

'தனி மனிதன் போற்றும் விழுப்பொருள்கள்' என்று கூறும்பொழுது அவனை ஒத்த தனி

> **... ஆங்கிலத்தில் உள்ள பல சொற்களைத் தமிழில் பெயர்ப்பது இயலாத காரியம். அதேபோலத் தமிழில் உள்ள பல சொற்களை ஆங்கிலம், வடமொழி முதலிய பிற மொழிகளில் பெயர்ப்பதும் இயலாத காரியம். ..**

> **... கவிஞன் கூறவந்த ஒன்றைக் குறிப்பதற்கு, ஒன்றுக்கு மேம்பட்ட பல சொற்கள் இருப்பினும், அவற்றுள் சிறந்த ஒரு சொல்லைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துபவனே, சிறந்த கவிஞன்...**



### புகை உயிருக்கு பகை இதை உணராதோ உலகம்!

புகைபிடிக்கும் வழக்க முடையோர் பற்றி உலகளாவிய அளவில் கணக்கெடுத்திருக்கிறார்கள்; அப்படி எடுத்த போது தெரிந்தவை இவை; உலக அளவில் சுமார் 110 கோடிப்பேர் புகைக்கு அடிமையானவர்களாக இருக்கிறார்கள். அவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் 15 வயதினர் அல்லது முதியோர். 1980 முதலே, வளர்ந்துவிட்ட நாடுகளில் புகைபிடிப்போர் எண்ணிக்கை குறைந்து வரும்போது வளரும் நாடுகளில் அந்த எண்ணிக்கை கூடிவருகிறது; 'புகை உயிருக்குப் பகை' என்று அறிவியல் அறிஞர்கள், மருத்துவ மேதைகள் சொல்லுவதெல்லாம் எடுபடவில்லை. கி.பி. 2020 ஆம் ஆண்டுவாக்கில் புகைப்பழக்கத்தால் மட்டும் ஓராண்டுக்குச் சுமார் ஒரு கோடிப்பேர் மாண்டுபோவார்கள் என்றெல்லாம் உலக சுகாதார அமைப்பின் ஆய்வு தெரிவிக்கிறது.

அதிக அளவில் புகைபிடிப்பதால் புற்றுநோய், மாரடைப்பு போன்றவை உண்டாகிறது என்கிறார்கள் மருத்துவர்கள். புகையிலை தொடர்பான இது போன்ற நோய்களால் மட்டும் இந்தியாவில் ஆண்டொன்றுக்கு 15 இலட்சம் பேர் இறந்து போகிறார்கள் என்று ஒரு கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.



### உற்றுழி உதவ ஒரு புதுமுறை!

ஸ்கைசெல் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் விரைவிலேயே செல்லூலர் போன் வைத்திருப்போருக்காக ஒரு நூதனத் திட்டத்தைக் கொண்டுவரவிருக்கிறது. இதன் பணி என்னவென்றால், இவர்களோடு செல்லூலர் போன் மூலம் தொடர்பு கொண்டால், நாம் பயணம் தொடர ஊர்வலம் போவது போன்ற சங்கடம் இல்லாத பாதை சொல்லப்படும்; முக்கியப் பங்குகளின் விலை விவரம் தெரிவிக்கப்படும். இன்னும் இப்படி எத்தனையோ வகையில் நமக்கு உதவுவதாக இந்த அமைப்பு செயல்படும்!

### காணவேண்டிய கண்காட்சி அரங்கு

ஜெர்மனியில் உள்ள லேப்சிக் மிகப் பெரிய வர்த்தக நகரமாகும். உலகிலேயே மிகப் பெரிய கண்காட்சி அரங்கை இங்கே உருவாக்கியிருக்கிறார்கள். இரண்டாண்டுகளுக்கு முன்னால் கட்டத் தொடங்கிய அந்த அரங்கம் 9,86,222 சதுர கிலோ மீட்டர்பரப்பளவு கொண்டதாக அண்மையில்தான் முடிவடைந்திருக்கிறது. இந்த அரங்கில் அறிவியல் சமாச்சாரங்கள் பெருமளவில் இடம் பெறுமாம்.

### கப்பல்களை மோதவிடும் கடும் மூடுபனி

மப்புமந்தாரமற்ற இரவில் தரைக்குச் சற்று மேலுள்ள சூடான காற்றானது, தரை மட்டத்திலுள்ள குளிர்ந்த காற்றிலுள்ள ஈரத்தை உறிஞ்சிக் குளிர்ச்சிடையும். ஒரு குறிப்பிட்ட அளவு குளிர்ச்சி அடைந்ததும் அதற்குமேல் ஈரத்தை உறிஞ்சமுடியாது. இந்த வெப்பநிலையைப் 'பனிநிலை' என்பர். பனிநிலைக்கும் கீழ் அக்காற்றின் வெப்பநிலை குறையுமானால் அதிலுள்ள நீராவி நீர்த்துளிகளாக மாறி மூடுபனியாகத் தரைமட்டத்தில் படிகிறது.





மிகக் கடுமையான மூடுபனியாயிருந்தால் போக்குவரத்து தடைபடும். விமானங்களை ஓட்ட மாட்டார்கள், கப்பல்களும் எங்காவது மோதிவிடக்கூடும். சாலைகளில் விபத்துக்கள் நேருவதுண்டு.



### விந்தை செய்யும் கம்ப்யூட்டர்

பிட்மேன் பிளஸ் என்கிற ஒரு மிகச்சிறிய கம்ப்யூட்டர் நாம் சொல்லுவதை அப்படியே பதிவு செய்து கொள்ளும் ஆற்றலுடையதாக இருக்கிறது! பேச்சாளர்களின் சொற்பொழிவுகளையும் இதன் மூலம் பதிவு செய்யலாம்; அதைக் காதில் பொருத்திக்கொண்டு நிறுத்தி நிறுத்திக் கேட்டுதட்டச்சுசெய்துவிடலாம். இதை அப்படியே ஒலிவடிவில் ஃபைல் செய்தும் வைக்கலாமாம்!

சென்னையில் உள்ள 'பேஸ் ஆட்டோமேஷன் லிமிடெட்' நிறுவனம் அற்புதச் சாதனம் ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறது. இதன்மூலம் மிகப்பெரிய நிறுவனங்கள் வேலைக்கு வருவோர், வராதவர்கள், அவரவரும் செய்கிற வேலையின் அளவு போன்றவற்றைக்கணக்கெடுக்க முடியுமாம். மாதக் கடைசியில் அச்சாதனம் காட்டும் வழிமுறைப்படியே ஊதியம் தரப்படுவதும் எளிதாக இருக்குமல்லவா?

## போர்களின் முடிவை நிர்ணயிக்கும் ராடார்:

ரேடியோ அலைகள் என்பவை மின்காந்த அலைகள் ஆகும். ரேடியோ அலைகள் ஏதாவது ஒரு பொருள்மீது மோதினால் அவை பிரதிபலித்துத் திரும்புகின்றன. இந்த அலைகள் திரும்பும் நேரத்தைக் கணக்கிட்டு அந்தப்பொருள் எவ்வளவு தொலைவிலிருக்கிறது என்று குறித்துக் கொள்ளலாம்.

ஒரு பொருளின் இருப்பிடத்தையும் தொலைவினையும் ரேடியோ அலைகளைக் கொண்டு அறிதல் என்பதற்கான ஆங்கிலச் சொல்லின் சுருக்கமே ராடார் ஆகும்.

ராடார் கருவியைக் கண்டு பிடிப்பதற்கு வெளவால் வழிகாட்டியாக இருந்தது எனலாம். வெளவால்கள் மண்டபங்களிலும், குகைகளிலும் மிக வேகமாய்ப் பறந்தாலும் அவை எதன்மீதும் மோதிக்கொள்வதில்லையல்லவா? மிகக்கூர்மையான கண்பார்வை இருப்பதே இதற்குக்காரணம் என்று முதலில் கருதினர். ஆனால் வெளவாலின் கண்களைக் கட்டிய பின்னரும் அது எங்கும் மோதிக்கொள்ளாமல் பறப்பதைக் கண்டார்கள். வாயையும் காதையும் கட்டிய போது அது நிலைதடுமாறியது.

இதிலிருந்து வெளவால் எழுப்பும் ஒலி, பொருள்களின் மீது மோதித்திரும்புவதிலிருந்து எதிர்ப்படும் தடைகளை அது அறிந்து விலகிச்செல்கிறது என்று அறிவியலறிஞர்கள் முடிவு செய்தார்கள். இந்த ஆராய்ச்சியே ராடாரை அமைப்பதிலும் பின்பற்றப்படுகிறது. ஆனால் ராடாரில் ஒலிக்குப் பதிலாக ரேடியோ சிற்றலைகள் பயன்படுத்தப்படுகின்றது.

ஒலி அலைகள் வினாடிக்கு 330 மீட்டர் வேகத்தில் செல்லுகின்றன. ஆனால் ரேடியோ அலைகள் வினாடிக்கு 3,00,000 கிலோ மீட்டர் வேகத்தில் செல்கின்றன. அதாவது ஒரு மைக்ரோ வினாடியில் 300 மீட்டர் தொலைவு செல்கிறது.

போர்க்காலங்களில் ராடார் மிகவும் பயன்படுகிறது. நீர்மூழ்கிக் கப்பல்கள் இருக்கும் இடங்களைத் தெரிந்து கொள்ளவும், விமான நிலையங்களில் விமானங்கள் ஒழுங்காக இறங்குவதற்கு வழி காட்டவும் வானிலையைக் கண்டறியவும் ராடார் பயன்படுகிறது.



வெளவால்களே-ராடாரின் முன்னோடி

மனிதர்கள் அனைவரும் அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைப்பது சரியன்று. ஒரு சமுதாயம் ஒரு கால கட்டத்தில், விழுப் பொருள்கள் என்று ஏற்றுக் கொண்ட ஒன்றை, அதே சமுதாயம் பிறிது ஒரு காலகட்டத்தில், அதையே விழுப்பொருள்கள் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. இவை அனைத்தும் 'மாறும் விழுப் பொருள்கள்' எனப்படும்.

**மாறா விழுப்பொருள்கள்:**

இதன் எதிராகச் சிலவற்றை மாறா விழுப்பொருள்கள் என்று தனி மனிதர்களும், சமுதாயமும், ஏற்றுக்கொள்வதுண்டு. பிறருக்குத் தீங்கு நினைக்கவோ, செய்யவோ கூடாது. தன்னலத்தைத் துறந்தேனும், பிறருக்கு நலஞ் செய்ய வேண்டும் என்பவை போன்ற விழுப்பொருள்கள் மாறா இயல்புடையவை என்று கருதப்பெறுபவை, ஏறத்தாழ எல்லாச் சமுதாயங்களும் இப் பொதுவான விழுப் பொருள்களைப் போற்றும் இயல்புடையன. இவற்றைப் போற்றும் சமுதாயத்தை நாகரிகம் முதிர்ந்த சமுதாயம் எனக் கூறுகிறோம்.

*அருந்தமிழறிஞர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்களின் 'கம்பன் புதிய பார்வை' நூலிலிருந்து.*

---

## லேசர் என்பது லேசானதல்ல!

சாதாரணமாக கண் அறுவை சிகிச்சை என்றால் நோயாளி குறைந்தது ஒரு வாரகாலமாவது மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டும் என்று தானே நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், அண்மையில் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள ஒரு பெரிய கண் மருத்துவமனையில் கண் அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஒரு நோயாளி ஒரே நாளில் மருத்துவமனையை விட்டு வந்த ஒரு அறிவியல் அதிசயம் நிகழ்ந்தது.

இந்த அதிசயத்தை நிகழ்த்தியது, இன்னொரு உலகப்போர் வந்தால் அதில் தலையாய பங்கு வகிக்கப் போகும் தளபதி என்று எல்லோராலும் நம்பப் படுகிற 'லேசர் கதிர்' தொழில் நுட்பம் ஆகும்.

லேசர் என்று அழைக்கப் படும் இந்த அறிவியல் தொழில் நுட்பத்தைத் தமிழில் தூண்டப் பட்டக் கதிர் வீச்சினால் ஒளிப் பெருக்கம் என்று அழைக் கிறார்கள். உண்மையில் லேசர் என்பதற்கு (Light Amplification by Stimulated Emission of Light) என்ற சொற்றொடரின் முதலெழுத்து குறுக்கமே (Laser) எனலாம்.



லேசர் கோட்பாட்டை முதன்முதலில் தோற்றுவித்தவர்கள் அமெரிக்க விஞ்ஞானிகளான டவுனெஸ், ஸ்சாலோவும் ரஷிய நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகள்பாசவ், ப்ரோகாரோ ஆகியோரும் ஆவர்.

இருந்தாலும் முதன் முதலில் லேசர் கருவியை உருவாக்கிய பெருமை அமெரிக்க நாட்டு விஞ்ஞானியான தியோடர் மாய்மான் என்பவரை சாரும். இவர் செயற்கையான மாணிக்கக் கல்லை தனது ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தினார்.

லேசர் விளக்கின் ஒளி- அதாவது ஒரு மில்லி வாட் (ஆயிரத்தில் ஒரு பங்கு) லேசர் ஒளியானது மனிதனின் கண்களையே குருடாக்கும் பிரகாசமுடையது என்று கருதப்படுகிறது.

மருத்துவத் துறையில் கொடிகட்டிப் பறக்கப் போகும் லேசர் கதிர்கள் அதிகமாகப் பயன்படுவது கண் அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் சிகிச்சைகளில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

> உழைக்காமல் வாழ்பவர் உலகில் அதிகம்; வாழாமல் உழைப்பவர் அவர்களைவிட அதிகம்.
>
> – சார்லஸ் ஆர். பிரௌன்

> கடினமான செயலில் முயற்சியோடு உழைக்கும் வேரும் தன்மானத்தை இழப்பதில்லை.
>
> – ஜார்ஜ் பெர்னார்ட்ஷா





# அறிவியல் துளிகள்

### வியக்க வைக்கும் வெப்ப நீரூற்று

அந்தமான், நிகோபார் தீவுகளுக்கு அருகே கடலில் வெப்ப நீரூற்றுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அப்பகுதி கடல்நீரின் வெப்ப நிலை 300 டிகிரி செல்சியசாக இருக்கிறதாம். இப்படி வெப்ப நீரூற்று உள்ள பகுதிகளில் தங்கம், வெள்ளி, பிளாட்டினம் போன்ற கனிம உலோகம் கிடைக்கும் என்று சொல்லப் படுகிறது.

### 'இ' இருந்தால் முதுமை வாராது!

விட்டமின் 'இ' யை அதிகம் சேர்த்துக் கொள்ளுவோருக்கு அவ்வளவு சீக்கிரம் முதுமை வாராதாம். அமெரிக்க நாட்டுத் தேசிய அகாடமி நடத்திய ஆய்வு மூலம் இது தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

### சுற்றுச் சூழலைக் கெடுக்கும் உணவகங்கள்



வளைகுடா நாடுகளில் சீனர்கள் நடத்தும் உணவு விடுதிகள் அதிகம்; அங்கெல்லாம், சுறா மீன் 'சூப்'பிற்குத்தான் கிராக்கி அதிகமாம். சுறாமீனின் தேவையற்ற உடற்பகுதிகள் வெட்டி கடலில் வீசப்படுவதால், வளைகுடாவே அதிகமாக மாசு பட்டிருப்பதாகக் கண்டறியப் பட்டிருக்கிறது.

### மாசுபடுத்தாத கார்

சுற்றுப்புறச் சூழல், கார் போன்ற வாகனங்களால் மாசுபடுகிறது என்கிறோமல்லவா? அப்படி மாசு படுத்தாத கார்களில் முதன்மையானது என்பதற்கான விருது 'மாருதி 1000' காருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மனியைச் சேர்ந்த 'ஆட்டோ மொபைல் சங்கம்' இந்த விருதை அளித்திருக்கிறது.



### உடல்நலம் காக்கும் பருத்தி ஆடைகள்

நம் நாட்டுப் பருத்தி ஆடைகள் மேல், அமெரிக்க ஐரோப்பிய நாட்டு மக்களுக்கு ஆவல் ஏற்பட்டிருக்கிறது. அண்மையில் சென்னையில் நடந்த கருத்தரங்கில் இக்கருத்து தெரிவிக்கப்பட்டது. மேலும், அவர்கள் விரும்பத்தக்க ஆடைகள் வடிவமைப்பில் நாம் தனிக் கவனம் செலுத்தினால் இந்திய ஆடை ஏற்றுமதி பெருகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. பருத்தி ஆடைகளே உடல்நலம் காக்கும் என்கிறார்கள் மருத்துவர்கள். ஆனால் நாம் அதைக் காதில் போட்டுக் கொள்கிறோமோ!

### மிகப் பிரம்மாண்டமான மிருகம்



மொராக்கோ நாட்டின் தென் பகுதியில் இருக்கின்ற சகாரா பாலைவனப் பகுதியில் ஒரு பிரம்மாண்டமான டைனோசர் தலை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 5 அடி 4 அங்குல நீளத்தில் தலை எலும்பு மட்டும் இருக்கிறதாம். அப்படியானால், இந்த விலங்கு 45 அடி நீளமும், 12 அடி உயரமும் உள்ளதாக இருந்திருக்கும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

# செய்திச் சரம்

## திரையுலகினருக்கு உதவிக்கரம்

குறைந்த அளவில் முதலீடு செய்து தயாரிக்கப்பட்டு 1995-ஆம் ஆண்டு வெளியானதரமானதமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்குவது குறித்துப் பரிசீலனை செய்து, சிறந்த படங்களை அரசுக்குப் பரிந்துரைசெய்வதற்காக 15.6.96 அன்று திரு பரிதி இளம்வழுதி (சட்டப் பேரவைத் துணைத்தலைவர்) அவர்கள் தலைமையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அக்குழுவில் திருமதி. எம்.என். ராஜம், திருமதி சரோஜா தங்கவேல், செயலாளர் செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, இணை ஆணையர் வணிக வரித்துறை, துணைச் செயலாளர். உள்துறை, முதல்வர் தமிழ் நாடு திரைப்படத் தொலைக்காட்சி நிறுவனம் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

**இசைக் கல்லூரி நிர்வாகிகள்**

சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள இசைக் கல்லூரிகளின் கௌரவ இயக்குநராக, இசையமைப்பாளர் திரு. டி.ஆர். பாப்பா அவர்கள் அமர்த்தப் பட்டிருக்கிறார். சென்னை இசைக்கல்லூரியின் முதல்வர் திரு. திருப்பாம்புரம் சண்முகசுந்தரம் அவர்களுக்கு, மேலும் ஓராண்டிற்கு அவருடைய பதவிக்காலம் நீட்டிக்கப்படுகின்றது என அரசு 16.6.96 அன்று அறிவித்தது.

**இயல், இசை, நாடக மன்றம்**

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவராக திரு இராமநாராயணன் அவர்களும், செயலாளராக நடிகர் திரு. சந்திரசேகர் அவர்களும், துணைச் செயலாளராக திரு.கே. சொர்ணம் அவர்களும் உறுப்பினர்களாகத் திருவாளர்கள் பேராசிரியை அரசு மணிமேகலை, தஞ்சாவூர் டி.ஆர். சீனிவாசன், அரித்துவாரமங்கலம் ஏ.கே. பழனிவேலு, புஷ்பவனம் குப்புசாமி, கயல். கோ. தினகரன், பேராசிரியை சாரதா நம்பியாரூரன், டி.எஸ். இலட்சப்பா ஆகியோரும் 17.6.96 முதல் அமர்த்தப் பட்டனர்.

## 'ஆவின்' மாம்பழச்சாறு



இந்தியாவின் தலைசிறந்த பால்வள நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் நமக்குப் பால் விநியோகிப்பது மட்டுமல்ல; இப்போது இனிக்கும் மாம் பழச்சாறு வழங்கவும் முன் வந்திருக்கிறது; இயற்கையான மாம்பழச் சாற்றை ஆறுமாதங்கள் வரை கெட்டுப்போகாத வண்ணம் பதப்படுத்தி மிக நவீன 'டெட்ராபேக்' என்ற அட்டைப்பெட்டிகளில் அடைத்து விற்பனைக்குவிட முடிவு செய்துள்ளது. அதிலும், தமிழ்நாட்டின் மாங்கனி நகரான சேலத்தில் அமையப்பெற்ற பால் பண்ணையில், ஆவின் மாம் பழச்சாறு உற்பத்தி செய்யப்படும். இதன் மூலம் ஆவின் நிறுவனத்திற்கு அன்னியச் செலாவணியை ஈட்ட வாய்ப்புக்கிடைக்கிறது.

**சுவை மிக்கது சுத்தமானது**





**காவலர் குடும்பத்திற்கு முதல்வர் நிதியுதவி**

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் திருப்பெரும்புதூர் காவல் நிலையத்தில் 30.4.95 அன்று காவல் துறையின் பொறுப்பில் இருந்த திரு தங்கமணி என்பவர் இறந்து விட்டார். அவரது குடும்பத்தினரின் வறிய சூழ்நிலையைக் கருதி அன்னாரது மனைவிக்கு 'முதலமைச்சர் பொது நிவாரண நிதியில்' இருந்து உதவி நிதியாக ரூ. 50 ஆயிரம் வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டு உள்ளார்.

தமிழ்நாடு திரைப்படத் தொலைக்காட்சி - தொழிற்பயிற்சி - செய்திப்படப் பிரிவு இயக்குனராக ஒளிப்பதிவு வல்லுநர் திரு.பி. அமிர்தம் நியமிக்கப்பட்டுள்ளார்.

எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் தலைவராகத் திரைப்படத் தயாரிப்பாளரும் இயக்குநருமான திரு முக்தா வி. சீனிவாசன் நியமிக்கப் பட்டுள்ளார்.

### வரலாறு காணாத பெருமழை

கடந்த நூற்றாண்டுக்காலமாக இல்லாத அளவிற்கு அண்மையில் பெய்த பெருமழை காரணமாகச் சென்னை மாநகரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. அவ்வாறான பகுதிகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் நேரில் சென்று பார்த்தனர்; பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறினர்; உணவுப் பொருட்களை வழங்கினர்.

### பாதிக்கப்பட்ட இராணுவத்தினருக்கு அரசு உதவி

இராணுவத்தில் பணியாற்றும்போது உயிரிழந்த - அல்லது உடல் உறுப்புகளை இழந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த போர் வீரர்களுக்கு 1971 முதல் தமிழக அரசினால் வழங்கப்பட்டு வரும் கருணைத் தொகையை, 25 ஆண்டுகளுக்குப் பிறகு மேற்கண்டவாறு உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

போர் முனையில் உயிரிழந்தோர் குடும்பத்தினர்களுக்கும், இரு கை அல்லது இரு கால்களையும் இழந்தவர்களுக்கும், ஒரு கண் பார்வையை இழந்தவர்களுக்கும் செயல்பட முடியாத நிலைக்கு ஆளானோர்க்கும் தற்போது வழங்கப்படும் கருணைத் தொகை 5,000/- ரூபாய் ஆகும்; இனி அது ரூ. 20,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

ஒரு காலை இழந்தவர் மற்றும் வேலை செய்ய முடியாமல் கையையோ விரல் களையோ இழந்தவர்க்குத் தற்போது வழங்கப்படும் கருணைத் தொகை முறையே ரூ. 4,000/- மற்றும் ரூ. 3,000/- ஆகும்; இனி அது ரூ. 10,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

ஒரு கண் பார்வையை இழந்தவர்கள், தீக்காயம் அடைந்தவர்கள், துப்பாக்கியால் சுடப்பட்டதால் காயம் அடைந்தவர்கள் மற்றும் போர்முனையில் ஏற்படும் விபத்துக் களால் எலும்பு முறிவு ஏற்பட்டவர்கள் ஆகியோருக்குத் தற்போது வழங்கப்படும் கருணைத் தொகை முறையே ரூ. 4,000/- ரூ. 2,000/- ரூ. 1,000/- என்று இருப்பதை இனி ரூ. 5,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

செய்திச் சரம்

மருத்துவக் கட்டுரை:

# தலைவலி

டாக்டர் ஜி.சுந்தரமூர்த்தி எம்.டி.,

'தலை இருக்கும்வரை தலைவலி இருக்கத் தான் செய்யும்' என்று சிலபேர் நகைச்சுவை தோன்றச் சொல்லுவார்கள்; அதற்காகத் தலையை வெட்டிப் போட்டு விட முடியுமா என்ன?'' எண் ஜாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் அல்லவா!

வேகாத வெயிலில் சுற்றி விட்டு வரும் சிலருக்குத் தலையே வெடித்துவிடும் போல 'விண்விண்' ணென்று தெறிக்கும்; என்ன மருந்தைத் தடவினாலும் வலி குறையாது; அதற்கு மாறாகக் கண்ணெரிச்சல் உண்டாகிவிடும்.

மழையில் நனைந்து விட்டு வந்து தலையைத் துவட்டிக் கொண்டாலும் சிலபேருக்கு ஒத்துக்கொள்ளாது; தலைவலி உண்டாகிவிடும்.

வியர்க்க விறுவிறுக்க வேலை பார்த்து விட்டு வந்து 'அப்பாடா' என்று ஓய்வாக உட்காருகிற சிலரும் நெற்றிப் பொட்டைப் பிடித்துக் கொண்டு' என்ன வலி' என்று தனக்குத்தானே முனகுவார்கள்.

நேற்றுவரை 'கொட்டு கொட்டென்று' விழித்துப் பார்த்துக் கொண்டிருந்திருப்பார்கள் சிலர்; இன்றைக்குப் பார்த்தால் மூக்குக் கண்ணாடி அணிந்திருப் பார்கள். என்ன சங்கதி என்று கேட்டால் 'தலைவலிக்காக' என்பார்கள்.

தலைவலிக்காக ஏராள மான மருந்து, மாத்திரை, தைலம், களிம்பு (Ointment) எல்லாம் வந்திருக்கின்றன; கிராமப்புற மக்களோ - வெற்றி லைக் காம்பு, பூண்டு, வெங் காயத்தையெல்லாம் நெற்றியில் கைமருந்தாகத் தேய்த்துக் கொள்ளுவார்கள்.

இவ்வளவுக்கு மேலும் தலைவலி நீங்காதபோதுதான், பலருக்கும் மருத்துவரைத் தேடிப்போகும் நினைப்பே வரும்!

எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரி மருந்து போடுவதை விட, மருத்துவரிடம் போய்க் காட்டுவதுதான் நல்லது.

**தலைவலிக்கான காரணங்கள்:**

தலைவலி என்பது ஒரு நோயே அல்ல; அது ஒரு நோயின் வெளிப்பாடு அல்லது அறிகுறியே யாகும்.

தலைவலி உண்டாவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. தலைவலி ஒரு சாதாரண நோயின் அறிகுறியாகவோ அல்லது ஒரு பயங்கரமான நோய் வருவதற்கான அறிகுறி யாகவோ கூட இருக்கலாம்.

சாதாரண நோயின் வெளிப் பாடு என்பது உணர்ச்சிக் கொந் தளிப்பால் உண்டாகக் கூடும்; பயத்தால் வரும்; பசியின் காரண மாக ஏற்படும்; தூக்கமின்மை அல்லது கடுமையான வெயில் காரணமாகவும் தலைவலி உண்டாகும்.

இவ்வாறான சில காரணங் களால் வருகின்ற தலைவலி யால் உடலில் அப்படி யொன்றும் பெரிய பாதிப்பு ஏற்படாது; அந்தந்தக் காரணங் களுக்கு நிவாரணம் கண்டாலே போதும்; தலைவலி பறந்து விடும்.

**நிவாரணங்கள்:**

உதாரணத்திற்குச் சொல்லு வதானால் - பசி காரணமாகத் தலைவலி ஏற்படுகின்ற தென்றால் சிறிது நேரம் தூங்கி எழுந்தாலே போதும்; தலைவலி மறைந்து விடும்.

வெயிலில் சுற்றிவிட்டு வருவதால் தலைவலி உண்டாகி யிருக்கிறதென்றால், பாதிக்கப் பட்ட நபர் Heat Exhaustion என்கிற ஒரு மாற்றத்திற்கு







ஆளாகியிருக்கிறார் என்று அர்த்தம். அப்படிப்பட்டவர் சிறிது உப்புக்கரைசல் சாப் பிட்டாலே சரியாகிவிடும்.

'Heat Stroke' என்ற மிகக் கடுமையான வெப்ப நோய் வந்தால், உடனே மருத்துவ மனையில் அவரைச் சேர்த்தாக வேண்டும். அவர் உடலில் கூடுதலான வெப்பம் ஏறிவிடுவதே அந்தப் பாதிப்பின் காரணம்; அவரை உடனே மருத்துவ மனைக்குக் கொண்டு போகா விட்டால் அந்தநபரை நாம் இழக்கின்ற நிலைமையே கூட ஏற்படக்கூடும்.

வேலைப்பளு, அச்சவுணர்வு, குற்ற உணர்வு, மிக நெருக்க மானவர்களோடு விரோதம் அல்லது பிணக்கு போன்ற மன அழுத்தம் காரணமாகவும் தலை வலி வரும்; அந்தந்தக் காரணங் கள் நீங்கினாலே தலைவலியும் நீங்கிவிடும்.

வேறெந்தக் காரணத்தாலா வது தலைவலி வந்திருக்குமோ என்று அவர்கள் தம்மைப் பரி சோதித்துக் கொண்டால், எவ்வித நோயும் தமக்கு வந்திராததை அவர்களால் உணரமுடியும்.

**நோய்களால் தலைவலி:**

நோயின் காரணமாக வரு கின்ற தலைவலியை நாம்-

தலைக்கு வெளியே வரும் நோய்கள்.

தலைக்கு உள்ளே வரும் நோய்கள்

- என்று இரண்டு வகை யாகப் பிரிக்கலாம்.

இதில், முதலாம் வகைத் தலைவலிக்கு சாதாரண நோயும் காரணமாக இருக்கும்; உயிரைப் போக்கக்கூடிய கடுமையான நோயும் காரணமாக அமையும்.

அவை:

அ. தமனி மற்றும் சிரைகள் போன்ற இரத்த நாளங்களில் ஏற்படும் மாற்றங்களால் வரும் (Vascular Headache) தலைவலிகள் ஒற்றைத் தலைவலி (Migraine), பரவ லான தலைவலி (Cluster Headache), முதியவர்களுக்கு வரும் தலைவலி (Gianticll Arteritis), ஒற்றைத் தலைவலி அல்லாத மற்ற தலைவலிகள் (Non-Migrainous Vascular Headache) போன்ற தலைவலிகளாகும்.

ஆ. தேவையற்ற பதற்றத்தாலும் இறுக்கத்தாலும் வரும் தலைவலி (Tension Muscle Contraction Headache).

இ. முகக்காற்றுத் துவாரங்களால் வருவது (Sinus Headache).

ஈ. கண்களில் ஏற்படும் நோய் காரணமாக வருவது (Ocular).

உ. காதுகளில் உண்டாகும் நோய் காரணமாக வருவது.

ஊ. பற்களில் வரும் நோயால் ஏற்படுவது.

எ. நரம்புகளில் ஏற்படும் பாதிப்புகளால் உண்டாவது.

ஏ. கழுத்து எலும்பிலும், மற்ற எலும்புகளில் இணைந்த திசுக் களில் உண்டாகும் நோய் களின் மூலமும் வருவதுஎன அவை பலவாகும்.

-இவைகள் யாவும் கபாலத் தின் மேற்பகுதியால் உணரப் படும் தலைவலிகளாகும்.

**உட்பகுதித் தலைவலி**

தலையின் உள்ளே உண்டா கும் தலைவலிகள் கீழ்க்கண்ட வாறு ஏற்படும்:

அ. மூளையில் உண்டாகும் கட்டிகள் (Tumours)

ஆ. சீழ்க் கட்டிகளால் உண்டாகும் (Abscess).

இ. கபாலத்தின் உட்பரப்பைப் பாதுகாக்கும் மேற்பகுதியின் ஊடே ஏற்படும்.

ஈ. இரத்தக் கட்டிகள் மூலம் (Ebi or subdural or Paraenchymal Haematoma) வரும்.

ஈ. முதுகுத் தண்டில் தேவை யின்றி உற்பத்தியாகும் நீரை ஊசிமூலம் எடுத்த பிறகு உண்டாகும் (Post lumbar Puncture Headache).

உ. தலையின் உட்பகுதியில் இரத்தம் கட்டுதல், புண் ஏற்படுதல், மூளை மற்றும் அதைச் சார்ந்த பகுதிகள் பாதிக்கப்படுவதானலும் வரும்.

–இவ்வாறானதலைவலிகள் சுபாவத்தின்உட்புறத்தில்உண்டாகி உபத்திரவம் கொடுக்கும்.

இந்த இரண்டு வகையிலும் கட்டுப்படாத சில காரணங்களினாலும் தலைவலி உண்டாவதுண்டு. அவற்றின் விவரம் பின்வருமாறு:

அ. உணர்ச்சி வசப்படுதல்.

ஆ. மனநலம் பாதிக்கப் படுதல்.

இ. ஒவ்வாத மருந்து மாத்திரைகளை உட்கொள்ளுதல்.

ஈ. உடலில்வளியமிலவாயு மிகுதல்.

உ. நஞ்சு.

ஊ. நச்சுத் தன்மை உடலில் பரவுதல்.

எ. சிறுநீரக இயக்கமின்மையால் கழிவுப்பொருள் உடலில் தேங்குதல்.

ஏ. வெப்பம் மிகுதல்.

–இவ்வாறான காரணங்களாலும் உட்புறத்தலைவலிகள் உண்டாகும்.

*எதனால் இது வருகிறது?*

இதுவரை படித்த இந்த விவரங்களே உங்களுக்குத் தலைசுற்றலை உண்டாக்கி விட்டதா என்ன? இன்னும் விஷயம் இருக்கிறது. வேண்டுமானால் ஒருமுறை பெருமூச்சு விட்டுக்கொண்டு நிதானமாக இதுவரை சொல்லப்பட்டதை இன்னும் சற்று விரிவாக அறிய மேலே படியுங்கள்:

மண்டையோட்டின் மேற்பரப்பில் தலையைச் சுற்றியுற்ற இரத்த நாளங்களும், தலையின் உட்புறமுள்ள இரத்த நாளங்களும் சுருங்கி விரிவடைவதால் ஏற்படுவதுதான் ஒற்றைத் தலைவலியாகும். இரத்த நாளம் சுருங்கும்போது, பாதிக்கப்பட்ட நபருக்கு மூளையில் எந்தப் பகுதி பாதிக்கப்படுகிறதோ, அதற்கு ஏற்றபடி அதன் வெளிப்பாடுகளும் அமையும்.

உதாரணமாகச் சிலருக்குக் கண்களின் முன்னால் ஒளிக்கற்றைகள்தோன்றி மறைவது போலிருக்கும். சிலருக்குப் பக்கவாதமே ஏற்பட்டு நீங்கும். வாந்தி - மயக்கம் சிலருக்கு வரும்.

இரத்த நாளங்கள் விரிவடைகிற போது ஒருவகைத் தலைவலி உண்டாகும். அப்படிப்பட்ட தலைவலிக்கு, அந்த நாளங்களைச் சுருங்கச் செய்யும் Engotamine கலந்த மாத்திரைகளைக் கொடுத்தால் போதும்; வலி குறைந்து விடும். திரும்பத் திரும்ப இவ்வகைத் தலைவலி உண்டாகக்கூடும்.

அவ்வகைப் பாதிப்பிற்கு ஆளாவோர் மருத்துவரிடம் காட்டி, அவர்கள் குறிப்பிடும் மாத்திரை மருந்துகளைச் சாப்பிட வேண்டும்; தலைவலி நீங்கி விடும் இதற்கு ஏராளமான மருந்து மாத்திரைகள் உண்டு என்றாலும், இஷ்டப்படி எதையாவது வாங்கித்தின்னக்கூடாது.

ஒற்றைத் தலைவலி பெண்களைவிட ஆண்களுக்கு அதிகமாக வரும். தூங்கிய 2 அல்லது 3 மணிநேரம் கழித்து கண்களில் வலி வரும். பொறுக்க முடியாத வலியும் கண்ணீர் சுரப்பு, அடைத்த நாசி, மற்றும் மூக்கிலிருந்து நீர் வழிதல், கண்ணிமைகள்வீக்கம்போன்றவை இந்நோயின் மற்ற வெளிப்பாடுகள் ஆகும். இது குறைந்தது ஒரு மணியிலிருந்து இரண்டு மணிநேரம் வரை இருக்கும். இது தினமும் - பெரிதும் இரவில் வரும். வாரக்கணக்கில் நீடிக்கும். பிறகு வலியில்லாக் காலம் மாதக்கணக்கில் இருக்கும்; ஆண்டுக்கணக்கிலும் நீடிக்கும்.

'மைக்ரெய்ன்' வகையைச் சேராத ஆனால் இரத்த நாளங்களில் தலையில் அடிபடுவதால்







> நண்பனைத் தேர்ந்தெடுப்பதில் நிதானமாக இரு; அவனை மாற்றுவதில் இன்னும் நிதானமாக இரு.
>
> – ஸ்காட்டிஷ் பழமொழி

ஏற்படும் மாற்றங்களினால் ஒற்றைத் தலைவலி அல்லாத தலைவலிகள் ஏற்படும். இரத்தக் கொதிப்பினால் பாதிக்கப்படுவோரில் பத்து சதவிகிதம் பேருக்கு விடியற்காலையில் இவ்வகைத் தலைவலி ஏற்படும். அது மாதிரி நேரங்களில் அவர்களின் இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்தால் இரத்த அழுத்தம் ஏறியிருப்பதை உணரலாம்.

இரத்த நாளத்தில் வரும் ரணத்தால் வருகிற தலைவலியானது வயது முதிர்ந்தோர்க்கு வரும் ஒருவகை தலைவலி. இது Temporal Artery எனப்படும். இரத்தநாளம்ஒருவகைபாதிப்புக்கு உள்ளாவதால் ஏற்படுகிறது. இந்த நோயினால் பாதிக்கப்பட்ட நபருக்குக் காய்ச்சல், முகம் மற்றும் தாடையில் வலி, கழுத்து மற்றும் பிடரியில் வலி போன்றவை தோன்றும். பாதிப்புக்கு ஆளான இரத்த நாளத்தைத் தொட்டாலே வலி உண்டாகும்.

இந்த நோயால் பாதிக்கப்பட்ட பகுதியில் சிறிது சதை எடுத்துப் பரிசோதித்து (Biopsy) அதை உறுதி செய்ய வேண்டும். இதற்கு நாளமில்லா சுரப்பி நீர் அதிகரிக்கத்தக்கமருந்துகள்உடனே கொடுக்கப்பட வேண்டும். அப்படி கொடுக்காவிட்டால் கண்ணுக்குள் செல்லும் இரத்த நாளங்கள் பாதிப்பிற்கு ஆளாகும். பிறகு பார்வைக் கோளாறு ஏற்படும்.

சிலருக்கு மனத்தளர்ச்சி மற்றும் பதட்டத்தின் காரணமாகத் தலையைச் சுற்றியுள்ள தசைகள் இறுகி, தலையை ஏதோ ஒரு பட்டையைக் கொண்டு அழுத்திக்கட்டி விட்டாற்போல ஒரு இறுக்கமான வலி இருக்கும். இது ஒருவகைத்தலைவலி (Muscle Contractions).

முகக் காற்றுத் துவாரங்களினால் வரும் தலைவலி என்று சொன்னது (Sinus Headache) என்ன தெரியுமா?

நம்முடைய தலையின் எடையை நாம் உணராமல் இருப்பதற்குக் காரணம் நம்முடையதலையைச்சுற்றி, குறிப்பாக மூக்கைச் சுற்றி 'சைனஸ்' என்று ஒரு காற்றுப்பை அமைப்பு உள்ளது. அவற்றில் எப்போதும் காற்று இருக்கும்.

இது மூக்குடன் தொடர்புடையது. மூக்கில் சளி பிடிப்பதால் அல்லது மூக்கின் மத்தியில் உள்ள தண்டு வளைந்து இருந்தால் 'சைனஸ்' பாதையில் அடைப்பு ஏற்பட்டு, அதிலுள்ள காற்று உறிஞ்சப்பட்டு 'வெற்றிடத் தலைவலி' உண்டாகும். சில சமயங்களில் சைனஸ்களின் கீழ் உண்டாகும். இதனால் ஏற்படும் தலைவலி தலையின் முன்பாகத்தில் இருக்கும். இதற்குக் காது மூக்கு தொண்டை நிபுணர்தான் சரியான சிகிச்சை அளிக்க முடியும்.

கண்களில் ஏற்படும் நோய் காரணமாக வரும் தலைவலியை (Ocular headache) என்று கூறுவார்கள். அது பின்வரும் நோய்களினால் வரும்:

1. Refractive eerors எனப்படும் பார்வைக்கோளாறு
2. கண்களைச் சுற்றியுள்ள தசைகளின் சீரான சுருங்கும் தன்மை பாதிக்கப்படுவதனால் உண்டாகும்.
3. Glaucoma நோய் கண்டால் கண்களில் உண்டாகும். திரவம் வெளியேறும். வழியில் அடைப்பு ஏற்படுவதால் அழுத்தம் அதிகமாகி தலைவலி ஏற்படுகிறது.

காதுகளுக்கு அருகே செல்லும் உணர்ச்சி நரம்புகள் அடிபட்டாலோ அல்லது கட்டியினாலோ அல்லது ரணமாவதாலோ பாதிக்கப்படும்போது தலைவலி உண்டாகும்.

அதுபோலப் பற்களில் ஏற்படும் சொத்தையினால் தாடை எலும்புகளில் சீழ்பிடித்துத் வலியும் வீக்கமும் உண்டாகும்.

தலையில் இருக்கும் முக்கிய நரம்புகளை 'அக்கி' என்ற கொப்புளங்கள் பாதித்தால் ஏற்படும் நோயை Post Herpetic Neuralgia என்பார்கள். சில சமயங்களில் பொறுக்க முடியாத அளவுக்கு இருக்கும் இந்த வலி அந்த நரம்புகள் எங்கெல்லாம் பரவி இருக்கிறதோ அந்த இடங்களில் மட்டுமே இருக்கும்.

'Cronical spondylosis Headache' என்ற தலைவலி தற்போது அதிகமாகக் காணப்படுகிறது. கழுத்து, எலும்புகளில் ஏற்படும் தேய்மானத்தின் காரணமாக வருவது இது.

Degenerative Changes என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். நாம் தற்போது இரு சக்கர வாகனங்

> வல்லமை முழுவதும் உன் உள்ளத்தில் அடங்கியுள்ளது. எதையும் உன்னால் செய்ய முடியும்.
>
> – சுவாமி விவேகானந்தர்

களை அதிகம் பயன்படுத்துவத னாலும் கனமான தலையணை யில் படுப்பதாலும் இவ்வகைத் தலைவலி வருகிறது. இந்த வலி பின்னந் தலையான பிடரிக்கும் தோள்பட்டைக்கும் பரவும்.

இதுவரை நாம் தலைக்கு வெளியே உள்ள திசுக்களில் ஏற்படும் நோய்களின் காரண மாக வரும் தலைவலிகளைப் பார்த்தோம். இனி, தலைக்கு உள்ளே ஏற்படும் நோயினால் வரும்தலைவலியைப்பார்ப்போம்.

தலைக்குள்ளே ஏற்படும் நோய்கள் அரிதானாலும் அவை உயிருக்கே ஆபத்தை விளை விக்கக் கூடியவையாகும். தலைக்குள்ளே உண்டாகும் கட்டி (Brain Tumour) வளரும போது அது மண்டையோட்டுக் குள்ளே தான் வளரவேண்டும். ஏனென்றால் மண்டையோடு விரியக்கூடியது அல்ல. எனவே, தலைக்குள் அழுத்தம் கூடி, மூளையை அழுத்தி, நரம்பு மண்டலங்களைப் பாதித்து பின்னர் உயிருக்கே அது உலை வைத்துவிடும்.

இதுபோலவே, மூளையில் ஏற்படும் (Brain Abecess) மூளைக் கட்டி, மூளையில் உண்டாகும் டி.பி. கட்டி (Tuber culoma) ஆகியவற்றாலும் தலைவலி உண்டாகும். (Tape worm) என்ற ஒருவகை நாடாப்புழு மூளை யைத் தாக்குவதால்கூட கொடிய தலைவலி ஏற்படும்.

> பெருமையை மூன்று அறி குறிகள் மூலம் தெரிந்து கொள்ளலாம்; தோற்றத்தில் எளிமை; செயலில் மனிதத் தன்மை; வெற்றியில் வெறியின்மை.
>
> – பிஸ்மார்க்

## அறிவுப் புரட்சி

> பெரியார் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட அறிவுப்புரட்சி சுலபத்தில் நிற்கப் போவதில்லை. அது போக வேண்டிய தூரத்திற்குப் போய் அடைய வேண்டிய சக்தியை இலக்கைத் தொட்டுத்தான் நிற்கும். எப்படி வில்லை விட்டு கிளம்பிய கணை, பாய வேண்டிய இடத்தில் பாய்ந்தால்தான் அதன் வேகம் நிற்குமோ அதைப் போல பெரியார் இடத்திலிருந்து பிறந்த அறிவுக்கணை எந்த இலட்சியத்தை அடைய வேண்டுமோ அதை அடைந்தே தீரும்; இதில் ஐயம் யாருக்கும் இல்லை.
>
> – அறிஞர் அண்ணா

மூளையைச் சுற்றி ஜவ்வு போன்ற ஒருவகைத் திரை உள்ளது. இது டி.பி. கிருமி, சீழ்க் கிருமி போன்ற கிருமிகளினால் பாதிக்கப்பட்டால் ஏற்படும் நோயை மெனின்ஜடிஸ்' (Meningitis) என்கிறோம். இதனாலும் தலைவலி ஏற்படும். காய்ச்சல் போன்றவையும் இருக்கும்.

இரத்தக் குழாய்களில் ஏற் படும் வெடிப்பு, இரத்தக்குழாய் அடைப்பு போன்ற நோய்களும் தலைவலியை உண்டாக்கும். இதைத்தான் Stroke என்கிறோம். இது உணர் இரத்த அழுத்தம், இரத்தக் குழாய்கள் பிறவிக் கோளாறு காரணமாக வெடித்தல், மற்றும் சர்க்கரை நோய் காரண மாக ஏற்படுவது ஆகும்.

இவ்வகைத் தலைவலிகள் பெரும்பாலும் தாங்கமுடியாது இருக்கும். பாதிக்கப்பட்ட நபரால் தூங்க இயலாது. தலைக்குள் சுத்தியை வைத்து அடிப்பது போல இருக்கும்.

தலையில் எந்த இடத்திலும் வலி வரலாம். இவர்களுக்குத் தலைவலியுடன் வாந்தி முதலிய வையும் இருக்கும். மிகவும் பதட்டத்தோடும் இருப்பார்கள். நரம்பு மண்டலங்கள் பாதிக்கப் படும். ஆனால் உடம்பில் ஏதே னும் ஒரு பகுதி செயலிழந்து போகலாம்.

உதாரணத்திற்கு – கண் நரம்பு பாதிக்கப்பட்டால் கண் பார்வையே இல்லாது போய் விடும்.

இப்படிப்பட்ட நோயினால் பாதிக்கப்படுபவர்களுக்குத் தகுந்த சிகிச்சை உடனடியாக அளிக்கப்படவேண்டும். தவறி னால் இவர்களை நாம் இழக்க வும் நேரிடலாம்.

இப்பொழுது கணிப்பொறி தொகுப்பு உருவப்படம் (C.T. Scan) காந்தக் கதிர்வீச்சு நிழற்படம் (M.R.I) போன்ற நவீன பரி சோதனை முறைகள் உதவியால் இவ்வகை நோயினால் பாதிக்கப் பட்ட நபர்களின் நோயை எளிதில் கண்டுபிடித்து விட முடியும். ஆனால் இந்தச் சோதனைகளுக்கு மிகவும் பணச்செலவு ஆகும் தான்; செலவைப் பார்த்தால் நலத்தைக் காக்க முடியுமா!

நரம்பியல் அறுவை சிகிச்சை (Neuro surgery) முறை இப்போதெல்லாம் மிகவும் வளர்ந்துள்ளது.

'தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தானே தெரியும்' என்பார்கள். அப்படி வருகிற எம்மாதிரியான உடல் பாதிப்பா னாலும் சரி; ஆரம்பத்திலேயே கண் மருத்துவம் செய்து கொண் டால் நலம் பெற்றுவிட முடியும்.





சுற்றுச்சூழல் மேம்பாடு:



விதவிதமான வண்ணங்களில் வெவ்வேறு வடிவங்களில் கடல் மட்டத்திற்குச் சற்றுக்கீழே இருக்கும் பவளப்பாறை கள் இயற்கையான பொக்கிஷம்.

இந்தியாவில் மன்னார் வளைகுடா, அந்தமான் - நிகோபார் தீவுகள், லட்சத்தீவுகள் என்று பல இடங்களில் பவளப்பாறைகள் இருக்கின்றன. தென்னிந்தியாவில் ராமேஸ்வரத்தி லிருந்து தூத்துக்குடி வரையிலான 140 கி.மீ தூரக் கடற்பரப்பில் இருக்கிற தீவையொட்டி பவளப் பாறைகள் அதிகம்.

தூத்துக்குடி அருகே பவளப்பாறைகள் அடர்ந்திருந்தாலும் இவை கவனத்துக்கு வந்தது 1916க்குப் பிறகுதான்! இருந்தாலும் இவை குறித்து 79 ஏப்ரலிலிருந்து 80 மார்ச் மாதம் வரை ஆய்வு நடத்தியிருக்கிறது தூத்துக்குடியிலுள்ள மீன்வளக் கல்லூரி. இதன் பிறகே இதனுடைய முக்கியத்துவம் தெரிய வந்திருக்கிறது.

ஆனால் அதற்கு முன்பே தூத்துக்குடி கடற்கரையிலிருந்து ஆறிலிருந்து 150 கி.மீ வரை தூரமுள்ள வான் தீவு, கார்வார் தீவு, விலங்கு சல்லித் தீவு, கரை சல்லித் தீவு பகுதி யிலுள்ளவர்கள் அதை வியாபார மார்க்கமிருக் கிறார்கள். இதை வைத்தே 400 பேருக்கும் மேல் தினசரி வாழ்க்கை நடத்துமளவுக்குப் பாறை களை வெட்டியெடுப்பது நடந்திருக்கிறது. வெட்டியெடுக்கப்பட்ட சல்லிகள் படகுகள் மூலம் கரைக்குக் கொண்டுவரப்பட்டு, நேரே காளவாசலுக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு கரியுடன் சேர்த்து இதை எரித்தால் சல்லிகள் பவுடராகிவிடும். சிமிண்ட் காகிதம் மற்றும் சர்க்கரை ஆலைகளின் உபயோகத்திற்கு அனுப்பப் பட்டுக் கொண்டிருந்தது இந்தப் பவுடர். இப்படி ஒரு வருஷத்தில் பவளப்பாறையிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட சல்லிகள் மட்டுமே 15 ஆயிரம்டன். அதாவது ஒருபுறம் பவளப் பாறைகளின் அருமை உணரப்பட்டுக் கொண்டிருந்த நிலையில், மற்றொரு புறம் அதைத் தொழில் ரீதியாக அழிப்பதும் நடந்து கொண்டிருந்தது.

80க்குப் பிறகு அரசே இதைக் கவனத்தில் கொண்டு 81ல் மீன்வளத்துறையில் பவளப் பாறை பாதுகாப்புக்காகவே ராமேஸ்வரத்தி லிருந்து தூத்துக்குடி வரை பதினெட்டுப் பேர் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டது. இவர் களுக்குப் படகு வசதி செய்து தரப்பட்டது. அதற்குப்பிறகு பவளப்பாறைகளை வெட்டிக் கொண்டுவருகிறவர்கள் மீது வழக்குத் தொடரப் பட்டது. தூத்துக்குடிக் கடலோரத்திலுள்ள கிராமமான வெள்ளப்பட்டியின் முக்கியத் தொழிலே பவளப்பாறைகளை உடைப்பதாக இருந்த நிலை இப்போதுமாறியிருக்கிறது. இருந்தும் சிலாவத்துறை, தருவைக்குளம் பகுதிகளில் இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது பவளப்பாறை உடைப்பு.

**இதற்கிடையில் பவளப்பாறைகளைப் பற்றி கொஞ்சம் விஷயங்கள்:** திட்டுத்திட்டாகக் கடல் மட்டத்திற்கு ஏறத்தாழ பத்தடிக்குக் கீழிருந்து பவளப்பாறைகள் தென்பட ஆரம்பிக்கின்றன. பவளப்பாறைகளில் மேற்புறம் விரல்கள் மாதிரி யான அமைப்புடன் பல வண்ணங்களில் இருக்கும் விரல் செல்கள் கால்சியத்தை உள்ளடக்கியவை. விரல் செல்களிலேயே பல வகைகள் இருக் கின்றன. சில மூளை மாதிரியான அமைப் புடனிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்த வரை நீலம், கிரே, வெள்ளை, பிங்க் நிறங்களில்

பாறைகளிருக்கின்றன. இது ஒருவகையான உயிரினம் என்று சொல்லப்படுகிறது. என்றாலும் இதை வைத்துப் பல கடல்வாழ் உயிரினங்கள் வாழ்கின்றன.

பவளப்பாறைகள் உருவாகவே தனியான, இளஞ்சூடு கலந்த தட்பவெப்ப நிலை ஏறத்தாழ 20 டிகிரி சென்டிகிரேடு வெப்பம் தேவைப் படுகிறது. இதனாலேயே சில அபூர்வக்கடல் வாழ் உயிரினங்கள் பவளப்பாறை இருக்கும் பகுதியில்வந்து முட்டையிடுகின்றன. பாறைகள் மீது படர்ந்திருக்கும் பாசி, விரல் சல்லிகளை உணவாகக் கொண்டு சில குறிப்பிட்ட மீன்கள், நண்டுகள், புழுக்கள் வாழ்கின்றன. பவளப் பாறைகளின் வளர்ச்சி வருடத்திற்கு இரண்டி லிருந்து ஐந்து செ.மீ. வரை. 20க்கும் அதிகமாக இருக்கிற பவளப்பாறைகளின் வகைகளில் சிலவற்றில் இன்னும் மிதமான வளர்ச்சி.

இயற்கையான சுற்றுச்சூழலுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கிற பவளப்பாறைகளின் முக்கியத்துவம் எண்பதுகளுக்குப் பிறகு பல உலக நாடுகளில் தெரிய வந்திருக்கிறது. 80ல் சர்வதேச இயற்கை வளப்பாதுகாப்புச் சங்கம் பவளப்பாறைகளை இயற்கை வளத்திற்கும் உயிர் வாழ்வதற்கும் ஆதாரமான ஒன்றாகக் கூறியிருக்கிறது. இதற்காக சர்வதேச அளவில் மாநாடுகள் நடத்தப்பட்டிருக்கின்றன.



பவளப்பாறைகளை வணிக ரீதியாகப் பயன் படுத்திக் கொண்டிருந்த இலங்கை, மாலத்தீவு, இந்தோனேசியா, இந்தியா, பிலிப்பைன்ஸ் உட்பட பல நாடுகளுக்கு அதன் அபூர்வத்தன்மை உணர்த்தப்பட்டிருக்கிறது. அதன் பிறகு பிலிப் பைன்ஸ் நாட்டில் பவளப்பாறைகளைச் சேகரிப்பதும், அதை ஏற்றுமதி செய்வதும் தடை செய்யப்பட்டிருக்கிறது. அமெரிக்காவும் பவளப்பாறைகளுக்கெனச் சில கட்டுப்பாடு களை விதித்திருக்கிறது.

தமிழ்நாட்டில் தூத்துக்குடி பகுதியில் தான் பவளப்பாறைகளை வணிகத் தேவைகளுக்காகப் பயன்படுத்துவது இன்னும் நடக்கிறது. 80க்குப் பிறகு பவளப்பாறைகளை உடைப்பது தடைசெய்யப்பட்டாலும் நிலைமை தொடர்கிறது. இதனால் பவளப்பாறைகள் நிரம்பிய தூத்துக்குடியிலிருந்து 15 கி.மீ தூரத்திலுள்ள 16 ஹெக்டேர் பரப்பளவிலான சரைசல்லித் தீவில் ஒரு பகுதியே அழிக்கப்பட்டுவிட்டது. 91க்குப் பிறகு பவளப்பாறைகள் வன இலாகா கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டு, பவளப்பாறைகள் அதிகமுள்ள தீவுகளில் வேம்பு, பூவரசு போன்ற மரங்கள் நடப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் தூத்துக்குடி கலெக்டராக சாயிக்குமார் இருந்த போது பவளப்பாறை சல்லிகளை எரிக்க உதவிக் கொண்டிருந்த 28 காளவாசல்கள் ஒரே நாளில் தகர்க்கப்பட்டன. முன்பு வெடி மருந்துகள் உபயோகப்படுத்தப்பட்டு அதை வைத்து பவளப்பாறைகள் தகர்க்கப்பட்டதெல்லாம் இப்போது நிறுத்தப்பட்டிருந்தாலும் முழுக்கக் குறைந்து விடவில்லை.

தூத்துக்குடி கிரேஸபுரத்தையடுத்துள்ள கடற்கரையில் நாம் போனபோது பவளப் பாறைச் சல்லிகள் குவிக்கப்பட்டிருந்ததைப் பார்க்க முடிந்தது. கடல் மட்டத்திற்குக் கீழே கடப்பாரையுடன் போய் பாறைகளை உடைத்து வள்ளத்தின் மூலமாக கரைசேர்க்கப்பட்டிருக்கிற சல்லிகள் இவை. கஷ்டப்பட்டு இவற்றைக் கரை சேர்க்கிற தொழிலாளர்கள் சம்பாதிப்பதைவிட இத்தொழிலில் இருக்கும் ஏஜெண்டுகள் சம்பாதிப்பதே அதிகம்.







தூத்துக்குடியிலுள்ள வ.உ.சி. கல்லூரியில் நிலத்தியல் துறையைச் சேர்ந்த பேராசிரியரான டாக்டர் ஏ. பாலசுப்பிரமணியம் பவளப்பாறைகள் குறித்து ஆய்வு பண்ணியிருப்பவர். ஆஸ்திரேலி யாவில் பவளப்பாறைகளுக்கு எப்படிப்பட்ட முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது என்பதை நேரடியாக உணர்ந்தவர். அவர் நம்மிடம் சொன்னார்: குறிப்பிட்ட சில நாடுகளில் கடல் பரப்பிலிருக்கின்ற அபூர்வ இனம் பவளப்பாறை கள். பல ஆயிரக்கணக்கான உறுப்புகள் இணைந்தவையே இந்தப் பவளப்பாறைகள். இந்தியாவில் அரேபிய கடற்பரப்பில் சில பவளப்பாறைகள் இருந்தாலும் கிழக்குக் கடற்கரைபரப்பில் இங்குள்ளவை மட்டுந்தான். இவை உருவாக ஆயிரக்கணக்கான வருஷங்களா கின்றன. இதைத் திரும்பவும் உருவாக்க முடியாது.

ஆஸ்திரேலியாவுக்கு நான் போயிருந்த போது அங்கு பவளப்பாறைகளுக்கு அவர்கள் கொடுக்கும் மதிப்பு தெரிந்தது. ஆஸ்திரேலி யாவில் கடற்கரைப் பகுதியிலுள்ள Townsville என்கிற இடத்தில் உள்ள பவளப்பாறைகளைச் சுற்றுலாத்தலமாக ஆக்கியிருக்கிறார்கள். கீழே பவளப்பாறைகள் மேலே கண்ணாடியிலான நீண்ட பாதை, பாறைகளின் இயற்கை அழகை வெகு அருகில் கடலுக்குள் இறங்கிப் பார்ப்பதைப் போன்ற உணர்வுடன் பார்க்கலாம். சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவர்கிறது அந்த இடம். மீன் பிடிப்பது அந்தப்பகுதியில் தடை செய்யப்பட்டிருக்கிறது. இயற்கையாக உருவான பவளப்பாறைகளை இவ்வளவு அருமையாக பாதுகாக்கிறார்கள். இந்தப் பவளப்பாறைகள் வெறும் கால்சியமாக, படிகமாக, வணிகத் தேவைகளுக்கான ஒன்றாக மட்டும் பார்க்கிறோம். அதன் இயற்கை இயல்பை உணரவில்லை. இந்தப் பகுதியில் உடைக்கப்பட்டிருக்கின்ற பவளப்பாறைகள் திரும்பவும் பழைய வடிவத்திற்கு வர எத்தனை ஆண்டுகள் ஆகும்? பாருங்கள்...

எண்பதுக்குப் பிறகு இந்தப் பகுதியிலுள்ள பவளப்பாறைகளை வைத்து தேசிய கடற் பூங்காவை அமைக்கும் திட்டமிருந்தது. பிறகு ஏனோ இந்தத் திட்டம் தள்ளிப் போடப் பட்டிருக்கிறது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து பாறைகள் தகர்க்கப்படுவது முழுக்க நிறுத்தப்பட்டு இப்பகுதியில் தேசியக் கடற் பூங்காவை அமைக்க வேண்டும். இதன் மூலம் இயற்கையான சுற்றுலாத்தலமும் உருவாகும். அபூர்வ பவளப்பாறைகளும் பாதுகாக்கப்படும் என்று சட்ட ரீதியில் இப்பிரச்சினையை அணுகியிருக்கிறது பகவதி சுற்றுச்சூழல் வளர்ச்சி நிறுவனம்.

பவளப்பாறைகள் ஒரு அபூர்வ இனம்தான். ஆனால் இதை மதித்துக் காப்பாற்றுவது, இயற்கை வளத்தைக் காக்க சில நடவடிக்கை களை எடுப்பது இதெல்லாம் கூட இங்கு இயல் பாக நடக்குமா? இல்லை அதுவும் அபூர்வந்தானா?

திரு.எஸ்.டி. மணா (லட்சுமணன்) அவர்களின்
"தமிழக சுற்றுச்சூழல் பிரச்சனைகள்" என்ற நூலிலிருந்து.
நன்றி : பகவதி சுற்றுச் சூழல் வளர்ச்சி நிறுவனம்,
அமைதி அறக்கட்டளை, திருச்சி சாலை,
திண்டுக்கல் - 624 009.

**அண்ணாவின் நகைச்சுவை**

திருத்தணி சுப்பிரமணியர் கோயிலில் ஆடிக் கிருத்திகை சமயத்தில் பெரிய திருவிழா நடைபெறும். மக்கள் ஏராளமாக வருவார்கள். அதற்கு முன்னதாக அங்கு அமைந்து வரும் குடிநீர்த் திட்டத்தை முதலமைச்சர் வந்து துவக்கி வைப்பாரா? தேதி கொடுப்பாரா? என்று திருத்தணித் தொகுதி காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் விநாயகம் கேட்டார்.

"தம்பியின் (முருகன்) கோயிலுக்கு அண்ணன் (விநாயகம்) இவ்வளவு அக்கறை காட்டுவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்" என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கூறியதும் சட்டமன்றம் பெருஞ் சிரிப்பில் ஆழ்ந்தது.



# புயல்

~ அகிலன் ~

இளமைத் திமிரும் வயதில் முறுக்கும் கொண்ட ஆயிரம் ஆயிரம் பெண்களுக்குத் திடீரென்று ஒரே சமயத்தில் பேய் பிடித்துக் கொண்டு தலைசுற்றி ஆடத்தொடங்கினால் எப்படி இருக்கும்? பயங்கரமான ஒரு மந்திரவாதியின் இரக்க மற்ற சவுக்கடி தாங்காது அவர்கள் ரத்தம் கக்கி அலறினால் எப்படி இருக்கும் - உண்மையிலேயே இயற்கைப் பெண்ணுக்குப் பேய்விடித்துவிட்டதா? கடவுள் என்னும் மந்திரவாதி அவளுடைய வெறி கண்டு சீற்றம்கொண்டு அவளைஇப்படி அலறித்துடிக்க வைக்கிறானோ?

கடலோரமாக இருந்த அந்தக் கிராமம் புயலால் மதயானையின் கையிலகப்பட்ட மலர் மாலையாகிக் கொண்டிருந்தது. பெரிய பெரிய மரங்களெல்லாம் பம்பரம் போல் சுழன்று பூமியின் நெஞ்சுக்குள் ஓடியிருந்த ஆணிவேர் களைப் பிய்த்துக்கொண்டு விழுந்தன. கடல் அலைகள் திமிங்கிலங்களாக வாயைப் பிளந்து கரையோரத்தில் நின்ற குடிசைகளை விழுங்கின. பேய்க்காற்றில் அகப்பட்டு வீட்டுக்கூரைகளான தென்னங்கீற்றுகளும், தகரத் தகடுகளும், சீமை ஓடுகளும், பட்டபாடு....

ஊருக்கு மத்தியில் ஒய்யாரமாக நின்ற ஒரு மாடி வீட்டுக்குள்ளிருந்து சன்னல் வழியாக மூன்றுபேர் இந்தக் காட்சியை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பெரிய மனிதர் ஒருவர், அவர் மனைவி, பையன். அந்தப் பெரிய மனிதர் சென்னையில் குதிரைப் பந்தயம் பார்ப் பதற்காக வாங்கிய தூரதிருஷ்டிக் கண்ணாடியால் கடலின் கொந்தளிப்பைக் கவனித்துக் கொண்டி ருந்தார். அவர் மனைவி தான் உடுத்தியிருந்த கொள்ளேகாலும் பட்டுப் புடவையால் உடம்பை இழுத்துப் போர்த்திக்கொண்டு பயத்தால் சுருண்டுகொள்ளும் முள்ளம்பன்றி போல நாற்காலியில் முடங்கிக் கிடந்தாள். பையன் திறந்த கண்ணை இமைக்காமல் சன்னலுக்கு வெளியே நிலைகுத்திய பார்வையில் இருந்தான்.

பையனின் மனம் அவனிடம் இல்லை. எதிரே குமுறிக்கொண்டிருந்த கிராமப் பகுதியை யும், கடலையும் கார்மேகத்தையும், அடிவானத் தையும் அளந்துவிட்டு அதற்கப் பாலும் தாண்டிச் சென்றது. அடிக்கடி தன் கண்களில் தேங்கும் கண்ணீரை யாரும் அறியாதபடி துடைத்துக் கொண்டான். அவனுக்கு எதிரிலேயே நூற்றுக் கணக்கான குடிசைகள் இருந்த இடம் தெரியாமல் கடல் அலைகளால் பிய்த்துப் பிய்த்துச் சின்னா பின்னப் படுத்தப்பட்டன.

'பெரிய பட்டாளமே திரண்டு வர்ராபோலத் தெரியுது. எல்லாக்கூட்டமும் ஊருக்குள்ளேதான் ஓடிவருது' - என்றார் பெரியவர்.





கண்ணாடி வழியே கவனித்துக் கொண் டிருந்த அவரைத் திரும்பிப் பார்த்தாள் மனைவி. அவள் ஒன்றும் பேசவில்லை.

''ஊருக்குள்ளே ஓடி வர்ராமல் கடலுக் குள்ளேயா போய் விழு வாங்க?'' என்றான் பையன்.

''ஒண்ணா ரெண்டா, ஆயிரம்பேர் வந்தா அத்தனைப் பேருக்கும் இடத்துக்கு எங்கே போறது?''

''மனமிருந்தால் இடமிருக்கும்''

தகப்பனுக்கும் பிள்ளைக் கும் இந்த மாதிரிப் பேச்சு ஆரம்பமாவதைப் பிடிக்காதவள் போல் தாயார் குறுக்கிட்டாள். ''ஊர் வம்பு நமக் கெதுக்கு? அடுப்பிலே சூடா உருளைக் கிழங்கு வறுவல் போடச் சொல்லியிருக்கேன்; ஒரு நிமிஷத்தில் வந்திடும். பேசாமல் சாப்பிட்டுச் சும்மா இருந்தால் போதும்.''

'ஊர்வம்பு'க்கு இவர்கள் போகா விட்டாலும் ஊர்வம்பு இவர்களைத் தேடிக் கொண்டு வந்தது. கரையோரமாகக் குடியிருந்த வர்கள் அடித்துப் புடைத்துக்கொண்டு குழந்தை குட்டிகளுடன் ஊருக்குள் நுழையத் தலைப் பட்டார்கள். மாடி வீடுகள் அதிகமாயிருந்த இவர்களுடைய தெருவில் அந்தக் கூட்டம்புகுந்து நாலுபுறமும் சிதறிப் போய் ஒண்டிக் கொண்டது. இவர் களுடைய வீட்டு முகப்பிலும் சிலர் கூடினார்கள்.



...பையன் அவசர அவசர மாகக் கீழே இறங்கிப் போனான். ''எங்கேடா போகிறாய்?'' என்ற அவன் தாயாரின் கேள்வியை அவன் காதில் போட்டுக்கொள்ள வில்லை...

பையன் அவசர அவசரமாகக் கீழே இறங்கிப் போனான். ''எங்கேடா போகிறாய்?'' என்ற அவன் தாயாரின் கேள்வியை அவன் காதில் போட்டுக்கொள்ள வில்லை. கீழே இறங்கிச் சென்று வெளிவராந்தாவில் கூடியிருந் தவர்களை ஹாலுக்குள் நின்ற படியே சன்னல் வழியாகப் பார்த் தான். நேற்றுப் பிறந்த பச்சைக் குழந்தைகள் முதல், நாளைக்குச் சாகப் போகிற தொண்டுக்கிழங்கள் வரை அங்கே வந்திருந்தன. ஒரு உடம்பாவது நனையாமல் இல்லை; ஒரு உடம்பாவது நடுங்காமல் இல்லை; குளிர் தாங்க முடியாமல் வெறும் கைகளை மடக்கித் தங்கள் நெஞ்சுகளை



மறைத்துக் கொண்டிருந்தார்கள் ஆண்கள். பெண்களின் தேகத்தைத் துணி என்ற பெயருள்ள கந்தல்கள் மூடி மறைப்பதற்கு முயன்று கொண்டிருந்தன. வெளிவராந்தாவில் இடம் நிறைந்ததால் வெளியே தரையில் பலர் தூண்களைப் பற்றிக் கொண்டு நின்றனர்.

பையன் கீழே இறங்கிய அதே வேகத்தில் திரும்பவும் மேலே வந்தான்.

"அப்பா!"

அப்பா அப்போதுதான் வெளியே அதிக அக்கறையுடன் பார்க்கலானார். பையன் அழைப்பதன் காரணத்தை அவர் ஊகித்துக் கொண்டதால் அவருக்கு அவன் பேச்சைக் கேட்பதில் இஷ்டம் இல்லை.

"அப்பா"

அப்பா திரும்பி மூக்குக் கண்ணாடி வழியே நெற்றியைச் சுருக்கிக் கொண்டு பிள்ளையைப் பார்த்தார்.

"வராந்தாவில் நிற்க இடமில்லை. பாதிப் பேர் நடுத்தெருவில் மழையில் நனைகிறார் களப்பா! காற்று அவர்களை அடித்துக்கொண்டு போய்விடும் போலிருக்கிறது!"



..."வராந்தாவில் நிற்க இடமில்லை. பாதிப் பேர் நடுத் தெருவில் மழையில் நனைகிறார் களப்பா! காற்று அவர்களை அடித்துக்கொண்டு போய்விடும் போலிருக்கிறது!"...

"அதற்காக?"

"கொஞ்சம் நேரத்துக்கு வெளிக் கதவைத் திறந்து உள்ளேவிட்டால் அவர்களுக்குச் சௌகரியமாக இருக்கும். ஹாலில்தான் நிறைய இடம் இருக்கிறதே!"

தகப்பனார் கேலியாகச் சிரித்தார். தம்முடைய மனைவியைப் பார்த்து, "பிள்ளை யாண்டானுடைய யோசனையைக் கேட்டியா? ஹால் மாத்திரம் வேண்டாம்; வீட்டையே அவுங்களுக்கு ஒழிச்சுக் கொடுத்திட்டு நம்ம நடுத்தெருவுக்கு போகலாமே?"

"ஹால் சும்மா தானே அப்பா இருக்கிறது? நமக்கு இப்போது உபயோகமில்லாத இடத்தை நாலு நாழி அவர்களிடம் விட்டால் என்ன?"

"நீ சும்மா இருடா குழந்தை! உனக்கு ஒன்னுந் தெரியாது; நீ சிறுபிள்ளை" என்று தாயார் குறுக்கிட்டாள். பின்பு பையனின் முகம் வருத்தத்தால் சுருங்குவதைக் கண்டவுடன் அவளுக்கு அவனிடம் ஏதாவது சொல்ல வேண்டும் போலிருந்தது.

"உனக்கு அவர்களோட குணந்தெரியாது. அத்தனையும் திருட்டுக் கழுதைகள்! ஹாலுக் குள்ளே அவர்களை விட்டு யாராலே காவல் காக்க முடியும்?"

பையனுக்குத் தாயாரின் சமாதானம் உண்மை என்று தோன்றவில்லை. "திருட்டுப் போறத்துக்கு அந்த இடத்தில் சாமானே கிடையாதே! நான் வேணுமானால் அங்கேயே இருந்து அவர்கள் எதையும் தொடாமல் பார்த்துக் கொள்கிறேன்."

தாயாருக் குத் தர்மசங்கடம். தகப்பனாருக்கு உள்ளுக்குள் கோபம். பையனோ விடுவதாக இல்லை.

"பள்ளுப்பறைபதினெட்டுச் சாதியும் வீட்டுக்குள்ளே விடச் சொல்றியா? இடத்தைக் கொடுத்தா மடத்தைப் பிடுங்கற பசங்க அத்தனைப்பேரும். நீ சும்மா இருக்கமாட்டே?" என்று தம் கோபத்தை வெளியிட்டார் அவர்.

"கோயிலுக்குள்ளே எல்லோரையும் விடுகிறபோது..." என இழுத்தான் பையன். கடவுளின் வீடான கோயிலைவிட மனிதனின் வீடான இந்த மாளிகை உயர்ந்ததா என்பது அவனுடைய எண்ணம்.

"கோயில் சர்க்கார் சொத்து; இது என்னோட பாட்டன் சம்பாதித்த சொத்து!"

பையன் கொஞ்ச நேரத்துக்கு வாயை மூடிக்கொண்டிருந்தான். தகப்பனார் வாயில் வந்தபடி சர்க்காரையும் சட்டத்தையும் திட்டத் தொடங்கினார். கோயிலுக்குள்ளே எல்லோரையும் விட்டதிலிருந்து கடவுள்களெல்லாம் புறப்பட்டுப்போய்க் கங்கையில் விழுந்து விட்டார்களாம். உழைப்பவர்களுக்குச் சாதகமாகச் சட்டம் வந்ததிலிருந்து ஏழை எளியோர்களுக்கெல்லாம் திமிர் பிடித்துவிட்டதாம்.







உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று இல்லாமல் ஊர் முழுவதும் கெட்டுப்போய்விட்டதாம். "சர்க்கார் வந்து இப்போது இவர்களுக்கு இடம் கொடுக்கட்டுமே" என்று சவால் விட்டார், பெரியவர்.

முகத்தைத் தொங்கவிட்டுக்கொண்டு சும்மா இருப்பதைத் தவிர பையனுக்கு வேறு வழியில்லை. தகப்பனாரிடம் அகப்பட்டுக்கொண்டு அரசாங்கமே அந்தப் பாடுபடும் போது அவன் எம்மாத்திரம்? உலகத்து அரசியலைக்கரைத்துக் குடித்தவர் போலவும், பொருளாதாரத்தைப் பத்து வருஷம் ஊன்றிப் பயின்றவர் போலவும் சமூகப் பிரச்சனைகளையெல்லாம், சக்கைபோடு போட்டுக் கொண்டிருந்தார்.



...புயலின் வேகம் வரவர அதிகமாயிற்று. பெரியவர் தம்முடைய சொத்து சுதந்திரங்களைப்பற்றி நினைத்தார்...

உருளைக்கிழங்கு வறுவல் வந்தது. பையன் முதலில் அதைத் தொடவில்லை. மற்ற இருவரும் சாப்பிட்டார்கள். கடைசியில் தாயாரின் தொந்தரவுக்காகப் பையன் கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக்கொண்டான்.

புயலின் வேகம் வரவர அதிகமாயிற்று. பெரியவர் தம்முடைய சொத்து சுதந்திரங்களைப்பற்றி நினைத்தார். நெல் வயல்கள் அவருக்கு நிறைய இருந்தன. அவைகளுக்கு அதிக மான நஷ்டம் இருக்காது. அடுத்தாற்போல் அவருடைய வாழைத்தோட்டம் ஞாபகத்திற்கு வந்தது.

"ஒரு வாழைகூட நிலைச்சு நிற்காது; ஆறு ஏக்கர் தோட்டமும் அப்படியே பாழாய்ப் போகும்!"

"நல்ல வேளை!"

தாயாரின் பேச்சு அந்த இடத்தில் அசம்பாவிதமாக இருந்ததால் பையன் தகப்பனாரைக் கவனித்தான்.

"காலணாக்காசு பாக்கி இல்லாமல் குத்தகையை முன்பணமா வாங்கியாச்சு, கொஞ்சமும்

கல்லாலடித்த சிலைபோல் மனம் இரங்காமல் இருப்பாரா?' என்று எண்ணினான். நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்ததாக அவர்சொன்ன உபமானத்தையும் அவன் மறக்கவில்லை. எங்கேயாவது ஆயிரத்தில் ஒரு நாய்க்குட்டிக்கு அதிர்ஷ்டம் கிடைக்கிறது. பாலும், பழமும், பட்டுமெத்தையும், கார் சவாரியும் அதற்கு அளித்துப் பணமுள்ளவர்கள் மகிழ்கிறார்கள். அதனால் எல்லா நாய்களிடமும் அவர்களுக்குப் பிரியம் என்று அர்த்தமா? தினந்தோறும் தோட்டிகளால் அடித்துக் கொல்லப்படும் குப்பைமேட்டு நாய்களின் கூட்டத்தை அவர்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

பாதிராத்திரிக்கு மேல் புயல் நன்றாக ஓய்ந்துவிட்டது. வானத்தில் மேகங்களைக் காணோம். ராஜு தான் திருச்சியிலிருந்து லீவில் திரும்பும்போது கொண்டு வந்த பதினைந்து ரூபாயை நினைத்துக் கொண்டான். அவனுக்கு எதிர்பாராமல் கிடைத்த பணம் அது. பத்திரிகைக்குப் பல கதைகள் எழுதி அனுப்பிக்கொண்டிருந்தான். பெரும்பாலும் எல்லாக் கதைகளும் திரும்பி விட்டன. சமீபத்தில் தான் ஒரு கதையைமட்டும் பிரசுரித்து அதற்காக இந்தப் பணத்தை அன்பளிப்பாக அனுப்பியிருந்தார் ஆசிரியர். இந்தச் சமயத்தில் கிடைத்த பதினைந்து ரூபாய் அவனுக்குப் பதினைந்தாயிரம் போல்தோன்றியது.



**...அநேகம் பேர் தங்களுடைய எல்லாவற்றையும் இழந்து விட்டு நிர்க்கதியாய் நிற்கும் போது தான் மட்டிலும் இந்தப் பதினைந்து ரூபாய்க்குச் சொந்தக்காரனாக இருக்க விரும்பவில்லை...**

பொழுது விடிந்தவுடன் ராஜு ஊருக்குள்ளே கிளம்பினான். நல்ல மனிதர்கள் நாலு பேராவது இன்னும் ஒவ்வொரு ஊரிலும் இருக்கிறார்கள் என்ற உண்மை அவனுக்கு அப்போது தான் தெரிந்தது. ஈவு இரக்கம் உள்ளவர்கள் ஒன்றாய்க்கூடிக் கஞ்சி காய்ச்சி ஏழை எளியவர்களுக்கு ஊற்றிக் கொண்டிருந்தார்கள். உடலில் வலுவிருந்தவர்கள் மரப்பட்டைகளை வீடுகளின் முன்பிருந்து அகற்றிக் கொண்டிருந்தனர். அங்கே இருந்த அரசாங்க அதிகாரியும் மற்றவர்கள் துணைகொண்டு தம்மாலான உதவிகளைச் செய்தார்.

கரையோரமாக ஒதுங்கியிருந்த ஒரு கட்டை மரத்தைச் சுற்றிலும் சிறிய கூட்டம் இருந்தது. ராஜு கூட்டத்தோடு கூட்டமாய்ப் போய் நின்றான். அங்கே கண்ட காட்சி இருதயத்தைக் கசக்கிப் பிழிந்தது. மூன்று பெண்பிள்ளைகள் கட்டை மரத்தின் ஒரு மூலையைக் கட்டிக்கொண்டு ஓவென்று கதறி அழுதார்கள். வாயிலும், வயிற்றிலும் மாறி மாறி அடித்துக் கொண்டு புலம்பினார்கள். ராஜு நடந்ததைப் புரிந்து கொண்டான். நேற்றுக்காலையில் கட்டை மரத்திலேறிக் கடலுக்குள் போனவர்கள் திரும்பவில்லை. ஆனால், கட்டை மரம் மாத்திரம் திரும்பிவிட்டது. மூன்று பேர் போனார்களாம். அந்த மூன்று பேர்களுடைய உடல்களும் இப்போது எங்கே ஒதுக்கப்பட்டுக்கிடக்கின்றனவோ? எந்த நிலையில் கிடக்கின்றனவோ?

ஊர்ப்புறத்தில் புயல் விளைவித்திருந்த நாசத்தைப் பார்க்கப் பார்க்க ராஜுவுக்குத் தன் பையிலிருந்த பணம் பெரும் சுமையாகத் தெரிந்தது. அதைக் கொண்டு எப்படி உதவலாம் என்று எண்ணற்ற யோசனைகள் செய்தான். இந்தப் பணத்தால் எள்ளத்தனை உபகாரம்கூடச் செய்ய முடியாதே என்பதும் அவனுக்குத் தெரியாமல் இல்லை. ஆனாலும் அநேகம் பேர் தங்களுடைய எல்லாவற்றையும் இழந்துவிட்டு நிர்க்கதியாய் நிற்கும்போது தான் மட்டிலும் இந்தப் பதினைந்து ரூபாய்க்குச் சொந்தக்காரனாக இருக்க விரும்பவில்லை.

ஊரை நன்றாகச் சுற்றிப் பார்ப்பதற்குள் மத்தியமானமாகிவிட்டது. கடைத்தெருப்பக்கம் வந்தான்; ஒரு துணிக்கடையில் நுழைந்து மூன்று கெட்டியான போர்வைகளைப் பதினைந்து ரூபாய்க்கு வாங்கிக் கொண்டான். வானத்துக்குக் கீழே கூரையில்லாமல் உறங்குபவர்களுக்குப் போர்வைதான் சரியான கூரை; இடுப்பில்





துணியில்லாதவர்களுக்குச் சுலபமாய்க் கிழியாத துணி; படுக்கப் பாயற்றவர்களுக்குச் சுருட்டி மடக்கக்கூடிய பாய்...

திரும்பவும், கட்டை மரத்துப்பக்கம் ராஜு வரும்போது அங்கே கூட்டம் எதுவும் இல்லை. கந்தல் கட்டிய குழந்தைகள் இரண்டு பரட்டைத் தலையோடு மணலில் சோர்ந்து படுத்திருந்தன. மூன்று பெண்களும் அப்படியே அந்தக் கட்டை மரத்தைத் தழுவிக்கொண்டு கட்டையைப் போல் நினைவிழந்து கிடந்தார்கள். கண்ணீர் மாத்திரம் பெருகிக் கொண்டே இருந்தது.

ராஜு அவர்களுக்கு அருகில் போனவுடன் அவர்கள் புரியாமல் விழித்தார்கள். போர்வையை ராஜு ஒவ்வொன்றாக எடுத்து ஒவ்வொருவருக்கும் கொடுத்தான். இயந்திரம் போல் அவர்களது கரங்கள் நீண்டு அவற்றைப் பெற்றுக்கொண்டன.

ஒரே ஒருத்தி துயரம் தாங்காது ராஜுவைப் பார்த்துக் கத்தினாள்; "எங்களுக்குக் கோடித்துணியா ஐயா போடுறீங்க? நாங்க என்னய்யா செய்வோம்? எங்க பிள்ளை குட்டி எப்படி ஐயா பொளைக்கும்?"



**... ஈரம் நிறைந்த இளம் நெஞ்சில் அப்போதுதான் பயங்கரமான கோரப் புயல் ஆரம்பமாகியது. அந்தப் புயலுக்கு முன்னே சில தினங்களுக்கு முன்பு வீசிய புயல் அற்பச் சூறாவளியைப் போன்றது!...**

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ராஜு அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். அவனைச் சுற்றியிருப்பவர்களின் துன்பம் அவனைத் தொடர்ந்துகொண்டே வந்து பரிகசித்தது. ஊருக்கே பொதுவாகப் புயல், சேதம் விளைவித்தது உண்மைதான்; ஆனால் அடித்துக் கொண்டு போன நூற்றுக் கணக்கான குடிசைகள் யாருடையவை? கடலுக்குள்ளேயும் சுவர்களின் அடியிலும் செத்து விழுந்த உடல்கள் யாருடையவை? இப்போது தங்களுடைய எல்லாவற்றையுமே இழந்து தவிப்பவர்கள் யார்?

மூன்று நான்கு நாட்கள் கழிந்தன. விடுமுறை தீர்ந்து விட்டதால் ராஜு திரும்பவும் திருச்சிக்குப் புறப்பட்டான். அவனுடைய சாமான்களை எடுத்துப் பெட்டிக்குள் வைப்பதில் அவனுக்கு உதவி செய்ய வந்தாள் அவன் தாயார். உடைகள், புத்தகங்கள் யாவும் எடுத்து அடுக்கி ஆயிற்று. படுக்கையைச் சுற்றிக் கட்டும்போது ஏதோ நினைவு வந்தவள்போல் பரக்கப் பரக்க உள்ளேபோய் ஒரு புதுப் போர்வையை எடுத்துக் கொண்டு அவனிடம் வந்தாள்.

பையன் அதை உற்றுப் பார்த்தான். நெற்றியில் கேள்விக் குறி எழுந்தது.

"எப்போ வாங்கினே போர்வை அம்மா இது?"

"முந்தாநாள் வாங்கினேன். கொள்ளை மலிவு, சொன்னால் நீ நம்ப மாட்டே; மூணு போர்வை அஞ்சு ரூபாய்!"

பையனுக்குப் பகீரென்றது.

"கடல்கரைப் பக்கம் போறப்போ மடிப்புக் கலையாமல் புத்தம் புதுசா வச்சிருந்தாளுக. 'உங்களுக்கு எதுக்கடி இதெல்லாம்? பணம் குடுக்கிறேன் தாரீங்களா?'ன்னு கேட்டேன் பத்து ரூபாய் கேட்டா. அரை மணிநேரம் பேரம் பண்ணி அஞ்சு ரூபாய்க்கு வாங்கினேன். பதினைந்து ரூபாய்க்குக்கூட இந்த மூணு போர்வையும் கடையிலே தரமாட்டான்."

ஈரம் நிறைந்த இளம் நெஞ்சில் அப்போதுதான் பயங்கரமான கோரப் புயல் ஆரம்பமாகியது. அந்தப் புயலுக்கு முன்னே சில தினங்களுக்கு முன்பு வீசிய புயல் அற்பச் சூறாவளியைப் போன்றது!

***(அகிலனின் 'வழி பிறந்தது' சிறுகதைகள் தொகுப்பிலிருந்து. நன்றி: தாகம், 58, துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, விவேகானந்தர் இல்லம், சென்னை - 5)***

**செல்வந்தர்களின் நோய்கூட எல்லார்க்கும் தெரிந்திருக்கிறது, ஆனால் ஏழையின் மரணம் யாருக்கும் தெரிவதில்லை.**

**— ஃபின்னிஷ் பழமொழி**

அசந்து போயிருந்தால் இத்தனை நஷ்டத்தையும் நம் தலையிலே போட்டிருப்பான்.''

பையன் வெறுப்படைந்தான். மற்றவர்களுடைய துன்பத்தை மனிதர்கள் பகிர்ந்து கொள்ளும் விதமா இது?

அன்றைக்கு இரவு பத்து மணிக்குத்தான் புயல் ஓய்ந்தது. சாப்பிட்டுவிட்டு எல்லோரும் படுக்கை அறைக்கு வந்தார்கள். மின்சார விளக்குகள் எரியாததால் மண்ணெய் விளக்குகளைக் கொண்டு காரியங்கள் நடந்தேறின. படுக்கையில் படுத்த பையனுக்குத் தூக்கம் வரவே இல்லை. கண்களை மூடிக் கொண்டு மண்டையைக் குழப்பிக் கொண்டிருந்தான்.

''ராஜா'' என்று அவன் தாயார் செல்லமாய்க் கூப்பிட்டாள்.

பையன் பதில் பேசவில்லை.

''தூங்கிவிட்டான்போல இருக்கு. அவனைப்போய்த் தொந்தரவு பண்ணாதே. இப்படி வா'' என்றார் பெரியவர்.



...''பையன் போற போக்கைப் பார்த்தியா? எல்லாம் உன்னாலே வந்தது. நாயைக் குளிப்பாட்டி நடுவிலே வைத்தாலும் வாலைக் குழைத்துக் கொண்டு குப்பை மேட்டுக் குத்தான் ஓடும்.''...

பிறகு இருவரும் இருளில் தங்கள் பையனைப்பற்றி பேசத் தொடங்கினார்கள். பையன் விழித்திருப்பது தெரியாததால், தாரளமாக அவர்களுடைய எண்ணங்கள் வெளிப்பட்டன.

''பையன் போற போக்கைப் பார்த்தியா? எல்லாம் உன்னாலே வந்தது. நாயைக் குளிப்பாட்டி நடுவிலே வைத்தாலும் வாலைக் குழைத்துக் கொண்டு குப்பை மேட்டுக்குத்தான் ஓடும்.''

சுரீர் என்று ஒரு கத்தி மார்புக்குள் நுழைந்து முதுகுப்புறமாய் வெளிவந்த மாதிரி இருந்தது பையனுக்கு.

''இந்த வயசில் இப்படித்தான் கிறுக்குத்தனமாய்ப் பேசுவான். நாலு வருஷம் போனா உங்களைவிடச் சமர்த்தா இருக்கப் போறான் பாருங்க! காலுக்கு ஒரு கட்டுப்போட்டு அவனுக்கின்னு ஒரு குழந்தை பிறந்தா எல்லாம் சரியாப் போகும்.''

''நமக்குன்னு ஒரு குழந்தை பிறந்தா இப்படியெல்லாம் பேசுமா?''

''நடக்காததை ஏன் இப்போ பேசுறீங்க? நம்ம ராஜா நல்ல புத்திசாலியா வருவான் பாருங்க. எல்லாம் வளர்க்கிற முறையிலே இருக்கு!''

''ராத்திரி சாப்பிடறப்போ அவன் என்ன சொன்னான் கேட்டியா? இலையிலே சாப்பாட்டை வைத்துக்கொண்டு இப்படி பேசினா எப்படி அந்தச் சோறு உடலில் ஒட்டும்?''

ராத்திரி இலைக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு அவன் செய்த குற்றத்தை ராஜு இப்போது எண்ணிப் பார்த்தான். இதே குற்றத்தை மத்தியானமே செய்யும்படி அவனுக்குத் தூண்டுதல் இருந்தது. ஆனால் தனக்குள்ளாகவே வெகுநேரம் போரிட்டுவிட்டு இரவில் சாப்பிடப்போகும் போது அதை ஆரம்பித்தான். சாப்பாட்டு விஷயத்தைச் சாப்பாட்டு வேளையில் ஆரம்பிக்காமல் வேறு எப்போது ஆரம்பிப்பது?

காலையில் பத்து மணிக்குமேல் வீட்டிற்கு முன் கூடியவர்கள் பொழுது போகும் வரையில் அங்கே நெருக்கிக்கொண்டு கிடந்தார்கள். அதற்குப் பிறகும் இரவு பத்து மணிக்குப் புயல் ஓய்ந்த பின்பும்கூட அவர்கள் எங்கும் போகவில்லை. எங்கே பேர்வார்கள்? எங்கே போய் என்ன செய்ய முடியும்?

சாயங்காலமாக வீட்டுக்கு வெளியே ஒரே அழுகை மயமாக இருந்தது. சகிக்க முடியாத அழுகை, சின்னஞ்சிறு குழந்தைகள் பாலுக்கு அழுதன, வயதுவந்த பிள்ளைகள் சோற்றுக்கு அழுதன, பெண்கள் காலையில் கடலுக்குள் போன ஆண்களை நினைத்துக்கொண்டு அழுதார்கள். எல்லோருடைய எல்லாவிதமான அழுகைகளுக்கும் அடியில், அடிவயிற்றில்,





பசிப்புயல் பதுங்கிச் சீறியதால் அவர்களுடைய அழுகையின் வேகம் ஐம்பது மடங்காகப் பெருகியது.

ராஜுவும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு ஹாலுக்குள் நின்று மௌனமாக அழுதான். தான் இப்படி அழுவது அவனுக்குக் கோழைத்தனமாகத்தெரிந்தது. 'திடீரென்று வாசற்கதவுகளைத் திறந்துவிட்டு அவர்களை உள்ளே அழைத்தால் என்ன? அரிசி மூட்டை இருக்குமிடத்தைக் காண்பித்து அதை அடுப்பில் கொதிக்க வைத்துக் குடிக்கச் சொன்னால் என்ன? ஒருநாள் - ஒருவேளைச் சோறு போட்டால், தங்க இடம் கொடுத்தால், இந்தப் பெரிய குடி முழுகியா போய்விடும்?'

ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. சாப்பாட்டிற்குத் தகப்பனாரோடு இலைக்கு முன் உட்கார்ந்தபோது இலையிலிருந்த நாலுவகைக் கறியும் குழம்பும் அவன் கண்களை உறுத்தின. ஒவ்வொரு அரிசிச் சோறும் ஒரு ஏழைக் குழந்தையாக மாறி, 'ஐயா, பசிக்குதே!' என்று அவன் முன்பு அலறியது. அவன் அதைத் தொடவில்லை.



...''அரிசிக்கு எங்கே போறது?'' அவனுக்கு இந்தக் கேள்வியின் பொருள் விளங்கவில்லை. அரிசிக்கு எங்கும் போக வேண்டாமே! அங்கே மூட்டை மூட்டையாய் அரிசி இருக்கு...

''ஐந்து படி அரிசியைக் கஞ்சியாய்க் காய்ச்சி ஊற்றினால் நூறு பேருக்குப்பசி அடங்குமே! என்று ஆரம்பித்தான்.

''என்ன சொல்றே?'' என்றார் தகப்பனார்.

சற்று முன்பு சொன்னதையே அவன் திருப்பிச் சொன்னான்; ''ஐந்துபடி அரிசிதான் செலவு; நூறு பேருடைய வயிறு குளிரும்.''

''அரிசிக்கு எங்கே போறது?''

அவனுக்கு இந்தக் கேள்வியின் பொருள் விளங்கவில்லை. அரிசிக்கு எங்கும் போக வேண்டாமே! மூட்டை மூட்டையாய் அங்கே அரிசி இருந்தது; களஞ்சியம் களஞ்சியமாய் அங்கே நெல் இருந்தது; எலியும் பெருச்சாளியுமே ஒரு நாளைக்கு ஒன்பது படி அரிசியைத் தின்பதாகச் சமையற்காரன் புகார் செய்து கொண்டிருந்தான்.

தகப்பனும் பிள்ளையும் அதற்கப்புறம் பேசிக்கொள்ளவில்லை. இலையில் போட்ட சோற்றை அப்படியே வைத்துவிட்டுக் கையலம்பிக் கொண்டான் பையன். தாயார் அவனிடம் வந்து விடாப்பிடியாய்ச் சாப்பிடச் சொல்லிக் கெஞ்சினாள். எவ்வளவோ சமாதானம் செய்தாள். ஆனால் ஐந்து படி அரிசியை அதற்காக அவள் இழப்பதற்கு மாத்திரம் தயாரில்லை.

ராஜு அவர்களுடைய சொந்தப் பிள்ளைதான். சொந்தம் என்பதற்கு என்ன அர்த்தம்? வீடு வாசல், காணி கரை, ஆடு மாடு எல்லாம் எப்படி ஒருவருக்குச் சொந்தமாகின்றன? அந்த மாதிரிச் சொந்தம் இது. பத்தாயிரம் ரூபாய்ப் பணம் கொடுத்து விலைக்கு வாங்கிய அவர்களுடைய சொந்தப் பிள்ளை அவன். ஐந்தாறு குழந்தைகளைப் பெற்றுவிட்டுப் பிறகு வளர்க்கமுடியாமல் திண்டாடிய பெற்றோரிடமிருந்து அவனை ஸ்வீகாரம் செய்து கொண்டார்கள்.

படுக்கையில் புரண்டு கொண்டிருந்த ராஜுவுக்குத் தூக்கம் வரவில்லை. பெற்ற இடத்தின் பிடுங்கல்களும் வளர்க்கும் இடத்தின் வளப்பமும் மாறி மாறி நினைவில் வந்தன. சோற்றுக்கும் துணிக்கும் அவன் அங்கே பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. அதற்கு முற்றிலும் மாறாக இங்கே எல்லாம் ராஜ போகமாக இருந்தது. திருச்சினாப்பள்ளியில் ஹாஸ்டலில் தங்கி அவன் படித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு வேண்டியதையும், வேண்டாததையும் ஸ்வீகாரப் பெற்றோர்கள் வாங்கிவாங்கிக் கொடுத்தார்கள். ஒன்றே ஒன்றைத் தவிர அவனுக்கு எல்லாம் கிடைத்தன; - உண்மையான அன்பு; ரத்தத்திலே ஊறிய அன்பு.

'நமக்குன்னு ஒரு குழந்தை பிறந்தா இப்படியெல்லாம் பேசுமா?' என்று அவன் தகப்பனார் தன் மனைவியைக் கேட்டபோது, 'நம்முடைய தகப்பனாராக இருந்தால் இப்படிக்

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-



16.7.1996 ரூ.3





## இந்த இதழில்


அரசு விழாக்களை எளிமையுடன் நடத்துக 2
மகளிர் - சிறார் மனிதாபிமானத்திட்டம் 4
காமராஜர் கருத்துக்கோவை 8
அறிவியல் துளிகள் 9
தலைமைப் பண்புபற்றி 'தாவோ' சிந்தனை 12
நாரைகள் – சிறுகதை 15
படமும் செய்தியும் 24
எயிட்ஸ் என்னும் ஆட்கொல்லி நோய் 26
சிரிக்கவும் சிந்திக்கவும் ஒரு சிறுகதை 32
வாசகர் இதயம் 34
பாரதி இல்லத்தில் நூலகம் – முதல்வர் ஆணை 35
இரக்கம் - வாலியின் கவிதை 36
செய்திச்சரம் 38
ஊட்டச்சத்து வழங்கும் பயறு வகைகள் 40
சுவைமிகு தகவல் பக்கம் 47
ஆசிரியர் மடல் 48



# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027
ஆடித் திங்கள் :1
மலர் : 27 இதழ் : 2
16.7.1996
விலை ரூ. 3

# அரசு விழாக்களை எளிமையாக நடத்த வேண்டும்!

## முதல்வர் உத்தரவு

அரசு விழாக்களை நடத்தும்போது ஆடம்பரமாக செலவழித்தல், தேவையற்ற செலவுகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை முற்றிலுமாக தவிர்க்கும்படி மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் இந்த அறிவுரைப்படி அரசு விழாக்கள் நடத்த வேண்டிய முறை பற்றியும், கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் பற்றியும் அரசுத்துறைத் தலைவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் கீழ்க்கண்டவாறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**ஒதுக்கிய தொகைக்கு மிகுதல் கூடாது**

- அரசு விழாக்கள் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட தொகைக்கு மிகாமல் நடத்தப்பட வேண்டும்.

**ஆடம்பர அழைப்பிதழ் வேண்டாம்**

- அழைப்பிதழ்களை ஆடம்பரமாக அச்சிடக்கூடாது. அவற்றில் விழா குறித்த சித்திரங்களுக்கும் புகைப்படங்களுக்கும் முதலிடம் தரப்பட வேண்டும்.

**அழைப்பிதழ் 'தமிழரசில்' அச்சிடுக**

- மாவட்டங்களில் நடைபெறும் மாநில அளவில் முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களுக்கு அழைப்பிதழ்களைச் செய்தித்துறை இயக்குநருடைய அனுமதி பெற்று 'தமிழரசு' அச்சகத்தில் அச்சிட்டுக் கொள்ள வேண்டும். மற்ற விழாக்களுக்கு அரசு கூறியுள்ள அறிவுரைகளின்படி எளிமையான முறையில் அழைப்பிதழ்களை அச்சிட்டுக் கொள்ளலாம்.

**ஆடம்பர உபகரணங்கள் அறவே வேண்டாம்**

- ஆடம்பரச் சுவரொட்டிகள், வண்ண விளக்கு அலங்காரம், கட்அவுட்கள், சுவர் விளம்பரங்கள் போன்றவற்றை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும்.

**சிக்கனமும் எளிமையுமாய் விழா மேடை**

- விழா மேடையை முடிந்த அளவுக்குச் சிக்கனமாகவும் எளிமையாகவும் அமைக்க வேண்டும். பிரம்மாண்டமான பந்தல்கள் அமைப்பது மேடையில் 'தர்பார்' நாற்காலிகள் போடுவது ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். தேவைப்படும்போது, நிழல் தருவதற்கு 'ஷாமியானா' போன்ற ஏற்பாடுகளை எளிமையான முறையில் செய்து கொள்ளலாம்.





**மலர்தூவி வரவேற்பு கூடவே கூடாது**

- மலர் அலங்காரம் செய்வது, முக்கியபிரமுகர்கள் விருந்தினர்கள் வரும்போது மலர்தூவி வரவேற்பது போன்றவற்றை எக்காரணம் கொண்டும் செய்யக் கூடாது.

**விழாவின் தன்மையைக் காத்திடுக**

- அரசு விழாக்களில் நிறையப்பேர் மேடையில் ஏறி மாலை அணிவிப்பது, சால்வை போர்த்துவதுபோன்றவற்றைச் செய்து அந்த விழாவின் தன்மையைப் போக்குவதைத் தவிர்க்க வேண்டும்.

**அரசு விழா - நிகழ்ச்சி வேறுபாடு தேவை**

- விழாவிற்கும் நிகழ்ச்சிக்குமான வேறுபாடுகளைமுழுவதுமாகக் கடைபிடிக்க வேண்டும். அரசு நிகழ்ச்சிகளை விழாக்களைப் போல நடத்தக் கூடாது. மனு நீதித் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (ஐ.ஆர்.டி.பி) விழிப்புணர்வு முகாம் போன்றவற்றை விழாக்களைப் போல நடத்துவது நிறுத்தப்பட வேண்டும்.

**வளைவுக்காக சாலை சேதப்படுத்தக்கூடாது**

- அலங்கார வளைவுகள், தோரணங்கள், மின்விளக்கு வளைவுகள் போன்றவை இடம் பெறக் கூடாது. வளைவுகள் அமைப்பது என்ற பெயரில் சாலைகளில் குழிகளைத் தோண்டி சேதப்படுத்துவதற்கு அனுமதிக்கக் கூடாது.

**தனிநபர் நிறுவனம் அன்பளிப்பு பெறலாகாது**

- தனிநபர்களிடமிருந்தும், தனியார் நிறுவனங்களிடமிருந்தும் விழாவிற்காக எந்தவொரு அன்பளிப்போ அல்லது பிற வகையில் உதவிகளோ பெறக் கூடாது. அது வேறு வகையில் அந்த நபர்களுக்குச்சலுகைகள் செய்வதற்கு வழிவகுத்துவிடும் என்பதால் அவற்றை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும்.

**செய்தித்தாள் பெரிய விளம்பரம் கூடாது**

- விழாக்களுக்குச் செய்தித்தாள்களில் பெரிய விளம்பரங்கள் தருவது கூடாது.

மேற்கண்ட அறிவுரைகளை, அரசுத் துறை தலைவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அரசு நிறுவனங்களின் தலைவர்களும் தவறாமல்கடைப்பிடிக்க வேண்டும்.

**முதல்வர் படமோ அமைச்சர்கள் படமோ கண்டிப்பாக இடம்பெறக் கூடாது**

மேற்கூறிய அறிவுரைகளுடன், அரசு நிகழ்ச்சிகள் குறித்து அச்சிடப்படும் எந்த ஒரு அழைப்பிதழிலும் முதல்வர் படம் மற்றும் அமைச்சர்கள் படம் இடம் பெறக் கூடாது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். தமிழக அரசின் சின்னம் இடம்பெற்றால் போதுமானது என்று அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

**அறிஞர் அண்ணா கூறுகிறார்**

"மாற்றான் வீட்டுத் தோட்டத்திலே பூத்திடும் மல்லிகைக்கு மணம் உண்டல்லவா? ரசிக்கத்தானே செய்வோம். அது போலவே, பேசுபவரின் கருத்து பயன்தருமாயின் கேட்பவரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும், அவர்கள் ஏற்றுக் கொள்வர். எனவே, மேடைப் பேச்சுக்கு கருத்துக்களைச் சேகரிப்பது, சிந்தனையில் விளையும்படி செய்வது மிகமிக முக்கியம். பூத்த மலரை அழகுறத் தொடுத்தல்போல, கிடைத்த கருத்தைத் தொகுத்தும், வகுத்தும், பிரித்தும் சொல்லிட வேண்டும். வெல்லும் சொல், தெளிவான நடை, நம்பிக்கையூட்டும் போக்கு இவைகளைக் கொண்டு பேச்சு அமைதல் வேண்டும்."



# மகளிர்-சிறார் நலம்காக்கும் மனிதாபிமானத்திட்டம்!

தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில் உள்ள
மகளிர் மற்றும் சிறார் வாழ்வினை
வளப்படுத்துகின்ற
ஊரக மகளிர் மற்றும் சிறார் மேம்பாட்டுத்
திட்டமானது
1983-84-ஆம் ஆண்டில்
சோதனை முறையில்
ஒரு சில மாவட்டங்களில்
செயல்படுத்தப்பட்டது.
பின்னர் இத்திட்டத்தின்
பயன் வெகுவாக
மக்களைச் சென்றடையும்
நிலையறிந்து
இன்று இம்மாநிலத்தின்
அனைத்து
மாவட்டங்களிலும்
செயல்படுத்தப்பட்டு
வருகிறது.
இத்திட்டமானது
மகளிர், சமுதாயத்தில் உரிய மதிப்பும்
மரியாதையும்
பெற வாய்ப்பளிக்கிறது. மாபெரும்
மனிதாபிமானத் திட்டமாகிய
இத்திட்டத்தின் மூலம் பெண்களின்
நிலையை மேம்படுத்துவதே அரசின்
நோக்கமாகும்.
பெண்களை -
★ குடும்பத்தில் வருவாய் ஈட்டக்கூடிய
ஒருவராக ஆக்குதல்;
★ ஆண்களுக்குச் சமமாகக்
குடும்ப வாழ்க்கை நிலையினை உயர்த்த
பங்கு கொள்ளுதல்;
★ குடும்பத்தை நல்ல
நிலையில் இருக்கச்
செய்தல்;
★ பொறுப்புள்ள
தாயாராக இருக்கச்
செய்தல் -
இவையே ஊரக மகளிர்
மற்றும் சிறார்
மேம்பாட்டுத் திட்டத்தின்
நோக்கமாகும்.

**ஊரகப் பகுதிகளில் உள்ள பெண்களும், குழந்தைகளும் பயன்பெறும் வகையில், மாபெரும் மனிதாபிமானத் திட்டமாக அரசு வகுத்துச்செயல்படும் ஊரக மகளிர் மற்றும் சிறார் மேம்பாட்டுத்திட்டத்தை விளக்கி வரையப் பட்டுள்ள கட்டுரை இது.**

10 முதல் 15 மகளிர் ஒரு குழுவாக
அமைக்கப்பட்டு,
எல்லோருக்கும் ஒருவருக்கொருவர்
பயனளிக்கக் கூடிய பணிகள்
மேற்கொள்ளப்படுகின்றன.





பிரிவு அமைப்பாளர்
அந்தக் குழுவின்
தொடர்பு அலுவலராகப்
பணியாற்றுவார்.

ஒவ்வொரு குழுவிற்கும்
1994-95-ஆம் ஆண்டு வரை
கூடுதல் நிதியாக ரூ. 15,000
வழங்கப்பட்டது.
மத்திய அரசு ரூ. 5,000/-
மாநில அரசு ரூ. 5000/- மற்றும்
யூனிசெஃப் ரூ. 5000/-
தற்போது இச்சுழல் நிதி
ரூ. 25,000/- வரை உயர்த்தப்பட்டுள்ளது.
யூனிசெஃப் நிறுவனம்
தனது நிதி உதவியினை
31.12.1995 முடிய
நிறுத்திக் கொண்டுவிட்டபடியால்
இத்தொகையினை
மத்திய அரசும் மாநில அரசும் சமபங்காக
அளிக்கின்றன.

**... பலவகையான சுய வேலை வாய்ப்புப் பணிகளை ஏற்று, பொருள்களை உற்பத்தி செய்து அவற்றை விற்பனை செய்வதன் மூலம் மகளிர் தங்களது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பும் வசதியும் அரசால் அளிக்கப்படுகிறது...**

இத்திட்டத்தின் கீழ்
மகளிர் தையல் வேலை,
பாய் பின்னுதல்,
கூடை முடைதல்,
ஊதுபத்தி செய்தல்,
பாசிமணிமாலை,
பொம்மை, நாரினால்
ஆன பொருட்கள்
தயாரித்தல், ஊறுகாய்,
அப்பளம் தயாரித்தல்
உலர்ந்த மீன்கள் பக்குவம் செய்தல்,
பூச்செண்டுகள் தயாரித்தல்
போன்ற பலவிதமான
சுயவேலைவாய்ப்புப் பணிகளை ஏற்று
இவற்றை விற்பனை செய்வதன் மூலம்
தங்களது வருமானத்தைப் பெருக்கிக்
கொள்கின்றனர்.
தமிழ் நாட்டில்
1983-1984 முதல் 1995-1996 வரை
மத்திய அரசால் அனுமதிக்கப்பட்ட
மொத்த 7251 மகளிர் குழுக்களில்





31.3.1996 முடிய 6562 குழுக்கள்
தமிழ் நாட்டிலுள்ள 22 மாவட்டங்களிலும்
அமைக்கப்பட்டு
1,06,425 மகளிர் பயனடைந்து
வருகிறார்கள்.
1996-1997 ஆம் ஆண்டிற்கு
ரூ. 200 இலட்சம் இத்திட்டத்திற்காக
ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இத்திட்டம்
நன்முறையில் செயல்படுவதற்கு
எடுத்துக்காட்டாக
செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்
பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள
மேடவாக்கம் கிராமத்தினை
எடுத்துக்கொள்ளலாம். இக்கிராமத்தில்
ஊரக மகளிர் சிறார் மேம்பாட்டுத்திட்டம்
1993-94 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல்
சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு
வருகிறது.
இக்கிராமத்தைச் சேர்ந்த
தையல் தொழில் தெரிந்த 15 பெண்கள்
சேர்ந்து
ஒரு குழுவாக அமைந்து
இத்திட்டத்தைச்
செயல்படுத்த முடிவு எடுத்து
தையல் யூனியன் ஒன்று ஆரம்பித்து
அதனை 23.1.94 வ.எண். 13/94-ல்
கூட்டுறவு சட்டத்தின் கீழ் பதிவு
செய்யப்பட்டு
சேலையூர் ''யூகோ வங்கி'' யின் நிதி
உதவியுடன் செயல்படுத்தப்பட்டு
வருகிறது.
இக்குழுவில்
ஒவ்வொரு நபருக்கும் ரூ. 4000/-
மதிப்பில்
தையல் எந்திரங்கள் வழங்கவும்
உறுப்பினர்கள் அனைவரும்
பின்தங்கிய வகுப்பினைச்
சார்ந்தவர்களாதலால்
ஒவ்வொரு நபருக்கும் 1/3 பங்கு
நிதி உதவி
ரூ. 1333/- மீள் ஊரக வளர்ச்சி
முகமையின் மூலமும்
ரூ. 2667/- வங்கிக் கடனாகவும்
வழங்கப்பட்டது.
அருகாமையிலுள்ள ஓர் ஏற்றுமதி
நிறுவனத்திடமிருந்து
ஆடைகள் தைக்க ஆணைகள் பெற்று
உடைகள் தைத்துக் கொடுப்பதன் மூலமும்
அவர்கள் செய்யும் வேலைக்கு தக்க
ஊதியம் வழங்கப்படுவதன் மூலமும்
குழுவின் மாத வருமானம் ரூ. 15,000/-
வரை கிடைக்கப்பெறுகிறது.
இதில் 15 நபர்களும்
வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய
கடன் தவணையினை, செலுத்தியது போக

**... செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டம் பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தில் மேடவாக்கம்கிராமத்தில் 15 பெண்கள் தையல் தொழில் குழு அமைத்து சிறப்புடன் செயல்படுவதன் மூலம் குழுவின் மாதவருமானம் ரூபாய் 15,000 வரை கிடைக்கப்பெறுகிறது...**

தலா மாதம் ரூ. 900/- வரை
வருமானம் ஈட்டி வருகின்றனர்.





ஆடவரின் துணை ஏதுமின்றி
பெண்கள் தானாகவே
குழுவை நடத்தும் அளவுக்குத்
திறமையுடன் செயல்படுகின்றனர்.
மகளிர் மற்றும் சிறார்
மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்
சுழல் நிதியாக ரூ. 25,000/-ம்
கச்சாப்பொருள் வாங்கும் பொருட்டு
அளிக்கப்பட்டுள்ளது.
இதே போல்
செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்
மாவட்டத்தினைச்
சார்ந்த
காட்டாங்குளத்தூர்
ஊராட்சி
ஒன்றியத்திலுள்ள
காயராம்பேடு என்ற கிராமத்தில்
1993-94-ஆம் ஆண்டு ''எம்பராய்டரி
வேலை'' செய்யும்
16 மகளிர் அங்கத்தினரைக் கொண்ட
ஓர் குழு மிக நன்முறையில்
செயல்பட்டு வருகிறது.
விவசாயக் குடும்பத்தினைச் சார்ந்த
இப்பெண்கள்
விவசாயம் மூலம் வரும்
வருமானத்தினைத் தவிர
மாதம் ஒன்றுக்கு ரூ. 1200/-
முதல் ரூ. 1800/- வரை
இத்திட்டத்தினால் வருமானம்
பெற்று வருகின்றனர்.
இந்தத் திட்டம்
கிராம மகளிருக்கு
ஓர் உறுதுணையான திட்டமாகவும்
சுயநம்பிக்கை, தைரியம்,
சமுதாயத்தில் முன்னேற

**... செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியம் காயராம்பேடு கிராமத்தில் எம்பராய்டரி வேலை செய்யும் மகளிர் குழு நன்முறையில் செயல்பட்டு ஒவ்வொரு உறுப்பினரும் ரூபாய் 1,200 முதல் 1,800 வரை மாத வருமானம் பெறுகின்றனர்...**

வேண்டும் என்ற
நோக்கங்களை அளிக்கும்



திட்டமாகவும் அமைந்துள்ளது.
பெரியார், கோவை மாவட்டங்களில்
இத்திட்டம்
மிகவும் திறம்படச் செயல்பட்டு
வருகிறது. இச்சிறப்புமிகு திட்டம்
ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு
நன்மை பயக்கும் நலமிக்க
மனிதாபிமான மாபெரும் திட்டம் ஆகும்!

### சமயச் சார்பற்ற சிந்தனை...

**சமயச் சார்பற்ற சிந்தனை, நீதி, கல்வி, உழைப்பு ஆகியவை நமக்கு புதிய வளமான உலகை அளிக்கிறது. பெரும்பாலான மக்கள் சமயச் சார்பற்ற சிந்தனைக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. ஆனால் மனிதர்கள் எவரும் நீதி, கல்வி, உழைப்பு ஆகியவற்றின் சிறப்பினை மறுப்பதில்லை. ஆனால் நீதி, கல்வி, உழைப்பு ஆகியவற்றுக்கு நாம் இலக்கணம் வரையறுக்கும் பொழுதுதான் இன்னல்கள் எழுகின்றன.**

**- சிந்தனையாளர் இங்கர்சால்**

# காமராஜரின் கருத்துக் கோவை



பெண்கள் விழிப்பு அடைந்தால், குடும்பம் முன்னேறும்; கிராமங்கள் முன்னேறும்; தேசமே முன்னேறும்.

ஏழைகளை நல்ல முறையில் வாழவைத்து, எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும். அதுதான் சுதந்திரம், அதற்காகத்தான் சுதந்திரம் கேட்டார் மகாத்மா காந்தி.

சுதந்திரம் என்றால் பயமில்லாது வாழ்வதுதான். அப்படி பயமில்லாது வாழவேண்டும் என்றால் நாம் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும்.

நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதிலும், ஒற்றுமையோடு பாடுபடுவதிலும்தான் நமது முன்னேற்றம் இருக்கிறது.

நாடு முன்னேற வறுமையும் அறியாமையும் போக வேண்டும். இவை இரண்டும் போனாலன்றி, நாடு முன்னேறியதாகச் சொல்ல முடியாது.

யானை சாப்பிடும்போது ஒரு கவளம் சோறு கீழே சிந்தி விடுகிறது. யானைக்கு ஒரு கவளம்தான் நஷ்டம். ஆனால், அதுவே இலட்சக்கணக்கான எறும்புகளுக்கு ஆகாரமாகக் கிடைக்கிறதே! இதுபோல, அளவுக்கு மீறி சம்பாதிப்பதில் கொஞ்சம் வரி கொடுத்தால் பலபேர் பட்டினி தீர வழி செய்யலாமே!





# அறிவியல் துளிகள்




## டின் - உணவுகளுக்கு பெருத்த வரவேற்பு

'டின்' உணவுகளின் உபயோகம் 1990 ஆம் ஆண்டிலிருந்து அதிகமாகி வருகிறது. ஆண்டுக்கு 7.4 சதவிகிதம் அதிகரிக்கிறது. இவ்வகை உணவுத் தயாரிப்பில் பிரிட்டனைச் சேர்ந்த மார்க்ஸ் அண்ட் ஸ்பென்சர் போன்ற ஐந்து நிறுவனங்கள் பெரிதும், முன்னணியில் உள்ளன. ஓராண்டுக்கு பிரிட்டனில் 'டின்' உணவுப் பொருள் விற்பனை மூலம் அரசுக்கு வரும் ஆண்டு வருமானம், ஏறத்தாழ 32.3 கோடி பவுண்ட் ஆகும். நம் இந்திய நாட்டிலும் அவ்வாறான 'டின்' - 'பாக்கெட்' உணவுப் பொருட்களின் விற்பனையானது அண்மைக் காலமாக வளர்ந்து வருவதாக ஒரு கணக்கெடுப்புத் தெரிவிக்கிறது. ஆகவே, சென்ற மாதம் சென்னையில் அறிமுகப் படுத்தப்பட்ட ஆவின் மாம் பழச்சாற்றுக்கும் நல்ல வரவேற்பு இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.



## இருட்டில் படம் பிடிக்கலாம்

பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சகத்தின் நிதியுதவியோடு, இருட்டில் படம் பிடிக்கும் புதியதோர் காமிரா கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. டாக்டர் ஸ்டீபன் போர்ட்டர் என்பவர் சுமார் 15 ஆண்டுக் காலம் படாதபாடுபட்டு இதை உருவாக்கியிருக்கிறார். 'முன்பே இது போன்ற காமிரா உண்டே?' - என்றுதானே முணுமுணுக்கிறீர்கள்? அவற்றுக்கும் இதற்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. அந்தக் காமிரா பாகங்களை மைனஸ் 200 டிகிரி செல்சியஸ் அளவுக்கான கடும் குளிர் நிலையில்தான் வைத்தாக வேண்டும். ஆனால் இது அப்படியல்ல. சாதாரண வெப்ப நிலையில் வைத்திருந்தும் இந்தப்

பயன்படுத்தலாமாம்; அமைப்பிலும்கூட அவற்றைவிட இது சிறியதாகவே இருக்கிறது.



## திரவ உரம்

சொட்டு நீர்ப்பாசனம் என்றால் உங்களுக்குத் தெரியும்; அதேபோலத் திரவமாக உரத்தயாரிப்பு இருப்பது தெரியுமா? இருக்கிறது அப்படி! திரவத்தைச் சின்னஞ்சிறு குழாய்மூலம் பயிருக்கு இடும்முறை மெல்லமெல்லப் பரவி வருகிறது. நம்நாட்டில் ஆந்திராவில் உள்ள நாகர்ஜுனா ஃபெர்டிலைசர் நிறுவனம் இவ்வகை உர உற்பத்திக்கென இஸ்ரேல் நிறுவனம் ஒன்றோடு கூட்டுச் சேர்ந்திருக்கிறது. முதலீடு ரூ. 3 கோடியாம்!

## சுற்றுலாத்துறையில் மின்னணுச் சாதனங்கள்

சுற்றுலாத்துறையில் மின்னணுச் சாதனங்களின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. இந்தியாவில் உள்ள சில தனியார் சுற்றுலா அமைப்புகள் சி.டி ராம்கள் தயாரிப்பது பற்றிக் கம்ப்யூட்டர் நிறுவனங்களோடு ஆர்வத்தோடு தொடர்பு கொண்டு வருகின்றன 'காம்பேக்ட் டிஸ்க்' எனப்படும் இந்த சி.டி.ராம்கள் மூலம் 'இந்த சீசனில் எந்த ஊருக்குச் சுற்றுலா போகலாம்? பயணம் ரயிலிலா காரிலா விமானத்திலா எது நல்லது? அங்கே போய் எங்கே தங்கலாம்?' என்பதையெல்லாம் முன்கூட்டியே தெளிவாகத் தெரிந்துகொண்டு சுற்றுலா புறப்படுவது வசதிதானே?



## விண்வெளியில் இந்திய செயற்கைக் கோள்

1957 ஆம் ஆண்டு அக்டோபர் 4-ஆம் தேதி ஸ்புட்னிக் -1 என்ற செயற்கைக் கோள், குறைந்த உயரத்தில், பூமியைச் சுற்றிவர விண்வெளியில் ஏவப்பட்டது. முதன்முதலில் ஏவியது சோவியத் ரஷ்யா. 1982 ஆம் ஆண்டு மே மாதம் தொலைத் தொடர்பு மற்றும் வானிலை சம்பந்தப்பட்ட இன்சாட் 1 ஏ என்ற செயற்கைக் கோளை இந்தியா விண்ணில் செலுத்தியது. எதிர்பாராத இயந்திரக் கோளாறு காரணமாக இந்தச் செயற்கைக் கோள் 5 ஆவது மாதத்தில் செயல்திறன் குன்றியது. இதன்பின் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்ட இன்சாட் 1 பி என்ற இரண்டாவது செயற்கைக் கோள் 1983 ஆம் ஆண்டு ஆகஸ்டு 30 ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. இது 7 ஆண்டு காலம் திட்டமிட்டவாறு செயல்பட்டது. இதன் பணிக்காலம் முடியும் தருவாயில் இதற்கு மாற்றுக் கோளாக ஏவப்பட்ட இன்சாட் 1 சி என்ற மூன்றாவது செயற்கைக் கோள் சரிவர இயங்காததால் இது கைவிடப்பட்டது. இதன்பின் இன்சாட் 1 - டி என்ற நான்காவது தொலைத் தொடர்பு செயற்கைக்கோள் 1990 ஆம் ஆண்டு ஜுன் மாதம் விண்ணில் ஏவப்பட்டது. இது சிறப்பாகத் தற்போது செயல்பட்டு வருகிறது.








## அக்கரைக்கு இக்கரை.... ஆர்வத்தோடு திரும்புகிறார்கள்

தங்கள் படிப்பிற்கேற்ற வேலையோ வருமானமோ இந்தியாவில் கிடைப்பதில்லை என டாக்டர்கள், எஞ்சினீயர்கள் போன்றோர் படாதபாடுபட்டு வெளிநாட்டுக்குப் பறப்பதை நாம் அறிவோம். அவ்வாறு அயல் நாடுகளுக்குச் சென்றுள்ள டாக்டர்களின் எண்ணிக்கை மட்டும் சுமார் 60,000 என்கிறது ஒரு மதிப்பீடு. அப்படிச் சென்றிருக்கும் கற்றறிவாளர்களில் பலரும் இப்போது ஆர்வத்தோடு இந்தியாவிற்குத் திரும்பும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது! காரணம் என்ன தெரியுமோ? அந்த வெளிநாடுகளிலெல்லாம் கூட்டுத் திட்டத்தின் அடிப்படையில் இந்தியாவுடன் சேர்ந்து மருத்துவமனை, தொழில் நிறுவனங்கள் போன்றவற்றை அந்நாடுகளில் உள்ளதுபோன்ற வகையில் அமைத்துவருவதுதான்!



## சாஃப்ட்வேர் ஏற்றுமதி இந்திய சாதனை

இந்திய மின்னணுச் சாதனங்கள் சாஃப்ட்வேர் ஏற்றுமதி வளர்ச்சிக் கவுன்சில் கணக்கின்படி, இந்தியத் தொலைத் தொடர்புச் சாதனங்களின் ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் மிகுந்துள்ளது. உலக அளவில் தொலைத்தொடர்புச் சாதனங்களின் விற்பனை 51,000 கோடி டாலராக உயர்ந்திருக்கிறது. உலகச் சந்தையில் நம் இந்தியா உள்ளிட்ட 40க்கும் மேலான நாடுகள் 90 சதவிகித இடத்தைப் பிடித்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



## செயற்கைத் தோல்!

கோலஜன் என்ற ஒரு வகைப் புரத நாரின் முப்பரிமாணத் தையலால் உருவாக்கப்பட்ட செயற்கைத் தோல் கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது. ஏதேனும் விபத்தில் நம் உடம்புச்சதை பிய்ந்து போனால், தொடை போன்ற அங்கங்களிலிருந்து சதையை எடுத்துவைத்துப் பெரும் காயங்களைச் சரிசெய்வதை இனி செயற்கைத்தோல் முறை மூலம் தவிர்க்கலாம் என்கிறார்கள், அறிவியலறிஞர்கள்.

## கருத்தைக் கவரும் காதொலிக் கருவி

செவிகேளாதோருக்கு மிகவும் உதவும் வகையில் பிரஞ்சு நிறுவனம் ஒன்று அரியதோர் கருவியினைப் புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறது. 'இன்டிராசென்' என்ற பெயருடைய அந்த அற்புதமான காதொலிக் கருவிக்கு நல்ல வரவேற்பிருக்கிறது.

உலகெங்கும் மைக்ரோ புராசஸர் உதவியுடன் கம்ப்யூட்டரோடு இயக்கப்படுகிற இந்த மினியேச்சர் கருவியானது, மிக நுண்ணிய ஒலியையும் எளிதில் கிரகித்துவிடும்; அதேபோல் பெரிய சப்தத்தையும் அளவோடு கேட்கச் செய்யும்.

'தாவோ' சிந்தனை

தலைவனுக்குரிய இலக்கணம்

வரையறுக்கிறது தாவோ

# தன்னலமின்மை



உண்மையான தன்னார்வமே
தன்னலமின்மையைக் கற்பிக்கிறது

வானகமும் வையகமும் வியாபித்திருப்பது
தம் சுயநலத்திற்காக அல்ல-
அனைத்துப் படைப்புகளுக்காக!

கூர்த்தமதியுடைத் தலைவன்
இவற்றையுணர்ந்து
தன்னலமுடைய செயல்களைக்
கட்டுப்படுத்தி
பொதுநலச் சிந்தையோடு சிறப்பாகச்
செயலாற்றுகிறான்!

அறிவார்ந்த தலைமை என்பது
தன்னலமற்றதே!

தன்னலத்தைவிட
மற்றவர்மீது அக்கறையுள்ள தலைவனே
மேலும் மேலும் வளர்கிறான்.
நீடித்து நிலைபெறுகிறான்.

புதுச்செய்தி

தன்னலமில்லாமல் நடப்பதன் மூலம்
தலைவன் தன்னை உயர்த்திக் கொள்கிறான்.





பத்மவாசன்



'தாவோ' சிந்தனை

தலைவனுக்குரிய இலக்கணம்

வரையறுக்கிறது தாவோ



# தண்ணீரும் தலைமையும்



மதிநுட்பமுள்ள தலைவன்
தண்ணீருக்கொப்பானவன்.

**தண்ணீர்**

வெள்ளம்
படைப்புகள் யாவற்றையும்
எவ்வித பேத மின்றி
எவ்வித மதிப்பீடுமின்றி
கழுவித் தூய்மையாக்கி
புத்துணர்வூட்டுகிறது;

வெள்ளம்
இலகுவாக, அச்சமின்றி
மேட்டிலிருந்து பள்ளத்தை
நோக்கிப்பாய்கிறது!'

தண்ணீர் நெகிழ்வுடையது
பதிலீடு கொண்டது
நியதிகளை-சட்டங்களை
மதிக்கக் கூடியது.

**தலைவன்**

எந்த இடத்திலும்
எச்சூழலிலும்,
எந்தப் பிரச்சினையிலும்
எவரது குற்றச்சாட்டுக்கும்
இடமின்றிச்செயலாற்றுகிறான்.





## 'தாவோ' சிந்தனை

### தலைவனுக்குரிய இலக்கணம்

### வரையறுக்கிறது தாவோ



வருமானத்தை மட்டும்
கணக்கில் கொள்ளாமல்
எல்லோரும் பயனடையும் வகையில்
திறம்பட ஆட்சிபுரிகிறான்.

சொல்லில்
எளிமையும்
வாய்மையும்
ஒற்றுமையும்,
இடையிடையே குறுக்கிட்டு
தெளிவும்
ததும்பிய பேச்சாற்றல்
கொண்டிருக்கிறான்.

வெள்ளத்தின் அசைவுகளில்
அதன் சக்தியைக்
கற்றுக் கொள்கிறான்.

எல்லாவற்றிற்கும்
காலமே அடிப்படை
என்பதை அறிகிறான்.

### தண்ணீரும் தலைமையும்

**தண்ணீரைப் போலவே**
**தலைவனும் எல்லோருக்கும்**
**நன்மை யளிக்கிறான்.**

அவன்...
யாரையும் தள்ளிவிடுவதுமில்லை.
எவரும் அவன்மேல்
எரிச்சலோ எதிர்ப்போ
கொள்வதுமில்லை.





தமிழரசு




அவர்களது அகன்ற பார்வையும், அமைதியும், பொறுமையின்மையும் இரைக்குக் காத்திருக்கும் நாரைகளை நினைவூட்டின.

பெட்ரோலிய மரத்தினால் உண்டாகும் நன்மைகள்:

'இனிமேல் அயல் நாட்டிலிருந்து பெட்ரோல் இறக்குமதி செய்ய வேண்டியது இல்லை. அதனால், அன்னியச் செலாவணி மிச்சமாகும். இயற்கையான பெட்ரோலியத்தைவிட எரிதிறன் கொண்டது இது. சுற்றுச் சூழல் கேடு குறைவாகவே இருக்கும்' – இப்படியெல்லாம் பெரிய வார்த்தைகளில் அவர்கள் விளக்கினார்கள். கூட்டத்திலிருந்த ஒரு சில படித்தவர்கள் கூட அதை விளங்கிக் கொள்ள முடியவில்லை. பெட்ரோலிய மரத்தினால் ஏற்படப்போகும் பொருளாதார நன்மைகளை ஒப்புக் கொள்வது மாதிரியாக இவர்கள் விளக்கியதும், சிறப்பு விருந்தாளியாக வந்தவர், தன் செயலரை அழைத்து அறிவித்தார் "விளைநிலங்களில் பாதியை பெட்ரோலிய மரப் பண்ணைக்கு ஒதுக்குங்கள். இது நடைமுறைக்கு வர இன்றே ஒரு சட்டம் பிறப்பிக்க ஏற்பாடு செய்யுங்கள்''. அதற்கப்புறம் பெட்ரோலிய மரத்தின் அதிசயக் கதை அரசாங்க எல்லையை விட்டுத் தாண்டிப் போனது. தனியார் தொழில் முயற்சியாளர்கள் வேகமாய் செயலில் இறங்கினார்கள். பெட்ரோலியப் பண்ணை முயற்சியாளர்களது பல்வேறு செய்திகள் செய்தித்தாட்களில் தினசரி இடம் பெற்றன. இங்கு கொலை, அங்கு கொள்ளை, இங்கு இனக்கலவரம் என்ற தலைப்புச் செய்திகளால் இடம் பெறும் செய்திகள் இரண்டாவது இடத்திற்குப் போய் விட்டன.

பெட்ரோலிய ஆலையின் முயற்சியாளர்கள் மாநிலம் எங்கும் சுற்றிவந்து, பெட்ரோலிய மரப்பண்ணைக்குத் தோதான இடம் தேடினார்கள். அரசாங்கத்தின் அவசர உத்திரவுப்படிக்கு, போகுமிடமெல்லாம் அவர்களுக்குச் சிறப்பான விருந்து தரப்பட்டது. அரசு அதிகாரிகள், அப்பாவி மாணவர்கள், மக்கள் பிரதிநிதிகள், உள்ளூர் மேல் மக்கள், பத்திரிகைகள் யாவரும் பெட்ரோலிய மரம் தரும் பொருளாதார நன்மையைக் கேட்டு அதிசயித்தார்கள். சில பெட்ரோல் பங்குக்காரர்கள், பெட்ரோலிய முயற்சியாளர்களோடு முன் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். பெட்ரோலிய வியா

பாரிகள் என்று வந்தவர்களுக்கு வெளிநாட்டுக்காரர்கள் ராஜாக்களுக்குக்கூட உலகில் எப்புறத்திலும் அத்தகைய மரியாதைகள் கிடைத்ததில்லை. அவற்றால் மிகுந்த உற்சாகம் கொண்ட அவர்கள் பெட்ரோலிய வனப் பண்ணைக்கு ஏகபோக முதலாளிகள் ஆவதற்காக, அதிகாரம் உள்ளவர்களுக்குத் தாராளமாக முன்பணம் தந்தார்கள்.

அப்படியாக, அவர்கள் சோனாபட் என்னும் கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்கள். வளமான அந்த நிலத்தில் பொன் விளைந்தது. அதனால், அதற்கு அப்பெயர். அந்தக் கிராமத்தில் எவருமே படித்ததில்லை, ஒருவரைத்தவிர. அந்த ஆள் ஒரு பையன். படித்த பிறகு சமுதாயத்தில் ஒரு மரியாதை தேடும் பொருட்டாக கிறுத்துவனாக மதம் மாறி தூரத்து சர்ச் ஒன்றில் காவலனாக வேலை செய்கிறான். அந்தக் கிராமவாசிகள் கடவுள்களின், தீர்க்கதரிசிகளின் மொழியைப் பேசினார்கள். அவர்களுக்குப் பாடத் தெரியும். வானத்தைப் பார்த்து அடுத்த நாள் மழை வருமா என்று சரியாகச் சொல்வார்கள். திசாரி என்றால் கிராமப் பூசாரி என்று அர்த்தம். அவன் அந்தக் கலையில் வல்லவன். தனது கலையை இரண்டு சிஷ்யர்களுக்குப் பயிற்சியளித்துக் கொண்டிருக்கிறான். இப்போது ஒரு ஆண்டு முச்சூடும் கால வர்த்தமானம் எப்படியிருக்கும் என்று சரியாகச் சொல்லி வருவான் அவன். ஆமாம். பயிரிட முடியுமா? கிராமத்துப் பொருளாதாரம் என்னவாகும் என்று, நிலாவை, நட்சத்திரங்களைப் பார்த்து, பூச்சிகள், காட்டு விலங்குகளைக் கண்டு, காட்டுக்கொடி மலர்வதை வைத்து முன் அறிவிப்பான் அவன். கிராமத்துக்கு ஏதேனும் ஆபத்து வருமானால், முன்னோர் ஆவி கனவிலோ, விழித்திருக்கும் போதோ அவனது உடலில் வந்து புகுந்து கொள்ளும். அடையாளங்கள் மூலமோ வார்த்தைகள் மூலமோ அம்மக்களின், எதிர்காலத்தைச் சொல்லும்.

பெட்ரோலிய முயற்சியாளர்கள், சோனாபட்டுக்கு வந்து, ஊர்ப்புறத்தே கொட்டகை



**... திசாரி என்றால் கிராமப் பூசாரி என்று அர்த்தம். கிராமத்துக்கு ஏதேனும் ஆபத்து வருமானால், முன்னோர் ஆவி கனவிலோ, விழித்திருக்கும் போதோ அவனது உடலில் வந்து புகுந்து கொள்ளும்....**

போடத் தொடங்கியதும், ஏறத்தாழ ஒரு ஊமையனை சந்தித்தார்கள். ஊமை போன்ற அவன் ஒரு வட்டிக்காரனின் கொத்தடிமையாக நீண்ட காலமாக வேலை செய்து கொண்டிருந்தான். மலைச்சரிவில் ஒரு தன்னந்தனியான இடத்தை அவன் உழுது கொண்டிருந்தான். இரவில் பரண்மீது படுத்துக்கொண்டு வன விலங்குகளை விரட்டுவதற்குப் பறையடிப்பான். வேறு மனித ஜீவன்கள் அந்த நிலத்தின் பக்கம் போனதில்லை. அங்கு விலங்குகளும், கெட்ட ஆவிகளும் நிறைய இருந்தன. அவைகளோடு பேசுவது ஒரு போதும் நல்லதில்லை. நிலச் சொந்தக்காரன் ஒருமுறை அங்கு போனான் அறுவடைக்காக. அவனும் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. ஆதலால், அந்த மனிதன் பல ஆண்டுகாலமாக எவரிடத்திலும் பேசியது இல்லை. நாளடைவில் அவனுக்குப் பேச்சு மறந்து போயிற்று. வார்த்தைகளை உச்சரிக்க மறந்தான். ஒரு பொருளையோ, நிகழ்ச்சியையோ அவனால் விவரிக்க முடியவில்லை. அயல் நாட்டுக்காரர்களைப் பார்த்தவுடன் அந்த ஊமையன் கிராமத்தைப் பார்த்து 'கிராமத்து எல்லையில் ஒரு நாரைக்கூட்டம் விருந்து சாப்பிடுகிறது' என்று சொன்னான். மக்களை விட்டு விலகி வாழ்ந்த அவனுக்குப் பறவைகளும் விலங்குகளுமே நெருக்கமான தோழர்களாக இருந்தார்கள். அதனால்தான் அப்படி வருணித்தான். பெட்ரோலிய முயற்சியாளர்கள் சோனாபட் கிராமத்தை தங்கள் அலுவலகத் தலைமையிடமாகத் தேர்ந்தெடுத்தார்கள். காரணம் வளமான நிலம், அருமையான சீதோஷ்ணம், அப்புறம் அந்த மக்கள் எல்லாம் அறிவற்றவர்கள் என்பதுதான். சீதோஷ்ணம் குளுமையாக, இனிமையாக இருந்தது. அயல் நாட்டவர்களுக்கு, அவர்கள் சென்று வந்த மலை வாசஸ்தலங்களை நினைவூட்டி மகிழ்வித்தது. அவர்களது வியாபார புத்தி, சோனாபட் ஜனங்களின் அறியாமையைப்பார்த்து, வேண்டிய நிலத்தை ஒரு பாட்டுக்கு வாங்கிவிடலாம் என்று கணக்குப் போட்டது.





இந்த அயல்நாட்டவர் யார்? கிறிஸ்துவப் பாதிரியார்களாக இருக்குமா? தொழிற்சாலை போன்று ஏதாவது அமைக்க வந்திருப்பார்களா? அல்லது கிராமம் மீண்டும் தண்ணீரில் மூழ்கிப் போகுமா? இல்லை, இல்லை. இது எந்த நன்மைக்காகவும் இல்லை. இந்த அறிகுறிகள் ஒருகாலும் நன்மை செய்ததே இல்லை. திசாரியை இப்படியான பயம் பிடித்துக் கொண்டது.

கிராமத்தவர்கள் எல்லோரும் அச்சப்பட்டார்கள். கிராமம் கிராமமாக இந்த அச்சம் பரவிற்று. திடீரென ஒருநாள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், வனக்காவலர், கிராம ஊழியர், பள்ளி ஆசிரியர் என்று அரசாங்கத்தின் முக்கியமான சகல சக்தியும் வாய்ந்த அதிகாரிகள் வந்து, வந்திருக்கும் அயல்நாட்டுக்காரர்களுக்கு கிராம மக்கள் எல்லாவிதமான உதவிகளையும் தரவேண்டும் என்று மாற்ற முடியாத ஒரு உத்திரவை அறிவித்தார்கள். அயல் நாட்டவர்களது செயல் திட்டத்தை விளக்கும் பொருட்டு ஒரு கூட்டம் நடைபெறும் என்றும், மாலையில் அனைவரும் அதில் கலந்து கொள்ள வேண்டும் என்று வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மாலையில் அந்த அந்நியர்கள், ஒலிபெருக்கி, பாட்டுப் பெட்டி, ஸ்லைடு, வீடியோ படம் இவற்றோடு வந்தார்கள். இயற்கையான பெட்ரோல் குறைந்து கொண்டே வருகிறது என்றும், மக்கள் அதனால் சிரமப்படுவார்கள் என்றும், பெட்ரோலிய மரப்பண்ணை நெல், சோளம், பருப்புப் பயிரைவிட இலாபகரமானது என்றும், பெட்ரோலிய மரங்கள் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் என்றும், இந்த அந்நியச் செலாவணியால் ஆடம்பர எலக்ட்ரானிக் சாதனங்களைப் பெருமளவு இறக்குமதி செய்ய முடியும் என்றும் அவர்கள் விளக்கினார்கள். குழப்பமாகவும், சுருக்கமாகவும் விளங்கிக் கொள்ள முடியாதவாறும், கற்பனைக்கெட்டாத மொழியிலும் அவர்கள் நிறையப் பேசினார்கள். பெட்ரோலிய மரத்தின் இலையொன்றை சினிமாத்திரையில் காட்டினார்கள். அதைப்பார்த்து பயப்பட்டுப்போன கிராமத்தவன் ஒருவன் 'அடே அம்மா, எவ்வளவு பெரிசு இந்த இலை, ஒரு இலையே பலாப்பழத்தின் அளவில் இருக்கிறதே!' என்று கத்தினான். 'இலையே பலாப் பழம் அளவு இருக்குமானால், இதன் பழம் ஒரு எருது அளவிற்கு இருக்கும்' என்று ஒரு கிழவன் கூடச் சொன்னான். சுற்றிலும் பலத்த சிரிப்பு. இதைத் தவிர, அக்கூட்டத்தில் வேறொன்றையும் அந்த மக்கள் புரிந்து கொள்ள முடியவில்லை.

கிராமத்தவர்கள், பாதையிலோ, சந்தையிலோ மோட்டார் வாகனங்களைப் பார்த்திருக்கிறார்கள் என்றாலும், அது பெட்ரோலில் ஓடுகிறதா



அல்லது சிரமப்பட்டு நிரப்பப் பெறும் காற்றினால் பறக்கிறதா என்று அவர்களால் நிச்சயப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

மகிழ்ச்சி நிறைந்த இந்த அறியாமை, அவர்களைக் காப்பாற்றுவதற்கு உதவவில்லை. தொழில் நுணுக்க நிபுணர்கள் தீட்டிய திட்டத்தின்படி, அயல் நாட்டவர்கள் ஒரு கம்பெனியை உருவாக்குவார்கள் என்றும்,

## பழங்குடியின மக்களின் சந்நிதிக்கு படிப்பவரை அழைத்துச் செல்லும் கதை

"இன்றைய ஒரிய இலக்கியத்தின் வளமான பகுதி சிறுகதை. அந்த எழுத்து வெளியில் பிரகாசமான கோள் 'ரிசிகேஷ் பண்டா' என்று 'தாரைகள்' கதையின் ஆசிரியரை நமக்கு அறிமுகப்படுத்துகிறார், ஒரிய மொழியிலிருந்து இக்கதையை தமிழுக்கு ஆக்கித்தந்த கவிஞர் தமிழ்நாடன். இந்தச் சிறந்த படைப்பாளியைப் பற்றியும் அவரது படைப்பைப் பற்றியும் அவரது கருத்து இதோ:

"ரிசிகேஷ் பண்டா ஒரிய மொழியின் மிகச் சிறந்த படைப்பாளி. ஆற்றல்மிகு படிமச் சித்திரங்களும், பழங்குடியினர் நாட்டுப்புறத்தவர் கலைப்பண்புகளும் அவரது வெளிப்பாட்டுத் தனித்துவம். கிராமம், நகரம், பழங்குடியினர் வாழும் காடு என்று நம் மண்ணின் [illegible] அவலங்களுக்கு வலுவான ஒரு எதிர்க்குரல் பண்டாவின் குரல். படைப்பாளிகளின் படைப்பாளி என்று போற்றப்படும் இவர், தமிழ் படைப்பாளிகளுக்கு [illegible], படிப்பாளிகளுக்கு மனதைத் தொடும் அனுபவமும் தரக்கூடும்.

துயருறும் மக்களின் சோகங்களுக்குள் நுழைந்து அவர்கள் மீது மிகுந்த அக்கறையுடன் தன் இலக்கிய எதிர்க்குரலைப் பதிவு செய்து கொண்டிருப்பவர் பண்டா. பழங்குடியினரின் வாழ்க்கை எளிமையானது, உண்மையானது. கலப்படம் எதுவும் அற்றது. ஆனால், நவீன, முன்னேற்ற முயற்சிகள் அவர்களது வாழ்க்கையை எவ்வளவு பாழ்படுத்துகிறது; எப்படி, ஒரு பழங்குடி இனத்தையே முற்றாக இல்லாதவாறு ஆக்கிவிடுகிறது?

நவீன பொருளாதார முன்னேற்ற முயற்சிகள் இயற்கைவளத்தை மட்டுமல்ல; இயற்கையின் மக்களான பழங்குடியினரையும் அழிக்கிறது. 'தாரைகள்' கதையை நம்ப வேண்டும் என்றால் ஒருவர், ஒரு முறையேனும் பழங்குடி மக்களின் சந்நிதிக்குப் போய் [illegible]வேண்டும்."

அது, அரசாங்க நிலத்தில் பெட்ரோலியப் பண்ணையை அமைக்கும் என்றும் ஆயிற்று. மேலும், பக்கத்தில் உள்ளவர்கள் கூட தம் நிலத்தில் பெட்ரோலிய மரங்கள் நடலாம் என்றும் அதற்காக நாற்று, உரம், பூச்சிமருந்து, ஆலோசனைகளை அந்தக் கம்பெனி மூலம், அரசாங்கம் அளிக்கும் என்றும் சொன்னார்கள். ஆனால், அந்த விவசாயிகள், பெட்ரோலிய மகசூலை அந்தக் கம்பெனிக்கு மட்டுமே விற்க வேண்டும். அதற்காக அவர்கள் முன்னதாகவே, ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். அரசாங்கம் அதற்காக, அந்தக் கம்பெனிக்கு தேவைப்படும் மானியத்தையும், உதவிகளையும் வழங்கும்.

எத்தனையோ ஆண்டு காலமாக, அந்த நிலங்களைக் கிராமத்தவர்கள்தான் உழுவார்கள். அவர்கள் உடைமையில் தான் நிலம் இருந்தது என்றாலும், அதற்கான சொந்தக்காரர்கள் என்ற உரிமைப் பத்திரம் அவர்களிடம் இல்லை. ஆதலால், நூற்றுக் கணக்கான 'விவசாயிகளின் நிலங்கள் அரசாங்க நிலம் என்று காட்டப்பட்டு, படிக்கப்புரியாத எழுத்துக்களும், கையொப்பங்களும், கைரேகைகளும் பதியப்பட்டு கம்பெனிக்கு ஒப்படைக்கப்பட்டன.

நிலவுடைமைக்குப் பத்திரம் வைத்திருந்த ஒரு சிலபேரும், தம் நிலத்தில், மனப்பூர்வமாக பெட்ரோலிய மரம் வளர்க்க ஒப்புக் கொள்வதாக ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள். 'படிக்கக் கேட்டேன், சரி' என்று பெருக்கல் குறியீடு காட்டப்பட்ட இடத்தில், பல





பத்திரங்களில் கைரேகை வைத்துக் கொடுத்தார்கள்.

நிலங்கள் எடுத்துக்கொள்ளப்படும் என்றும், மீண்டும் ஒரு முறை கிராமம் வேர் களையப்படும் என்றும் செய்தி பரவியதும், குழப்பமும் நம்பிக்கை இழப்பும் கிராமத்தைச் சூழ்ந்தது. கிராம மக்களும், அவர்களது முன்னோர்களும், கடந்த முப்பதாண்டுக் காலமாக, திறன் அற்றுப்போயிருந்தார்கள். இடம் மாறுவதெனில், எங்கு நாம் போவது, வேறிடம், வீடெல்லாம் தானியம் நிறைந்திருக்கும்; பட்டினி என்பது எவருக்கும் தெரியாது'' என்று அவர்கள் முணுமுணுத்தார்கள். 'பருவ காலத்திலும், மழை இல்லாத போதும், பழம் பலா, மா, இனிப்புக்கிழங்கு, மகுவா, பனைநீர், தேன் எல்லாம் நிறைந்திருக்கும். வீட்டில் உண்ண எதுவும் இல்லாத போது காட்டில் நல்ல வேட்டை பொங்கும்'' எல்லாம் போயிற்று. இப்போது இரண்டு மாதமாகப் பட்டினி, கூட்டிலிருந்து வெளிவந்து 'நான் கண்டு சொல்வேன்!' என்று அவன் அறிவித்தான். இரவில் நட்சத்திரங்களோடும், பகலில் சூரியனோடும், காற்றில், மலையில், தோட்டத்தில், வானத்தில், பூமியில், சொர்க்கத்தில், பாதாள உலகத்தில் உள்ள எண்ணற்ற கடவுள்களோடும் பேசினான். அவனுக்குக் கொஞ்சம் நம்பிக்கை தென்பட்டது. காரணம், அவன் முகம் சூரியன் போலப் பிரகாசித்தது. தொடர்ந்து அவன்,



ஒண்டுவதற்கு வேறு ஒரு இடம் கிடைக்காது. எல்லா நிலங்களையும், பேப்பர் மில்களும், முந்திரித் தோட்டங்களும், புதிய சரணாலயங்களும் ஆக்கிரமித்துக் கொண்டன. ''வன தேவதையின் கையை யாரோ முறித்து விட்டார்கள் போலிருக்கிறது. இப்போது, அக்கடவுள், உண்ணுவதற்கு ஒரு தண்டு. ஒரு கிழங்கு எதையும் அருள்வதில்லை. அப்போதெல்லாம் கானகம் வறண்டு போனது. கானகக் கடவுளோடு விளையாடுவது போல சிலபேர் சில மரங்களை அங்கொன்று இங்கொன்று நட்டார்கள். அதன் வேர்கள், இலைகள், பழங்களில் யாருக்கும் ஒரு உபயோகமும் இல்லை. கிராமம் இப்போது எங்கு இடம் மாறும் என்று அங்கலாய்த்தது அவர்கள் மனம்.

திசாரியைச் சுற்றி மக்கள் கூடினார்கள். விசித்திரமான ஒரு அயல்நாட்டுக்காரர்களின் முகாமிற்குப் போய்ச் சேர்ந்தான். அயல்நாட்டுக்காரர்களைப் பார்த்து தடுமாற்றம் எதுவும் இல்லாத வார்த்தைகளில் சொன்னான் திசாரி. 'நீங்கள் நல்லவர்கள் அல்ல. கெட்ட ஆவிகள் என்று எனக்குத் தெரியும். கொடிய மனத்தினர் நீங்கள், உயிர் கேட்கும் பூதங்களைப் போல வந்திருக்கிறீர்கள். குபேரக் கடவுளின் செல்வங்

களையெல்லாம் அடையும் வரை நீங்கள் ஓயமாட்டீர்கள். அளவற்ற செல்வக் களஞ்சியத்தை நான் உங்களுக்கு காட்டினால் இந்த கிராமத்தை விட்டு வெளியேறுவீர்களா?

இந்த நிலத்தில் ஒரு விரற்கடை அளவும் தொடமாட்டோம் என்று சத்தியம் செய்து தருவீர்களா? உங்களுக்கு இதயம் இருந்தால், அந்த இதயத்தில் நல்லெண்ணம் எதுவும் இருந்தால், அதன் பேரில், சத்தியம் செய்யுங்கள். உங்களுக்கு ஏதேனும் கடவுள் இருந்தால், அதன் பேரில் சத்தியம் செய்யுங்கள். இந்தக் காவல் தெய்வத்திடமிருந்து, உங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு செல்வமும் எடுத்துக் கொள்ளுங்கள். நாங்கள் ஒரு வார்த்தையும் கேட்க மாட்டோம். எங்களுக்கு இந்தச் செல்வம் வேண்டாம். எங்களை இந்த இடத்திலிருந்து துரத்தி விடாதீர்கள். எங்கள் தலைக்கு மேல் இருக்கிற ஒரே கூரையைப் பறித்துக் கொள்ளாதீர்கள்.''

'அப்படியே' என்று சத்தியம் செய்து கொடுத்த அயல் நாட்டவர்கள் விஞ்ஞானி, வியாபாரி, பொருளாதார நிபுணன், நிலவியல் ஆய்வாளன், ஆலோசகன், அரசியல்வாதி, சுரண்டுகிறவன், நிலங்களைப் பறித்துக் கொண்டவன், எல்லோரும் திசாரியைப் பின்தொடர்ந்தார்கள். குடுமி, காற்றில் பறக்கும் முடி, கையில் ஒரு காப்பு, காதில் பெரிய வளையம், ஒரு மூக்குத்தி, இவற்றோடு தலைக்குள் ஏராளமான சிந்தனைகளோடு விளங்கினான் திசாரி.

கிராமத்தைத் தாண்டி, அடர்ந்த கானகத்திற்கு வந்தார்கள். அச்சமூட்டும் சிகரங்களும், வானத்திலிருந்து தொங்குவது போல உருண்டையான பாறைகளும் திடீரென எதிர்ப்பட்டன. புல் அற்ற, வழுக்குச் சிகரம் ஒன்றின் உச்சி மீது ஒரு குரங்கு போலத் தொற்றி ஏறிய திசாரி, அங்கிருந்து ஒரு கயிற்றை எடுத்துக் கீழே வீசினான். அந்தக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு, விஞ்ஞானி, அரசியல்வாதி, பொருளாதார நிபுணன், சுரண்டுகிறவன், நிலம் பறிப்பவன் எல்லோரும் மேலே ஏறினார்கள்.



**... அயல்நாட்டுக்காரர்களைப் பார்த்து தடுமாற்றம் எதுவும் இல்லாத வார்த்தைகளில் சொன்னான் திசாரி: 'நீங்கள் நல்லவர்கள் அல்ல. கெட்ட ஆவிகள் என்று எனக்குத் தெரியும். கொடிய மனத்தினர் நீங்கள் !..**

'மகா கடவுள்களே! ஆடாமல் நில்லுங்கள். இந்தப் பிளவு வழியாகக் கீழே பாருங்கள். இந்தப் பள்ளத்திற்குக் கீழே தான் குபேரக் கடவுள் வசிக்கிறார். மகா கடவுள்களே! ஐயா கீழே பாருங்கள், ஜாக்கிரதை, உங்களுக்குத் தலை சுற்றக் கூடும். இன்னும் கொஞ்சம் கீழே உற்றுப் பாருங்கள். கவனமாகப் பாருங்கள். இருட்டு மறைந்து எல்லாம் தெரியும்' என்று, அந்தக் கனவான்களைப் பார்த்து மனதிடத்தோடு சொன்னான் திசாரி.

எல்லோரது முகத்திலும் சிரிப்பு வெடித்தது. தன்னை இழந்து ஒவ்வொருவரும் உரக்கச் சிரித்தார்கள். 'ஹா-ஹா-ஹா' இது என்ன என்று உனக்குத் தெரியுமா? இது ஒரு பெட்ரோலியக் கிணறு!' ஆர்வம் மேலிட கூர்ந்து, ஒரு அணிலைப் போல முகர்ந்து பார்த்தார் விஞ்ஞானி. நிலவியல் ஆய்வாளர், மாதிரியை ஆராய்பவர் போல துண்டாக மடித்தார். பொருளாதார மேதை உடனே கணக்கிட்டு, 'இந்தப் பெட்ரோலிய இருப்பின் மதிப்பு எவ்வளவு தெரியுமா? பத்தாயிரம் ஏக்கர் பெட்ரோலிய மரப்பண்ணையிலிருந்து நூறு வருஷத்திற்கு கிடைக்கும் பெட்ரோலுக்குச் சமம் இது.'

'வா, வா' திசாரி ஐயா, நீங்கள் உண்மையில் அதிபுத்திசாலிதான். உங்களுக்குப் பெரும் பரிசளிப்போம். நாங்கள் - வாஹ்! வாஹ்! இதைக்காட்டியதால்- ஒரு சிறப்பான காரியம் செய்தாய்! உனது வேண்டுகோளை நிச்சயம் நிறைவேற்றுவோம்.'

கொஞ்சநேரம் கூப்பிய கரங்களோடு திசாரி நின்றான். பிறகு எல்லோரும் கிராமத்திலிருந்த முகாமுக்குத் திரும்பினார்கள். அவர்களுக்குப் பின்னே, ''தெய்வங்களே! எங்களைக் கொன்று விடாதீர்கள்; இந்த எண்ணெய்க் கிணற்றிலிருந்து உங்களுக்கு வேண்டும் அளவு எடுத்துக் கொள்ளுங்கள். எங்கள் ராகி வயல்களை, நெல் சோள வயல்களை, எங்கள் ஓடைகளை, ஆறுகளை, எங்கள் கடவுள்கள் எங்கள் தாத்தாக்களின், முன்னோர்களின் ஆவிகளை அலைக்கழிக்காதீர்கள். உங்கள் பேனாநுனி கூட தங்கம் விளைவிக்கும். இந்த மலட்டு நிலத்தின் மீது உங்களுக்கு ஏன் ஆசை? இந்த வானத்திலும், காற்றிலும், எண்ணற்ற ஆவிகள் குடிகொண்டு, ஒரு குடையைப் போல எங்களைக் காக்கின்றன. அவர்களை வதைக்காதீர்கள் அவர்களைத் துரத்தாதீர்கள்'' என்று குவித்த கரங்களோடு கெஞ்சியவாறு வந்து கொண்டிருந்தான் திசாரி.





அந்தக் கடவுள்கள் அருள் புரிந்தார்கள். 'திசாரி சார், உங்கள் வேண்டுகோளைக் கேட்போம். கூடிய விரைவில், எமது தீர்ப்புரைப்போம்.'

அயல் நாட்டவர்கள், தமது முகாமில் உணர்ச்சி வயப்பட்டவர்களாய் இருந்தார்கள். மது, ஆட்டம், விருந்து என்று களியாட்டம் தொடர்ந்தது.

பணம், பணம், நிலம், பங்கு மார்க்கெட், வங்கியிருப்பு, அயல்நாட்டுப் பெண்கள், இப்படியான கனவுகளில் நீந்தினார்கள். 'கனவு கண்டது போதும், நிஜத்துக்கு வாருங்கள்' என்றார் ஒருவர். ரொம்ப நேரக் கனவு நல்லதில்லை. அதுவும் கனவு காணும் பழக்கம் இல்லாதவர்களுக்கு – என்றார் ஒருவர். 'பெட்ரோலியக் கிணற்றிலிருந்து பெட்ரோல் எடுப்பது எவ்வளவு சுகமாக இருக்கும். பயிரிடவென்று வெய்யிலிலும் மழையிலும் அவதிப்பட வேண்டியதிருக்காது' என்றார் ஒருவர். ஆலோசகருக்கு வருத்தமாகிப் போனது. அவரது விரிவான பெட்ரோலிய மரப்பண்ணைத் திட்டம் பயனற்றுப் போயிற்று. திட்டம் தயாரித்ததற்காக, கம்பெனி தரவிருந்த பங்குத்தொகை அவருக்குக் கிடைக்காது. 'பெட்ரோலியச் சுரங்கத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். இதில் நமக்கு என்ன லாபம்? என்றார் அவர். தலைமை வணிக முயற்சியாளர் சொன்னார். 'நாம் மென்மேலும் பணக்காரர் ஆகலாம். ஆனால் பெட்ரோலிய மரப் பண்ணைத் திட்டம் இல்லாமல் இந்தப் பெரிய பூமிக்கு நாம் சொந்தக்காரர்கள் ஆவது எப்படி? இது அவர்கள் எல்லோரையும்கவலைக்குள்ளாக்கிற்று. பெட்ரோலிய மரத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞானி சொன்னார்: உண்மைதான். அரசாங்கம், பெட்ரோலியக் கிணற்றை எடுத்துக்கொண்டால், நமக்கு நிலம் கிடைக்காது. கவலைப்படாதீர்கள். நாம் பெட்ரோலியக் கிணற்றைப் பயன்படுத்திக் கொள்வோம். அதை வெளியே தெரிவிக்காமல், பெட்ரோலிய மரத்தின் விளைச்சல்தான் இது என்போம். சுரண்டுகிறவன் அருமை நிலம் நம் கையை விட்டுப் போகாது என்று உடனடியாக அங்கீகரித்தான். ரத்தம் உறிஞ்சும் அட்டை போன்ற நிலத்தைக் கையகப்படுத்துகிறவன், ரொம்ப நல்லது, நிஜமாகவே அருமையானது, வேலை செய்ய அங்கு நிறையப் பெண்கள் இருப்பார்கள் என்று தன்திருப்திக்கு அவன் சிந்தித்தான். அவ்வாறானால், திட்டச் செலவு பாதியாகக் குறையும், லாபம் ஒன்னரை மடங்கு அதிகமாகும் என்றார் பொருளாதார நிபுணர். திட்டத்தில் அதிகப்பங்குகள் வைத்திருந்த அரசியல்வாதி பெரிய உறுமலில் வெடிச்சிரிப்பு சிரித்தான். அது மலைக்காற்று போலவும், பள்ளத்தாக்கில் பாய்ந்து வரும் மழை வெள்ளம் போலவும், இலையுதிர் கால இரவின் நிலா வெளிச்சம் போலவும் இருந்தது. எல்லோரும் சிரித்தார்கள். அவர்களது காட்டுச் சிரிப்பு வெறியாக மாறிற்று. நெருப்பைச்சுற்றி, குளிரில் இளம் பெண்கள் ஆடிக்கொண்டிருந்தார்கள். அயல் நாட்டவர் ரத்தத்தில் வெப்பம் பாய்ந்தது. அந்தக் குழுவில், யாரோ ஒருவன், வெளியே ஒரு கோழி குந்தியிருக்கிறது என்றான்.



**... ரத்தம் உறிஞ்சும் அட்டை போன்ற நிலத்தை கையகப்படுத்துகிறவன், ரொம்ப நல்லது, நிஜமாகவே அருமையானது, வேலை செய்ய அங்கு நிறையப் பெண்கள் இருப்பார்கள் என்று தன் திருப்திக்கு அவன் சிந்தித்தான்...**

# படமும் செய்தியும்

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் மத்திய இரயில்வேத்துறை அமைச்சர் திரு ராம்விலாஸ் பாஸ்வான் தமிழ்நாட்டில் இரயில்வே வசதிகள் குறித்து அலுவலர்களுடன் தலைமைச் செயலகத்தில் ஆலோசனை செய்தார்.



தமிழரசு முதல் இலவச வெளியீடான காய்கறித் தோட்டம் முதல் பிரதியை முதல்வர் கலைஞர் அவர்கள் பெறுகிறார். அருகில் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு வீரபாண்டி ஆறுமுகம், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு அ. ரகுமான்கான், செய்தித்துறை அமைச்சர் திரு வ. முல்லைவேந்தன் உள்ளார்கள்









முதல்வர் அவர்களை அவர்தம் இல்லத்தில், அமெரிக்[க] தூதர் திரு ஃபிராங்க் ஜி. வைஸ்னர் சந்தித்து உரையாடினா[ர்] (1.7.96)

ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு சமயநல்[லூர்] எஸ். செல்வராஜ் மறைந்த தலைவர் பாபு ஜெகஜீவன்[ராம்] திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்தார். (6.7.96)



முதல்வர் அவர்களை அவர்தம் அலுவலகத்தில் மத்திய விமானப் போக்குவரத்து மற்றும் தகவல் ஒலிபரப்பு இணையமைச்சர் திரு சி.எம். இப்ராஹிம் சந்தித்தார் (2.7.96)





+2 மற்றும் பள்ளி இறுதி வகுப்புகளில் மாநிலத்தில் முதல் மூன்று நிலைகளில் தேர்வுற்ற மாணவ, மாணவிகளுக்கு அவர்தம் மேற்படிப்பிற்காக ஆகும் முழுச் செலவையும் அரசு ஏற்றுக்கொள்ளும் எனும் ஆணையை முதல்வர் வழங்கினார் (2.7.96)

# எய்ட்ஸ் என்னும் ஆட்கொல்லி நோய்



எயிட்ஸ் என்பது நோய்களின் ஒரு கூட்டுத் தொகுப்பு. இந்த நோயால் இன்று உலக மெங்கும் மரணத்தின் தொகை அதிகரிக்கப் படுகிறது. இந்த நோய் தாக்காத மனித வர்க்கமே இல்லை. இந்தியாவில் ஆயிரக்கணக்கான மக்கள் எயிட்ஸினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எயிட்ஸ்க்கென்று தனிப்பட்ட முறையில் உடலில் அறிகுறிகள் தென்படுவதில்லை.

உடலின் தற்காப்புச் சக்தியை அதாவது எந்த நோய்க்காரணங்களாவது உங்களுக்குள் புகும் போது அதை எதிர்த்து தள்ளுவதற்கான சக்திகள் நம் உடலில் உள்ளன. அந்த எதிர்ப்புச் சக்தியை எயிட்ஸ் அழித்து விடுகிறது.

**உலகமே இன்று அஞ்சி நடுநடுங்கும் எயிட்ஸ் நோய் பற்றிய கட்டுரை இது. எயிட்ஸ் நோய்க்கு மருந்து கிடையாது. ஆனால், இந்நோய் நம்மை பற்றாமல் தடுக்க முடியும். அந்த வழிவகைகளைப்பற்றியும் எயிட்ஸ் நோய் பற்றிய மற்ற விவரங்களையும் தெளிவாக எடுத்துச் சொல்கிறது இக்கட்டுரை.**

### பாதுகாப்பற்ற வீட்டில் திருடன் நுழையத்தானே செய்வான்!

பாதுகாப்பற்ற வீட்டில் திருடர்கள் புகுந்து விடுவதுபோல் பல நோய்கள் நம் உடலில் தாக்குதலை ஆரம்பிக்கின்றன.

இந்த நோய்க்கிருமி மனிதனது கவனக் குறைவாலும், அவன் ஒழுக்கமற்ற வாழ்க்கை வாழ்வதாலும்தான் பரவுகிறது.

இந்த நோய் ஆண், பெண், குழந்தை என்று யாரையும் தாக்க வல்லது.

நோய் ஏற்பட்டுவிட்டால்
இன்று
அதற்கு சிகிச்சை கிடையாது என்பதை மக்கள் நன்றாகப்புரிந்து கொள்ள வேண்டும்.

''நோய் வந்து விடாமல் தடுக்க வேண்டும்'' என்பதுதான் மக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

நோய்வரும் முறைகள், நோயின் தாக்குதல் வராமல் தடுக்கும் வழிகள் ஆகிய அனைத்தும் இக்கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ளது.

எயிட்ஸ் என்ற சொல் எதை விளக்குகிறது?

### ஆங்கிலச் சொற்களின் முதல் எழுத்து குறுக்கம்

எயிட்ஸ் என்ற சொல் நான்கு ஆங்கில சொற்களின் முதல் எழுத்துக்களின் சேர்க்கை.

ACQUIRED – [A] – ஒரு மனிதனிடமிருந்து மற்றொருவர் பெற்றுக்கொள்வது
IMMUNE – [I] – உடலின் எதிர்ப்புச் சக்தி
DEFECIENCY – [D] – குறைந்து விடுதல்
SYNDROME – [S] – பல நோய்களின் கூட்டுத் தொகுப்பு





### எந்தக் கிருமி இந்த நோய்க்குக் காரணம்

HIV என்பது அந்த அதி நுண்ணுயிரின் (VIRUS) பெயர். அதாவது

HUMAN – [H] – மனிதனது

IMMUNO – [I] – எதிர்ப்புச் சக்தியைக் குறைக்கும்

VIRUS – [V] – அதி நுண்ணுயிரி

இந்தக் கிருமியே எயிட்ஸ்நோய்க்குக் காரணமாகும்.

ஒரு மனிதனது உடலுக்குள் இது புகுந்து விட்டால் அவனது பாதுகாப்பு சக்தி முழுவதும் சிறிது சிறிதாக அழிந்துவிடுகிறது.

உடலைப் பாதுகாக்கும் பணி இரத்தத்தில் உள்ள வெள்ளணுக்களுக்கு ஒதுக்கப் பட்டிருக்கிறது.

நோய்க்கிருமிகள் உடலுக்குள் புகுந்தால் இந்த வெள்ளணுக்கள் இரண்டு முறைகளால் தன் எதிர்ப்பைத் தெரிவித்துச் செயல்பட்டு, அந்தக் கிருமியினைக் கொல்கின்றது.

1. தானே முன்னின்று கிருமியை ஆக்ரமித்து அழிக்கின்றது (இதுதான் சிறந்த பணி)

2. வீரியமான சில திரவங்களைச் சுரந்து அதன் மூலம் கிருமிகளை அழிக்கின்றது.

### வெள்ளை அணுக்களைத் தாக்கி அழிக்கிறது எச்ஐவி

எயிட்ஸ் வைரஸ் உடலினுள் புகுந்தவுடன் நேரடியாக இந்த வெள்ளை அணுக்களைத் தாக்கி அவற்றைச் செயலற்றுப் போகச் செய்த பின்னர் அழித்தும் விடுகின்றன.

இந்த அழிக்கும் பணி பல மாதங்கள், ஏன் பல ஆண்டுகளாகக் கூட உடலுக்குள் நடந்து கொண்டிருக்கும். ஆனால் இது நமக்குத் தெரியாது. உடலிலும் இது நடந்து கொண்டிருப்பதற்கான அறிகுறிகளும் வெளித் தோன்றாது. ஆனால், அழிவு வேலை ஓரளவு வெற்றிகரமாக முடிந்தவுடன் கிருமி உள்ளே புகுந்து பெருகிவிட்ட பிறகு மனிதனின் உடல் எந்தச் சின்ன நோய் கூட தாக்கும் அளவிற்கு வலுவிழக்கிறது. தாக்கிய நோயை எதிர்த்துப் போராட அவன் உடலின் ''பாதுகாப்புத்துறை'' அழிக்கப்பட்டுவிட்டதால் அவனை இப்போது



- ▲ காச நோய்
- ▲ புற்று நோய்
- ▲ மூளைக் காய்ச்சல்
- ▲ கட்டுப்படாத வயிற்றுப்போக்கு

என்று எந்த நோயும் தாக்கி உட்புகுந்து வளர்ந்து சில மாதங்களிலோ, சில நாட்களிலோ அவனை அழித்துவிடும்.

### தனிப்படுத்தி சொல்லுமளவு அறிகுறிகள் எயிட்ஸ் நோய்க்கு ஏதும் இல்லை

மஞ்சட்காமாலை என்றால் கண்களிலே மஞ்சள் நிறம் தெரியும். காசநோய் என்றால் ஓயாமல் இருமல் இருக்கும். டைபாய்டு என்றால் தொடர்ந்து காய்ச்சல் அடிக்கும். மலேரியா ஜுரம் என்றால் குளிர்க் காய்ச்சலும் நடுக்கமும் இருக்கும் என்பதைப்போல,

எயிட்ஸ் என்ற நோய்க்கு தனிப்படுத்திச் சொல்லுகின்ற அளவுக்கு அறிகுறிகள் கிடையாது.

### எயிட்ஸ் நோய் தாக்கியதைப் பின் எப்படித்தான் தெரிந்து கொள்வது?

பதுங்கிப் பதுங்கி ஒருவன் வருகிறான் என்றால் ஒன்று திருட அல்லது ஒளிவதற்கு வருவான் என்று நாமாகப் புரிந்து கொள்வதைப்போல கீழ்க்கண்ட சில நோய் அறிகுறிகள் ஏற்படும் போது, இரத்தத்தில் கிருமி நுழைந்ததற்கான அடையாளம் தெரிகிறது என்று பரிசோதித்துப் பார்த்துக் கொள்ளலாம்.

பல நாட்களுக்குத் தொடர்ந்து காய்ச்சல், பல நாட்களுக்குத் தொடர்ந்து வயிற்றுப் போக்கு, தொடர்ந்து வரும் களைப்பு, மயக்கம், திடீரென்று எடைகுறைதல், குறையாத இருமல், வாய்ப்புண், நிணநீர் கழலைகளின்




உருப்பெருக்கு மேற்கூறிய நோய் வெளிப்பாடுகள் சிகிச்சைக்குக் கட்டுப்பட வில்லையென்றால் கிருமிக்கான இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

**எயிட்ஸ்நோய்க்கிருமி**
**பரவும் வகை அறிந்துகொள்வீர்**

1. உடலுறவின் மூலம்

2. சுத்தம் செய்யப்படாத ஊசிகளின் மூலம்

3. சோதனை செய்யப்படாத ஹெச்.ஐ.வி. கிருமியுள்ள இரத்தம் ஏற்றுதல் மூலம்

4. இக்கிருமி தாக்கப்பட்டுள்ள தாய் மூலம் குழந்தைக்கு

**பாதுகாப்பற்ற உடல் உறவால்**
**பல்கிப்பெருகுகிறது எயிட்ஸ் நோய்**

எயிட்ஸ் நோய்க்கிருமி வைரஸ், உடலில் இரத்தம். ஆண்விந்து, நீர் பெண் உறுப்பு திரவம் ஆகிய இடங்களில்தான் வாழ்கின்றது. எனவே, உடலுறவின் போது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு (ஆணிடமிருந்து பெண்ணுக்கோ அல்லது பெண்ணிடமிருந்து ஆணுக்கோ) பரவுகிறது.

ஒரு ஆண் பலருடன் உறவு கொள்ளும் போது இந்தக் கிருமி அவன் உடலுக்குள் புகுவதற்கு வாய்ப்பு அதிகமாகிறது.

நம் முன்னோர்கள் கூறிய அறிவுரையாகிய ''ஒருவனுக்கு ஒருத்தி'' என்பதை நாம் கடைப்பிடிப்பது நல்லது.

ஒரு பாலர் உடலுறவு கொள்வது என்ற முறையிலும் எயிட்ஸ் கிருமி பரவுதற்கு வாய்ப்புள்ளது.

**எயிட்ஸ் நோய் வராமல் தடுக்க**
**வழிமுறைகள் என்னென்ன?**

திருமணத்திற்கு முன்னே ஒரு ஆண் வேறு எந்தப் பெண்ணோடும் உடலுறவு கொள்ளக் கூடாது (நாளை மணக்கப் போகும் மனைவி தான் உங்கள் சந்ததியைப் பெற்றுத்தரப் போகிறாள். அவற்றின் இரத்தம் சுத்தமாக இருக்க வேண்டுமானால் உங்கள் பழக்கங்கள் ஒழுக்கமாக இருக்க வேண்டும். அப்போதுதான் உங்கள் இரத்தம் தூய்மையாக இருக்கும்.)

திருமணத்திற்குப் பிறகும் கணவன், மனைவி ஒருத்தியோடு மட்டும் உடலுறவு கொள்வது மிகவும் அவசியம்.

சுத்தம் செய்யப்படாத ஊசிகளின் மூலமும், சோதனை செய்யப்படாத இரத்தத்தின் மூலமும்





யிட்ஸ் கிருமி பரவ வாய்ப்புள்ளது. யிட்ஸ்நோய்த் தாக்கியுள்ள ஒருவர் உடலில் செலுத்திய ஊசியை சரியாக சுத்தம் செய்யா பிட்டால் அந்த ஊசிமுனையில் தங்கியுள்ள ஒரு சிறிய சொட்டு இரத்தத்திலுள்ள கிருமி மற்றொருவருக்கு ஊசி போடும் போது அவர் உடலுக்குள் சென்று விடுவதற்கு வாய்ப்புள்ளது. ஊசிகளை நன்கு கழுவி 30 நிமிடங்கள் கொதிக்க வைப்பதன் மூலம் ஒன்றிரண்டு கிருமிகள் இருந்தால் கூட அவை கொதிக்கும் சூட்டினால் அழிக்கப்படுகின்றன. அல்லது ஒரு முறை மட்டும் உபயோகிக்கும் ஊசிகளைப்பயன் படுத்தல் நல்லது.

இரத்தம் ஒருவர் உடலுக்குள் செலுத்தப் படுவதற்கு முன்னர் அதில் ''பல நோய்க் கிருமிகள்'' இருக்கின்றனவா என்று பரிசோதிக் கப்படுகிறது. அந்த சோதனையில் எயிட்ஸ் கிருமி சோதனையும் ஒன்று. இது மிகவும் முக்கியம். எவ்வளவு அவசர நிலையாக இருந் தாலும் கூட கிருமிகள் இல்லா இரத்தமா என்று சோதனை செய்த பிறகுதான் கொடுக்க வேண்டும்.

**தவறு செய்வது தாயோ தந்தையோ!**
**தண்டனைபெறுவது அப்பாவி சிசுவா?**

இது அனைத்தையும் காட்டிலும் கொடுமை. தாய் தந்தையரின் தவறான நடத்தையினால் ஒன்றுமறியாத சிசு தண்டனை பெறுகிறது. கருவுற்ற தாயின் இரத்தத்தில் கிருமி இருந்தால், அது குழந்தையின் உடலுக்குள் புகுந்துவிடும். (தாயின் இரத்தத்தின் மூலம் உணவுச் சத்துக் களைப் பெறும் குழந்தை அதோடு சேர்ந்து நோய்க்கிருமிகளையும் பெற்றுக் கொள்கிறது).

**உடலுக்குள் புகுந்த கிருமிகள்**
**பாதிப்பு ஏற்படுத்துவது எப்போது?**

நோய்த் தாக்குதல் ஆரம்பிப்பதற்கு 10 ஆண்டுகளுக்கு மேல் கூட ஆகும்.

நோயாளி,

- இளைத்து
- வெளுத்து
- வலிமை குன்றி
- பொலிவு குன்றி

பலவீனமாகி இறந்து போகிறார்.

**தடுத்து நிறுத்தி வெற்றி காண**
**தக்க வழிகள் இதோ**

நல்ல பழக்க வழக்கங்களே நம்மை இந்த ஆட்கொல்லி நோய் அணுகாது காக்க வல்லமை




உடையது ஆகும். ஒழுக்கமான வாழ்வே நம்மை எயிட்ஸ் நோய் அண்டாத படி காக்கும்.

கணவன் அல்லது மனைவி அந்நியரோடு உறவு கொள்ளுதல் அறவே நிறுத்திவிட வேண்டும்.

**எயிட்ஸைத் தடுப்பதில்**
**நிரோத்தின் பயன் என்ன?**

நிரோத் என்ற ஆணுறையைக் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு மட்டுமே பரிந்துரை செய்து



வந்த மருத்துவத்துறை இன்று எயிட்ஸ் நோயிலிருந்து மனிதனைப் பாதுகாப்பதற்காக நிரோத் என்ற ஆணுறையைப் பரிந்துரைக்கிறது.

எனவே அன்று குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மிகவும் பயன்பட்ட நிரோத் என்ற ஆணுறை இன்று எயிட்ஸ் நோய்க் கட்டுப்பாட்டுக்கும் பயன்படுகிறது.

ஆண்விந்து நீரிலோ பெண் குறிநீரிலோ எயிட்ஸ் நோய்க் கிருமிகள் கலந்திருக்குமானால் நிரோத் என்ற ஆணுறையினால் கலப்பதிலிருந்து தடுக்கப்படுகிறது.

**அறவே கைவிடவேண்டிய**
**வேறு வேறு பழக்கங்கள்**

ஒருவர் உபயோகித்த பிளேடை உபயோகிக்கக்கூடாது. ஒருவர் உபயோகித்த பிரஷ்ஷை பல் துலக்குவதற்காக பயன்படுத்தக்கூடாது.

ஹெச்.ஐ.வி. இரத்தத்தில் இருப்பவர்களாக இருந்தால்,பல்தேய்க்கும்போது ஈறுகளின் ரத்தம் கசிந்திருந்தால் அவர்கள் உபயோகித்த பிரஷ்சில் ஒருவேளை கிருமிகள் ஒட்டிக் கொண்டிருக்கலாம். வேறொருவர் அதே பிரஷ்ஷைப் பயன்படுத்தும்போது அந்த பிரஷ்ஷிலிருந்து இவருக்கு வருவதற்கு வாய்ப்பு உள்ளதல்லவா?

போதை ஊசி போட்டுக் கொள்ளும் பழக்கம் உள்ளவர்கள் ஒருவர் பயன்படுத்திய ஊசியை மற்றவர் பயன்படுத்துவார்கள். அது தவிர்க்கப்பட வேண்டும்.

எயிட்ஸ் நோய் தற்செயலாகத் தொடுவதாலும் பழகுவதாலும் பரவக்கூடிய வாய்ப்புள்ள ஜலதோஷம், தட்டம்மை போன்ற தொற்று நோய்களைப்போன்றது அல்ல. இது தண்ணீராலும், உணவாலும், காற்றினாலும் பரவக்கூடியது அல்ல.

எயிட்ஸ் யாரை வேண்டுமானாலும் தாக்கலாம்.

**எயிட்ஸ் நோய் எப்படிப் பரவாது**
**என்பதையும் சற்றே அறிக!**

செல்லப் பிராணிகள் மூலம் எயிட்ஸ் பரவாது.

கொசுக்கள் மூலம் எயிட்ஸ் பரவாது.

இரத்த தானம் செய்வதால் எய்ட்ஸ் நோய் ஒருவரைத் தாக்காது.

எயிட்ஸ் கிருமி இரத்தத்தில் நுழைந்து விட்டிருக்கும் மனிதர்கள் கிருமி நுழைந்து சில





ஆண்டுகள் வரை ஆராக்கியமானவர்களாகக் காட்சியளிக்கின்றனர்.8 லிருந்து 10 ஆண்டுகளில் நோயின் தீவிர அறிகுறிகள் வெளிப்படுகின்றன.

உடலுக்கு வெளியே இந்த வைரஸ் அதிக நேரம் உயிர் வாழ்வதில்லை.

வெப்பம், வறட்சி, சோப்புநீர், கிருமிநாசினிகள் ஆகியவை இந்த வைரஸை அதிகம் அழிக்க வல்லவை.

எயிட்ஸ் பரம்பரை நோயல்ல. ஆனால் தாய்க்கு இருந்தால் கருவிலுள்ள குழந்தைக்கு நோய் தாக்க வாய்ப்பு உள்ளது.

இரத்தத்தில் ஹெச்.ஐ.வி. கிருமி இல்லாதவர் இரத்ததானம் செய்வதால், அவருக்கோ, இரத்தம் பெறுபவருக்கோ நோய் தாக்க வாய்ப்பில்லை.

எயிட்ஸ் கிருமி இரத்தத்தில் உள்ளதை "இரத்தசோதனை" மூலம் தெரிந்து கொள்ளலாம்.

எயிட்ஸ்நோய் தாக்கப்பட்டவர்களை சமூகம் நண்பர்களாகவே கருத வேண்டும். அவர்கள்பால் கருணையும், அன்பும் கொள்ள வேண்டும். அவர்கள் விலக்கப்பட வேண்டியவர்கள் அல்ல. அதனால் இரத்த தானம்செய்யத் தயங்காதீர்கள்.

**அட்டைப்பட விளக்கம்**

முதல் அட்டை:

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் - அட்லாண்டாவில் நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளச் செல்லும் இந்திய ஒலிம்பிக் ஹாக்கி அணியினர் சந்திப்பு (28.6.96).

இரண்டாம் அட்டை:

ஊட்டச்சத்து வழங்கும் பயறுவகைப் பயிர்கள் (கட்டுரை 40-ஆம் பக்கம்).

கடைசிப்பக்க அட்டை:

பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் (15.7.1903) நினைவாக.

**தமிழரசு வாசகர்களே!**
**தமிழகப் பொதுமக்களே!**

இன்னும்தீர்க்கப்படவில்லையே என்று நீங்கள் ஏங்கி நிற்கும் பிரச்சினை ஏதும் உங்கள் பகுதியில் உள்ளதா? உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை, நிறைவேறாமல் கிடக்கும் நீண்ட காலக் கோரிக்கை இப்படி எதுவாயினும் உடனே "தமிழரசு" இதழுக்கு எழுதுங்கள். அப்பிரச்சினை தொடர்பான துறையின் உயர் அலுவலர்களிடமிருந்து பதில் பெற்று 'தமிழரசு' இதழில் வெளியிடப்படும்.

இப்பகுதிக்கு நீங்கள் எழுதிட நியந்தனை ஏதுமில்லை. வேண்டுகோள் மட்டுமே உண்டு. உங்கள் கோரிக்கை பொதுநல நோக்கோடு அமையவேண்டும்என்பதே அது.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி:

**"எங்கள் ஊர்ப் பிரச்சினை"**
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை,
சென்னை - 600 002.



மாணவர் பக்கம்

# கேள்வியும் பதிலும்

ஒரு ஊரில் ஓர் ஆள் இருந்தான். அவன் காலையிலிருந்து கடும் குளிரில் நடந்த களைப்பினால், மாலையில் ஒரு வீட்டைக் கண்டதும், அதன் கதவைத் தட்டினான். வீட்டுக்காரன் கதவைத் திறந்தான். அவனைப்பார்த்து, பிரயாணி, ''காலையிலிருந்து நடந்ததால் மிகவும் களைப்பாக இருக்கிறது. அதோடு குளிரும் மிகவும் அதிகமாக இருக்கிறது. இனி தெருவில் இருப்பது என்பதும் முடியாது. ஆகவே இன்று இரவு மாத்திரம் தங்குவதற்கு இடமும் கொடுத்து, சாப்பாடும் போட்டால் நீங்கள் கேட்கும் பணத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்'' என்றான்.

அதற்கு வீட்டுக்காரன், ''உனக்கு சாப்பாடு போட்டு படுக்க இடம் கொடுப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் எனக்குப் பணம் வேண்டாம். அதற்குப் பதில் நான் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் நீ சரியான பதில் சொல்ல வேண்டும். தப்பாக பதில் சொன்னாயோ கன்னத்தில் ஓர் அறை அறைவேன்'' என்றான்.

வேறு வழியின்றி பிரயாணி இதற்கு ஒப்புக்கொண்டான்.



வீட்டுக்காரன் பிரயாணிக்கு வயிறு நிறையச் சாப்பாடு போட்டான்; தானும் வயிறு நிறையச் சாப்பிட்டான். பிறகு இருவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கையில், வீட்டுக்காரன், ஒரு மூலையில் படுத்திருந்த ஒரு பூனையைச் சுட்டிக் காட்டி, ''அது என்ன?'' என்று கேட்டான். ''அது பூனை'' என்றான் பிரயாணி. உடனே வீட்டுக்காரன் பிரயாணியின் கன்னத்தில் ஒரு அறைந்து, ''உன் பதில் தப்பு. அது பூனையல்ல, வெண்மை'' என்றான்.








சிறிது நேரத்திற்கெல்லாம் வீட்டுக்காரன் கூஜாவில் இருந்த தண்ணீரைக் காண்பித்து, ''அது என்ன?'' என்று கேட்டான்.

''தண்ணீர்'' என்று பதிலளித்தான் பிரயாணி.

''உடனே வீட்டுக்காரன் பிரயாணியின் கன்னத்தில் ஒரு அறை அறைந்து, ''உன் பதில் தப்பு, அது தண்ணீர் இல்லை, சுத்தம்'' என்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வீட்டுக்காரன், கணப்பு அடுப்பில் எரிந்து கொண்டிருந்த நெருப்பைச் சுட்டிக் காட்டி, ''அது என்ன?'' என்று கேட்டான்.

''நெருப்பு'' என்றான் பிரயாணி. உடனே வீட்டுக்காரன் பிரயாணியின் கன்னத்தில் மறுபடியும் ஒரு அறை அறைந்து, ''உன் பதில் தப்பு, அது நெருப்பு அல்ல, சுகம்'' என்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வீட்டுக்காரன் பரணைச் சுட்டிக் காட்டி, ''அது என்ன?'' என்று கேட்டான்.

''பரண்'' என்றான் பிரயாணி. உடனே வீட்டுக்காரன் கன்னத்தில் மீண்டும் ஒரு அறை அறைந்து, ''உன் பதில் தப்பு, அது உயரம்'' என்றான்.



பாவம், பிரயாணிக்கு வலி பொறுக்க முடியவில்லை. ஆகவே வீட்டுக்காரனைப் பார்த்து, ''என் மூளை சற்று மழுங்கிவிட்டது என்று நினைக்கிறேன். அதனால்தான் உன் கேள்விக்கு என் பதில்கள் எல்லாம் தப்பாகவே போய் விட்டன. நான் சற்று வெளியில் சென்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு வருகிறேன், அதற்குப் பிறகாவது நீ கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்ல முடிகிறதா என்று பார்க்கிறேன்'' என்றான்.

வீட்டுக்காரன் சரியென்று இசையவே, பிரயாணி வெளியில் சென்றான். அவன் வெளியே வந்ததும் பூனையும் வெளியே வந்தது.

வெகு கோபமாக இருந்த பிரயாணி பூனையைப்பிடித்து, அதன் வாலில் சில சுள்ளிகளைக் கட்டி அதில் நெருப்பு வைத்தான். நெருப்பைக் கண்டு பயந்த பூனை பரண்மீது தாவிற்று.

உடனே பிரயாணி உள்ளே வந்து, வீட்டுக்காரனைப் பார்த்து,'வெண்மை சுகத்தை எடுத்துக்கொண்டு உயரத்திற்குப் போயிருக்கிறது. ஆகவே உடனே சுத்தத்தைக் கொண்டு சுகத்தை அகற்று'' என்றான்.

வீட்டுக்காரன் ஒன்றும் புரியாமல் திகைத்தான். ''என்ன சொல்லிக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டான்.

அதற்குப் பிரயாணி அவன் கன்னத்தில் ஒரு அறை அறைந்து, ''இவ்வளவுதானா உன் புத்திசாலித்தனம்! உன் வீடு தீப்பற்றிக் கொண்டு எரிகிறது'' என்று சொல்லி விட்டு மறைந்தான்.



இது ஒரு யூகோஸ்லாவியக் கதை.



# வாசகர் இதயம்

புதிய ஆட்சி மலர்ந்தாலும் கூட 'தமிழரசு' முழுவதும் முதலமைச்சர் படங்களாகத்தான் இருக்கும் என்று ஒரு நண்பரிடம் நான் பந்தயம் கட்டியிருந்தேன். தேர்தல் முடிவுகள் இதழ் (16.5.96) வந்ததுமே உங்களால் எனக்கு ரூ. 100 நஷ்டம் போங்கள்.

**- கு. குணசேகரன்**
ஆனைக்குப்பம், திருவாரூர்

கலைஞரின் கவிதை, குறளோவியம் போன்றவை மட்டுமன்றி புதுமைப்பித்தன் சிறுகதை முல்லாவின் கதை இயற்கை அன்னையின் வேடிக்கை எனப் படிப்பதற்காகத், தமிழரசில் ஏராளமான பக்கங்கள் இருந்தன; உள்ளபடியே அசத்திவிட்டீர்கள்.

**- க. விஜி**
திருவொற்றியூர்

ஆசிரியர் பக்கத்தில் சொல்லப்படும் செய்திகள் மட்டுமல்ல; புதுமை பூத்த நடையே அற்புதம், தொடரட்டும் உங்கள் தமிழ்ப்பணி.

**- ச. செந்தில்**
செங்கற்பட்டு

தமிழரசில் வரும் மருத்துவக் கட்டுரைகள், அறிவியல் செய்திகள் எல்லாம் மிகவும் பயனுள்ளவைகளாக இருக்கின்றன. எங்கள் குடும்பத்தின் நல்வாழ்த்துக்கள்.

**- கே.எஸ். வெள்ளியங்கிரி**
கோயம்புத்தூர்

வெறும் புகைப்படங்களைப் போட்டே பக்கத்தை ஒப்பேத்தாமல் பயனுள்ள விஷயங்களின் புதுமைக் களஞ்சியமாகத் திகழ்கிறது தமிழரசு. ஆட்சி மட்டுமல்ல; தமிழரசும் மாறியிருப்பது கண்டு உள்ளம் பூரித்தோம்.

**- மு. பிச்சையா, சுந்தர்**
திருநெல்வேலி

அந்தக் காலத்தில் தமிழரசு நடத்திய வெண்பாப் போட்டிகளிலெல்லாம் கலந்துகொண்டவன் நான்; நீண்ட காலத்திற்குப் பிறகு இப்போது கவிதைப்போட்டி தொடங்கியிருக்கிறீர்கள். மகிழ்ச்சி.

**- கவிஞர்.பெ. பிரபாகரன்**
சென்னை - 78

கலீல் கிப்ரான் கவிதையின் தமிழாக்கம் என் மனதைக் கொள்ளை கொண்டது; நலிந்து வரும் புதுக்கவிதைக்கு நலமும் பலமும் தரும் வகையில் உள்ள உங்கள் தமிழ்ப்பணி வெல்க.

**- அழகாசன் - அம்பிகா**
மதுரை





# பாரதியார் இல்லத்தில் நூலகம்

சென்னை திருவல்லிக் கேணியில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லம் உள்ளது. அரசுடைமை யாக்கப்பட்ட இந்த நினைவு இல்லத்தில் பாரதியார் புகைப் படக் கண்காட்சி மட்டுமே இடம்பெற் றுள்ளது. மகாகவி யின் சிறப்பை மக்கள் மனதில் மேலும் நிலைநிறுத்தும் வகை யில் பாரதி நூலகம் ஒன்றை அமைத்திடு மாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர் கள் ஆணையிட்டு உள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர் களின் ஆணைக்கேற்ப இந்நூலகத்தில் பாரதி யாரின் அனைத்து வகை படைப்புகள், பாரதியார் பற்றி, அவ ரின் நூல்கள் பற்றி பெருமக்கள் எழுதிய அனைத்து நூல்கள், பாரதியார் பற்றிய பிறமொழி நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவை இடம் பெற உள்ளன. மேலும், பாரதியார் காலத்திய பழந்தமிழ் நூல்களும், நாளிதழ்களும், இங்கு லேமினேட் செய்து பார்வைக்கு வைக்கப் படும். நூலகம் சிறப்பாக அமைய வும், நூலகத்தைப் பார்வையிடும் மக்களுக்கு தகுந்த வசதிகள் செய்து தரவும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு செய்தி, விளம்பரத் துறை அமைச்சர் திரு வ. முல்லை வேந்தன் அவர்கள், ஜூலை 8ஆம் நாள் மகாகவி பாரதியார் நினைவு



இல்லத்தைப்பார்வையிட்டார் நினைவு இல்ல வளாகத்திலுள்ள திறந்த வெளி அரங்கில் பள்ளிக் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் இலக்கியக் கூட்டங்கள் நடத்தும் வகையில் அனைத்து விதமான வசதிகள் ஏற்படுத்தவும் பாரதியார் தொடர்புடைய இசைப் பாடல்கள் ஒலிபரப்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், வாரந் தோறும் விடுமுறை நாட்களில் பள்ளிக் குழந்தைகளை வைத்து பாரதியார் பாடல்களை மையமாக வைத்து கலைநிகழ்ச்சிகளைத் தயாரிக்கவும், பாரதி யார் பற்றிய செய்திப் படத்தைப் பார்வை யாளர்களுக்குத்திரை யிட்டுக் காட்டு மாறும் குழந்தை களுக்கு நாட்டுப்பற்று ஊட்டும் வகையில் நினைவில்லத்தை முழுமையாகப் பயன்படுத்துமாறும் மாண்புமிகு அமைச் சர் அவர்கள் அறி வுரை வழங்கினார். மேலும் இந்நினை வில்லத்தில் குடிநீர் வசதி சரிவர அமைந் திட, ஏற்கனவே அங்கிருக்கும் பாழ டைந்த கிணற்றைத் தூர் எடுத்து சுத்தப் படுத்தவும் இந்நினை வில்ல வளாகத்தி லுள்ள திறந்த வெளி மேடையில் நிகழ்ச்சி கள் நடத்த ஏதுவாக பிளாஸ்டிக் இழை யிலான மேற்கூறை அமைக்கவும் பொதுப் பணித்துறை மூலம் நடவடிக்கை மேற் கொள்ளுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

## முதல்வர் ஆணை

# இரக்கம்



மறியே!
செம் மறியே!

மேயப் போகிறாயா?
போ!

அதோ!
அந்த –
மலையடி வாரத்தில்
நல்ல மூலிகைகள்
மலிந்து கிடக்கின்றன;

அவைகளை மேய்!

தப்பித் தவறி
விஷப் பூண்டுகளில்
வாயை வைத்து விடாதே!

உனக்கு ஒன்று
நேர்ந்து விட்டால்
என் உள்ளம்
குலுங்கிக் குலுங்கிக்
குழந்தை போல்
அழும்!

ரொம்பவும்
துள்ளாதே!
நிதானமாகப் போ!

உன்
முட்டி எலும்புகள்
முறிந்து விட்டால்
என்
கண்களை
முட்டிக் கொண்டு
கண்ணீர் வரும்!









புத்தன் கூட
உன்னைக்
கையில்தான் ஏந்தினான்
நான் கண்ணில்
ஏந்திக்கொண்டிருக்கிறேன்!

எனவே
உன்னைத்தேடும்படி
வைக்காதே!

இருட்டியதும்
நீயாகவே வீடு
திரும்பி விடு!

திண்ணையில்
நல்ல
காற்று வரும்;

முதுகரிப்புக்கு
இதமாகத் தூண்களும்
இருக்கின்றன

விடியும் வரையில்
அரைத்தூக்கத்தில்
ஆனந்தமாக
அசை போடு!

விடிந்த
பிறகு தான்

பக்ரீத்!



-கவிஞர் வாலி அவர்கள் எழுதிய
'பொய்க்கால் குதிரை' எனும்
நூலிலிருந்து.

## தரிசு நிலம் மேம்படுத்த தக்க ஆலோசனை வழங்கும் நிபுணர் குழு

தமிழகத்தில் உள்ள தரிசு நிலங்களை மேம்படுத்திப் பயன்படுநிலமாக மாற்ற, நீர்ப்பிரி முகடு மேலாண்மை (Watershed Management) வறுமை ஒழிப்புத்திட்டம் போன்றவைகளை ஆதாரமாகக் கொண்டு ஏழைமக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தத் தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது. இதன் முதல்கட்டமாக, தமிழ்நாடு அரசுக்கு ஆலோசனை வழங்க ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட குழுவை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அமைத்துள்ளார்.

இந்திராகாந்தி தேசிய திறந்த வெளி பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர். வா.செ. குழந்தைசாமி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இக்குழுவில், விவசாய அறிவியல் அறிஞர் எம்.எஸ். சுவாமிநாதன், பொருளாதார நிபுணர் திரு.எஸ்.குகன், எம்.ஐ.ஐடி.எஸ்ஸைச் சேர்ந்த பேராசிரியர் வைத்தியநாதன், பெரியகுளம் வேளாண்மைக் கல்லூரி முதல்வர். திரு. சாம்பமூர்த்தி வேளாண்மைப் பல்கலைக் கழகப் பேராசிரியை திருமதி ராணி பெருமாள், முன்னாள் தலைமைப் பொறியாளர் திரு. மோகனகிருஷ்ணன், தொலைதூர உணர்வு மைய இயக்குநர் திரு. நடராசன், அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. சி.ஏ. பண்டரிகாந்தன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

### முதல்நிலை மாணவர் மேற்படிப்புச் செலவு தமிழக அரசு ஏற்கிறது

தமிழ்நாட்டிலேயே 10 ஆம் வகுப்பு மற்றும் +2 தேர்வுகளில் முதல் மூன்றுநிலைகளில் வெற்றிபெறும் மாணவ, மாணவிகளின் மேற்படிப்பிற்காக ஆகும் செலவை தமிழ்நாடு அரசே ஏற்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

# செய்திச்சரம்

ஒலிம்பிக் போட்டியில் இந்திய ஆக்கி அணி மோதும் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ஜுலை 20 – | இந்தியா | - அர்ஜெண்டினா |
| ஜுலை 22 – | இந்தியா | – ஜெர்மனி |
| ஜுலை 24 – | இந்தியா | – அமெரிக்கா |
| ஜுலை 26 – | இந்தியா | – பாகிஸ்தான் |
| ஜுலை 28 – | இந்தியா | – ஸ்பெயின் |
| ஜுலை 31 – | இந்தியா | – அரை இறுதி போட்டிகள் |
| ஆகஸ்டு 2 – | | இறுதிப்போட்டி |

### வளமான வாழ்விற்கு வைக்கோல் காளான்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வைக்கோல் காளான் உற்பத்தியில் பருத்திக் கழிவுகள், கரும்புச்சக்கை, வேப்பிலை, தவிடு கடலைக்கூடு மற்றும் கோழியின் கழிவு போன்றவற்றைச் சுத்தப்படுத்தி வைக்கோல் கூளத்துடன் கலப்பதன் மூலம் காளான் மகசூலை அதிகரிக்க முடியும் என ஆய்வு செய்து வெளியிட்டுள்ளார்கள். வைக்கோல் கூளத்துடன் வேப்பிலையைக் கலப்பதன் மூலம் மற்ற பொருள்களைவிட மகசூல் அதிகம் கிடைப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சிப்பிக்காளான் வளர்க்க இந்த முறை ஏற்றதாகவும் இதனால் நல்ல பலன் கிடைக்கிறது என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.





### ஒலிம்பிக் போட்டியாளர்கள் முதல்வருடன் சந்திப்பு

அட்லாண்டாவில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்ட இந்திய தடகள வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் 2.7.1996 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்தார்கள். தமிழக முதலமைச்சர் அவர்கள் தடகள வீரர்களுக்குப்பரிசுகள் வழங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள். தமிழ்நாட்டில்தடகளபந்தயத்திற்கான இறுதித்தேர்வு செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# செய்திச்சரம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை
✢ திரு. பகதூர் பிரசாத் ✢ திருமதி பி.டி. உஷா ✢ சைனி வில்சன்
✢ ரோசாகுட்டி ✢ ஜீனியா அயர்டோன் ✢ பீனா மோள்
✢ ஜோதிர்மாய் சிக்தர்
ஆகிய ஒலிம்பிக் போட்டியாளர்கள் தடகள வீரர்கள்
2.7.96 அன்று சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

### தமிழ்நாட்டைச் சேர்ந்த மருத்துவர்களுக்கு பி.சி. ராய் விருது

டாக்டர் பி.சி. ராய் நினைவாக ஒவ்வோராண்டும் ஜுலை - முதல் தேதி மருத்துவர்கள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. பி.சி. ராய் விருதுகளை இந்திய மருத்துவக் கழகம் இந்த ஆண்டு அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று மருத்துவநிபுணர்களுக்கு இந்த மதிப்புக்குரிய விருது கிடைத்தள்ளது. எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகச் சிறப்புப் பேராசிரியரும் புகழ்பெற்ற மகப்பேறு, மகளிர்நோய்ச் சிகிச்சை நிபுணருமான டாக்டர் பழனியப்பன், சென்னை மருத்துவக் கல்லூரியில் நாளமில்லாச் சுரப்பிகள் அறுவைச் சிகிச்சை துறைத்தலைவர் டாக்டர் எஸ். விட்டல், டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மேஜர். டி. ராஜா ஆகியோருக்குத் தாங்கள் மேற்கொண்ட துறைகளில் சிறப்பான பணிபுரிந்தமைக்காக அவர்களைப் பாராட்டி பி.சி.ராய் விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.

## அட்லாண்டா ஒலிம்பிக் போட்டி இந்திய அணி அறிவிப்பு

அட்லாண்டா ஒலிம்பிக் தடகளப் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணிக்கு 6 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்திய மகளிர் தொடரோட்ட (ரிலே) அணியில் ஷைனி வில்சன், ரோசாகுட்டி, ஜோதிர்மாய்சிக்தர், பீனா மோள், பி.டி. உஷா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்திய மகளிர் தொடர் ஓட்ட அணியினரது மிகச்சிறந்த ஓட்டநேரம் 3:34 : 0 வினாடிகளாகும். தொடரோட்டம் தவிர தனிநபர் ஓட்டப் போட்டிகளிலும் இவர்கள் பங்கேற்பர். இதுபற்றி ஒலிம்பிக் போட்டியின் போதுதான் தீர்மானிக்கப் படும்.

ஆடவருக்கான 1500 மீ. ஓட்டத்தில் பகதூர் பிரசாத் கலந்து கொள்கிறார். இவரது மிகச்சிறந்த ஓட்ட நேரம் 3:38:0 வினாடிகளாகும்.

இவர்களைத் தவிர வட்டு எறிதல் போட்டியில் பங்கேற்கும் சக்தி சிங், 400 மீட்டர் ஓட்டத்தில் பங்கேற்கும் பரம்ஜீத் சிங் ஆகிய இருவரது பெயர்களும் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டுள்ளது.

மேற்கண்ட தகவல்களை அகில இந்திய அமெச்சூர் அதெலடிக் சம்மேளனச் செயலர் திரு. லலித் பனோட் தெரிவித்தார்.

# ஊட்டச்சத்து வழங்கும் பயறு வகைப்பயிர்கள்

**சிவசூரியன்,** இ.ஆ.ப.,
வேளாண்மைக் கூடுதல் இயக்குநர், (ப.மே.)

''**பா**ரினுக்கு நல் உணவளிக்க, பயறு வகைகளைச் சாகுபடி செய்வோம்! பயறு வகைகளில் தன்னிறைவு பெறுவோம்! மக்களுக்கு மனநிறைவளிப்போம்!''

பருப்பு இல்லாமல் சாப்பாடா? என்று பட்டி தொட்டிகளிலும் கேட்கும் அளவிற்கு நம் நாட்டின் உணவு முறையில் பருப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது. பருப்பு வகைகள் நம் உணவோடு, வாழ்க்கை முறையோடு ஒன்றிப்போன ஒன்று.



பயறு வகைகள் நம் நாட்டின் உணவுப் பழக்கத்தில், குறிப்பாகத் தமிழ்நாட்டின் உணவு வகைகளுடன் ஒன்றிவிட்ட ஒரு சிறப்புப் பயிர். பயறு வகை சேர்க்கப்படாத உணவுப் பழக்கமே நம் நாட்டில் இல்லை என்று சொல்லலாம். பயறு வகைகள் சேர்க்கப்படாத எந்த உணவும் முழுமை பெற்ற உணவாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. குறிப்பாகச் சைவ உணவுப் பழக்கமுள்ள மக்களுக்கு உணவில் பயறு வகைகள் சேர்ப்பது மிக முக்கியம். இப்பயறு வகைகளின் மூலம்தான் அவர்களின் உடல் நலத்திற்குத் தேவையான புரதச்சத்து கிடைக்கிறது.

சமீப ஆண்டுகளில், பயறு வகைகளின் சாகுபடி பரப்பு, உற்பத்தி, உற்பத்தித்திறன், பயறு உற்பத்தி அதிகரிக்கத் தேவையான தொழில் நுட்பங்கள், பயறு வகைகளின் சிறப்பு ஆகியவைகள் பற்றி சற்று அதிகமாகவே எல்லா நிலையிலும் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகின்றன.

மாநில அரசும், மத்திய அரசும் பயறு வகை உற்பத்தியில் தனிக் கவனம் செலுத்தி, பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

வேளாண்துறை மற்றும் வேளாண் விஞ்ஞானிகளின் கடுமுயற்சி முன்பு எப்போதும் இல்லாத அளவு, சமீப காலமாகப் பயறு சாகுபடியிலும், பயறு சாகுபடி சம்பந்தப்பட்ட தொழில் நுட்பத்திலும் தனி அக்கறை காட்டும் வகையில் நிலை ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

## பயறு வகைகளின் சிறப்பு:

மனித வாழ்க்கைக்குத் தேவையான புரதத்தைத் தருவது பயறு வகைகள். மிகக் குறுகிய காலத்திலேயே அறுவடைக்கு வந்து பலன் தரும் பயிர்களில் பயறு வகைகளும் முக்கியமானதாகும்.





தனிப் பயிராகவும், கலப்புப் பயிராகவும், ஊடுபயிராகவும், நெல் பரப்புகளிலும், மானாவாரியாகவும், இறவையாகவும், நெல் தரிசிலுமாகப் பல வழிகளில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற சிறப்புத் தன்மை கொண்டவை பயறு வகைகள்.

முதல் போகம் சாகுபடி முடிந்து, இரண்டாம் போகம் சாகுபடி ஆரம்பத்திற்கிடையிலுள்ள இடைக்காலத்தை வெற்றிகரமாக, இலாபகரமாகப் பயன்படுத்தும் வகையில் பயறு வகைகளை உழவர் பெருமக்கள் சாகுபடி செய்து, அதிக செலவில்லாமலேயே நல்ல வருவாய் பெறக்கூடிய வாய்ப்பு பயறு வகைகள் சாகுபடி வழியாகத்தான் உண்டு.

> **''அதிக செலவில்லாமலேயே நல்ல வருவாய் பெறக்கூடிய வாய்ப்பு பயறு வகைகள் சாகுபடி வழியாகத்தான் உண்டு''**

## தனிச்சிறப்பு:

மற்ற எல்லா பயிர் சாகுபடியைக் காட்டிலும், பயறு வகைகளுக்குத் தனிச் சிறப்புத் தன்மை ஒன்று உண்டு. மற்ற எந்தப் பயிர்களைச் சாகுபடி செய்தாலும், மண்ணின் சத்துக்கள், குறிப்பாகத் தழைச்சத்து அதிகமாக உறிஞ்சப்படுகிறது. அதனை ஈடுகட்டியும், பயிர்கள் நன்கு வளரவும் அதிகத் தழைச்சத்து உரம் இட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

மாறாக, பயறு வகைகளைச் சாகுபடி செய்யும்போது அதிகத் தழைச்சத்து இடத் தேவையில்லை. அதே சமயத்தில், பயறு வகைகள் சாகுபடி செய்யும் நிலத்தில் மண் வளம் அதிகரிக்க ஏதுவாகிறது. பயறு வகைகளின் வேர் முடிச்சுக்களில் ''டிரசோபியம்'' என்னும் ஒரு பாக்டீரியா உள்ளது. இந்த பாக்டீரியா காற்று மண்டலத்தில் இயற்கையாக உள்ள தழைச் சத்தைத் கிரகித்து, மண்ணிற்குக் கூடுதல் வளம் சேர்க்கும் சிறப்புத் தன்மை கொண்டது.

இப்படி எல்லா வகைகளிலும் சிறப்புத் தன்மை கொண்ட பயறு வகைகள் சாகுபடியில் உழவர் பெருமக்கள் சற்று சிறப்புக் கவனம் செலுத்தி, சாகுபடி செய்தால் அமோகப் பயறு விளைச்சலுடன் அதிக வருவாயும் எளிதில் நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

பயறு சாகுபடியில், மற்ற பயிர்களைப் போல் அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் இருப்பதாலும், பயறு வகைகளின் உணவுச் சிறப்பை முழுமையாகப் புரிந்து கொள்ளாததாலும், பயறு வகை உற்பத்தியில் சற்றுத் தொய்வு ஏற்பட்டுள்ளதாக நினைக்கத் தோன்றுகிறது.

## பயறு சாகுபடி - தற்போதைய நிலை:

தமிழ்நாட்டில் பயறு வகைகளில் சாதாரண (normal) சாகுபடிப் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித் திறன் ஆகியவைகளைப் பார்க்கும்போது, பயறு சாகுபடியில் நாம் இன்னும் முழுக் கவனம் செலுத்தவில்லை என்றே தோன்றுகிறது. பயறு வகைகளின் தற்போதைய உற்பத்தி அளவு, (Maximum possible yield) சாத்தியப்படக்கூடிய முழு உற்பத்தி அளவைக் காட்டிலும் மிகவும் குறைவாகவே உள்ளது என்று தோன்றுகிறது. இதற்கு முக்கியக் காரணம், மற்ற பயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது போல் பயறு வகைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காதது நன்கு விளங்கும்.

## முக்கியக் காரணங்கள்:

◆ பயறு வகைப் பயிர் சாகுபடியில் அவற்றின் முழு உற்பத்தித் திறனை நாம் பெற முடிய வில்லை. அதற்குரிய காரணங் களாவன:-

◆ பயறுவகைப் பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் அவற் றைப் பெரும்பாலும் வளமற்ற நிலங்களில் சாகுபடி செய்வது.

◆ பயறுவகைப் பயிர்கள் சாகுபடியாகும் மொத்தப் பரப்பில் பெரும்பான்மை யாக (80%) மானாவாரியில் சாகுபடியாவது.

◆ தனிப்பயிராகச் சாகுபடி செய்யாமல் பெரும் பாலும் கலப்புப் பயிரா கவோ ஊடுபயிராகவோ சாகுபடி செய்வது.

◆ வேறுபட்ட மண்வகை மற்றும் சாகுபடி அமைப் புக்கு ஏற்ற அமோக விளைச்சல் திறன் கொண்ட இரகங்களைப் பயன்படுத்தாமை.

◆ உள்ளூர் இரகங்களை அதிகமாகப் பயன்படுத்துவது.

◆ நோய் மற்றும் பூச்சித் தாக்குதலைத் தாங்கி வளரக்கூடிய இரகங்கள் இல்லாமை.

◆ சிபாரிசு செய்யப்படும் தொழில் நுட்பங் களை உரிய காலத்தே செயல் படுத்தாமை.

◆ செலவே இல்லாத தொழில் நுட்பங்களைக் கூட முழுமையாகக் கடைப்பிடிக்காமை.

◆ பருவத்தே பயிர் செய் யாதது. களை களைக் கட்டுப் படுத்தாமல் இருப் பது; தேவையான உர உபயோகம் மற்றும் நுண்ணுயிர் கலக்காமல் விதைப்பது.

◆ பயிரில் தோன்றும் பூச்சி, பூசன நோய்களைக் கட்டுப்படுத்த தேவையறிந்து பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்ளாதது.



ஒரு தனி மனிதனுக்குத் தேவையான புரதச் சத்து தொடர்ந்து கிடைக்க, நாள் ஒன்றுக்கு சுமார் 85 கிராம் பயறு வகைகளை உணவுடன் ஒவ் வொருவரும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கணக்கிடப் பட்டுள்ளது. அதன்படி தமிழ் நாட்டிற்கு ஆண்டிற்கு சுமார் 11 இலட்சம் டன் பயறு வகைகள் தேவைப்படுகின்றன.

ஆனால், பயறு வகைச் சாகு படியில் நம்முடைய மெத்தனப் போக்கின் காரணமாக, நமது ஆண்டு பயறு சாகுபடிப் பரப்பு சுமார் 10 இலட்சம் எக்டராகவும், உற்பத்தி சுமார் ஐந்து இலட்சம் டன்னாகவும்தான் உள்ளது. தமிழ் நாட்டின் பயறு உற்பத்தித்திறன் எக்டருக்கு 460 கிலோதான். நமது பயறு வகைத் தேவையை ஈடுகட்ட பிற மாநிலங்களையும், மற்ற நாட்டை யும் எதிர் நோக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளோம்.

எனவே, இவ்வாண்டிலிருந்தாவது, பயறு வகைகள் சாகுபடியில் தனி ஊக்கம் செலுத்தி னால், பயறு உற்பத்தியில் நம் மாநிலம் தன்னிறைவு பெறுவதுடன், மற்ற மாநிலங்





களுக்கும் ஏற்று மதி செய்யும் அளவிற்கு வாய்ப் புள்ளதைச் சமீப பெரு மழை நமக்கு அளித் துள்ளது.

## தென்மேற்குப் பருவ மழையும் ஆடிப்பட்ட பயறு சாகுபடியும்:

தற்போது, தமிழகம் முழுவதும் தென்மேற்குப் பருவமழை, கடந்த சுமார் 100 ஆண்டுகளில் எப்போதும் இல்லாத வகையில் பருவ ஆரம்பத்திலேயே மிக அதிகமான அளவு பெய்துள்ளது.

ஆடிப்பட்டம் ஆரம்பத்தி லேயே இப்படி ஒரு மழை கொட்டோ கொட்டு என்று கொட்டி, பயறு வகைகள் சாகு படிக்கு நல்ல வாய்ப்பளித்தது.

சமீப காலங்களில் இதுவே முதல் வாய்ப்பு என்று சொல்ல லாம். எனவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தும் வகையில், நடப்பு ஆடிப்பட்டத்தில் பயறு வகைகளை மானாவாரியாகப் பயிர் செய்து, குறுகிய காலத்தில், நல்ல மகசூலும், வருவாயும் பெற இதுவே உகந்த தருணம். இந்த வாய்ப்பினை நழுவ விடாமல் உழவர் பெருமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆடிப்பட்டத்தில் உளுந்து, பச்சைப்பயறு, தட்டைப்பயறு, துவரை, மொச்சை போன்ற பயறு வகைகளை மானாவாரியாகச் சாகுபடி செய்ய முனைப்பாகச் செயல்பட வேண்டும். சாகுபடி பரப்பையும், உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரிக்கச்செய்ய வேண்டும்.

**[illegible] பணியாளர்களைக் கலந்தாலோசித்து பருவத்திற்கேற்ற, தங்கள் பகுதிக் கேற்ற பயறு இரகங்களைத் தேர்வு செய்திடுக"**

பயறு வகைகள் சாகுபடி செய்யத் தொடங்கும் முன் உழவர் பெருமக்கள் தங்கள் பகுதி வேளாண் விரிவாக்கப் பணியாளர் களைக் கலந்தாலோசித்து பருவத்திற்கேற்ற, தங்கள் பகுதிக் கேற்ற பயறு இரகங்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

தேவையான அனைத்துப் பயறு இரகங்களும் அந்தப் பகுதி வேளாண் விரிவாக்க மையங்களில் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. சரியான பயிர் எண்ணிக்கை பராமரிக்க விதை அளவு மிக முக்கியம். உளுந்து, பச்சைப்பயறு தட்டைப்பயறு போன்ற பயறு இரகங்களைத் தனிப்பயிராகச் சாகுபடி செய்ய எக்டேருக்கு சுமார் 20 முதல் 25 கிலோ விதைப் பயறு போதும். துவரைக்கு எக்டருக்கு 10 கிலோ விதை போதும். கலப்புப் பயிராகச் சாகுபடி செய்யத் தனிப்பயிருக்கான விதை அளவில் பாதிபோதுமானது.

பெரும்பாலான பயறு இரகங் கள் சுமார் 70, 75 நாட்களில் இருந்து சுமார் 90 நாட்களுக்குள் அறுவடைக்கு வந்துவிடும். துவரை மற்றும் மொச்சை இரகங்கள் கூடுதல் வயதுடையவை.

## சில முக்கியத் தொழில் நுட்பங்கள் - ஒரு கண்ணோட்டம்:

பயறு வகை இரகத் தொடர்பைத் தொடர்ந்து விதைப் பயறைப் பூஞ்சான நேர்த்தி செய்தலும் ரைசோபியம் நுண்ணூட்ட நேர்த்தி செய்தலும் மிக முக்கியம். பூஞ்சான நேர்த்தி செய்து 24 மணி நேரத்திற்குப் பிறகுதான் ரைசோபியம் உயிர் உர நேர்த்தி செய்ய

### முக்கியக் காரணங்கள்:

◆ பயறு வகைப் பயிர் சாகுபடியில் அவற்றின் முழு உற்பத்தித் திறனை நாம் பெற முடிய வில்லை. அதற்குரிய காரணங் களாவன:-

◆ பயறுவகைப் பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் அவற்றைப் பெரும்பாலும் வளமற்ற நிலங்களில் சாகுபடி செய்வது.

◆ பயறுவகைப் பயிர்கள் சாகுபடியாகும் மொத்தப் பரப்பில் பெரும்பான்மை யாக (80%) மானாவாரியில் சாகுபடியாவது.



◆ தனிப்பயிராகச் சாகுபடி செய்யாமல் பெரும் பாலும் கலப்புப் பயிரா கவோ ஊடுபயிராகவோ சாகுபடி செய்வது.

◆ வேறுபட்ட மண்வகை மற்றும் சாகுபடி அமைப் புக்கு ஏற்ற அமோக விளைச்சல் திறன் கொண்ட இரகங்களைப் பயன்படுத்தாமை.

◆ உள்ளூர் இரகங்களை அதிகமாகப் பயன்படுத்துவது.

◆ நோய் மற்றும் பூச்சித் தாக்குதலைத் தாங்கி வளரக்கூடிய இரகங்கள் இல்லாமை.

◆ சிபாரிசு செய்யப்படும் தொழில் நுட்பங் களை உரிய காலத்தே செயல் படுத்தாமை.

◆ செலவே இல்லாத தொழில் நுட்பங்களைக் கூட முழுமையாகக் கடைப்பிடிக்காமை.

◆ பருவத்தே பயிர் செய் யாதது. களை களைக் கட்டுப் படுத்தாமல் இருப் பது; தேவையான உர உபயோகம் மற்றும் நுண்ணுயிர் கலக்காமல் விதைப்பது.

◆ பயிரில் தோன்றும் பூச்சி, பூசன நோய்களைக் கட்டுப்படுத்த தேவையறிந்து பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்ளாதது.

ஒரு தனி மனிதனுக்குத் தேவையான புரதச் சத்து தொடர்ந்து கிடைக்க, நாள் ஒன்றுக்கு சுமார் 85 கிராம் பயறு வகைகளை உணவுடன் ஒவ்வொருவரும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கணக்கிடப் பட்டுள்ளது. அதன்படி தமிழ் நாட்டிற்கு ஆண்டிற்கு சுமார் 11 இலட்சம் டன் பயறு வகைகள் தேவைப்படுகின்றன.

ஆனால், பயறு வகைச் சாகு படியில் நம்முடைய மெத்தனப் போக்கின் காரணமாக, நமது ஆண்டு பயறு சாகுபடிப் பரப்பு சுமார் 10 இலட்சம் எக்டராகவும், உற்பத்தி சுமார் ஐந்து இலட்சம் டன்னாகவும்தான் உள்ளது. தமிழ் நாட்டின் பயறு உற்பத்தித்திறன் எக்டருக்கு 460 கிலோதான். நமது பயறு வகைத் தேவையை ஈடுகட்ட பிற மாநிலங்களையும், மற்ற நாட்டை யும் எதிர் நோக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளோம்.

எனவே, இவ்வாண்டிலிருந்தாவது, பயறு வகைகள் சாகுபடியில் தனி ஊக்கம் செலுத்தி னால், பயறு உற்பத்தியில் நம் மாநிலம் தன்னிறைவு பெறுவதுடன், மற்ற மாநிலங் களுக்கும் ஏற்று மதி செய்யும் அளவிற்கு வாய்ப் புள்ளதைச் சமீப பெரு மழை நமக்கு அளித் துள்ளது.





### தென்மேற்குப் பருவ மழையும் ஆடிப்பட்ட பயறு சாகுபடியும்:

தற்போது, தமிழகம் முழுவதும் தென்மேற்குப் பருவமழை, கடந்த சுமார் 100 ஆண்டுகளில் எப்போதும் இல்லாத வகையில் பருவ ஆரம்பத்திலேயே மிக அதிகமான அளவு பெய்துள்ளது.

ஆடிப்பட்டம் ஆரம்பத்தி லேயே இப்படி ஒரு மழை கொட்டோ கொட்டு என்று கொட்டி, பயறு வகைகள் சாகு படிக்கு நல்ல வாய்ப்பளித்தது.

சமீப காலங்களில் இதுவே முதல் வாய்ப்பு என்று சொல்ல லாம். எனவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தும் வகையில், நடப்பு ஆடிப்பட்டத்தில் பயறு வகைகளை மானாவாரியாகப் பயிர் செய்து, குறுகிய காலத்தில், நல்ல மகசூலும், வருவாயும் பெற இதுவே உகந்த தருணம். இந்த வாய்ப்பினை நழுவ விடாமல் உழவர் பெருமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆடிப்பட்டத்தில் உளுந்து, பச்சைப்பயறு, தட்டைப் பயறு, துவரை, மொச்சை போன்ற பயறு வகைகளை மானாவாரியாகச் சாகுபடி செய்ய முனைப்பாகச் செயல்பட வேண்டும். சாகுபடி பரப்பையும், உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரிக்கச்செய்ய வேண்டும்.

**[illegible] கேற்ற பயறு இரகங்களைத் தேர்வு செய்திடுக”**

பயறு வகைகள் சாகுபடி செய்யத் தொடங்கும் முன் உழவர் பெருமக்கள் தங்கள் பகுதி வேளாண் விரிவாக்கப் பணியாளர் களைக் கலந்தாலோசித்து பருவத்திற்கேற்ற, தங்கள் பகுதிக் கேற்ற பயறு இரகங்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

தேவையான அனைத்துப் பயறு இரகங்களும் அந்தப் பகுதி வேளாண் விரிவாக்க மையங்களில் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. சரியான பயிர் எண்ணிக்கை பராமரிக்க விதை அளவு மிக முக்கியம். உளுந்து, பச்சைப்பயறு தட்டைப்பயறு போன்ற பயறு இரகங்களைத் தனிப்பயிராகச் சாகுபடி செய்ய எக்டேருக்கு சுமார் 20 முதல் 25 கிலோ விதைப் பயறு போதும். துவரைக்கு எக்டருக்கு 10 கிலோ விதை போதும். கலப்புப் பயிராகச் சாகுபடி செய்யத் தனிப்பயிருக்கான விதை அளவில் பாதிபோதுமானது.

பெரும்பாலான பயறு இரகங் கள் சுமார் 70, 75 நாட்களில் இருந்து சுமார் 90 நாட்களுக்குள் அறுவடைக்கு வந்துவிடும். துவரை மற்றும் மொச்சை இரகங்கள் கூடுதல் வயதுடையவை.

### சில முக்கியத் தொழில் நுட்பங்கள் - ஒரு கண்ணோட்டம்:

பயறு வகை இரகத் தொடர்பைத் தொடர்ந்து விதைப் பயறைப் பூஞ்சான நேர்த்தி செய்தலும் ரைசோபியம் நுண்ணூட்ட நேர்த்தி செய்தலும் மிக முக்கியம். பூஞ்சான நேர்த்தி செய்து 24 மணி நேரத்திற்குப் பிறகுதான் ரைசோபியம் உயிர் உர நேர்த்தி செய்ய

வேண்டும். உயிர் உர நேர்த்தி செய்து சுமார் 15 நிமிடங்கள் நிழலில் உலர்த்தி உடனே விதைப்பு செய்யலாம், அல்லது உயிர் உர நேர்த்தி செய்த 24 மணி நேரத்திற்குள் விதைத்து முடித்துவிட வேண்டும்.

மானாவாரி உளுந்து, பச்சைப் பயறு, தட்டைப் பயறு, துவரை போன்ற பயறு வகைகளுக்கு எக்டருக்கு 12.5 கிலோ தழைச்சத்தும், 25 கிலோ மணிச்சத்தும் அடியுரமாக இடுதல் வேண்டும்.

பயறு வகைகள் பூக்கும்போது பூக்கள் உதிர வாயப்புள்ளது. பூக்கள் உதிர்வதால் மகசூல் பெருமளவு குறைந்துவிடுகின்றது. பூச்சி நோய் அதிகம் தாக்குதல், நுண்ணூட்டச் சத்து பற்றாக்குறை, கடுமையான வெள்ளம் மற்றும் வறட்சி, போதிய வடிகால் வசதியில்லாமை, அதிகமான மேக மூட்டம் தொடர்ந்து நிலைப்பது, அதிகமான ஈரப்பதம், வேகமான காற்று போன்ற காரணங்களால் பயறு வகைகளில் பூக்கள் உதிரும் வாய்ப்புள்ளது.



பூக்கும் பூக்கள் உதிர்வதை Plant Growth Regulator என்று சொல்லப்படும் பயிர் ஊக்கிகளைக் கொண்டு கட்டுப்படுத்தலாம். பயறு சாகுபடிக்கு நாப்தலின் அசிடிக் ஆசிட் (என்.ஏ.ஏ.) என்ற பயிர் ஊக்கி சிபாரிசு செய்யப்படுகிறது துவரைக்குப் பூக்கும் தருணத்திலும், மற்ற பயறு வகைகளுக்குப் பூக்கும்போது ஒரு முறையும், பிறகு 15 நாட்களுக்குப் பிறகு இரண்டாம் முறையும் என்.ஏ.ஏ. தெளிக்க வேண்டும்.

பயறு மகசூலை அதிகரிக்கப் பூக்கள் நன்கு பூத்தால் மட்டும் போதாது. பூத்த பூக்கள் நன்கு காய்க்க வேண்டும். காய் பிடிப்பதற்கு இரண்டு சதம் டி.ஏ.பி. கரைசலை இலை வழியாகத் தெளிக்க வேண்டும் (Foliar Spraying). பூக்கும் நிலையில் ஒருமுறையும், காய்கள் பிடிக்கும் தருணத்தில் ஒருமுறையும் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். வெய்யில் நேரத்தில் டி.ஏ.பி. தெளிக்கக் கூடாது.

### உழவர் பெருமக்கள் தனி கவனத்திற்கு:

பயறு வகைகளுக்கு என்.ஏ.ஏ. போன்ற பயிர் ஊக்கிகளைப் பயன்படுத்தும்போதும், டி.ஏ.பி, கரைசலை இலை வழியாகத் தெளிக்கும்போதும், முக்கியமாக விரிவாக்கப் பணியாளர்களின் ஆலோசனையின்படி, அவர்களின் நேரடி கண்காணிப்பில் இத்தொழில் நுட்பங்களைக் கையாள்வது மிகவும் சிறந்தது.

### பயறு சாகுபடித் திட்டங்கள்:

பயறு சாகுபடி பெரிய விவசாயிகளைவிட சிறு மற்றும் குறு விவசாயிகள்தான் அதிகமாகப் பயிர் செய்வதால், பயறு வகை உற்பத்தியைப் பெருக்க மாநில அரசு தனியாகவும், மற்றும் மத்திய அரசின் உதவியுடனும் பயறு உற்பத்தியைப் பெருக்க பல திட்டங்கள் தீட்டப்பட்டு வருடாவருடம் செயல்படுத்தப் படுகின்றன.

### மாநில அரசுத் திட்டம்:

மாநில அரசு பயறு சாகுபடி செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும்





வகையில் வருடந்தோறும் சான்று பெற்ற பயறு விதைகள் ரைசோபியம் நுண்ணூட்டப் பொட்டலங்கள் போன்ற இடுபொருட்களை வேளாண் விரிவாக்க மையங்களின் மூலம் வருடாவருடம் வினியோகம் செய்து வருகிறது.

### தேசிய பயறு பெருக்குத் திட்டம்:

மத்திய அரசு நிதி உதவியுடன் தேசிய பயறு பெருக்குத்திட்டம், நம் மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் உழவர் பெருமக்களுக்கு மானிய விலையில் பயறு மினிக்கிட்டுகள் வழங்கல், சிறப்பாக பெருவிளக்கப் பண்ணைகள் அமைத்தல், சான்று பெற்ற மற்றும் ஆதார பயறு விதைகள் விநியோகம், ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு பற்றிய நிரூபண வயல்கள் அமைத்தல், உழவர்களுக்குப் பயறு சாகுபடி பற்றிய பயிற்சி வகுப்புகள் நடத்துதல் போன்ற திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

> "சான்று பெற்ற விவசாய இடு பொருட்கள் வேளாண் விரிவாக்க மையங்களின் மூலம் வருடாவருடம் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன"

### வேளாண் கருவிகள்:

பயறு சாகுபடி வயல்களில் நவீன வேளாண் கருவிகளைப் பயன்படுத்தி நிலத்தைப் பண்படுத்தப் பயன்படும் கருவி ஒன்றுக்கு ரூ. 1500/- அதிகபட்ச மானியமாக வழங்கப்படும்.

### தெளிப்பு நீர்ப்பாசனம்:

பயறு சாகுபடி பருவத்தில் குறைந்த பாசனம் தேவைப்படும். குறைவான தண்ணீரைச் சம அளவில் எல்லாப் பகுதிகளுக்கும் நீர்ப் பாசனம் தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகள் வழங்கப் படும். ஒரு கருவிக்கு ரூ. 10,000/- வரை மானியமாக வழங்கப்படும். ஆதி திராவிட மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த விவசாயிகளுக்கும், பண்ணை மகளிர்க்கும் ஒரு கருவிக்கு ரூ. 15,000/- வரை மானியமாக வழங்கப்படும்.

### ரைசோபியம் பொட்டலம்:

பயறு சாகுபடிகளில் அதிக உற்பத்தியைப் பெருக்க நுண்ணுயிர் மிக அவசியம். எனவே ஒரு எக்டருக்கு ரூ. 25/- மானியம் வழங்கப்பட உள்ளது.

### நுண்ணூட்டச் சத்து விநியோகம்:

பயறு சாகுபடி நிலப் பகுதிகளில் இரும்புச்சத்து குறைவாகக் காணப்படும். மண் பரிசோதனை பரிந்துரைப்படி தேவையான இரும்புச்சத்து தாதுப் பொருட்கள் வழங்க எக்டருக்கு 100 ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

### பயிற்சி:

வருடத்திற்கு கரீப், ராபி இரு பருவத்திலும் விரிவாக்கப் பணியாளர்களுக்குப் புதிய தொழில் நுட்பம், பயறு சாகுபடிக் குறிப்புகள், புதிய ரகங்கள், அதிக விளைச்சல் பயிர் ரகங்கள் ஆகிய விவரங்களைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானிகளால் பயிற்சியளிக்கப்பட உள்ளது.

பயறு உடைக்கும் கருவிகள் மற்றும் சேமிப்புக் கலன்கள் ஆகிய உபகரணங்கள்





50% மானிய உதவியுடன் அதிக பட்சம் கருவி ஒன்றுக்கு 4,000 ரூபாய்க்கு அதிகமில்லாமல் வழங்கப்படும்.

### ஆதி திராவிட உழவர் பெருமக்களுக்கான சிறப்பு நலத் திட்டம்:

இத்திட்டமும் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பயறு விதைகள், ரைசோபிய நுண்ணூட்டப் பொட்டலங்கள் சிங்க் சல்பேட் நுண்ணூட்டச் சத்து போன்ற இடுபொருட்கள் மானிய விலையில் இந்து ஆதிதிராவிட உழவர் பெருமக்களுக்கு வழங்கப்படுகிறது.



உப்பில்லாப்பண்டம் குப்பையிலே என்பதுபோல், பருப்பில்லாத உணவு பயன் அற்றதுதான். பருப்பு உற்பத்திக் குறைவின் காரணமாகவும், மக்கள் பெருக்கத்தின் காரணமாகவும், தற்போது ஒரு கிலோ துவரம் பருப்பு அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய அவல நிலையும் இருக்கிறது. இந்நிலை தொடர்ந்து நீடித்தால், வரும் சந்ததிகளுக்குப் பருப்பு சேர்க்கப்பட்ட உணவு வகைகள் காணக்கிடைக்காத விருந்தாகவும், அதிசயப் பொருளாகவும், கருதப்பட வேண்டிய நிலைமை வந்து விடலாம்; அல்லது பருப்பு வகையே சேர்க்கப்படாத உணவை உண்ணும் நிலைமையும் வரலாம்.

இந்த அவல நிலையைப் போக்க, இந்த ஆண்டு முதல், நடப்பு ஆடிப்பட்டத்திலிருந்து சற்று விழிப்புணர்வோடு, முழு ஊக்கத்துடன் பயிர் வகைகள் சாகுபடியில் உழவர் பெருமக்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். பயறு வகை சாகுபடி பரப்பை அதிகரிக்க வேண்டும். தேவையான எல்லாத் தொழில் நுட்பங்களையும் கடைப்பிடித்து, பயறு வகைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கப் பாடுபட வேண்டும்.

நம் தினசரி பருப்புத் தேவைக்குப் பிற மாநிலங்களை எதிர் நோக்கும் நிலை மாறி, பயறு வகை உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதுடன், ஏற்றுமதி செய்யும் நிலையை எட்ட உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தியை அதிகரிப்போம். இந்நிலையை எட்ட, வேளாண்துறை விரிவாக்கப் பணியாளர்கள், உழவர் பெருமக்களுக்கு உறுதுணையாக இருந்து செயல்படுவார்கள்.



### உலகிலேயே அதிக காலம் வாழ்ந்தவர்!

ஜப்பானைச் சேர்ந்த ஷிகேசியோ இலமி என்பவர் 120 ஆண்டுகள் 237 நாட்கள் வாழ்ந்து உலகிலேயே அதிக காலம் வாழ்ந்தவர் எனும் சாதனையைப் படைத்தார். 1986 ஆம் ஆண்டு நிமோனியா தாக்கியதால் உயிர்நீத்தார்.





## சுவைமிகு தகவல் பக்கம்

புகை பிடிப்பது உடல் நலத்திற்குக் கேடு என்று உலகமே புகை பிடிக்கும் பழக்கத்திற்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்க, புகைப்போரும் அதற்கெல்லாம் சளைத்து விடாமல் ஊதித் தள்ளிக் கொண்டே இருக்கிறார்கள். சிகரெட் என்கிற வெண்சுருட்டு நாகரிகத்தின் சின்னமாக இன்று நாடெங்கும் புகைத்துத் தள்ளப்படுகிறது. சிகரெட் கம்பெனிகளும் தங்களது சிகரெட்டைக் குடித்தால் கிட்டாதனவெல்லாம் கிட்டும் என்பது போல மாய விளம்பரங்கள் செய்து வருகின்றன. இந்த சிகரெட் உருவானதே ஒரு சுவையான கதைதான். ஆரம்ப காலத்தில் அமெரிக்காவில் ஒரு பிரிவினர் புகையிலையைச் சுருட்டி சுருட்டாகத்தான் புகைத்து வந்தார்கள். இப்புகைப் பழக்கம் நாளடைவில் அனைத்து இடங்களிலும் பரவியது. ஆனால் இப்படிப்பட்ட சுருட்டுகளைப்பணம் படைத்தவர்களே பயன்படுத்த முடிந்தது. எனவே புகைபிடிக்க விரும்பிய சில பிச்சைக்காரர்கள் கீழே வீசப்படும் எச்சில் சுருட்டுத் துண்டுகளைப் பொறுக்கியெடுத்து, அதனுள்ளிருக்கும் புகையிலைத் தூள்களை ஒரு தாளில் சுருட்டிப் புகைக்க ஆரம்பித்தார்கள். இதைப்பார்த்த பணக்காரச் சீமான்களும், புகையிலைத்தூளை வெள்ளைக் காகிதத்தில் வைத்துச் சுருட்டிப் புகைக்கத் தொடங்கினார்கள். நாளடைவில் அதுவே 'சிகரெட்' என்ற பெயரில் உலகமெங்கும் வியாபாரத்துக்கு வந்துவிட்டது.

எச்சில் துண்டுகளைப் பொறுக்கி தாங்கள் தயாரித்ததை இன்று பணக்காரர்களும். இன்னும் பலப் பலரும் சிகரெட் என்ற பெயரால் தமதாக்கிக் கொண்டதைப்பார்த்து பெருமைப் படுகிறார்கள் பிச்சைக்காரர்கள்.

மரங்களின் பயன், பூத்துக் குலுங்கி காய்த்துக் கனி தருவதுதான். மாமரங்களும் அதற்கு விலக்கல்ல. ஆனால் இடையே சில சமயம் அப்படிக் காய்க்காமல் போய்விடுவதும் உண்டு. அதற்கு அடுத்த ஆண்டும் அம்மரத்தில் காய்ப்புப் பொய்யாகி, அந்தக் கதை தொடரக்கூடாது அல்லவா! இதற்காக உத்தரப்பிரதேச மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் ஒரு வேடிக்கையான வழியைப் பின்பற்றுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ஏதேனும் மாமரம் காய்ப்பு இல்லாமல் போய் விட்டால், உடனே அந்த மாமரத்தின் சொந்தக்காரர் நான்கைந்து நண்பர்கள் புடை சூழ கையிலே கோடாரியை ஏந்திக் கொண்டு கோபமாக அந்த மரத்தை நோக்கிப் போவார். மரத்தின் அருகே போனதும் ''இந்த மரம் காய்க்கவில்லை; எனவே இதை வெட்டிச் சாய்த்துவிட வேண்டியதுதான்'' என உரத்த குரலில் சொல்வார், அவர் அப்படிச் சத்தம் போட்டு சொல்லிவிட்டுப் போனவுடன், உடன் வந்த நண்பர்கள் அந்த ஆண்டு காய்க்காமல் போனதற்காக அந்த மரத்தைக் கடிந்து கொண்டு, அது வெட்டப்படாமல் உயிரோடு இருக்க வேண்டுமானால், அடுத்த ஆண்டு அதிகமான காய்களை காய்த்துத் தருமாறு அறிவுரை சொல்லி விட்டுப் போவார்கள்.



அந்த மாமரம், தன் உயிருக்குப் பயந்து அடுத்த ஆண்டு பொய்க்காமல் சிறப்பாகக் காய்ப்பதாகச் சொல்கிறார்கள். அந்த ஊர் விவசாயிகள்!



ஆசிரியரும் வெளியிடுபவரும் : வெ. இறையன்பு, இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

ஆசிரியர் மடல்

# பள்ளிகளை நேசிக்க வைப்போம்

கல்வி எனும் இனிய பாதையில்
பயணப்படும் போதுதான்
மனிதர்கள்
முழுமையாக மலர்கிறார்கள்.

கல்வி என்பது,
தலையில் கனமேற்றி
தள்ளாடவைப்பதற்காக அல்ல.
அவர்களைத்
'தான்' எனும் எண்ணம்
அற்றவர்களாக ஒரு
பூவைப்போல மென்மையாகவும்
அதே நேரத்தில்,
பாறையைப்போல
திடமானவர்களாகவும்
மாற்றுகின்ற ஓர் இனியவேள்வி,

பள்ளி என்பது ஓர் ஆனந்த மயமான
இடமாக ஆக வேண்டும்.
பள்ளிக்குச் செல்வதைக்
குழந்தைகள் நேசிக்க வேண்டும்

மனப்பாடம் செய்யச் செய்ய
அலகின்ற தன்மை
ஆராய்கின்ற மனப்பான்மை
குறைந்து விடுகின்றது.

உடல் உழைப்பு இல்லாத
நடைமுறை வாழ்க்கையால்
மாணவர்களுடைய எலும்புகள்
மூங்கில்கள் போல் திடமாக
இல்லாமல்
முருங்கையைப் போல்
மென்மையாகிவிடுகின்றன.

பள்ளி முடிந்தவுடன்
சிறைச்சாலையிலிருந்து
விடுவிக்கப்பட்டவர்போல்
மகிழ்ச்சியுடன் ஓடிவருவது
அவர்களை இந்தக் கல்வி
எந்த அளவுக்கு சிதைத்திருக்கிறது
என்பதைப் புலப்படுத்துகிறது.

இன்னும் ஒரு சிறகு
தன் எண்ணத்திற்கு முளைக்கும்
என்ற நம்பிக்கையை
மாணவர்க்கு உருவாக்க வேண்டும்.

ஒவ்வொரு மாணவனும்
ஒரு முழு மனிதனாய்
வளர்ச்சியடைய வேண்டும்.

''எதிர்காலப் பள்ளத்தை
யார் துகர்ப்பது என்பதுதான்
நிகழ்காலக் கேள்வி.
வாருங்கள் தோழர்களே!
நாமே விழ்ந்து
அதை துகர்ப்போம்!
அதனால்
நம் பின்னால்
வருபவர்களாவது
கைதாகாமல்
காப்பாற்றப்படட்டும்!''



தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23







## இந்த இதழில்....


தமிழ்நாட்டில் புதிய கார் தொழிற்சாலை 2
பாவாணர் படைப்புகள் அரசுடைமை 4
மெழுகுவத்தி 5
படமும் செய்தியும் 8
இரு பெருந்தலைவர்கள் 10
எப்படிக் கைகூடும் 12
சிறுவர்களைப் பாதிக்கும் சர்க்கரை நோய் 13
நிதி நிலை அறிக்கை 17
நிதி நிலை அறிக்கை – முதல்வர் பதில் உரை 41
கடல் காகம் 57
செய்திச் சரம் 64
முதல் மார்க் மந்திரம் 66
ஒலிம்பிக் 69
ஆசிரியர் மடல் 72



தமிழரசு
திருவள்ளுவராண்டு - 2027
ஆடித் திங்கள் :17
மலர் : 27 இதழ் : 3
1.8.1996
விலை ரூ. 3


21469

# தமிழ்நாட்டில் புதிய கார் தொழிற்சாலை

**மாண்**புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 17.7.96 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்ததற்கிணங்க, சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் மோட்டார் கார்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்குத் தென் கொரிய நாட்டைச் சேர்ந்த ஹுண்டாய் மோட்டார் நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தக் குறிப்பு முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் 18.7.96 அன்று கையொப்பமிடப் பட்டது. இந்த ஒப்பந்தக் குறிப்பாணையில் அரசு சார்பாகத் தொழில்துறைச் செயலாளர் பி.சி. சிரியாக் இந்நிறுவனத்தின் சார்பாக அதன் தலைவர் பி.ஜே. பார்க் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

ஹுண்டாய் நிறுவனக் குழு தென் கொரியாவில் மிகப் பெரிய பெருமை வாய்ந்த ஒரு தொழில் நிறுவனம் ஆகும். இதன் விற்பனை அளவு ரூ. 2,27,500/- கோடியாகும். இந்நிறுவனக் குழுவானது தானியங்கிப் பொருட்களைத் தயாரித்தல், கப்பல் கட்டுதல், கட்டுமானப்பணிகள், மின்னணுவியல் போன்றவற்றில் ஆர்வம் கொண்ட 45 நிறுவனங்களை உள்ளடக்கியதாகும். ஹுண்டாய் நிறுவனமும், மற்றும் ஹுண்டாய் கட்டுமான நிறுவனமும் ஏற்கெனவே இந்தியாவில் செயல்பட்டு வருகின்றன.

ஹுண்டாய் மோட்டார் நிறுவனம் கொரியா நாட்டில் மட்டும் ஆண்டிற்கு 1.75 மில்லியன் கார்கள் தயாரித்து, அந்நாட்டின் மொத்த கார் விற்பனையில் 55 விழுக்காடு பூர்த்தி செய்கிறது. இந்நிறுவனத்தின் விற்பனை அளவு ரூ. 45,500 கோடியாகும்.

உலகளவில் இந்நிறுவனக் கார் உற்பத்தி 13வது இடத்தை வகிக்கின்றது; இது 170 நாடுகளுக்குக் கார்களை ஏற்றுமதி செய்கிறது. தாய்லாந்து, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் மற்றும் போட்ஸ்வானா போன்ற நாடுகளில் 'அசெம்பளிங்' பிரிவுகள் உள்ளன. இந்நிறுவனம் இதே போன்ற ஒரு தொழிற்சாலையைத் துருக்கி நாட்டில் நிறுவி வருகிறது.

தமிழ்நாட்டில் நிறுவப்படவுள்ள ஹுண்டாய் மோட்டார் திட்டமானது கொரியாவில் உள்ளது போன்ற ஒரு மாபெரும் உற்பத்தித்திட்டமாகும். இந்நிறுவனம் ஆரம்பத்தில் 1,00,000 கார்களைத் தயாரிக்க உத்தேசித்துள்ளது. இதன் அளவு இரண்டாம் பகுதியில் 2,00,000 கார்கள் வரை ஆகும்.

இந்நிறுவனம் முதல் ஐந்தாண்டுகளில் ரூ. 2,450/- கோடி முதலீட்டிலும், பின்னர் அடுத்த ஐந்து ஆண்டுகளில் விரிவாக்கத் திட்டமாக ரூ. 14,000/ கோடி முதலீடு செய்வதற்கும் மத்திய அரசின் வெளிநாட்டு முதலீட்டு வளர்ச்சிக் குழுமத்திடம் ஒப்புதல் பெற்றுள்ளது. அடுத்த பத்து ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 1.1 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு முதலீடு இருக்கும். ஹுண்டாய் மோட்டார் நிறுவனத்தில் 100 சதவீதம் துணை நிறுவனமாக இந்த நிறுவனம் நிறுவப்படவுள்ளது.


**தமிழரசு**

ஆசிரியர் / வெளியிடுபவர்:

**என்.எஸ். பழனியப்பன்** இ.ஆ.ப.
இயக்குநர்,
செய்தி - மக்கள் தொடர்புத்துறை

ஆசிரியர் குழு:

எம். அசோகன்
பி.எல். இராசேந்திரன்
ஜி. பாஸ்கரன்
அ. மதிவாணன்
ச. ஜெயலலிதா

ஓவியர்கள்:

என். குமாரசாமி
சி. ஜெயச்சந்திரன்
பா. குமார்
தி. சம்பத்குமார்
டி. மகேஸ்வரி

அச்சகம்:

தமிழரசு அச்சகம்
அரசினர் தோட்டம்
அண்ணா சாலை
சென்னை - 600 002.
அலுவலகத் தொலைபேசி எண்:
568926 / 568927




தமிழரசு

இந்தத் துணை நிறுவனம் ''ஹுண்டாய் மோட்டார் நிறுவனம்'' என்ற பெயரில் இந்தியாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 2000 முதல் 3000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 20,000 முதல் 30,000 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பும் கிடைக்கும். இதன் உற்பத்தி வியாபார ரீதியில் 1998-ஆம் ஆண்டு மத்தியில் தொடங்கும்.



இந்நிறுவனம் 1.3 மற்றும் 1.5 லிட்டர் திறன் கொண்ட புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கார்களைத் தயாரிக்கும். அடுத்த 4 ஆண்டுகளில் 350 மில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு 100 விழுக்காடு வெளிநாட்டுப்பங்கு முதலீடு இருக்கும்.

எவ்விதமான ' சிகேடி ' 'எஸ்கேடி' இறக்கு மதி இல்லாமல் இந்தக் கார்கள் தயாரிக்கப்படும்.

## உதிரி பாகங்கள் தயாரிப்பு

முதல் ஆண்டில் 70 சதவீதம் உள்நாட்டுப் பொருட்களைக் கொண்டும் 2001 ஆம் ஆண்டு வாக்கில் 100 விழுக்காடு உள்நாட்டுப் பொருள்களைக் கொண்டும் தயாரிக்கப்படும்.

ஆரம்ப கால வெளிநாட்டு முதலீட்டின் மூலம் மூலதனப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படும். 1999-ஆம் ஆண்டில் இந்த ஏற்றுமதியின் அளவு 54.1 மில்லியன் அமெரிக்க டாலர் அளவிலும் இத்தொகை 2003-ஆம் ஆண்டில் 267 மில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கும் அதிகரிக்கும்.

இந்தத் திட்டத்திற்கு ஹுண்டாய் மோட்டார் கம்பெனிக்கு உதிரி பாகங்கள் வழங்கும் 10 பெரிய நிறுவனங்கள் தங்களது நிறுவனங்களைச் சென்னையில் நிறுவ வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் ரூ. 307 கோடி முதலீடு இருக்கும்.

இத்திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்குத் தேவைப்படும் அனைத்து உதவிகளையும் வழங்க இவ்வரசு இசைந்துள்ளது.

சென்னையிலிருந்து 35 கி.மீ தொலைவில் தேசிய நெடுஞ்சாலை எண் 4-ல் இருங்காட்டுக்கோட்டை கிராமத்தில் சுமார் 550 ஏக்கர் நிலத்தை இந்நிறுவனம் தேர்வு செய்து உள்ளது. இவை அனைத்தும் பட்டா நிலங்களாகும். அரசு இந்நிலங்களைக் கையகப்படுத்தி நிறுவனத்திற்கு விற்பனை செய்யும்.

இந்நிறுவனத்திற்குத் தேவையான 0.8 எம்.ஜி.டி. அளவிற்கான தண்ணீர் வழங்குவதற்கு அரசு ஒத்துக்கொண்டுள்ளது.

இந்நிறுவனத்திற்கு 30 எம்.வி.எ. சக்தி கொண்ட மின்சாரம் தேவைப் படும். இதனையும் அரசு வழங்க இசைந்துள்ளது.

இந்நிறுவனத்திற்குத் தேவையான தொலைபேசி வசதி, ஏற்றுமதி செய்யத் துறைமுக வசதி, சாலை வசதி, மருத்துவ மற்றும் பயிற்சி வசதிகளைக் கேட்டுள்ளது. இதனைச் செய்து தருவதற்குத் தேவையான உதவிகள் அளிப்பதற்கு அரசு ஒத்துக்கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் துவக்கப்படும் புதிய தொழில் நிறுவனங்களுக்குத் தற்போது வழங்கப்படும் விற்பனை வரி தள்ளிவைத்தல்/ விலக்கு அளித்தல், மின் கட்டணச் சலுகைகள், மூலதன ஊக்க உதவிகள், இந்நிறுவனத்திற்கும் நீட்டிக்கப்படும்.

ரூ. 1500 கோடி மற்றும் அதற்கு அதிகமான மூலதனத்தோடு தமிழ்நாட்டில் துவக்கப்படும் மிகப்பெரிய திட்டங்களுக்கு இவ்வரசு சமீபத்தில் சில சலுகைகளை அறிவித்துள்ளது. இந்நிறுவனம் முதலீட்டு நிபந்தனைகளைத் திருப்திகரமாக நிறைவு செய்தால் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சலுகைகளைப் பெற இந்நிறுவனம் தகுதி பெறும். இதன் அடிப்படையில் இந்நிறுவனம் 14 ஆண்டுகளுக்கு விற்பனை வரி தள்ளிவைத்தல், விலக்கு அளித்தல் போன்ற சலுகைகள் பெறும்.

# பாவாணர் படைப்புகள் அரசுடைமை

**மொ**ழிஞாயிறு எனத் தமிழ் நெஞ்சங்களால் புகழப்பட்டவரும், தனித் தமிழ் இயக்கத் தளநாயகரும், அரசின் ''அகர முதலி'' தயாரிப்பைத் தொடங்கிடத் துணை நின்றவருமான பழுத்த பைந்தமிழ்ப் பெருமகனார், மறைந்த தேவநேயப் பாவாணர் அவர்களின் அரிய நூல்களை அரசுடைமையாக்கவும், அவரது குடும்பத்துக்குக் காப்பு நிதியாகவும் ரூபாய் இருபது இலட்சம் நிதி வழங்கப்படுகிறது.

பளபளப்பான கருத்த முகம்; ஒளிநிரம்பி வழியும் கூரிய விழிகள்; அகன்று ஏறிய நெற்றி; அடர்த்துச் சிலிர்க்கும் அரிமா மீசை; ஏக் கழுத்து, பீடுநடை; பெருமிதமான உடை; அறிவு தெறிக்கும் கணீரென்ற பேச்சு; குழந்தை உள்ளம் - இவற்றின் மொத்த உருவம்தான் பாவாணர் அவர்கள்.

நெல்லை மாவட்டத்தில் சங்கரநயினார்கோவில் என்னும் ஊரில் திருவாளர் ஞானமுத்து, பரிபூரணம் ஆகியோருக்குக் கி.பி. 1933 சுறவம் 26 (7.2.1902) ஆம் நாள் மொழிப் பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் பிறந்தார். பண்டிதர், புலவர், வித்வான், கலை முதுவர் ஆகியவற்றைத் தேறி முப்பத்து நான்காண்டுகள் பல்வேறு கல்வி நிலையங்களில் பணியாற்றிய பாவாணர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ராராய்ச்சித்துறையில் ஐந்தாண்டுக் காலம் பணி புரிந்தார்.

பிறமொழித் தாக்கத்திலிருந்து தமிழைப் பாதுகாக்கத் தமிழ்க்கடல் மறைமலையடிகளார் வழியைப் பின்பற்றி 'உலகத் தமிழ்க் கழகம்' கண்ட பெருமைக்குரியவர் பாவாணர்.

அவர்தம் கடுமையான உழைப்பாலும், உண்மை காணும் அவாவாலும் கடந்த அறுபதாண்டுக் காலத்தில் மறைந்து கிடந்த . பல தமிழுண்மைகள் வெளிப்பட்டன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டத்தின் இயக்குநராகப் பணியாற்றிய பாவாணர் அவர்கள் 16.1.81-ல், அதிகாலையில் காலமானார்.



**பாவாணர் எழுதியுள்ள நூல்கள்:**

- ★ ஒப்பியன் மொழி நூல்
- ★ முதல் தாய் மொழி
- ★ சுட்டு விளக்கம்
- ★ திராவிடத் தாய்
- ★ இயற்றமிழ் இலக்கணம்
- ★ செந்தமிழ்க் காஞ்சி
- ★ தமிழர் திருமணம்
- ★ பழந்தமிழாட்சி
- ★ கட்டுரை வரைவியல்
- ★ தமிழ்நாட்டு விளையாட்டுகள்
- ★ உயர்தரக் கட்டுரை இலக்கணம்
- ★ சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின் சீர்கேடு
- ★ தமிழ் வரலாறு
- ★ தமிழர்வரலாற்றுச்சுருக்கம்
- ★ கட்டுரை கசடற
- ★ மண்ணில் விண் அல்லது வள்ளுவர்கூட்டுடைமை
- ★ பண்டைத்தமிழர் நாகரிகமும் பண்பாடும்
- ★ இசைத் தமிழ்க் கலம்பகம்
- ★ சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்
- ★ வடமொழி வரலாறு
- ★ தமிழர் வரலாறு
- ★ தமிழர் மதம்
- ★ திருக்குறள் - தமிழ் மரபுரை
- ★ தமிழிலக்கிய வரலாறு
- ★ வண்ணனை மொழிநூலின் வழுவியல்.
- ★ The Primary Classical Language of the world.





# மெழுகுவர்த்தி



**– கவிஞர் வைரமுத்து**

தனக்காக அல்ல;
தன் திரிக்கரு
சிதைவதை எண்ணியே
அந்தத் தாய்
அழுகிறாள்.

மேனியில் தீ விழுந்து
நரம்புதான் எரியும்...
இங்கோ
நரம்பிலே தீ விழுந்து
மேனி எரிகிறது!

மரணத்தை
வரங்கேட்டா
அந்த உச்சித்தவம் நடக்கிறது?

அந்த ஒற்றைப் பூக்கொண்டை
செடியையே தின்னுகிறதே!

விரலை அழிக்கவா
அந்த
நெருப்புநகம் முளைத்தது?
நெருப்புப் பாசனம்
அங்கு



நீர்ப்பயிர் வளர்க்கிறது!
மௌனத்தை,
திரவ வார்த்தைகளால்
அந்தத் தீ நாக்கு
எத்தனை அழகாய்
உச்சரிக்கின்றது?
எந்தத் துயரத்தை
எழுதியெழுதி
இப்படி மசிகசிகிறது இந்தப் பேனா?
கண்டு சொல்லுங்கள்!
கண்ணெதிரே நடப்பதென்ன
கொலையா? தற்கொலையா?
எப்பொழுதுமே இதற்குத்
தேய்பிறையென்றால்
இது என்ன
சபிக்கப்பட்ட நிலவா?
இந்தத்
தீக்குளிப்பின் முடிவில்
மரணத்தின் கற்பு
ருசுவாகிறது!
இந்தச் சிதையை –
கலங்கரை விளக்காய்க் கருதி
வீட்டில் கப்பல்கள்
முட்டி மூழ்கும்!
அங்கே வடிவது
கண்ணீரென்றால் –
கண்கள் எங்கே?








ஓ! கண்களைத் தேடியே
அந்த அழுகையோ?

இந்தப் பிணத்திற்கு...
கொள்ளி வைத்த பிறகு தான்
உயிர் வருகிறது.

மனிதனைப் போலவே
இந்த
அஃறிணையையும் நான்
அதிகம் நேசிப்பேன்.

எனக்குள்
இது
சாவைச் சாகடிக்கும்!

என்
இரத்த நெய்யில்
இது
நம்பிக்கைச் சுடரேற்றும்

வாருங்கள் மனிதர்களே!
மரணத்திற்கும் சேர்த்து
நாம்
மௌன
அஞ்சலி செலுத்துவோம்!

அதோ!
உயிரின் இறுதி ஊர்வலம்
உடல்மேலேயே நடக்கிறது.

— கவிஞர் வைரமுத்து எழுதிய
'திருத்தி எழுதிய தீர்ப்புகள்' என்ற நூலிலிருந்து.



கண்ணாடி தயாரிக்கும் இங்கிலாந்து நாட்டின் பில்கிங்டன் நிறுவனத்தின் ரூ.550 கோடி முதலீட்டில் செங்கல் பட்டுக்கு அருகில் செங்குன்றம் கிராமத் தில் அமையவிருக்கும் கண்ணாடி தொழிற்சாலைக்கான ஒப்பந்தம் தலை மைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னி லையில் கையெழுத்தானது (16.7.96).

# படமும்



மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை மத்தியப் பணி யாளர் நலன் மற்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்கள் சந்தித்தார் (21.7.96).



சென்னையில் நடைபெற்ற இராமநாதன் தங்க கோப்பை கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு கு. பிச்சாண்டி அவர்கள் பரிசுக் கோப்பை வழங்கினார். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு சுரேஷ் ராஜன், ஆயிரம் விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு மு.க. ஸ்டாலின், திரைப் பட நடிகர் திரு சரத்குமார் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர் (15.7.96).



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைத் தமிழ்நாடு பிளாஸ்டிக் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் நிர் வாகிகள் பட்ஜெட்டில் அளிக்கப்பட்ட சலுகைகளுக்குத் தங்கள் சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்தார்கள். புரசைவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு ரெங்கநாதன் உடன் உள்ளார் (20.7.96).

# செய்தியும்



மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன் அவர்களைப் பின்லாந்து நாட்டுத் தூதர் திரு பெஞ்சமின் பாசின் அவர்கள் சந்தித்து உரையாடினார் (17.7.96).

தென் மண்டல வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலை [illegible] சங்க மாநாட்டை மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு வ. முல்லைவேந்தன் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றினார் (20.7.96)



# இரு பெரும் தலைவர்கள்

''ஒருநாள் அந்தக் குடிசையின் முன்புறம் ஒரு கார் வந்து நின்றது. அந்தக் காரில் இருந்து உயரமான ஒருவர் இறங்கினார்.

''காரில் இருந்து இறங்கி வருபவரைப் பார்த்ததும்... குடிசையின் உள்ளே இருந்தவர், வெளியே வேகமாக ஓடி வந்தார். அவருக்கு இன்ப அதிர்ச்சி.

காரணம் காரில் இருந்து வந்தவர், சாதாரண மனிதர் அல்ல, முதலமைச்சர். தாம்பரம் குடிசையில் இருந்த அந்தப் பெரியவரோ சட்டமன்ற உறுப்பினர்.

மாநில முதலமைச்சர் தன் குடிசைக்கு வந்ததால்.. குடிசைவாசியான சட்டமன்ற உறுப்பினருக்கு இன்ப அதிர்ச்சி. மிகவும் மகிழ்ச்சியுடன், ''வாங்கய்யா... வாங்க வாங்க...'' என்று அன்புடன் வரவேற்றார் சட்டமன்ற உறுப்பினர்.

''இன்னும் ... நீங்க புறப்படலையா? சீக்கிரம் கிளம்புங்க.. என்றார் முதலமைச்சர்.

''எங்கே போகணும்..'' என்று கேட்டார் சட்டமன்ற உறுப்பினர்.

''என்னைய்யா இது? உன் தொகுதிப் பள்ளியைப் பற்றி அடிக்கடி சட்டமன்றத்தில் பேசுவாயே... இன்று அந்தப் பள்ளியின் ஆண்டு விழா. அழைப்பிதழ் தரவில்லையா?'' என்று கேட்டார் முதலமைச்சர்.''

''இல்லை அய்யா'' என்றார் சட்டமன்ற உறுப்பினர்.

முதலமைச்சர் தன்னுடன் வந்த அரசு அதிகாரிகளையும், தன் கட்சிக்காரர்களையும் ஒரு பார்வை பார்க்கிறார். அவர்கள்... என்ன செய்வது? என்ன சொல்வது என்று புரியாமல் தலைகுனிகிறார்கள்.''

'' 'சரி... சரி... சீக்கிரம் புறப்படு... ரெண்டு பேரும்... சேர்ந்தே விழாவுக்குப் போகலாம் என்கிறார் முதலமைச்சர்...''

'' இதோ... ஒரு நிமிடம்... சீக்கிரம் போய் குளித்துவிட்டு வந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு சட்டமன்ற உறுப்பினர் குடிசையின் உள்ளே போனார்.

ஒரு நிமிடம் இரண்டு நிமிடம்... பத்து நிமிடம் ஆயிற்று. குளிக்கப்போன சட்டமன்ற உறுப்பினர் வெளியே வரவில்லை. முதலமைச்சர் தவித்தார்.







நேரம் ஆகிக் கொண்டே இருந்தது.

''காத்திருந்து, காத்திருந்து பொறுமை இழந்த முதலமைச்சர், ''உள்ளே என்னய்யா.. பண்றே – இன்னுமா குளிக்கிற?'' என்று கூறிக் கொண்டே எட்டிப் பார்த்தார். ஆனால் அங்கே அவர் கண்ட காட்சி அவர் நெஞ்சை நெகிழ வைத்தது.

சட்டமன்ற உறுப்பினர் குளித்துவிட்டு, இடுப்பில் ஒரு சின்ன துண்டைக் கட்டிக்கொண்டு, தனது ஒரே வேட்டியைத் துவைத்து, ஒரு நுனியைக் கம்பத்தில் கட்டி மறு நுனியைக் கையில் பிடித்து... ஈரம் உலர வேட்டியை வேக வேகமாக அசைத்துக் கொண்டிருந்தார். இந்தக் காட்சியைப் பார்த்துக் கண்கலங்கிய முதலமைச்சர், கனிவுடன் உறுப்பினரைக் கேட்டார்.

''ஏனய்யா.. நான்னா நாலு வேட்டி வாங்கி உடனே அனுப்பட்டுமா?''

''வேணாங்க! இது கிழிஞ்சுப் போச்சுன்னா அப்புறமா கேட்கிறேன்'' என்கிறார் சட்டமன்ற உறுப்பினர்.

**அட்டைப்பட விளக்கம்**

முதலாம் அட்டை :

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1996-97 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை சட்டமன்றப் பேரவை முன் வைத்து உரையாற்றுதல்.

இரண்டாம் அட்டை:

மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னிலையில் 18.7.96 அன்று புதிய கார் தொழிற்சாலை நிறுவுவதற்குத் தென்கொரிய நாட்டைச் சேர்ந்த ஹுண்டாய் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது.

நான்காம் அட்டை :

திரு.ப. ஜீவானந்தம் அவர்களது வரைப்படம் அவரது பிறந்த நாளை (21.8.1907) யொட்டி வெளியிடப்படுகிறது.

சட்டமன்ற உறுப்பினரின் பதிலையும் அவர்தம் எளிமையையும் பார்த்து மிகவும் மகிழ்ந்தார் முதலமைச்சர்.

அவர்கள் வேறுயாருமல்ல, நம் தமிழ் நாட்டில் பிறந்தவர்கள்தான். இருவரும் தலைவர்கள். ஒருவர் – அதாவது சட்டமன்ற உறுப்பினர் தமிழ்நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்த அமரர் ப.ஜீவானந்தம், மற்றொருவர் முன்னாள் தமிழக முதலமைச்சர் காமராஜர் அவர்கள்.

– என். சி. ஞானப்பிரகாசம் எழுதி
''சின்னஞ்சிறு கதைகள்'' என்ற நூலிலிருந்து
நன்றி : கற்பக வித்யா பதிப்பகம்
ஜே. 6, லாயிட்ஸ் காலனி, சென்னை - 14


**தமிழரசு**

'தமிழரசு' தமிழ்
(மாதம் இருமுறை)
சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா .... ரூ. 72
அரையாண்டுச் சந்தா ... ரூ. 36
'தமிழரசு' ஆங்கிலம்
(மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ. 36
சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:
உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை
சென்னை - 600 002.


காலுக்குச் செருப்புமில்லை, கால் வயிற்றுக் கூழுமில்லை, பாழுக் குழைத்தோமடா - என் தோழனே பசையற்றுப் போனோமடா.

– தோழர் ஜீவா

# எப்படிக் கைகூடும்

தண்ணீரில் இருக்கும் மீனுக்குத்
தாகம் எடுத்ததாய் ஒரு தகவல் கேட்டு
வாய் விட்டுச் சிரித்தேன்!

உயிருக்கும் உயிரான உத்தமக் கூறு
உன் வீட்டுக்குள்ளேயே இருக்கின்ற
உண்மையை உணராமல்
குழம்பிய பார்வையுடன்
புனிதநகரம் ஒவ்வொன்றாகப்
புறப்பட்டுப் போய்க் கொண்டிருக்கிறாய்.

கபீர் உனக்கு ஒரு உண்மையைச் சொல்லுவான்:
கல்கத்தா - திபெத் என்று
கால்கடுக்க நடந்தாலும்
கடும்பயணம் சென்றாலும்
உனது ஆன்மா ஒளிந்திருக்கும் இடத்தை நீ
உணர முடியாவிட்டால், இந்த
உலகமே உனக்குப் பொய்யாகத்தான் ஆகும்.

கடவுள் கடவுள் என்று
கதைக்கிறோமே நாமெல்லாம்
உண்மையில் அது என்ன வென்று
இன்னமும் பிடிபடவில்லை எனக்கு.

அந்தி மயங்கும் நேரத்தில்
ஆரவாரக் குரல் எழுப்பி
ஆண்டவனை அழைக்கிறார்கள்!
ஏன்?
ஆண்டவன் செவிடு இல்லை என்பது நிச்சயம்;
அதனினும் நிச்சயம்,
சின்னப் பூச்சியொன்று நடக்கையிலே
சிறு சிறு கால்களால் அது எழுப்புகின்ற
குறுகுறு சத்தத்தைக் கூட

குழப்பமின்றிக் கேட்கின்ற
வல்லமை படைத்தவன் அவன் - என்பது!

ஜபமாலையைக் கையில் ஏந்தி
உருத்திராட்சக் கொட்டையை உருட்டியுருட்டித்
தள்ளுங்கள்...

விதவிதமான வினோத வடிவங்களைக்
குழைத்துக் குழைத்து நெற்றி மீது
தீட்டுங்கள் ..

முடியைச் சடையாக்கி முடிந்த அளவு நீட்டி
சாகசத்தை அதில் சேர்த்தே
காட்டுங்கள்...



ஆனால்,
விசையைத் தட்டியதும் விரைந்து சுடும்
வகையில்
குண்டுகள் நிரம்பிய துப்பாக்கி
உள்ளத்தின் பள்ளத்தில்
உறைந்திருக்கும்போது
கடவுளை அடைவது
எப்படி உங்களுக்குக் கைகூடும்?

- கபீர்.





மருத்துவக் கட்டுரை:

# சிறுவர்களைப் பாதிக்கும் சர்க்கரை நோய்




**டாக்டர் அ. பன்னீர் செல்வம்**
செயலாளர், இந்திய நீரிழிவுக் கழகம்-தென் பிரிவு

சில நோய்கள் பெரியவர்களுக்கு மட்டுமே வரும்; சில நோய்கள் சிறுவர்களுக்கு மட்டுமே வரும். பேதம் பாராமல் சில நோய்கள் இரு தரப்பினருக்கும் வரும்.

அப்படி வருகின்ற நோய்களைப் பெரியவர்களால் தாங்கிக் கொள்ள முடியும். சிறியவர்களால் அது முடியாது. இது மட்டுமல்ல; அவ்வாறு பாதிக்கப்பட்ட சிறியவர்களைப் பார்க்கிற போது பரிதாபமாக இருக்கும். இந்தப் பரிதாபமே பல பெரியவர்களையும் – அதாவது பெற்றோர் களையும் மனபாதிப்பிற்கு ஆளாகச் செய்து விடும்.

'சர்க்கரை' என்கிற பெயர், கேட்பதற்கு இனிப்பாக இருந்தாலும், ''சர்க்கரை நோய்'' மிகக் கசப்பான உடல் நலக்கேட்டை உண்டாக்கும் ஒரு நோயாகும். இந்த நோயானது பெரியவர் - சிறியவர் வேறுபாடின்றி எல்லோருக்கும் ஏற்படும். சின்னஞ்சிறிசுகளை அந்நோய் எவ்வாறெல்லாம் தாக்கும் - அந்த நோய்க்கு ஆளான பாலகர்களைப் பாதுகாப்பது எப்படி என்றெல்லாம் எல்லோரும் முக்கியம் தெரிந்து கொள்ள வேண்டும் (ஒரு சிலர் இதை உடலில் உள்ள குறையே என்று கூறினாலும் இது பல தொந்தரவுகளைக் கொடுக்கும் ஒரு நோயே).

இளம் வயதினரையும் சர்க்கரை நோய் பரவலாகத் தாக்குகிறது. நூறு சர்க்கரை நோயாளர்களுள் ஒருவர் முதல் நான்கு பேர் வரை இருபது வயதுக்குட்பட்டவர்கள் இந்நோயால் பாதிப்புக்குள்ளாகி இருக் கின்றனர்.

### நோய்க்குண்டான காரணம்:

இந்த நோய் சிறுவர்களிடையே வரு வதற்குப் பலகாரணங்கள் கூறப்படுகின்றன; ஆனால் பெற்றோர்கள் அதில் குழப்பம் அடையவேண்டாம். ஏனெனில் 'போலியோ' அந்த நோய்க் கிருமியால் வருவது போலவோ, அல்லது தட்டம்மை அந்தநோய்க் கிருமியால் வருவது போலவோ இந்நோய்க்கு இதுதான் காரணம் எனத் திட்டவட்டமாகக் கூற இயலவில்லை. இன்னும் மருத்துவ ஆய்வுகள் நடந்தவண்ணம் இருக்கின்றன.

### நோயின் அறிகுறிகள்

இந்நோயால் பாதிக்கப்பட்ட குழந்தை திடீரென அடிக்கடி அதிகமாகச் சிறுநீர் கழிக்கும்.

அதிகத் தண்ணீர் குடிக்கும். அதாவது எப்போதுமே தாகம் அதிகமிருக்கும். அதுமட்டுமல்ல; பசியும் அதிகம் இருக்கும். அதிகம் சாப்பிட்டும் கூட, உடல் எடை வேகமாகக் குறையும். குழந்தை மிகச் சோர்வுடன் காணப்படும்.



இவைகளை அலட்சியப்படுத்தினால் 48 மணி நேரத்திற்குள்ளாகவே, அதாவது இரண்டு நாட்களுக்குள் குழந்தை நினைவிழந்த நிலைக்குச் சென்றுவிடும். அவ்வாறு சென்றால்கூட, இரு நாட்களுக்கு முன்பு இதுபோன்ற தொந்தரவுகள் அக்குழந்தைக்கு இருந்திருந்தால், சிகிச்சை அளிக்கின்ற மருத்துவரிடம் அதைக் கூறவேண்டும்.

நினைவிழந்த நிலையில் உள்ள குழந்தைகளுக்குச் சிகிச்சை அளிக்கும்போது, குறைந்தது ஒரு முறையாவது சர்க்கரையின் அளவை இரத்தத்திலும், சிறு நீரிலும் பரிசோதனை செய்து பார்க்கவேண்டும்.

இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகம் இருந்தால் இன்சுலின் ஊசியைப் போட்டுக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவந்து நினைவிழந்த நிலையில் உள்ள குழந்தையைக் குணமாக்கி விடமுடியும். தக்க சமயத்தில் சென்றால்தான் இதுவும் சாத்தியமாகும்; இல்லையேல் சிரமம்தான்.

அதன் பின்பு, பெற்றோர்கள் மிகக் கவனமாகச் செயல்பட வேண்டும், மீண்டும் குழந்தை நினைவிழந்த நிலைக்குப் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

### நோயைக் கட்டுப்படுத்த...

மருத்துவர் பரிந்துரை செய்யும் இன்சுலின் ஊசியைத் தொடர்ந்து குழந்தைக்குப் போட்டுவர வேண்டும். சற்று வளர்ந்தவராக இருந்தால், அவர்களே ஊசி போடப் பழகிக் கொள்ளுவது நல்லது; சிறு குழந்தைகளுக்குப் பெற்றோர்களே கூட ஊசி போடக் கற்றுக் கொள்ளுவதும் நல்லது.

குறைந்தது ஒருமுறை அல்லது இருமுறையாவது ஊசி போட்டால்தான் சர்க்கரை நோயானது ஒரு கட்டுப்பாட்டிற்குள் இருக்கும்.

சிறுவர்களுக்கு ஏன் தொடர்ந்து ஊசி போட வேண்டுமென்றால் அவர்களுக்கு இன்சுலின் சுரக்கும் பீட்டாசெல்கள் முற்றிலும் அல்லது பெருமளவு, செயலிழந்துவிடுகின்றன. இதன் காரணமாக உடலில் இவர்களுக்கு இன்சுலின் உற்பத்தியே இருக்காது; அல்லது போதுமானதாக இருக்காது. எனவே இவர்கள் இன்சுலின் ஊசியைத்தான் நம்பி வாழவேண்டியிருக்கும். ஊசியை மருத்துவர் அறிவுரைப்படி தொடர்ந்து போட்டு வந்தோமானால், மற்ற குழந்தைகளைப் போலவே இவர்களும் இச்சமுதாயத்தில் நன்கு வாழலாம்.





### உணவு முறைகள்:

சர்க்கரை வியாதிக்கு ஆளான சிறுவர்களுக்கு, உணவில் சில கட்டுப்பாடுகள் அவசியம் தேவைப்படுகிறது. இதைப் பெற்றோர்கள் மருத்துவரின் அல்லது உணவுப் பரிந்துரையாளரின் அறிவுரைப்படி பக்குவமாகக் குழந்தைக்கு எடுத்துச் சொல்லி, அனைத்து இனிப்பு வகைகளையும் விருப்பம்போல் சாப்பிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இது கொஞ்சம் சிரமமான காரியம் தான். ஏனெனில் வீட்டிலேயும், பள்ளிக்கூடங்களிலும் மற்ற குழந்தைகளுடன் உள்ள போது இவர்களை மட்டும் தனிமைப் படுத்துவது அவ்வளவு எளிதில்லை. ஆனால், வேறு வழியில்லை. மற்ற உணவுவகைகளை மருத்துவரின் அறிவுரைப்படி கொடுத்து வரலாம்.



வேறு சில நோய்கள் இந்நோய் உள்ள சிறுவர் சிறுமியருக்கு ஏற்பட்டால் - உதாரணத்திற்கு வாந்தி, பேதி, சளி, ஜுரம், மலேரியா, டைபாய்டு போன்ற நோய்கள் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்; அப்போது, இரத்தத்தில் சர்க்கரையின் அளவைப் பார்த்து அதற்குத் தகுந்தாற்போல, மருத்துவர் சொல்லுவது போல் இன்சுலின் ஊசி போடவேண்டும்; மற்ற நோய்க்கும் மருந்துகள் சாப்பிடவேண்டும்.

இவ்வாறு மற்ற நோய்க்கான சிகிச்சைக்குச் செல்லுகிற போது சர்க்கரை நோய்ச் சிகிச்சை பற்றிய தகவல்களை மருத்துவரிடம் காண்பிக்க வேண்டும்.

### சர்க்கரை அளவு குறைந்தால்...

மாதம் ஒருமுறை சாப்பாட்டிற்கு முன்பு ஒரு இரத்தப்பரிசோதனை, எழுதிக் கொடுத்த அளவு ஊசி போட்டுக்கொண்டு, அரை மணி நேரம் கழித்தவுடன் சாப்பிட்டுவிட்டு இரண்டு மணி நேரம் பொறுத்து மீண்டும் இரத்தப் பரிசோதனை செய்து பார்த்துக்கொள்ள வேண்டும்.

சாப்பாட்டிற்கு முன் - 80 -120 மி.கி
சாப்பிட்டு இரண்டு மணி
நேரம் கழித்து- 120 160- மி.கிவரை இருத்தல் நல்லது.

அதே நேரத்தில் குழந்தை தாழ் சர்க்கரைநிலைக்குச் சென்று விடக் கூடாது. சர்க்கரையின் அளவு 60 மி.கி. குறைவானால் அதிகமான பசி, 'சில்' என்று வேர்த்துப்போதல், படபடப்பு, கை கால்களில் நடுக்கம், தெளிவின்மை, உளறல் மயக்கம் நினைவிழத்தல் ஆகியவை ஏற்படும்.

நினைவு இழப்பதற்கு முன், ஏதாவது ஓர் இனிப்பான திரவத்தை உடனே கொடுத்து விட வேண்டும்.

நினைவிழந்து இருந்தால் உடனே மருத்துவரிடமோ அல்லது அருகில் உள்ள மருத்துவமனைக்கோ அழைத்துச்செல்ல வேண்டும். இதற்காகத்தான் அனைத்து நீரிழிவு நோயாளிகளும் தங்களிடத்தில் ஓர் அடையாள அட்டையை வைத்துக்கொள்ள வேண்டும். அதில் சர்க்கரை நோயாளியினுடைய முகவரி, சிகிச்சை எடுத்துக்கொள்ளும் மருத்துவர் அல்லது மருத்துவமனையின் முகவரி இன்சுலின் ஊசி அளவு விபரம் முதலியன குறிக்கப்பட்டிருக்க வேண்டும். இது முதல்முறையாக சிகிச்சை அளிக்கும் மருத்துவருக்குப் பெரிதும் உபயோகமாக இருக்கும்.



**மாற்றுச் சிகிச்சை**

இந்த நோய் நம் நாட்டில் மட்டும்தான் என்பதில்லை; இந்நாள்வரை, உலகம் முழுவதும் இன்சுலின் ஊசி தான் போடப்பட்டு வருகிறது. மற்ற சிகிச்சைமுறைகளால் இது கட்டுப்பாடு அடைவதுமில்லை; குணமாவதும் இல்லை. ஆனால் பெற்றோர்கள் ஊசிக்குப் [illegible] கொண்டு மாற்றுச் சிகிச்சை முறைக்கு - அதாவது மருந்து சாப்பிட்டாலே போதும் என்ற அளவில் குழந்தைகளைக் கொண்டுசெல்கின்றனர்; அதுதவறு.

சில நாட்களுக்குள் இக்குழந்தைகள் இச்சிகிச்சை பலனின்றி மயக்க நிலையை அடைந்து, உயிருக்கு ஆபத்தான கட்டத்தில் மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறார்கள். மாற்றுச்சிகிச்சைக்குத் தங்கள் மனம் செல்வதாய் இருந்தால்கூட, அடிக்கடி இரத்தப் பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். சில மாற்றுச் சிகிச்சை மருத்துவர்கள், பரிசோதனை தேவையில்லை எனத்தவறான அறிவுரைகூறவும்கூடும். ஆனால் ஒன்று, பரிசோதனையில் சர்க்கரையின் அளவு அதிகம் இருந்தால், அச்சிகிச்சையை நிறுத்தி விட்டு இன்சுலின் ஊசியைப் போட்டுக் கொள்ளத்தான் வேண்டும்.

சர்க்கரைநோய்க்கட்டுப்பாடு மற்றும் அதன் பின்விளைவுகள் கட்டுப்பாடு' (Diabetes Control and Complications Trial - DCCT) என்ற ஒரு பெரிய பத்தாண்டுக்கால ஆராய்ச்சி அண்மையில் நடந்து முடிந்தது; அதன் முடிவு என்னவென்றால் சரக்கரை நோயை நல்ல கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் அதனால் வரும் தொந்தரவுகள் தவிர்க்கப்படுவதோடு, பின்விளைவுகளான கண்கள் பாதிப்பு, சிறுநீரகம் பாதிப்பு, கால் நரம்புகள் பாதிப்பு முதலியன பெருமளவு தடுக்கப்படுகின்றன. தவிர்க்கப்பட்டுகிறன. குழந்தைகள் இந்தநோய் இருந்தாலும் மகிழ்வோடு வாழமுடிகிறது.

ஆகவே, பெற்றோர்கள்தங்கள்குழந்தைக்கு இந்நோய் வந்துவிட்டதே என அஞ்சத் தேவையில்லை. சற்று எச்சரிக்கையுடன் சமயோசிதமாக மேற்கூறியபடி செயல்பட்டால் போதும்; இந்நோய் இருந்தும் நோயற்ற மற்ற குழந்தைகள் போல் அக்குழந்தையும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நோய்ச் சிகிச்சைக்குத் தொடர்ந்து பணச் செலவு இருப்பதால் அதாவது இரத்தப் பரிசோதனைகள், இன்சுலின் ஊசி மருந்து, ஊசிக்குழல்கள், மருத்துவர் செலவு எனத்தொடர்ந்து மாதந்தோறும் செலவு செய்யப்பட வேண்டியுள்ளது. பெரும்பாலான பெற்றோர்களால் இது இயலாமல் போகிறது.

இவ்வாறான நோய் பாதிப்பிற்குள்ளான குழந்தைகளின், அக்குழந்தையின் ஆயுட்காலம் முழுவதும் தேவைப்படும் மாதாந்திர மருத்துவ செலவுக்காகப் பெற்றோர்களுக்குப் பணச்சிரமம் கொடுக்காமல் இக்குழந்தைகள் இச்சமுதாயத்தில் வாழ முடியும். இதற்காக - 72, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை 600 014 என்ற முகவரியில் ''இன்சுலின் வங்கி'' என்ற அமைப்பை இந்திய நீரிழிவுக் கழகம், தென்பிரிவும் அரிமா சங்கங்கள் 324/ம் இணைந்து ஆரம்பித்துள்ளன. இதன் மூலம் ஏழைக் குழந்தைகளுக்கு இம் மருத்தை இலவசமாக இவ்வமைப்பு வழங்கிவருகிறது. கொடையுள்ளம் கொண்டோரின் நன்கொடை மூலம் இது இயங்குகிறது. நன்கொடைக்கு வருமான வரி விலக்கு உள்ளது. அதில் உறுப்பினராக விரும்புவோர் அம்முகவரிக்குத் தொடர்பு கொண்டு விவரம் அறியலாம்.

---

**இந்த இதழின் நடுப்பக்கத்தில்**
**மத்தியில் உள்ள 'பின்'னை**
**மட்டும் கழற்றுங்கள்;**
**நிதிநிலை அறிக்கையும் முதல்வர்**
**பதில் உரையும் உங்களுக்குத்**
**தனிப்புத்தகமாகக் கிடைக்கும்!**





**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எங்கள் உயிராக, மூச்சாக, இதயத் துடிப்பாக இருக்கின்ற அண்ணாவின் திருப்பெயரை அனுப் பொழுதும் மறவாமல் - அவர் உருவாக்கிய அரசை, அவர் வழி நின்று மீண்டும் தொடரத் துணை நின்ற தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கும் தோழமை உணர்வுடன் ஒத்துழைத்த நல்லியக்கங்களுக்கும், நன்னெஞ்சம் கொண்ட நண்பர்களுக்கும், அமைந்துள்ள அரசுக்கு இன்மொழியும் இடித்துரையும் நல்கி வழி நடத்தும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கும், ஏற்றமிகு ஏடுகளுக்கும் என் நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

''என்னருந் தமிழ்நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞா னத்தால்,
பராக்கிர மத்தால், அன்பால்
உன்னத இம மலை போல்
ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?

கைத்திறச் சித்தி ரங்கள்
கணிதங்கள் வான நூற்கள்,
மெய்த்திற நூற்கள், சிற்பம்,
விஞ்ஞானம் காவி யங்கள்
வைத்துள தமிழர் நூற்கள்
வையத்தின் புதுமை என்னப்
புத்தக சாலை எங்கும்
புதுக்கு நாள் எந்த நாளோ?

கண்களும் ஒளியும் போலக்
கவின்மலர் வாசம் போலப்
பெண்களும் ஆண்கள் தாமும்
பெருந்தமிழ் நாடு தன்னில்,
தண்கடல் நிகர்த்த அன்பால்
சமானத்தர் ஆனார் என்ற
பண்வந்து காதிற் பாயப்
பருகுநாள் எந்த நாளோ?''

– எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் ஏக்கங் கொண்டு கனவு கண்ட அந்த நாளை உருவாக்க நாங்கள் எடுக்கும் நடவடிக்கைகள், தீட்டும் திட்டங்கள், ஓர் அணிற் குஞ்சின் முயற்சியாகவாவது இருக்கும் என்ற நம்பிக்கையுடன் - மிக்க அடக்கத்துடன், 1996-97 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைத் தமிழக மக்களுக்காகத் தக்கார் நிறைந்துள்ள இந்த அவை முன் வைக்கின்றேன்.

**கூட்டாட்சித் தத்துவம்**

2. இந்த அறிக்கையை உங்கள் முன் வைக்கும் இந்நாளில் இந்தியத் திருநாட்டின் அரசியல் அரங்கில் எத்தனையோ வகைவகையான திருப்பங்கள்! உலகத்திலேயே இப்போது ஒரு கூட்டாட்சிப் புரட்சி (Federal Revolution) நடந்து வருகின்றது. உலக மக்கள் தொகையில் 40 சதவிகிதம் பேர் கூட்டாட்சி அமைப்பிலே, அதாவது உண்மையான கூட்டாட்சி (Formally Federal) அமைப்பிலே வாழ்கிறார்கள். அடுத்து, மூன்றில் ஒரு பகுதியினர் ஏதாவது ஒருவிதமான கூட்டாட்சி அமைப்பில் (Federal Arrangement) வாழ்கின்றார்கள். இப்படியொரு திருப்பம் ஏற்பட்டுள்ள நிலையை மனத்திற்கொண்டு, திரு. தேவ கவுடா அவர்கள் தலைமையில் மத்தியில் உள்ள ஐக்கிய முன்னணி அரசு, குறைந்த பட்சத் திட்டங்கள் வெளியிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

3. நாம் விரும்பும் எல்லா அம்சங்களும் இத்திட்டத்தில் இடம் பெற்றதாக முழுமையான மன நிறைவு கொள்ள முடியாவிட்டாலும், ஏழை எளியோர்க்கு விரோதமான, நாட்டு நலன்களுக்கு எதிரான அம்சங்கள் மாற்றப்பட்டுள்ளன என்பதிலும், தூய்மையான - பொறுப்புள்ள - மதச்சார்பற்ற ஆட்சியை வழங்குவதுதான் குறிக்கோள் என்பதிலும், இந்தக் குறைந்த பட்சத் திட்டம் நமது ஆதரவையும் அன்பான வரவேற்பையும் பெறுகிறது என்பதில் அய்யமில்லை.

4. மத்திய - மாநில உறவுகள் பற்றி இதுவரை ஐந்து ஆவணங்கள் வந்திருக்கின்றன.

1. 1969 இல் நிர்வாகச் சீர்திருத்தக் குழு அறிக்கை

2. மேலும் அதே ஆண்டு என் தலைமையிலே அமைந்த தி.மு.க அரசு இந்தியாவிலேயே முதல் முறையாக ராஜமன்னார் குழு அமைத்து அறிக்கை கேட்டது.

3. 1974 இல் வெள்ளை அறிக்கை தயாரித்து, மாநில சுயாட்சித் தீர்மானம் தமிழகச் சட்டமன்றத்திலே கொண்டுவந்து நிறைவேற்றியது.

4. 1977இல் மேற்கு வங்கத்தில் திரு. ஜோதிபாசு அவர்களின் அரசு Memorandum on Centre-State Relations என்று தயாரித்தது. அதில் கூட்டாட்சிக் கொள்கை வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது with a view to enshrine in full, the majesty of the federal principles;

5. 1983இல் மைய அரசு முதல் முறையாக மத்திய-மாநில உறவுகளைப் பற்றி ஆராய சர்க்காரியா கமிஷன் அமைத்தது.

ஆனால், இது மைய அரசு தானாக முன்வந்து இந்தியாவில் உண்மையான ஒரு கூட்டாட்சி முறை வேண்டுமென்று முழு மனதோடு அமைத்த கமிஷன் அல்ல.

5. அந்தக் கமிஷனின் அறிக்கை பற்றி தி.மு.கழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய ஏமாற்றமே! இந்தியாவைக் கூட்டாட்சி அமைப்புக்கு அழைத்துச் செல்ல எந்தவிதமான உருப்படியான யோசனைகளும் அதில் சொல்லப்படவில்லை. சில கருத்துக்கள் வேண்டுமானால் சொல்லப்பட்டிருக்கலாமே தவிர, இந்தியாவை முழு கூட்டாட்சியாக மாற்றுவதற்கான யோசனைகள் எதுவும் அதில் தெரிவிக்கப்படவில்லை. I would call it an advocacy of status quoism with small changes.

6. சர்க்காரியா கமிஷன் அறிக்கை அலமாரியில் தூசு படிந்து கிடந்தது. அது மீளாத் துயில் கொண்டுவிட்டது என்று நினைத்துக் கொண்டிருந்தோம். அதில், 356வது விதியில் சில மாற்றங்களை மட்டுமே சொல்லியிருந்தார்கள். மேலும், நிறுவன வரியினை (Corporation Tax) மாநிலங்களோடு மைய அரசு பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று பெரிய மனது வைத்துக் கூறியிருக்கிறார்கள். இதைத் தவிர, உண்மையான கூட்டாட்சி பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

7. உதாரணமாக, 1985இல், கனடா அரசு ''மக்டனால்டு கமிஷன்'' அமைத்தது. அதன் கொள்கை Canadian Federalism Past, Present and Future. இது பெரிய மாற்றங்களை எல்லாம் தந்தது. ஆனால், சர்க்காரியா கமிஷன், மாற்றங்கள் எதையும் சுட்டிக் காட்டவில்லை. இருந்தாலும், அந்தச் சர்க்காரியா கமிஷன் அறிவித்த குறைந்தபட்ச மாற்றங்களைக் கூட அன்றைய மைய அரசு கொண்டு வரவில்லை.

8. ஆனால், இப்போது குறைந்த பட்சத் திட்டங்களில் Two Track Policyக்கு வழிகோலியிருக்கின்றது. ஒன்று மாநில சுயாட்சி வழங்க - அதிகமான அதிகாரங்களை மாநிலங்களுக்குத் தருவது, இன்னொன்று, உயர்நிலைக் குழு அமைத்து சர்க்காரியா கமிஷன் அறிக்கையைப் பற்றி மேலும் காலத்திற்கேற்றவாறு அதிகமாக மாற்றங்களைச் செய்வது - அது சம்பந்தமாக மூன்று மாதங்களில் அறிக்கை கேட்போம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மூன்று மாதங்களில் அறிக்கை பெற்றுப் பொது மக்கள் மத்தியில் அதனை வைப்போம் என்றும் கூறப்பட்டுள்ளது. இது கூட்டாட்சி வரலாற்றில் ஓர் எல்லைக்கல்.

9. அண்மையில் சென்னைக்கு வந்த உள்துறை அமைச்சர் திரு. இந்திரஜித் குப்தா அவர்களிடமும் மத்திய மாநில உறவுகள், அதிகாரப் பங்கீடுகள் குறித்து விவாதித்திருக்கிறேன்.

10. மத்திய மாநில உறவுகள் குறித்து விவாதிக்க முதலமைச்சர்களின் கூட்டத்தை விரைவில் கூட்டப் போவதாக இந்தியப் பிரதமர் கூறியிருப்பது ஓர் இனிப்பான செய்தியாகும்.

11. இந்தியா பல கலாச்சாரங்கள் மலர்ந்த சோலை என்பதை யாரும் மறந்து விட முடியாது. இதனைச் சுற்றுலா வாரத்தின் (Tourism Week) போது தான் எல்லா மாநிலங்களும் நினைத்துப் பார்க்கின்றன. அதைவிட இப்படி ஒரு திருப்பம், இந்தத் திட்டத்தின் வாயிலாக வந்திருப்பது வரவேற்கத் தக்கது. இந்த அறிக்கையில் தொடர்ச்சி (Continuity); மாற்றம் (Change) காலத்திற் கேற்ற முடிவு (Pragmatism) என்ற மூன்றும் இடம் பெற்றுள்ளன.

12. பொருளாதாரக் கொள்கையினைப் பொறுத்த வரையில் வெளிநாட்டு மூலதனத்தை வரவேற்கின்ற அதே நேரத்தில் தேவைப்படாத இடங்களில் அவைகளைக் கட்டுப்படுத்தலாம். அது கழுத்தில் அணிவிக்கும் மாலையாக இருக்கலாமே தவிர, கழுத்தை இறுக்கும் கயிறாக இருத்தலாகாது. நாட்டுடைமையாக்கப்பட்ட பொது நிறுவனங்களைக் கண்ணை மூடிக் கொண்டு தனியார் மயமாக்கவில்லை. இதுவும் வரவேற்கத் தக்கது. அரசுத் துறை நிறுவனங்களின் பங்குகளை விற்கும்போது எந்தவிதமான ரகசியமும் இருக்காது. Disinvestment Commission ஒன்று அமைத்து, அந்தக் குழுவின் மூலமாக இந்தப் பங்குகள் விற்பனை பற்றி முடிவெடுக்கப்படும். அதன் மூலம் வருகின்ற பணத்தைக் கொண்டு, துண்டு விழுகின்ற பட்ஜெட் பற்றாக்குறையைப் போக்கப் போவதில்லை. வறுமையைப் போக்கும் திட்டங்களுக்கும் மக்களின் அடிப்படை வசதிகளுக்கும் தான் அவை பயன்படும்.

13. சமூக நீதியில் மைய அரசு அலுவலகங்களில் மட்டுமே வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு இப்போது உத்திரவாதமளிக்கப்படுகிறது. மைய அரசு நடத்தும் கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு செய்யப்படுவது இந்தக் குறைந்தபட்சத் திட்டங்களிலே குறிப்பிடப்படவில்லை. அது ஒரு குறை என்ற போதிலும், அதுவும் விரைவில் நீக்கப்படும் என்று நம்புகிறேன்.

14. இதில் அங்கம் வகிக்கும் எந்தக் கட்சியும் தன்னுடைய கொள்கையை இந்தத் திட்டத்தின் மூலம் தியாகம் செய்யவில்லை. அதனால்தான், இதனுடைய பெயரே ''பொதுவான குறைந்த பட்சத் திட்டம்'' (Common Minimum Programme) என்பதாகும்.

15. பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட நமது நாட்டில் ஒருமைப்பாடு வலுப்பெற்று நிலைப்பெற்றிருக்க மாநில உரிமைகள் உண்மையான சுயாட்சித் தத்துவத்துடன் வழங்கப்பட்டாக வேண்டும் என்பதிலும், இந்தி ஆதிக்கத்திற்கு இடம் தராமல் - மாநிலங்களின் ஆட்சி மொழிகள் அனைத்துமே மைய ஆட்சி மொழிகளாக ஆக வேண்டும் என்பதிலும், முதற்கட்டமாகத் தமிழையும் மைய ஆட்சி மொழியாக்க வேண்டுமென்பதிலும், இந்த அரசு உறுதியுடன் இருக்குமெனச் சூளுரைக்கிறேன்.

16. இத்தகைய கொள்கை - கோட்பாடு - குறிக்கோள் அமைந்த பின்னணியுடன் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

17. அரசின் பல்வேறு துறைகள் பற்றித் தனித்தனியாக இந்த அவையில் மானியங்கள் முன்மொழியப் பெற்று விவாதிக்கப்பட இருப்பதால், இந்த அறிக்கையின் மூலம், பல்வேறு துறைகளில் கோடிட்டுக் காட்டக் கூடிய அளவுக்குச் செயல்படுத்தப்பட இருக்கின்ற திட்டங்கள் குறித்து மட்டுமே சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதையும் அவை உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவது எனது கடமையாகும்.

**தேர்தல் வாக்குறுதிகள்**

18. எங்கள் தேர்தல் அறிக்கையில் பல்வேறு வாக்குறுதிகளை நாங்கள் அறிவித்திருந்தோம். பின்வரும் வாக்குறுதிகளை ஆட்சிக்கு வந்த இந்த இரண்டு மாதங்களுக்குள் செயல்படுத்தத் தேவையான அனைத்து

நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம் என்பதை அறிவீர்கள்.

- ★ ஆட்சிப் பொறுப்பேற்றதும் முதல் ஆணையாக தரை வரி நீக்கம்;
- ★ மருத்துவமனைப் பார்வையாளர் கட்டணம் ரத்து;
- ★ உள்ளாட்சி மன்றங்கள் அனைத்திற்கும் வருகின்ற செப்டம்பர் மாதத்திற்குள் தேர்தல்;
- ★ தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 30.9.96-க்குள் தேர்தல்;




- ★ வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 112.33 கோடி பயிர்க் கடனை மத்திய காலக் கடனாக மாற்றம்;
- ★ பட்டா பாஸ் புத்தகம் வழங்கிட ரூ. 24 கோடி நிதி ஒதுக்கீடு;
- ★ விவசாயிகளுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் சீரான முறையில் மின்சாரம் வழங்க ஆணை;
- ★ குடிநீர் வசதியற்ற குடியிருப்பே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டிய அளவிற்கு நிதி ஒதுக்கீடு;
- ★ நடப்பாண்டிற்குள் கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குக் கொண்டுவரத் தீவிர ஏற்பாடு;
- ★ ஏற்கெனவே உள்ள 169 தொழிற் பயிற்சிப் பள்ளிகள் போக, எஞ்சியுள்ள 218 ஊராட்சி ஒன்றியங்களில் படிப்படியாக வரும் மூன்றாண்டுகளில் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் தொடங்க ஆணை;
- ★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத் தொகை ரூ. 5,000-லிருந்து ரூ. 10 000 ஆக உயர்வு;
- ★ டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறுத் திட்டத்தின் கீழ் உதவித் தொகை ரூ. 300-லிருந்து ரூ. 500 ஆக உயர்வு;
- ★ குடும்பத் தலைவர் இறந்து போனால், அவர் குடும்பத்தினருக்குக் குடும்பத் துயர் துடைப்புத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதியுதவி ரூ. 5,000-லிருந்து ரூ. 7,500 ஆக உயர்வு;
- ★ விபத்தில் உயிரிழப்போரின் குடும்பத்திற்கு விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதியுதவி ரூ. 10,000-லிருந்து ரூ. 15,000 ஆக உயர்வு;
- ★ கடந்த ஆட்சி அளித்த முறைகேடான சலுகைகளினால் கிராமப்புறங்களுக்குத் தனியார் பேருந்துகள் செல்ல முடியாத நிலையை மாற்றிடச் சட்டம் நிறைவேற்றம்;
- ★ ஒப்பந்தப்புள்ளி (Tender) பெறுவதில் பெருகியிருந்த ஊழல்கள் ஒழிப்பு;
- ★ அரசுக் கருவூலத்திற்கு வரவேண்டிய நிதி திசைமாறி எங்கோ சென்று கொண்டிருந்ததைத் திருப்பி, சில்லறை விற்பனை விலையை உயர்த்தாமலேயே, ஆண்டொன்றுக்கு ரூ. 75 கோடி அரசுக்கு வருவாய் ஈட்டும் வண்ணம் Vend Fee யை உயர்த்தி விதிப்பு;
- ★ ஆண்டொன்றுக்கு அரசுக்கு 6 கோடி ரூபாய் மொலாசஸ் ஏற்றுமதியில் வரவேண்டியதில் ஊழல் நடைபெற்றதைத் தடுத்து நிறுத்த சேவைக் கட்டணம் விதிப்பு;
- ★ குடிசை மாற்று வாரிய வீடுகளின் பழுதடைந்த அளவை ஆய்வு செய்து முன்னுரிமை அடிப்படையில் அவற்றைச் செப்பனிட ரூ. 5 கோடி நிதி ஒதுக்கீடு;

### ஊழல் ஒழிப்பு

19. இந்த அரசை உருவாக்க - மக்கள் அளித்துள்ள தீர்ப்பு - ஊழலை ஒழிப்பதற்காகவும், ஊழல் செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு உரிய தண்டனையை வழங்க வேண்டும் என்பதற்காகவும் தான். அதே நேரத்தில் இனி ஊழல் நடைபெறாமல் தடுக்கவும் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை









நாம் மறந்துவிடவில்லை. இது சம்பந்தமாக அரசின் நடைமுறைகளில் - நிர்வாக அமைப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அதற்கான வழிமுறைகள் காணப்படும் என்று தேர்தலுக்கு முன்பே நான் அறிவித்திருந்தேன். எனவே, இந்தப் பிரச்சினை குறித்து ஒருங்கிணைந்த முறையிலே ஆய்வு செய்து தேவையான சீர்திருத்தங்களை அரசுக்குப் பரிந்துரைக்க ஓர் உயர்நிலைக் குழு உடனடியாக உருவாக்கப்படும்.

### மைய - மாநிலப் பொருளாதார உறவுகள்

20. மைய வரி வருவாய் இனங்களில் குறிப்பிட்ட சிலவற்றை மட்டுமே மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நடைமுறையை மாற்றி மைய அரசின் முக்கியமான வரிகள் அனைத்தும் அடங்கிய ஒட்டு மொத்த வரி வருவாயில் குறிப்பிட்ட ஒரு பங்கினை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்ற பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரையை வரவேற்கும் அதே நேரத்தில், மாநிலங்களின் பங்கு ஒட்டுமொத்த மைய வரி வருவாயில் 29 விழுக்காடாக இருக்க வேண்டுமென்ற அந்த நிதிக் குழுவின் பரிந்துரை எங்களுக்கு மனநிறைவு அளிக்கவில்லை. ஒட்டுமொத்த மைய வரி வருவாயில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பகுதி மாநிலங்களின் பங்காக அமைய வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.

21. 1970 ஆம் ஆண்டில் மைய அரசின் மொத்த முதலீடான ரூ. 3885 கோடியில், தமிழ்நாட்டின் பங்கு ரூ. 312 கோடி. அதாவது 8.03 விழுக்காடாக இருந்தது. 1980 ஆம் ஆண்டிற்குப் பிறகு மைய அரசின் மொத்த முதலீடு கணிசமாக உயர்ந்து 1993ஆம் ஆண்டில் ரூபாய் 1 இலட்சத்து 73 ஆயிரத்து 501 கோடி அளவை எட்டிய போதிலும், தமிழ்நாட்டிற்கான பங்கு, சம அளவில் உயரவில்லை. அகில இந்திய முதலீட்டில் தமிழ்நாட்டின் பங்கு 5 விழுக்காட்டிற்கும் குறைவாகவே அமைந்தது. இந்த நிலையை முற்றிலும் மாற்றியமைத்து ஆக்கபூர்வ முதலீடுகளைச் செய்ய வேண்டும் என்ற மைய அரசை வலியுறுத்தி வருகிறோம். இதில் முதற் கட்டமாகத் தூத்துக்குடித் துறைமுக விரிவாக்கத் திட்டத்தைத் துரிதப்படுத்துமாறு கோரியுள்ளோம். கோரிக்கை நிறைவேறும் என்று நம்புகிறோம். மேலும், இத்திட்டத்துடன் நெருங்கிய தொடர்புள்ள சேது சமுத்திரத் திட்டத்தையும் விரைவாகச் செயல்படுத்த வேண்டும் என்றும் மைய அரசிடம் கேட்டுள்ளோம்.

22. இரயில்வே அமைச்சகத்தால் சென்னைப் பெருநகரில் செயல்படுத்தப்பட்டு வரும் துரிதப் போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணி, லஸ்ஸிலிருந்து வேளச்சேரி வரை நீட்டிக்கப்பட வேண்டும். இதற்கான நிதி ஒதுக்கீட்டில் மூன்றில் இரண்டு பங்கை மாநில அரசு ஏற்கும் என இதற்கு முந்தைய அரசு மைய அரசுக்குக் கொடுத்த உறுதிமொழியின் அடிப்படையில், அந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 50 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். இரயில்வே அமைச்சர் திரு. ராம்விலாஸ் பஸ்வான் 1996-97 ஆம் ஆண்டிற்கான இரயில்வே வரவு-செலவுத் திட்டத்தை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து தனது உரையில் இத்திட்டம் நிதிப் பற்றாக்குறையால் தடைபடாது என்று உறுதிகூறியுள்ளார். அந்த உறுதியைச் செயலாக்கும் பொறுப்பு மைய அரசுக்கு உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியவனாக இருக்கிறேன்.

### ஆண்டுத் திட்டம்

23.- நடப்பு நிதியாண்டு, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியாண்டாகும். 1995-96 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீட்டில் திட்ட ஒதுக்கீட்டை ரூ. 3316 கோடியாக முந்தைய அரசு நிர்ணயித்திருந்தது. ஆனால், 1995-96 ஆம் ஆண்டு திட்டச் செலவு ரூ. 3281 கோடி மட்டுமே ஆகும். இருப்பினும், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டின் ஒதுக்கீட்டு இலக்கான (Approved outlay) ரூ. 10,200 கோடி அளவை எய்துவதில் இடர்ப்பாடு எதுவும் இருக்காது என்று நம்புகிறேன்.

24. நடப்பு நிதியாண்டின் திட்ட அளவு இன்னும் மையத் திட்டக் குழுவுடன் கலந்துரையாடி இறுதி செய்யப்படவில்லை. இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் ஆண்டுத் திட்டத்திற்காக, ரூ. 3550 கோடி அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 1989-91 ஆம் ஆண்டுகளில் கழக ஆட்சியில் தொடங்கி அதற்குப்பின்னால் கைவிடப்பட்ட திட்டங்களுக்கெல்லாம் புத்துயிர் அளிப்பதன் வாயிலாகவும், இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்படும் புதிய திட்டங்களுக்குச் செய்யப் பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளாலும், 1996-97 ஆண்டுத்திட்டம் ரூ. 3700 கோடி அளவுக்கு உயரும். நடப்பு நிதியாண்டில் மார்ச்சு வரை எட்டு மாதங்கள் மட்டுமே இருப்பதனால், இந்தத் திட்ட ஒதுக்கீட்டை ரூ. 3700 கோடி அளவிலேயே அறுதியிட்டுள்ளோம். நிதி ஆண்டின் அளவு முழுமையாக இருந்திருந்தால், ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 4000 கோடியையும் தாண்டி இருக்கும். எனினும், இந்தத் திட்ட ஒதுக்கீடு 1995-96 ஆம் ஆண்டில் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் 15.63 விழுக்காடு கூடுதலாகும்.

### உணவு நிலைமை

25. கடந்த ஆண்டு காவிரிப் பாசனப் பகுதியில் குறுவை மற்றும் சம்பாப் பருவங்களில் விளைச்சல் கணிசமாகக் குறைந்திருந்தது. இவ்வாண்டும் குறுவைப் பயிர்ப் பரப்பளவு பெருமளவு குறைந்துள்ளது. 1994-95 ஆம் ஆண்டில் 76.86 இலட்சம் டன்னாக இருந்த அரிசி உற்பத்தி 1995-96ல், 52.06 இலட்சம் டன்னாகக் குறைந்துவிட்டதிலிருந்து, இது நன்கு புலனாகும். காவிரிப்பாசனத் திட்டத்தில் கிடைக்கவேண்டிய உரிய நீர்வரவு கிட்டாமை. மாநிலத்தில் பருவமழை பொய்த்தமை ஆகியவையே, இந்தச் சூழ்நிலை உருவாவதற்குத் தலையாய காரணங்கள் ஆகும்.

26. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மக்களின் முழுத் தேவையையும் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளதால், மைய அரசின் மத்தியத் தொகுப்பிலிருந்து அரிசி ஒதுக்கீட்டை மாதம் ஒன்றுக்கு 2.25 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உயர்த்துமாறு கேட்டுள்ளோம். இது தவிர, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தாங்கிருப்பைக் கூடுதலாக்கும் பொருட்டு, இந்திய உணவுக் கழகம் மற்றும் அண்டை மாநிலங்களிடமிருந்து

அரிசியை முறைப்படி வாங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குடும்ப அட்டை ஒன்றுக்கு 20 கிலோ அரிசி வழங்கும் திட்டத்திற்கு மானியத் தொகையாக ரூ. 1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

27. பொது விநியோக முறையை மேலும் சீராக்கிச் செயல்படுத்த அண்டை மாநிலங்களுக்கு அரசு அலுவலர்கள், நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு நடைபெறும் முறைகள் பற்றி ஆய்வு செய்து அக்குழு தரும் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**வறட்சி மற்றும் வெள்ள நிவாரணங்கள்**

28. வறட்சியால் பாதிக்கப்பட்ட பல பகுதிகளில், இந்த அரசு பதவியேற்ற பின்னர், நிவாரணப் பணிகளை விரைந்து செயல்படுத்தும் பொருட்டு, ரூ. 36 கோடி நிதி ஒதுக்கம் செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் அளிக்கப்பட்டது. 1405 பசலி ஆண்டில் ரூ. 22.30 கோடி நிலவரி தள்ளுபடி செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

29. மேலும், புயல் மழையால் வடக்குக் கடலோர மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டதையொட்டி, முற்றிலுமாகச் சேதமடைந்த வீடுகளுக்கு அரசு நிவாரண உதவி ரூ. 500 ஆக இருந்ததை ரூ. 1000 ஆகவும், ஓரளவு சேதமடைந்த வீடுகளுக்கு அரசு நிவாரண உதவி ரூ. 250 ஆக இருந்ததை ரூ. 500 ஆகவும், மாநிலம் முழுவதற்கும் பாகுபாடின்றி ஒரே சீராக நிவாரணத் தொகை அதிகரிக்கப் பட்டுள்ளது. கால்நடைகள் இழப்பிற்கும் நிவாரண நிதி உதவி முதன்முறையாக வழங்கப்பட்டுள்ளது.' வளர்ந்த கால்நடை ஒன்றுக்கு ரூ. 5000, கன்று ஒன்றுக்கு ரூ. 3000, செம்மறியாடு அல்லது வெள்ளாடு ஒன்றுக்கு ரூ. 1000 என்ற வீதத்தில் இந்நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. இதுபோன்ற நேர்வுகளில், இந்த உதவித் தொகை தொடர்ந்து வழங்கப்படும். புயல், வெள்ளம் மட்டுமின்றி தீ விபத்துக்களுக்கும் இது பொருந்தும்.

**வேளாண்மை**

30. மொத்த உணவுத் தானிய உற்பத்தி, 1994-95 ஆம் ஆண்டில் 97.52 இலட்சம் டன்களாகயிருக்க, 1995-96 ஆம் ஆண்டில் உற்பத்தி 72.60 இலட்சம் டன்களாகக் குறைந்துள்ளது.

31. இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்கும் நோக்கத்துடனும், பொருத்தமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தித் தரிசு நிலங்கள் மற்றும் பாசன வசதி ஆகியவற்றை மேம்படுத்தவும், வறுமையை ஒழிக்கவும், விவசாயிகள் வாழ்வில் வளத்தைப் பெருக்கவும், திட்டங்கள் தீட்டவும், பரிந்துரைகள் வழங்கவும் டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த வல்லுநர் குழுவில் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன், திரு. எஸ். குகன், டாக்டர் ஏ. வைத்தியநாதன், டாக்டர் சம்பந்தமூர்த்தி, டாக்டர் ராணி பெருமாள், திரு. மோகன கிருஷ்ணன், டாக்டர் டி. நடராஜன் மற்றும் டாக்டர் சி.ஏ. புண்டரிகாந்தன் ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெறுவர். வேளாண்மைத் துறைச் செயலர் இந்தக் குழுவின் உறுப்பினர் செயலராக இருப்பார்.

32. இஸ்ரேல் நாட்டில் குறைந்த அளவே மழை பெய்தாலும், சிறந்த தொழில் நுட்பங்களைக் கொண்டு விவசாயத்தை இலாபகரமாக நல்ல விளைச்சலுடன் நடத்தி வருகிறார்கள். எனவே, அந்த நாட்டுடன் தொடர்பு கொண்டு, அவர்களது தொழில் நுட்ப உதவியுடன் தமிழ்நாட்டிலும் குறைந்த மழை பொழியும் பகுதிகளில் விவசாயத்தை மேம்படுத்தி, விளைச்சலைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

33. நடப்பாண்டில் ரூ. 96.87 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் வேளாண்மை மேம்பாட்டுத் திட்டமும், ரூ. 23.80 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டமும் செயல்படுத்தப்படும்.




34. பூச் செடிகள் வளர்ப்பதற்குத் தேவையான முன்னுரிமை அளிக்கும் வண்ணம், வணிக ரீதியான பூச்செடிகள் வளர்ப்புக் கொள்கை ஒன்றை இந்த அரசு வகுக்கும். உள்ளூர் விற்பனைக்கும், ஏற்றுமதிக்கும் வேண்டிய தேவையை நிறைவுசெய்வதற்காகப் பூக்கள் ஏல விற்பனைமையம் ஒன்றை சென்னை விமான நிலையத்திற்கு அருகில் மொத்தம் ரூ. 20 கோடி செலவில் ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண் தொழில் நிறுவனம், ரூ 1 கோடி மூலதனப் பங்குடன் கூட்டுத்துறையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காயிலிருந்து பலபொருள்கள் தயாரிக்கும் ஒருங்கிணைந்த தொழிற்சாலை ஒன்றை அமைக்கும்.

**பாசனம்**

35. தமிழகத்தில் ஏறக்குறைய 40,000 கண்மாய்கள் உள்ளன. இவற்றில் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான 100 ஏக்கருக்கும் குறைந்த ஆயக்கட்டுடைய சுமார் 20,000 கண்மாய்களும், சுமார் 10,000 முன்னாள் ஜமீன் ஏரிகளும் பாரம்பரியமாக குடிமராமத்து வாயிலாகப் பழுதுபார்க்கப்பட வேண்டுமென்ற மரபிற்குட்பட்டு எவ்விதத் திட்டத்தின் கீழும் இணைக்கப்படாமல் பல்லாண்டு காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன. இந்த 30,000 ஏரிகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளவும், அவற்றைச் செப்பனிட்டு மேம்படுத்தும் சாத்தியக் கூறுகளைக் கண்டறியவும், உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், பன்னாட்டு நிதி நிறுவனங்களின் நிதி உதவியுடன், மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றவும் இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

36. நீர் வளஆதார மேம்பாட்டுத் திட்டம் (Water Resources Consolidation Project), மொத்தம் ரூ. 1140 கோடி செலவில் உலக வங்கியின் கடனுதவியுடன் ஐந்தாண்டுகளில் நிறைவேற்றப்படும். இதற்காக, நடப்பு நிதியாண்டில் திட்ட ஒதுக்கீடு ரூ. 164.22 கோடியாகும். காவிரிப் பாசனத் திட்டத்தை தவிர, இம்மாநிலத்திலுள்ள பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்கள் அனைத்துக்கும் புத்துயிர் அளிக்க இத்திட்டம் வகை செய்யும். இத்திட்டம் 17.30 இலட்சம் ஏக்கரில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும். இது மாநிலத்தின் மொத்த மேல் நீர்பரப்பு பாசனப் பகுதியில் 50 சதவிதமாகும். இதனால், விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் 40 இலட்சம் பேர் பயனடைவர். இதற்கான திட்ட விவரங்கள் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் இடம் பெறும்.

37. பெரியாறு அணை சுமார் ரூ. 18.5 கோடி செலவில் வலுப்படுத்தப்பட்டு, கூடுதலாக 16 அடி உயரம் தண்ணீர் தேக்கிவைக்கும் அளவுக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கிடைக்கக்கூடிய கூடுதல் தண்ணீரை மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களின் நீண்ட காலக் கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம், அப் பகுதிக்கு வைகை அணையிலிருந்து ஒரு கால்வாயை வெட்டி, அதன் மூலம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மொத்தம் ரூ. 33.81 கோடி செலவில் நான்கு ஆண்டுகளில் நிறைவேற்றப்படும்.

38. வட ஆர்க்காடு - அம்பேத்கர் மாவட்டம், வாணியம்பாடி வட்டத்திலுள்ள ஆண்டியப்பனூர் ஓடைக்குக் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் ஒன்று ரூ. 18.28 கோடி செலவில் வரும் மூன்று ஆண்டுகளில் கட்டி முடிக்கப்படும்.

39. திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டத்தில், தென்காசி, வி.கே. புதூர் ஆகிய வட்டங்களில், வரட்டாறு மற்றும் குப்பந்து ஓடை ஆகியவற்றின் குறுக்கே நீர்த்தேக்கம், மூன்றாண்டுகளில் ரூ. 8.78 கோடி செலவில் கட்டி முடிக்கப்படும்.

40. திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டம், போளூர் வட்டத்திலுள்ள செண்பகத்தோப்பு நீர்த்தேக்கத் திட்டம் ரூ. 21.33 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு நான்கு ஆண்டுகளில் நிறைவேற்றப்படும்.

**காவிரிப் பிரச்சினை**

41. காவிரிப் பிரச்சினை சுமார் முப்பது ஆண்டுக் காலமாகத் தீராமல் இருந்து வரும் ஒன்றாகும். தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் கர்நாடக விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் இடையே இந்தப் பிரச்சினையை அரசியல் ஆக்கி ஆதாயம் தேட யாரும் முனையாமல் நடுநிலைத் தீர்ப்பு ஒன்றைப் பெற வேண்டுமென்ற நோக்குடன், தஞ்சை விவசாயிகள் தொடர்ந்த வழக்கில்




தமிழக அரசு தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டு மத்தியில் தேசிய முன்னணி ஆட்சி இருந்த போது, 1990ல் நடுவர் மன்றம் அமைந்திட வழிவகை கண்டது. நடுவர் மன்ற அமைப்புக்கு உள்ளிட்ட நிலையில் அதன் தீர்ப்புக்கு ஏற்ப, காவிரி நீரில் தமிழகத்து உரிமையைப் பெற சட்ட ரீதியாகவும் - அரசியல் மாச்சர்யங்களுக்கு அப்பாற்பட்ட அணுகுமுறையிலும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நாம் உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்ற நிலையில் உறுதியாக இருக்கிறோம். இதை இரு வேறு நாடுகளுக்கிடையேயுள்ள பிரச்சினையாகக் கருதாமல், இந்திய நாட்டின் இரு மாநிலங்களுக் கிடையேயான பிரச்சினை என்பதை ஒருமைப்பாட்டு உணர்வோடும், மனித நேய உணர்வோடும் நோக்குவதே சிறப்புடையதாகும்.

**கல்வி**

42. நடப்பாண்டில், தொடக்கப் பள்ளிகள் இல்லாத ஒரு சில பகுதிகளில் 85 புதிய பள்ளிகள் அமைக்கப்படும். ஆசிரியர் நியமனத்தில் ஒழுங்கீனங்களும் முறைகேடுகளும் நடைபெறுவதைத் தடுக்க, வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்த முன்னுரிமையின் அடிப்படையிலேயே ஆசிரியர் கள் பணியில் அமர்த்தப்படுவர். ''குறைந்த பட்ச கல்வித் திறன் அடைதல்'' என்கிற அடிப்படையில், தொடக்க வகுப்புகளுக்கான பாடத்திட்டம் மாற்றி அமைக்கப்படும். நடப்பாண்டில் ரூ. 50 இலட்சம் செலவில் ஆசிரியர் பயிற்சித் திட்டம் ஒன்று பெரிய அளவில் தொடங்கப்படும்.

43. தென் ஆர்க்காடு - .வள்ளலார், விழுப்புரம் - இராமசாமி படையாட்சியார், திருவண்ணாமலை - சம்புவரயர், தருமபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில் ரூ. 125.80 கோடி செலவில் மாவட்டத் தொடக்கக் கல்வித்

திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. மேலும், ரூ. 120 கோடி செலவில் மூன்று மாவட்டங்களுக்கு இத்திட்டத்தை நீட்டிக்க வகை செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில், இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, ரூ. 25.51 கோடி ஆகும். மாநில அரசின் பங்காக ரூ. 4 கோடி நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

44. நடப்பாண்டில் 21 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 99 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 80 உயர்நிலைப்பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும். உயர்நிலைப்பள்ளி களில் கூடுதலாக வகுப்பறைகள் கட்டுதல் உள்ளிட்ட அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ரூ. 6 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்றாண்டுகளில் இம்மாநிலத்தில் உள்ள அனைத்து மேனிலைப் பள்ளிகளுக்கும், ஆய்வுக் கூடக் கட்டிடங்கள் கட்டித் தரப்படும்.




45. படிப்பில் ஆர்வமுள்ள மாணவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், பள்ளியிறுதி வகுப்பில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு ப்ளஸ் 2 வரை படிப்பதற்கான செலவையும், ப்ளஸ் 2 வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு அவர்கள் தொடர்ந்து மருத்துவக் கல்லூரியிலோ, பொறியியல் கல்லூரியிலோ அல்லது வேறு பட்டப் படிப்போ படிப்பதற்காகும் செலவையும் அரசே ஏற்றுக் கொள்ளும் என்று கழக அரசு அறிவித்து இந்த ஆண்டு முதலே இது செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. அடுத்த ஆண்டு முதல், மாநில அளவில் மட்டுமின்றி மாவட்ட அளவிலும் இந்த முறையில் மாணவர்கள் ஊக்குவிக்கப் படுவார்கள்.

46. 1989-90ல் கழக அரசு, தொழிற்கல்வி படிக்க முன்வரும் மாணவர்களில் - அவர்கள் குடும்பத்தில் அதுவரை யாரும் பட்டதாரிகள் இல்லாமல் இருப்பார்களே யானால், அவர்கள் பெற்ற மதிப்பெண்ணில் 5 மதிப் பெண்களை அதிகமாக்கி ஆணை பிறப்பித்ததால், அனைத்து சமூகங்களையும் சேர்ந்த பல மாணவர்கள் பயன்பெற்றார்கள். ஆனாலும், இத்திட்டம் நீதி மன்ற ஆணையினால் தொடர்ந்து நடைபெற முடியாமல் போயிற்று. எனினும், இப்போது இந்த அரசு, ஒரு குடும்பத்தில் இதுவரை யாருமே பட்டதாரிகள் இல்லாமல் இருந்து, முதல் முதலாக தொழிற்கல்விப் படிக்க விரும்புவோரை ஊக்குவிப்பதற்காக ஒரு திட்டத்தை அறிவிக்கிறது. இதன்படி, பட்டதாரிகளாக இதுவரை யாருமே இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களில் மொத்தம் 300 மதிப்பெண்களில் முதல் பத்து இடங்களைப் பெறுவோர்களின் கல்விக்கான முழுச் செலவையும் பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும், பல் மருத்துவக் கல்லூரிகளிலும், வேளாண்மைக் கல்லூரி களிலும், கால்நடை மருத்துவக் கல்லூரிகளிலும் அரசே ஏற்றுக்கொள்ளும்.

47. இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு உயர் கல்வி கற்பதில் முந்தைய அரசு விதித்திருந்த தடையை நீக்கி, தொழிற்கல்வி உள்ளிட்ட அனைத்துக் கல்வி யும் அவர்கள் கற்கும் வாய்ப்பை இந்த அரசு உருவாக்கியுள்ளது.

### சட்டப் பல்கலைக் கழகம்

48. சென்னை உயர்நீதி மன்றத்தின் கிளை ஒன்றை மதுரையில் அமைப்பதற்காக இடம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. தற்காலிகமாக, மதுரை மாவட்ட நீதி மன்றத்தின் வளாகத்திலேயே இந்தக் கிளையைத் துவக்கி வைக்க உயர்நீதி மன்றத்தின் ஒப்புதல் கோரப்படும்.




49. இந்தச் சட்டமன்றத் தொடரில், சென்னையில் டாக்டர் அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக் கழகம் அமைப்பதற்காக, சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பட்டு, அப்பல்கலைக் கழகம் நடப்பாண்டிலேயே செயல் படத் தொடங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

தமிழரசு

50. திருநெல்வேலியில் சட்டக் கல்லூரி ஒன்றைத் தொடங்க வேண்டுமென்ற நீண்ட காலக் கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம் இந்தக் கல்லூரி நடப்பு நிதியாண்டிலேயே தொடங்கப்படும்.

### தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு

51. தமிழைப் பல்வேறு முனையிலும் வளர்த்திட இவ்வரசு முன்வந்துள்ளது. அதற்காகவே தனிக்கவனம் செலத்தித் தமிழை வளர்க்கத் தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டுள்ளது. வெகு விரைவில் தமிழ் முழு ஆட்சிமொழியாக விளங்க ஆவன செய்யப்படும். 1956-ல் இயற்றப்பட்ட ஆட்சிமொழிச் சட்டம் பல அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டும் முழுமையாக நிறைவேறவில்லை எனும் ஆதங்கத்தைப் போக்கும் வகையிலும், தலைமைச் செயலகத்திலிருந்து இப்பணி தொடங்கும் வகையிலும், முதல்கட்டமாகத் தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் 500 வழங்கிட இந்த அரசு முன்வந்துள்ளது.

52. 1974 ஆம் ஆண்டில் கழக அரசினால் நிறுவப்பட்டு, இடைக்காலத்தில் மிகவும் நலிந்து போயுள்ள செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டம் வேகமாகச் செயற்படவும், எஞ்சியுள்ள தொகுதிகள் யாவும் ஐந்தாண்டுகட்குள் முடிக்கப்படவுமான வகையில், இந்த ஆண்டு சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

53. மொழி ஞாயிறு எனத் தமிழ் நெஞ்சங்களால் புகழப்பட்டவரும், தனித்தமிழ் இயக்கத் தளநாயகரும், கழக அரசின் "அகர முதலி" தயாரிப்பைத் தொடங்கிடத் துணை நின்றவருமான பழுத்த பைந்தமிழ்ப் பெருமகனார், மறைந்த தேவநேயப் பாவாணர் அவர்களின் அரிய நூல்களை அரசுடைமையாக்கவும், அவரது குடும்பத்துக்குக் காப்பு நிதி வழங்கவும் ரூபாய் இருபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

54. பிற இயக்கத்தினர் நமதியக்கத்தின் மறைந்த தலைவர்களை மதித்துப் போற்றுகிறார்களோ இல்லையோ, நம்மைப் பொறுத்த வரையில் "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்ற அண்ணாவின் பண்பார்ந்த மொழியை மனத்திற் கொண்டு அனைத்து இயக்கங்களின் மறைந்த தலைவர்களுக்கு மரியாதை செலுத்துவதை என்றுமே மறந்ததில்லை. அந்தத் தமிழ்ப் பண்பாடு ஒளிவிடும் முத்தாரவரிசையில் ஒன்றாகத் தான் தமிழ்நாட்டுப் படேல் எனப்படும் சர்தார் வேதரத்தினம் (பிள்ளை) அவர்களின் நூற்றாண்டு விழா 25.2.97 இல் கொண்டாடப்படும்பொழுது அவரின் நினைவாக அஞ்சல் தலை வெளியிடுமாறு மைய அரசுக்கு மடல் எழுதியுள்ளது இந்த அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

55. தமிழ் மொழிக் காவலர்கள் 1935 பேரும், அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்கள் 441 பேரும், நலிந்த கலைஞர்கள் 4267 பேரும் பயனடையும் வகையில் வழங்கப்படும் உதவித் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 400 என்பது ரூ. 500 ஆக உயர்த்தப்படும். 1,778 உலமாக்கள் தற்போது பெற்றுவரும் மாத ஓய்வூதியத் தொகையான ரூ. 400 என்பது ரூ. 500 ஆக உயர்த்தப்படும். அதேபோல், ஓதுவார்கள் 100 பேரும், மறை மற்றும் திவ்வியப்பிரபந்தத்தை ஓதியவர்கள், அரையர் சேவை செய்தவர்கள் 100 பேரும், அர்ச்சகர்கள் 500 பேரும் பயனடையும் வகையில், தற்போது அவர்கள் பெறும் ஓய்வூதியத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 300-லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தப்படும். இந்த உதவித் திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு, 1500 கிராமப் பூசாரிகளுக்கும் மாதந்தோறும் உதவித் தொகை ரூ. 500 வழங்கப்படும்.

56. ஆந்திர மாநிலம் குப்பம் பகுதியில் அமைந்துள்ள திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு நமது பங்காக முதல் தவணையாக ரூ. 50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

57. பிறமொழிகளில் உள்ள பழைய சிறந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் திட்டத்திற்கு, நடப்பாண்டில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.







58. மெட்ராஸ் என்றும் மதறாஸ் என்றும் பிற மொழிகளில் வழங்கப்படும் சென்னை மாநகரின் பெயரை

இனிமேல் "சென்னை" என்ற ஒரு பெயரில் மட்டுமே எல்லா மொழிகளிலும் அழைக்க வேண்டுமென்று இந்த அரசு முடிவு செய்து, அதனை நடைமுறைப்படுத்த ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மக்கள் நல்வாழ்வு - குடும்ப நலன்

59. 1989 முதல் 1991 வரையிலான இந்த இரண்டே ஆண்டுகளில் மொத்தம் 136 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. அதன் பிறகு, 1991 முதல் 1996 வரையிலான ஐந்தாண்டுகளில் 93 கட்டிடங்கள் மட்டுமே கட்டப்பட்டன. தற்போது, தமிழ்நாட்டில் 600 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடங்கள் இல்லை. 1995-96-ல் 70 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே கட்டிடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்க நடப்பாண்டிலோ மொத்தம் ரூ. 18 கோடி செலவில் 300 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு 600 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்கும் இரண்டு ஆண்டுக் கால அளவில் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும்.

60. சென்னையில் ரூ. 10 கோடி செலவில் தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு, நாங்கள் மைய அரசை அணுகியுள்ளோம்.

61. தருமபுரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் - காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களில், ரூ. 57.51 கோடி செலவில், டானிடா சுகாதாரப் பாதுகாப்புத் திட்டம் (மூன்றாம் நிலை), 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து செயல்படுத்தப்படும்.

### தொழில் வளர்ச்சியில் மறுமலர்ச்சி

62. இம்மாநிலத்தில் கணிசமான அளவில் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை அளிக்கும் பல்வேறு பெரிய தொழிற்சாலைகள் தொடங்கப்படும். 2000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 20,000 பேருக்கு அதற்குத் தொடர்பான வேலைவாய்ப்பும் அளிக்கும் வகையில், மறைமலைநகரில் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் கார்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ஃபோர்டு மஹேந்திரா நிறுவும்.

63. இங்கிலாந்து நாட்டின் பில்கிங்டன் நிறுவனத்தின் சார்பில் 500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 5000 பேருக்கு அதன் தொடர்பான வேலைவாய்ப்பும் கிடைக்கக் கூடிய உலகிலேயே தலை சிறந்த கண்ணாடி தயாரிக்கும் தொழிற்சாலையொன்று ரூ. 550 கோடி முதலீட்டில், செங்கல்பட்டுக்கு அருகில் செங்குன்றம் கிராமத்தில் அமைப்பதற்கான ஒப்பந்தம் நேற்றைய தினம் (16.7.96) என் முன்னிலையில் கையெழுத்தாயிற்று என்பதை மிக்க மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

64. திருபெரும்புதூர் அருகே மொத்தம் ரூ. 2450 கோடி செலவில் ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் கார்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைக் கொரியா நாட்டின் ஹுண்டாய் மோட்டார் கம்பெனி தொடங்கும். இதன் மூலம் 3000 பேருக்கு நேரடியாகவும், 30,000 பேருக்கு அதற்குத் தொடர்பான வேலைவாய்ப்பும் கிடைக்கும். இதற்கான ஒப்பந்தம் நாளை 18.7.96 அன்று கையெழுத்தாகிறது.



65. தாபர் டுபாண்ட் நிறுவனம் ரூ. 600 கோடி செலவில் 6.6 நைலான் நூலிழை தயாரிக்கும் திட்டத்திற்கான கட்டுமானப் பணியை, கும்மிடிப்பூண்டி "சிப்காட்" தொழில் வளாகத்தில் தற்போது மேற்கொண்டுள்ளது. அந்தப் பகுதி மக்களின் அச்சத்தைப் போக்க, இத்தொழிற்சாலை மாசுக் கட்டுப்பாட்டைத் தீவிரமாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், அத்தகைய சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க வேண்டுமென்றும் அரசின் ஆணைகள் வலியுறுத்தப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

66. மொத்தம் ரூ. 168 கோடி செலவில் பொள்ளாச்சி அருகே முழுவதும் ஏற்றுமதி நோக்கிலான இறைச்சி ஏற்றுமதி நவீனக் கூடம் ஒன்றை, அபுதாபியில் உள்ள என்.கே நிறுவனங்களுடன் 'டிட்கோ' நிறுவனம் இணைத் துறையில் (Associate Sector) நிறுவும்.

67. மேலும், ரூ. 38.4 கோடி செலவில் ஒருங்கிணைந்த தேங்காய் செய்முறைப்படுத்தும் திட்டம் ஒன்று டிராங்கரானா நிறுவனத்துடன் இணைந்து நிறுவப்படும்.

68. மாநிலத்தில் நிலையான வர்த்தகப் பொருட்காட்சி மையம் ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பிற்கு நாங்கள் புத்துயிர் அளிப்போம். தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (டாசிட்) இந்திய ஏற்றுமதி அமைப்புகள் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன், மொத்தம் ரூ. 120 கோடி செலவில், சென்னைக்கு அருகில் வர்த்தகப் பொருட்காட்சி மையம் ஒன்றை அமைக்கும்.

69. அரசின் "டாசிட்" நிறுவனம், திருப்பூர் ஏற்றுமதியாளர்களின் சங்கம், "ஐ.எல்.எப்.எஸ்", மைய அரசு ஆகியவற்றிடமிருந்து பங்கு மூலதனங்களைப் புதிய திருப்பூர் பகுதி வளர்ச்சி நிறுவனம் பெற்று, ரூ. 1313.20 கோடி செலவில், திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயலாக்கும்.

தமிழரசு

70. தொழிலதிபர்கள், அவர்களுடைய குறைகளையும், வேண்டுகோள்களையும் உயர்நிலையில் நேரடியாகத் தெரிவிக்க ஒரு முறையான அமைப்பு உருவாக்கப்படும். முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டு, தொழில் வளர்ச்சி குறித்த உச்சநிலைக் குழு ஒன்று உருவாக்கப்படும். இதில் பல்வேறு வர்த்தகத் தொழில் அமைப்புகளின் நியமனதாரர்கள் 12 பேரும், அரசு நியமிக்கும் 6 முக்கிய தொழிலதிபர்களும், பல்வேறு துறைகளின் அதிகாரிகளும் உறுப்பினர்களாக இருப்பர்.

71. தொழில் வளத்துக்குத் துணை நிற்கும் தொழிலாளர்களின் துயரம் துடைப்பதிலும், உரிமைகளை மீட்பதிலும் அக்கறை கொண்டுள்ளது இந்த அரசு என்பதற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டாக நம் தொழிலாளர் நல அமைச்சர் முன் நின்று நடத்திய பேச்சு வார்த்தை காரணமாக பி அண்டு சி மில் தொழிலாளர்கள் பிரச்சினை சுமூகமாக முடிந்துள்ளதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

### கனிமத் தொழில்

72. தமிழ் நாட்டில் கிடைக்கும் கனிமவளத்தை முறையாகப் பயன்படுத்தி, தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கவும், அரசுக்கு வருவாயைப் பெருக்கவும் உகந்த கனிமக் கொள்கையையே கழக அரசு பின்பற்றி வந்திருக்கிறது. 1989-90-ல் கழக அரசு பொறுப்பிலிருந்தபோது கற்குடைவுக் குத்தகைகள், முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி (Sealed Tender System) முறையில் மட்டுமே கொடுக்கப்பட வேண்டுமென்றும், ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்புரிமைக் கடிதம் பெற்ற இரண்டாண்டுகளுக்குள் கிரானைட் கல்லை வெட்டி மெருகூட்டும் தொழிற்சாலையைத் தொடங்க வேண்டுமென்றும் வரையறுக்கப்பட்டது.

73. இந்தக் கொள்கை அடிப்படையில் 1989-90 ஆண்டுகளுக்கிடையில் இரண்டு கட்டங்களாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 262 ஹெக்டேர் நிலப்பரப்பில் கற்குடைவு செய்யத் குத்தகைகள் வழங்கப்பட்டன. அதனால் மாநில அரசுக்கு ரூ. 20 கோடி அந்த இரண்டே ஆண்டுகளில் வருமானம் வந்தது.

74. ஆனால், பிறகு வந்த அரசு இம்முறையை மாற்றும் வகையில் தமிழ்நாடு சிறுவகை கனிமங்கள் சலுகைகள் விதிகளின் விதி 39 ஐப் புதிதாக அறிமுகப்படுத்தி, ஒப்பந்தப்புள்ளி முறையை ரத்து செய்துவிட்டது. அதன் காரணமாக, 1993 முதல் 1996 வரையிலான மூன்றாண்டுகளுக்குள் 160 ஹெக்டேர் பரப்பளவுக்கு ரூ. 5.12 கோடி மட்டுமே வருவாய் கிடைத்துள்ளது. இதைவிட கழக ஆட்சியில் இரண்டே ஆண்டுகளில் அரசுக்குக் கிடைத்த வருவாய் நான்கு மடங்கு அதிகமாகும்.

75. இந்த அரசின் புதிய கனிமக் கொள்கைப்படி குத்தகைக் காலம் 10 ஆண்டுகளுக்குப் பதிலாக 20 ஆண்டுகளாக இருக்கும். கருங்கல் வெட்டி எடுத்து மெருகூட்டும் தொழிற்சாலையை மூன்றாண்டுகளுக்குள் நிறுவ வேண்டும். இந்த புதிய கொள்கையால் அரசுக்கு வரவேண்டிய வருவாய் அதிகரிப்பதுடன் தொழில் வளர்ச்சிக்கும் வழி வகுக்கும்.

### மின்விசை மேம்பாடு

76. 1989-91 ஆம் ஆண்டுகளில் இந்த அரசு ஆட்சியில் இருந்தபோது, வடிவமைத்து உருவாக்கி தொடங்கப்பட்ட, 630 மெகாவாட் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் உற்பத்தித் திட்டம் - I 120 மெகாவாட் திறன் கொண்ட பேசின் பிரிட்ஜ் எரி வாயு சுழல் தட்டு (Gas Turbine) மின் விசை உற்பத்தித் திட்டம் ஆகியவை அண்மையில்தான் இயக்கி வைக்கப்பட்டுள்ளன. 1996-97 ஆம் ஆண்டில் 7.5 மெகாவாட் திறன் கொண்ட சாத்தனூர் புனல் மின் திட்டம், 8 மெகாவாட் திறன் கொண்ட கீழ்பவானி புனல் மின் திட்டம் ஆகியவை தொடங்கி வைக்கப்படும்.

77. தமிழ்நாட்டில் மேற்கொண்டு மின் உற்பத்தியை அதிகரிப்பது, முக்கியமாக, தனியார் துறையில் மேற்கொள்ளப்படும். அடுத்த 10 ஆண்டுகளில், 10,878 மெகாவாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்யத் தமிழ்நாடு மின் வாரியம் 16 தனியார் தொழில் முனைவர்களைக் கண்டறிந்துள்ளது. 500 மெகாவாட் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் திட்டம் - III, பிள்ளைபெருமாநல்லூரில் 330.5 மெகாவாட் திறன் கொண்ட எரி வாயு அடிப்படையிலான மின்விசைத் திட்டம், வடசென்னை நிலை II, கடலூர் ஆகிய இடங்களில் உள்ள அனல் மின் விசைத் திட்டங்கள், பேசின்பிரிட்ஜ், சமயநல்லூர் ஆகிய இடங்களில் உள்ள டீசல் மின் விசைத் திட்டங்கள் ஆகியவற்றிற்கான மின்விசை கொள்முதலுக்குரிய ஒப்பந்தங்கள் பரிசீலனையில் உள்ளன.

78. புதிய மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்குத் தனியார் துறையை மட்டுமே நம்பியிருக்காமல், செய்யூரில் 2000 மெகாவாட் திறன் கொண்ட தென் சென்னை அனல் மின் நிலையத் திட்டத்தைத் தேசிய அனல் மின்விசை நிறுவனத்துடன் இணைந்து கூட்டு நிறுவன அமைப்பின் மூலம் செயல்படுத்தப்படும். உடனடியாக உள்ள மின் பற்றாக் குறையைச் சமாளிக்க, குறுகியகால நடவடிக்கையாகத் திரவ எரிபொருளை (Liquid fuel) அடிப்படையாகக் கொண்டு மின் உற்பத்தி செய்யும் நிலையங்களை அமைத்திடும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

79. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் மின் உற்பத்தித் தொழிற்பிரிவுகள் அமைக்கப்படும். நடப்பு நிதியாண்டில், ஐந்து சர்க்கரை ஆலைகளில் 83.32 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தித் திறன் கொண்ட மின் உற்பத்தித் தொழிற்பிரிவுகள் ஏற்படுத்தப்படும். மேலும், 87 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட தொழிற்பிரிவும், 1997-98 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ளது.

### சாலைகள்

80. ஊரகப் பகுதிகளில் சிறப்பான சாலைகள் அமைக்கப்படுவதற்கு உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்படும். அதற்கேற்ப, ஊரகச் சாலைகள் திட்டத்தின் கீழ் 1991 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1000க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்கள் பயன்பெறும் வகையில் கிராமச் சாலைகள் அமைக்க 1995-96 ஆம்

ஆண்டில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 18.50 கோடியாயிருக்க, நடப்பு நிதியாண்டில் ரூ. 28.00 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் பேருந்து வழித்தடச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 14 கோடியாக இருக்கும் தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஊரக விற்பனை மையங்களுக்குச் சாலைகள் அமைப்பதற்கான பணிகளுக்காக நடப்பு நிதியாண்டில் ரூ. 30 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன், புயல் மற்றும் வெள்ளத்தால் சேதமுற்ற சாலைகள், பாலங்களை மேம்படுத்த, தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

81. தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் சாலைப் பணிகளுக்காக, நடப்பாண்டிற்கு ரூ. 35 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்தைச் செயற்படுத்த ரூ. 20 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## போக்குவரத்து

82. இம்மாநிலத்தில், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பல, நிதிநிலை நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றன. நடப்பாண்டில் இப்போக்குவரத்துக் கழகங்கள் அனைத்தும் சேர்ந்து மொத்தம் ரூ. 300 கோடி இழப்பை அடையக் கூடும். அண்மையில் மைய அரசால் அறிவிக்கப்பட்ட டீசல் விலை உயர்வின் காரணத்தால், இந்த இழப்பு இன்னும் அதிகமாகும். வீண் செலவைக் குறைத்து திறனை அதிகரிப்பதன் மூலம், இந்தப் போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலையை மேம்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

83. 1989-91 ஆம் ஆண்டுகளில் கழக அரசு ஆட்சியில் இருந்தபோது, எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்வதற்கான சலுகை அளிக்கப்பட்டது. இச்சலுகையைப் பத்தாம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்கும் இந்த ஆண்டு முதல் நீட்டிக்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## துறைமுக மேம்பாடு

84. பன்னாட்டு வணிகம், கடற்கரையோரக் கப்பல் போக்குவரத்து, கடல் மீனளம் இவை தொடர்பான பணிகளை மேம்படுத்தப் பெருமளவு வாய்ப்புள்ள மிக நீண்ட கடற்கரைப் பகுதி தமிழ்நாட்டிற்கு இயற்கை அளித்துள்ள ஓர் அரிய செல்வமாகும். இதனை நன்கு பயன்படுத்தி சிறு துறைமுகங்களை மேம்படுத்தும் பணிக்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்க முடிவு செய்துள்ளது. இந்த நோக்கத்தைச் செயலாக்கும் பொருட்டு, கடல் சார் வாரியம் (Maritime Board) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது, துறைமுகங்களின் மேம்பாட்டிற்கான வழிவகைகளை வகுப்பதோடு, தனியார் துறையிடமிருந்தும், நிதி நிறுவனங்களிட மிருந்தும், முதலீடுகளைப் பெற முயலும். குஜராத் மாநிலத்தில் இத்தகைய வாரியத்தின் செயல்பாடுகளை நேரில் கண்டறிந்து வந்த போக்குவரத்துத்துறை அமைச்சரின் பரிந்துரைகளின் அடிப்படையில், இராமேஸ்வரம், பாம்பன், வாலிநோக்கம், குளச்சல், கன்னியாகுமரி, எண்ணூர், புன்னக்காயல் போன்ற சிறு துறைமுகங்களை விரிவுபடுத்தக்கூடிய மற்றும் தொண்டி, கொற்கை, மாமல்லபுரம், போன்ற இடங்களில் புதிய துறைமுகங்களை உருவாக்கக் கூடிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து ஒரு 'துறைமுக விரிவாக்கக் கொள்கை அறிக்கையை' இந்த வாரியம் தயாரிக்கும். அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில், சிறிய துறைமுகங்கள் விரிவாக்கப் பணியும், புதிய துறைமுகங்கள் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்படும். வாலிநோக்கத்தில் கப்பல் உடைக்கும் தளத்திற்குப் புத்துயிர் அளிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும்.

## ஊரக வளர்ச்சி

85. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், நடப்பாண்டில் ரூ. 157.05 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும். இதில் மாநில அரசின் பங்குத் தொகை, ரூ. 31.41 கோடியாக இருக்கும். 1972 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இலவச கான்கிரீட் வீடு கட்டும் திட்டம் இந்தியாவிலேயே முதன் முதலாகக் கழக அரசால் தொடங்கப்பட்டு, இன்று இந்திரா குடியிருப்புத் திட்டம் என்ற பெயரில் விளங்குகிறது. இத்திட்டத்தின் கீழ், 71,597 ஓட்டுவில்லை வீடுகள் கட்டுவதற்காக ரூ. 100.24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன், மாநில அரசும் ரூ. 50.81 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, அனைத்து வகைப் பயனீட்டாளர்களுக்கும், கான்கிரீட் தளம் போட்ட வீடுகள் இலவசமாகக் கட்டித் தரப்படும். இதில் ஆதிதிராவிடர்களுக்காக ரூ. 126 கோடி செலவில் 60,000 இலவச கான்கிரீட் வீடுகள் கட்டித் தரும் திட்டமும் அடங்கும். "பத்து இலட்சம் கிணறுகள்" திட்டத்திற்கு ரூ. 39.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## வீட்டு வசதி




86. இன்றுள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அரசு அலுவலர்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் தேவைகளை மட்டுமே நிறைவு செய்யும் வகையில் செயல்பட்டு வருகிறதே தவிர, ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு வீடு கட்டுவதற்கு முயற்சி மேற்கொள்ளுவதில்லை. இந்த நிலையை மாற்றும் நோக்கத்துடன், ஊரக வீட்டு வசதி வாரியம் ஒன்றை இந்த அரசு தொடங்க உள்ளது.

## நகர்ப்பகுதி வளர்ச்சி

87. தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கணிசமான நிதி ஒதுக்கீடு இன்னும் பயன்படுத்தப்படாமல் உள்ளதால், இத்திட்டத்தை மேலும் மூன்றாண்டுகளுக்கு நீட்டிக்கக் கோரியுள்ளோம். இத்திட்டம், இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 146.25



கோடி உட்பட, ரூ. 260.50 கோடி மொத்த ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சி நிதி என்கிற தனி அமைப்பொன்று ஏற்படுத்தப்படும். இந்த அமைப்பு மாநில அரசு மற்றும் நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெற்று, நகராட்சிப் பகுதிகளில், அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கு நிதியுதவி அளிக்கும்.

88. இம்மாநிலத்தில் பல்வேறு நகராட்சிகளுடன் புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க, ரூ. 9.15 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய மாநகராட்சிகளை மேம்படுத்த, ரூ. 100 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்படுமென்று, ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப, நடப்பாண்டில் ரூ. 25 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

89. பேரூராட்சிகளில் தெருவிளக்குகள் அமைத்தல், சாலைகளை மேம்படுத்துதல், சிறந்த முறையில் துப்புரவுப் பணிபுரிதல், குடிநீர் வழங்குதல் ஆகியவை உட்பட, அடிப்படை வசதிகளுக்கு வகைசெய்ய, நடப்பாண்டில் ரூ. 25 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

90. குடிசைப் பகுதிகளின் நிலையை உயர்த்த, பத்தாவது நிதிக்குழு பரிந்துரைத்த ரூ. 60 கோடிக்கான சிறப்பு மானியத்தையும் தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியம் பயன்படுத்திக் கொள்ளும். இதற்காக, நடப்பாண்டில் ரூ. 12 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

91. 1970 ஆம் ஆண்டு கழக அரசில் தொடங்கப்பட்ட குடிசை மாற்று வாரியத்தால் உருவாக்கப்பட்ட வீடுகள், அங்கே குடியிருப்பவர்களுக்கு, அவர்கள் விரும்பினால், எளிய தவணை முறையில் நியாயமான விலை நிர்ணயிக்கப்பட்டு அவர்களுக்கே உரிமை ஆக்கப்படும்.

## சென்னை மாநகர் மேம்பாடு

92. சென்னைப் பெருநகர்ப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த, ரூ. 200 கோடி அளவிற்கு முதலீடு செய்யப்படும். அதற்கேற்ப நடப்பாண்டில் பெருநகர் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு ரூ. 50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையைப் பயன்படுத்தியும் நிதிநிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெற்றும், இந்நிறுவனம் அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகளில் முதலீடு செய்யும்.

93. புறவழி சுற்றுச் சாலை அமைப்பதற்காக நிலங்களைக் கையகப்படுத்த, ரூ. 9.80 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## சென்னைப் பிற பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கல்

94. அண்மையில் ஆந்திரப் பிரதேச முதல்வருடன் நான் பேசியதைத் தொடர்ந்து நம் பொதுப்பணித்துறை அமைச்சர் ஐதராபாத் சென்று, பேச்சு வார்த்தை நடத்தி, செய்து கொண்டுள்ள உடன்படிக்கையின்படி, சென்னை மாநகருக்கு 1983- ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கிணங்க, 12 டி.எம்.சி. தண்ணீர் வழங்கப்படும் என்பது உறுதி




செய்யப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக, 3 டி.எம்.சி. தண்ணீர் நடப்பாண்டிற்குள் சென்னைக்கு வருவதற்கு எல்லாவித ஏற்பாடுகளையும் இரு மாநில அரசுகளும் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டுள்ளன. இரண்டாவது கட்டத்தில் 4 டி.எம்.சி தண்ணீரும் 3 வது கட்டத்தில் 5 டி.எம்.சி. தண்ணீரும் சென்னைக்கு வழங்க ஆந்திர அரசு இநத் ஒப்பந்தம் மூலம் உறுதி செய்துள்ளது. இந்தப் பணிகளையெல்லாம் விரைவுபடுத்த ஆந்திர அரசுக்கு நடப்பாண்டில் வழங்க வேண்டியதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.50 கோடியாக உயர்த்தப்பட்டு அதில் ரூ.25 கோடி வழங்கப்பட்டுவிட்டது.

95. மணலியைச்சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள கிணறுகளுக்கு நீர்வரவை ஏற்படுத்தும் பொருட்டு, பம்பு மூலம் நீரைச் சேமிக்கும் திட்டம் ஒன்று, ரூ. 26 கோடி செலவில் தொடங்கப்படவுள்ளது. நடப்பாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ. 5 கோடி நிதிஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

96. சென்னை மாநகரில் கழிவு நீரகற்று வசதிகள் இல்லாத தெருக்களுக்கு, வீட்டு உரிமையாளர்கள் புதிய இணைப்புகளுக்கான உரிய கட்டணங்களைச் செலுத்துவதற்குட்பட்டு, கழிவு நீரகற்றல் வசதிகளை விரிவுபடுத்த ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

97. சென்னை மாநகரில் ஆதி ஆந்திரக் குடியிருப்புகளுக்கு இலவசமாகக் கழிவு நீரகற்றல் வசதிகளைச் செய்து கொடுக்க, ரூ. 5, கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

98. ஊரகப் பகுதிகளில் 2770 மின்விசை நீரேற்றுத் திட்டங்களை நிலையுயர்த்துவதற்கு, நடப்பாண்டில் ரூ. 30 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 289 கூட்டுக் குடிநீர் வழங்குத் திட்டங்களை மேம்படுத்துவதற்கும், ரூ. 12.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதோடு கூட, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கூட்டுக் குடிநீர் வழங்குத் திட்டங்களைப் பராமரிப்பதற்கு, முதன் முறையாக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப் பராமரிப்பதற்காக, தமிழ்நாடு குடிநீர் வடிகால்

வாரியத்தில் 2,000 பேர் புதிதாகப் பணி நியமனம் செய்யப்படுவர்.

*சுற்றுச் சூழல்*

99. சுற்றுச் சூழலைப் பாதுகாக்க, இந்த அரசு உயர்முன்னுரிமை அளிக்கும். தோல் பதனிடு தொழிற்சாலைகள், துணிகளுக்குச் சாயம் தோய்க்கும் தொழிற்சாலைகள், சவ்வரிசி தயாரிப்புத் தொழில் பிரிவுகள், உணவகங்கள், மருத்துவமனைகள், இரசாயனத் தொழில் பிரிவுகள். ஆகியவை உட்பட, 3130 தொழிற்சாலைகளுக்கான 57 கழிவுநீர் சுத்திகரிப்பு பொது நிலையங்களை ஏற்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. இதற்காக, மாநில அரசின் உதவித் தொகையின் பங்காக, ரூ. 2.50 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

100. காற்று மாசுபடுவதைக் கண்காணிக்கும் தொடர் ஏற்பாட்டு முறைகள் இரண்டை, ஒவ்வொன்றும் ரூ. 40 இலட்சம் செலவில் தூத்துக்குடியிலும், கடலூரிலும் அமைக்க, நடப்பாண்டில் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

101. மேலும், பல்வேறு வகைகளில் சுற்றுச் சூழல் மாசுபடுவதைக் கட்டுப்படுத்தி, நிர்வகிக்க, விரிவான செயல்திட்டம் ஒன்றை நாம் வகுக்க உள்ளோம். இதற்காக, ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*கால்நடை வளர்ப்பு*

102. நடப்பாண்டில் கால்நடை மருந்த கங்கள் பத்து, கால்நடை மருத்துவ மனைகளாக நிலை உயர்த்தப்படும். புதிதாகப் பத்து கால்நடை மருந்தகங் களும் தொடங்கப் படும். கால்நடை மருத்துவ -அறிவியல் பல்கலைக் கழகத்தின் கீழ் வருகின்ற நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியிலும், தூத்துக்குடி மீனளங்கள் அறிவியல் கல்லூரியிலும் மாணவியர் தங்கும் விடுதிகள் கட்டப்படும்.




*வனவளம்*

103. தமிழ்நாடு விரிவாக்கக் காடு வளர்ப்புத் திட்டம் ஒன்று ரூ. 496 கோடி செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்புதல் ஜப்பான் நாட்டின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனத்திடமிருந்து இந்த ஆண்டிலேயே கிடைக்கும். இத்திட்டச் செயலாக்கத்தைத் தொடங்க, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

*மீனவர்களுக்கு இலவச வீடு கட்டும் திட்டமும் அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டமும்.*

104. தமிழகத்திலுள்ள 442 மீன்பிடிக் கிராமங்களில் தற்போது கூரை வீடுகளிலே வாழும் மீனவர் குடும்பங்களுக்கு, மின் விளக்கு, ஒன்றுடன் கூடிய 20,000 வீடுகள் கட்டிக்கொடுக்கும் ஒரு சிறப்புத் திட்டத்தை வரும் ஐந்தாண்டுகளில் இந்த அரசு செயல்படுத்தும் என்பதை இம்மாமன்றத்தில் மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டொன்றுக்கு 4,000 இலவச வீடுகள் கட்டவும், தற்போது பழுதடைந்த நிலையிலிருக்கும் வீடுகளை மேம்படுத்தவும், இணைப்புச் சாலைகள், தெரு விளக்குகள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும், வரும் ஐந்தாண்டுகளில் செலவிடப்படும் தொகை ரூ. 75 கோடியாக இருக்கும். முதற்கட்டமாக, இத்திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 6.73 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




*வேலை வாய்ப்பு*

105. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 1988ஆம் ஆண்டில் 26 இலட்சத்து 7 ஆயிரத்து 92 ஆக இருந்த பதிவு செய்தோரின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து 1995ஆம் ஆண்டு 34 இலட்சத்து 79 ஆயிரத்து 202-ஐ எட்டியுள்ளது. ஆனால், 1988 ஆம் ஆண்டில் 54,388 ஆக இருந்த வேலை கிடைத்தவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து 1995-ல் 16,582 அளவிற்குச் சரிந்துள்ளது. இந்த நிலையைச் சீராக்கவும், ஊரக மற்றும் நகர்ப்பகுதிகளில் உள்ள வேலை வாய்ப்பற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு கிட்டுவதைக் உறுதி செய்வதற்கும், இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கும்.











106. இஃதன்றியில் பத்தாம் வகுப்பு வரையிலும், அதற்கு மேலும் படித்துவிட்டு வேலை வாய்ப்புக் கிட்டாமல் இருக்கும் இளைஞர்களுக்கு, மாதம் ரூ. 500 மதிப்பூதியத்தில், கிராமப்புறங்களில் முதியோர் கல்வி, தொடர் கல்வி, படிப்பகங்கள் மூலம் உலக அறிவு பரப்புதல், கிராமப் பொதுச்சொத்துக்களைப் பேணிக்காத்திடத் துணைபுரிதல், சிறு சேமிப்புத் திட்டத்திற்கு உதவுதல் போன்ற பணிகளை வழங்கி ஓர் ஊராட்சிக்கு 2 பேருக்கு ''மக்கள் நலப் பணியாளர்'' என்று மொத்தம் 25,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படும். இதேபோல் நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் 12-வது வகுப்பு (+2) தேர்வு பெற்ற 10,000 பேர் மக்கள் நலப் பணியாளர்களாக நியமிக்கப்படுவார்கள்.

*வேலை வாய்ப்பும் மகளிர் மேம்பாடும்*

107. குடிப் பழக்கத்தால் ஏற்படும் தீமைகளை மக்களுக்கு எடுத்துரைக்க மகளிர் குழுக்கள் மூலம் விளம்பரங்கள் செய்யும் பணி, ஏற்கெனவே தமிழ்நாட்டில் சில தனியார் முயற்சிகள் மேற்கொண்டுள்ளதுபோல் அரசால் மேற்கொள்ளப்படும். 25,000 மகளிருக்கு வேலை வாய்ப்பு அளித்து இப்பணியில் ஈடுபடுத்தி, இத்திட்டத்தைச் செயற்படுத்த, ரூ. 5 கோடி நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

108. 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் ''தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்'' என்னும் பெரும் திட்டத்தை கழக அரசு துவங்கியது. இத்திட்டம் தற்போது ஆறு மாவட்டங்களில் சில பகுதிகளில் மட்டும் செயல்படுத்தப்பட்டு, சுமார் 55000 ஏழைப் பெண்களுக்குப் பயனளித்து வருகிறது. கிராமப்புறங்களில் வாழும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள எல்லாப் பெண்களுக்கும், அதிக வருமானம் கிடைக்கவும், வேலைவாய்ப்பினைப் பெருக்கவும், இத்திட்டத்தினை நிதி உதவி நிறுவனங்கள், வங்கிகள் ஆகியோரின் பங்கு பெற்று, மொத்தம் ரூ. 1420 கோடி செலவில், மாநிலம் முழுவதும் நீட்டிக்க, இந்த அரசு முடிவு செய்துள்ளது. நடப்பாண்டில் 10 மாவட்டங்களில் 3 இலட்சம் மகளிர் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் செயல்பாட்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற மகளிர் குழந்தைகளுக்கான வளர்ச்சித் திட்டம், பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டம், மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம், இந்திரா மகளிர் திட்டம், சிறப்பு உள்ளடக்கத் திட்டம், பயன்படுத்தாத நில அபிவிருத்தி நீர்ப்பிரிமுகடு வேளாண்மை போன்ற பல திட்டங்களும் ஒருங்கிணைக்கப்படும். இத்திட்டம் படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படுவதன் மூலம், வரும் ஐந்தாண்டுகளில் 10 இலட்சம் மகளிர் பயன் பெறுவர்.

*சத்துணவு*

109. கல்வி பயிலும் இளஞ்சிறார்க்காக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட சத்துணவுத் திட்டத்திற்கு, 1995-96 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 360 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்க, இந்நிதி ஒதுக்கம் நடப்பு நிதி ஆண்டில் ரூ. 401 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

''வயிற்றுக்குச் சோறிட வேண்டும் – இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்,
பயிற்றிப் பலகல்வி தந்து – இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.''

என்று பாடிய மகா கவி பாரதியாரின் ஆசையை முழுமையாக நிறைவு செய்திட, ஏழ்மையால் ஏற்படும் பசிக் கொடுமையை அறவே களைய பசிப்பிணி போக்கும் திட்டம் ஒன்றைப் புதிதாக இந்த அரசு செயல்படுத்தும். வறுமையை ஒழிக்கவும். மக்களில் பல்வேறு தொகுதி யினருக்குத் தேவைப்படும் சத்துணவை வழங்கவும் ஏற்கெனவே பல



திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அத் திட்டங்களின் கீழ் வராத பிரிவினர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கும் பயனளிக்கும் வகையில், இந்தப் பசிப்பிணி போக்கும் திட்டம் அமையும். இதற்கான விரிவான செயலாக்கத் திட்ட அறிக்கையை டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் உதவியுடன் வெகுவிரைவில் உருவாக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நலன்

*110.* ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நலனுக்காக, 1995-96 ஆம் நிதி ஆண்டில் மொத்தம் ரூ. 208.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்க, இது நடப்பு நிதி ஆண்டில் ரூ. 267.39 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

★ பட்ட மேற்படிப்பு மாணவர் விடுதி முதன் முறையாக நடப்பாண்டில் தொடங்கப்படும்.

★ ஆதிதிராவிட மாணவியர் விடுதிகள் அனைத்திற்குமான கட்டிடங்கள் கட்டும் மூன்றாண்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காக, நடப்பாண்டில் ரூ. 8.50 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

★ ஆதிதிராவிட மாணவர்களுக்காக, புதிதாக 40 மாணவர் விடுதிகள் நடப்பாண்டில் திறக்கப்படும்.

★ ஆதிதிராவிடர் மேனிலைப்பள்ளிகள் அனைத்திற்கும், நடப்பாண்டில் மொத்தம் ரூ. 72 இலட்சம் செலவில் ஆய்வுக்கூடக் கட்டிடங்கள் கட்டப்படும்.

★ 25 உயர்நிலைப் பள்ளிகளுக்கு நடப்பாண்டில் ஆய்வுக்கூட வசதிகள் செய்து கொடுக்கப்படும். கணினி பாட வகுப்புகள் 10 ஆதி திராவிடர் நல மேனிலைப் பள்ளிகளில் தொடங்கப்படும்.

★ பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்

*111.* 1969 ஆம் ஆண்டுக்கு முன் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்காக ஒரு சில இலட்சங்களே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 1969-ல் கழக ஆட்சியில் தான் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் துறைக்கென ஒரு தனி அமைச்சகமே அமைக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சீர்மரபினர் ஆகியோரது நலனுக்கான ஒதுக்கீடு 1995-96-ல் ரூ. 47.27 கோடியாக இருக்க, நடப்பாண்டில் ரூ. 54.31 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கல்வியிலும், வேலைவாய்ப்பிலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரது நலனை மேம்படுத்துவதற்குத் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், பெருந்தலைவர் காமராஜரும் ஆற்றிய இடைவிடாத பணிகளைத் தொடர்ந்து, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், 69 சதவீத இடஒதுக்கீட்டின் பயன் முழுவதையும் பெறுவதை நிலைநிறுத்த, இந்த அரசு முழு அளவில் உறுதிபூண்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் மாணவர்களின் பயனுக்காக, புதிதாக மொத்தம் 45 மாணவர் விடுதிகள் நடப்பாண்டில் தொடங்கப்படும். நடப்பாண்டில் மொத்தம் ரூ. 58.32 இலட்சம் செலவில் மாணவர் விடுதிக்கட்டிடங்கள் ஒன்பது கட்டப்படும்.

*112.* பத்தாம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இலவசமாக அனைத்துப் பாடப்புத்தகங்கள் வழங்கும் புதிய திட்டம் ஆண்டொன்றுக்கு ரூ. 45 இலட்சம் செலவில் நடப்பு நிதி ஆண்டு முதற்கொண்டு செயல்படுத்தப்படும்.

### கைத்தறி நெசவாளர் நலன்

*113.* இந்த அரசு இதற்கு முன் ஆட்சியில் இருந்தபோது, கைத்தறி நெசவாளர்கள் பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்தில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. இருப்பினும், மிக அண்மைக் காலத்தில், இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் எண்ணற்ற ஊழல்கள் நடைபெற்றன. இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு நலன் பயக்கும் வகையில் செயல்படுத்தப்பட உறுதி கொண்டு, இதற்கென நடப்பாண்டில் ரூ. 65 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

*114.* 1989-91 ஆம் ஆண்டுகளில் இலாபத்தில் இயங்கி வந்த கூட்டுறவு நூற்பாலைகள், கடந்த ஐந்தாண்டுகளில் பெரும் நட்டத்தில் இயங்கத் தொடங்கின. நிர்வாகச் சீர்கேடுகள் பல ஏற்பட்டதன் விளைவாக, 18 நூற்பாலைகளின் ஒட்டுமொத்த நட்டம் 1995-96 ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 181.43 கோடியளவிற்கு அதிகரித்துவிட்டது. இந்த ஆட்சி பொறுப்பு ஏற்பதற்கு முன்னர் தனது தேர்தல் அறிக்கையில் தமிழ்நாட்டில் மூடிக்கிடக்கின்ற பஞ்சாலைகளைத் திறப்பதற்கும், நலிவடைந்த பஞ்சாலைகளைச் சீரமைத்துச் செயல்படுத்தித் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும் துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என வாக்குறுதி அளித்திருந்தது. அதனடிப்படையில் தற்போது மூடிக்கிடக்கின்ற கூட்டுறவு நூற்பாலைகளையும் நலிந்த கூட்டுறவு நூற்பாலைகளையும் சீரமைத்துச் செயல்படுத்த இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

*115.* கழக ஆட்சியில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு 1975-76 ஆம் ஆண்டு முதல் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் தொடங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள நெசவாளர் 58 வயது அடையும் முன்னர் இறக்க நேரிடில், வாரிசுதாரர்களுக்கு ஆயுள்காப்பீட்டு நிறுவனம் வழங்கும் காப்பீட்டுத் தொகை 1989-90 ஆம் ஆண்டு வரை ரூ. 3,000 ஆக இருந்தது. 1990-91 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் இத்தொகை ரூ. 3,000 லிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்தப்பட்டது. தற்போது ஆயுள் காப்பீட்டுத் தொகை ரூ. 15000 ஆக உள்ளது. இதனை உயர்த்தி வழங்க வேண்டுமென்று நெசவாளர் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளதற்கு இணங்க, இந்தக் காப்பீட்டுத் தொகை ரூ. 25,000 ஆக உயர்த்தப்படும். இதற்குத் தகுந்த தவணைத் தொகையை (Premium) அரசு செலுத்தும்.



இச்சலுகையைப் பெற 58 வயதாக இருந்த உச்சவரம்பு 60 வயதாக உயர்த்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், ஒரு இலட்சத்து பத்தாயிரம் கைத்தறி நெசவாளர்கள் பயன் பெறுவர்.

### திரைப்படத் தொழிலுக்கு ஊக்குவிப்பு

*116.* திரைப்படத் தொழிலில் உருவாகியிருந்த தயாரிப்பாளர் - தொழிலாளர் பிரச்சினையை, இந்த அரசு பொறுப்பேற்றவுடன் நாளும் செய்தித் துறை அமைச்சரும் சுமுகமாகத் தீர்த்து வைத்ததை அனைவரும் அறிவீர்கள். திரைப்படத் தொழிலில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள தேய்வுநிலை குறித்துப் பல முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளன. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் சார்ந்துள்ள இத்தொழில் முடக்கப்படாமல் இருக்க, சில சலுகைகளை வழங்க அரசு முன் வந்துள்ளது.

*117.* தற்போது, மாநிலத் தொல்பொருள் துறை கட்டுப்பாட்டில் உள்ள கட்டிடங்கள், புராதனச் சின்னங்கள், அரசு நிறுவனங்கள் ஆகியவற்றில் படப்பிடிப்பு நடத்துவதற்கு நாள் ஒன்றுக்கு ரூ. 5000 என்றும், பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகள் கடற்கரைச் சாலைகள், நெடுஞ்சாலைகள், அணைக்கட்டுக்கள் போன்ற பொது இடங்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 2500 என்றும் வசூலிக்கப்படுகிறது. இது மிகவும் அதிகம் என்று கருதி, நாளொன்றுக்கு ரூ. 5000 என இருக்கும் கட்டணம் ரூ. 1000 ஆகவும், ரூ. 2500 என இருக்கும் கட்டணம் ரூ. 500 ஆகவும் குறைக்கப்படுகிறது.




*118.* 25 பிரதிகளுக்குக் குறைவாக குறைந்த செலவில் எடுக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு 1989-ல், கழக அரசால் தொடங்கப்பட்ட திரைப்படமானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், தற்போது வழங்கப்படும் மானியத் தொகையான ரூ. 3 இலட்சம் ரூ. 5 இலட்சமாக உயர்த்தப்படும். அத்திரைப்படங்களுக்கு, அவை முதன்முறையாகத் திரையிடப்பட்ட நாளிலிருந்து, முதல் நான்கு வாரங்களுக்குக் கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.




### அரசு அலுவலர் நலன்

*119.* எங்களது தேர்தல் அறிக்கையில் உள்ள வாக்குறுதியின்படி அரசு அலுவலர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதி ரூ. 60000 லிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 3.20 கோடி கூடுதல் செலவாகும்.

*120.* அரசுப் பணியாளர்களுக்கு உள்ளது போல, தமிழ்நாட்டில் உள்ள பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் பணியாளர்களுக்கும் நல்வாழ்வு நிதித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இதற்காகத் தனித் தனியாக நிதி ஏற்படுத்தப்படும். இந்த நிதிக்கு அரசு தனது பங்காக ஆண்டுதோறும் ரூ. 20 இலட்சம் வழங்கும், அரசுப் பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்வது போலவே இப்பணியாளர்களிடமிருந்தும் ஆண்டொன்றுக்கு ரூ. 5 பிடித்தம் செய்யப்படும். இதன்படி சிறப்புச் சிகிச்சை மற்றும் சிறப்பு அறுவைச் சிகிச்சைக்கான செலவில் ரூ. 1 இலட்சம் அல்லது 75 விழுக்காடு இதில் எது குறைவோ அவ்வளவிற்கு உதவித் தொகை பெறுவர்.

*121.* குறைந்த ஊதிய விகிதம் பெறும் அரசு அலுவலர்கள் மிக அதிக அளவில் பயன்படுத்தும் மிதிவண்டி வாங்கத் தற்பொழுது வழங்கப்படும் முன்பணம் ரூ. 1,000 லிருந்து ரூ. 1,500 ஆக உயர்த்தி வழங்கப்படும். அதேபோல் தற்பொழுதுள்ள விலையைக் கருத்திற்கொண்டு புதிய கார் வாங்க வழங்கப்படும் முன்பணம் ரூ.1.4 இலட்சத்திலிருந்து ரூ. 2 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். மோட்டார் சைக்கிள் வாங்க வழங்கப்படும் முன்பணம் ரூ. 25,000 லிருந்து ரூ. 35,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கேற்ப பழைய வாகனங்கள் வாங்க முன்பணம் உயர்த்தி வழங்கப்படும்.

*122.* தற்போது ஓர் அரசு அலுவலர் மகள் அல்லது மகனின் திருமணத்திற்காக வாங்கிய முதல் கடன், நிலுவையில் இருக்கும் பொழுது, அடுத்து இரண்டாவதாக

ஒரு கடன் திருமணத்திற்காக வாங்க இயலாது என்ற தடையை நீக்கி, மீண்டும் கடன் பெற வழிவகை செய்யப் படும். பண்டிகை முன்பணம் பெறும் பட்டியலில் தற்போது சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினம் சேர்க்கப்பட வில்லை. இனி இந்த நாட்களும் இந்தப் பட்டியலில் இணைக்கப்படும்.

123. பணியிலிருந்து ஓய்வு பெறும் அலுவலர்கள் தற்பொழுது அதிகபட்சமாக 240 நாட்கள் ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்து விடுப்புக்கால் சம்பளம் பெற வழிவகையுள்ளது. அரசு அலுவலர்களின் நீண்ட காலக் கோரிக்கையான தனிப்பட்ட அலுவலுக்காக வழங்கப்படும் அரைச் சம்பளத்துடன் கூடிய விடுப்பினை ஒப்படைப்பு செய்வதை இவ்வரசு ஏற்றுக் கொண்டு 90 நாட்களுக்கு மிகைப்படாமல் 50 விழுக்காடு விடுப்பினை (Half Pay Leave on Private Affairs) ஒப்படைப்பு செய்து விடுப்புக்கால முழுச் சம்பளம் வழங்க இவ்வரசு தீர்மானித்துள்ளது. மேலும் ஓய்வு பெறும் பொழுது ஒப்படைப்பு செய்யும் ஈட்டிய விடுப்பிற்கு 180 நாட்களுக்கு மேலுள்ள நாட்களுக்கு விடுப்புக்காலச் சம்பளம் வழங்கும்பொழுது, இனிமேல் வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற இதரப்படிகளும் சேர்ந்து முழுச் சம்பளம் வழங்கப்படும். மேற்கண்ட சலுகையினால், ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்வதால் அதிகபட்சமாக 8 மாத விடுப்புக்கால முழுச்சம்பளமும், தனிப்பட்ட அலுவலுக்காக வழங்கப்படும் விடுப்பின் மூலமாக அதிகபட்சம் 3 மாத முழுச்சம்பளமும் கிடைக்கும். மாநில அரசில் பணிபுரியும் அனைத்திந்திய பணிகளைச் (All India Services) சார்ந்த அலுவலர்களுக்கும் இந்தச் சலுகை பொருந்தும். இச்சலுகையினால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 17 கோடி செலவாகும்.

124. அரசு ஊழியர்கள் தற்போதைய விதிப்படி முழு அளவு ஓய்வூதியம் பெற 33 ஆண்டுகள் பணி செய்திருக்க வேண்டும். ஆனால் தற்போது அரசுப் பணியாளர்கள் அரசுப் பணியில் நுழையும் வயது வரம்பு 28 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. எனவே 28 வயதில் ஒருவர் அரசுப் பணியில் சேர்ந்தால் அவர் முழு அளவு ஓய்வூதியத்திற்குத் தகுதி உடையவராக இல்லாமல் இருக்கும் நிலை உருவாகியுள்ளது. அரசுப் பணியாளர்கள் சங்கங்களின் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு, முழு ஓய்வூதியம் பெறும் பணிக்கால வரம்பினை 33 லிருந்து 30 ஆகக் குறைக்கவும் ஓய்வூதியம் கணக்கிடும் முறையில் ஒரு சில மாற்றங்களைப் புகுத்தவும் இந்த அரசு முடிவெடுத்துள்ளது. எடுத்துக்காட்டாக, தற்போதுள்ள 10 மாத சராசரி அடிப்படை ஊதியத்தை நிர்ணயிப்பதைத் தவிர்த்து அரசு ஊழியர் ஓய்வு பெறும் நாளன்று அவர் பெறும் அடிப்படை ஊதியத்தில் 50 விழுக்காடாக அவரது ஓய்வூதியம் நிர்ணயிக்கப்படும். அதே சமயம், சில அரசுப் பணியாளர்கள் ஓய்வூதியம் பெறும் சமயத்தில் பணி இறக்கம் செய்யப்படும் நிலை சில துறைகளில் இருப்பதினால், 10 மாத சராசரியில் 50 விழுக்காடு அல்லது கடைசியாக அவர் பெற்ற ஊதியத்தின் அடிப்படைச் சம்பளத்தில் 50 விழுக்காடு, இது இரண்டில் எது அதிகமாக உள்ளதோ அந்தத் தொகையையே அந்த அரசுப் பணியாளரின் ஓய்வூதியமாக நிர்ணயிக்கலாம் என்று அரசு முடிவெடுத்திருக்கிறது. இது 1.7.96 முதல் நடைமுறைக்கு வரும்.

125. ஓய்வு பெறும் அரசு ஊழியர்களின் நலன் கருதி மேலே அறிவித்துள்ள இரண்டு ஓய்வூதியத் திட்டங்களுமே மைய அரசாலோ அல்லது வேறு எந்த மாநில அரசாலோ இதுவரை செயல்படுத்தப்படவில்லை என்பதையும், இவை இரண்டுமே இந்த அரசு அறிமுகப்படுத்தும் முன்னோடித் திட்டங்கள் என்பதையும் நான் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் குறிப்பிட விரும்புகிறேன்.

**ஓய்வூதியர் நலன்**

126. ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு 1.10.95 முதல் வழங்கப்பட்ட இடைக்கால நிவாரணம் மைய அரசு ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட்டதைப் போல் 1.4.95 முதல் முன்தேதியிட்டு வழங்கப்படும். மேலும், ஓய்வு பெறும்போது 97 சதவீதம் அகவிலைப்படியை சம்பளத்துடன் சேர்த்துப் பணிக்காலக்கொடை கணக்கிட்டு வழங்குதல் மற்றும் பணிக்காலக்கொடையின் (Death-cum-Retirement Gratuity) உச்சவரம்பை ரூ. 2.50 இலட்சமாக உயர்த்தி வழங்குதல் போன்ற சலுகைகள் கடந்த ஆட்சியில் 1.10.1995 முதல் தான் வழங்கப்பட்டது. இவை மைய அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டதுபோல் 1.4.1995 முதல் முன்தேதியிட்டு வழங்கப்படும். அதேபோல், அரசு




அலுவலர்களுக்கு 1995 டிசம்பர் மாதம் முதல் உயர்த்தி வழங்கப்பட்ட மருத்துவப்படியை ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் ரூ. 50 ஆக உயர்த்தி வழங்கப்படும். இச்சலுகைகளினால் அரசுக்கு ஆண்டுக்கு ரூ. 7. கோடி தொடர் செலவும் ரூ. 57.50 கோடி தொடராச் செலவும் ஏற்படும்.

127. தமிழ்நாட்டில் சுமார் 2 இலட்சம் ஓய்வூதியம் பெறுவோர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பெறும் ஓய்வூதியத்திலிருந்தும் மாதந் தோறும் ரூ. 20 ஒரே சீராகப் பிடித்தம் செய்து ஒரு தனி நிதி உருவாக்கப்படும்.



இதுபோல், ஓர் ஆண்டு வரை பிடித்தம் செய்த பின்பு ஓய்வூதியம் பெறுவோர் இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு ரூ. 25,000 வழங்கும் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும். இதைப் பற்றிய விவரங்களை ஓய்வூதியம் பெறுவோர் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி இந்தத் திட்டத்திற்கு இறுதி வடிவம் அளிக்கப்படும்.

**பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம்**

128. 1989 ஆம் ஆண்டு கழக ஆட்சியில் பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியம் திங்கள் ஒன்றுக்கு ரூ. 250-லிருந்து ரூ. 400 ஆக உயர்த்தப்பட்டது. 1993-ல் ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டது. இப்போது அவர்களின் கோரிக்கையை ஏற்று ஓய்வூதியத்தைத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 1000 என்று வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.




**முன்னாள் கிராம அதிகாரிகள் பிரச்சினை**

129. முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளித்தோடல்லாமல் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டமும் கழக அரசின் பரிசீலனையிலிருந்தது. அதைச் செயல்படுத்துமுன் அரசு கலைக்கப்பட்டுவிட்டது. முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்க நீதி மன்றம் (Tribunal) ஆணை பிறப்பித்தது. ஆனால் இதற்கு முந்தைய அரசு அந்த ஆணையின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காதது மட்டுமில்லாமல் அரசின் மீது கிராம அதிகாரிகள் நீதி மன்ற அவமதிப்பு (Contempt of Court) மனுத்தாக்கல் செய்த பின்பு அதனை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடும் செய்தது.

130. உச்ச நீதி மன்றத்தில் முந்தைய அரசு செய்த மேல் முறையீட்டைத் திரும்பப் பெற்று, முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவதன் மூலம், 8,500 பேர் பயன்பெறும் வகையில் தற்போது இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**நிதி நிலைமை**

131. முந்தைய அரசு இந்த அவையின் முன் வைத்த, 1996-97க்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கில் மொத்த வரவு ரூ. 10 ஆயிரத்து 543 கோடி என்றும், மொத்தச் செலவு ரூ. 11 ஆயிரத்து 505 கோடி என்றும் மதிப்பிடப்பட்டிருந்தது. இதனால், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ. 962 கோடியாகும். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கில் மொத்த வரவுகள் ரூ. 11 ஆயிரத்து 68 கோடி என மதிப்பிடப்பட்டிருக்க, இது ரூ. 524.55 கோடி அதிகமாகும். மொத்தச் செலவு ரூ. 601.09 கோடி அதிகரித்து ரூ. 12 ஆயிரத்து 107 கோடியாக உள்ளது. இவ்வாறாக, வருவாய்ப் பற்றாக்குறை ரூ. 1038:63 கோடி அளவிற்கு அதிகரித்துள்ளது. இதற்கான முக்கியக் காரணங்கள், அகவிலைப்படி வழங்குவதற்கு இடைக்கால வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்திற்கு மேல் கூடுதலாக ரூ. 90 கோடி நிதி ஒதுக்கம் செய்துள்ளதும், உணவு மானியத் தொகைக்கான நிதி ஒதுக்கம், இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டைவிட ரூ. 150 கோடி அதிகரித்துள்ளதும், புதிய பகுதி - 2 திட்டங்கள் சேர்க்கப்பட்டிருப்பதும், திட்ட ஒதுக்கீடு அதிகரித்திருப்பதும் ஆகும்.

132. 1996-97 இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில், அனைத்துக் கணக்குகளின் கீழ்வரும் பற்று வரவுகளின் நிகர விளைவு (-) ரூ. 270.66 கோடி பற்றாக்குறையாக இருக்குமென மதிப்பிடப்பட்டிருந்தது. இந்த ஆண்டு ஏற்பட்ட பற்றாக்குறை, 1996-97 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ. 334.89 கோடியாக அதிகரித்துள்ளது. 1995-96 திருத்த மதிப்பீடுகளில் இறுதி இருப்பு (-) ரூ. 410.16 கோடி என மதிப்பிடப்பட்டிருக்க, 1996-97 ஆம் ஆண்டு இறுதியில் இறுதி இருப்பு (-) ரூ. 745.05 கோடி என இப்போது மதிப்பிடப்பட்டுள்ளது.

133. வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை, ஒட்டு மொத்தப் பற்றாக்குறை ஆகியவற்றின் அளவுகள், மிகவும் கவலை அளிக்கத்தக்கவையாக உள்ளன. ஆகையால், இந்தப் பற்றாக்குறை ஓரளவிற்குச் சரிகட்ட தக்க வரி விதிப்பு மற்றும் செலவு நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

**மோட்டார் வாகன வரி**

134. ஒப்பந்தப் பேருந்துகளுக்கு (Omni bus) உச்ச நீதி மன்றத்தில் ஒரு காலாண்டுக்கு ஓர் இருக்கைக்கு ரூ. 1500 வரை மோட்டார் வாகன வரி விதிக்கலாம் என்று 1990-ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப ஒப்பந்தப் பேருந்துகளுக்கு இனி ஒரு காலாண்டுக்கு ஓர் இருக்கைக்கு ரூ. 1500 வரி விதிக்கப்படும்.

135. எடை குறைவான மோட்டார் வாகனங்கள் மீதான வரிகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இறக்குமதி செய்யப்பட்ட ஆடம்பர வாகனங்கள் மீது மட்டுமே உயர்த்தப்பட்ட வரி விதிக்கப்படும். இந்த விவரங்கள் பின்வருமாறு.

> வற்றாது வளங்கொழிக்கும் ஆறுகளைக் கொண்டோ, வானோங்கிய மலைகளைக் கொண்டோ ஒரு நாட்டை மதிப்பிட முடியாது; மக்களின் மனவளத்தைக் கொண்டே மதிப்பிட முடியும்.
>
> – அறிஞர் அண்ணா

| சுமையில்லாத எடை | இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் | |
|---|---|---|
| | தற்போதைய வரி | மாற்றியமைக் கப்பட்ட வரி. |
| | (ஆண்டொன்றுக்கு ரூபாய்) | |
| 700 கிலோ வரை | 1500 | 1800 |
| 701 கிலோவுக்கு மேல், 1500 கிலோ வரை | 1950 | 2350 |
| 1501 கிலோவுக்கு மேல், 2000 கிலோ வரை | 2250 | 2700 |
| 2001 கிலோவுக்கு மேல், 3000 கிலோ வரை | 2400 | 2900 |
| 3001 கிலோவிற்கு மேல் | 2700 | 3300 |

**வணிக வரிக் கொள்கை**

*136.* ஏற்கெனவே கழக அரசால் பெரும்பாலான பொருள்கள் மீதிருந்த பலமுனை வரியை நீக்கி ஒருமுனை வரி கொண்டுவரப்பட்டது. பின்னர் பல பொருள்களுக்குக் கடந்த ஆட்சியால் பலமுனை வரி விதிக்கப்பட்டது. இந்த அரசு வணிகச் சங்கங்களின் கோரிக்கையை ஏற்று எல்லாப் பொருள்களின் மீதும் பலமுனை வரியை அகற்றி ஒருமுனை வரியாக விதிக்க முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொலை நோக்கு வரிக் கொள்கை**
**(Long Term Taxation Policy)**

*137.* தூய்மையான ஆட்சியையும் நேர்மையான நிர்வாகத்தையும் தமிழகத்திற்கு அளிப்பதே எங்களுடைய தலையாய குறிக்கோளாகும். அதனை எய்துவதற்கும் தொழில் வளர்ச்சியும், வணிகமும் தழைத்தோங்குவதற்கும் குழப்பமற்ற, நிலையான, நேயமான ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். இத்தகைய சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு தொலைநோக்கு வரிக்கொள்கை (Long Term Taxation Policy) ஒன்றினை உங்கள் முன் வைக்கிறேன்; வணிக சமுதாயத்தினரும், தொழில் முனைவோரும் இதனைப் பெரிதும் வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

*138.* அவ்வப்போது வரி விதிப்பில் மாற்றங்கள் கொண்டு வருவதைத் தவிர்த்து, தொலை நோக்குடைய ஒரு நிலையான வரி விதிப்புக் கொள்கையை மேற்கொள்ள இவ்வரசு முடிவு செய்துள்ளது. இதனடிப்படையில் பின்வரும் வரிச் சீரமைப்புகள் மேற்கொள்ளப்படும்.

***139.* விற்பனை வரி விதிப்புக்கான குறைந்தபட்ச வரம்பு ரூ. 1 இலட்சத்திலிருந்து ரூ. 3 இலட்சமாக உயர்த்தப்படும்.**

***140.* ஆண்டொன்றுக்கு ரூ. 3 இலட்சத்திற்கு மேல் ரூ. 10 இலட்சத்திற்குள் மொத்த விற்பனைத் தொகை உள்ள வணிகர்களுக்குத் தமது விருப்பத் தேர்வின்படி (Option) பின்வரும் விகிதங்களில் வரி செலுத்தும் வகையில் இணக்க வரி விதிப்பு முறை (Compounding method) அமலாக்கப்படும்:**

| | |
|---|---|
| ரூ. 3 இலட்சத்திற்கு மேல் ரூ. 5 இலட்சத்திற்குள் | 3 சதவீதம் |
| ரூ. 5 இலட்சத்திற்கு மேல் ரூ. 10 இலட்சத்திற்குள் | 5 சதவீதம் |

இவ்வணிகர்கள் மொத்தக் கணக்குகள் வைத்திருந்து துறைக்குக் காண்பித்தால் போதுமானது. விரிவான கணக்குள் வைக்கத்தேவையில்லை.

**சுய வரி விதிப்பு முறை (Self - Assessment)**

*141.* தற்போது ஆண்டொன்றுக்கு ரூ. 5 இலட்சத்திற்குள் மொத்த விற்பனைத் தொகை உள்ள






வணிகர்களுக்கு மட்டுமே சுய வரி விதிப்பு முறை பொருந்துகிறது. இது ரூ. 10 இலட்சத்திற்குள் விற்பனைத் தொகையுள்ள வணிக நிறுவனங்களுக்கும் தொழில் நிறுவனங்களுக்கும் பொருந்துமாறு விரிவாக்கப்படுகிறது. இந்த முறையின் கீழ் ஆண்டொன்றிற்கு 25 சதவீதத்தினரின் கணக்குகள் கணிப்பொறி மூலம் வணிகவரி ஆணையரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தணிக்கைக்குட் படுத்தப்பட்டு, விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படும். மீதமுள்ள 75 சதவீதத்தினரின் கணக்குகளை ஆய்வு செய்ய வணிகவரி அலுவலர்களுக்கு எந்தவித பிரத்யேகமான அதிகாரமும் இருக்காது. இம்முறையினால் 70 ஆயிரத்திற்கு மேற்பட்ட வணிகர்கள் பயன் பெறுவதோடு, சிறு வியாபாரிகளுக்கு இருந்துவரும் இடர்ப்பாடுகளும் நீங்கும். இந்தப்புதிய முறைக்கு வணிக சமுதாயம் தரும் ஒத்துழைப்பைப் பொறுத்து உச்சவரம்பை உயர்த்துவது பற்றி பின்னர் யோசிக்கப்படும்.

**விற்பனை வரிச் சலுகைகள்**

***142.* விலைவாசி உயர்வுக்கு மாநில அரசு காரணம் இல்லையென்றாலும் மாநில அரசுக்குள்ள பொறுப்பையும் உணர்ந்து ரூ. 55 கோடி வருவாய் இழப்பையும் பொருட்படுத்தாமல் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் உணவுப் பொருள்களான பருப்பு, மிளகாய், தனியா, மஞ்சள், புளி, சீரகம், பெருங்காயம், வெல்லம், சீயக்காய் ஆகியவற்றிற்கு முழுமையான வரிவிலக்கு அளிக்க அரசு முடிவு செய் துள்ளது.**

***143.* இதுதவிர வெள்ளியினால் ஆன மெட்டி, கொலுசு, மற்றும் அரைஞாண், கையால் செய்யப்பட்ட தீக்குச்சிகள், நெல்லுமி, நொய்யரிசி, தேங்காய்மட்டை ஆகியவற்றிற்கும் வரி விலக்கு அளிக்கப்படுகிறது.**

***144.* சமையல் எரிவாயு (LPG) மீதான ஒட்டுமொத்த வரி விகிதம் 11.6 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.**

*145.* கரும்பு மீது அடிப்படை கொள்முதல் வரி 11 சதவீதம் (பிற வரிகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த வரி 14.7 சதவீதம், அமலில் உள்ளது. பிற தொழிற்சாலைகள் மூலப்பொருள்களை வாங்கும்பொழுது, பிரிவு 3(3)ல் கீழ் பயன்பெறும் சலுகை வரி, சர்க்கரைத் தொழிற் சாலைகளுக்கு இல்லை. எனவே சர்க்கரைத் தொழிற் சாலைகளை ஊக்குவிக்கும் வகையில் கரும்பு மீதான வரியினைப் புதிய வரிக் கட்டமைப்பில் 8 சதவீதமாகக் குறைக்கிறோம். இதனால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் வரி இழப்பு ரூ. 57 கோடி இருப்பினும் இது சர்க்கரைத் தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் என்ற நம்பிக்கையுடன் இச்சலுகை வழங்கப்படுகிறது.

*146.* முந்தைய அரசு 2 சி பட்டா மரங்களின் மீதான வரியை மிகவும் அதிக அளவிற்கு உயர்த்தியிருந்தது. இதற்கு மக்களிடையே ஏற்பட்ட எதிர்ப்பைக் கருத்தில் கொண்டு மரவரி மீண்டும் முன்பு இருந்த அதே விகிதங்களுக்கே குறைத்து விதிக்கப்படும்.

**விற்பனை வரிகள் ஒருங்கிணைப்பு**

*147.* வரிவிதிப்பு இனங்களில் விற்பனை வரி (Sales Tax) விற்பனை வரி மீது மேல்வரி (Surcharge on Sales Tax) கூடுதல் மேல் வரி (Additional Surcharge on sales Tax) கூடுதல் விற்பனை வரி (Additional Sales Tax) எனும் நா[illegible]கை வரிகளில், **மேல்வரி (Surcharge on Sales Tax) மற்றும் கூடுதல் வரி மேல்வரி (Additional Surcharge on Sales Tax) ஆகியவை மாநிலம் முழுவதும் அறவே நீக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு வரிக்கு உட்படும் விற்பனைத் தொகை ரூ. 100 கோடிக்குக் குறைவாக உள்ள நிறுவனங்களுக்குக் கூடுதல் விற்பனை வரி முற்றிலும் நீக்கப்படுகிறது.** இதனால் வணிகர்களுக்குள்ள பணிப்பளு மற்றும் வரி விதிப்புப் படிவங்கள் குறைந்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பயன் அடைவார்கள்.

*148.* தற்போதுள்ள வரிகளை ஒருங்கிணைத்துப் பின்வரும் மாற்றங்கள் செய்யப்படுகின்றன:

| நடைமுறையில் உள்ள அடிப் படை வரி | மேல்வரி கூடுதல் விற்பனை வரி மற்றும் கூடுதல் மேல் வரி உள்ளிட்ட வரி விகிதத்தின் அளவு | புதியவரி விகிதங் கள் |
|---|---|---|
| | (சதவீதத்தில்) | |
| 1 | 3 | 2 |
| 3 | 5.6 | 4 |
| 5 | 8 | 8 |
| 8 | 11.6 | 12 |
| 12 | 16.4 | 16 |
| 16 | 21.2 | 20 |

*149.* பெட்ரோல், மதுவகைகள் ஆகிய இரண்டு இனங்களுக்கும் வரிவிதிப்பு அளவில் மாற்றமில்லை. **ஆயினும் டீசல் மீதான வரியானது 19.2 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.**

**மூலப் பொருள்கள் மீதான மதிப்புக் கூட்டு வரி**
**(Value Added Tax)**

*150.* நாங்கள் ஆட்சிக்கு வந்த இரண்டு மாதங்களுக்குள்ளேயே வரிச் சீர்திருத்தங்கள் பற்றிய ஆய்வு மேற்கொண்டு மராட்டியம் போன்ற மாநிலங்களில் உள்ள கூட்டு வரி முறையைத் தமிழகத்திலே அறிமுகப்படுத்த முடிவு செய்துள்ளோம்.

***151.* தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் மூன்று சதவிகிதம் சலுகை வரிக்கு** உட்பட்டிருந்த போதிலும், மேல்வரி, கூடுதல் விற்பனை வரி சேர்ந்து 5.6 சதவிகிதமாக உள்ளது. முதலில் குறிப்பிட்டுள்ளவாறு எல்லா வரிகளையும் ஒருங்கிணைத்து விற்பனை வரியை ஒருமுனை வரியாக மாற்றப்படும் நிலையில் **மூலப் பொருட்களின் மீது விதிக்கப்படும் வரி யாவும் மூன்று விழுக்காடு அளவுக்குக் குறைக்க முடிவு செய்துள்ளோம். இதனால் மாநிலத்தில் பொருட்களின் தயாரிப்பாளர்கள் ரூ. 200 கோடி அளவுக்கு வரி செலுத்துவது** தவிர்க்கப்படும். மேலும் இவர்கள் தயாரிக்கும் பொருட்களின் விலை குறைந்து, பிற மாநிலத் தயாரிப்பாளர்






களுடன் விற்பனையில் போட்டியிட முடியாமல் இருந்த நிலை அகன்று தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்பு உருவாகும்.

***152. அரசால் அங்கீகரிக்கப்பட்ட மின் உற்பத்தித் திட்டங்கள் மாநிலத்திற்கு வாங்கும் மின் உற்பத்திக்கான முதலீட்டுப் பொருட்களுக்கு விதிக்கப்படும் வரி 12 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைக்கப்படும்.***

153. மூலப் பொருட்களுக்கு உள்ள மூன்று சதவிகித சலுகை வரியை அனைத்து வகை இயந்திரங்கள், மின் ஆற்றலைக் கொண்டு இயங்கும் பம்புகள், பவர் பேக்டார்ஸ் மற்றும் ஷண்ட் கெபாசிட்டர்ஸ், ஆயில் இஞ்சின்கள், உலைகள் மற்றும் கொதிகலன்கள், ஜெனரேட்டர்கள், ஜெனரேட் செட்டுகள், மற்றும் இவைகளின் பாகங்கள் மற்றும் துணைப் பொருட் களுக்கும் விரிவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு வருவாய் இழப்பு சுமார் ரூ. 55 கோடி அளவில் இருக்கும். ஆனால் தொழில் வளர்ந்து வேலை வாய்ப்பு பெருகி மாநிலப் பொருளாதாரம் வலுப்பெறும்.

154. தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி பெருகிட வகை செய்யுமுகத்தான், 100 சதவீத ஏற்றுமதிப் பொருள்கள் (100% Export oriented) தயாரித்திடும் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கும் மற்றும் (MEPZ) வளாகத்தில் உள்ள நிறுவனங்களுக்கும் நமது மாநிலத்திற்குள் கொள்முதல் செய்யப்படும் மூலப் பொருட்களுக்கும் முழுவரி விலக்கு அளிக்கப்படுகிறது.

155. தொழில் வளர்ச்சியை முன்னிட்டு இத்தகைய வரிச் சலுகைகளைச் செயல்படுத்தவுள்ள இந்த அரசு மறு விற்பனையாளர்களுக்கு (Resellers) மதிப்புக் கூட்டு வரி முறையை நடைமுறைப் படுத்தவும் திட்டமிட்டுள்ளது. முதற் கட்டமாக ஆண்டொன்றிற்கு மொத்த விற்பனைத் தொகை ரூ. 75 இலட்சமும் அதற்கு மேலும் விற்பனையுள்ள மறு விற்பனையாளர்களுக்கு இது பயன் தரும். தமிழ் நாட்டிலுள்ள மொத்தம் சுமார் 3 இலட்சம் பதிவு பெற்ற வணிகர்களில் 8 ஆயிரம் வணிகர்களுக்கு மட்டுமே இந்தப் புதிய முறை பொருந்தும். இம்முறையின் கீழ் வரும் வணிகர்கள் பொதுவாகப் பொருள்கள் விற்பனை மீதுள்ள அதே வரி விகிதத்தை மதிப்புக் கூட்டு வரியாகச் செலுத்த வேண்டும். மறு விற்பனையின்போது செலுத்தப்படும் விற்பனை வரி விற்கப்படும் பொருட்களின் மீது விற்பனையாளர் நிலையில் எந்த அளவுக்கு மதிப்புக் கூடுகிறதோ அந்த அளவு மீது மட்டுமே வரி விதிப்பு அமையும். மேலும், பொருள்களின் கூடிய மதிப்புக்கு மேலாக விதிக்கப்படும் வரியில் ஏற்கெனவே அவர் முதல் விற்பனையின்போது செலுத்தியுள்ள வரியைக் கழித்துக் கொண்டு மீதமுள்ள வரியை மட்டுமே செலுத்தினால் போதுமானது.

156. 17.7.1996 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும் புதிய வீதங்களுடன் கூடிய விரிவான திருத்த விவர அட்டவணைகள் இன்று தனியாக வெளியிடப் பட்டுள்ளன. அந்த விவர அறிவிக்கைகளின் நகல்கள் அவையின் முன் வைக்கப்பட்டுள்ளன. செய்யக் கருதியுள்ள சில மாற்றங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்க, தற்போதுள்ள சட்டங்களில் சில திருத்தங்களையும் செய்ய வேண்டியது அவசியமாகும். இத்திருத்தங்கள். நடப்பு சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்படும்.

157. மேற்கூறிய பல்வேறு சீர்திருத்தங்களினால் வணிக வரி வருவாயில் கணிசமான அளவு, அதாவது ரூ. 306 கோடி அளவுக்கு இழப்பு ஏற்படுகின்ற நிலைமை உருவாகியிருந்தும் மாநிலத்தின் தொழில் மற்றும் வாணிப வளர்ச்சி இவற்றைக் கருத்தில் கொண்டு இந்தச் சீர்திருத்தங்களைச் செய்திட நாங்கள் முடிவு செய்துள்ளோம். அதே நேரத்தில் இவ்வளவு பெரிய வரி வருவாய் இழப்பு ஏற்படுவதால் மாநில அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கும், நலத்திட்டங்களுக்கும் பெருமளவில் பாதிப்பு ஏற்படும். எனவே, வரி வருவாயிழப்பை ஈடுகட்டுவதற்குக் கூடுதல் வருவாய் திரட்டுவது இன்றியமையாததாகும். மைய அரசை நாங்கள் கேட்பதெல்லாம் பல்வேறு பணிகளின் மீது பணி வரி (Service Tax) விதிக்கும் அதிகாரத்தை மாநில

தமிழரசு

அரசுக்கு வழங்கும் வகையில் உரிய சட்டத் திருத்தத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்பதுதான். மேல்நாடுகள் பலவற்றில் பணிகள் வரி (Service Tax) விதித்து இருப்பது கண்கூடு. மேல்நாடுகள் பின்பற்றி வரும் மதிப்புக் கூட்டு வரியை நாங்கள் அறிமுகப்படுத்துவதனால் ஏற்படும் வரி வருவாய் இழப்பையும் பொருட்படுத்தாமல் அதனை அமல்படுத்த முடிவு செய்துள்ள மாநிலங்களுக்குப் பணி வரி விதிக்கும் அதிகாரத்தை வழங்குவது மிகவும் அவசியமானது என்பது எங்கள் கருத்தாகும்.

158. அத்துடன் பற்றாக்குறையை ஓரளவு சரி செய்ய, இந்த அரசு, முந்தைய அரசு கடைபிடித்த ஆடம்பரச் செலவுகளைப் பெருமளவு குறைத்திடும் நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளது. ஐந்தாண்டுக்காலத்தில் முதல்வர் கலந்து கொண்ட அரசு விழாக்களுக்கு (உலகத் தமிழ் மாநாடு மற்றும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான விழாக்களைச் சேர்க்காமல்) ரூ. 27 கோடி செலவு செய்திருப்பது போலவோ, முதல்வர் பாதுகாப்புக்கென்று அளவுக்கு அதிகமாகக் கடந்த ஐந்தாண்டு காலத்தில் ரூ. 21 கோடி செலவு செய்திருப்பது போலவோ மற்றும் விதவிதமான விளம்பரங்களுக்கு அரசுப் பணத்தைக் கோடிக் கணக்கில் வாரி இறைத்திருப்பது போலவோ இந்த அரசு ஊதாரிச் செலவு செய்யாது என்ற உறுதியை இந்த அவைக்கு அளிக்கிறேன்.

## முடிவுரை

159. 1996-97 ஆம் ஆண்டிற்கான இறுதிப் பற்றாக்குறை ரூ. 745.05 கோடியாக இருக்குமென நான் என்னுடைய உரையில் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்தேன். கூடுதல் வரிச் விதிப்பிற்கு ஒருசில செயற்குறிப்புகளையே நான் முன்வைத்துள்ளேன். ஆனால், இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், ஏழை மற்றும் நடுத்தர மக்களின் நலனைப் பேணிக் காக்கவும் பல சலுகைகளை நான் அளித்துள்ளேன். மொத்தத்தில் இந்நட வடிக்கைகளின் காரணமாக ரூ. 306 கோடி வருவாய் இழப்பு ஏற்படும். செலவினங்களைக் கட்டுப்படுத்தப் பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம், மற்றும் வரிச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டதினால், நேர்மையாக வரி செலுத்தும் தன்மை உயர்வதன் மூலம், மொத்த வரி வருவாய் பெருகும் என்று எதிர்பார்ப்பதினால் வருவாய் இழப்பைக் கணிசமான அளவிற்கு ஈடு செய்ய முடியுமென்று நான் நம்புகிறேன். அப்படியிருந்துங்கூட, எதிர்பார்க்கப்படும் வருவாய் இழப்பை முழுவதுமாக ஈடு செய்ய இயலாது என்று நான் கருதுகிறேன். 1996-97 ஆம் ஆண்டிற்கான இறுதிப் பற்றாக்குறை ரூ. 106 கோடி அதிகரித்து, அது மேலும் ரூ. 851.05 கோடியாக உயரும் என்று நான் கருதுகிறேன்.

160. இதுகாறும் நான் உங்கள் முன்னால் வைத்துள்ள இந்த அறிக்கை ஏழை எளிய மக்களின் வேதனையாம் வெப்பம் குறைக்க அவர் தம் கையில் தரப்படும் பனை ஓலை விசிறி - பாட்டாளி மக்களின் வீடுகளில் ஏற்றி வைக்கப்படும் அகல் விளக்கு - விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் வியர்வை துடைக்கும் துண்டு - தொழில் வளம் பெருகினால் தான் தொழிலாளர்



நலம் பெருகும், வேலையில்லாத் திண்டாட்டச் சோகம் தீரும் என்பதற்காக வழங்கப்ப மூலிகை - நெசவாளர், மீனவர் என நித்தம் நித்தம் செத்துப் பிழைப்போர்க்கு ஒரு துளி நிவாரணம் - மகளிர்க்கு, மாணவர்க்கு, படித்து வேலையற்றுத் திரியும் இளைஞர் சமுதாயத்திற்கு ஒரு மின்னல் வெளிச்சம் - நம் உயிரினும்மேலான தமிழ்த் தாய்க்கு அவள் பாதங்களில் காணிக்கையாக்கும் ஒரு மலர்ச்சரம் - பொதுவாக எல்லாப் பிரிவு மக்களுக்கும் அள்ளிக் கொடுக்க முடியாமல் கிள்ளிக் கொடுக்குமளவுக்கு மட்டுமே உள்ள வெண்பொங்கல் என்பதை நானறிவேன். எனினும் என்னரும் தமிழ் மக்கள்: எங்களால் அவர்கள் தேவையின் பள்ளத்தை முழுமையாக நிரப்ப முடியவில்லையென்பதற்காகச் சினம் கொள்ளாமல் எங்கள் உள்ளத்தில் அவர்களுக்காக எதிர்காலத் திட்டங்கள் நிறைய இருக்கின்றன என்ற நம்பிக்கையைப் பெறலாம் என்பதற்கு உத்திரவாதம் அளிக்கிறேன்.

161. இந்த அரசு, தமிழ்மொழி காப்பதற்காகவும் - உலகில் பல பகுதிகளில் வாழும் தமிழர்களின் வாழ்வில் அமைதி நிலவுவதற்காகவும் - தமிழர்கள் பிறமொழி ஆதிக்கத்தினால் இரண்டாம்தரக் குடிமக்கள் ஆகிவிடாமல் தடுப்பதற்காகவும் - ஜனநாயகமெனும் வீட்டு விளக்கு சர்வாதிகாரமெனும் காட்டுத் தீயினால் அணைந்து விடாமல் இருப்பதற்காகவும் - சமத்துவம், சமதர்மம், சகோதரத்துவம் இவற்றுடன் சமூக நீதியை நிலைநாட்டுவதற்காகவும் - மதச் சார்பற்ற கொள்கையெனும் அரவணைப்பால் சிறுபான்மைச் சமுதாயத்தினரான இஸ்லாமியர்க்கும் கிறிஸ்தவர்களுக்கும் இன்னபிற சமயத்தினர்க்கும் கடுகளவு தீங்கும் நேராமல் காவலாக நிற்பதற்காகவும் - எண்ணற்ற தியாகங்களைச் செய்து, ஏராளமான உயிர்களைப் பலிகொடுத்து, எதிர்ப்புகளைச் சமாளித்து, துரோகங்களை வென்று, சோதனைகளை வேதனைகளைக் கடந்து, மொழியால் தமிழர் - இனத்தால் திராவிடர் - நாட்டால் இந்தியர் - உலகத்தால் மனிதர் என்ற உணர்வுடன் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் தனித்தன்மை வாய்ந்த ஒப்பற்ற இயக்கமாம் திராவிட இயக்கத்தின் அரசியல் சமுதாயப் பாசறையான தி.மு.கழகத்தின் சேவை தமிழ்நாட்டுக்கு இன்னும் பல ஆண்டுகளுக்குத் தேவை என்பதைச் சிந்தித்துத் தெளிந்து எங்களுக்கு அறிவுரை கூறும் ஆசான்களாய் - தோளொடு தோள் நிற்கும் தோழர்களாய் - கனிவு காட்டும் தாயாய் - கண்டிப்புக் காட்டும்தந்தையாய் - இந்த அவையில் இருக்கும் நீங்களும் உங்களைத் தங்கள் பிரதிநிதிகளாக இங்கு அனுப்பிவைத்துள்ள தமிழ்த் தாயக மக்களும் விளங்கிட வேண்டுமெனக் கேட்டு.'

''மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து''

எனும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப, தடங்கல் நிறைந்த கரடுமுரடான பாதையில் பெரும் பாரத்தை எருது இழுத்துக் கொண்டு போவதுபோல, விடாமுயற்சியுடன் செயல்பட்டால் துன்பங்களுக்கு முடிவு ஏற்பட்டு, வெற்றிகிட்டும் என்கிற திடச்சித்தமுடன் இவ்வரசு இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு அல்லும் பகலும் என்னுடன் ஒய்வின்றி ஒத்துழைத்த நிதித்துறைச் செயலாளர் திரு. குருமூர்த்தி அவர்களுக்கும், மற்றும் அரசுத்துறைச் செயலாளர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த 1996-97 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை ஏற்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.












பத்மவாசன்...

**நிதி நிலை அறிக்கை மீதான விளக்கத்துக்குப் பதிலளித்து சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 25.7.96 அன்று 75 நிமிட நேரம் உரையாற்றினார். நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்ட 306 கோடி ரூபாய் வரிச்சலுகைகள் தவிர மேலும் 108 கோடி ரூபாய்க்கான வரிச்சலுகைகளை அப்போது அறிவித்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை முழு விவரம் வருமாறு:-**

**1996-97**-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது இந்த அவையில் நடைபெற்றுள்ள விவாதத்தில் கலந்து கொண்டு, நல்ல அறிவுரைகளையும், ஆக்கப்பூர்வமான கருத்துக்களையும் கூறியுள்ள கட்சிகளின் தலைவர்களுக்கும், உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆக்கபூர்வமான யோசனைகள்

நேற்றும் இன்றும் கு. சிகளின் தலைவர்கள் கருத்துக்களை வழங்கியிருக்கின்றார்கள். இந்த அறிக்கையைத் தயாரித்து அவைமுன் வைத்துள்ள நான் புண்படும் படியாகவோ, அல்லது வருந்தி வேதனைப்படும் நிலையிலோ யாரும் எந்த எண்ணத்தையும் வெளிப்படுத்தாமல் ஆக்கபூர்வமான யோசனைகளை எடுத்துக் கூறி யிருக்கிறார்கள் என்பதில் கிஞ்சிற்றும் அய்யமில்லை.

பாரதீய ஜனதா கட்சியின் சார்பில் உரையாற்றிய வேலாயுதன் அவர்களானாலும், தேவேந்திரகுல வேளாளர் சார்பில் உரையாற்றிய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களானாலும், ஜனதாதளத்தின் சார்பில் உரையாற்றிய வெங்கடசாமி அவர்களானாலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உரையாற்றிய மணி அவர்களானாலும், பார்வாடு பிளாக் கட்சியின் சார்பில் உரையாற்றிய சந்தானம் அவர்களானாலும், சுயேச்சை என்ற நிலையிலே உரையாற்றிய வெங்கடாசலம் அவர்களானாலும், அ.தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் என்ற முறையிலே உரையாற்றிய திருநாவுக்கரசு அவர்களானாலும், இந்திய தேசிய லீக் சார்பில் உரையாற்றிய அப்துல் லத்தீப் அவர்களானாலும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் உரையாற்றிய பழனிச்சாமி அவர்களானாலும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் உரையாற்றிய பேராசிரியர் தீரன் அவர்களானாலும், எனக்கு முன் உரையாற்றி அமர்ந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அவர்களானாலும் இந்த நிதிநிலை அறிக்கையிலே உள்ள பாராட்டக் கூடிய அம்சங்களையெல்லாம் பாராட்டிவிட்டு, குறைகளைச் சுட்டிக் காட்டியிருப்பது நான் நிதிநிலை அறிக்கையிலே கேட்டுக் கொண்டவாறு, அவர்களெல்லாம் இந்த அரசுக்கு ஆசானாக இருந்து, கனிவு காட்டுகின்ற தாயாக இருந்து, கண்டிப்புக் காட்டுகின்ற தந்தையாக விளங்கி, இந்த அரசின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தர முன் வந்திருக்கிறார்கள் என்பதை இது

காட்டுகின்றது.

நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் கடந்த 5,6 ஆண்டு காலத்தில் நீண்ட நேரம் தொடர்ந்து பேசி உட்கார்ந்து இருப்பது இன்றைக்குத்தான் என்று நான் கருதுகிறேன். அதற்காக என்னுடைய வாழ்த்துக்களை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிகமாகப் பாராட்ட பயமாக இருக்கிறது. அவரும் அதை விரும்பமாட்டார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். மனதிற்குள்ளே விரும்பினாலும் வெளிப்படையாக விரும்ப மாட்டார்.

உறுப்பினர் வேலாயுதன் அவர்கள், அவர்களுடைய கட்சியினுடைய கண்ணோட்டத்தில் சில கருத்துக்களை சொன்னாலும்கூட பொதுவாக இந்த அறிக்கையை வரவேற்றிருக்கிறார். அதைப்போல, டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், இந்த நாட்டிலே எல்லோரும் தமிழர்கள் என்ற குறிக்கோளை நோக்கிச் செல்கிறோம் என்பதை மறந்து விடாமல், இடையில் தன்னுடைய சமுதாயத்தினைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரு வட்டமிட்டு, அவர்களுக்கு உரிய உதவிகளைச் செய்ய வேண்டும், உரிமைகளை வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார். வெங்கடசாமி அவர்கள் தன்னுடைய தொகுதிக்கு என்னென்ன தேவை என்பதை இங்கே விவரித்திருக்கிறார்.

### நேதாஜிக்குச் சென்னையில் சிலை

தமிழ் மணம் கமழக் கமழப் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் தீரன் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி மகிழ்ந்து இருக்கிறார்கள். ஆழ்ந்த அனுபவம் கொண்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் அன்பிற்குரிய மணி அழுத்தம் திருத்தமாக பல கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார். இந்த அரசு எப்படியெல்லாம் இன்னும் வேகமாக, திட்டவட்டமாகச் செயல்பட வேண்டும் என்பதை எடுத்துரைத்திருக்கிறார். சந்தானம் பார்வாடு பிளாக் கட்சியின் சார்பில் நிறைந்த வாழ்த்துக்களைத் தந்து, நேதாஜி அவர்களுக்கு ஒரு சிலை சென்னையிலே அமைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்திருக்கிறார். அந்த வேண்டுகோள் நிறைவேற்றப்படும் என்பதை என்னுடைய பதிலுரையின் தொடக்கத்திலேயே சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நண்பர், சுயேட்சை உறுப்பினர் வெங்கடாசலம், எடுத்துள்ள நடவடிக்கைகள் போதாது, மேலும் எடுக்கப்பட வேண்டும், அப்பொழுதுதான் எதிர்கால தமிழகம் நல்ல முறையிலே இருந்திட இயலும் என்ற எச்சரிக்கையைத் தன்னுடைய பேச்சாக நேற்று ஆற்றிக் கொண்டிருந்தார்.

திருநாவுக்கரசு அவர்கள், உண்மையிலேயே மிக ஆக்கபூர்வமான கருத்துக்களை, வரவு செலவுத் திட்டத்திலே புள்ளி விவரங்களிலுள்ள ஏற்றத் தாழ்வுகளை, இவைகளையெல்லாம் எடுத்துக்காட்டி அதிலே எனக்கு வித்தியாசமான கருத்துக்கள் இருந்தாலும் கூட நாட்டுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் - குறிப்பாக ஆதிதிராவிடர்களுக்கு, பழங்குடி மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மேலும் அதிகமாக நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று அவர் பேசியதின் நோக்கம் பாராட்டுதலுக்குரியதாக இருந்தது என்பதை நான் மறக்கவில்லை.

இந்திய தேசிய லீக் கட்சியினுடைய தலைவர் லத்தீப் சென்னை என்ற ஒரு பெயரிலே மாத்திரம் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள மறுத்தாலும், எதிர்க்கவில்லை என்று இறுதியாக விளக்கி, இந்த அவையிலே தன்னுடைய ஆதரவை மதராஸ் என்ற சொல் தமிழாக இல்லாவிட்டாலும், பிறமொழிச் சொல்லாக இல்லாத காரணத்தால் அந்நிலைக்கு மாறி வழங்கியிருக்கிறார். வேறு சில கருத்துக்களையும் எடுத்துக் கூறி இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்.

பழனிச்சாமி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பல கொள்கை, விளக்கங்களைத் தந்து இறுதியாக என்னைத் தஞ்சைத் தொகுதியினுடைய அமைச்சர் என்ற முறையிலே, ஒரு வட்டத்திற்குள்ளே சுருக்கி, கொஞ்சம் சுயநலவாதியாகச் செயல்படு என்று கேட்டுக்கொண்டிருக்கிறார். இதை யெல்லாம் வெளிப்படையாக சொல்லிச் செய்யக்கூடாது என்பதை நண்பர் பழனிச்சாமி அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய பேச்சையே களை கட்டுகின்ற அளவிலே, ஒரு கதையைச் சொல்லித் தொடங்கினார். அந்தக் கதையிலே ஒரு மாற்றம் இருக்கிறது. என்னுடைய ஆருயிர் நண்பர், மறைந்துவிட்ட அன்பில் தர்மலிங்கம் அடிக்கடி இந்தப் பழமொழியைச் சொல்வார். 'இருங்கலூர் கணக்கன் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்' என்று. என்னையா அடிக்கடி இதைச் சொல்கிறாய், என்ன விஷயம்? என்று கேட்டபோது கதையைச் சொன்னார். அது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவருடைய கதைக்குச் சற்று மாறான கதை. ஒரு வேளை, எதிர்க்கட்சித் தலைவர் ஆசிரியராகப் பணியாற்றியபோது இந்தக் கதையைச் சொல்லி, நீண்டகாலத் தொய்விற்குப் பிறகு கதையை மறந்துவிட்டார் போலும். கதை என்னவென்றால், அரசியலுக்குப் பொருத்தமாக உள்ளது என்பதால் சொல்கிறேன்.

### இருந்தும் கெடுத்து செத்தும் கெடுத்த இருங்கலூர் கணக்கன்

இருங்கலூரில், ஒரு கணக்கன் இருந்தான், கொடுமைக்காரன், கொள்ளைக்காரன், மக்களைப் படாதபாடு படுத்தி வைத்தான். அவனுக்குச் சாகும் காலம் வந்தது. வயது ஏறி இறந்துவிடுவோம் என்ற



நிலை ஏற்பட்டபொழுது, அப்போதும் அவனால் சும்மா இருக்கமுடியவில்லை. ஏதாவது தீமை செய்துவிட்டுப் போகவேண்டும், செத்த பிறகும் என்ற எண்ணத்தோடு அந்த ஊர் மக்களையெல்லாம் கூட்டி வைத்து "ஊர் ஜனங்களே நான் உங்களை எல்லாம் படுத்தாத பாடு படுத்திவிட்டேன். எத்தனையோ தவறுகள் செய்துவிட்டேன். உங்கள் குடும்பங்களையெல்லாம் கெடுத்துவிட்டேன். உங்கள் சொத்துக்ளையெல்லாம் அபகரித்துவிட்டேன். உங்களை யெல்லாம் சுரண்டிக் கொழுத்துவிட்டேன். ஆனாலும் எனக்கு நீங்கள் மன்னிப்பு வழங்கவேண்டும். அந்த மன்னிப்பு என்னவென்றால், நான் இறந்த பிறகு இந்தப் பாவியினுடைய உடலை இந்த ஊர் மயானத்தில் புதைக்காமல், அடுத்த ஊர் மயானத்திலே கொண்டு போய்ப் புதையுங்கள்" என்று பக்கத்து ஊரில் புதைக்கச் சொன்னான். அவர்களும் பரிதாபப்பட்டு, போய்த் தொலைகிறான். செத்துத்தானே போகிறான். செய்யலாமே என்று உறுதி கொடுத்தார்கள். சொன்னபடி, இரண்டு நாளிலே அவன் இறந்துவிட்டான். உடனே, அந்த ஊராரெல்லாம் கூடி, அவனைத் தூக்கி அடுத்த ஊர் மயானத்திலே கொண்டு போய்ப் புதைத்தார்கள்.

உடனே, அடுத்த ஊர்க்காரர்கள் சண்டைக்கு வந்துவிட்டார்கள். 'எங்கள் ஊருக்கு எப்படியடா கொண்டு வரலாம்? உங்கள் ஊரில் மயானம் இருக்கிறபோது இங்கே எப்படி கொண்டு வரலாம்?' என்று சண்டை முற்றி, இங்கே பத்துப் பேர் செத்தார்கள். அங்கே பத்துப் பேர் செத்தார்கள். இதைத்தான் அன்பில் தர்மலிங்கம் சொல்வார். "இருங்கலூர் கணக்கன் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்" என்று. அப்படி இங்கே பத்துப் பேர், அங்கே பத்துப் பேர் சாகாமல் இருக்கக் கூடிய சூழ்நிலை வேண்டும் என்பதற்காகத்தான் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் சில நண்பர்களுக்காக அவர்கள் இங்கே இந்தக் கதையைத் தொட்டுக் காட்டிய காரணத்தால் நான் சுட்டிச் சொல்ல விரும்புகிறேன்.

இது யாருக்காகச் சொல்லப்பட்ட கதை என்பது இங்கே இருக்கின்ற சில பேர்களுக்குத் தெரியும். எனவே "இருங்கலூர் கணக்கன் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்" என்ற நிலையில் இன்றைக்கு நாடு இருக்கிறது. அதைத்தான் நம்முடைய பழனிச்சாமி பேசும்போது சொன்னார்.

இன்றைக்குக் கூட ஒரு அறிக்கை வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கூலி ஆட்களைப் பிடித்து கோட்டை வாசலில் வந்து சத்தம் போடச் செய்தார்கள் என்று. கோட்டை வாசலிலே வந்து முழக்கம் இட்டவர்கள் அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய வாரிசுகள் என்று சொல்லத்தக்க ஆர்.எம்., வீரப்பன் அவர்களும் மற்றவர்களும்தான். கோட்டை வாசல் வரையிலே ஊர்வலமாக வந்து என்னிடம் மனுக்கொடுத்துவிட்டுச் சென்றார்கள். அவர்கள் யாரும் கூலிக்குப் பிடிக்கப்பட்ட ஆட்கள் அல்ல. எம்.ஜி.ஆர் அவர்களுடைய வாரிசு என்று சொல்லிக் கொள்கிறவர்கள். எப்படி, தம்பி திருநாவுக்கரசு தன்னை எம்.ஜி.ஆருடைய வாரிசு என்று சொல்வது உண்மையோ அதைப்போல ஆர்.எம். வீரப்பன் தன்னை எம்.ஜி.ஆருடைய வாரிசு என்று சொல்லிக் கொள்வதும் உண்மைதான். அவர்களெல்லாம் கூலிக்குப் பிடிக்கப்பட்ட ஆட்கள் அல்ல. என்ன செய்வது? "இருங்கலூர் கணக்கன் இருந்தும் கெடுத்தான் செத்தும் கெடுக்கிறான்' என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது.

### ஏடுகள் அளித்த பாராட்டுக்கள்

இந்த நிதிநிலை அறிக்கையைப் பலரும் பாராட்டியிருக்கிறார்கள். அந்தப் பாராட்டுக்களை யெல்லாம் தொகுத்துச் சொன்னால், ஏதோ என்னை நானே புகழ்ந்து கொள்வது போலாகும் என்ற நிலை ஏற்படும் என்றாலும்கூட, இந்த வரவு செலவுத் திட்டம் எந்த நோக்கத்தோடு தயாரிக்கப்பட்டு, வெளியிடப்பட்டது என்பதைப் பல முனைகளிலே உள்ளவர்கள் எப்படிப் புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக, அவற்றில் ஒன்றிரண்டைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'டைம்ஸ் ஆப் இந்தியா', நியூ டெல்லியிலிருந்து வெளிவந்த பத்திரிக்கையில் 18.7.96 இல் குறிப்பிடப்பட்டுள்ள வாசகம்-

**Chief Minister M. Karunanidhi on Wednesday presented a business and industrial friendly Budget for**

## தமிழ்நாட்டில் மீண்டும் மேலவை

**தமிழ்நாட்டில் மீண்டும் மேலவை அமைகிறது. இதற்கான தீர்மானத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 26.7.96 அன்று சட்டமன்றத்தில் முன்மொழிந்தார்; எல்லாக் கட்சி உறுப்பினர்களும் இது பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு தங்கள் கருத்துகளை எடுத்தியம்பினர். அதன்பின், முதல்வர் அவர்கள் பதிலளித்துப் பேசினார். பிறகு, தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு வெற்றி பெற்றது. அத்தீர்மானமானது நிறைவேற்றப்பட்டதாகப் பேரவைத் தலைவர் அறிவித்தார். இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும்.**

1996-97 and announced a long-term taxation policy.

**18th July 1996 ...Karunanidhi pleases everyone with his Budget. Chief Minister Karunanidhi on Wednesday presented a populist, business and industry friendly Budget for 1996_97 and anounced a longterm taxation policy. The State Government staff have been given various concessions and retirement benefits. There are schemes for the Adi-dravidas, Backward classes and for generating rural employment. Infact, there appears to be something for everyone in the Budget.**

*'இந்து' ஏட்டில் எழுதப்பட்டிருப்பதாவது:*

...The tax reforms proposed by Karunanidhi have some welcome features, though they may entail a revenue loss of Rs.*306* crores. Apart from rationalisation of sales tax, the proposal to introduce Value Added Tax VAT in the state is a bold decision indeed, as it may give a boost to the manufacturers in the State. Tamil Nadu will be one of the first among the southern States to emulate Maharashtra's example as introduction of VAT is expected to have a healthy impact on prices of manufactured goods and strengthen the competitive position of the industrial units in the state. Similarly, exemption of sales tax on raw materials bought by the export oriented units and units located in the Madras Export Processing Zone will go a long way in promoting export activity in the state. The reduction of tax on capital goods for power generation bought in the State for Government approved power generation projects from *12* percent to three percent is seen as an incentive for the industry''

*பிஸினஸ் லைன் 18.7.96 ஏடு எழுதிய தலையங்கம்* - 'The D.M.K. Government's Budget within two months of assuming power in Tamil Nadu looks commendable as it has lifted the Budget exercise from the vacuity of cheap populism. It has invested it with some seriousness of purpose especially in industrial development. The Budget comes across as a bold document significant especially for the sweep of reforms in sales tax it has sought to attempt''...

*தினமணி தனது தலையங்கத்தில்- "ஏழை எளிய மக்களுக்கும், மத்திய தர வர்க்கத்தினருக்கும் நன்மை பயக்கும் நோக்கத்தோடு பல்வேறு வகையான உணவுப் பொருள்களுக்கு முழு அளவில் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கும் பட்ஜெட்டை முதலமைச்சர் கருணாநிதி சட்டப்பேரவையில் அளித்துள்ளார். தமிழகத்தின் தொழில், வணிகம் தழைப்பதற்கும் பல்வேறு சலுகைகள் இந்தப் பட்ஜெட்டில் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, தொழில்களில் தயாரிப்பதற்குப் பயன்படுத்தும் மூலப்பொருள்கள் மீதான வரிகள் யாவும் 3 சதவிகித அளவு குறைய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இதையொட்டி, பொருள்களின் தயாரிப்பாளர்கள் ரூபாய் இருநூறு கோடி அளவிற்கு வரி செலுத்துவது தவிர்க்கப்படும். இதன் விளைவாக, தயாரிப்புப் பொருள்களின் விலைகள் குறைந்து, பிற மாநிலத் தயாரிப்பாளர்கள் ஆக்கபூர்வமாக போட்டியிடக்கூடிய நிலை உருவாகும்" என்று எழுதியுள்ளது.*

*'தினகரன்' தனது தலையங்கத்தில் "சலுகைகள் - அடுக்கடுக்காகச் சலுகைகள், அலை அலையாகச் சலுகைகள், சலுகை மழை, சலுகை வெள்ளம், சலுகைக் கடல், சலுகை மலை இப்படியாக முதலமைச்சரின் 1996-97-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திற்குப் பாமாலையும், பூமாலையும் சூட்டலாம். தேர்தல் நடப்பதற்கு முந்தைய ஆண்டில், ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் நிதியமைச்சர்தான் சலுகை தோரணம் கட்டி, தம் வரவு செலவுத் திட்டத்தைப் புனைந்து காட்டுவது வாடிக்கை. ஆனால், முதல்வரோ, தேர்தல் நடந்து முடிந்த பிறகும்கூட, இப்படிச் சலுகை விவரம் அனைத்தும் காட்டியிருக்கிறார். தேர்தல் அறிக்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் மறந்துவிடாமல் தொட்டுச் சென்றிருக்கிறார். இதுதான் சேமநல அரசின் சரியான இலக்கணம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.*

*ரிசர்வ் வங்கியின் துணை கவர்னராக இருந்தவரும், மத்திய அரசின் முன்னாள் நிதித்துறைச் செயலாளராக விளங்கியவரும், ஆரம்ப காலத்தில் தமிழக அரசில் என்னுடைய நிதித்துறைச் செயலாளராக இருந்தவருமான எஸ். வெங்கட்ரமணன், ஐ.ஏ.எஸ். அவர்கள் ஆங்கிலப் பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில்-*

''The latest Budget represents this Govenment's initial forays into the task of speeding of the growth of Tamil Nadu. Its emphasis on social development, encouragement of industrial investment and infrastructure and agriculture is fully in keeping with the Chief Minister's vision. The simplification of sales tax collection procedures is a token of the Chief Minister's refreshing attitude which governs an impatience with the proliferation of forms and certificates.

The marked orientation of the Budget in favour of industrial growth and expansion is clear by the many concessions that it offers. No Budget of Tamil Nadu, especially those of Dr. Karunanidhi, has been complete without concessions to Government servants. Most of them are long overdue and legitimate. Particularly, the Chief Minister has done well to simplify the Pension Rules. The Budget has taken important initiatives to renovate Tamil Nadu's irrigation systems and for better exploitation of water resoures.

To conclude, it was, for me, almost a sentimental journey to go through it, another Budget deftly drafted by the Kalaignar, a Budget of, promise and hope for the state. I hope this promise and vision will be translated into reality in a succession of Budget from the same able hands.''



## வணிகர் சங்கங்களின் பல்வேறு அமைப்புகள் பாராட்டு

என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்த அறிக்கையைப் பற்றி Madras Chamber of Commerce, Confederation of Indian Industries, Southern India Chamber of Commerce, Guindy Industrial Estate தயாரிப்பாளர்கள் Association Indian Chamber of Commerce and Industries, Coimbatore, Coimbatore Stock Exchange போன்ற சேம்பர்கள், வணிக நிறுவனங்கள், வியாபாரிகளுடைய சங்கங்கள், ஏழை எளிய மக்களின் சார்பாக வழங்கப்பட்ட பாராட்டுக் குரல்கள், அரசு ஊழியர்கள் சார்பாகத் தெரிவிக்கப்பட்ட நன்றியுணர்வுச் செய்திகள் இத்தனையும் ஏடுகளிலே நீங்களும் கண்டிருக்கிறீர்கள். இந்த வரவு செலவு திட்டத்தில் திருநாவுக்கரசு அவர்கள் சில புள்ளி விவரங்களை நேற்றைய தினம் எடுத்துக்காட்டி, நான் **இடைமறித்துச்** சிலவற்றைச் சொன்னாலும்கூட, முழுமையாகச் சொல்ல இயலவில்லை. இவைகள் எல்லாம் குறைந்திருக்கிறது. பொதுவான பணிகள், சமூகப் பணி, பொருளாதாரப் பணி இதில் ஏன் இந்த வித்தியாசம் என்றெல்லாம் எடுத்துக்காட்டினார். Economical Service பொருளாதாரப் பணி என்பது மண்வளப் பாதுகாப்பு, பால் பண்ணை, காடு வளர்ப்பு, கூட்டுறவு, பாசனம், தொழில்கள், சாலைகள், பாலங்கள், நுகர்பொருள் வழங்கல், வேளாண்மை, ஊரக வளர்ச்சி இத்தனையும் அடங்கியது பொருளாதாரப் பணியிலே வருகிறது.

சமூகப்பணி என்பது குடிநீர் வழங்கல், வீட்டு வசதி, கல்வி, மக்கள் நல்வாழ்வு, நகர்ப்புற வளர்ச்சி, ஆதிதிராவிடர்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சமூகநலன், சத்துணவு, தொழிலாளர் நலன் இத்தனையும் சமூகப் பணியிலே வருகிறது.

பொதுவான பணிகள் என்ற தலைப்பில் அரசு ஊழியர்கள், நீதித்துறை, காவல்துறை, பொதுப்பணித் துறை, மாவட்ட நிர்வாகம், ஓய்வூதியம் பெறுவோர் இத்தனையும் பொதுவான பணிகள் என்ற தலைப்பிலே வருகிறது. அதிலேதான் அவர் குறை கண்டு சதவிகிதம் குறைவாக இருக்கிறது என்று குறிப்பிட்டார். ஆனால் உண்மை என்னவென்றால் இந்தப் பொருளாதாரப் பணியில் 1995-96-ஆம் ஆண்டில் 2,935 கோடி ரூபாய், அது அதற்கு முதலாண்டு 1994-95-லிருந்து 2,788 கோடியோடு ஒப்பிடும்போது 1.67 சதவிகிதம்தான். இப்போது 1996-97-இல் அது 3,158 கோடியாக மாறியிருக்கும்போது 11.40 சதவிகிதமாக மாறியிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போலவே, சமூகப் பணியில் 1995-96-இல் 14.17 சதவிகிதம் என்று இருக்கும்போது 1996-97-இல் 9.05 என்று குறைந்திருக்கிறது என்பதை சுட்டிக் காட்டினார். நான் அவருக்குத் தர விரும்புகின்ற விளக்கம் 4,392 கோடியிலிருந்து இந்த ஆண்டு, நடப்பாண்டில் 4,790 கோடி என்று உயர்ந்திருந்தாலும்கூட, வளர்ச்சி விகிதம் குறைவாக இருக்கிறது என்பதை நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் எடுத்துக் காட்டியதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

ஆனால் ஏன் அந்த வேறுபாடு ஏற்பட்டது என்றால் ''National Social Assistance Scheme'' அதாவது தேசிய சமூக நல உதவித் திட்டம் இது அவர் குறிப்பிடுகிற 1995-96-இல் நேரடியாகச் செல்லாமல் மாநிலம் வழியாகச் சென்றபோது 4,392 கோடியாக இருந்தது. இப்போது மாவட்டங்களுக்கு அந்தத் திட்டத்தினுடைய தொகை நேரடியாகப் போய் விடுகிறது. எனவேதான் இந்த வித்தியாசம் ஏற்பட்டது என்பதை அவர்களுக்கு விளக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோலவே பொதுவான பணிகளில் ரூ.3,418 கோடி ரூபாய் என்பது ரூ.3,821 கோடி ரூபாயாக இப்போது மாறியிருக்கிறது. பொதுவான பணிகளுக்கு அதிகம் செலவழிக்கக் கூடாது என்பது அவருடைய வாதம். அந்த வாதப்படி பார்த்தால் 19.31 சதவிகிதம் இப்போது 11.78 சதவிகிதமாகத்தான் மாறி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## அம்மையார் மறந்துவிடக்கூடாது

இது ஒரு பற்றாக்குறை பட்ஜெட் என்று பரவலாக விமர்சிக்கப்பட்டு இந்தப் பற்றாக்குறை பட்ஜெட்டை வைத்துக் கொண்டு முதலமைச்சர் கருணாநிதி என்ன செய்யப் போகிறார் என்று நம்முடைய கட்சிகளின் தலைவர்கள் பல பேருடைய அறிக்கைகள், இந்த நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்டவுடன், கருத்துக்கள் கேட்டபோது, அதற்கு உடனடியாகச் சொல்லப்பட்ட கருத்துக்கள், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் உட்பட, பெரும் பற்றாக்குறை இருக்கிறது, எப்படி சமாளிக்கப்போகிறார் என்ற வருத்தத்தை அல்லது வியப்பைத்தான் அனைவரும் தெரிவித்தார்கள். இவர்கள் தெரிவித்தது எப்படியாவது சமாளித்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு. ஆனால் முன்னாள் முதலமைச்சர், செல்வி ஜெயலலிதா அம்மையார் தெரிவித்த கருத்தில், ரூ.12,107 கோடி செலவுக்கான பட்ஜெட்டை கருணாநிதி சமர்ப்பித்துள்ளார் - அவர் கருணாநிதி என்று தான் சொல்லுவார். ரூ.1,038 கோடி பற்றாக்குறையைச் சரிக்கட்ட என்ன வழியைக் கையாளப் போகிறார் என்று தெரியவில்லை என்று கூறியிருக்கிறார்.

## அம்மையாரைவிட சமாளிப்போம்

வருவாய்க் கணக்கில் இந்த ஆண்டு 1,038 கோடி ரூபாய் பற்றாக்குறை என்பது உண்மைதான். ஆனால் கடந்த ஆண்டுகளின் நிலைமைகளை அம்மையார்

அவர்கள் மறந்துவிடக் கூடாது. **1988-89-ஆம்** அண்டு வருவாய்ப் பற்றாக்குறை **217.56** கோடி ரூபாய். ஒட்டு மொத்த பற்றாக்குறை **325.07** கோடி ரூபாய். **1989-90-இல்** வருவாய் பற்றாக்குறை கழக ஆட்சியின்போது **288.49** கோடி ரூபாய். ஒட்டுமொத்த பற்றாக்குறை **64.77** கோடி ரூபாய். அப்போதுதான் ஆட்சி கலைக்கப்பட்டவுடன் அம்மையார் அவர்கள் சொன்னார்கள். கருணாநிதி **1,312** கோடி ரூபாய் பற்றாக்குறையாக வைத்துவிட்டுப் போய்விட்டார். நான் என்ன செய்வது என்று பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுத்தார். கூட்டங்களிலே பேசினார். ஆனால் உண்மை என்னவென்றால் **1990-91-லே** வருவாய்ப் பற்றாக்குறை **416** கோடி ரூபாய்தான். ஒட்டுமொத்த பற்றாக்குறை **268.10** கோடி ரூபாய்தான். அதற்குப் பிறகு வரிசையாகப் பார்த்தால் **1993-94-இல்** வருவாய்ப் பற்றாக்குறை **1,310** கோடி ரூபாய். **1,038** கோடி ரூபாய், இப்போது பற்றாக்குறை. அதிசயப் படுகிறார் அம்மையார். எப்படி சமாளிக்கப் போகிறார்? என்ன செய்யப் போகிறார். என்ன திட்டங்களைத் தீட்டப் போகிறார் என்று கேட்கின்ற அம்மையாரைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். **1993-94-இல்** வருவாய் பற்றாக்குறை இன்றைக்கு **1,038** கோடி அன்றைக்கு **1,310** கோடி. அதை எப்படி நீங்கள் சமாளித்தீர்களோ அதை விட திறமையாக, ஒழுங்காக, செம்மையாக, கூடுமானவரையில் இந்த அரசு சமாளிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு தொடர்ந்து **1995-96-லே** கூட பற்றாக்குறை திருத்த மதிப்பீட்டில் **1,168** கோடி ரூபாய் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல; இதே ஆண்டில் தேர்தலுக்கு முன்பு, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையாருடைய அரசின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால நிதிநிலை இப்போது நம் கையில் இருப்பதற்கு முன்புள்ள இடைக்கால நிதிநிலை நாவலர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட அந்த அறிக்கையில் வருவாய் பற்றாக்குறை **962.09** கோடி ரூபாய். ஒட்டுமொத்த பற்றாக்குறை **680** கோடி ரூபாய், எனவே **962** கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறையிலிருந்து **1,038** கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறை என்பது ஒரு பெரிய உயர்வு அல்ல என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் இந்தப் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசியது என் கவனத்திற்கு வருகிறது.

மாநில அரசினுடைய பற்றாக்குறையை மைய அரசினுடைய பற்றாக்குறையோடு ஒப்பிடக் கூடாது. மாநில அரசின் பற்றாக்குறை ஒரு ஆண்டிலிருந்து அடுத்த ஆண்டிற்குத் தொடர்ந்து கூடிக் கொண்டே இருக்கக் கூடியது.

அந்தப் பற்றாக்குறையை வேறுவழிகளில் சமாளித்தாலன்றியில் அது பெருகிக் கொண்டிருப்பதைக் குறைக்க முடியாது, தடுக்க முடியாது.

மைய அரசு ஒரு ஆண்டினுடைய பற்றாக்குறையை ஈடுகட்ட அதே ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கியின் கூடுதல் கரன்சி நோட்டுக்களை அச்சடிப்பதன் மூலம்கூட சரிக்கட்டிவிடும். நாம் கரன்சி நோட்டுக்களை அச்சடிக்கின்ற அதிகாரம் பெற்றவர்கள் அல்ல; அந்த அதிகாரத்தைக் கேட்பவர்களும் அல்ல!

அதுதவிர, வேறு அதிகாரங்களைத்தான் 'மாநில சுயாட்சி' என்ற பெயரால் நாம் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். ஆனால் மாநில அரசு பற்றாக்குறையைச் சரிக்கட்ட இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து வழிவகை முன்பணம் அல்லது 'மிகைப்பற்று' Over draft ஆகியவற்றைக் கடனாகப் பெற்று அதை அடுத்த ஆண்டிலேயே திருப்பிச் செலுத்த வேண்டிய நிலை உள்ளது. எனவே மாநில அரசின் பற்றாக்குறை தொடர்ந்து கூடிக் கொண்டு போகிறது. அதைச் சமாளிக்கின்ற பொறுப்பை திறமையோடு நடத்துகின்ற அரசால்தான் நிர்வகிக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒட்டுமொத்தப் பற்றாக்குறை **881** கோடியாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளதே, இதற்குப் புதிய வரிச் சலுகைகளை வழங்கியிருக்காவிட்டால் இந்தப் பற்றாக்குறை இன்னமும்கூட குறைந்திருக்கக்கூடும். இந்த அளவுக்கு உயர்ந்திருப்பதற்குக் காரணமே, உணவு மானியத்திற்கான தொகை ஏற்கெனவே **850** கோடி என்பதில் இருந்து **1000** கோடியாக இந்த நடப்பு ஆண்டிலே உயருகிறது. ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு **3,550** கோடியிலிருந்து **3,700** கோடியாக உயருகிறது. Part Schemes புதிய பகுதி திட்டங்கள் **60.40** கோடி ரூபாய்க்கு இப்பொழுது சேர்க்கப்பட்டிருக்கிறது.

அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படி வழங்க கூடுதலாக **90** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மொத்த வருவாய்ச் செலவில் வருவாய்ப் பற்றாக்குறையின் சதவிகித அளவைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் சொன்ன அந்தக் கணக்கு சரியல்ல என்பதை அவரே உணரக்கூடும்.

நடப்பு ஆண்டில் இந்தப் பற்றாக்குறை மொத்த வருவாய்ச் செலவில் **8.58** சதவிகிதம்தான். ஆனால் **1991-92-இல்** இந்தப் பற்றாக்குறையின் அளவு **21.94** சதவிகிதமாக இருந்தது.

**1992-93-இல்** **17.87** சதவிகிதமாக இந்தப் பற்றாக்குறையின் அளவு இருந்தது. அதற்கு மாறாக இப்பொழுது **8.58** சதவிகிதமாகத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பற்றாக்குறை சதவிகிதம் முன்பு அதிகம்

**திருநாவுக்கரசு குறுக்கீடு:** குறுக்கிடுவதற்கு வருந்துகிறேன். நான் சரியாகத்தான் கூறினேன். **8.58** என்பதனால் சுமார் **9** என்று சொன்னேன்.

**முதல்வர் கலைஞர்:** நான் குறிப்பிட்டது பற்றாக்குறை இதைவிட அதிகமான சதவிகிதம் முன்பு இருந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டத்தான்!

இந்த அவையில் நிதி நிலை அறிக்கையிலே உள்ள ஆழமான பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியும் அல்லது வரிவிகிதங்களைப் பற்றியோ அல்லது கொள்கை விளக்கங்களைப் பற்றியோ பல உறுப்பினர்கள் - ஆளுங்கட்சி உறுப்பினர்கள் உட்பட பல உறுப்பினர்கள் அதிக நேரம் எடுத்துக் கொள்ளாமல் ஊழலற்ற ஒரு ஆட்சி நடைபெற வேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறை காட்டினார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் தன்னுடைய உரையிலே அதைச் சுட்டிக்காட்டினார்கள். மற்ற கட்சித் தலைவர்களும், மற்ற உறுப்பினர்களும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

எல்லா உறுப்பினர்களுடைய பெயர்களையும் சொல்லி அவர்களுடைய கருத்துக்களை எல்லாம் சொல்லவில்லை என்று யாரும் வருத்தப்படக்கூடாது.

ஏனென்றால் பலரும் தங்களுடைய தொகுதிகளைப் பற்றிச் சொன்ன அந்தக் குறைபாடுகள், கோரிக்கைகள் அனைத்தையும் நான் இந்த நோட்டுப் புத்தகத்திலே குறித்து வைத்திருக்கிறேன். திருக்குறள் வடிவிலே உள்ள நோட்டுப் புத்தகம். திருக்குறளை எப்படி மறக்கமாட்டேனோ, அதைப் போல இந்த நோட்டுப் புத்தகத்தில் குறித்து வைத்திருக்கின்ற பிரச்சினைகளையும் நண்பர் சுதர்சனம் உட்பட, அங்கே ஆரம்பித்து நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கள் முடித்த வரையிலே உள்ள அத்தனைத் தொகுதி கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை நிச்சயம் நான் மேற்கொள்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் அறிக்கையை இங்கே எடுத்துக்காட்டி திருநாவுக்கரசு அவர்கள் "அதை எல்லாம் எப்பொழுது செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டார். தேர்தல் அறிக்கை நடப்பாண்டு காலத்திற்கு மாத்திரம் வெளியிடப்பட்டது அல்ல; எங்களுடைய 5 ஆண்டுகால ஆட்சிக்காக வெளியிடப்பட்டது தேர்தல் அறிக்கை! எனவே அவற்றை எல்லாம் ஐந்தாண்டு காலத்திலேயே நிறைவேற்றுவோம். திருநாவுக்கரசு எங்களோடு இருந்து நிறைவேற்றுவதற்கு இப்படி ஆக்கபூர்வமான யோசனைகளை எல்லாம் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஊழலை ஒழிக்க நிர்வாகச் சீர்திருத்தம் பெற ஒரு உயர்நிலைக்குழு அமைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருந்தேன்.

அந்த வாசகம் தமிழ்நாட்டில் அரசுத் துறைகளிலும், அரசு நிறுவனங்களிலும் ஊழல்களும் முறைகேடுகளும் நடைபெறாமல், தூய்மையான சிறந்ததொரு நிர்வாகத்தை அமல்படுத்துவதற்கும், தற்போதுள்ள நிர்வாக அமைப்பில் சில மாற்றங்களைச் செய்வதற்கான வழிமுறைகளை ஆய்வு செய்து அரசுக்குத் தேவையான சீர்திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்கும் ஒரு உயர்நிலைக்குழு அமைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருந்தேன்.




## ஊழலை ஒழிக்க உயர்மட்டக்குழு

அந்தக் குழுவை உங்கள் முன்னால் இப்பொழுது அறிவிக்க விரும்புகிறேன்.

அதற்கேற்ப, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ராமானுஜம் அவர்களைத் தலைவராகவும், செல்வி எம்.எம். ரமேஷ், இ.ஆ.ப., (ஓய்வு), திரு சி. தங்கராஜ், இ.ஆ.ப., (ஓய்வு), திரு சி.வி. நரசிம்மன், இ.கா.ப., (ஓய்வு), முன்னாள் துணைவேந்தர் டாக்டர் அனந்த கிருஷ்ணன், முன்னாள் மேலவை உறுப்பினரும் ஆர்க்காடு குடும்பத்தைச் சேர்ந்தவருமான திரு ஏ.ஆர். தாமோதரன், திரு கே. லெட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப., (ஓய்வு), பாரதி குடும்பத்தைச் சேர்ந்தவர் - தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு உயர்நிலைக் குழு அமைக்கப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நியாய விலைக்கடைகளைப் பற்றியும் பொது விநியோகத்திலே இருக்கின்ற குறைபாடுகளைப் பற்றியும் எதிர்க்கட்சித் தலைவர் மிக விரிவாக இங்கே பேசியிருக்கிறார். மற்ற தலைவர்களும் மற்ற உறுப்பினர்களும் விரிவாகப் பேசியிருக்கிறார்கள். எதிர்க்கட்சிகளுக்கு சற்றும் சளைக்காமல் ஆளுங் கட்சிக்காரர்களும் பேசியிருக்கிறார்கள். இன்றைக்குக் காலையில்கூட சரமாரியான கேள்விகளைத் தம்பி டி. இராஜேந்தர் உணவு அமைச்சரிடத்திலே கேட்டதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். எனவே எல்லோரும் சேர்ந்து இந்தப் பொது விநியோக முறையிலே ஒரு நல்ல நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிட்டிருந்தேன்.

சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றும் அதிகாரிகள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு நம்முடைய மாநிலத்தில் நடைபெறுவதைவிட மிகச் சிறந்ததாக

இந்தப் பொதுவிநியோக முறை நடப்பதாகச் சொல்லப்படுகின்ற மாநிலங்களுக்குச் சென்று ஓரிரு மாதங்களுக்குள்ளாக அந்த நடைமுறைகளை எல்லாம் பரிந்துரை செய்யக்கூடிய அந்தப் பணியினை ஆற்றிட வேண்டும் என்பதற்காக ஒரு குழு அமைக்கப்படும் என்று நான் குறிப்பிட்டேன். கட்சித் தலைவர்களை எல்லாம் கலந்துகொண்டு அந்தந்தக் கட்சியின் சார்பாக யாரை உறுப்பினராக அந்தக் குழுவிலே அமைக்கலாம் என்ற கருத்தைக் கேட்டு சட்டமன்றத் தொடர் கூட்டம் முடிவதற்குள்ளாக அந்தக் குழு விரைவிலே அறிவிக்கப்படும் என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டங்களைப் பிரித்து நிர்வாகத்தை விரைவுபடுத்த செம்மைப்படுத்த ஒரு கருத்து இந்த அரசுக்கு இருப்பதை ஏற்கெனவே நான் வெளியிட்டு, அதன்படி -

## 1. உயர்மட்டக்குழு உறுப்பினர்கள்

மாவட்டங்களைப் பிரிப்பதற்காக அந்தந்தப் பகுதிகளிலே உள்ள பொதுமக்களின், அவர்களின் பிரதிநிதிகளின் கருத்துக்களை அறிந்து அரசாங்கத்திற்குத் தெரிவிப்பதற்காக ஒரு குழு பல்வேறு மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டது.

அந்தக் குழுவின் தலைவர் வருவாய்த் துறை தலைமை ஆணையர்.

குழுவின் உறுப்பினர்கள்:

1. நில நிர்வாகத் துறை ஆணையர்
2. இணை ஆணையர், வருவாய் நிர்வாகம்
3. இயக்குநர், நகராட்சி நிர்வாகத் துறை
4. இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை.

இந்தக் குழுவின் பரிந்துரைக்கேற்ப இன்று காலையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு, மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, உருவாகின்ற புதிய மாவட்டங்கள் பற்றிய விவரங்களை இங்கேதான் கூற விரும்புகின்றேன். அது பற்றிய விவரம் வருமாறு:

## மாவட்டப் பிரிவினை

1. மதுரை மாவட்டம். ஒன்றியத் தேர்தல் எல்லாம் வருகின்ற காரணத்தால் ஒன்றிய அளவிலேயே எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த ஒன்றியங்கள் இருக்கும் என்பதை மாத்திரம் எடுத்துக்காட்டுகின்றேன்.

1. திருப்பரங்குன்றம் ஒன்றியம்,
2. மதுரை கிழக்கு ஒன்றியம்,
3. மதுரை மேற்கு ஒன்றியம்,
4. மேலூர் ஒன்றியம்,
5. கொட்டாம்பட்டி ஒன்றியம்,
6. வாடிப்பட்டி ஒன்றியம்,
7. அலங்காநல்லூர் ஒன்றியம்,
8. உசிலம்பட்டி ஒன்றியம்,
9. செல்லம்பட்டி ஒன்றியம்,
10. திருமங்கலம் ஒன்றியம்,
11. கள்ளிக்குடி ஒன்றியம்,
12. டி.கல்லுப்பட்டி ஒன்றியம்,
13. சேடப்பட்டி ஒன்றியம்.

ஆகியவை மதுரை மாவட்டத்தில் அடங்கும்.

## 2. வீரன் அழகுமுத்து வைகை மாவட்டம்

வைகை மாவட்டம் என்ற பெயர் வேண்டும் என்று சிலர் விரும்பினார்கள். வீரன் அழகுமுத்து என்ற பெயர் வேண்டும் என்று சிலர் விரும்பினார்கள். என் விருப்பமும் அதுவே. எனவே இருவரையும் திருப்திப்படுத்துகின்ற வகையில் "வீரன் அழகுமுத்து வைகை மாவட்டம்" என்று பெயர் வைத்து, அதில் -

1. பெரிய குளம் ஒன்றியம்,
2. தேனி ஒன்றியம்,
3. ஆண்டிப்பட்டி ஒன்றியம்,
4. கடமலைக்குண்டு - மயிலாடும் பாறை ஒன்றியம்,
5. உத்தமபாளையம் ஒன்றியம்,
6. கம்பம் ஒன்றியம்,
7. சின்னமனூர் ஒன்றியம்,
8. போடிநாயக்கனூர் ஒன்றியம்

ஆகியவை அடங்கும்.

## 3. அண்ணா மாவட்டம்

அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு, மாவட்டம் அமைய வேண்டும் என்ற எங்களுடைய கருத்தை நிறைவு செய்து கொள்வதற்கும் அண்ணா மாவட்டம் என்று பெயரிட்ட அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயர் நிலைக்க வேண்டும் என்பதற்காகவும் செங்கற்பட்டு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதிக்கு அண்ணா மாவட்டம் என்றும் ஒரு பகுதிக்கு எம்.ஜி.ஆர். மாவட்டம் என்றும் பெயர் சூட்டப்படுகின்றது. செங்கை அண்ணா செங்கை எம்.ஜி.ஆர். என்றெல்லாம் பெயரில்லை என்ற நினைப்பில் சில பேர் பெயரை விட்டுவிட்டு செங்கையை மாத்திரம் சொல்வார்கள் என்பதற்காக அண்ணா மாவட்டத்தில்-

1. காஞ்சிபுரம் ஒன்றியம்,
2. வாலாசாபாத் ஒன்றியம்,
3. உத்தரமேரூர் ஒன்றியம்,
4. திருப்பெரும்புதூர் ஒன்றியம்,
5. குன்றத்தூர் ஒன்றியம்,
6. திருப்போரூர் ஒன்றியம்,



7. காட்டாங்குளத்தூர் ஒன்றியம்,
8. திருக்கழுக்குன்றம் ஒன்றியம்,
9. செயிண்ட்தாமஸ் மவுண்ட் ஒன்றியம்,
10. அச்சரப்பாக்கம் ஒன்றியம்,
11. மதுராந்தகம் ஒன்றியம்,
12. லத்தூர் ஒன்றியம்,
13. சித்தாமூர் ஒன்றியம்,

ஆகிய ஒன்றியங்கள் அடங்கும்.

## 4. எம்.ஜி.ஆர். மாவட்டம்

1. வில்லிவாக்கம் ஒன்றியம்,
2. புழல் ஒன்றியம்,
3. மீஞ்சூர் ஒன்றியம்,
4. சோழவரம் ஒன்றியம்,
5. கும்மிடிப்பூண்டி ஒன்றியம்,
6. திருவாலங்காடு ஒன்றியம்,
7. திருத்தணி ஒன்றியம்,
8. ஆர்.கே.பேட்டை ஒன்றியம்,
9. பள்ளிப்பட்டு ஒன்றியம்,
10. திருவள்ளூர் ஒன்றியம்,
11. பூண்டி ஒன்றியம்,
12. கடம்பத்தூர் ஒன்றியம்,
13. எல்லாபுரம் ஒன்றியம்,
14. பூவிருந்தவல்லி ஒன்றியம்,

ஆகியவை அடங்கும்.

## 5. சேலம் மாவட்டம்

1. சேலம் ஒன்றியம்,
2. வீரபாண்டி ஒன்றியம்,
3. பனமரத்துப்பட்டி ஒன்றியம்,
4. அயோத்தியாப்பட்டணம் ஒன்றியம்,
5. வாழப்பாடி ஒன்றியம்,
6. மேச்சேரி ஒன்றியம்,
7. நங்கவல்லி ஒன்றியம்,
8. கொளத்தூர் ஒன்றியம்,
9. ஓமலூர் ஒன்றியம்,
10. காடையாம்பட்டி ஒன்றியம்,
11. தாரமங்கலம் ஒன்றியம்,
12. சங்ககிரி ஒன்றியம்,
13. மகுடஞ்சாவடி ஒன்றியம்,
14. எடப்பாடி ஒன்றியம்,
15. கொங்கணாபுரம் ஒன்றியம்,
16. ஆத்தூர் ஒன்றியம்,
17. பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம்,
18. தலைவாசல் ஒன்றியம்,
19. கெங்கவல்லி ஒன்றியம்,

ஆகியவை அடங்கும்.

## 6. ராஜாஜி மாவட்டம்

1. நாமக்கல் ஒன்றியம்,
2. எருமைப்பட்டி ஒன்றியம்,
3. மோகனூர் ஒன்றியம்,
4. சேந்தமங்கலம் ஒன்றியம்,
5. புதுச்சத்திரம் ஒன்றியம்,
6. கொல்லிமலை ஒன்றியம்,
7. ராசிபுரம் ஒன்றியம்,
8. வெண்ணந்தூர் ஒன்றியம்,
9. நாமகிரிப்பேட்டை ஒன்றியம்,
10. திருச்செங்கோடு ஒன்றியம்,
11. பள்ளிபாளையம் ஒன்றியம்,
12. மல்லசமுத்திரம் ஒன்றியம்,
13. எளச்சிப்பாளையம் ஒன்றியம்,
14. பரமத்தி ஒன்றியம்,
15. கபிலர் மலை ஒன்றியம்,

ஆகியவை அடங்கும் இது நாமக்கல்லை தலைநகராகக் கொண்டு விளங்குகின்ற மாவட்டம்.

## 7. தஞ்சாவூர் மாவட்டம்

1. திருவையாறு ஒன்றியம்,
2. பூதலூர் ஒன்றியம்,
3. தஞ்சாவூர் ஒன்றியம்,
4. திருவோணம் ஒன்றியம்,
5. ஒரத்தநாடு ஒன்றியம்,
6. சேதுபாவாசத்திரம் ஒன்றியம்,
7. பேராவூரணி ஒன்றியம்,
8. பட்டுக்கோட்டை ஒன்றியம்,
9. மதுக்கூர் ஒன்றியம்,
10. அம்மாபேட்டை ஒன்றியம்,
11. கும்பகோணம் ஒன்றியம்,
12. பாபநாசம் ஒன்றியம்,
13. திருப்பனந்தாள் ஒன்றியம்,
14. திருவிடை மருதூர் ஒன்றியம்,

ஆகியவை அடங்கும்.

## 8. நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம்

1. நாகப்பட்டினம் ஒன்றியம்,
2. திருமருகல் ஒன்றியம்,
3. கீழ்வேளூர் ஒன்றியம்,
4. கீழையூர் ஒன்றியம்,
5. வேதாரண்யம் ஒன்றியம்,

6. தலைஞாயிறு ஒன்றியம்,
7. மயிலாடுதுறை ஒன்றியம்,
8. குத்தாலம் ஒன்றியம்,
9. செம்பனார்கோவில் ஒன்றியம்,
10. சீர்காழி ஒன்றியம்,
11. கொள்ளிடம் ஒன்றியம்,
ஆகியவை அடங்கும்.

**9. ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம்**

திருவாரூரைத் தலைநகராகக் கொண்ட மாவட்டம்

1. திருவாரூர் ஒன்றியம்,
2. நன்னிலம் ஒன்றியம்,
3. குடவாசல் ஒன்றியம்,
4. கொரடாச்சேரி ஒன்றியம்,
5. வலங்கைமான் ஒன்றியம்,
6. மன்னார்குடி ஒன்றியம்,
7. கோட்டூர் ஒன்றியம்,
8. நீடாமங்கலம் ஒன்றியம்,
9. திருத்துறைப்பூண்டி ஒன்றியம்,
10. முத்துப்பேட்டை ஒன்றியம்,
ஆகியவை அடங்கும்.

**10. திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம்**

1. திருவரம்பூர் ஒன்றியம்,
2. அந்தநல்லூர் ஒன்றியம்,
3. மணிகண்டம் ஒன்றியம்,
4. மணப்பாறை ஒன்றியம்,
5. மருங்காபுரி ஒன்றியம்,
6. வையம்பட்டி ஒன்றியம்,
7. புள்ளம்பாடி ஒன்றியம்,
8. லால்குடி ஒன்றியம்,
9. மணச்சநல்லூர் ஒன்றியம்,
10. முசிறி ஒன்றியம்,
11. தொட்டியம் ஒன்றியம்,
12. தாத்தையங்கார்பேட்டை ஒன்றியம்,
13. துறையூர் ஒன்றியம்,
14. உப்பிலியாபுரம் ஒன்றியம்,
ஆகியவை அடங்கும்.

**11. பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம்**

1. பெரம்பலூர் ஒன்றியம்,
2. வேப்பந்தட்டை ஒன்றியம்,
3. அரியலூர் ஒன்றியம்,
4. திருமானூர் ஒன்றியம்,
5. வேப்பூர் ஒன்றியம்,
6. ஆலத்தூர் ஒன்றியம்,
7. ஜெயங்கொண்டம் ஒன்றியம்,
8. டி.பழூர் ஒன்றியம்,
9. ஆண்டிமடம் ஒன்றியம்,
10. செந்துறை ஒன்றியம்,
ஆகியவை அடங்கும்.

**12. கரூர் தீரன் சின்னமலை மாவட்டம்**

கரூர் தீரன் சின்னமலை 'கவுண்டர்' என்பதை






மாற்றி விடுகிறோம். எல்லோருடைய விருப்பத்திற்கும் இணங்க!

1. கரூர் ஒன்றியம்,
2. தாந்தோனி ஒன்றியம்,
3. அரவாக்குறிச்சி ஒன்றியம்,
4. க.பரமத்தி ஒன்றியம்,
5. குளித்தலை ஒன்றியம்,
6. தோகைமலை ஒன்றியம்,
7. கிருஷ்ணராயபுரம் ஒன்றியம்,
8. கடவூர் ஒன்றியம்,
ஆகியவை அடங்கும்.

**திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம்**

இந்த மாவட்டங்களன்னியில் திண்டுக்கல் அண்ணா மாவட்டமாக இருந்தது. இனிமேல் திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம் என்ற பெயரில் அழைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டங்களுக்குரிய கோட்டங்கள் குறித்தும் வட்டங்கள் குறித்தும் அரசு அறிவிக்கை நாளை வெளிவரும் என்பதையும் கூறிக் கொள்கிறேன்.

இந்த மாவட்டங்களுடைய அதிகாரிகளாக யார் யார் நியமிக்கப்படுவார்கள் என்ற விபரங்களும் அரசின் சார்பில் நாளை வெளியிடப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் மகளிர் மேம்பாடு, வேலைவாய்ப்பு, மகளிர் மதுவிலக்குப் பிரச்சாரம் என்ற ஒரு தலைப்பில் சில கருத்துக்களைக் கூறியிருந்தேன்.

இத்திட்டத்தில் சமூகத்தில் அவர்களுடைய நிலையை உயர்த்தி மகளிருக்குச் சமூக மேம்பாட்டினையும் அளிக்கும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புறங்களில் வாழும் மகளிர், சிறாருக்கான முன்னேற்றத் திட்டம், இந்திரா மகளிர் திட்டம், பிரதம அமைச்சரின் வேலைவாய்ப்புத் திட்டம், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன. இத் திட்டங்கள் எல்லாவற்றிலுமே மகளிருக்கும், மகளிர் குழுக்களுக்கும் வருவாய் பெருக்கத்தக்க வகையில் உதவியளிக்கும் அம்சங்கள் ஏற்கெனவே இருக்கின்றன. இத்திட்டங்கள் பல்வேறு துறையினால் செயல்படுத்தப்படுவதால் கிராமப்புறப் பெண்களின் பிரச்சினைகளுக்கு முழுவதுமாகத் தீர்வு காண முடியவில்லை.

உதாரணத்திற்குத் திட்டங்கள் பெண்களைப் பயனாளியாகப் பார்க்கின்றனவே தவிர, சமூகத்தில் அவர்களுடைய நிலையை உயர்த்துவதற்காகவோ, அவர்களுடைய திறனை அதிகப்படுத்துவதற்கோ, அவர்களுடைய திறனை அதிகப்படுத்துவதற்கோ திட்டங்களில் வழியில்லை. இத்திட்டங்களில் பயன்பெறும் மகளிருக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு உள்ளதா, அவர்களுடைய வருவாய் உயர்ந்துள்ளதா என்பதும் இத்திட்டங்களின் மூலம் தொடர்ந்து கவனிக்கப்படவில்லை. பெரும்பான்மையான திட்டங்கள் எண்ணிக்கை அளவிலேயே குறியாக இருக்கின்றனவே தவிர, சத்துணவு, குடும்ப நலன், சுகாதாரம் போன்ற பொதுப் பிரச்சினைகளைத் தொடுவதே இல்லை. மிகவும் முக்கியமாக 1989-ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் கழக அரசு தொடங்கிய திட்டத்தின் வெற்றிக்கு அடிப்படையாகப் பயனாளிகளுடைய பங்கேற்பு பெரும்பான்மையான திட்டங்களில் இப்போது இல்லை.

**10 மாவட்டங்களில் 15 ஆயிரம் குழுக்கள்**

நாங்கள் அறிவித்துள்ள புதுத் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் நன்மைகளைத் தொகுத்து பெண்களின் நலனுக்காகச் சமூக, மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் ஒருங்கிணையும் ஓர் திட்டமாக அமையும். அதன்படி கிராமப்புற ஏழை மகளிர் இருபது பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்படுவர். 1996-97-இல் இத்திட்டம் செயல்படுத்தப்படும். பத்து மாவட்டங்களில் இதுபோன்ற பதினைந்தாயிரம் குழுக்கள் அமைக்கப்படும். அக் குழுக்களிலிருந்து ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு ஊக்குவிப்புனராகப் பதினைந் தாயிரம் பெண்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களுக்குக் குழுக்கள் அமைப்பதிலும் குழுக்களைச் செயல்படுத்துவதிலும் பயிற்சி அளிக்கப்படும்.

இவர்கள் குழு அங்கத்தினர்களோடு சேர்ந்து செயல்பட்டு ஒருங்கிணைந்த விழிப்புணர்வுமிக்க முழுமையாகத் திறன் படைத்த குழுக்களாக அந்தக் குழுக்களை மாற்றுவார்கள். இக் குழு உறுப்பினர் களுக்கு நிதி நிர்வாகம், வங்கியிலிருந்து கடன் பெறுதல், நிறைவேற்றப்படும் அரசுத் திட்டங்கள், சத்துணவு, சுகாதாரம், குடும்ப நலன் போன்ற பல துறைகளிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

நடப்பு ஆண்டில் தர்மபுரி, சேலம், தென்னார்க்காடு வள்ளலார், விழுப்புரம் ராமசாமி படையாட்சியார், மதுரை, ராமநாதபுரம் ஆகிய ஆறு மாவட்டங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புறத்திலே வாழும் மகளிர், சிறார்களுக்கான முன்னேற்றத் திட்டம், இந்திரா மகளிர் திட்டம், சிறப்பு உள்ளடக்கத் திட்டம் ஆகிய திட்டங்களின் பெயர்கள் இந்த மகளிர் குழுக்களின் மூலமாக ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த மாவட்டங்களில் உள்ள கிராமப்புற ஏழைப் பெண்களைச் சென்றடைய இந்தத் திட்டம் உதவும்.

மற்றும் அண்ணா, எம்ஜிஆர். மாவட்டங்களில்,

கரூர் தீரன் சின்னமலை மாவட்டம், ஏ.டி.பன்னீர் செல்வம் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் ஆகிய நான்கு மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு, தேவையான பயிற்சி அளிக்கப்படும்.

மொத்தம் மேற்கண்ட பத்து மாவட்டங்களில் மகளிரின் திறன் என்ன? எந்தப் பொருள்கள் விற்பனை ஆகும்? அவற்றின் தேவை என்ன? என்பது போன்ற தொழில் மற்றும் விற்பனை சம்பந்தமான ஆய்வை ஒரு வியாபார அறிவுரை நிறுவனம் மேற்கொள்ளும்.

இந்த ஆய்வின் அடிப்படையில் இக்குழு உறுப்பினர்களுக்குத் தொழில் பயிற்சி, உதவி, கடன், விற்பனை குறித்த உதவி வழங்கப்படும். நடப்பாண்டில் இந்தத் திட்டம் பத்து மாவட்டங்களில் மூன்று இலட்சம் பெண்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## வீராணம் திட்டத்தில் மாற்றம்

பெரும்பாலான உறுப்பினர்கள் வீராணம் திட்டத்தைப் பற்றி இங்கே பேசினார்கள். கடந்த கூட்டத் தொடரிலேயே உறுப்பினர் அழகிரி இதைப்பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து, விவசாயிகளுடைய பிரச்சினையைக் கவனத்திலே கொள்ள வேண்டும் என்று எடுத்துக் கூறினார்.

இது பேரறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்தில் தொடங்கப்பட்ட திட்டம். அப்போது இதனுடைய மொத்த மதிப்பீடே இருபது கோடி ரூபாய்தான். அந்தத் திட்டம் இப்போது ஆயிரத்து அறுநூற்று முப்பத்து எட்டு கோடி ரூபாய் அளவாக ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அண்ணா காலத்தில் இருபது கோடி ரூபாய் என்ற அளவில் ஆரம்பிக்கப்பட்ட வீராணம் திட்டம் இன்றைக்குக் காவிரிப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக ஆகிவிட்ட சூழ்நிலையில் 1638 கோடி ரூபாய்க்கு வரவேற்கப்பட வேண்டுமா என்பது ஒரு கேள்வி. அதுமாத்திரம் அல்ல, அங்குள்ள விவசாயிகளுக்கு அதனால் எவ்வளவு தொல்லைகள் ஏற்படும் என்பது மற்றொரு பிரச்சினை. வீராணம் திட்டத்தை அண்ணா அறிவித்து தொடங்கிவைத்தபோது கிருஷ்ணா நதி திட்டம் இல்லை. அதைப்பற்றிய பேச்சு இருந்தது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் சரி, பிறகு கழக ஆட்சிக் காலத்திலும் சரி; காங்கிரஸ் அரசோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆனால் கிருஷ்ணா திட்டம் உருவாக்கப்படவில்லை. பிறகு எம்.ஜி.ஆர். காலத்திலே கிருஷ்ணா திட்டம் அறிவித்து, இடையிலே பல ஆண்டுக் காலம் தொய்வு ஏற்பட்டு, இப்போது கிருஷ்ணா திட்டத்தின் மூலமாக முதல் கட்டமாக விரைவில் மூன்று டி.எம்.சி. தண்ணீர் சென்னைக்குக் கிடைக்கும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஒன்றை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த மூன்று டி.எம்.சி. பிறகு நான்கு டி.எம்.சி. இறுதியாக ஐந்து டி.எம்.சி. ஆக, இந்தப் பனிரெண்டு டி.எம்.சி. தெலுங்கு கங்கைத் திட்டத்திலே தண்ணீரைப் பெற நாம் செலவழிக்கின்ற தொகை எழுநூறிலிருந்து, எண்ணூறு கோடிதான். ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் வீராணம் தண்ணீர் நமக்குக் கிடைப்பது 2.7 டி.எம்.சி. தான். இதற்கு 1,638 கோடி ரூபாய். எழுநூறு கோடி ரூபாய்க்குப் பனிரெண்டு டி.எம்.சி. தண்ணீரைச் சென்னைக்குப் பெற முடியும். ஆனால் ஆயிரத்து அறுநூற்று முப்பத்து எட்டு கோடி ரூபாய்க்கு 2.7 டி.எம்.சி. தண்ணீரைத் தான் பெற முடியும்.




எனவேதான் நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறோம். வீராணம் திட்டத்தை அறவே கைவிட்டுவிடாமல் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது எப்படி என்றால், விவசாயிகளுக்குப் பிரச்சினை ஏற்படாத அளவிற்குத் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள கிராமப் பகுதிகளுக்கு மாத்திரம் தண்ணீரை வழங்க வீராணம் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்வது என்றும், கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குப் பயன்படுத்திக் கொள்ளுவது என்றும், அதுவே நலமாக இருக்கும் என்றும் ஒரு கருத்து இருக்கிறது. அதை இந்த அவையிலே வைப்பது என்னுடைய கடமை என்பதாலும் அந்தக் கருத்தைக் கேட்க உங்களுக்கு உரிமை உள்ளது என்பதாலும் இங்கே அதை எடுத்துச் சொன்னேன்.

## இறந்தோர் குடும்பத்திற்கு ரூ.50 ஆயிரம்!

இங்கே லத்தீபும், பழனிச்சாமியும் பேசியதாகக் கருதுகிறேன். இனக் கலவரங்களிலே இறப்போருக்கும், காயமடைந்தவர்களுக்கும், காவல் துறையினரில் துப்பாக்கிச் சூட்டில் காயம்பட்டு உயிரிழப்பவர்களுக்கும், பகுதிக்குப் பகுதி நிதி உதவி வழங்குவதில் வித்தியாசம் இருக்கிறது என்று பேசப்பட்டது. தாமரைக்கனிகூட வத்திராயிருப்புக்கும், ராஜபாளையத்திற்கும் ஏற்பட்ட வித்தியாசத்தை அன்றைக்குச் சுட்டிக் காட்டினார். இவைகளையெல்லாம் கேட்ட பிறகு, இதிலே ஒரு நிலையான கொள்கையை அரசு வகுக்க வேண்டும். ஆங்காங்கே நடைபெறும் இனக் கலவரங்கள், துப்பாக்கிப் பிரயோகங்கள், காவல் நிலையத்திலே ஏற்படுகின்ற கொலைகள் அல்லது கற்பழிப்புகள் போன்ற நிகழ்ச்சிகள் நடக்கக் கூடாது என்றாலும் கூட, நடந்தால் அந்தந்த மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள் எப்படி நிதி வழங்க வேண்டும் என்பதற்கான ஒரு முறை வகுக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது உள்ள சூழ்நிலை குடும்பத்தில் கொலை செய்யப்பட்டு இறந்த நபர் ஒருவருக்குப் பத்தாயிரம் ரூபாய். நிரந்தரமாகச் செயல்பட முடியாமல் போகிறவர்களுக்கு ரூபாய் ஐந்தாயிரம். கற்பழிப்புக்கு ஆளான பெண்ணுக்கு ரூபாய் ஐந்தாயிரம். தற்காலிகமாகச் செயல்பட முடியாமல் போனவருக்கு ரூபாய் இரண்டாயிரம். ஊனம் அடைந்தவருக்கு ஆயிரம். காங்கிரீட் வீடுகள் சேதமடைந்தால் அவற்றிற்கு இரண்டாயிரத்து ஐநூறு குடிசைகள் சேதமடைந்தால் ரூபாய் ஆயிரத்து ஐநூறு என்று இப்படியொரு முறை மாவட்டத் தலைவர்களுக்கு - அதிகாரிகளுக்குத் தரப்பட்டுள்ளது.

எனவே அதை மாற்றி ஒரு பொதுவான ஏற்பாட்டை இந்த நிதிநிலை அறிக்கையின் தொடர்பாக வெளியிட விரும்புகிறேன். இனக் கலவரங்களில் இறந்தவர்கள், காவல்துறையினரின் துன்புறுத்தலால் இறந்தவர்கள், காவல்துறை துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள் ஆகியோரின் குடும்பத்திற்கும், காவல்துறையினரால் கற்பழிக்கப்பட்டோருக்கும், நிரந்தரமாகச் செயல்பட முடியாமல் போனோருக்கும் நிவாரணத் தொகை ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கப்படும். இதை அந்தந்த மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள் உடனடியாக வழங்கலாம். அதற்காக இந்தப் பொது ஆணை.

அதிகமாகக் காயம் அடைந்தோருக்கும், ஓரளவு செயல்பட முடியாமல் போனவர்களுக்கும் நிவாரணத் தொகை ரூபாய் பத்தாயிரம். சிறு காயமுற்றோருக்கு ரூபாய் ஐந்தாயிரம் என்ற அளவிலும் ஏனைய வீடுகள் மற்றும் சொத்துக்கள் சேதமடைந்தவர்களுக்கு வேறு எந்தவிதமான மாற்றங்கள் இல்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த மாற்றங்களை ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் அல்லது தீயினால் பாதிக்கப்படுகின்ற வீடுகளுக்கு, கால்நடைகளுக்கெல்லாம் என்ன உதவி என்பது அறிவிக்கப்பட்டுள்ளது.

மிக முக்கியமாக வரிக்கொள்கை மாற்றம், அதில் பல கோரிக்கைகள் நாள்தோறும் வந்துகொண்டே இருக்கின்றன. நான் இந்த ஐந்தாறு நாட்கள் இந்த அவையிலே இருக்கும் நேரம் அமைதியான நேரம் தான். இங்கிருந்து வெளியே சென்று மண்டபத்திற்குள் உட்கார்ந்தாலும், என்னுடைய அறைக்குச் சென்றாலும், வரி பற்றிய கோரிக்கைகளோடு சட்டமன்ற உறுப்பினர்கள், வணிகர்கள் அத்தனைப் பேரும் வருகிறார்கள். ரொம்பப் பாதுகாப்பான இடம் பேரவைத்தலைவர் அறைக்குப் போனால் அங்கு பேரவைத்தலைவர் மூலமாகவும் வருகிறது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் எதையும் புறக்கணிக்கக் கூடாது, அலட்சியப்படுத்தக்கூடாது என்று மீண்டும் நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு நிதித்துறை செயலாளரோடும் மற்றும் உள்ள அதிகாரிகளோடும் இங்கே லத்தீப் பாராட்டினாரே, அதிகாரிகளெல்லாம் முதலமைச்சரைப் பாராட்டினர்கள் என்று, அதைப்போல முதலமைச்சரும் அந்த அதிகாரிகளைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார் என்ற அளவில் அறிக்கை தயாரிக்க ஒரு பதினைந்து நாள் கண் விழித்ததைப்போல வரிக் கொள்கைகளில் ஏற்பட்ட சில சிக்கல்களைத் தீர்க்க மூன்று நான்கு நாட்கள் தொடர்ந்து கண்விழித்து இரவுகூட இரண்டு மணிக்குத்தான் தூங்கத் தொடங்கி காலையிலே இந்த வரி நிவாரணங்களோடு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

வரிக் கொள்கையிலே மாற்றம் செய்திருப்பதாலும், வணிகர்களுக்கும், பொது மக்களுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும் பயன் விளைவிக்கும் நோக்கத்துடன் மேல் வரி, கூடுதல் மேல் வரி, கூடுதல் விற்பனை வரி ஆகியவைகளை நீக்குகின்ற வகையிலும் விற்பனை வரி விதிப்புக்கான குறைந்தபட்ச வரம்பினை ஒரு இலட்சத்திலிருந்து மூன்று இலட்சமாக உயர்த்தியதாலும் ஆண்டு ஒன்றுக்கு வரிக்கு உட்படும் விற்பனைத் தொகை ரூபாய் நூறு கோடிக்குக் குறைவாக உள்ள நிறுவனங்களுக்குக் கூடுதல் விற்பனை வரி அறவே நீக்கப்பட்டதாலும், கரும்பு மீது அடிப்படை கொள்முதல் வரியை 14.7 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாகக் குறைத்ததாலும் மொத்தத்தில் ஏற்கெனவே 306 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்படும் என்று நிதி நிலை அறிக்கையிலே சொல்லியிருந்தேன்.

அந்த அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்படுமென்ற நிலையிலும் அதைப் பொருட்படுத்தாமல் வணிகர்களின் வேண்டுகோளையேற்றும், பொது மக்களின் சிரமத்தைக் குறைக்க வேண்டுமென்பதற்காகவும் பின்வரும் ஒருசில சலுகைகளை அறிவிக்கின்றேன்.

நடைமுறையில் அடிப்படை வரி 8 சதவிகிதமாக இருந்த பொருட்களுக்கு மேல் வரி, கூடுதல் விற்பனை வரி மற்றும் கூடுதல் மேல் வரி உள்ளிட்ட வரிகள் எல்லாம் சேர்த்து 11.6 சதவிகிதம் என்றிருந்ததை 12 சதவிகிதம் என்று உயர்த்தி நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருந்தேன். நாகை சட்டமன்ற உறுப்பினர் நிஜாமுதீன்கான் சுட்டிக் காட்டியிருந்தார். 11.6 பனிரெண்டாக உயிர்ந்திருக்கிறது. இது சரியா என்றார். அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு-

இந்தச் சிறு உயர்வினால் ஏற்படும் சிரமம் குறித்து எடுத்துக் காட்டிய காரணத்தினால் 12 சதவிகிதம் என்பதை 11 சதவிகிதமாகக் குறைப்பது என்று




தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு 1 சதவிகிதம் குறைப்பதன் மூலமாக மட்டும் 108 கோடி வருவாய் நாம் எதிர்பார்க்கும் வருமானத்தில் குறையும்.

இவ்வாறு 12 சதவிகிதம் என்பதை 11 சதவிகிதமாகக் குறைத்ததைத் தவிர, பின்வரும் பொருட்களான 1. கேஷ் ரிஜிஸ்டர், 2. எலெக்ட்ரானிக் கருவிகள், சாமான்கள், 3. கால்குலேட்டர்கள், 4. வோல்டேஜ் ஸ்டெபிலைசர்கள், 5. டி.வி.க்கான ஆண்டனாக்கள் மற்றும் 1. மரம், 2. எலெக்ட்ரிக் பம்பு, 3. செருப்பு (காலணிகள்), 4. சீவல் (பாக்கு), 5. பிரஷ்ஷர் குக்கர், 6. பேட்டரீஸ், 7. இங்க், 8. மின்விசிறி, மின்சார பல்புகள், 9. ட்யூப் லைட்டுகள், 10. குடி நீர் வழங்குவதற்குப் பயன்படும் டேப் போன்ற சாதனங்கள், 11. புகைப்படக் கருவிகள், 12. பித்தளை, செம்பு பாத்திரங்கள், 13. ஆடியோ, வீடியோ கேசட்டுகள், 14. அலுமினியப் பொருட்கள் ஆகியவற்றிற்கு 11 சதவிகிதம் என்பது 8 சதவிகிதமென்று குறைக்கப்படுகிறது.

## கம்ப்யூட்டர்களுக்கு வரி குறைப்பு

மாணவர்கள் தற்போது கம்ப்யூட்டர் கல்வி கற்பதிலே மிகுந்த ஆர்வம் காட்டி வருவதை அனைவரும் அறிவோம். குறிப்பாகத் தமிழகத்திலே கம்ப்யூட்டர் சாதனம் மிகவும் ஆர்வமாக வளர்ந்து வருகின்றது.

கம்ப்யூட்டர் தொழிலிலே ஈடுபட்டவர்கள் எல்லாம் கம்ப்யூட்டர் கருவிகளுக்கு 3 சதவிகிதமாக இருந்த வரி தற்போது 12 சதவிகிதமாக உயர்த்தப்பட்டு விட்டது என்று தங்கள் ஆதங்கத்தை வெளியிட்டார்கள்.

முக்கியமாகக் கம்ப்யூட்டர் வளர்ச்சி தடைபட்டுவிடக்கூடாது என்ற நோக்கத்துடன் இந்த அரசு 12 சதவிகிதமாக விதிக்கப்பட்டிருந்த வரியை நான்கு சதவிகிதமாகக் குறைப்பதென்று முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனி கம்ப்யூட்டர்களுக்கும், அதன் உதிரி பாகங்களுக்கும் 4 சதவிகிதம் மட்டும் வரி வசூலிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைப்போலவே -

ஏழை மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் தற்போது நல்ல பொழுதுபோக்கும் சாதனமாக விளங்கிவரும் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கும் அதன் உதிரி பாகங்களுக்கும் 12 சதவிகிதமாக விதிக்கப்பட்டிருந்த வரி, நான்கு சதவிகிதமாகக் குறைக்கப்படுகின்றது.

எழுதுகிற பேப்பர், அச்சடிக்கின்ற பேப்பர், கம்ப்யூட்டருக்கு உபயோகப்படும் பேப்பர் (Printing and Writing Paper) ஆகியவைகளுக்குத் தற்போது 8 சதவிகிதம் என்றிருக்கும் வரியை 4 சதவிகிதமாகக் குறைப்பது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் வரியைப் பற்றி ரங்கநாதன் ஒரு பெரிய படையையே அழைத்துக் கொண்டு வந்தார். இருந்தாலும் தமிழ்நாடு பிளாஸ்டிக் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று, பால் கொண்டு செல்லப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக்குகளுக்கு 8 சதவிகித வரி என்றிருப்பதை 4 சதவிகிதமாகக் குறைப்பது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பொரி கடலைக்குத் தற்போது செய்துள்ள வரி சீர்திருத்தத்திற்குப் பிறகு 12 சதவிகிதம் வரி என்ற அளவிலே இருப்பதாக ஒரு முறையீடு கூறப்பட்டது. இந்தக் கோரிக்கையை ஏற்று இனி பொரி கடலைக்கு 12 சதவிகிதம் வரி என்பதிலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்படுகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதிவு செய்யப்படாத பெயருடன் கூடிய சாதாரண பிஸ்கட்டுகளுக்கு வரியை உயர்த்திவிட்டதாக அவர்களிடம் ஒரு சந்தேகம் உள்ளது. அவர்களுக்கு அந்தச் சந்தேகம் தேவையில்லை. பதிவு செய்யப்படாத பெயருடன் கூடிய சாதாரண பிஸ்கட்டுகளுக்கு நான்கு சதவிகித வரிதான் என்பதைத் தெளிவாக்கிட விரும்புகின்றேன்.

சொக்கர், சொன்ன ஒன்று. பருப்பு, மிளகாய் மற்றும் மஞ்சள் ஆகிய பொருட்களுக்கு முழு விற்பனை வரிவிலக்கு அளிக்கப்பட்டதை உறுப்பினர்கள் நன்கறிவீர்கள்.

இதனைத் தொடர்ந்து இந்தப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் மாவுக்கும் வரியைக் குறைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். இந்தக் கோரிக்கையையும் ஏற்று தற்போது நான்கு சதவிகிதம் என்று மாவுக்கு இருக்கும் வரியை, இனி இரண்டு சதவிகிதம் என்ற அளவிற்குக் குறைக்கப்படும்.

## ஆயத்த ஆடைகள் வரிகுறைப்பு

ஆயத்த ஆடைகள் "ரெடிமேட் கார்மெண்ட்ஸ்" பேரவைத் தலைவர் மூலமாக வந்த கோரிக்கை - அதாவது ரெடிமேட் கார்மெண்ட்ஸ்களுக்குப் புதிய வரிவிதிப்பு முறையிலே உள்ள பிரச்சினைகளை என் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு முடிந்தவரை அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று இந்த அரசு முடிவெடுத்துள்ளது.

அந்த வகையிலே வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படும் ரெடிமேட் துணிகளுக்கு சிபாரம் கிடைக்காத பட்சத்தில் பத்து சதவிகிதம் வரி கட்ட வேண்டியிருக்கின்றது என்று அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். வெளி மாநிலங்களுக்கு அனுப்பாமல், தமிழகத்திலேயே விற்கப்படும் துணிகளுக்கு 8 சதவிகிதமாக வரி இருக்கின்றது. இனிமேல், ரெடிமேட் ஆடைகளை நம் மாநிலத்தில் விற்றாலும் சரி, சிபாரம் பெற்றோ, பெறாமலோ வெளி மாநிலங்களுக்கு அனுப்பி விற்றாலும் சரி, அவர்களுக்கு 4 சதவிகிதம் வரி மட்டுமே செலுத்தினால் போதும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய், பெட்ரோலியப் பொருட்கள் சங்கத் தலைவரும், முன்னாள் மேலவை உறுப்பினருமான ஏ.ஆர். தாமோதரன் அவர்கள் கொடுத்த மனுவிலே மண்ணெண்ணெய்க்கு லிட்டர் ஒன்றுக்கு 0.9 பைசா - அதாவது ஒரு பைசாவிற்கும் குறைவாக விலை உயர்த்தப்பட்டிருப்பதாக எழுதியிருந்தார்.

எனவே இந்த ஒரு பைசா விலை உயர்வினால்




ஏழை எளிய மக்கள் பாதித்து விடக்கூடாது என்பதற்காக அந்த விலை உயர்வை அரசாங்கமே ஏற்றுக் கொண்டு பொது விநியோகத் திட்டத்தின் கீழ்

## 'தமிழரசு' ஓவியப்போட்டி

அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளையொட்டி, ஓவியப் போட்டியொன்றை
அறிவிப்பதில் 'தமிழரசு' பெருமை கொள்கிறது. அறிஞர் அண்ணா அவர்களின் வண்ண ஓவியம்
(Water Colour or Oil Paint ) ஒன்றினைத் 'தமிழரசு' ஏட்டின் அளவில் வரைந்து அனுப்ப
வேண்டும். 1.9.96 இதற்கான கடைசித் தேதி. கலைத் தொழில் கல்லூரி மாணவர்கள் (College
of Arts and Crafts) தவிர, மற்ற கல்லூரி மாணவ மாணவிகள் எவரும் இதில் பங்கேற்கலாம்.
தமிழகத்தில் தலைசிறந்த ஓவியர் ஒருவரால், முதலாம், இரண்டாம் பரிசுக்குரிய ஓவியங்கள்
தேர்ந்தெடுக்கப்படும். முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஓவியம் அறிஞர் அண்ணா
பிறந்தநாளையொட்டி வெளிவரும் 16.9.96 தமிழரசின் அட்டைப்படமாக வெளியிடப்படும்
இரண்டாம் பரிசுக்குரிய ஓவியம், வேறோர் சந்தர்ப்பத்தில் வெளியிடப்படும். தேர்வு பெறும்
ஓவியங்களுக்குத் தக்க பரிசு உண்டு. ஓவியம் வரைபவர் புகைப்படம், அவர் கல்லூரியில்
பயில்வதற்கான சான்றிதழ் ஆகியவை படத்துடன் இணைக்கப்படவேண்டும்.

ஓவியங்களை அனுப்பவேண்டிய முகவரி:
ஆசிரியர் 'தமிழரசு' அரசினர் தோட்டம்
அண்ணாசாலை, சென்னை 600 002.

வேண்டும். பறக்கும் வித்தையில் என்னென்ன புதிதாய் செய்ய முடியும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதைப் பற்றி மேலும் மேலும் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற வெறி என்னுள் இருக்கிறதம்மா'' என்று ஜோனதன் கடற்காகம் பதில் சொன்னது.

அப்பறவையின் தந்தை சொன்னது. 'மகனே! குளிர் காலம் வெகுதொலைவில் இல்லை, படகுகளின்எண்ணிக்கை கூட குறைந்துவிட்டதைப் பார்த்தாயா? கொஞ்ச நாளில் நீரின் மேல் மட்டத்திலிருக்கும் மீன்கள் கூட ஆழ்கடலுக்குப் போகப் போகின்றன என்பது உனக்குத் தெரியாதா?

நீ இன்னும் படித்து தெரிந்துத் கொள்ள வேண்டுமென்று சொல்கிறாயே, நீ பறப்பதும் உயரப்பறந்து கர்ணம் அடிப்பதும் கண்ணுக்குப் பார்க்க நல்லா இருக்குமே தவிர அதெல்லாம் சாப்பாட்டுக்கு ஆகாது. நாம் பறப்பது, வயிற்றுப்பாட்டுக்கும், இரை தேடுவதற்காகவும் என்பதை மறந்துவிடாதே'' என்று அறிவுரை செய்தது.

ஜோனதன் தந்தையின் சொல்லை மதித்து, மற்ற பறவைகளைப் போலவே ஒன்றையொன்று கிறீச்சிட்டுச் சண்டை போடுவதும், இரைக்காக அடித்துக் கொள்வதும், மீனைத் தேடி அலைவதுமாகக் கொஞ்சநாள் இருந்து பார்த்தது. ஆனால் அதன் மனம் அதில் லயிக்கவில்லை.

" அவைகளிலெல்லாம் எந்த அர்த்தமும் இல்லை; நான் என் நேரத்தை முழுக்க முழுக்கப் பறப்பதிலும், பறப்பதில் உள்ள புதுமைகளையும் கற்றுக் கொள்வேன்'' என்று மனதுக்குள் தீர்மானித்தது.

அதன்பின், இன்னும் உற்சாகத்துடன் தொலைதூரம் பறக்க ஆரம்பித்தது. பசி, புதியன கற்றுக் கொள்ளல், அதிலுள்ள ஆனந்தம், இதுதான் ஜோனதன் கடற்காகத்தின் வாழ்க்கை ஆனது.



**... இன்னும் உற்சாகத்துடன் தொலைதூரம் பறக்க ஆரம்பித்தது. பசி, புதியனகற்றுக்கொள்ளல், அதிலுள்ள ஆனந்தம், இது தான் ஜோனதன் கடற்காகத்தின் வாழ்க்கை ஆனது...**

பறக்கின்ற கலையில் மற்ற பறவைகளைவிட மிகஅதிவேகத்தில் பறந்து சாதனை செய்தது.

ஒரு நாள்காற்றிலும்கடுகிச் செல்லும் வேகத்தில் பறக்கும் போது, ஜோனதன் தடுமாறி கடலில் வந்து விழுந்தது. தோல்வியின் கனம் தண்ணீரின் அடிமட்டத்துக்கு இழுத்தது. உண்மையிலேயே அந்த தோல்வி தன் உயிரை குடித்து விடுமோ என்று கூட நினைத்தது.

ஆனால், ஒரு அசரீரியைப் போல், ஒரு குரல் அதனுள் அழுத்தமாக ஒலித்ததை அதனால் நன்றாகக் கேட்க முடிந்தது.

''நான் ஒரு கடற்காகம், நான் இயற்கையால் கட்டுப் படுத்தப்பட்டவன். பறப்பதில் அதிகமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் எனக்கு அதிகமூளைத்திறன் வேண்டும். நான் அதிவேகத்தில் பறக்க வேண்டுமென்றால் எனக்கு வல்லூறுகளைப் போன்ற சிறிய இறக்கைகள் அல்லவா இருந்திருக்க வேண்டும். மீன் உணவுக்குப் பதிலாக எலி உணவு அல்லவா சாப்பிட வேண்டும். உண்மைதான். என் தந்தை சொன்னது சரிதான். நான்தான் என் முட்டாள் தனத்தை மறந்துவிட்டேன். நான் ஒரு சாதாரண பறவையைப்போல என்னுடைய கடற்காக கூட்டத்தில் ஒன்றாக வாழவேண்டும்.

இனி எந்தச் சவாலும் இல்லை. அதனால் எந்தத் தோல்வியும் இல்லை. அது 'போன்ற எந்த எண்ணமும் இல்லை. அதனால் இரவில் பறப்பதும் இல்லை என்ற முடிவுக்கு வந்தது.

ஒருமுறை இறக்கைகளை உதறிக்கொண்டது. கொஞ்ச நேரம் முன் அதுபோட்ட தீர்மானம், மெதுவாகக் கலைந்துப் போனது.

இப்படிப் பறக்கக்கூடாது என்று, தான் போட்ட முந்தைய தீர்மானங்களை எல்லாம் மறந்தது. அவையெல்லாம் பாமரப் பறவைகளுக்குத்தானே தவிர எனக்கல்ல. சாதனையின்





விளிம்பைத்தொட்டவர்களுக்கு இந்தத் தீர்மானங்கள் எல்லாம் வேண்டியதில்லை. மறுபடியும் உற்சாகமாகப் பயிற்சியைத் தொடங்கிவிட்டது. ஆயிரம் அடி, இரண்டாயிரம் அடி, ஐயாயிரம் அடி உயரம், அதே போல் வேகத்தையும் மேலும் மேலும் கூட்டியது.

நம்மை நாமே அறியாமையிலிருந்து மேலே தூக்கிக் கொள்ள முடியும். நம்மிடம் உள்ள தனித் தன்மையை நாமே உணர முடியும். நாம் சாதனை படைக்கவே படைக்கப்பட்டவர்கள். திறமை கொண்டவர்கள் அறிவாக்கம் உள்ளவர்கள் என்பதை நாம் உணரமுடியும்.

நாம் சுதந்திரமானவர்கள்.

நம்மால் பறக்கக் கற்றுக் கொள்ள முடியும் என்று எண்ணியது.

காலம் உருண்டோடியது. ஒரு நாள் கடற்காகங்கள் தன்னுடைய கூட்டத்தின் பஞ்சாயத்தைக் கூட்டின.

''ஜோனதன் லிவிங்ஸ்டன் கடற்காக்கையே! கூட்டத்தில் நடுவே வா!'' என்று ஒரு முதிய காகம் உரத்தக் குரலில் அழைத்தது. பொதுவாக இது போன்ற சம்பவங்கள் எப்போதாவதுதான் நடக்கும். யாருக்காவது மிகப்பெரிய மரியாதை கொடுக்க இருக்கும் போது அல்லது தண்டிக்கும்போது இந்த பஞ்சாயத்து நடக்கும் என்பது கூட்டத்தின் மரபு.

''இன்று காலையில், நாம் உயரப் பறந்து சாதனை புரிந்ததை இவர்கள் பார்த்திருப் பார்கள் போலிருக்கிறது. அதைப் பாராட்டுவதற்காகத் தான் நம்மை அழைக்கிறார்கள் என்று ஜோனதன் மகிழ்ச்சி பொங்க கம்பீரமாக கூட்டத்தின் நடுவில் வந்தது.

''ஜோனதன் கடற்காக்கையே இந்தப் பஞ்சாயத்தார் முன்னால் நீ தண்டிக்கப்படுகிறாய்'' என்று கரகரப்பான முரட்டுக் குரல் ஜோனதனைப் பார்த்து உறுமியது.

இதைக் கேட்டவுடன், ஜோனதனின் கால்கள் பலவீனமாகின. நடுங்கின. நிற்ககூட



**...நம்மை நாமே அறியாமையிலிருந்து மேலே தூக்கிக் கொள்ள முடியும். நம்மிடம் உள்ள தனித் தன்மையை நாமே உணர முடியும். நாம் சாதனை படைக்கவே படைக்கப் பட்டவர்கள்...**

முடியவில்லை. ஏதோ ஒரு படகின் மீது மோதி விட்டதைப் போல ஒரு அபாயத்தை உணர்ந்தது. " தண்டனையா எனக்கா? இவர்கள் தவறிழைக்கிறார்கள். இது நடக்கவே நடக்காது. நான் செய்த சாதனைக்கா இந்தத் தண்டனை? அவர்கள் என்னைப் புரிந்து கொள்ளவில்லை.'' மனசுக்குள் முனகியது.

''பொறுப்பில்லாமல் கடல்காகச் சமுதாயத்தின் மரபையும், கண்ணியத்தையும் மீறியதற்காகத்தான் இந்தத் தண்டனை'' என்று முதிய காகத்தின் குரல் கணீரென ஒலித்தது.

இப்படி அவமதிக்கப்பட்ட பறவைகள், ஜாதிக்கட்டுப்பாடு செய்யப்பட்டு விலக்கி வைக்கப் படும். அவை தொலைவில் உள்ள தனிமையான ஒரு குன்றில் வாழ வேண்டும்.

பொதுவாக, சமுதாயத்தால் அவமதிக்கப்பட்ட கடற்காகங்கள் ஒருபோதும் எதிர்த்துப் பேசுவதில்லை. ஆனால், ஜோனதன் தைரியமாகத் தனது குரலை எதிர்த்து ஒலித்தது.

''எனது சகோதரர்களே! பொறுப்பில்லாதவன் நானா? யார் அதிகமான பொறுப்போடு இருக்கிறீர்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் மீன் மண்டைக்காக அலைந்திருக்கிறோம். ஆனால், வாழ்க்கைக்கு ஒரு புதிய அர்த்தத்தை, ஒரு புதிய பரிமாணத்தை நாம் வாழ்வதற்கான காரணத்தை; நாம் கற்றுக்கொள்ள, தெரிந்து கொள்ள, இன்னும் சதந்திரமாக வாழ இப்போது கண்டுபிடித் திருக்கிறேன். அவைகளை உங்களுக்கும் சொல்ல வேண்டும் எனக்கு ஒரேயொரு வாய்ப்புத் தாருங்கள். என்று வேண்டியது;



மண்ணெண்ணெயை வழங்கும் போது, விலையை உயர்த்தாமல் தற்போதுள்ள விலைக்கே தரப்படுவதற்கு வழிவகை செய்வதோடு, இவ்வாறு விலை குறைத்துத் தருவதால் நியாயவிலைக் கடைகளுக்கு ஏற்படும் நட்டத்தை அரசாங்கமே மானியமாகத் தருவதென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.




## முழு வரிவிலக்கு!

உணவுப் பொருட்களான பருப்பு, மிளகாய், புளி போன்றவைகளுக்கு முழு வரிவிலக்கு செய்திருப்பதைத் தொடர்ந்து — சொக்கரின் பரிந்துரையைத் தொடர்ந்து பனங்கல்கண்டுக்கும் முழு வரிவிலக்கு செய்யப்படும்.

வரிக்கு உட்படும் விற்பனைத் தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 100 கோடிக்குக் குறைவாக உள்ள நிறுவனங்களுக்குக் கூடுதல் விற்பனை வரி முற்றிலும் நீக்கப்படுகிறது என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேன்.

இதனால் வணிகர்களுக்குள்ள பணிப்பளு மற்றும் வரி விதிப்புப் படிவங்கள் குறைந்து 70,000க்கும் மேற்பட்டவர்கள் பயனடைவார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறேன்.

எனவே நூறு கோடிக்கு மேல் ஆண்டு ஒன்றுக்கு மொத்த வியாபாரம் நடத்தும் நிறுவனங்களுக்குக் கூடுதல் விற்பனை வரி உண்டு. அதன்னியில் ஒரு நிறுவனத்தின் சார்பில் பல ஏஜெண்டுகளைக் கொண்டு நடத்தும் வியாபாரத்தில் 100 கோடிக்கு மேல் மொத்த விற்பனைக் கணக்கு வருமேயானால் அவர்களுக்குக் கூடுதல் விற்பனை வரிவிதிக்க அரசு பரிசீலித்து வருகின்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் திருப்பூர் பனியனுக்கு உள்ள பிரச்சினை பற்றி வேண்டுகோள் வைத்திருக்கின்றார்கள். இப்பிரச்சினை குறித்து இந்த அரசாங்கம் மிகுந்த கவனத்தோடு பரிசீலித்தது.

தமிழ்நாட்டிலிருந்து மற்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி ஆகக்கூடிய பனியன்களும் மற்றும் பின்னல் ஆடைகளும் முழுவதும் தற்போது நான்கு சதவிகித மைய விற்பனை வரிக்கு உட்பட்டதாகும். இதனை ஒரு சதவிகிதமாகக் குறைக்க அரசாங்கம் முன்வருவதற்கு சுப்பராயன் மகிழ்வார் என்று கருதுகிறேன். மகிழ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பின்வரும் நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றது. அதாவது -

ஏற்றுமதி ஆகும் மொத்தப் பொருட்களும் பிராஞ்ச் டிரான்ஸ்பர் அல்லது கன்சைமெண்ட் விற்பனையிலே அனுப்பப்படாமல் முழுவதும் மைய விற்பனை வரிக்கு உட்படுத்தப்பட்டதாக அனுமதிக்கப்பட வேண்டும்.

சுப்பராயன் அவர்கள் முழுமையாகக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னார். முழுமையாக நிறைவேற்ற முடியாவிட்டாலும், ஒரு சதவிகிதம் அளவிற்கு வரி விதிக்கப்படலாம் என்று இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

## பிளஸ் 2 வரை இலவச பஸ் பாஸ்

மற்றொரு வேண்டுகோள் உறுப்பினர் மு.க. ஸ்டாலின் அவர்களால் வைக்கப்பட்டு, பேராசிரியர் தீரன், பழனிச்சாமி, திருநாவுக்கரசு, எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோராலும் வழி மொழியப்பட்ட ஒன்று. ஆனால் பத்துக் கோடி ரூபாய் அதிகமாகும். பத்தாவது வரையிலே படிக்கின்ற மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் என்று இருந்தது. அதை பிளஸ் 2 வரையில் ஆக்க வேண்டும் என்று உறுப்பினர் ஸ்டாலின் சொல்லி, எதிர்க்கட்சித் தலைவர் வரையிலே வழிமொழிந்திருக்கிற காரணத்தால் மகனுக்காக அல்ல - அவை உறுப்பினர்களுக்காகவும், மாணவர்களுக்காகவும் உங்கள் அத்தனைப் பேர்களுடைய வேண்டுகோளை ஏற்று பிளஸ் 2 வரையிலே இலவச பஸ் பாஸ் மாணவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவித்து, இந்த நிதிநிலை அறிக்கை குறித்து நல்ல கருத்துக்களைக் கூறிய உங்கள் அனைவருக்கும், நல்ல ஆக்கப்பூர்வமான கருத்துக்களைச் சொன்ன உங்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





# கடற்காகம்

புத்தம் புதிதாய் விடியல். அமைதியான கடலலைகளி டையே தனது பொன்னிறக் கதிர்களை விரித்து எழுகின்ற கதிரவன்.

கரையிலிருந்து ஒரு கல் தொலைவில் மீன்பிடி படகுகள் அலைகளைக் கிழித்துக் கொண்டு முன்னேறுகின்றன. இது ஆயிரக்கணக்கான கடல் காகங்கள் காலை உணவு அருந்தும் நேரம். ஒரு பரபரப்பான காலைப் பொழுது.

கடற்கரையைத் தாண்டி, சற்றுதள்ளி மிதக்கும் படகையும் கடந்து ஜோனதன் லிவிங்ஸ்டன் என்ற பேர்கொண்ட கடல்காகம் உயரஉயரப் பறந்து கொண்டிருக்கிறது. நூறடி உயரத்துக்கு வானத்தை நோக்கி காற்றின் மெல்லிய ஸ்பரிசம் தனது முகத்தில் தழுவப் பறந்து கொண்டிருக்கிறது.

அதன் காலடியில் நெடுங்கடல். அது, தன்னுடைய பார்வையைக் கூராக்கிக் கொண்டு, மூச்சடக்கி ஒரு நீள் வட்டமடித்தது. அப்போது அதன் சிறகுகள் சிலிர்த்து தட்டுத் தடுமாறி விழுந்தது.

ஜோனதன் லிவிங்ஸ்டன் கடற்காகமோ சாமானியப் பறவையல்ல.

மீண்டும் மீண்டும் வானில் எகிறி மெல்ல மெல்லத் தட்டுத் தடுமாறி வட்டமடிக்கும்.

பெரும்பாலான கடற்காகங்கள் பறக்கும் வித்தையில் உள்ள சின்னஞ்சிறிய, நுணுக்கங்களை உண்மைகளைக்கூட அறிய ஆர்வமற்றவை. அவைகளுக்கு கரையிலிருந்து புறப்பட்டுக் இரையைத் தேடித் திரும்ப மட்டும்தான் தெரியும்.

ஜோனதன் லிவிங்ஸ்டன் கடற்காகம் உணவுக்காகப் பறப்பதைவிட, பறக்கும் வித்தையில் உள்ள சிறப்பை அறிந்திடவே மிகவும் விரும்பியது. பறப்பதையே ஒரு பயிற்சியாக — சோதனையாகச் செய்வதில் ஆர்வம் காட்டியது. அப்பறவையின் இந்தச் செயலில் அதன் பெற்றோர்களுக்குக் கூட விருப்பம் இல்லை.

''மற்ற பறவைகளைப் போல் இல்லாமல், நீ மட்டும் ஏன் இப்படி கஷ்டப்பட்டுப் பறக்க வேண்டும். நீ வரவர சரியாகக் கூட சாப்பிடுவதில்லை. அதனால் உன் உடம்பு எலும்பும் தோலுமாக இளைத்து விட்டது'' என்று ஒரு முறை ஜோனதனின் தாய் வருத்தத்தோடு கேட்டே விட்டது.

எலும்பாய், ஒல்லியாய் இளைத்துப் போவதைப் பற்றி நான் கவலைப்படவில்லையம்மா. நான் காற்றில் வானவெளியில் ஓயாமல் பறக்க

### கதையைப்பற்றி...

ஆசிரியர் ரிச்சர்டு பக் என்பவர் எழுதிய 'ஜோனதன் லிவிங்ஸ்டன் கடற்காகம்' என்ற இந்த நூலைப்பற்றி, ரே பிராட்பரி என்பவர் சொன்ன கருத்தை இங்கு நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும்.

எதற்கும் அசைந்து கொடுக்காத 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அசாதரணமான ஓர் அனுபவத்தை இந்த நூல் மூலமாக பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர் பக் இரண்டு வேலைகள் செய்துள்ளார். நான் பறப்பதற்கு எனக்காக ஓர் வானவூர்தியும், என்றும் மாறா இளமையும் எனக்குக் கொடுத்துள்ளார்.

ஒரு மாதம் கடந்தது.

அந்த முதியபறவை அமைதியாக "எந்தக் காலத்திலும் நீ பறப்பதை நிறுத்திவிடக்கூடாது பூர்ணமான, கண்ணுக்குப் புலப்படாத வாழ்க்கைத் தத்துவத்தைப் புரிந்து கொள்ளும் வரை பயிற்சியை விட்டுவிடக்கூடாது. கடைசியாய் "ஜோனதன், நீ அன்பைப் பரப்பிக்கொண்டேயிருக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு அந்த முதிய பறவை விர்ரென்று பறந்துவிட்டது.

காலம் கனியக் கனிய ஜோனதன் தனக்குள்ளேயே மீண்டும் மீண்டும் தான் எங்கிருந்து வந்தோம் என்பது பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டது. தான் கற்றது பத்தில், நூறில் ஒருபங்கு தானிருக்கும். ஆனால் முழுமையும் கற்பதற்கு எத்தனைப் பிறப்பெடுக்க வேண்டுமோ என்று நினைத்துப் பார்த்தது.

'உண்மையை பறவைக் கூட்டத்தின் முன்பு தைரியமாகச் சொன்னால் ஒருவேளை சமுதாயத்திலிருந்து நீங்கள் ஒதுக்கிக் கூட வைக்கப்படலாம்' ஜோனதன் கருணை, அன்பு போன்றவற்றைப் பற்றி பயிற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டது. தன்னுடைய பழைய தனிமை வாழ்க்கைக்குப் பதிலாகத் தான் கற்றதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் ஒரு ஆசிரியர் ஆக வேண்டும் என்று விரும்பியது.

தான் கண்ட உண்மையை வெளிப்படுத்த ஒரேயொரு தடவை வாய்ப்புக் கேட்ட ஒரு கடற்காகத்தின் விருப்பத்தைச் சொல்லுவதே தன்னுடைய அன்பை வெளிப்படுத்தும் வழி என்பதைத் தன்னுடைய பாதையாக்கிக் கொண்டது.

"ஜோன், நீ ஒரு சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவன்தானே? உன்னுடைய பழைய தலைமுறையைச் சேர்ந்த கடற்காகத்தில் ஏதாவதொன்று உன்வார்த்தையை இப்போது கேட்காதா? தொலைதூரத்தைக் காணும் கடற்காகமே மிக உயரத்துக்குப் பறக்கும். இது உனக்குத் தெரி



...தன்னுடைய பழைய தனிமை வாழ்க்கைக்குப் பதிலாகத் தான் கற்றதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் ஒரு ஆசிரியர் ஆக வேண்டும் என்று விரும்பியது...

யாததல்ல. ஜோன்" என்றது சுல்லிவன்.

"நீ எங்கேயிருந்து வந்தாயோ அங்குள்ள காகங்கள் ஒன்றையொன்று அடித்துக் கொண்டும் வக்கரித்துக் கொண்டும் தரையில் கிடக்கின்றன. அவை சொர்க்கத்திலிருந்து ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கின்றன. அவர்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கேயிருந்தே அவர்களுக்கும் சொர்க்கத்தைக் காட்டுவதாக நீ சொல்கிறாய். அவை, அவைகளின் இறக்கையின் விளிம்பைக் கூட பார்க்கமுடியாதவை. அதனால் நீ இங்கேயே தங்கி இளம் கடற்காகங்களுக்கு உதவு, பறக்கும் கலையைக் கற்றுத் தரவேண்டும். நீ சொல்லுவதைப் புரிந்துகொள்ளும் நிலையில் அவர்களும் உள்ளார்கள்."

சுல்லிவனின் அறிவுரையை மதித்து ஜோனதன் அங்கேயே தங்கிவிட்டது. புதிய பறவைகளுக்குக் கற்றுக் கொடுத்தது.

காலம் ஓடியது. சூழ்நிலைகள் மாறின.

ஒருநாள் சுல்லிவனிடம் "இங்குள்ளவர்கள் நன்றாகவே கற்றுக் கொண்டுள்ளார்கள். அவர்களே புதியவர்களுக்கு உதவுவார்கள் என் பணி முடிந்துவிட்டது. நான் இங்கிருந்து போக வேண்டும்" என்றது ஜோனதன்.

அதற்கு சுல்லிவன், "நான் உன்னை இழந்துவிடுவேனோ என நினைக்கிறேன்" என்றது.

"முட்டாளைப் போல் பேசாதே. நாம் தினமும் என்ன பயிற்சி செய்கிறோம்? நம்முடைய நட்பு காலத்தையும் தேசத்தையும் நம்பியிருந்தால், முடிவில் காலத்தையும் தேசத்தையும் நாம் வெற்றி கொள்ளுகிற ஒரு நிலையில் நம் நட்பும் சகோதரத்துவமும் அழிந்துவிடாதா? சுல்லிவன் சிரித்துக் கொண்டே, "ஆயிரம் மைல் தூரத்தை எப்படிப் பார்ப்பது என்பதை இங்கே எவருக்காவது காட்டமுடியும் என்றால் அது இந்த ஜோனதன் லிவிங்ஸ்டன் ஒருவனாகத்தான் இருக்க முடியும், போய்வா, எனது இனிய நண்பனே!" என்று



தமிழரசு

விடை கொடுத்தனுப்பியது. மவுனத்தால் தள்ளாடியது.

"மீண்டும் சந்திப்போம் வருகிறேன் சுல்லி" என்று ஜோனதன் தான் வந்த வேலை முடிந்துவிட்டது என்ற பெருமையை சுமந்தபடி பறந்தது.

ஃபிரெட்சர் லிண்ட் கடற்காகம் இளமையானது துடிப்புடையது "எந்த ஒரு சமுதாயத்தாலும் எந்த ஒரு பறவைக்கும் ஜோனதனுக்கு இழைத்த அநீதி, அவமானத்தைப்போல் இழைக்கப்படக் கூடாது.'

தெரிந்துகொள்ள எவ்வளவோ இன்னும் இருக்கிறது. ஒரு கொசுவைப் போல ஒரு இடத்தையே சுற்றிச் சுற்றி வருவதில் என்ன இருக்கிறது. பழைமைவாதிகளின் எண்ணத்தைப்பற்றி எனக்கு கவலையில்லை' நான் நிறையக் கற்றுக் கொள்ளப் போகிறேன். நான் பறப்பது என்ன என்பதை உலகிற்குக் காட்டப் போகிறேன்' நான் மாறுபட்டவனாக இருப்பேன். அவர்கள் சொல்லுவதையே விரும்பி என்னைக் கட்டுப்படுத்திவர முயற்சித்தால் நான் அவர்களுக்காக வருத்தப்படுகிறேன்." என்று ஃபிரெட்சர் லிண்ட் கடற்காகம் எண்ணியது.

"பறக்க ஆசைப்படுகிறேன். நீ பறக்க விரும்புகிறாயல்லவா, அந்தப் பறவைக் கூட்டத்தை மன்னித்துவிடு. அவைகளிடம் போ. அவர்களுக்கும் பறக்கக் கற்றுக் கொடு" என்று ஃபிரெட்சர் லிண்ட் பறவை மனதுக்குள் முடிவு செய்தது.

ஜோனதன் இருக்கும் தனிமையைத் தேடி, நிறையப் பறவைகள் போகத் தொடங்கின. அவைகளுக்கெல்லாம் பறக்கும் வித்தையைக் கற்றுக் கொடுத்தது. ஃபிரெட்சர் எனும் பறவைக்குப் பறக்கும் கலையை, அதன் நுணுக்கத்தைக் கற்றுக் கொடுத்து அதன் மூலம் மற்ற பறவைகளையும் கற்கவைத்தது. அப்படி ஒருமுறை சொல்லித் தரும்போது, ஒரு பறவையின் சந்தேகத்தைத் தீர்த்துவைத்தது. 'உடம்பு என்பது உடம்பே அல்ல. அது முழுக்க முழுக்க எண்ணமே' என்று புதுமையான பதிலை அறிவித்தது.





...ஒருமுறை சொல்லித் தரும்போது, ஒரு பறவையின் சந்தேகத்தைத் தீர்த்து வைத்தது. 'உடம்பு என்பது உடம்பே அல்ல. அது முழுக்க முழுக்க எண்ணமே' என்று புதுமையான பதிலை அறிவித்தது...

பறவைகள் புதிது புதிதாக வரத் தொடங்கி அவைகளும் பயிற்சி பெறத் தொடங்கிவிட்டன. தான் எந்தச் செயலுக்காக இந்த உலகத்துக்கு வந்ததோ அது முடிந்து விட்டது; எனவே, நாம் போய்விட வேண்டும் என்று முடிவு செய்தது.

ஒருநாள் ஃபிரெட்சர் மற்றும் அதனுடன் இருந்த பறவைகளிடம் 'என் பணி முடிந்துவிட்டது. இதை நீங்கள் தொடரவேண்டும். எல்லா பறவைகளுக்கும் சொல்லித் தரவேண்டும் என்று சொன்னது.

"நான் ஒரு சாதாரண கடற்காகம்தான். என்னைக் கடவுள் என்று வதந்திகளைப் பரப்பிவிடாதீர்கள். நான் கடவுள் அல்ல. நான் சாதாரண கடற்காகமே. நான் ஒரு சாமானிய ஜோனதன் பறவையாக பறக்க விரும்புகிறேன்" என்று சொல்லிவிட்டு வெற்றிடத்தில் மறைந்தது. ஃபிரெட்சர் எனும் கடற்காகம் மற்ற இளம் காகங்களுக்கு ஜோனதன் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்தது. அது சொன்னது, "கற்பதற்கு எல்லை ஏதுமில்லை."

★★★★★

கல்லாக மாறிவிட்டது அந்தக் கூட்டம். ஜோனதனின் கோரிக்கையைக் கேட்க மறுத்துவிட்டன. ''உன்னுடன் நம்முடைய உறவு இன்றோடு அறுந்துவிட்டது; நீ போகலாம்'' என்று இறுதியாகச் சொல்லிவிட்டு கூட்டம் கலைந்தது.

ஜோனதன் ஒரு நிமிடம் மவுனமாக இருந்துவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றது. தொலைவில் உள்ள அந்தத் தனிமையான குன்றுக்குச் சென்றுவிட்டது. அங்கேயே ஒற்றைப் பறவையாகத் தன்னந்தனியே காலத்தைக் கழித்தது.

இப்படியே வருடங்கள் போயின.

ஒருநாள் இரண்டு கடற்காகங்கள் ஜோனதன் இருக்கும் குன்றை நோக்கிப் பறந்து வந்தன. ஜோனதன் பறவைக் கருகில் வந்தமர்ந்தன. 'நாங்கள் உங்கள் கூட்டத்திலிருந்து வந்திருக்கிறோம். உங்கள் சகோதரர்கள். உங்களை எங்களிடம் அழைத்துப் போக வந்திருக்கிறோம்' என்றன அப்பறவைகள்.

''நான் ஜாதிக்கட்டுப்பாடு செய்யப்பட்டு விலக்கப்பட்டவன். எனக்குச் சமுதாயமே இல்லை'' என்று கடுமையாகச் சொல்லி அந்தப் பறவைகளின் அழைப்பை ஏற்க மறுத்தது.

அது எங்களுக்கும் தெரியும். நீங்கள் கற்றறிந்தவர். உங்களின் படிப்பில் ஒரு கட்டம் முடிந்துவிட்டது. அடுத்தது ஆரம்பிக்க நேரம் வந்துவிட்டது. அது உங்களால் தான் முடியும்'' என்றன.

ஒரு நிமிடம் மவுனமாகச் சிந்தித்தது, ஜோனதன். அவைகள் சொல்லுவது சரிதான். வீட்டிற்குப் போவதற்கு இது சரியான நேரம்தான்'' என்று யோசித்தது. ஒரு முறை பெருமூச்சு விட்டுக் கொண்டது, மறுபடியும் பறக்கத் தொடங்கியது.

அந்த இரண்டு கடற்காகங்களுடன் தனது பழைய இடத்திற்கு வந்திறங்கியது. இப்போது நிறைய மாற்றங்கள், புதுப்புது தோற்றங்கள். 'புதிய சிந்தனைகள். புதுப்புது கேள்விகள் ஏன், காகங்கள் குறைவாக இருக்கின்றன. மனசுக்குள்ளே கேட்டுக் கொண்டது.



**...ஜோனதன் ஒரு நிமிடம் மவுனமாக இருந்துவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றது. தொலைவில் உள்ள அந்தத் தனிமையான குன்றுக்குச் சென்றுவிட்டது. அங்கேயே ஒற்றைப் பறவையாகத் தன்னந் தனியே காலத்தைக் கழித்தது...**

தான் அங்கே இருந்த முந்தைய உலகத்தை நினைத்துப் பார்த்தது. சாப்பாட்டுக்காக ஒன்றோடொன்று சண்டைப் போட்டுக் கொத்திக் கொண்டிருந்ததையும், பறப்பதில் ஆர்வமில்லாமல் இருந்ததையும் அசைபோட்டது. பழைய நினைவு ஒன்று கண்முன்னே வந்தது.

ஒருமுறை ஜோனதனின் பயற்சியாளரான சுல்லிவனிடம் கேட்டது. ''ஏன், நாம் மட்டும் இங்கே வந்திருக்கிறோம். மற்ற பறவைகள் ஏன் வரவில்லை?''

அதற்கு சுல்லிவன் சொன்னது. ''நீ பத்து லட்சம் பறவைகளில் தனி ஒருவன் ஒவ்வொன்றையும் கற்றுக் கொள்ள பல பிறப்புகள் எடுக்க வேண்டும். ஆனால், நீயோ, ஒரு பிறப்பிலேயே எவ்வளவோ கற்றுக் கொண்டுள்ளாய். நீ ஆயிரம் பிறப்பு எடுக்க வேண்டிய அவசியம் இல்லை, பயிற்சிகள் தொடங்கின பல புது நுணுக்கங்களைக் கற்றுகொண்டன.

ஒரு அந்தி மயங்கும் மாலை நேரம். ஜோனதன் ஒரு வயதான கடற்காகத்தைச் சந்தித்தது.

''இந்த உலகம் சொர்க்கம் இல்லை அல்லவா? என்று ஒருமுறை அந்த முதிய பறவையிடம் ஜோனதன் கேட்டது. கேட்டவுடன் முதிய பறவை கலகலவெனச் சிரித்தது. பிறகு முதிய காகம் மெதுவாகச் சொன்னது.

'நீ இன்னமும் படித்துக் கொண்டே இருக்கிறாய்!' என்று நிதானமாகச் சொன்னது.

இங்கே என்ன நடக்கிறது? நாமெல்லாம் எங்கே போகிறோம்? சொர்க்கம் என்றொரு இடம் இருக்கிறதா? ஜோனதன் கேள்விகளை அடுக்கியது.

''இல்லை அப்படியொரு இடம் இல்லை' சொர்க்கம் என்பது இடமோ காலமோ அல்ல, அது முழுநிறைவோடு மனநிறைவோடு இருப்பதுதான்.''







''பூர்ணத்துவம் என்பதற்கு எல்லையே இல்லையப்பா. மணிக்கு ஆயிரம், லட்சம், 10 லட்சம் மைல், ஏன் ஒளியை விட வேகமாகக் கூட பறக்கலாம். ஏனெனில் எல்லாமே ஒரு வரையறைக்குட்பட்டது. ஆனால் பூர்ணத்துவத்துக்கு மட்டும் எல்லையோ வரையறையோ இல்லை. என்று சொல்லிவிட்டுக் கண்சிமிட்டும் வேகத்தில் பறந்து தொலை தூரம் மறைந்து வந்து, மறுபடியும் மறுபடியும் பறந்து வந்து நொடிக்குள் திரும்பவந்து ஒரு ஜால வேடிக்கை காட்டியது அந்த முதிய பறவை.

ஜோனதன் உண்மையிலேயே அசந்து போனது; சொர்க்கத்தைப் பற்றி கேட்பதற்கே மறந்துவிட்டது. ''உங்களால் எப்படி இதுபோல கண்ணிமைக்கும் நேரத்துக்குள் பறக்க முடிகிறது?'' என்று கேட்க ஆரம்பித்தது.

அதற்கு முதிய பறவை அமைதியாய்,

''எங்கும் எந்நேரமும் நான் விரும்பியபடி போகமுடியும்; நான் என்ன நினைக்கிறேனோ அதைச் செய்ய முடியும்'' என்றது.

''பூர்ணத்துவத்துக்காகப் பறக்கிற பறவை எங்கும் போகமுடியும், பறக்க வேண்டுமென்பதற்காகப் பூர்ணத்துவத்தை இழப்பவர்கள் எங்கேயுமே போகமுடியாது.'' நான் அதைக் கற்றுக்கொள்ள வேண்டும். நான் அதைச் செய்து பார்க்க வேண்டும் சொல்லுங்கள்?'' ஜோனதன் ம்.வா. உன் எண்ணம் போல் நீ நினைக்கும் இடத்துக்குப் பறக்க வேண்டுமென நினைக்கிறாயோ அதை அடைந்துவிட்டதாகவே மனதில் கொள்ள வேண்டும்.''



**...பூர்ணத்துவத்துக்காகப் பறக்கிற பறவை எங்கும் போகமுடியும், பறக்க வேண்டு மென்பதற்காகப் பூர்ணத்து வத்தை இழப்பவர்கள் எங்கேயுமே போகமுடியாது...**

ஜோனதன் ஒவ்வொரு நாளும் கடுமையாக முயற்சி செய்தது. காலை உதயத்திற்கு முன் தொடங்கி நள்ளிரவுக்கு பின்வரை பயிற்சி மேற்கொண்டது.

என்ன ஆச்சரியம்!

ஜோனதன் கண்களைத் திறந்து பார்த்தது. தனியே முற்றிலும் புதியதொரு கடற்கரையில் அம்முதிய காகத்துடன் நின்றது. மரங்கள் குனிந்து தண்ணீரின் விளிம்பைத் தடவுகின்றன. தலைக்குமேலே இரண்டு மஞ்சள் குரியன்கள் தகதகத்துக் கொண்டிருந்தன! எங்கும் ஒளி வெள்ளம்!

அதிர்ச்சியிலிருந்து மீளாத ஜோனதன் முற்றிலும் புதிய குழலைக்கண்டு திகைத்தபடி கேட்டது.

''நாம் இப்போது எங்கே இருக்கிறோம்?''

நாம் வேறொரு கிரகத்தில் இருக்கிறோம். இங்கே பசுமையான வானமும், அதில் சூரியனுக்கு இரண்டு தங்க நட்சத்திரங்களும் உண்டு' என்றது முதிய பறவை.

காகங்கள் இரண்டும் பூமிக்கு திரும்பின, நன்றாக இருட்டிவிட்டது. மற்ற பறவைகள் எல்லாம் இவ்வளவு நேரம் காணாமல் போய் மீண்டும் வந்ததைக் கண்டு ஒரு பயங் கலந்த மரியாதையுடன் நடந்து கொண்டன.

இருபறவைகளும் மரியாதையை ஏற்றுக் கொண்டன.

''நான் உன்னைக் கண்டு ஆச்சரியப்படுகிறேன் ஜோான்'' என்றது சுல்லிவன்.''

அந்த முதிய பறவை சொன்னது, ''உனக்கு விருப்பமிருந்தால் காலத்தோடும் பயிற்சி செய்யலாம் இறந்தகாலம், எதிர்காலம் எல்லாவற்றுடனும் பயணம் செய்யலாம். அதற்குமேல் இன்னும் ஒரு கடினமான ஆனால் மிகமகிழ்ச்சியான ஒன்றையும் நீ செய்யலாம். அது தான், இரக்கம் அன்பு இவைகளின் அர்த்தம் புரிகிற வரை தொடர்ந்து பறக்கலாம்.

அரசின்சார்பில் செய்திமக்கள் தொடர்புத் துறை மூலம் மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்பட்டு வருகின்ற அரசுப் பொருட் காட்சிகளில் சில வகைச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுரைகூறி ஆணையிட்டுள்ளார்.

அதன் விவரம் வருமாறு: அரசுத் துறை அரங்குகளில் புகைப்படங்கள் பெருமளவில் இடம் பெறுவதைத்தவிர்த்து, மக்களுக்குப் புரிகின்ற வகையில் அந்தந்தத் துறை தொடர்பான செயல் விளக்கங்கள், திட்டங்களின் மாதிரி வடிவங்கள், இயங்கும் மாதிரி வடிவங்கள் இடம் பெறும். அரசின் சாதனைகள், மக்கள் அறிய வேண்டிய திட்டங்கள், அத்திட்டங்களின் மூலம் மக்கள் பயன்பெற வேண்டித் தொடர்பு கொள்ளும் வழிமுறைகள் போன்றவை கருத்துப் படங்களாய் (கார்ட்டூன்) சித்திரிக்கப்படும். குறைந்த செலவில் அச்சிடப்பட்ட, படங்கள் நிறைந்த சிறு கையேடுகள் இலவசமாக வழங்கப்படும்.

எடுத்துக்காட்டாக வேளாண்மைத் துறையெனில், அந்தந்த மாவட்டப் பகுதி வேளாண் மக்கள் அறிய வேண்டிய அரசின் திட்டங்கள், அரசு ஆற்றிவரும் பணிகள், வேளாண் மக்களுக்கான அரசின் உதவிகள் போன்றவற்றுடன் வேளாண்மை செய்வதற்கான நவீன செயல்முறைகள் போன்றவையும் மாதிரி வடிவங்கள் மூலம் எடுத்துக்காட்டப்படும். வீடியோ படங்கள், பொம்மலாட்டம் போன்ற விருப்பமான வழிமுறைகளும் இதற்கெனப் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

போக்குவரத்துத் துறை, அரங்கு எனில், சாலைவிதிகளைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம், கடைப்பிடிக்காமையால் ஏற்படும் விரும்பத்தகாத விளைவுகள், எளிய முதல் உதவி முறைகள் போன்றவையும், பொதுச் சொத்துக்களை நாசப்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள், போக்குவரத்திற்குத்தடை ஏற்படுத்துவதால் ஏற்படும் இன்னல்கள் போன்ற மக்களுக்கு அறிவுறுத்த வேண்டிய கருத்துக் களும் எடுத்துக்காட்டப்படும்.

பொருட்காட்சியில் அமையும் அரசுத்துறையின் அரங்குகளிலும், பொருட்காட்சி வளாகத்திலும், கட்-அவுட், விருப்பம் மீறிய விளம்பரங்கள், ஆடம்பர அலங்காரங்கள் போன்றவை அனைத்தும் இடம்பெறாமல் தவிர்க்கப்படும்.

## பாவேந்தர் பாரதிதாசன் விருது

**1996** ஆம் ஆண்டுக்குரிய பாவேந்தர் பாரதிதாசன் விருதினை நாடறிந்த நற்றமிழ்க் கவிஞர் வைரமுத்து அவர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவ்விருதுக்கான பரிசுத் தொகையினை ரூ. 10,000/- லிருந்து ரூ. 20,000/- ஆக இந்த ஆண்டிலிருந்து அரசு உயர்த்தியுள்ளது. 1978 முதல் இவ்விருது, சிறந்த தமிழ்க் கவிஞருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

# செய்திச் சரம்

## தமிழில் பெயர்ப்பலகை

தொழிற்சாலைகள், தொழில் வணிக நிறுவனங்கள் மற்றும் உணவகங்கள் முதலியன தங்களது நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளைத் தமிழிலேயே எழுதி வைக்கவேண்டும் என்பது அரசின் விருப்பம் ஆகும். ஒவ்வொரு நிறுவனமும் பெயர்ப் பலகைகளைச் சீர்திருத்தப்பட்ட தமிழ்ச் சொற்களில்தான் வைக்க வேண்டும். பிற மொழிகள் உபயோகப்படுத்துவதானால், முதலில் பளிச்சென்று தெரிகின்ற முறையில் பெரிய எழுத்தில் தமிழில்தான் வைக்க வேண்டும். அதன்பின், ஆங்கிலம் மற்றும் பிற விருப்பப்பட்ட மொழிகள் தமிழ் எழுத்துக்களைவிட சிறிய அளவில் எழுதி வைக்கவேண்டும்.

இந்த அரசின் மேற்கூறிய கொள்கையின் முக்கியத்துவம் குறித்து அனைத்துத் தொழிலதிபர்கள் / வேலை அளிப்போர் இந்த அரசின் வேண்டுகோளை ஏற்று இது குறித்துத் தங்களது முழு ஒத்துழைப்பை ஓராண்டிற்குள் நிறைவேற்றித் தருவார்கள் என இந்த அரசு நம்புகிறது.





## நீர்வள ஆதாரம்: நிபுணர் குழு

தமிழ்நாட்டில் நீர்வள ஆதாரங்கள் தொகுப்புத் திட்டம் 1140 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலக வங்கி உதவியுடன் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பகுதிகளுக்கு ஆலோசகர்களை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாசன மேம்பாடு, பாசன இயக்கமும் பராமரிப்பும், பாசன அமைப்பு முறையை நிர்மானித்துக் கட்டுதல், சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்காவண்ணம் பாசன மேம்பாடுகளைச் செய்தல், கணிப்பொறிகளை உபயோகித்துப் பாசன வேளாண்மைத் திட்டங்களை வகுத்தல், பாசன மேம்பாட்டின் அவசியம் பற்றி விவசாயிகளுக்கு விவரம் அறியும் வண்ணம் பயிற்சி அளித்தல்.

இச்சிறப்பு அம்சங்கள் நிறைந்த இத்திட்டத்தைப் பற்றி ஆலோசனை வழங்க இசைவு உள்ளதாக அறிவித்த இஸ்ரேல் நாட்டினைச் சேர்ந்த நிபுணர் குழுவினர் திருவாளர்கள் ஹரோஸ்; அப்பாஸ் அலி பேக் மற்றும் அவர்களோடு இணைந்து செயல்பட இருக்கும் உள்நாட்டு நிபுணர்களும் (திரு. தட்டா; திரு கதிர்வேல்) மாண்புமிகு தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்களைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

# செய்திச் சரம்

## இலங்கை மாணவர்களுக்கு...

தமிழ் நாட்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முறையான கடவுச் சீட்டும் அயல்நாட்டின் நுழைவு அனுமதிச் சீட்டும் பெற்றுள்ள இலங்கைத் தமிழ் மாணவர்களும் மற்றும் இலங்கைத்தமிழ் அகதி மாணவர்களும் சேர்ந்து பயில்வதற்கு இடங்களை அனுமதித்துள்ளதுடன் அவர்களின் சேர்க்கை விண்ணப்பங்களைப் பெறுவதற்கான காலக்கெடுவை 15.07.1996-லிருந்து 30 நாட்கள் வரை நீட்டித்தும் அரசு ஆணை வழங்கியுள்ளது என்று கல்லூரிக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்.

## 'தமிழரசில்' சீரிய பணிகள்

'தமிழரசு' இருவார இதழ் மூலமாகத் தமிழக அரசின் திட்டங்கள் பற்றியும், செயல்பாடுகள் பற்றியும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இருவார இதழோடு மட்டுமல்லாமல் சிறந்த செயல்திட்டங்களை முழுமையாக மக்களுக்குக் கொண்டு செல்லும் நோக்கத்துடன் சிறப்பு வெளியீடுகளை ஒவ்வொரு இரு வாரமும் வெளியிடுவதற்குச் செய்தித்துறை முடிவு செய்துள்ளது. அதன் தொடக்கமாக 'வீட்டுக் காய்கறித் தோட்டம்' என்கிற சிறப்பு வெளியீடு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்டது. செய்தித்துறை அமைச்சர் முல்லைவேந்தன் வழங்க, அதை முதலமைச்சர் பெற்றுக் கொண்டு வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களிடம் வழங்கினார். தொழிலாளர் நலத்துறை அமைச்சர் இரகுமான்கான் அவர்கள் உடன் இருந்தார்.

அரசின் அத்தனைத் திட்டங்கள் பற்றியும், அவற்றைப் பெறுவதற்கான வழிமுறைகள் பற்றியும் விரைவில் அனைவரும் பயன் பெறத்தக்க வகையில் கையேடு ஒன்றையும் செய்தித்துறை வெளியிட ஆவன செய்து வருகிறது.

செய்தித்துறை மூலமாக வெளியிடப்படுகிற தொலைபேசிக் கையேடு 12.7.96 அன்று தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்டது. முதன் முறையாக இக்கையேடு தமிழில் அனைத்து முக்கியத் துறைகள், துறைத் தலைவர்கள், நாளிதழ்கள், தொலைக்காட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் தொலைபேசி எண்களைத் தாங்கி வெளிவந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

இந்தக் கையேடு விரைவில் ஆங்கிலத்திலும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும். இந்தச் சிறப்பு வெளியீட்டு நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்களுடன் செய்தித்துறை இயக்குநர் வெ. இறையன்பு, துணை இயக்குநர் இரா. கார்மேகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# 1 முதல் மார்க் மந்திரம்



''ராஜா முதல் மார்க்'' என்று வகுப்பு ஆசிரியர் அறிவித்ததும் மாணவர்கள் அத்தனைப் பேரும் ''கப்சிப்'' என்று ஆகிவிட்டனர்.

கடைசி பெஞ்சில் உட்கார்ந்திருந்த ராஜா துள்ளி எழுந்து ஓடினான். ரேங்க் கார்டை ஆசிரியரிடம் அவன் வாங்கும்போது கைகள் நடுங்கின. சந்தோஷத்தில் அவன் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

பிரம்படி வாங்குவதற்காக மட்டுமே ஆசிரியரிடம் கைநீட்டிய ராஜாவின் கைகளைப் பிடித்து சந்தோஷமாகக் குலுக்கினார் வகுப்பு ஆசிரியர்.

இந்தப் பள்ளிக்கூடத்தில் இதுநாள் வரை அவனுக்கு வழங்கிய பெயர் மக்கு ராஜா.

''என்னடா மக்கு ராஜா பர்ஸ்ட் மார்க்கு வாங்கிவிட்டான்'' என்றனர் பையன்கள்.

இதுநாள் வரை தொடர்ந்து முதல் மார்க் எடுத்து வந்த வசந்தன் ஒடுங்கிப் போய் அமைதியாய் உட்கார்ந்திருந்தான்.

ரேங்க் கார்டை வாங்கிக் கொண்டு திரும்பி நடந்தபோது இறக்கை முளைத்து வானத்தில் பறப்பதைப் போல் உணர்ந்தான் ராஜா.

தாங்கள் காண்பது கனவா நனவா... என்று சில மாணவர்கள் தங்களைத் தாங்களே கிள்ளிப் பார்த்துக்கொண்டனர்.

அன்று மாலைவரை பள்ளிக்கூடத்தில் இதே பேச்சாய் இருந்தது.

மணி அடித்ததும் கையில் ரேங்க் கார்டை எடுத்துக்கொண்டு தலைதெறிக்க வீட்டுக்கு ஓடிவந்தான் ராஜா.

அப்பாவிடம் ரேங்க் கார்டைக் கொடுத்த போது அலட்சியமாக வாங்கிப் பார்த்தார். அவரால் நம்ப முடியவில்லை.

அப்பா, அம்மாவிடம் ரேங்க் கார்டைக் காட்டினார். அம்மா அவனை ஆசையாகத் தழுவி முத்தம் தந்தாள்.

''என் மகன் ராஜா என்னைப்போல் புத்திசாலி'' என்று பெருமையடித்துக் கொண்டார் அப்பா.





''நீங்க யாரை வேணும்னாலும் கேட்டுப்பாருங்க. எம்புள்ள என்னை மாதிரிதான்'' என்றாள் அம்மா.

அதைத் தொடர்ந்து ஒரு அரைமணி நேரத்திற்கு அவர்களுக்குள் ஒரு பொய்ச்சண்டை நடந்தது.

அதற்குள் ராஜா முகம், கைகால் கழுவிக் கொண்டு ரேங்க் கார்டை எடுத்துக்கொண்டு கிளம்பினான்.

''எங்கே கிளம்பி விட்டாய்?'' என்று அப்பா கேட்க, அவன் தன் கையிலிருந்த ஒரு வெள்ளைக் காகிதத்தை அவரிடம் கொடுத்தான்.

அவர் அந்தக் காகிதத்தை வாங்கிப் பார்த்தார். அதில் ஏதோ ஒரு முகவரி எழுதி இருந்தது.

''என்ன... இது... யார் இவர்... ?'' என்றார்.

''நான்... முதல் மார்க் எடுக்கக் காரணமே இவர்தான்... இவர் சொல்லிக் கொடுத்த மந்திரம்தான்'' என்றான்.

''விளக்கமாகச் சொல்லுகிறேன் என்னோடு வாருங்கள்'' என்று சொல்லிவிட்டு வெளியே நடந்தான் ராஜா. அப்பா அவனைத் தொடர்ந்தார்.

ராஜா கதவைத் தட்டினான். சற்று நேரத்தில் கதவு திறந்தது. கதவுக்குப் பின்னால்... அதே மந்திரவாதி.. நீளமான தாடி, சடை முடி, கழுத்தில் ருத்ராட்சக் கொட்டை, நெற்றியில் பட்டையான விபூதி, அதே சிரித்த முகம்.

ராஜா சட்டென்று அவர் கால்களில் விழுந்தான். தாடிக்கார மந்திரவாதி அவனைத் தூக்கினார். அவன் அவர் கைகளில் தனது ரேங்க் கார்டைக் கொடுத்தான்.

''சாமி... நீங்கள் சொல்லிக் கொடுத்த மாதிரியே தினமும் அந்த மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே படித்தேன்.. நான்.. முதல் மார்க் எடுத்திருக்கிறேன்..'' என்று படபடவென்று பேசினான்.

''ரொம்ப சந்தோஷம்'' என்று சொன்னபடி அவனை உள்ளே அழைத்துச் சென்றார், அவர்.

ராஜா, சாமிக்குத் தனது அப்பாவை அறிமுகப்படுத்தி வைத்தான். ராஜாவின் அப்பாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.



ராஜாவையும், அவன் அப்பாவையும் வரவேற்று உட்கார வைத்துவிட்டு - அவர்களுக்குச் சாமியே தேநீர் தயாரித்துக் கொடுத்தார்.

ராஜாவின் அப்பா அவருக்கு நன்றி சொன்னார். தாங்கள் பலமுறை முயன்றும், டியூஷன் வைத்தும் கூட அவனைச் சரியாகப் படிக்க வைக்க முடியாததை விளக்கமாகக் கூறினார் அவன் அப்பா.

''என்ன மந்திரம் சொல்லிக் கொடுத்தீர்கள் அவனுக்கு?'' என்று தயங்கியபடி கேட்டார்.

''அவனையே கேளுங்களேன்'' என்றார் சாமி.

ராஜா தயங்கியபடியே சொல்ல ஆரம்பித்தான்.

''தினமும் காலையில் எழும்போதும் - இரவில் படுக்கும்போதும் சாமி சொல்லிக் கொடுத்த மந்திரத்தை நூறு முறை சொல்லுவேன்... அந்த மந்திரத்தை ஞாபகத்தில் வைத்துக்கொண்டே படிக்க... ஆரம்பித்தேன்.. அதுதான்.. எனக்கு முதல்மார்க் வாங்கிக் கொடுத்தது....''

ராஜா தொடர்ந்து பேசினான் - ''இதுதான் அந்த மந்திரம், நான் முதல் மாணவன்.. நான் முயற்சி செய்தால் முடியாதது எதுவும் இல்லை.. முயற்சி உயர்ச்சி தரும்.. பயிற்சி பாதை காட்டும்...''

ராஜா இதைச் சொல்லி முடித்ததும், ராஜாவின் அப்பா, ''இதுவா மந்திரம்..?'' என்று நம்பிக்கை இல்லாமல் கேட்டார்.

சாமி பேச ஆரம்பித்தார்.

''உங்கள் பையனிடம் எல்லாத் திறமையும் இருந்தது... ஒழுக்கமான பையனாகவும் இருந்தான். அவனிடம் இல்லாமல் இருந்தது தன்னம்பிக்கை மட்டும்தான்...'' ராஜாவின் அப்பா சாமியின் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஒருவன் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும்... அவனிடம் தன்னம்பிக்கை இல்லாவிட்டால் அவனால் வெற்றிக்கனியைப் பறிக்க முடியாது...''

''அதுசரி.. அவனிடம் தன்னம்பிக்கை இல்லை என்று உங்களுக்கு எப்படித் தெரியும்...?''

சாமி கடகடவென்று சிரித்தபடியே ''வகுப்பு ஆசிரியனுக்கு இது கூடவா தெரியாது...? என்று கேட்டபடியே தனது தாடியையும், மீசையையும் இழுத்தார்.

ராஜாவின் வகுப்பு ஆசிரியர்!

ராஜாவுக்கும், அவன் அப்பாவுக்கும் ஆச்சரியம் தாங்க முடியாமல் விழித்தனர்.

''நீங்களா...?'' என்றார் ராஜாவின் அப்பா.

''மந்திரம் எப்படி...? என்றார் வகுப்பு ஆசிரியர்.

''சாமி சொன்ன மந்திரத்தை எப்போதும் நான் மறக்க மாட்டேன்'' என்று உணர்ச்சி வசப்பட்டு சொன்னான் ராஜா.

''முயற்சி செய்தால் முடியாதது எதுவும் இல்லை.. இந்த மந்திரம் ராஜாவுக்கு மட்டுமல்ல. எல்லா மாணவர்களுக்கும் பொருந்தும்'' என்றார் ஆசிரியர்.

– சாம கோடங்கி சங்கரலிங்கம் எழுதிய
''காற்று சிரித்தது'' நூலிலிருந்து.
நன்றி... சிபா அறக்கட்டளை,
98ஏ, கூட்டுறவு நகர், திண்டுக்கல்.





# ஒலிம்பிக் 1996

உலகத் தத்துவ மேதைகளில் ஒருவர் பிளேட்டோ, அவரது சீடர் அரிஸ்டாட்டில், கணிதமேதை பிதகோரஸ், மாவீரன் அலெக்சாண்டர் இவர்களைத் தொடர்ந்து, பல நூற்றாண்டுகளைக் கடந்து சங்கிலித் தொடராய் நாமும் மண்ணில் நடக்கும் மாபெரும் விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக் போட்டிகளைக் கண்டுகொண்டிருக்கிறோம். இந்தப் பெருமையோடு, இன்னொரு தனிச்சிறப்பும் அட்லாண்டாவில் நடக்கும் ஒலிம்பிக் போட்டிக்கு உண்டு. ஆம் நவீன (Modern Olimpics) ஒலிம்பிக் போட்டிக்கு நூறு வயதாகிவிட்டது.

### வளர்ந்து சிறக்கும் வரலாற்று நிகழ்வுகள்

வயது ஏற, ஏற அனுபவமும், ஆற்றலும் அதிகமாவதைப்போல, இந்தப் போட்டிகளிலும் பல சிறப்புகள், விஞ்ஞான வெளிப்பாடுகள் விளைந்து கொண்டேயிருக்கின்றன. விளையாட்டின் தொகையும், விரிந்துகொண்டே போகிறது. சான்றாக, 1896 ஆம் ஆண்டில் பாரன் பியரி டி கூபர்ட்டின் என்பார் ஏதென்ஸ் நகரில் தொடங்கியபோது பங்கு பெற்ற விளையாட்டுகள் 9 மட்டும்தான், வீரர்களோ 311 பேர் மட்டுமே. பங்கேற்ற நாடுகளோ 13 மட்டுமே. ஆனால் இன்று நடக்கும் அட்லாண்டா போட்டியில் 197 நாடுகளிலிருந்து, 10,800 வீரர், வீராங்கனைகள் 30 (26+4) வகையான விளையாட்டுப்பிரிவுகளில் பங்கேற்கின்றனர்.

Atlanta 1996

அதுவும் பெண்களின் எண்ணிக்கை இதற்கு முன்னால் பார்சலோனாவில் (1992) நடந்த போட்டிகளில் கலந்துகொண்ட பெண்களைவிட 40 சதவீதம் பேர் அதிகம். அதாவது 3779 பேர்.

அட்லாண்டாவில் இன்னும் ஒரு சிறப்பும் உண்டு; மதவாத நாடான ஈரான் முதன்முதலாக ஒரு வீராங்கனையை அனுப்பியிருப்பதுதான் அது.

பெண்கள் இவ்வளவு ஆர்வத்தோடு கலந்து கொண்டு, சாதனை செய்யத் துடிக்கிறார்களே, கி.மு. 776 வாக்கில் ஏதன்ஸ் நகரிலுள்ள ஒலிம்பியாஸ் மலையில் முதன்முதலில் தொடங்கப்பட்டதாக வரலாற்றாய்வாளர்களால் கருதப்படும் ஒலிம்பிக் போட்டியில் எவ்வளவு சிறந்த அழகியாய் இருந்தாலும் பெண்களுக்குப் போட்டிகளைப் பார்க்கக்கூட அனுமதியில்லை. கலந்து கொள்வதுபற்றிக் கேட்கவே வேண்டாம்.

எவ்வளவு பெரிய, வீரனாக இருந்தாலும், அவன் அடிமையெனில் போட்டிகளில் பங்கேற்க முடியாது என்கிற நிலைமையிருந்தது. விளையாட்டுகளில் கலந்துகொள்ளும் ஆடவரனைவரும் எவ்வித ஆடையும் அணியக்கூடாது. அவர்கள் கிட்டத்தட்ட 10 மாதங்களுக்குக் குறைவின்றி பயிற்சி பெற்று, பின்னர் ஒலிம்பியாஸ் மலைக்கு வந்து ஒரு மாத காலம் தங்கி போட்டிகளில் பங்கேற்க வேண்டும் என்பது விதிமுறை. அந்தப் போட்டிகள் அனைத்தும் ஜீயஸ் என்கிற ஒரு கிரேக்கத் தேவதைக்குட்படைக்கப்பட்டவையாகத்தான். இருந்திருக்கிறது. ஒலிம்பிக் போட்டிகள் தொய்வின்றி கி.பி. 394 வரை நடந்துவந்து, பின்னர் என்ன காரணத்தாலோ நின்று போய்விட்டது.

### நூறுவயதாகும் இளமை

அதன்பின் வரலாற்றுப்புகழ் தோய்ந்த ஏதென்ஸ் பெருநகரில், இனிமையான ஏப்ரல் மாதத்தில் ஆறாம் நாளன்று, தொடங்கிய இந்த



விளையாட்டுகள் நான்காண்டுகளுக்கு ஒரு முறை எனக் கெடுவைத்து இன்றுவரை தொடர்கின்றன. நூறு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இளமைமாறாமல் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

முதல் உலகப்போரினால் 1916 ஆம் ஆண்டும், இரண்டாம் உலகப்போரினால் 1940- 44 ஆம் ஆண்டுகளிலும் நடக்க வேண்டிய ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவில்லை.

பூமியில் நடைபெறும் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழா இது என்பதால் இப்போட்டிகளைத்தங்கள்நகரங்களில்நடத்திட வேண்டுமென்பதற்காகத் தொடக்கத்திலிருந்தே கடும் போட்டிகள் நிலவிவந்துள்ளன. சான்றாக, 26 ஆவது ஒலிம்பிக் போட்டிகளை நடத்த 1990 ஆம் ஆண்டு ஏதன்ஸ், பெல்கிரேடு, மான்செஸ்டர், மெல்போர்ன் போன்ற நகரங்கள் கடுமையாக முயற்சித்தன. ஆனால், வாய்ப்பு அட்லாண்டாவிற்குக் கிடைத்தது. அதுமுதலே, அமெரிக்காவிலுள்ள அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிகளை மிகச்சிறப்பாக நடத்திட திட்டமிட்டுச் செயல்பட்டது. ஏனென்றால், அமெரிக்கா நாட்டில் இதற்கு முன்னர் 1902 ஆம் ஆண்டில் செயின்ட் லூயிஸ் நகரிலும், லாஸ் ஏஞ்சல் நகரில் 1932 மற்றும் 1984 ஆண்டுகளில் இரண்டு முறையும் இப்போட்டிகள் நடந்துள்ளன. இப்போது நான்காவது முறையாக வாய்ப்பு கிடைத்ததால், உலகமே வியக்கும் வண்ணம் நடத்திட அமெரிக்கா பணிகளை மும்முரமாகச் செய்துள்ளது.

**தலைசிறந்த விளையாட்டரங்கம்**



தடகளப்போட்டிகள், கால்பந்து போட்டிகள் மற்றும் தொடக்கவிழா நிறைவு விழா நிகழ்ச்சிகள் நடத்த 85 ஆயிரம் பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய பிரம்மாண்டமான விளையாட்டரங்கம் நவீன வசதிகளுடன் கட்டப் பட்டுள்ளது. இது தவிர, வாட்டர் போலோ விளையாட்டரங்கு, சைக்கிள்பந்தய அரங்கம், போன்றவை புதிதாகக் கட்டப்பட்டுள்ளன.



வீரர், வீராங்கனைகள், அலுவலர்கள் கிட்டத்தட்ட 16 ஆயிரம் பேர் தங்கக்கூடிய ஒலிம்பிக் கிராமம் அனைத்து நவீன வசதிகளுடன் குளிர்பதன வசதியுடன் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.

இத்துடன் 21 ஏக்கர் நிலபரப்பில் அமைக்கப்பட்டுள்ள பசுமை நிலவும் ஒலிம்பிக் பூங்கா, மலர்வனம் நிறைந்த ஏதென்ஸ் நகரை நினைவுப் படுத்தும். குளிர்பதனம் செய்யப்பட்ட கூடாரங்கள், விருந்தினர்கள் மற்றும் வீரர்கள் தங்க அமைக்கப்பட்டுள்ளன.

அறுசுவை, மணங்கமழும் அட்லாண்டா சமையல்!

நிறத்தால், மொழியால், இனத்தால், நிலத்தால் வேறுபட்ட மக்கள் கூடுகிற இவ்விளையாட்டு விழாவில் கலந்து கொள்கிறவர்களுக்கு வாய்க்கு ருசியாகச் சமைத்து உணவு வழங்க சர்வதேச உணவு வகைகளைத் தயாரிக்கும் சிறப்புப் பெற்ற 1000 சமையற்காரர்கள் 24 மணிநேரமும் கிட்டத்தட்ட 500க்கும் மேற்பட்ட உணவு வகைகளைச் சமைத்துப் பரிமாற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் 26 மிகப் பெரிய இரும்புப் பெட்டிகளிலிருந்து உணவுப் பொருள்கள் கொண்டுவரப்படுகின்றன.

**இயற்கையை விஞ்சும் செயற்கை நீரூற்றுகள்**

18 கி. மீட்டர் சுற்றளவுக்குச் சுற்றுச்சுவர்கள் அமைக்கப்பட்டு அக்கிராமத்துள் வெப்ப நிலையைச் சீர்படுத்துவதற்காகப் பார்க்குமிடங்களெல்லாம் செயற்கை நீரூற்றுகள் அமைக்கப்பட்டுள்ளன.



இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கழிப்பிட வசதிகள், 192 மக்கள் நல மேம்பாட்டு மையங்கள், பாதுகாப்பிற்காக 35 ஆயிரம் காவலர்கள் 2000 காவல்







அலுவலர்கள் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சொகுசுப் பேருந்து வசதிகள் செய்யப்பட்டு, அட்லாண்டா நகரம் மண்ணில் முளைத்த மாபெரும்சொர்க்கமாகத்திகழ்கிறது.

**சோர்வின்றித் தங்க, பார்வையாளர்களுக்கு இடவசதி**

பார்வையாளர்களுக்காக 30 ஆயிரம் தனியார் வீடுகள் வாடகைக்குக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதில் 1000 பங்களாக்களும், 1500 அடுக்குமாடி குடியிருப்புகளும் அடங்கும். 200 க்கும் மேற்பட்ட ஓட்டல் வசதிகளும் உண்டு.

நகரிலுள்ள ஓட்டல்களில் ஜப்பானியர்கள் 28.1 சதவீதமும், ஜெர்மானியர்கள் 22.8 சதவீதமும் பிரெஞ்சு நாட்டினர் 15.8 சதவீதமும் ஆங்கிலேயர்கள் 14 சதவிதத்தினரும், ஏற்கெனவே ஓட்டல்களில் முன்பதிவு செய்து வைத்துள்ளதாக ஒரு கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

**தங்கத்திற்கு இணையான தண்ணீர் விலை**

அனுமதிபெற்ற தண்ணீர் விற்பனையாளரான 'கிறிஸ்டல் ஸ்பிரிங்ஸ்' எனும் நிறுவனம் 16 அவுன்ஸ் தண்ணீர்கொண்ட புட்டி ஒன்றின் விலை 95 ரூபாய் என விற்றுப் பெரும்பணம் பண்ணுகிறது.

**இருந்த இடத்திலிருந்து விளையாட்டு விருந்து**

1936 ஆம் ஆண்டு ஹிட்லர் 20 சின்னத் திரைகளை பெர்லின் நகரெங்கும் அமைத்து ஒலிம்பிக் போட்டிகளை விளையாட்டரங்குக்கு வெளியே மக்களுக்குத்திரையிட்டுக்காட்டினார். அதனைத் தொடர்ந்து செயற்கைக்கோள் துணை கொண்டு உலகெங்கும் நேரடி ஒளிபரப்புச் செய்து மக்களுக்கு விளையாட்டுக் காட்சிகளை வீடுகளுக்கு எடுத்துச் சென்றார்கள்.



அட்லாண்டா போட்டிகளை 3.5 மில்லியன் மக்கள் தொலைக்காட்சி வழியே கண்டுகளிக்கிறார்கள். இது உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் என்கிறார்கள்.



இதற்கான அனுமதியை என்.பி.சி நிறுவனம் 456 மில்லியன் டாலர் கொடுத்து குத்தகைக்கு எடுத்துள்ளது. வேடிக்கை என்னவெனில் 165 மணிநேரத்திலேயே 650 மில்லியன் டாலர் அளவுக்கு விளம்பரம் மூலமே சம்பாதித்துவிட முடியும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

**அறிவியல் தொழில் நுட்பம் செறிந்த அட்லாண்டா**

அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிகளில் இதுவரை இல்லாத அளவுக்கு விஞ்ஞானத் தொழில் நுட்பம் கையாளப்பட்டுள்ளது. மராத்தான் ஓட்டத்தில் பங்கேற்கும் வீரர்களின் காலணிகள் லேஸ்களில் மைக்ரோ சிப்ஸ்' துண்டுகள் இணைக்கப்பட்டு ஓட்டத்தையும் நேரத்தையும் மிகத்துல்லியமாகக் கணக்கிடப்படுகிறது.

தடகளப்போட்டிகளில் லேசர் ஒளிக்கதிர் மூலம் வெற்றியாளர்கள் தேர்வு செய்யப் படுகிறார்கள். அதாவது ஒரு நொடிக்கு 100 புகைப்படங்கள் எடுத்துத்தள்ளும் கேமராக்கள் பயன்படுத்தப்படுகின்றன. விஞ்ஞானத்தின் முழுப்பரிமாணமும் ஒருங்கே பயன்படுத்தப் படும் உன்னதம் அட்லாண்டாவில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

உலகளவில் பேசப்படும் அதிகவேக ஓட்டக்காரர் கார்ல் லூயிஸ், மைக்கேல் ஜான்சன், ஜாக்கி கெயினர் ஆகியோர் கலந்து கொள்ளும் அட்லாண்டாவில் 77 பேர் அடங்கிய இந்திய அணி 13 விளையாட்டுகளில் கலந்து கொள்கிறது.



# ஆசிரியர் மடல்

பாக்கிய லட்சுமி, சௌபாக்கியம், மேழிச் செல்வம், இன்காம், ஆரோக்கிய மார்க்கம், மெட்ராஸ் ஹெல்த் எஜுகேஷன், சிரணி (கிராம நலம்) ஆகிய 7 பத்திரிகைகளை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டதுதான் உங்கள் கரங்களை அலங்கரித்திடும் 'தமிழரசு'.

1.7.1970ல் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் திங்களிருமுறை ஏடாகத் தொடங்கப்பட்டது; இப்போது 27 ஆம் ஆண்டில் நடைபோட்டுக்கொண்டிருக்கிறது. அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள் பற்றிய விளக்க ஏடாக மட்டுமல்ல; இலக்கிய மணம் பரப்பும் இனிய ஏடாகவும், தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடும் தரம்மிக்க ஏடாகவும் திகழ்கிறது. இப்போது, புதிய அரசு மலர்ந்தபின் 'தமிழரசு' பெற்றுள்ள சிறந்த பல மாற்றங்களை பிற ஏடுகளும் கூட பெரிதும் போற்றிப் புகழ்ந்து எழுதுகின்றன.

ஏறக்குறைய 70க்கும் மேலான வெண்பாப் போட்டிகள், விருத்தப்பாப் போட்டிகள், சிறுகதைப் போட்டிகளெல்லாம் நடத்தி வாசகர்களுக்குப் பரிசு பல வழங்கிப் பாராட்டிய பெருமை 'தமிழரசு'க்கு உண்டு. மீண்டும் அத்தகைய செயல்பாடுகளை நடைமுறைப்படுத்த எண்ணி, கவிதைப்போட்டியொன்று 'இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்ற தலைப்பிலே அறிவித்தோம். 15.7.96 அதற்கான கடைசித் தேதி என்றும், 16 அடிகளுக்குள் - மரபுக் கவிதையோ, புதுக்கவிதையோ எழுதலாம் என்றும் தெரிவித்தோம்.

நூற்றுக்கணக்கான கவிதைகள் வந்து குவிந்திருக்கின்றன. அதில் பெரும்பாலான தமிழன்பர்கள் - இருந்த அரசை இகழ்ந்தும், இருக்கும் அரசைப் புகழ்ந்துமே வரம்புகடந்த அளவுக்கு எழுதியுள்ளனர். அரசியல் இல்லாமல் அரசு இல்லைதான்; அதற்காக முழுக்க முழுக்க அரசியலாகவே இருந்தால் எப்படி?...

கண்மூடிப்பழக்கமெல்லாம் மண்மூடிப்போகச் செய்வதாக - சீர்திருத்தக் கருத்துக்களுக்கும் சுயமரியாதை எண்ணங்களுக்கும் நடைபாவாடை விரிப்பதாக - புரட்சிகரமான நினைவுகள் பூத்திடச் செய்வதாக - தமிழ் வளர்ச்சிக்கும், அதன் அடிப்படையில் பாடுபடும் அரசுக்கும், தக்க பல ஆலோசனைகளுக்கு வித்தூன்றுவதாக எழுத்தாளப் பெருமக்களின் எழுத்தோவியங்கள் இனியாவது மலரட்டும்!





பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23







# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027
ஆவணித் திங்கள்: 1
மலர்: 27 இதழ்: 4
16.8.1996
விலை: ரூ. 3

## இந்த இதழில்

காவிரி நீர் பேச்சு வார்த்தை 2
இன்று புதிதாய்ப் பிறந்தோம் - கவிதை 6
கலைவாணர் நினைவுகள் 8
சிரிப்பின் சக்தி 9
பட்டிக்காட்டுப் பையன் பள்ளி செல்கிறான் - சிறுகதை 17
வேலை கிடைக்கும் 30
நீர் மேலாண்மை 33
வெண்கலம் வென்ற இந்தியத் தங்கம் 42
யாருண்டு இனிமேலே உன்போல் நல்லோன்! - கலைஞரின் கவிதை 46
ஆசிரியர் மடல் 47

214609

பத்மவாசன்

# காவிரி நதிநீர்

## முதல்வர் கலைஞர் — கர்நாடக முதல்வர்

## பேச்சுவார்த்தை

காவிரி நீர்ப் பங்கீடு பிரச்சினைக்குத் தீர்வுகாண அமைக்கப்பட்ட நடுவர்மன்றம், கர்நாடக அரசு தமிழ்நாட்டுக்கு ஆண்டுதோறும் 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று சில ஆண்டுகளுக்கு முன் இடைக்காலத் தீர்ப்பு ஒன்றைக் கூறியது.

ஆனால் இடைக்காலத் தீர்ப்பை ஏற்று, காவிரியில் தண்ணீர் திறந்துவிட கர்நாடக அரசு மறுத்து வருகிறது.

இந்த ஆண்டு, காவிரியில் போதிய அளவு தண்ணீர் திறந்துவிடப்படாததால் மேட்டூர் அணையில் மிகக் குறைந்த அளவே தண்ணீர் உள்ளது.

இதைத் தொடர்ந்து நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி, காவிரியில் தண்ணீர் திறந்துவிடும்படி தமிழக அரசு வற்புறுத்தியது. அதன்பேரில் கர்நாடக அரசு 5 டி.எம்.சி. தண்ணீர் மட்டும் திறந்துவிட்டது.

ஆனால், மேலும் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று தமிழக அரசு வற்புறுத்தி வருகிறது.

ஏற்கெனவே, நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல் படுத்தும்படி கர்நாடக அரசுக்கு உத்தரவிடக்கோரி தமிழக அரசு உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து இருந்தது.

இந்த வழக்கை, விசாரித்த உச்சநீதி மன்றம் ''காவிரி நீர் பிரச்சினைக்கு இடைக்காலத் தீர்வு ஒன்றைக் காண தமிழ்நாடு, கர்நாடக மாநில முதலமைச்சர்கள் விரைவில் பேச்சு வார்த்தை நடத்தி சுமூகமான உடன்பாடு ஒன்றை எட்ட வேண்டும்'' என்று யோசனை தெரிவித்தது.

இந்த யோசனையை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும் மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் ஜே.எச். பட்டேலும் வரவேற்றனர்.

உச்சநீதிமன்றம் தெரிவித்த இந்த யோசனைப்படி தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும் கர்நாடக முதல்வர் பட்டேல் அவர்களும் 5.8.96 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினர்.

தமிழ்நாடு சார்பில் முதல்வர் அவர்களுடன் மாண்புமிகு மத்திய தொழில்துறை அமைச்சர் திரு. முரசொலிமாறன், மாண்புமிகு தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரை முருகன், மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. ஆலடி அருணா, தலைமைச்செயலாளர் திரு. கே.என். நம்பியார் மற்றும் உயர் அலுவலர்களும், கர்நாடக முதல்வருடன் மாண்புமிகு துணை முதல்வர் திரு. சித்தராமையா, மாண்புமிகு பாசனத்துறை அமைச்சர் திரு. நாகே கவுடா, சட்டத்துறை அமைச்சர் நாளையா மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தை முடிந்ததும் தமிழக சட்டப் பேரவையில் முதல்வர் கலைஞர் அவர்கள் பேச்சு வார்த்தை குறித்த அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் முதல்வர் அவர்கள் கூறியிருந்ததாவது:-





'உச்ச நீதிமன்றத்தின் விருப்பத்திற்கேற்ப நானும், கர்நாடக முதலமைச்சர் அவர்களும் 5.8.96 அன்று காலையில் தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினோம். இந்தப் பேச்சுவார்த்தை பரஸ்பரம் நட்புணர்வோடு நடைபெற்றது. இதன் விளைவாக, உடனடி இடைக்கால நிவாரணமாக தமிழகம், கர்நாடகம் ஆகிய இரண்டு மாநில விவசாயிகளுக்கும் பாதகம் ஏற்படாத வகையில் காவிரி தண்ணீரை இரு மாநிலங்களுக்கும் பயன் அளிக்கும் வண்ணம் பகிர்ந்து உபயோகித்துக் கொள்வதென்றும் இருதரப்பினரின் தேவைகளையும் ஈடு செய்யும் வகையை மனதில் கொள்வதென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கர்நாடக மாநிலத்திற்கு தொடர்ந்து இது பற்றிப் பேச கர்நாடக மாநில முதலமைச்சர் எனக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். அந்தச் செய்தியையும் இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்து அந்தப் பயணம் ஆகஸ்ட் 15ஆம் தேதிக்குப் பிறகு இருக்கும் என்பதையும் அறிவிக்கின்றேன்.

> "...இரு மாநில விவசாயிகளுக்கும் பாதகம் ஏற்படாமல் காவிரி நீரைப் பகிர்ந்து கொள்ள முடிவு ஏற்பட்டது..."

முதல்வர் இந்த அறிக்கையைப் படித்ததும் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இந்த அறிவிப்பை வரவேற்றும் பாராட்டியும் உரையாற்றினர்.

**திரு. சொக்கர் (த.மா.கா.) :** மிக முக்கியமான இந்தப் பிரச்சினையில் உரிய அணுகுமுறையைக் கடைப்பிடித்து தமிழக முதலமைச்சரும், கர்நாடக முதலமைச்சரும் பேசி இரு மாநிலத்தினுடைய விவசாயிகளும் பாதிக்கப்படாத வண்ணம் முடிவெடுத்தமைக்காக தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பில் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அப்துல் லத்தீப் (இந்திய தேசிய லீக்) :** சொக்கர் அவர்கள் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பாக நன்றி தெரிவித்துக்கொண்டார். நான் என்னுடைய கட்சியின் சார்பாக மட்டுமல்ல இந்த அவையிலே இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளின் சார்பிலும் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.





# இன்று புதிதாய்ப் பிறந்தோம்



ஏழில்சிந்தும் இயற்கையிலே இன்பம் பாடி
என்றைக்கோ பிறந்திங்கே வாழு கின்றோம்.
வழியறியா ஏழைகளை வாட்டு கின்ற
வறுமையினைக் கொடுமையினைக் களைந்து விட்டு
விழிபோன்ற மேலான நன்மை செய்து
விரிவான வசதிகளை விரிவாய் ஆக்கிக்
கழிபேரு வகையிலே நாம் வாழ்வ தற்குக்
கவினார்ந்த புதிதான உலகு செய்வோம்.

ஊற்றெடுக்கும் இன்னமுதாம் பாக்கள் தம்மை
உள்ளத்தே முறையாக வரம்பு கட்டி

தமிழக
கவிதைப்
போட்டி
முதல் பரிசுக்
கவிதை







ஆற்றொழுக்காய் அனைவரையும் கேட்க வைத்தே
ஆற்றலையும் அறத்தினையும் அதனிற் காட்டி
நாற்றிசையும் நல்லிசையைப் பரப்பி நாட்டி
நற்றமிழர் வாழ்வினையும் உயர்த்தி விட்டால்
வீற்றிருப்போம் வல்லவராய் வீறு கொண்டே!
விளங்கிடுவோம் எந்நாளும் புதுமை யோடு.

நன்னெறியை நவின்றிடுமே நல்லோர் நெஞ்சில்
நற்கருத்தைப் புகுத்திடுமே நல்லோர் நாவில்
புன்னெறியைக் கடித்துரைக்கும் கல்லார் மாட்டு
புகழ்க்கொடையை விரித்துரைக்கும் கயவர் மாட்டு
பண்னெறியும் உணர்ந்தோரும் பகரு மாறு
பண்பாட்டை ஏற்றத்தைப் பாது காக்கும்
மன்னெறியாம் புத்தாட்சி காண வேண்டி
மகிழ்வோடு நாமின்று புதிதாய்ப் பிறந்தோம்.

புலவர் .வீ. வீராச்சாமி,
எம்.ஏ.எம்.எட்.
அரசு உயர்நிலைப்பள்ளி,
உறங்கான்பட்டி 625 109
மதுரை மாவட்டம்

இக் கவிதை ரூ. 200/-
பரிசு பெறுகிறது.





**திரு. திருப்பூர் சுப்பராயன் (இந்திய கம்யூனிஸ்ட்) :** நீண்ட காலமாக சிக்கலாக இருக்கக்கூடிய ஒரு பிரச்சினையில் ஆக்கப் பூர்வமான அணுகுமுறையை மேற்கொண்டிருக் கின்ற முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. தாமரைக்கனி (அ.இ.அ.தி.மு.க) :** காவிரி நீர்ப் பிரச்சினையில் கர்நாடக அரசும் தமிழக அரசும் தமிழக முதலமைச்சர் அவர்களும் பேச்சுவார்த்தை நடத்துவது நல்லதுதான். பேச்சுவார்த்தை நடுவர் மன்றத் தீர்ப்பின் அடிப்படையிலேதான் இருக்க வேண்டும். தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழினத் தலைவர் அவர்கள் தமிழ் நாட்டிற்கு நல்லது செய்வார் என்றே நினைக்கிறோம். நிச்சயம் அது நடக்கத்தான் செய்யும். இந்தப் பேச்சு வார்த்தை வெற்றி பெற அனைத்திந்திய அண்ணா தி.மு.க சார்பில் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***"...தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழினத் தலைவர் அவர்கள் தமிழ் நாட்டிற்கு நல்லது செய்வார் என்றே நினைக்கிறோம். நிச்சயம் அது நடக்கத்தான் செய்யும் ..."***

**திரு. தீரன் (பா.ம.க.):** ஏற்கனவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நடுவர் மன்றத் தீர்வுக்கு எந்த வகையிலும் இடைஞ்சல் இல்லாத வகையில் பேச்சுவார்த்தை நடத்து வோம் என்று கூறியபடி, இன்றைக்கு இரண்டு மாநில விவசாயிகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலே இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வு காணப்படும் என்று அறிவித் திருக்கின்றார். எனவே அனைத்துக் கட்சிகள் சார்பாக மட்டுமல்ல, தமிழகத்திலே உள்ள அனைத்து மக்கள் சார்பாகவும் நன்றியையும் பாராட்டுக்களையும் இந்தப் பேச்சுவார்த்தை சிறப்பாக வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

**திரு. எல். சந்தானம் (பார்வர்டு பிளாக்):** தமிழகத்தின் முதல்வர் சோழ மண்டலத் தினுடைய விவசாயப் பெருங்குடி மக்களின் இதயத்தைத் தொடுகின்ற அளவுக்கு கர்நாடக மாநில அரசோடு சிறந்ததொரு பேச்சுவார்த்தை நடத்தி தமிழக மக்களுக்கெல்லாம் தித்திப்பான செய்தியைத் தெரிவித்திருக்கின்றார்கள். அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி சார்பில் உளப்பூர்வமான பாராட்டுக்களை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி (மார்க்சிஸ்ட்) :** காவிரி நீர்ப் பிரச்சினை சம்மந்தமாக இரண்டு மாநில விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் நம் மாநிலத்தின் முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே மிக ஆழமாகத் தலையிட்டு தமிழக மக்களுக்கு உரிய பாதுகாப்பைத் தரும் வகையில் சுமூகமான பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். இந்தப் பேச்சு வார்த்தை வெற்றி பெற வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே வாழ்த்துகிறேன்.

**டாக்டர் . கிருஷ்ணசாமி (தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பு):** தமிழக மக்களின் நலன்கள் சிறிதும் பாதிக்காதவகையிலே இன்று தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களும் கர்நாடக முதல் அமைச்சர் அவர்களும் நடத்திக் கொண்டிருக்கும் பேச்சு வார்த்தை வெற்றி பெற தேவேந்திர சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெங்கடசாமி (ஜனதா தளம்) :** தமிழக முதலமைச்சர் அவர்கள் நேரத்தோடு எடுத்த நல்ல முடிவிற்காகவும் தேவையான முடிவினை தேவையான நேரத்திலே எடுத்தமைக்காகவும் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ●

கலைவாணர் நினைவுகள்

**மயே மதுரம்!**

கலைவாணர் வீட்டுக்கு ஒரு தமிழ்ப் புலவர் வந்தார். கலைவாணர் தம்பதிகள் புலவரை வரவேற்று உபசரித்தனர். கலைவாணரின் துணைவியார் மதுரம் புலவருக்கு ம கொண்டு வந்து கொடுத்தார். புலவர் மயைச் சுவைத்துப் பருகினார். ம எப்படி யிருக்கிறது? என்று கேட்டார் கலைவாணர். மயே மதுரம்! என்று சுவையோடு கூறினார் புலவர்.





# தமிழக விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு உதவ முடியுமோ அந்த அளவுக்கு உதவுவோம்

## கர்நாடக முதல்வர் ஜே.எச். பட்டேல் பேட்டி

சென்னையில் காவிரி நீர் பேச்சுவார்த்தை முடிந்ததும் மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு. ஜே.எச்.பட்டேல் செய்தியாளர்களிடம் பேசினார்.

''நானும் தமிழக முதல்வரும் மனம் திறந்து பேசினோம். பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இரு மாநில விவசாயிகளின் நலன்களும் பாதிக்காத வகையில் பேச்சு வார்த்தை இருக்க வேண்டுமென்பதை இருவரும் உணர்ந்திருக்கிறோம்.

இது சம்பந்தமாக மேற்கொண்டு பேச்சு வார்த்தை நடத்த தேவை ஏற்பட்டால் நான் தமிழக முதலமைச்சரை இங்கு வந்து சந்திப்பேன் அல்லது அவர் அங்கே வந்து பேச்சுவார்த்தை நடத்துவார்.

பேச்சுவார்த்தை ஒரு வாரத்தில் நடைபெறும். 5.8.96 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையின்போது தமிழக விவசாயிகளுக்கு, தண்ணீர் வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் கேட்டார். தண்ணீர் தர நாங்கள் ஒத்துக் கொண்டிருக்கிறோம். எவ்வளவு தண்ணீர் தருவது, எப்போது தருவது என்பது பற்றி பேசி முடிவு செய்யப்படும். இரு தரப்பினரும் பயன் அடையும் வகையில் இந்த முடிவு இருக்கும்.

***"...தமிழக விவசாயிகளின் நலன் நிச்சயம் பாதுகாக்கப்படும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்பதில் இருவரும் அக்கறையுடன் இருக்கிறோம்..."***

தமிழக விவசாயிகளின் நலன் நிச்சயம் பாதுகாக்கப் படும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென் பதில் இருவரும் அக்கறை யுடன் இருக்கிறோம்.

தமிழ்நாட்டில் சம்பா பயிருக்கு ஏற்கனவே நாங்கள் ஐந்து டி.எம்.சி தண்ணீர் திறந்து விட்டிருக்கிறோம். தமிழக விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு உதவவேண்டுமோ அந்த அளவுக்கு உதவுவோம்.

நாங்கள் இரு மாநில விவசாயிகள் நலன் பற்றித்தான் பேசினோம். நடுவர் மன்றத் தீர்ப்பு பற்றிப் பேச வில்லை.''

●

**அட்டைப் பட விளக்கம்**

*முதல் அட்டை - நீண்டகால காவிரி நதிநீர் பிரச்சினைக்கு நிலையான தீர்வுகாண சென்னையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடன், மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு.ஜே.எச். பட்டேல்.*

*இரண்டாம் அட்டை - 31.7.96 அன்று சென்னையில் மூன்று சமூக விரோதிகளை வீழ்த்திய காவல்துறை உயர் அலுவலர்கள் காவல்துறை தலைவர் திரு. கே.கே. ராஜசேகர நாயர் தலைமையில் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்துப் பாராட்டு பெற்றார்கள்.*

*நான்காம் அட்டை - திரைப்பட உலகில் சிரிக்க வைத்து சிந்திக்க வைத்த நகைச்சுவை அமரர். கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் நினைவு (30.8.1957)*

# கலைவாணர் நினைவுகள்

சேலத்தில் அவர் தங்கியிருந்த விடுதிக்கு என்னை அழைத்துக்கொண்டு காரில் புறப்பட்டார். என்னுடன் உடுமலை நாராயண கவிராயரும், அவரது மாணவர் செல்லமுத்துவும் இருந்தார்கள். ''மணமகள்'' வசனம் எழுத எவ்வளவு பணம் வேண்டும்?'' என்று கலைவாணர் என்னைக் கேட்டார். ''எனக்குத் தெரியாது'' என்று பதில் சொன்னேன். என்னைச் சொல்லுமாறு கட்டாயப்படுத்தினார். நான் கடைசி வரையில் பணம் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இறுதியாக அவர் ஒரு துண்டுச் சீட்டில் ஏதோ எழுதி அதைச் சுருட்டி மடக்கி என் கையிலே கொடுத்தார். நான் அதை பிரித்துப் பார்க்காமலேயே கையில் வைத்துக்கொண்டு இருந்தேன்.

| 00001 |
| --- |
| 10000 |

''பிரித்துப் பாருங்கள்'' என்று என்னைப் பிடிவாதப்படுத்தினார். துண்டுத் தாளைப் பிரித்துப்பார்த்தேன். அதில், நாலு பூஜ்யங்கள் எழுதபட்டிருந்தன! எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'என்ன, நாலு பூஜ்யங்கள் எழுதிக் கொடுத் திருக்கிறாரே?' என்று சற்றுத் திகைத்தேன். அவர் என்னைப் பார்த்து களங்க மற்ற புன்னகை புரிந்துகொண்டிருந்தார். நான் அதில் ஏதோ நகைச் சுவை இருக்கிறது என்பதை மட்டும் புரிந்து கொண்டு, ''சரி, சம்மதம்' என்று கூறினேன். அவர் விழிகளை அகலமாக ஆக்கிக் கொண்டு, 'அப்படியா, சம்மதமா?'' என்று ஆவலோடு கேட்டார். நான் மறுபடியும், ''ஆமாம், சம்மதம்தான்!' என்று சொன்னேன்.

கலைவாணர், கண்களைக் கேலியாகச் சிமிட்டிக் கொண்டே என்னை மறுபடியும் பார்த்து, ''நான்கு பூஜ்யங்கள் போட்டிருக்கிறேன். அதற்குச் சம்மதமா என்று கேட்கிறேன். 'ஆமாம்' என்கிறீர்கள். நான் நம்பலாமா?'' என்று கேட்டார். ''ஒத்துக் கொண்டுதான் ஆமாம் என்கிறேன்.'' என்று பதில் சொன்னேன்.

''சீட்டைக்கொடுங்கள்'' என்று வாங்கிக் கொண்டார்.

''இதில் 'ஒன்று எங்கே போடுவது? முன்னாலா? பின்னாலா?'' என்று கேட்டார். ''எங்கு வேண்டுமானாலும் போடுங்கள் என்றேன். அவர் நான்கு பூஜ்யங்களையும் கடந்து, கடைசியாக ஒன்று என்று எழுதினார். அதாவது 00001 என்று எழுதப்பட்ட சீட்டை என்னிடம் கொடுத்தார். சிரித்துக் கொண்டே, ''சரி தானா?'' என்றார். நான் சரிதான் என்று கூறிய வாறு அவர் கொடுத்த சிறிய சதுரமான சீட்டைத் தலைகீழாக மாற்றிக் காட்டினேன். அப்படி மாற்றியபோது 1 முதலிலும், நான்கு பூஜ்யங்கள் அதனைத் தொடர்ந்தும் 10,000 என்று, காட்சியளித்தது. அதைப் பார்த்துவிட்டுக் கலைவாணர், ''ஆக, என்னையே ஏமாற்றி விட்டீர்களே!'' என்று வயிறு குலுங்கச் சிரித்தார். ●

**கலைஞரின்**
**நெஞ்சுக்கு நீதி நூலிலிருந்து**
**(பக்கம் : 140)**

> **அறிவுக்கு இந்த வையகம் எப்போதுமே தன் வணக்கத்தைச் சொல்லும். திறமைக்கு ஆதரவை தரும். தூய உள்ளமதை வரவேற்கும்.**
> **- இங்கர்சால்.**








ஆர். இரத்தினம்

'நகைச்சுவை உணர்ச்சி மனிதனுக்குக் கிடைத்ததனிவரம்''. சிரிப்புமனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ள மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். உலகிலுள்ள ஜீவராசிகளில் மனிதன் ஒருவனால்தான் சிரிக்க முடியும். நகைச் சுவையை உணரமுடியும். அவனை மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும் சிரிப்பு. மகிழ்ச்சியான உணர்ச்சியை ஏற்படுத்தி, உடலில் ஆரோக்கியமான இரசாயன மாற்றத்தை ஏற்படுத்துகிறது இது. கசப்பு உணர்ச்சிகளான கோபம், பயம், வருத்தம், குற்ற உணர்வு முதலியன உடலில் எதிர்மறையான இரசாயன மாற்றத்தை ஏற்றபடுத்தக்கூடியது. சிறிது நேரம் கூட விளையாட்டின்றி, எப்பொழுதும் வேலையென்று இருந்தால் ஒருவரை வாழ்க்கையில் சுவாரஸ்யமில்லாதவனாக ஆக்கிவிடும். விளையாட்டும் நகைச்சுவையும் ஒருவரின் புத்தியைக் கூர்மைப்படுத்தி அவருடைய வாழ்க்கைக்குப் பிரகாசத்தையும், ஆரோக்கியத்தையும் கொடுக்கும்.



நகைச்சுவையை 3 விதமாகப் பிரிக்கலாம். 1. மற்றவரை மட்டம் தட்டிச் சிரிப்பது. 2. மற்றவரைத் திருப்திப்படுத்த சிரிக்க வைப்பது, சிரிப்பது. 3. நாமாக சந்தோஷப்பட்டுச்சிரிப்பது. மூன்றாவது சிரிப்புத்தான் நல்ல பலனைக் கொடுக்கும்.

## இறுக்க நிவாரணி

ஒரு நாளில் ஒரு முறையேனும், வயிறு குலுங்கச் சிரித்தால் மருத்துவரிடம் போகவே தேவையில்லை. வயிறு குலுங்கச் சிரிப்பது உடலைக் குணப்படுத்த உதவுகிறது. வயிறு குலுங்கச் சிரிக்கும் பொழுது உடல் நிமிர்ந்து, விரிந்து இருப்பதால் நுரையீரல் அதிகப் பிராண வாயுவை உள்ளிழுக்கின்றது. வயிற்றிலுள்ள

உறுப்புகள்அழுத்தத்திலிருந்து விடுபடுவதுடன், அவைகளுக்கு அதிகப் பிராண வாயு உள்ள இரத்தம் கிடைக்கிறது. மேலும் உறுப்புகளில் அதிர்வு ஏற்பட்டு அதனால்அதிக இரத்தம் செலுத்தப்படுவதுடன் வயிற்று உறுப்புகளைப் பிடித்துக் கசக்கி விடுகிறது. வயிற்று உறுப்புகள் நன்றாக வேலை செய்து உணவு ஜீரணிக்க உதவுகிறது. இந்தச் சிரிப்பினால் சுவாசம் அடிவயிற்றிலிருந்து எழும்புகிறது. இறுகிய தசைகள் சிரிப்பினால் தளர்கின்றன. இது ஒரு சிறந்த இறுக்க நிவாரணியாகும்.

முகத்தின் தசைகளைச் சிரிப்பு தளரச் செய்கிறது. முகத்தைச் சுளிப்பதற்கு உபயோகிக்கும் தசைகளை (72) விடச் சிரிப்பதற்கு ஒரு சில தசைகளையே (14) நாம் உபயோகிக்கிறோம். இறுக்கத்தினால் நமக்கு ஏற்படும் தலைவலியைக் கூட மருத்துவர்கீள் நம்மைச் சிரிக்கச் சொல்லி குணப்படுத்திவிடுகிறார். தசை வீக்கங்கள், இரணம், புண், கட்டி முதலியவைகள் குணமடையச் சிரிப்பு உதவி செய்வதை மருத்துவச் சோதனையில் கண்டு பிடித்திருக்கிறார்கள். சிரிப்பும், நகைச்சுவையும் வலியைப் போக்குவது எப்படியென்றால் அவை நம்முடைய கவனத்தை வலியுள்ள இடத்தை விட்டுத் திருப்புவதனாலாகும்.

வலியுள்ள இடங்களில்தசைகளின் இறுக்கம் ஏற்படுகிறது. அந்த இடத்தில் நம்முடைய கவனம் அதிகரிக்க, அதிகரிக்க அங்குள்ள தசைகள் மேலும், மேலும் இறுகி, வலியும் அதிகரிக்கின்றது. நம்முடைய கவனத்தை வலியுள்ள இடத்திலிருந்தும் குறைக்கும் போது, தசைகள் தளர்வதினால், வலியிலிருந்து நிவாரணம் கிடைக்கிறது. நார்மன் கசின்ஸ் Saturday Review என்ற பத்திரிக்கையின் பதிப்பாசிரியர். ''வியாதிகளின் உடற்கூறு'' என்ற அவருடைய புத்தகத்தில், அவருக்கு வந்த இரத்தசம்பந்தமான, கொடூரமான வியாதியினால் ஏற்பட்ட உடல் வலியைச் சிரிப்பின் மூலமாகக் குறைத்து, அந்தத் தீராத வியாதிக்கு எப்படி நிவாரணம் கண்டார் என்பதை விளக்கியுள்ளார். மருத்துவமனைக்குச் சில கோமாளிகள் சென்று அங்கு வியாதியுள்ள குழந்தைகள், பேசாது மௌனம் சாதிப்பவர்கள், இவர்களின் வியாதியைப் போக்க உதவி யிருக்கிறார்கள். வியாதியைக் குணப்படுத்தும் குணம் நகைச்சுவையில் இருக்கிறது.

### துப்பாக்கி துளைத்தது

ஒருவரின் சுயமதிப்பை உயர்த்தவும், கர்வம் அடைந்த மனத்தைச் சமமாக்கவும் நகைச்சுவை ஒரு சிறந்த கருவியாகிறது. முகம் அல்லது உடல் ஊனம் (குறை, விகாரம்) உள்ள ஒருவர் வேறு ஒருவரைச் சந்திக்கும் போது அவருக்கு ஏற்படும் அதிர்ச்சியை, நகைச்சுவை மூலம் சமாளிக்கிறார்கள். சிரிக்கும் பொழுது அவர்களுடைய குறையை மற்றவர்கள் மறந்து விடுகிறார்கள். ஒன்றரைக்கண் வாத்தியார், மாணவர்களின் திசையைத் திருப்பி, நீதிபதியின் கதையைச் சொன்னார். ஒன்றரைக் கண் நீதிபதி கூண்டிலுள்ள 3 குற்றவாளிகளில் முதலாமவனைக் கேட்க, இரண்டாமவன் பதில் கூறினான். இரண்டாமவனிடம் ''நான் உன்னிடம் கேட்கவில்லை, ஏன் பேசுகிறாய்?'' என்று மூன்றாமவன் கேட்க ''நான் பேசவில்லை'' என்றான். இதைக் கேட்ட மாணவர்கள் வாத்தியாரின் ஊனத்தை மறந்து சகஜமாகப் பழக ஆரம்பித்தார்கள்.

அமெரிக்காவில் இந்தியனின் காதுகளில் தோடுகளுக்குப் போட்ட துவாரங்களைப் பற்றிக்







கேட்க, அவன், தான் சண்டை போடும் பொழுது, சகமாணவன் துப்பாக்கியால் சுட்டு அந்த துவாரத்தை ஏற்படுத்திவிட்டான் என்று சொன்னான். நகைச்சுவை காதின் மேல் கவனம் விழாமல் திசையைத் திருப்பியது. சிரிப்பின் மூலம் தங்களையும், குறையுள்ள ஊனமுள்ள மனிதர்களாக ஏற்றுக்கொண்டு, தங்கள் குறைகளைச் சிரித்து மழுப்பிவிடுகிறார்கள். இதனால் அவர்களுடைய சுயமதிப்பு பக்குவமாக இருக்கிறது. அரசர்களால் நியமிக்கப் பட்ட அரசவைக் கோமாளிகள் (விகடகவி) அரசரிடம் ஏற்படக்கூடிய கர்வத்தை நீக்கி, நடுநிலைக்குக் கொண்டு வர உதவினார்கள். அவர்களின் நகைச்சுவை, ஆட்சியில் உள்ளவர் களுக்குப் பிரச்சனைகளினால் ஏற்படும் இறுக்கங் களிலிருந்து நிவாரணம் காணப்பெரிதும் உதவின.

**...சிரிப்பின் மூலம் தங்களின் கோபம், வருத்தம், கவலை போன்றவைகளை நீக்கி நடுநிலைக்கு வருகிறார்கள்...**

### சிறந்த வடிகால்

மனிதர்களின் உணர்ச்சிகளுக்கு நகைச்சுவை தலைசிறந்த வடிகாலை ஏற்படுத்துகிறது. சிரிப்பின் மூலம் தங்களின் கோபம், வருத்தம், கவலை போன்றவைகளை நீக்கி நடுநிலைக்கு வருகிறார்கள். தாங்கள் வெறுக்கும் நபர்களைக் கேலிச்சித்திரம் வரைந்து அந்த வெறுப்பை வெளிப்படுத்துகிறார்கள். அதிகாரிகளின் மேல் தொழிலாளிகள் வைத்திருக்கும் கோபத்தை கழிவறையில் அதிகாரிகளைப் பற்றி நகைச்சுவையாகப் பேசியும், சுவர்களில் எழுதியும் தங்கள் கோபத்தை வெளியிடு கிறார்கள். மாணவர்களும் தங்கள் ஆசிரியர்களின் மேல் உள்ள கோபத்திலிருந்து விடுபட இதுபோல் செய்கின்றார்கள்.

ஆட்சியில் உள்ளவர்கள் 'சில சௌகரியங்களைச் செய்வேன்' என்று உறுதி கூறிவிட்டுப் பிறகு செய்யாமல் விடும்போது மக்களுக்கு அவர்கள் மேல் இருக்கும் கோபத்தைக் குறைக்கக் கேலிச்சித்திரக்காரரின் சித்திரங்கள் குடிமக்களின் கோபத்துக்கு வடிகாலாக அமைகின்றன. அதிகக் கோபமாக இருக்கும்போது ஒரு நகைச்சுவை நாடகம் பார்ப்பது நல்லது. தங்களுக்குள்ள கவலை, பயம் முதலியவைகளை மிகைப்படுத்தி நடித்துத் தம்மையே முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் பொழுது ஏற்படும் சிரிப்பு அந்த பயத்தில் இருந்து விடுபட வாய்ப்புக் கொடுக்கிறது. கவலை என்ற தடுப்புச் சுவரை, நகைச்சுவை உடைத் தெறியும், மிதமிஞ்சிய கோபம், பயம், குற்ற உணர்வு போன்ற உணர்ச்சிகளுக்குச் சிரிப்பு ஒரு சிறந்த வடிகால்.

கண்ணதாசனும் அவருடைய குழுவும் ஜனாதிபதி ராதாகிருஷ்ணனைப் பார்க்கச் செல்லும் பொழுது, சிறிது தாமதமாகச் சென்றார்கள். ஜனாதிபதி என்ன சொல்வாரோ என்று பயந்தார்கள். அவரோ,

''வாங்க, வாங்க லவண்டீங்களா, இந்த வாத்தியார் சட்டாம்பிள்ளையைப் பார்க்க வந்திங்களா?''

என்று நகைச்சுவையுடன் ஒரு பாட்டைச் சொல்லி அவர்களை வரவேற்றாராம்.



கண்ணதாசன் பதிலுக்கு ஒரு கவிதை சொன்னாராம்.

''பிறக்கும் போதும் அழுகின்றாய்,
இறக்கும் போதும் அழுகின்றாய்;
ஒரு நாளேனும் கவலையில்லாமல்
சிரிக்க மறந்தாய் மானிடனே!''

இதனால் எல்லோரும் சிரித்து, பயத்தை மறந்து வந்த காரியத்தை எளிதில் முடித்துக் கொண்டார்கள்.

தீர்வு காணமுடியாத பிரச்சினைகள் மனத்திலும், உடலிலும் தேங்கி இறுக்கத்தை ஏற்படுத்துகின்றன. நாம் சந்திக்கும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண இயலாது. நம்மால் தீர்வு காண முடியாத பிரச்சினைகளைச் சமாளிக்க சில வழிகள் தேவை. அவற்றுள் ஒன்று தினந்தோறும் தியானம், யோகாசனம் போன்ற ஆன்மீக வழிகளில் மனதை ஈடுபடுத்தி ஒருமுகப்படுத்துவது, மற்றொன்று மனதுக்கு அமைதி தரும் சுற்றுலாத் தலங்களுக்கு மற்றும் தொலைதூரங்களுக்கு செல்வது. அல்லது குடும்பத துடன், குழந்தைகளுடன் மனம் விட்டு பேசி மகிழ்வது மூலம் மனத்திலுள்ள சுமையாக விளங்கும் கலைந்தறியலாம்.

**... ஒருநாளில் ஒருமுறையேனும் வயிறுகுலுங்கச்சிரித்தால் மருத்துவரிடம் போகவே தேவையில்லை...**

1973-ல், திடீரென்று பெட்ரோல் எண்ணெய் விலை அரேபியாவில் இரட்டிப்பு ஆகிவிட்டது. ஆதலால், நம் நாட்டிலும், விலைகள் அதிகரித்து விட்டன. ஆட்சியிலிருந்த இந்திரா காந்தியோ, கலைஞரோ, எதுவும் செய்ய முடியாத நிலை. மக்கள் இந்தப் பிரச்சினையைத் தாங்கிக் கொள்ள, ஒரு கேலிச் சித்திரம் உதவியது. ஒரு சாதாரண மனிதன் மேலே பறக்கும் இறக்கை பொருந்திய மண்ணெண்ணெய் - டின்னை பிடிக்க முயலுகிறான். ஆனால் அது எட்டவில்லை. இந்த விலைவாசி உயர்வு பிரச்சினையைத் தாங்கிக் கொள்ள இந்தக் கேலிச் சித்திரம் பயன்பட்டது.

### நகைச்சுவையின் பயன்

பிரச்சினைகளைக் கோமாளித்தனமாகப் பார்த்துப் பேசிச் சிரிப்பின் மூலம் அதன் சுமையைக் குறைக்கலாம். தீர்வு காண முடியாத பிரச்சினைகளால் குவிந்துள்ள இறுக்கங் களுக்குச் சிரிப்பு பாதுகாப்பான வடிகாலை ஏற்படுத்துகிறது. ஒருவரின் பிரச்சினைகளுக்குக் கேலியான தோற்றத்தை ஏற்படுத்தி, அதன் கடினத்தைக் குறைக்க உதவுகிறது. உலகிலிருந்து பின்வாங்கி மௌனநிலையில் உள்ள பலரை மீண்டும் சகஜமான வாழ்க்கைக்குக் கோமாளிகள் அழைத்து வந்திருக்கிறார்கள். எப்படியென்றால் நகைச்சுவை யின் மூலம் பின்வாங்கிய நிலை யில் உள்ளவர்களையும் பங் கெடுக்கவைத்துள்ளார்கள். உதவி யற்ற குழந்தைகளின் நிலையில் பின்வாங்கியவர்கள் இருக் கிறார்கள்.

நகைச்சுவை என்பது விளையாட்டாகப் பின்வாங்குவது ஆகும். இந்த நிலையில் இருக்கும் பொழுது, சமூகக் கட்டுப்பாடுகளைத் தூக்கியெறிந்து, சுதந்திரமான விளையாட்டில் மகிழ்ச்சியடைகிறார்கள். நகைச்சுவையின் பயனாக, சுவாசம் சுதந்திரமாகவும், சீராகவும் அமைவதுடன் ஆரோக்கியத்தையும் அதிகரிக் கிறது.





தமிழரசு



குடும்ப, சமூக உறவுகளை அதிகரிக்கச் சிரிப்பு தலைசிறந்த கருவியாகும். ஒரு குடும்பமோ அல்லது குழுவோ மாலையில் தங்கள் பேச்சு வார்த்தையைச் சிரிப்புடன் தொடங்கினால் அந்த மாலை அமைதியானதாக அமையும். குடும்ப நபர்களோ அல்லது குழு நபர்களோ தங்கள் பிரச்சினைகளையும், பயம் போன்ற உணர்ச்சிகளையும் வெளிப்படையாக விவாதிக்க இந்தப் பழக்கம் உதவும். திறந்த சூழ்நிலையை உருவாக்கும். இந்தச் சூழ்நிலை தடையற்றதாகவும், வெளிப்படையாகவும் இருக்கும். அதனால் பங்கேற்பவர்களுக்குத் தடையற்ற சுதந்திரமான சுவாசத்தைக் கொடுக் கும். தடையற்ற சுவாசம் ஆரோக்கியத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்கும். ஒரு குழுவோ அல்லது குடும்பமோ சந்திக்கும் பிரச்சினைகளை நகைச்சுவையை உபயோகப்படுத்தித் தடை யின்றிப் பேசி, அலசி, ஆராய்ந்து பிரச்சினை களுக்கு நல்ல விதமாகத் தீர்வு காண முடியும்.

குடும்பம் அல்லது குழுவில் அந்நியோன் யத்தை ஏற்படுத்தச் சிரிப்பு உதவுகிறது. ஒரு குழுவோ அல்லது குடும்பமோ சிக்கலான பிரச்சினைகளைச்சமாளிக்கும் போது ஒத்துழைக் கும் மனப்பான்மையை நகைச்சுவை உண்டு பண்ணிநாள்தோறும் உண்டாகும் சுமை, சோர்வு இவைகளை நீக்குகிறது. சமூகத்தில் ஏற்படும் இறுக்கத்தைக் குறைக்க எண்ணெய் அல்லது பசையாக உதவுகிறது. இது சமூகத்தில் அல்லது குடும்பத்தில் உள்ள தடுப்புச் சுவர்களை உடைத்துச் சம உணர்வை ஏற்படுத்துகிறது.

**தீர்வுகாண முடியாத பிரச்சினைகளால் குவிந்துள்ள இறுக்கங்களுக்குச் சிரிப்பு பாதுகாப்பான வடிகாலை ஏற்படுத்துகிறது.**

### குடும்பமும் சமூகமும்

சிரிப்பு ஆயுளை அதிகரிக்கிறது. சீராகச் சுவாசிப்பவர்கள், கவலைகளி னாலும், பிரச்சினைகளினாலும் குன்றிவிட மாட்டார்கள். அலுவலகத்தில் ஏற்படும் உணர்ச்சிகளையும் எளிதான முறையில் ஏற்றுக் கொண்டு நல்ல விதமாக அதனைச் சமாளிப்பர். சிறந்த நோக்குடன் அணுக முடிகிறது. இறுக்கத்தைக் குறைக்கும் பசையாக நகைச் சுவையை உபயோகித்து எப்பொழுதும் சிரித்துக் கொண்டு இருப்பவர் நெருங்கிய உறவை ஏற்படுத்தி ஒரு சந்தோஷமான, ஆரோக்கியமான வாழ்க்கை யைக் குடும்பத்திலும், சமூகத்திலும் அமைத்துக் கொள்கிறார்.

மனநிலையைப் பலப்படுத்தவும், வாழ வேண்டும் என்ற விருப்பத்தை அதிகரிக்கவும் சிரிப்பு உதவுகிறது. இது சுயேச்சையையும், சுயமதிப்பையும் அளிக்கிறது. மனிநிலையை உறுதிப்படுத்தி, மனத்தைத் தகர்க்க முடியாத கோட்டையாகச் செய்கிறது. உண்மை என்ற அம்புகள் அல்லது கட்டாயப்படுத்துவதினால் ஏற்படும் மனக்காயங்களை, மனம், நகைச்சுவை உதவியுடன் ஏற்றுக் கொள்ள மறுக்கும். வெளி உலகினால் ஏற்படும் காயங்களை மனத்தில் நுழைய முடியாததாகச் செய்கிறது. இம்மாதிரி சூழ்நிலைகளில் மனம் காயம் படத்தக்க நிகழ்ச்சிகளைச் சிரிப்பின் மூலம் மகிழ்ச்சி யானவைகளாக ஏற்றுக்கொண்டு பக்குவம் அடைய முடியும். இவ்வாறாக நகைச்சுவை மனநிலையைப் பலப் படுத்துவதுடன், வாழ வேண்டும் என்ற உறுதியையும் அளிக்கிறது.

ஒரு கல்லூரி ஆசிரியை ஆண்டு இறுதியில் தன்னைப் பற்றிய மதிப்பீட்டை மாணவிகளை எழுதச்சொன்னார். கையெழுத்துப் போட வேண்டாம் என்றும் சொன்னார். ஒரு மாணவி

(ஆசிரியையை) முட்டாள் என்று எழுதிக் கொடுத்தாள். ஆசிரியையோ, அதன் திசையைத் திருப்பி ''நான்தான் கையெழுத்துப் போட வேண்டாம் என்று சொன்னேனே, எவள் முட்டாள் என்று கையெழுத்துப் போட்டு கொடுத்திருக்கிறாள்?'' என்று சொல்லி அதை எழுதிய மாணவியையே முட்டாள் ஆக்கி விட்டார்.

நகரத்தில், சாலை சந்திப்பில் பச்சை விளக்கிற்காக ஒரு வயதான கார் டிரைவர், காத்துக்கொண்டு இருந்தார். காருக்குப் பின்னால் ஒரு இளைஞர், மோட்டார் சைக்கிளில் இருந்தார். பச்சை விளக்கு வந்ததும், காரைஸ்டார்ட் செய்ய முடியாமல் திணறினார். பொறுமை இல்லாத இளைஞரோ, முதியவரை, ''மடையா, காரை ஒழுங்காக வைத்துக் கொள்ளக் கூடாதா?'' என்று திட்டினான். அந்த முதியவரோ, சிறிதும் சலனமின்றி, ''மன்னித்து விடுங்கள் அண்ணாச்சி'' என்று சொன்னார். இவ்வாறு சொல்லும் பொழுது, இளைஞனை தன்னுடைய ''ஜாதிக்கு'' இழுத்துக்கொள்கிறார். தங்கள் மேல் பாயும் அம்பை, திசை திருப்பி, தாங்கள் புண்படாமல், பார்த்துக் கொள் கின்றனர். சுயமதிப்பு அதிகம் உள்ளவர்கள் மற்றவர்களின் இழிவான பேச்சுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள். நகைச்சுவை தன்னுடைய சுயமதிப்பைப் பாதுகாத்து நடுநிலை அடைய உதவுகிறது.

**... மனநிலையைப் பலப்படுத்தவும், வாழவேண்டும் என்ற விருப்பத்தை அதிகரிக்கவும் சிரிப்பு உதவுகிறது...**

## செலவில்லா மருத்துவம்

சுருங்கச் சொன்னால், நகைச் சுவைக்குக் குணப்படுத்தும் தன்மை உண்டு. கசப்பு உணர்ச்சிகள், பிரச்சினைகளால் ஏற்படும் சுமைகளைக் குறைத்துச் சுதந்திரமான சுவாசம் விட உதவுகிறது. ஒருவரின் சுயமதிப் பிற்கு எதிராக ஏற்படும் தாக்குதல் களிலிருந்து அவர்களைப் பாது காத்து நகைச்சுவை ஒரு கவசமாக இருந்து அவருடைய சுய மதிப்பை நிலைநாட்ட உதவுகிறது. இவ்வாறு செய்வதனால் வாழ வேண்டும் என்ற உறுதி அதிகரிக்கிறது. நகைச்சுவையானது கடவுளால் மனிதனுக்கு அளிக்கப்பட்ட மிகப் பெரிய சொத்து. பிரச்சினைகளைச் சிறந்த முறையில் அணுகவும், சுய ஆரோக்கியம், குடும்ப, நிறுவன, சமூக உறவுகளையும் ஆரோக்கி யத்தையும் வளர்க்க நகைச்சுவை சிறந்த முறையில் உதவுகிறது. இதற்குச் செலவு இல்லை. செலவின்றி உடலை, மனதை நலமாக வைத்துக் கொள்ள சிரிப்பு சிறந்த கருவி.








ஓர் ஆலோசனை : சில நிறுவனங்களில் இன்றைய பொன்மொழி என்று தினம் ஒரு புதிய பொன்மொழி எழுதி வைக்கிறார்கள். தினமும் ஒரு நகைச்சுவை, கேலிச்சித்திரம் எழுதி வைக்கலாம். சில வங்கிக் கிளைகளில், வேலை ஆரம்பிப் பதற்கு முன், குழுவாக நகைச் சுவையைப் பகிர்ந்து கொள்கிறார் கள். வேலைக்கு வரும் பொழுது இருக்கும் இறுக்கங்கள் நீங்கி, வாடிக்கையாளர்களுடன் சுமுகமாகப் பழகி நல்லுறவை வளர்க்க இந்தப் பழக்கம் உதவு கிறது.

பஸ் கண்டக்டர்களும் தங்கள் தினசரி வேலையை ஆரம்பிக்குமுன் நகைச்சுவையுடன் வேலையில் ஈடுபட்டால், பயணிகளிடம் உறவு நன்றாக இருக்கும். அவர்களிடம் ஏற்படும் சிக்கல்களை, சண்டை சச்சரவுகள் வராமல் எளிதில் சமாளிக்க உதவும்.

வாய்விட்டுச்சிரியுங்கள் நோய் விட்டுப் போகும்!''

## எங்கேயோ கேட்ட குரல்!

திரு. திருநாவுக்கரசு (அ.இ.அ.தி.மு.க) பொருளா தாரப் பிரிவு. சமூக நலப்பிரிவு, மானியங்கள், பொதுப் பணிகள் என்ற நான்கில் முதல் மூன்று வகையும் பொது மக்களுக்குச் சென்று சேரக்கூடியது. அதற்கு அதிக செலவு செய்தால் அது பொதுமக்களைச் சென்றடையும். ஆனால், அந்த மூன்று இனத்துக்குத் தருவதைக் காட்டிலும் நான்காவது இனமான பொதுப்பணிக்கு நீங்கள் அதிகம் ஒதுக்கீடு செய்துள்ளீர்கள். அரசு ஊழியர்களைக் காட்டிலும் பொது மக்கள் நலனில் சற்று அக்கரை காட்ட வேண்டும்.

முதல்வர் கலைஞர் : எந்த வளர்ச்சிப் பணியானாலும்

### பேரவையில் நகைச்சுவை

திட்டப் பணிகள் ஆனாலும், அவைகளுக்கு அஸ்திவாரம் அரசு ஊழியர்கள்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. ஆடம்பரச் செலவு, ஊதாரிச் செலவுகள் அல்ல இவைகள்.

திரு. திருநாவுக்கரசு: பொதுப்பணிக்கு என்று மட்டும் மூன்றில் ஒரு பங்கு செலவு. செலவீனத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதால் அது பொதுமக்களுக்குச் சுமையாக இருக்கிறது.

முதல்வர் கலைஞர் : இதற்கே இப்படிச் சொல்கிறீர்கள், ஊதியக் குழுவின் பரிந்துரைகள் வந்தால் இன்னும் சுமை கூடத்தான் செய்யும்.

திரு. திருநாவுக்கரசு : அப்படியானால் மக்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்!

முதல்வர் கலைஞர் : இது எங்கேயோ கேட்ட குரலாக . இருக்கிறதே!

(அவையில் பலத்த சிரிப்பு)



தமிழரசு கவிதைப்
போட்டி
இரண்டாம் பரிசுக்
கவிதை

## இன்று புதிதாய்ப் பிறந்தோம்

*தீயபல எண்ணத்தை*
*தீக்குச்சி தின்றுவிட*
*கொடுத்துவிட்டால் இன்பங்கள் பொங்கும்! – அதைத்*
*தடுத்துவிட்டால் துன்பங்கள் தங்கும்!*

*ஏழையெல்லாம் ஏற்றம்பெற*
*ஏணியெனப் பெரியோர்கள்*
*இருந்தாலே இவ்வையம் வாழும்! – ஏழை*
*வருந்திட்டால் இவ்வையம் வீழும்!*

*கன்னலெனத் தானினிக்க*
*கன்னித்தமிழ் வளர்த்திடவே*
*தலைகொடுத்தும் போராடும் போது! – விடு*
*தலைகிடைக்கும் நமக்குத்தப் பாது!*

*ஒற்றுமையாய் நாமிருந்தால்*
*ஒருதுன்பம் நமக்கில்லை*
*என்றுபாடி தினந்தோறும் மகிழ்வோம்! – அதற்குத்*
*தானின்று நாம் புதிதாய்ப் பிறந்தோம்!*


**மா.த. சொக்கலிங்கம்**
**2/7, காமராசர் வீதி,**
**வங்களூர் - 631 304**
**செங்கை - எம்.ஜி.ஆர்.**
**மாவட்டம்.**


[illegible]







# பட்டிக்காட்டுப் பையன் பள்ளி செல்கிறான்



***ப***ட்டிக்காட்டில் இருக்கும் சிறுவனுக்கு எட்டு அல்லது ஒன்பது வயது ஆகிவிடுமானால் அவன், பெரியவர்கள் எவ்வளவு உபயோகமாக இருக்கிறார்களோ அதில் பாதிக்குப் பாதியாவது பயனுள்ளவனாக ஆகிவிடுகிறான். வசந்த காலத்தில் அவனால் களையெடுக்க முடியும்; அல்லது வெயில் காலத்தில் அறுவடை செய்தவைகளைக் கட்டாகக் கட்ட முடியும். வீடு கட்டும்போது அவனால் செங்கல் கொண்டு செல்ல முடியும். அல்லது நீர்ப்பாசன வசதிக்காக நீரைத் திறந்து விடவும், மூடவும் முடியும். இப்படி இருக்கும் போது அவனைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்ப யார்தான் விரும்புவார்கள்? ஆனால் நகரத்தில் ஒரு அரசாங்க அறிக்கை கொடுக்கப்பட்டிருந்தது; ஆறு வயதிற்கு மேற்பட்ட ஒரு பையனைப் பள்ளிக்கு அனுப்பாவிட்டால் அவன் குடும்பத்தில் பெரியவர் ஒருவர் சிறையிலிடப்படுவார் என்பதுதான் அது. இப்படித்தான் நமது கதையின் பட்டிகாட்டுச் சிறுவன் பள்ளிக் கூடத்திற்குச் சென்றான்.

முதல்நாள் அன்று பையன் எட்டுப் புத்தகங்களுடன் திரும்பி வந்தான். அவனது தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா ஆகிய அனைவரும் அவனைச் சூழ்ந்து நின்று புத்தகத்திலிருந்த படங் களை வேடிக்கை பார்த்தனர். தாத்தா சொன்னார் ''நமது நான்கு நூல்களும், ஐந்து காவியங்களும் இது போன்ற படங்களைக் கொண்டிருந்ததே இல்லை.''

''நூல் நூற்கும் இந்தப் பெண்மணிகூட ஒரு வெளி நாட்டுக்காரிதான். நூல் நூற்பதற்கு நாம் நமது வலது கையைப் பயன்படுத்துகிறோம். ஆனால் இவள் தனது இடது கையைப் பயன்படுத்துகிறாள்.''

''இது அவளை ஒரு வெளி நாட்டுக்காரியாகக் காட்டும் என்றால் இந்த வண்டிக்காரனும் தான் சீனாவைச் சேர்ந்தவன் அல்ல. எந்த சீன வண்டிக் காரனாவது தனது வண்டிக்குப் பக்கத்தில் இவ்வாறு நின்றிருப்பதை நீ பார்த்திருக்கிறாயா?'' தாத்தா விமர்சித்தார்.

''இந்த நூல்கள் ஒரு டாலரும் இருபது செண்ட் விலையும் கொண்டவை என்று எனது ஆசிரியை சொன்னார்கள்'' அவர்கள் நூல்களின் மீது காட்டிய ஆர்வத்தினால் உற்சாகமடைந்தவனாகப் பையன் உடனே சொன்னான். திடீரென்று இடி இடித்தது போன்று எல்லோரும் திகைத்துப் போனார்கள்.

பாட்டிதான் முதலில் பேசினாள்: ''பையனை பள்ளிக்கு அனுப்பியதற்காக இந்த நூல்களின் விலையை நம்மைக் கொடுக்கச் சொல்லும் தைரியம் அவர்களுக்கு உண்டுதான். ஒருநாள் கூட முழுதாக இவன் பள்ளிக்குப் போகவில்லை. அதற்குள்ளாகவே ஒரு டாலர் செலவு வந்துவிட்டது. இது போன்ற பள்ளிகளுக்கு அனுப்ப யாரிடம்தான் பணம் இருக்கிறது? ஓர் அரை ஆண்டு முழுவதும் விளக்கு ஏற்றாமல் மிச்சம் பிடித்தால்கூட இந்தப் பணத்தை நம்மால் சேர்க்க முடியாது. இவ்வளவு பணம் திரட்டுவதற்கு நாம் குறைந்த பட்சம் எட்டுப் படி சோளமாவது விற்றாக வேண்டும்.''

[redacted]

***இக்கதை திரு. இந்திரன் அவர்களால் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு தொகுத்து வெளியிடப்பட்ட பசித்த தலைமுறை எனும் மூன்றாம் உலகக் கலை இலக்கியத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள லாவ் ஷ்சியாங் எனும் சீனக்கதையின் தமிழாக்கமாகும். மூன்றாம் உலக எழுத்துக்கள் அனைத்தும் மனித நேயம் மிக்கவை. அதனால்தான் இவை தங்களது உள் உலகங்களைச் சக மனிதனான தமிழனுடன் பகிர்ந்துகொள்ளத் தயாராக உள்ளன. சீனச் சிறுகதையாக இருந்தாலும் இது எல்லாத் தேசங்களுக்கும் தேசமுடையதுதான்.***

''முதலில் தொடங்குவதற்கு ஒரு புத்தகம் போதுமென்று நான் நினைக்கிறேன். அதை முடித்த பிறகு அடுத்த புத்தகம் வாங்கிக் கொள்ளலாம்.'' தாத்தா சொன்னார்.

''அது மட்டுமல்ல. ஒரு பக்கத்தில் மூன்று அல்லது நான்கு எழுத்து மட்டுமே இருக்கும்போது அவர்கள் ஏன் அவ்வளவு விலை வைக்க வேண்டும்?'' பாட்டி தொடர்ந்தாள்! ''அரிச்சுவடியில் சிறிய, பெரிய எழுத்துக்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் அது ஐந்து பித்தளைக் காசுகள்தான். இது எப்படி ஒரு டாலருக்கு மேல் விற்கிறது?''

சில நிமிடங்களுக்கு முன்னர் அவர்கள் வியந்து பாராட்டிய அதே புத்தகம் இப்போது அவர்களது சோகத்துக்குக் காரணமாகிவிட்டது. இந்த குடும்பம். சாப்பாட்டு நேரம், மாலையின் பிற்பகுதி முழுவதும் இந்தக் குழப்பத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்துவிட்டு, இறுதியாக இதுவே முதல்தடவை என்பதால், இதை ஒத்துக்கொண்டு தேவைப்பட்ட பணத்தைக் கொடுத்துவிட முடிவு செய்தது.

இந்தப் பணத்தைச் சரிசெய்ய, சிறுவனின் அம்மா அண்மையில் விற்ற கம்மலின் பணத்தைக் கொடுத்துவிட வேண்டும். அப்பா ஒரு புனிதமான சொற்பொழிவாற்றினார்: ''உனக்கு இப்போது ஒன்பது வயது ஆகிவிட்டது. இனியும் நீ சின்னப்பையன் அல்ல. உன்னை வேலை செய்யாமலிருக்கச் செய்கிறோம். எங்களால் சமாளிக்க முடியாவிட்டாலும் உன்னைப் பள்ளிக்கு அனுப்புகிறோம். எனவே நீ கடினமாகப் படித்து, ஏதாவது கற்றுக் கொள்ளாவிட்டால் நன்றி கெட்டவனாகிவிடுவாய்.''

மறுநாள் அதிகாலையில், சிறுவன் அப்பா சொன்னதை மனதில் ஏற்றிக்கொண்டு பள்ளிக்குச் சென்றான். அவன் அங்கு சென்றபோது, பள்ளி காவல்காரர் மெதுவாகச் சொன்னார்.

''வகுப்பு ஒன்பது மணி வரை தொடங்காது. இப்போது ஐந்தரை மணிதான் ஆகிறது.



**... நமது நான்கு நூல்களும், ஐந்து காவியங்களும் இதுபோன்ற படங்களைக் கொண்டிருந்ததே இல்லை...**

வகுப்பு ஆசிரியர் தூங்கிக் கொண்டிருப்பார். வகுப்புகள் இன்னமும் பூட்டியே உள்ளன. நீ இப்போது வீட்டுக்குத் திரும்பிப் போய்விடுவது நல்லது.'' சிறுவன் சுற்று முற்றும் பார்த்து தான்தான் அங்கிருக்கும் ஒரே ஒரு மாணவன் என்று புரிந்து கொண்டான். ஆசிரியரின் ஜன்னலருகே செவி மடுத்த போது ஆசிரியரின் குறட்டை ஒலி கேட்டது. வகுப்பு அறைகளைச் சுற்றிப் பார்த்த போது, அவை பூட்டிக் கிடந்ததைப் பார்த்தான். வீட்டிற்குத் திரும்பி ஓடுவது தவிர வேறு வழியில்லை. தாத்தா திடீரென்று பையனைப் பார்த்த போது அவர் தரையைப் பெருக்கிக் கொண்டு இருந்தார். துடைப்பத்தை வீசியெறிந்துவிட்டு அவர் சொன்னார்: ''மண்வெட்டிக்காக இறைவன் படைத்த பையனைப் படிக்க வைப்பதினால் என்ன பயன்? இரண்டாவது நாளிலேயே அவன் விளையாடிக் கொண்டிருக்கிறான்.'' பையன் விளக்கிச் சொல்லத் தொடங்கிய போது, அம்மா இரண்டு அறை கொடுத்து காலை உணவுக்காக அவனை அடுப்பு மூட்டச் சொல்லி விட்டாள். அவர்களது கோபத்திற்கு அந்தப் புத்தக விலையும் ஒரு காரணம்தான்.

அவன் காலை உணவை முடித்துவிட்டுப் பள்ளிக்கு மீண்டும் சென்றபோது ஆசிரியர் மேடையில் நின்று, காலம் தாழ்த்தாமல் பள்ளிக்கு வருவது பற்றி சொல்லிக் கொண்டிருந்தார். இதை விளக்குவதற்காக, ஒரு பை நிறைய தங்கத்தைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு, முதன் முதலில் பள்ளிக்கு வரும் மாணவனுக்கு கொடுப்பதற்காக காத்திருந்த தேவதை ஒன்றைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்த்தார். நமது பையன் 'தேவதை' 'பை நிறையத் தங்கம்'' போன்றவற்றினால் மகிழ்ச்சி அடைந்தாலும், 'முதல் முதலில் வரும்' எனும் சொற்கள் குறிப்பது என்ன வென்று புரியாமல் இருந்தான். பிற்பகலில், நமது சிறிய கதாநாயகர், மூன்றரை மணி அளவில் அப்பா பகலில் ஒரு குட்டி தூக்கம் போட்டுவிட்டு மீண்டும் வேலைக்குப் போகும் போது வந்தார். அதிர்ஷ்டவசமாக, சிறுவனின் அப்பா, பிற சிறுவர்களும் பள்ளியிலிருந்து வருவதைப் பார்த்தார். மேலும் அவனது ஆசிரியர் தனது







பிரம்புடன் உலா வருகையில், பையன் விளையாடிக் கொண்டிருக்கவில்லை என்று முடிவாகச் சொன்னார். இந்த வெளிநாட்டுப் பள்ளிக்கூடங்கள் நடந்து கொள்ளும் விநோதமான வழிகள் என்னவென்றே அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

முதல் ஆறு நாட்கள், முதல் பாடத்தில் இருக்கும் 'இதுதான் அம்மா' எனும் வாக்கியத்துக்கே சரியாக இருந்தது. சிறுவன் ஊக்கமுள்ளவன் அல்ல என்று நாம் சொல்ல முடியாது. பள்ளிக்கூடம் முடிந்த பிறகு, சிறுவன் பாடங்களை மீண்டும் மீண்டும் இரவிலிருந்து காலை வரை தினந்தோறும் 'இதுதான் அம்மா' என்ற பாடத்தைப் படித்தான். இடது கையினால் புத்தகத்தைப் பிடித்தபடி வலது கை எழுத்துக் களைக் கூட்டிக் கொண்டு, அவன் மிகவும் உண்மை யோடும், மனசாட்சி யோடும் படித்தான். அவன் அந்த எழுத்துக்களின் மீது முழு கவனத்தையும் செலுத்தாவிட்டால், அவை பறந்து போய் விடுமோ என்று அஞ்சுவது போல படித்தான்.

ஒவ்வொரு முறையும் 'இதுதான் அம்மா' என்று அவன்



**... இதுபோன்ற பள்ளிகளுக்கு அனுப்ப யாரிடம்தான் பணம் இருக்கிறது? ஓர் அரையாண்டு முழுவதும் விளக்கு ஏற்றாமல் மிச்சம் பிடித்தால் கூட இந்தப் பணத்தை நம்மால் சேர்க்க முடியாது...**

படிக்கிற போதும் அவனது அம்மாவின் மனம் குதிக்கும். ஆறாவது நாள் அவளால் இந்த பாடத்தைச் சகிக்க முடியவில்லை. அந்தப் புத்தகத்தைப் பிடுங்கிக் கொண்டு அவள் சொன்னாள். ''உன்னுடைய அம்மா யார் என்று நான் பார்க்கிறேன்.'' அவனுடைய அம்மா உண்மையிலேயே அந்த பாடத்தைப் படிக்க ஆர்வத்துடன் இருக்கிறாள் என்று நினைத்துக்கொண்டு அவன், அந்தப் பாடத்தைத் தொடர்ந்து படத்தில் தோல் சப்பாத்து, வெட்டப்பட்ட முடி, நீளமான உடையுடன் இருந்த பெண்மணியை 'இதுதான் அம்மா'' என்று காண்பித்தான். அதை ஒரு கணம் பார்த்தவுடன் அம்மா கதறி அழத் தொடங்கினாள். தாத்தா, பாட்டி, அப்பா ஆகிய அனைவரும் அவளுக்கு ஏதோ பேய் பிடித்துவிட்டது என்று பயந்தனர். என்ன செய்தி என்று அவர்கள் விசாரித்தபோது அவளால் முதலில் ஒன்றுமே சொல்ல முடியவில்லை. அவர்கள் வற்புறுத்திக் கேட்டபோது அவள் சொன்னாள்: ''பையனுக்கு இந்த பரத்தையைப்

போன்ற அம்மா எங்கிருந்து கிடைத்தாள்.''

அவள் துயரத்தைக் கேள்விப்பட்ட பிறகு அப்பா சொன்னார். ''பையன் இது யாருடைய அம்மா என்று கேட் கட்டும். ஒருவேளை ஆசிரியரின் அம்மாவாக இருக்கலாம்.''

மறுநாள் அதிகாலையி லேயே பையனின் அம்மா அவனை எழுப்பி, பள்ளிக்குச் சென்று இரவு முழுவதும் தன்னைத் தொல்லைப்படுத்திய இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்று கேட்கச் செய்தாள். பள்ளிக்குச் சென்ற மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆகையால் பள்ளிக்கூடம் கிடையாது. பையன் அம்மாவிடம் நிலை மையைச் சொன்ன போது, அவள் இந்த ஞாயிற்றுக் கிழமை பள்ளியை சபித்தாள்.

திங்கள்கிழமை, பொது வகுப்பில், ஆசிரியர் மெதுவாகச் சொன்னார்: ''கற்றுக் கொள்ள வேண்டும் எனும் ஆசை கொண் டவர்கள் வினாக்களை எழுப்பப் பயப்படக்கூடாது. எந்த வினா யாருக்கு எழுந்தாலும் அவர்கள் உடனே அதை வகுப்பு ஆசிரி யரிடமோ அல்லது வீட்டில் பெற்றோரிடமோ கேட்டுவிட வேண்டும்.

நமது கதாநாயகர் உடனே எழுந்தார். ''பாட புத்தகத்தில் 'இதுதான் அம்மா' என்று போட்டு இருக்கிறது. உண்மை யில் இது யாருடைய அம்மா?'' முன்பைவிட இப்போது மேலும் மெதுவாக ஆசிரியர் சொன்னார்: ''இந்தப் புத்தகத தை யார் படிக்கிறார்களோ அவர் களது அம்மாதான் இது. இப் போது உனக்கு இது புரிகிறதா?''

''இல்லை.'' பையன் சொன்னான். இது ஆசிரியரைக் கொஞ்சம் சங்கடப்படுத்தியது. ஆனால் அவர் பொறுமையாகச் சொன்னார். ''நீ ஏன் புரிந்து கொள்ள மாட்டேனென் கிறாய்?''

''மொட்டையும் கூட இந்த புத்தகத்தைப் படிக்கிறான். ஆனால் அவன் அம்மா இந்த பெண்மணியைப் போல் இல்லை.'' என்று பையன் சொன்னான்.

''மொட்டையின் அம்மா



***... கற்றுக்கொள்ள வேண்டும் எனும் ஆசை கொண்டவர்கள் வினாக்களை எழுப்பப் பயப்படக் கூடாது...***

வுக்கு ஒரு கை கிடையாது. மேலும் ஒரே ஒரு கண்தான்.'' ஹசியாவோலின் கூறினான்.

''எனக்கு அம்மாவே கிடை யாது. அவள் எப்போதோ செத் துப்போய்விட்டாள்.'' மொட்டை பதிலுக்குச் சொன்னான்.

''உங்களுக்குள்ளாக பேசிக் கொள்ளாதீர்கள்.'' ஆசிரியர் கரும்பலகையின் மீது தட்டிக் கூறினார். ''இன்று நாம் இரண் டாம் பாடம் படிக்கப் போகி றோம்'' 'இதுதான் அப்பா' எல்லோரும் பாருங்கள். ''கண்ணாடி அணிந்து, வகிடெடுத்த தலைமுடி கொண்ட மனிதன்''

பள்ளி முடிந்த பிறகு, அது யாருடைய அம்மா என்று அறிந்துகொள்ள ஆசைப் பட்டாள் அம்மா. ஆனால் பையன் மீண்டும் 'இதுதான் அப்பா, எனும் பாடத்தைத் தொடங்கியதும், அவளது பையனுக்கு புதிய அப்பாவை அவள் எப்போது தேர்ந்தெடுத் தாள் என்று அப்பா கேட்பார் என்று அஞ்சி அந்த வினாவைத் தொடராமல் விட்டு விட்டாள். முன்னரே அப்பா, அம்மா கொண்டிருக்கும் பிள்ளை களுக்கு ஏன் இந்தப் பாடம் புதிய அப்பாக்களையும், அம்மாக் களையும் கொடுக்கிறது என்று குழம்பினாள்.

சிலநாள் கழித்து பையன் இன்னும் இரண்டு வாக்கியங் களைக் கற்றான். 'காளை நெருப்பைப் பார்த்துக் கொள்ளும். குதிரை சேமியா சாப்பிடும்' அவன் ஆயிரம் முறை படித்தாலும், அதில் ஏதோ குளறுபடி இருக்கிறது என்கிற எண்ணத்தை மாற்றிக் கொள்ளவே முடியவில்லை. அவர்களிடம் ஒரு காளையும், குதிரையும் உண்டு. அவற்றைப் புல் மேய்வதற்காக அவனே ஓட்டிச் சென்றிருக்கிறான். ஆனால் என்றைக்குமே ஒரு குதிரை சேமியா சாப்பிடு வதையோ, காளை நெருப்பைக் கவனித்துக் கொள்வதையோ அவன் கண்டதில்லை. ஆனால் பாடபுத்தகம் தவறாக இருக்க முடியுமா? இறுதியாக அவன் ஆசிரியர் ஒரு வாரத்திற்கு முன்னர் கொடுத்த அறிவுரைக் குப் பணிந்து, அப்பாவிடம் இதுபற்றிக் கேட்டான். அப்பா சொன்னார்: ''நகரத்தில் நான் ஒருமுறை வெளிநாட்டு சர்க்கஸ் ஒன்றுக்குச் சென்றேன். அதில்





மணியை அடிக்கக்கூடிய, துப் பாக்கி சுடக்கூடிய குதிரையைப் பார்த்து இருக்கிறேன். ஒரு வேளை இந்தப் புத்தகம் அதுபோன்ற குதிரை, காளை போன்றவை பற்றிப் பேசுகிறது போலும்.''

இன்னமும் மனிததலையை மாற்றிக் கொள்ள வில்லை அதற்கு இன்னமும் ஐந்தாறு ஆண்டுகள் பிடிக்கும்,'' பிறகு பாட்டி, காற்றை அதிகாரம் செய்யும், மழையை நினைத் தால் வரவழைக்கும் அசுரர்

கவனித்துக் கொள்ளும் இந்தக் காளை வெளிநாட்டுக்காளையா?''

ஆசிரியர் சிரித்துவிட்டுச் சொன்னார். ''நீ எல்லா வற்றையும் அப்படியே எடுத்துக் கொள்கிறாய். காளைகள் உண்மையில் நெருப்பைக்



பாட்டி அப்பாவின் விளக் கத்தை ஒத்துக்கொள்ளவில்லை. அவள் சொன்னாள். ''அந்தக் காளை காளை முகம் கொண்ட அசுரனாக இருக்க வேண்டும். இவர்கள் அனைவரும் மனித உடை அணிவார்கள் என்று உனக்குத் தெரியாது? அவை

களைப் பற்றிய கதைகளைச் சொல்லத் தொடங்கி விட்டாள். இதன்விளைவு பையன் இரவில் தன்னை ஒரு இறக்கை வைத்த ஓநாய் அசுரன் பிடித்துவிட்டதாகக் கனவு கண்டு அழுதான்.

மறுநாள் பையன் ஆசிரி யரிடம் கேட்டான். ''நெருப்பைக்

கவனித்துக் கொள்ளும் என் பதோ, குதிரைகள் சேமியா தின்னும் என்பதோ உண்மை யல்ல. புத்தகம் அவற்றை வெறுமனே இட்டுக் கட்டி இருக்கிறது.

பையனை இதுவரை குழப்பிய பல விஷயங்கள்

ஒரேயடியாகப் பையனுக்குப் புரிந்துபோயிற்று. அவன் இதுவரையிலும் ரொட்டி பால், பூங்கா, பந்து போன்ற அவன் பாத்திராத பலவற்றைப் பற்றிப் படித்து வியந்து இருந்தான். இட்டுக்கட்டும் விஷயங்களைத் தான் இந்த புத்தகம் சொல்கிறது என்று அவனுக்குப் புரிந்து போயிற்று.

ஒருநாள் தேனீர் விருந்து எனும் தங்கள் புத்தகத்தில் படித்த விளையாட்டை விளையாடுவதாகப் பையனும், அவன் பள்ளி நண்பர்களும் முடிவு செய்தனர். ஒவ்வொருவரும் இருபது சென்ட் பணம் போட்டு நகரத்திலிருந்து, ஆரஞ்சு, ஆப்பிள், சாக்லேட் போன்றவற்றை வாங்க முடிவு செய்தனர். ஆனால் இதற்காகப் பணம் கேட்பது என்பது உதை வாங்கிக் கொடுக்கும் என்று நமது பையனுக்குத் தெரியும். எழுதுவதற்கு ஒரு காகிதம் வாங்கினால் கூட பள்ளிக்கூடம் தங்களைத் திவாலாக்கிவிடும் என்று பாட்டி அடிக்கடி கூறிவந்தாள். ஆனால் தேனீர் விருந்து பற்றி புத்தகம் கொடுத்திருந்த கற்பனையால் அம்மாவின் நகையை விற்று, முட்டைக் கோசு நாற்று வாங்க வைத்திருந்த பணத்தைப் பயன்படுத்த முடிவு செய்தான்.

தாத்தா நீண்ட நாளாக இருமலினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். ஆரஞ்சுப் பழத்தோல் இந்த இருமலை சரி செய்யும் என்று யாரோ சொல்லி இருந்தார்கள். எனவே அவரும் ஆரஞ்சுப் பழத்தோல் எப்படி இருக்கும் என்றும், எங்கே கிடைக்கும் என்றும் கேட்டுக் கொண்டிருந்தார். தாத்தாவுக்காக பரிந்து பேசுவதைப்போல தனக்கு உதவி தேடிக் கொள்ளலாம் என்று பையன் சொன்னான்,'' நாங்கள் சில ஆரஞ்சுப் பழங்களை வாங்கப் போகிறோம்.''

ஆரஞ்சுப் பழத்தை எதற்காக வாங்குகிறீர்கள்?'' என்று கேட் டார் தாத்தா.

''நாங்கள் ஒரு தேனீர் விருந்து வைக்கப்போகிறோம்.'' பையன் சொன்னான்.

''தேனீர் விருந்து என்றால் என்ன?''



**... குதிரை சேமியா சாப்பிடுவதையோ காளை நெருப்பை கவனித்துக் கொள்வதையோ அவன் கண்டதில்லை ஆனால், பாட புத்தகம் தவறாக இருக்க முடியுமா-...**

''எல்லோரும் சேர்ந்து ஒன்றாகத் தின்பதும் தேனீர் அருந்துவதும் என்பதுதான் அதன் பொருள்'' பையன் சொன்னான். ''இது புத்தகத்தில் இருக்கிறது.''

''மிருகங்களைப் பேச வைப்பதும், மனிதர்களை சாப்பிடவும், தேனீர் குடிக்கவும் கற்றுக் கொடுக்கும் இது என்ன புத்தகம்?'' பையன்கள் பள்ளிக்குச் சென்றால் சோம்பேறிகளாகி விடுவதிலும், சாப்பிடுவதில் இதுதான் வேண்டும், அதுதான் வேண்டும் என்று கேட்பதிலும் ஆச்சரியமே இல்லை'' என்று சொன்னார் தாத்தா.

''இது எப்போதுமே வெளிநாட்டு உணவு பற்றித்தான் இருக்கிறது. சோளக் குழம்பு பற்றியோ, பீன்ஸ் தயிரில் வெங்காயம் போட்டுக் கொள்வது பற்றியோ இருப்பதே இல்லை.'' தாத்தா சொன்னார்.

''மகனே, தாத்தாவின் இருமலுக்கு ஆரஞ்சு பழத்தோல் கொண்டுவர மறந்துவிடாதே'' என்று சொன்னாள் அம்மா:

''ஆரஞ்சு வாங்க பணம் எங்கிருந்து வந்தது.'' என்று கேட்டார் அப்பா.

''அதுதான் அப்பா ஆசிரியர் வந்து...'' பையன் முடிப்பதற்குள், பக்கத்து வீட்டில் வசித்து வந்த மொட்டை திடீரென்று கதறி அழத் தொடங்கினான். அவனது அப்பா சத்தம் கேட்டது'' உப்பு வாங்கக்கூட முடியவில்லை. உனக்கு இனிப்பு வாங்க வேண்டுமா?''

ஷ்சியாஹலின்னின் மாமா மேற்குப் பக்கத்திலிருந்து கத்துவது கேட்டது.'' உனது நல்லதுக்காக நான் உழைத்து சம்பாதித்த பணத்தைக் கொண்டு புத்தகம் வாங்கித் தருகிறேன். ஆனால் இனிப்பு வாங்க என்னிடம் பணம் இல்லை. உன்னைத் தேனீர் விருந்து வைக்கச் சொல்பவர்களிடமே நீ அதைக் கேள்.''

உண்மை வெளிப்பட்டுவிட்டது. பையனின் அப்பா ஒரு உதை கொடுத்தார். நல்ல வேளையாக ஒரு மேசை இடையில் குறுக்கிட்டது. இது மேசையை







ஆட்டிவிட்டு சில அரிசி பானைகளை உடைத்தது. தாத்தா பையனைப் பள்ளியிலிருந்து எடுத்துவிடுவது நல்லது என்று சொன்னார். ஆனால் பாட்டி தனது மகனைச் சிறைக்கு அனுப்பத் தயாராக இல்லை. நீண்ட விவாதங்களுக்குப் பிறகு, இன்னும் சில நாள் பையனைப் பள்ளிக்கு அனுப்ப முடிவாயிற்று.

இந்த கேவலத்துக்கு பிறகு, நமது இளம் படிப்பாளி மேலும் அதிகமாக படித்து, குடும்பத்தில் தான் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவதாக சபதம் ஏற்றார். தினமும் இருட்டும் வரை, நிறுத்தாமல் மேலும் நன்றாகப் படித்தான். ஆனால் அவனது தொல்லைகளின் இருப்பிடம் அவனது பாட புத்தகம் தான் என்பது அவனுக்குத் தெரியவில்லை.

பாட்டி, தனது மகன் திருமணத்திற்கு முன்னால் இருந்த அளவுக்கு இப்போது நெருக்கமாக இருப்பதில்லை என்றும், குடும்பத்தில் தனக்கு இருந்த முக்கியத்துவம் மெல்ல நழுவுவதாகவும் உணரத் தொடங்கினாள். இப்போது பையன் உரக்கப் படிப்பதை அவள் செவிமடுத்தாள். ''என் குடும்பத்தில் ஒரு அப்பா. ஒரு அம்மா, ஒரு சகோதரன், ஒரு சகோதரி ஆகியோர் உள்ளனர்.'' இதில் தாத்தா, பாட்டி பற்றி எதுவுமே இல்லை. அவள் மிகவும் கோபத்துடன் கத்தினாள். ''எனவே இந்த வீடு முழுவதும் உங்களுக்குத்தான் எனக்கு இடம் இல்லை'' அவள் கோபத்தில் ஒரு செங்கல்லை எடுத்து இரும்புப்பானையில் உடைத்தாள்.

''இனியும் நீங்கள் கோபப்படவேண்டாம்.'' பையனின் அப்பா சொன்னார். ''இது போன்ற புத்தகத்தை நாம் இனி மேல் அவனைப் படிக்கவிட வேண்டியதில்லை. பதிலாக நான் சிறைக்குச் செல்கிறேன்.

எனவே மறுநாள் அப்பா ஒரு பகல் வேலைக்காரனை விடுவித்தார். பள்ளியில் ஆசிரியர் பையன் வரவில்லை என்பதைத் தனது பதிவேட்டில் குறித்தார்.

நன்றி: பசித்த தலைமுறை
சிந்து பதிப்பக அறக்கட்டளை,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை -14

## ரப்பர் எதற்கு?

பேரறிஞர் அண்ணா அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்ற நாள் அது. பள்ளிப் பிள்ளைகளுக்குப் பரிசுகள் வழங்க வேண்டும் என்று, கம்பெனியில் ஒருவரை அனுப்பி நோட்டு பென்சில் எல்லாம் வாங்கி வரச் சொன்னார். பெரிய பெட்டி நிறைய வந்திறங்கின. வாங்கி வந்தவர் பென்சில் அழிக்கும் ரப்பர் வாங்கிவர மறந்து விட்டார். இதை இவர் கவனிக்கவில்லை. காரில் ஏறி ஒவ்வொரு பள்ளிக் கூடமாகப் போய் பிள்ளைகளுக்கு நோட்டு பென்சிலை எடுத்தெடுத்துக் கொடுத்துக் கொண்டேயிருந்தார்.

ஒரு துருதுருப்பான பையன் கேட்டான். ''ரப்பர் இல்லையா எங்களுக்கு?'' என்று அதற்கு அவர் இனிமையாக இப்படிப் பதில் சொன்னார். ''காஞ்சிபுரம் வெற்றி பெற்றாச்சு, இனி கல்வி நல்லா வளரும், அதனாலே, பிள்ளைகள் யாருமே இனி தப்பு போட்டு எழுதமாட்டீங்க, தப்பு இல்லையின்னா, பிறகு ரப்பர் எதற்கு?'' என்று ஓர் இனிமையான பதிலைச் சொன்னார். பிள்ளைகள் மனம் குளிர்ந்தது.

**கலைவாணர் நினைவுகள்**



1. மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன் தலைமையில் கலைவாணர் அர[illegible] உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழக மாநாட்டில் "முத்தமிழ் வித்தகர்" என்ற பட்டத்தைக் கவிஞர் வைரமுத்துக்கு மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் திரு மு.க. ஸ்டாலின், இயல் இசை நாடக மன்றச் செயலாளர், திரு சந்திரசேகர் உடன் உள்ளனர். (23.7.96)

2. அஞ்சுகம் மேல்நிலைப் பள்ளியின் முப்பெரும் விழாவில் ,அரசுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் பரிசுகள் வழங்கினார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு நாஞ்சில் கி. மனோகரன் உடன் உள்ளார். (29.7.96)







3. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை மகாராட்டிர மாநில முன்னாள் ஆளுநர் திரு சி. சுப்ரமணியம் அவர்கள் சந்தித்தார். (2.8.96)

4. சென்னையில் அமைக்கப் பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை திருமதி ருக்மிணி லட்சுமிபதி அவர்களின் திருவுருவச் சிலையை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார். முன்னாள் ஆளுநர் திரு சி. சுப்ரமணியம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (6.8.96)





5. நாடாளுமன்றச் சபாநாயகர் திரு பி.ஏ. சங்மா அவர்கள், தமிழக சட்டப்பேரவைத் தலைவர் திரு பிடி.ஆர். பழனிவேல்ராஜன் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார். சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு பரிதி இளம்வழுதி உடன் உள்ளார். (2.8.96)

6. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களைக் கடலோர காவல்படைத் தலைமை இயக்குநர் வைஸ் அட்மிரல் பி.ஜே. ஜேக்கப் சந்தித்துப் பேசினார். மாண்புமிகு முதல்வரின் செயலர் திரு டி.முருகராஜ், இ.ஆ.ப., உடன் உள்ளார். (3.8.96)

7. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சேப்பாக்கம் தொகுதியில் உள்ள சத்தியவாணி முத்து நகரில் தீயினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு அப்பகுதி மக்களுக்கு ஆறுதல் கூறினார். (3.8.96)





சென்னைக்கு அருகே

## ஆப்டிக்கல் ஃபைபர் கேபிள்' திட்டம் தொடக்கம்

தமிழ்நாடு டெலிகம்யூனிகேஷன்ஸ் லிமிடெட் (டெலிகம்யூனிகேஷன்ஸ் கன்ஸல்டன்ட்ஸ் இந்தியா லிமிடெட்) மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) ஆகியவற்றால் வளர்ச்சியுறும் ஓர் நிறுவனம், 13.5.1988 அன்று, அமெரிக்காவைச் சேர்ந்த எஸெக்ஸ் க்ரூப் நிறுவனம் தந்த தொழில் நுட்பத்துடன் தொலைத்தொடர்புக்கான 'ஜெல்லி ஃபில்டு கேபிள்களைத் தயாரிக்க அரக்கோணம் அருகே தொழிற்சாலையைக்கொண்டு துவக்கப் பட்டது. டெலிகம்யூனிகேஷன்ஸ் கன்ஸல்டன்ட்ஸ் இந்தியா லிமிடெட்டும் (26% பங்கும்) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (25%) சேர்ந்து 51% பங்கை உடையதாக உள்ளன; மீதி உள்ள 49% இந்திய மக்களுக்கு உரிய பங்காக உள்ளது. தமிழ்நாடு டெலிகம் யூனிகேஷன்ஸ் லிமிடெட், ஜெல்லி ஃபில்டு கேபிளைத் தயாரிக்க 6.25 LCKM திறத்துடன் வெற்றிகரமாக நிறுவி, தொடக் கக்காலத்தை வெற்றியுடன் செயல்படுத்தி 1993-94 முதல் இலாபகரமான செயல்பாடு களில் ஈடுபட்டு வருகிறது.



ஆப்டிகல் ஃபைபர் கேபிள் என்பது தொலை தொடர்புத் தேவைகளில் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் முன்னுரிமை கொடுக்கப்பட்டு வருகின்ற ஒன்றாகும். தமது இயக்கத்தைப் பல்வகைப் படுத்தும் முகமாக தமிழ்நாடு டெலிகம் யூனிகேஷன்ஸ் லிமிடெட், ஆப்டிகல் ஃபைபர் கேபிள் தயாரிக்க இணைந்த செயல்பாட்டுக்காகவும் தொழில்நுட்ப மாற்றத்திற் காகவும் ஃப்யூஜிகுரா லிமிடெட் ஜப்பானுடன் இணைந்துள்ளது.

ஜப்பானில் ஆப்டிகல் ஃபைபர் கேபிள் தயாரிப்பாளர்களில் ஃப்யூஜிகுரா தலைசிறந்த தயாரிப்பாளர் மற்றும் உலகில் ஆப்டிகல் ஃபைபர் கேபிள் தயாரிப்பாளர்களிடையே ஆறாவது இடத்தைப் பெற்றிருக்கின்றனர். ஃப்யூஜிகுரா லிமிடெட் தற்போது ஆப்டிக்கல் ஃபைபர் கேபிளுக்கான தொழில் நுட்பத்தை மட்டும் தரும்; பிறகு அது சம்பந்தமான பிறபொருளைத் தயாரிக்க உதவும். முதலில் 10% மட்டும் எடுத்துக் கொண்டு பிறகு கூடுதல் 10% எடுத்துக்கொள்ளும்.

இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ. 41.57 கோடி ஆகும். இந்தத் திட்டம் சென்னை அருகே மறைமலை நகரில் நிறுவப்பட உள்ளது. திட்டம் மார்ச் 1997-க்குள்ளாக முடிவடைந்து உற்பத்தியும் உடனே ஆரம் பிக்கப்படும். இந்தத் திட்டத் திற்கான நிதி ஏற்கெனவே உள்ள மற்ற பங்குதாரர்களிடமிருந்து சமமாக ரூ. 24.38 கோடியாகவும் ரூ. 17.19 கோடி ஐ.ஸி.ஐ.ஸி.ஐ. செக்யூரிட்டீஸ் அண்ட் ஃபை னான்ஸ் லிமிடெட்டிமிருந்தும் பெறப்படும்.



மேற்குறிப்பிட்ட கூட்டுத் திட்டத்திற்கான ஒப்பந்தம் தமிழ்நாடு டெலிகம் யூனிகேஷன்ஸ் லிமிடெட், டிட்கோ மற்றும் ஃப்யூஜிகுரா இடையே 2.8.1996 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் சென்னையில் கையெழுத்து ஆயிற்று.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ. 4157 கோடி ஆகும். இது சென்னை - மறைமலை நகரில் நிறுவப்பட உள்ளது.





### 100 கோடி ரூபாய்க்கு வெளிச்சந்தைக் கடன் அரசு திரட்டுகிறது.

தமிழ்நாடு அரசு 100 கோடி ரூபாய் வெளிச் சந்தைக் கடன் திரட்ட உள்ளது கடன்களில் வெளியீட்டுத்தொகை 100 சதவிகிதமாகும். இக்கடன்களில் திரட்டப்படும் தொகை அரசின் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் அரசுத் திட்டங்களின் முதலீட்டு செலவினங்களுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. மைய அரசின் அனுமதியுடன் திரட்டப்படும் இக்கடன் தொகைக்கு ஆண்டுக்கு 13.85 சதவீதம் வட்டி தரப்படும். வட்டித் தொகை ஒவ்வொரு ஆண்டும் இரண்டு தவணைகளில் செலுத்தப்படும். இக்கடன்கள் 2006 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் நாள் திருப்பித் தரப்படும். இதற்குரிய முதலீடுகள் இந்த மாதம் (ஆகஸ்டு) 12 ஆம் நாள் முதல் பெற்றுக்கொள்ளப்படும். இதற்குரிய விண்ணப்பத் தாள்கள் சென்னை இந்திய ரிசர்வ் வங்கியிலும் மாவட்டத் தலைமை இடங்களிலுள்ள பாரத ஸ்டேட் வங்கியில் சில கிளைகளிலும் கிடைக்கும் என்று தமிழ்நாடு அரசு அவித்துள்ளது.

சென்னைக்குக் கிருஷ்ணா நதி நீர் அடுத்த மாத (செப்டம்பர்) இறுதிக்குள் கிடைக்கும் என்றும் அதற்கான பணிகள் விரைவாக நடைபெற்று வருவதாகவும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்

### தமிழ் நாட்டு ஏரிகளை மேம்படுத்த ஜப்பான் நிதியுதவி

தமிழ் நாட்டிலுள்ள 2500 சிறு பாசன ஏரிகளை மேம்படுத்த சுமார் 270 கோடி ரூபாய் நிதியுதவி ஜப்பான் நாட்டிலுள்ள அயல்நாட்டுப் பொருளாதார நிதி நிறுவனத்தின் மூலம் அளிக்க ஜப்பான் முன்வந்துள்ளது. முதல் கட்டமாக அந்நாட்டு ஐந்து பேர் அடங்கிய நிபுணர் குழு ஒன்று பெருந்திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான வரைமுறைகளை முடிவுசெய்ய 1.8.96 அன்று மாண்புமிகு தமிழகப் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களைச் சந்தித்தது. விரைவில் திட்டம் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் கொண்ட முன்னோடி அறிக்கையைத் தயாரித்து வழங்க வேண்டும் என்று அக்குழுவினரை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்

### புதிய சொற் பொழிவுகள்

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் 1973 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வரும் தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றத்தில் மூன்று அறக் கட்டளைகள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன. அந்த அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் 5.8.96 அன்று தொடங்கிவைத்தார். தென் இந்திய மக்களின் வாழ்க்கை மற்றும் பண்பு கூறுகளைப் பற்றிய ஆய்வுச் சொற்பொழிவுகள் இதில் இடம்பெறவுள்ளன.

# சுவையான செய்திகள்

## வெங்காய பிஸ்கட்:

'நியூட்ரின்' சாக்லேட் கம்பெனி யினர் வெங்காயச்



சுவையோடுகூடிய பிஸ்கட் ஒன்றைப் புதிதாக 'டின்'களில் அடைத்து விற்பனை செய்துவந்தனர்; கேரளா முதலான மாநிலங்களில் இதன் விற்பனை அதிகமாகிவிட்டது. ஆகவே, அந்த வெங்காய பிஸ்கட்டை அவர்கள் 150 கிராம் பாக்கெட்டாகவும் உருவாக்கி விற்கிறார்கள். 14 ரூபாய் விலை கொண்ட அதன் விற்பனை எப்படியிருக்குமோ தெரியவில்லை.

## புகை பிடிக்காதீர்!

சீனாவில் உள்ள ஷ்யாங்காய் நகர வீதியில் யாரும் புகைப் பிடிக்கக்கூடாது என அரசு தடை விதித்திருக்கிறது. 400 மீட்டர் நீளமுள்ள அவ்வீதியில் உள்ள கடைகள், பள்ளிகள், தனியார் அமைப்புகளுக்கெல்லாம் இது குறித்த அரசு ஆணைகள் மிகக் கடுமையோடு அனுப்பப்பட்டுள்ளன. 1984ல் இதே ஷ்யாங்காய் நகரில் பொது இடங்களில் யாரும் புகைபிடிக்கக் கூடாதெனத் தடைவிதிக்கப்பட்டது. புகையால் வரும் கேடுகள், பற்றி விஞ்ஞானிகள் தெரிவித்த பயங்கர முடிவுகளே இதற்குக் காரணமாம்!



ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேர்ந்து 'அரியான்' என்ற விண்வெளிக் கலங்களை உருவாக்கி வருகின்றன; அமெரிக்காவில், பிரெஞ்சு-கயானாவில் செலுத்தப்பட்ட 'அரியான்-5' என்கிற ராக்கெட் புறப்பட்ட நான்கே நொடிகளில் தாறுமாறாக செல்லத் தொடங்கியது. அதிர்ந்து போய்விட்ட விஞ்ஞானிகள் அதை நடுவானிலேயே வெடிக்கச் செய்துவிட்டனர். அதைச் சிதைத்ததால் உண்டான இழப்பு மட்டுமே ஏறத்தாழ இரண்டாயிரம் கோடி ரூபாய்.

## செல்லுலரால் ஆபத்தா?

செல்லுலர் போனைப் பயன்படுத்துவதால் மூளைக்கட்டி வரும்; ஹேர் டிரையரால் பெருந்தீமை ஏற்படும். அதிக அழுத்தத்தில் உள்ள மின் கம்பிகள்தான் தற்கொலைகள் அதிகம் ஏற்படக் காரணம் - என்றெல்லாம் பேசப்படுவது பற்றி ஓர் ஐந்தாண்டுக்கால ஆய்வு நடத்த சுவிட்சர்லாந்தில் இருக்கின்ற ஜெனீவாவில் ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆய்வு நமது உடல்நலத்திற்கு மின் மற்றும் காந்தப் புலன்களால் கேடு உண்டாகுமா என்பது பற்றி ஆராய்ந்து தெரிவிக்குமாம்.







## உணவுக்கேற்ற மருந்து

சிங்கப்பூரைச் சேர்ந்த தேசியப் பல்கலைக்கழகத்தோடு மருந்துப் பொருட்கள் பற்றிய ஆராய்ச்சிக்கென 'எலி லில்லி' என்ற அமெரிக்க நிறுவனம் கூட்டுச் சேர்ந்திருக்கிறது. சிங்கப்பூரில் வாழும் பலநாட்டு மக்களும் பல்வேறு உணவுப் பழக்க வழக்கங்களைக் கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள சுற்றுப்புறச் சூழ்நிலைகள் சில நாட்டு மக்களுக்கு ஒத்துக்கொள்ளுவதில்லை; இதையெல்லாம் கருத்தில் கொண்டு அதற்கேற்ற மருந்துகளைத் தயாரிக்கவிருக்கும் இந்த நிறுவனம் அடுத்த ஆண்டுமுதல் செயல்படத் தொடங்குமாம்.

## 'எஸ்டீம்-ஏ.எக்ஸ்'

'மாருதி உத்யோக் லிமிடெட்' நிறுவனத்தினர் 'எஸ்டீம்' வகையில் இன்னொரு புதுவகைக் காரை உருவாக்கியிருக்கிறார்கள்; ரூ. 5.42 இலட்சம் விலை கொண்ட இந்தக் கார் 'எஸ்டீம்-ஏ.எக்ஸ்' எனப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. தானியங்கிக் கியர் உடைய இவ்வகைக் கார்களின் மூலம் நெரிசலான பகுதிகளில் பயணம் செல்லுவது எளிதாக இருக்குமாம்.

## சாஃப்ட்வேர் ஏற்றுமதி

இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர்களின் அளவு அதிகரித்துள்ளது. 'வெஞ்சர் கேபிடல்' எனப்படும் முதலீட்டுத் திட்டங்களின் மூலமே இச்சாதனை ஆண்டுக்கு 50 சதவிகிதம் என்ற அளவில் நிகழ்த்தப்பட்டுவருகிறது. 1986ல் கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் துறையின் மூலம் கிடைத்த வருவாய் ரூ. 140 கோடி என்றால், கடந்த நிதியாண்டில் இத்தொகை ரூ. 100 கோடியாக அதிகமாகியிருக்கிறது. உள்நாட்டு விற்பனையை அதிகரிப்பதிலும் தொடர்ந்து முயற்சி மேற் கொள்ளப்பட்டு வருகிறது.



## உணவு உற்பத்தி

இந்தியாவில் இப்போது சுமார் 30,000 விவசாய விஞ்ஞானிகள் இருக்கின்றனர்; 49 மத்திய ஆய்வு மையங்களும், 30 தேசிய ஆராய்ச்சி மையங்களும், 16 திட்ட இயக்குநரகங்களும் உள்ளன. இவர்களின் மூலம் அல்லது இந்த அமைப்புகளின் மூலம் உணவு உற்பத்தியை விரைந்து பெருக்கவேண்டிய அவசியம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. ஏன் தெரியுமா? இப்போது நம் இந்திய மக்கள் தொகை 90 கோடி; 21 ஆம் நூற்றாண்டின் நடுவிலேயே இது 160 அல்லது 180 கோடி என உயரக்கூடும். தற்சமயம் உணவு தானிய உற்பத்தி சுமார் 19.1 டன்தான். அடுத்த நூற்றாண்டில் 50 கோடி டன் உணவு தானியங்கள் தேவைப்படும் அல்லவா? அதற்காகத் தான் சொல்கிறோம், விளை பொருள் உற்பத்திப் பெருக்கத்தில் இப்போதிருந்தே நாம் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்று!



# வேலை கிடைக்கும்

**இரா. சத்பதி இ.ஆ.ப.,**
ஆணையர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
தமிழ்நாடு அரசு

**மா**வட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இயங்கும் தொழில் நெறி வழிகாட்டும் பிரிவானது, அலுவலக வளாகத்திலேயே, பல்வேறு வகையான வேலைவாய்ப்புகளைப் பெற எந்தெந்த வகையான கல்வித் தகுதிகளைப் பெறவேண்டும் என்ற விவரங்களை இளைஞர்கள் பார்வைக்காக விளம்பரப்படுத்துகிறது. இம்மாதிரியான விவரங்கள் நீங்கலாக ஏனைய விபரங்களை, அன்றாடம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் வேலை தேடுவோர்களிடையே சொற்பொழிவாற்றி விளக்கிக் கூறுகிறார். மாநில இயக்கத்தின் மூலம் தொழில் உலகத்திலுள்ள தொழில்கள்பற்றிய விவரங்கள் சிற்றேடுகளாக அச்சிடப்பட்டு பள்ளி இறுதி வகுப்பு மேல்நிலை வகுப்பு மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களிடையே விநியோகிக்கப்படுகிறது. இதன் பயனாக இளைஞர்கள் மாணவப் பருவத்திலேயே தொழில் உலகத்தைப் பற்றி அறிய வாய்ப்பு உருவாகிறது.

பொதுவாக வேலையில் காத்திருப்பவர்கள் அதிக அளவில் இருந்து, வேலைகள் குறைவாக இருக்கும் நிலையில், சில தொழில்களில் பணிக் காலியிடங்களிலிருந்தும் தகுதிபடைத்தவர்கள் இல்லை என்ற நிலை காணப்படுகிறது. உதாரணம் சிறப்புப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், ஆய்வகத் தொழில் நுட்பப் பணியாளர்கள் போன்ற பணிகளாகும்.. இம்மாதிரியான ஆள்பற்றாக்குறையுள்ள தொழில்களைப் பற்றி இளைஞர்களிடையே அவ்வப்போது விவரங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இம்மாதிரியான தகவல்கள், இளைஞர்கள் தங்களைத் தகுதியுடையவர்களாக்கி குறுகிய காலத்திலேயே வேலையில் அமர்த்தப்படச் செய்ய ஏதுவாக அமைகின்றன.

**கண்பார்வையற்றோருக்கான வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம்**

வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து ஓராண்டுக்கு மேல் உயிர்ப்பதிவேட்டில் காத்திருக்கும் கண்பார்வையற்றோருக்கு ஐந்து ஆண்டுகள் காலத்திற்கு வேலைவாய்ப்பற்றோம் நிவாரண உதவித் தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. பட்டதாரிகள் / முதுநிலைப் பட்டதாரிகள். | – மாதம் ரூ. 250/- |
| 2. மேல்நிலைக் கல்வி | – மாதம் ரூ. 200/- |
| 3. எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் அதற்கும் கீழ் | – மாதம் ரூ. 150/- |

**வேலைவாய்ப்பிற்காக நடத்தப் பெறும் போட்டித் தேர்வுகள்**

இன்றைய நிலையில் பெரும்பாலான அரசுத்துறை நிறுவனங்கள் அவற்றிலுள்ள பணிக் காலியிடங்களுக்குப் பணியாளர்களைத் தேர்வு செய்வதற்குப் போட்டித் தேர்வுகள் நடத்துகின்றன. பள்ளியிறுதித் தேர்வுக்கும் குறைவான கல்வித் தகுதியைக் குறைந்த பட்சக் கல்வியாகக் கொண்டுள்ள பணிக் காலியிடங்களைத் தவிர அனைத்துப் பணிக் காலியிடங்களுக்கும் பெரும்பாலான அரசுத் துறை நிறுவனங்கள் போட்டித் தேர்வுகளின் மூலமே பணியாளர்களைத் தேர்ந்து எடுக்கின்றன. இப்போட்டித் தேர்வுகள், பொதுக் கல்வித் தகுதியின் அடிப்படையில் பள்ளியிறுதி அல்லது மேல்நிலை வகுப்பு மற்றும் பட்டப் படிப்பைக் குறைந்த பட்ச கல்வித் தகுதியாக கொண்டவையாகும்.

இந்த இருவகையான போட்டித் தேர்வுகள் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், வங்கிப் பணியாளர் தேர்வு வாரியம் ஆயுள் காப்பீட்டுக் கழகம், இரயில்வே பணியாளர் தேர்வு வாரியம் போன்ற பெருமளவில் பணியாளர்களைப் பணியமர்த்தும் தேர்வு செய்யும் நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன.

இது நீங்கலாக, தொழில் நுட்பப் பணி காலியிடங்களுக்காக சம்பந்தப்பட்ட தொழிலில் பட்டம் மற்றும் பட்டயப் படிப்புப் பயின்ற இளைஞர்களுக்காகவும் போட்டித் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. நாட்டின் பாதுகாப்புத் துறையிலுள்ள உயர்நிலைப் பணிகளுக்குத் தனியாக தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

இம்மாதிரியான போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள வேண்டியதன் அவசியம் வேலைதேடும் இளைஞர்களிடம் பிழைப்பு நெறிச் சொற்பொழிவுகளில் வலியுறுத்திச் சொல்லப் படுகின்றது. மேலும், இம்மாதிரியான போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றிபெற மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய முழு விவரங்கள் அவ்வப்போது நடத்தப்பெறும் வேலை வாய்ப்புக் கருத்தரங்குகளின் வாயிலாக இளைஞர்களுக்கு வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் கீழ்க் கண்ட போட்டித் தேர்வுகளுக்காக ஆதிதிராவிட இளைஞர்களுக்கு இலவச பயிற்றுவிப்பு வகுப்புகள் நடத்தப் படுகின்றன.

**மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

1. கீழ்நிலை எழுத்தர் பதவி
2. உயர்நிலை எழுத்தர் / ஆடிட்டர்கள் / டிவிஷனல் அக்கவுண்டன்ட் பதவிகள்
3. வருமானவரி மற்றும் கலால் வரி ஆணையாளர் பதவிகள்
4. சுருக்கெழுத்தாளர் பதவி.
5. உதவியாளர் பதவி.

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

தொகுதி 4-ல் சேர்க்கப்பட்டுள்ள பதவிகள்

வங்கிப் பணியாளர் தேர்வு வாரியம்:

1. எழுத்தர் பதவி
2. அலுவலர் பதவி

இது நீங்கலாக, தமிழ்நாடு காவல் துறையில், முதல் நிலைக் காவலர் பணிக் காலியிடத்திற்கான தேர்வையொட்டி, உடற்பயிற்சி தேர்வு மற்றும் எழுத்துத் தேர்வு ஆகியவற்றில் ஆதிதிராவிட இளைஞர்கள் அதிக அளவில் பயனுறும் வகையில் பயிற்றுவிப்பு வகுப்புகள் நடத்தப் படுகின்றன.

**தமிழ்நாட்டில் வேலையில்லாதோர்:**

1995 டிசம்பர் 31-ல் தமிழ்நாட்டில் 34,78,637 நபர்கள் வேலை வாய்ப்பிற்காகக் காத்திருந்தனர். இவர்களில் 22,84,025 நபர்கள் பள்ளி இறுதிக் கல்வி அல்லது அதற்கு மேல்கல்வி பெற்றவர்கள் ஆவர். மாத ஊதியம் பெறும் வேலைக் காலியிடங்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருவதால் சுயவேலைவாய்ப்பிற்கான முயற்சிகள் இத்துறையால் எடுக்கப்பட்டு வருகிறது.

## அதிகாலையில் எழுந்திருக்க முடியுமா?

**ம**க்கள் நல்வாழ்வுத் துறை மானியக்கோரிக்கை மீதான விவாதம் நடந்தது. விவாதத்துக்கு மாண்புமிகு அமைச்சர் ஆர்க்காடு திரு. வீராசாமி பதிலளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

சித்த மருத்துவம் சிறந்த மருத்துவமாக வளர்ந்து வருகிறது. மருத்துவத்தின் சிறப்பு வெளியே கொண்டுவரப்படும். எலும்பு முறிவுக்குப் புத்தூருக்கு செல்பவர்களைத் தடுக்க சென்னை அண்ணா நகரில் சிகிச்சை அளிக்கப்படும். யோகா சிகிச்சையில் அரசு அக்கறை செலுத்தும். மழைக்காலத்தில் எனக்கு மூச்சுத் திணறல் ஏற்படும். ஊசி போட்டால் இரண்டு நாட்களுக்கு நிவாரணம் கிடைக்கும். ஆண்டியப்பன் என்பவர் 10 நிமிடம் யோகா பயிற்சி ஒன்றைச் சொல்லிக்கொடுத்தார். இப்போது அந்த நோய் எங்கே போனது எனத் தெரியவில்லை இதனை மாண்புமிகு முதல்வரிடம் தெரிவித்தேன். இப்போது முதல்வரும் தினமும் 15 நிமிடம் யோகா பயிற்சி செய்கிறார்.

திரு. திருநாவுக்கரசு: எல்லா உறுப்பினர்களும் ஆண்டியப்பனைத் தேடிப் போக முடியாது. எனவே, அமைச்சரே எல்லாருக்கும் யோகா பயிற்சி சொல்லிக் கொடுத்தால் நல்லது.

அமைச்சர் ஆர்க்காடு திரு. வீராசாமி: அது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல. மூச்சுப் பயிற்சி தான்.

முதல்வர் கலைஞர் : யோகா பயிற்சி அதிகாலையில் செய்ய வேண்டும். அதற்குக் காலையிலேயே எழுந்திருக்க வேண்டும். திருநாவுக்கரசால் அதிகாலையில் ஐந்து மணிக்கெல்லாம் எழுந்திருக்க முடியுமா? என்றவுடன் அவையில் சிரிப்பொலி எழுந்தது.

## பேரவையில் நகைச்சுவை

**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**

இது ஒரு தமிழக அரசுக்குச் சொந்தமான நிறுவனமாகும். படித்த மற்றும் தொழில் திறனுள்ள இளைஞர்கள் அயல்நாடுகளில் வேலைவாய்ப்புகள் பெற உதவுவதே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்தத்துறையில் பெரும்பாலும் தனியார் நிறுவனங்களே ஈடுபட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத்தர அதிகமான தொகையை இளைஞர்களிடமிருந்து பெறுகின்றன. இவ்வாறில்லாமல் அரசு நிறுவனத்தின் உதவியுடன் இளைஞர்களுக்கு இதுபோன்ற வாய்ப்பை அளிப்பதற்கே இந்நிறுவனம் 30.11.78 அன்று நிறுவப்பட்டது.

தமிழக அரசின் தொழிலாளர்நலம் மற்றும் வேலைவாய்ப்புத்துறைச் செயலாளர் இந்நிறுவனத்தின் தலைவராகவும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராகவும் உள்ளனர். இந்நிறுவனம் துவங்கப்பட்டதிலிருந்து இதுவரை ஏறக்குறைய 4700 பதிவுதாரர்களை வெளிநாடுகளில் பணியில் அமர்த்தியுள்ளது.

இந்நிறுவனத்தில் இந்தியாவில் உள்ள எந்தப் பகுதியில் வசிக்கும் மனுதாரர்களும் பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்யும் மனுதார்கள் தொடர்புள்ள தொழிலில் 2 ஆண்டுகள் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மற்றும் 'பாஸ்போர்ட்' வைத்திருக்க வேண்டும். இவை இல்லாத மனுதாரர்களின் பெயர்களும் பதிவு செய்யப்பட்டு 'ரிசர்வில்' வைக்கப்படுகின்றன. மனுதாரர்களிடமிருந்து கல்வித் தகுதிக்கேற்றவாறு ரூ. 150/- முதல் ரூ. 300/- வரை பதிவுக்கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. சவூதி அரேபியா, குவைத், லிபியா, ஐக்கிய அரபுக் குடியரசு போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் பல இந்நிறுவனத்தின் மூலம் பணியாளர்களைத் தேர்வு செய்கின்றனர்.

சவூதி அரேபியாவிலுள்ள சுகாதாரத்துறை, ஷார்ஜாவிலுள்ள தண்ணீர் மற்றும் மின்வாரியத் துறை போன்ற அரசு நிறுவனங்களுக்கு இந்நிறுவனத்தின் மூலம் பணியாளர்களைப் பணியில் அமர்த்துகின்றனர். அயல்நாடுகளில் இந்நிறுவனம் பணியாளர்களைப் பணியில் அமர்த்த வேலையளிப்போரிடமிருந்து எந்தக் கட்டணமும் வசூலிப்பதில்லை.

அயல்நாடுகளில் பணியில் அமர்த்த தனது நிர்வாகச் செலவின் பொருட்டு குறைவான பணிக்கட்டணம் மட்டுமே மனுதாரர்களிடமிருந்து பெறப்படுகிறது. இந்நிறுவனத்தின் மனுதாரர்கள் பற்றிய விவரங்கள் கணிணி மயமாக்கப்பட்டுள்ளன. தற்போது ஏறக்குறைய 13,000 மனுதாரர்கள் அயல்நாடுகளில் வேலை வாய்ப்பு வேண்டி இந்நிறுவனத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். அயல் நாடுகளிலிருந்து மேலும் வாய்ப்புக்களைப்பெற வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரங்கள் மற்றும் இந்தியாவில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் ஆகியவற்றுடன் இந்நிறுவனம் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

இந்நிறுவனம் சென்னை, செங்கை எம்.ஜி.ஆர்., தென்னார்க்காடு வள்ளலார், விழுப்புரம் ராமசாமி படையாட்சியார், வடஆர்க்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, பெரியார், நீலகிரி மற்றும் பாண்டிச்சேரி (யூனியன் பிரதேசம்) ஆகிய மாவட்டங்களில் உள்ள மனுதாரர்களுக்கு 'பாஸ்போர்ட்' எடுத்துக் கொடுக்கும் பணியையும் செய்து வருகிறது. தனது பணியைப் பரவலாக்கும் நோக்கத்துடன் விமானப் பயணச்சீட்டு விற்கும் பணியையும் துவக்க இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது.

### முன்னேற வழி

முன்னேற வேண்டுமா? முதலில் நம்மிடம் இருப்பதைப் பயன்படுத்த வேண்டும். நம்மிடம் இருப்பது நம் அறிவு, நம் உடல், நாம் கற்றுக்கொண்ட தொழில், நமது உறவினர்கள், நமது நண்பர்கள், நாம் வாழும் சூழ்நிலை இவற்றையெல்லாம் நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். பிறகு அவைகளை எப்படிப் பயன்படுத்தினால் நாம் முன்னேற முடியும் என்று சிந்திக்க வேண்டும். அப்போது முன்னேறுவதற்கான வழிக் கதவு தானே திறந்து விடும்.

– ஆண்ட்ரு கார்னஜீ







# நீர் மேலாண்மை

**சிவ. சூரியன், இ.ஆ.ப.,**
வேளாண்மை கூடுதல் இயக்குநர்
(பணி மேலாண்மை)
தமிழ்நாடு அரசு

**நீரின்றி அமையாது உலகு! இந்த நில்லா உலகில் நிலைத்துவிட்ட உண்மை இது.**

**கடலின் நடுவில் இருந்து கொண்டு ஒருவன் வருத்தப் பட்டானாம்! ''கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் தண்ணீர் - ஆயினும், தாகம் தணிக்க ஒருவாய் தண்ணீர் இல்லையே!''**

**ஆம், ஊரெல்லாம் தண்ணீர் இருந்தாலும் அதனை உபயோகிக்க முடியாவிட்டால் அத்தண்ணீரால் யாது பயன்?**

**அகில உலகப் பரப்பில் எண்பது விழுக்காட்டைத் தண்ணீர் தன்னகத்தே வைத்துக் கொள்கிறது. காடும், மலைகளும், நாம் வசிக்கும் நிலப்பரப்பும், வேளாண்மை நிலங்களும் இருபது விழுக்காடுதான் மட்டுமே! இப்படி எண்பது சதவீதமாகப் பரந்துகிடக்கின்ற நீர்ப் பரப்பில் 97% உப்பு நீராய்க் கடலில் அலையோசை எழுப்புகிறது.**

**வடதுருவத்திலும், தென் துருவத்திலும் 2% பனிக் கட்டியாகப்படுத்துக்கொண்டிருக்கிறது.**

**குடிநீருக்கும், வேளாண்மைக்கும், தொழில் துறைக்கும் பயன்படுத்தப்படுவது மீதமுள்ள ஒரு சதவீதத் தண்ணீர் மட்டுமே.**

**என்ன, வியப்பாக உள்ளதா? அதுதான் உண்மை!**

***நிற்காமல் நடக்கும் நீர் சுழற்சி***

**வானில் பறக்கலாம், மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம்.**





அடுத்து சிகரத்தில் அடியெடுத்து வைக்கலாம். கடலில் மிதக்கலாம். வினாடி நேரத்தில் இவ்வுலகின் எப்பகுதியையும் அழிக்கலாம்.

அணுவைப் பிளந்துவிட்டோம். ஆற்றலை வளர்த்துக்கொண்டோம். அறிவை உயர்த்திக் கொண்டோம். ஆனால் நீர் வளத்தை உற்பத்தி செய்வோம் என்ற உறுதியை விஞ்ஞானம் இன்றளவும் தரமுடியவில்லை.

இயற்கையின் அற்புதமான பொருள் தண்ணீர். அரிய பொருள் வானத்தில் கதிரவன், கீழே கடல் நீர். கதிரவன் வெப்பத்தில் காய்ந்து, கடல் நீர் ஆவியாகி, வானோக்கிச் செல்கிறது. மேகமாய்ப் பயணிக்கிறது. மென் காற்றால் தழுவப்பட்டு, மழையாகிப் பொழிகிறது. நில மங்கையைத் தழுவுகிறது. சிற்றோடையாய், நதியாய், வெள்ளமாய்க் கடலோடு கலக்கிறது. ''நீர்ச் சுழற்சி நிற்காமல் நடக்கிறது. வான் மழையின் சிறப்பே இதுதான்.''

நிலத்தைத் தோண்டும்போது தண்ணீர் கிடைக்கிறது. தங்கம் கிடைக்கிறது. நிலக்கரி கிடைக்கிறது. இரும்பு கிடைக்கிறது. இல்லாத பொருள் இல்லை என்று சொல்லும் வண்ணம் உலோகங்கள் பூமிக்குள் புதைந்திருக்கிறது.

பெட்ரோல், எண்ணெய், உலோகங்கள் ஒரு நாள் இல்லாமல் போகலாம். ஆனால் நீர் என்றும் கிடைக்கும். கடல் இருக்கும்வரை, கதிரவன் இருக்கும் வரை,நீர்ச் சுழற்சி இருக்கும் வரை தண்ணீர் கிடைக்கும்.

ஆற்றங்கரையோரம் மனிதன் வாழத் தலைப்பட்டதற்குக் காரணமே குடிநீருக்காகத் தான். நீரின் செழுமை நாகரிகத்தை வளர்த்தது. ஆற்றங்கரை, நாகரீகத் தொட்டில்களாயிற்று.

ஆற்றின் எல்லையைத் தாண்டி, பூமிப் பரப்பில் மனிதன் வாழ முற்பட்டபோது, தண்ணீர் எடுத்துச் செல்ல முற்பட்டான். வாய்க்கால் வெட்டினான், குளம் வெட்டினான், கிணறு தோண்டினான். தனக்குப் பயன் படுத்தினான். வீட்டு விலங்குகளுக்குப் பயன்படுத்தினான். வேளாண்மைக்குப் பயன் படுத்தினான்.

விஞ்ஞானமும் நாகரீகமும் வளர்ந்தது. தொழில்கள் பெருகின. அத்துடன் மக்கள் தொகையும் பெருகியது. அதனால் எல்லாத் துறைகளிலும் உற்பத்தி அதிகம் வேண்டும் என்ற நிலை உண்டானது.

மக்களுக்கு உண்ண உணவு வேண்டும். உடுக்க உடை வேண்டும். இருந்து வாழ்க்கை நடத்த வீடு வேண்டும். உணவு உற்பத்தியைப்





பெருக்க நீர் வேண்டும். நீர் வளம் இல்லாமல் பெட்ரோல் வளம் நிறைந்த நாடுகளும் நீரைத் தேடுகின்றன.

பணத்தை வாரியிறைக்கின்றன. பச்சைச் செடிகளை, பசுமரத்தை, பழச்சோலைகளைக் காணத் துடித்துச் செயல்படுகின்றன. ''நீரின்றி அமையாது உலகு'' என்று சொன்னதன் பேருண்மை உலகுக்குத் தெரியலாயிற்று.

ஒரு பருவத்தில் வறட்சி, மற்றொரு பருவத்தில் வெள்ளம். வான்மழை வருவது தடைப்பட்டால், வறட்சி; வான்மழை கொட்டினால் வெள்ளம். வறட்சியை வெல்ல வேண்டும், வெள்ளத்திலிருந்து மீள வேண்டும். ஒரு பகுதியில் கிடைக்கின்ற மழை அளவில் எந்த மாற்றமும் இல்லை என்கிறது விஞ்ஞானம். இந்த அடிப்படையில் விஞ்ஞானம் திட்ட மிடுதலுக்கு நம்மை அழைத்துச் செல்கிறது.

எனவே ஒரு சதவீதமாய் ஒடுக்கப் பட்டிருக்கும் நீரை முழுமையாக விரைய மின்றிப் பயன்படுத்த நீரை மேலாண்மை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

திட்டமிடுதல், மேலாண்மை இரண்டும் இரு கண்கள். ஒரு பொருளின் தேவையை, நமக்குக் கிடைக்கின்ற அந்தப் பொருளின் அளவை வைத்துக்கொண்டு மிகச் சரியான முறையில் பயன்படுத்தி, தேவையை நிறைவேற்றிக் கொள்வதே சிறந்த மேலாண்மை. மேலாண்மை எல்லா இடங்களிலும் தேவைப் படுகிறது.

நீர் மேலாண்மை, நில மேலாண்மை, பயிர் மேலாண்மை பூச்சி நோய் மேலாண்மை, உர மேலாண்மை, அரசு மேலாண்மை, ஆட்கள் மேலாண்மை என்று மேலாண்மை இன்று மேலாதிக்கம் பெற்று விளங்குகிறது.

ஒன்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றவள் தன் குழந்தைகளுக்குப் பகிர்ந் தளித்து, சோறூட்டிப் பசியாற்றுகிறபோதே, சிறந்த மேலாலராகிவிடுகிறாள். அடுப்பங்கரை முதல் ஆற்றங்கரை வரை இன்று மேலாண்மை தேவைப்படுகிறது.





இந்தியாவில் கடந்த சில பத்தாண்டுகளாக மேலாண்மை அனைத்துத் துறைகளிலும் அடியெடுத்து வைத்துள்ளது. ஆனால் நீர் மேலாண்மை தமிழகத்திற்குப் புதிதல்ல. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே நீர் மேலாண்மைதமிழகத்தில் வேரூன்றியதால்தான் ஏரிகளையும், குளங்களையும் மன்னர்கள்

வெட்டினார்கள். நீரைத் தேக்கி வைத்து, தேவைக் கேற்பப் பயன்படுத்தி நீர் மேலாண்மையின் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர்.

பருவ மழையின்போது கிடைக்கும் நீரைத் தேக்கி வைத்து, குடிநீருக்கும், வேளாண் மைக்கும் பிற தொழில்களுக்கும் பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளதனால் நீர் மேலாண்மை அவசியமாகின்றது.

அளவுக்கு அதிகமான தண்ணீரானாலும் ஆபத்து தானே! சரியான அளவை அறிந்து திறமையுடன் நீர் மேலாண்மைக் கூறுகளின்படி நிர்வகித்தால் வீணாகும் நீரைச் சேமிப்ப தோடல்லாமல் தேவையறிந்து மற்ற பயிர் களுக்கும் வழங்கி உற்பத்தித்திறனை மேம் படுத்தலாம்.

**தமிழ்நாட்டின் நீர்வளம்**

மேற்பரப்பு நீர் வளம், நிலத்தடி நீர் வளம் என நீர்வளம் இரு வகைப்படும். மழை நீரும் ஆற்று நீரும் மேற்பரப்பு நீர் வளம். நிலத்தடி நீர் வளம், மண்ணுக்குள் இருக்கிறது. இதனை எடுத்துப் பயன்படுத்த வேண்டும். எடுக்கின்ற நீரின் அளவு, மண்ணுக்குள் ஊற்றாய் சுரக்க வேண்டும்.

தமிழகத்திற்குப் பருவமழையால் ஆண்டு தோறும் சராசரியாக 940 மி.மீ மழை கிடைக்கிறது. ஜூன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்குப் பருவக்காற்று மூலம் 305 மி.மீ மழை கிடைக்கிறது. கேரளக் கரையோரம் புறப்படும் மேகக் கூட்டங்கள் மேற்குத் தொடர்ச்சி மலையினால் தடுக்கப்படுவதால் தமிழகத்தில் தென்மேற்குப் பருவக்காற்றால் மழை மிகுதியாய் இல்லை.

அக்டோபர் முதல் டிசம்பர் வரை வட கிழக்குப் பருவக்காற்று மழை கிடைக்கிறது. வங்கக் கடலில் உருவாகும் குறைந்த காற்றழுத்த மண்டலம் காரணமாக, இப்பருவத்தில் 450 மி.மீ மழை கிடைக்கிறது.

ஜனவரி -பிப்ரவரி மாதங்களில் 40 மி.மீ மழையும், மார்ச் முதல் மே முடிய 140 மி.மீ மழையும் கிடைக்கிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 55 பாசன நீர்த் தேக்கங்கள் உண்டு. ஏரிகள் 39,000 இருந்தாலும் 25,600 ஏரிகள் வானம் பார்த்தவை. நீர்ப் பிடிப்புப் பகுதியில் மழை பொழிந்தால் மட்டுமே இந்தக் குளங்கள் நிரம்பும்.

தமிழ்நாட்டில் உள்ள பாசன நீர்த்தேக்கங் களில் மொத்தம் கொள் அளவு 225 டி.எம்.சி. 39,000 குளங்களின் மொத்தக் கொள் அளவு 390 டி.எம்.சி. ஒரு டி.எம்.சி. என்பது 100 கோடி கன அடியாகும். ஒரு கன அடியில் நீரின் கொள் அளவு 28 லிட்டர்.







பருவமழையினால் நமக்கு ஆண்டுதோறும் கிடைக்கும் மொத்த நீரின் அளவு 830 டி.எம்.சி. ஆறுகள் மூலமாக அண்டை மாநிலங்களிலிருந்து வரும் நீர் அளவு 430 டி.எம்.சி. ஆக, நமக்கு மொத்தமாகக் கிடைக்கும் மேற்பரப்பு நீரின் அளவு 1260 டி.எம்.சி. 97 டிஎம்.சி கொள்ளவு கொண்ட 'மேட்டூர் நீர்த்தேக்கம்' மட்டுமே தமிழ்நாட்டின் மிகப்பெரிய நீர்த்தேக்கமாகும். பெரியாறு நீர்த்தேக்கம் மிகப் பழமை யானது.

நிலத்து நீருக்கு ஆதாரம் மழை வளமே. மழை நீரில் 10 அல்லது 20% மண்ணுக்குள் சென்று நிலத்தடி நீர் வளமா கிறது. தமிழ் நாட்டின் பெரும் பகுதி கடினப்பாறைப் படிவங் களால் ஆனதால், திரும்பவும் ஊற்றுப் பெருகும் வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றன. படி வுப்பாறை பகுதியில் அதிக நீர் வளம் சுரக்கும். நிலத்தடி நீர் வளம் வற்றாத சுரங்கமல்ல.

நிலத்தடி நீரின் மொத்த அளவில் 15 சதவீதம் குடிநீருக் கும் தொழிற்சாலைகளுக்கும் ஒதுக்கப் பட்டுள்ளது. மீத முள்ளவை வேளாண்மைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மொத்த நிலத்தடி நீர்வளம் - 30162 மி.கன.மீ.

நிலத்தடி நீர் எடுப்பு - 11987 மி.கன.மீ.

தமிழகத்தின் நீர் வளம் மிகக்குறைவு. ஆண்டுதோறும் 60 லட்சம் எக்டேரில் பயிரிடப் பட்டாலும், 27 இலட்சம் எக்டேர் நிலம்தான் பாசன வசதி படைத்திருக்கிறது.

**மண்ணும் நீரும்**

வேளாண்மைக்கு நீர் வேண்டும். மண்ணின் தன்மைக்கேற்ப, பருவ நிலைகளுக்கேற்ப, நீரைப்பயன்படுத்திட வேண்டும். வேர்களின் மூலம் பயிர்கள் நீரை உறிஞ்சுகின்றன. உறிஞ்சப்படும் நீரில் ஒன்று முதல் மூன்று சதவீதம் மட்டுமே தனது சுய வளர்ச்சிக்குப் பயிர் பயன்படுத்துகிறது. மற்றவை இலைகள் மூலமாக ஆவியாகிவிடுகின்றன.

பயிருக்குப் பாய்ச்சப்படும் நீரில், மண்ணின் 'உச்ச நீர் கிரகிப்பு நிலைக்கு' மேல் உள்ளது. பயிருக்குக் கிடைக்காமல் மண்ணின் அடிப்பாகத்திற்குச் சென்று விடுகிறது.

ஆகவே, பயிரின் தன்மை, நிலத்தின் நீர் கிரகிக்கும் தன்மை ஆகியனவற்றை உணர்ந்து நீர் மேலாண்மை செய்தால், நீர் சிக்கனப்படும். வீணாகும் நீரின் அளவு குறையும். சாகுபடி பரப்பும் கூட்டப்படும்.

**பாசனமும், பயிர்களின் நீர்த் தேவையும்**

பயிருக்குத் தேவையான நீர் பாசனத்தால் கிடைக்கிறது. மழைநீரால் கிடைக்கிறது. மழையாலும் பனியாலும் நீர் கிடைக்காமல், பயிருக்குத் தண்ணீர்த் பற்றாக்குறை ஏற் படும்போது, செயற்கை முறை யால், தேவையான நேரத்தில் தேவையான முறையில் செய யப்படுவதே பாசனம்.

**பயிரின் நீர்த் தேவை என்பது என்ன?**

வெப்பத்தால், காற்றால் மண்ணின் மேல் பரப்பில் ஆவியாகும் நீர், பாசனத்தின் போது விரையமாகும் நீர், மற்றும் பிரத்தியேகச் செயல் களுக்குத் தேவைப்படும் நீர், பயிரின் நீர்த்தேவை எனப்படும்.

மண், பயிர்வகை, பருவகாலம், பயிர் வளர்ச்சி நிலை, சாகுபடி முறைகளைப் பொறுத்து, பயிரின் நீர்த்தேவை மாறுபடும்.

**47 வயது!**

கலைவாணரைப் பார்க்க வந்த ஒருவர் ''அண்ணனுக்கு இப்ப என்ன வயது ஆச்சு'' என்று கேட்டார். உடனே இவர் ''எனக்கா? நாற்பது வயதாகி ஏழு வருசமாச்சு. ஆனால் நாற்பது போதும் அதிக ஆசை எதற்கு என்று அதோடு ஸ்டாப்பண்ணிக் கொண்டேன்'' என்றார். கேட்ட வருக்குச் சிரிப்புத் தாங்க முடிய வில்லை. உடனே மறுபடியும் கலைவாணர் சிரித்துக்கொண்டே ''நாற்பத்தேழு வயது என்றால் கிழவன் மாதிரித் தெரியுது பாருங்க. அதனாலே தான் அப்படிச் சொன் னேன்'' என்று கூறினார். வந்திருந் தவர் விழுந்து விழுந்து சிரித்தார்.

கடைசி காலத்தில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் அவருக்கு ஊசிமேல் ஊசி போட்டார் கள். உடனே டாக்டர்களை நோக்கி சிரித்துக்கொண்டே ''என் உடலில் செருப்புத் தைக்கிறீர்களா?'' என்று கேட்டார். டாக்டர்களுக்கே சிரிப்புத் தாங்க முடியவில்லை.

தமிழகத்தில் சாகுபடியாகும் பயிர்களில் அதிகமான நீர்த் தேவையுள்ள பயிர், நெல் குறைவாக நீர்த் தேவையுள்ள பயிர், பயறு வகைகள்.



**பாசன முறைகளில் நீர் மேலாண்மை**

சரியான முறையில் நீர்ப்பாசனம் செய்வதால் கீழ்க்கண்ட நன்மைகள் உண்டு.

1. சரியான அளவு நீர் நிலத்தில் எல்லாப் பகுதிக்கும் சரிசமமாகப் பரவும்.
2. நீர்ச்சேதம் தவிர்க்கப்படுகிறது. இதனால் கூடுதல் பரப்பு சாகுபடி செய்யமுடியும்.
3. பயிருக்குத் தேவையான நீர், தேவையான அளவு, தேவையான நேரத்தில் கொடுக்கப் படுவதால் கூடுதல் விளைச்சல் உறுதிப் படுத்தப்படுகிறது.
4. மண் அரிப்பு தடுக்கப்படுகிறது.
5. வடிகால் பிரச்சினை ஏற்படாது.
6. உப்புப் படிவம் வேர்ப்பகுதியில் சேராது.
7. அளவான தண்ணீர், உரத்திற்குப் பாதுகாப்பு, உரம் வீணாகாது.

பாசன முறையில் சரியான அளவு நீர் பாய்ச்சாவிட்டால் கீழ்க்கண்ட தீமைகள் உண்டாக வாய்ப்புள்ளது.

1. தேவைக்கு அதிகமான நீரால், நீர் மட்டம் உயரும் வாய்ப்பு ஏற்படும்.
2. வடிகால் வசதி கெடும்.
3. நிலம் நீரில் மூழ்கும்.
4. பயிர் விளைச்சல் குறையும்.
5. மண் அரிப்பு உண்டாகும்.
6. நிலத்தின் மேற்பரப்பில் உவர்ப்புக் கூடும்.
7. உரம், பூச்சி மருந்துகள் உபயோகம் மிகும்.

**பாசன நீர் விரையம்**

அளவற்ற பாசனம், வளைந்து நெளிந்து செல்லும் மண் வாய்க்கால், சமனில்லா வயல், வயல் வழி பாசனம் ஆகியவற்றால் பாசனம் செய்யும்போது பாசன நீர் விரையமாவதுண்டு. இதனை அளவான பாசனம், சமமான வயல், வளைவற்ற நேரான சிமெண்ட் வாய்க்கால், ஆகியவற்றால் பாசன நீர் விரையமாவதைத் தடுக்கலாம்.

**பாசன முறைகள்**

அ. நில மேற்பரப்புப் பாசனமுறைகள்

ஆ. நவீனமுறைப் பாசனம், என இருவகைப் பாசனங்கள் உண்டு.

**அ. நில மேற்பரப்புப் பாசனம்**

பாத்தி பாசனம், நீளப்பாத்தி பாசனம், சால் பாசனம் எனப் பயிர் வகை, மண்வகை, நீர் இருப்புக்கு ஏற்றவாறு பாசனமுறைகளைக் கடைப்பிடிக்கலாம்.

**பாசன மேலாண்மை**

அணைகளைக்கட்டி, நீரைத் தேக்கி, பாசனக் கால்வாய்கள் மூலமாகப் பாசனத்திற்குத் தண்ணீர் விடப்படுகிறது.

மதுரை மாவட்டம் பெரியாறு திட்டப் பாசனப் பரப்பில் கால்வாய்கள் சிமெண்ட் கால்வாயாக மாற்றப்பட்டது. இதனால் நீர் சேதாரம் தடுக்கப்பட்டது. பெரியாறு வைகை மேம்பாட்டுத் திட்டத்திற்கு முன்பு 63,300 எக்டேர் நிலம் பாசனம் செய்யப்பட்டது. விரிவுபடுத்தப்





பட்ட பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் காரணமாக 18,000 எக்டேர் நிலம் ஆயக்கட்டுப்பரப்பில் கட்டப்பட்டுள்ளது.

**நீர் மேலாண்மை**

1. பாசனத்திற்கு விடப்படும் தண்ணீர் தலைமடை, இடைமடை, கடைமடையென எல்லா நிலை நிலங்களுக்கும் சரிசமமாகக் கிடைக்க உறுதி செய்வது சுழற்சி முறைப் பாசனம்.
2. கால்வாய்களில் கிடைக்கும் நீர் அவற்றின் நிலப்பரப்பிற்கேற்ப, பயிர்த் தேவைகளின் அடிப்படையில் கணக்கிட்டு, முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணைப்படி பாசனம் அளிக்கப் படுகிறது. இதனால் தேவைக்கதிகமான பாசனம் தடுக்கப்பட்டு நீர் மிச்சப் படுகிறது.
3. தலைமடை விவசாயி அதிக நீரைத் தேக்கி வைப்பதும், கடைமடைக் காரர் நீர் பற்றவில்லை என்று பரிதவிப்பதும் சுழற்சி முறைப் பாசனத்தால் சீரடைகிறது.

பெரியாறு வைகைப்பகுதியில் நெல்லுக்கு நீர் பாய்ச்சும் போது 6-10 செ.மீ. நீர் நிறுத்தப்பட்டு வந்தது. தொடர்ந்து நீர் நிறுத்தப்பட்டு வந்த நிலையை மாற்றி 5 செ.மீ. நீர் நிறுத்தி நீர் மறைந்தபின் நீர் பாய்ச்சுகிற புதிய முறை புகுத்தப்பட்டது. இதனால் நீர்தேங்குவது தவிர்க்கப்படுகிறது. பயிரின் மொத்த நீர்த்தேவை குறைக்கப்படுகிறது. உற்பத்தித் திறன் உயர்கிறது. 25 முதல் 30 சதவீதம் நீர் சேமிப்புக் கிடைக்கிறது.

தமிழகத்தில் 21 லட்சம் எக்டேர் நிலத்தில், நெல் சாகுபடியாகிறது. ஒரு எக்டேருக்கு நீர் மேலாண்மையினால் 100 கிலோ மகசூல் கூடுதலாய்க் கிடைத்தாலும், மொத்த சாகுபடிப் பரப்பிலிருந்து 2.1 லட்சம் டன் நெல் கூடுதலாகப் பெற முடியும். ஒரு டன் நெல் விலை ரூ. 5000 வீதம் கணக்கிட்டாலும், 105 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைக்கும்.

**ஆ. நவீன முறைகள்**

1. தெளிப்பு நீர்ப்பாசனம், 2. சொட்டு நீர்ப்பாசனம் ஆகிய இரு நவீன முறைகள் நடைமுறையில் உள்ளன.

**1. சொட்டு நீர்ப் பாசனம்**

நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, சாகுபடி பரப்பைக் கூட்டிட, உற்பத்தியைப் பெருக்கிட சொட்டுநீர்ப்பாசனம் உதவுகிறது.

1959ம் ஆண்டில் இஸ்ரேல் நாட்டில் இதனை உருவாக்கினார்கள். பயிருக்குத் தேவைப்படும்

## பேரவையில் நகைச்சுவை

### அதற்குத்தான் உங்களை வெளியூருக்கு அனுப்புகிறோம்

தமிழகத்தில் அண்டை மாநிலங்களில் பொது விநியோக முறை எப்படி உள்ளது என்று கண்டறிந்து அதில் உள்ள சிறப்பு அம்சங்களை தமிழ் நாட்டில் புகுத்த தமிழக எம்.எல்.ஏ.,க்கள் திரு. சுப. தங்கவேலன், திரு. ஞான சேகரன், திரு. ராஜாரெட்டி, திரு. தாமரைக்கனி, திரு. முகமது இஸ்மாயில் திரு. கணேசன் மற்றும் அலுவலர்கள் கொண்ட குழு பிற மாநிலங்களுக்கு அடுத்த மாதம் அனுப்பிவைக்கப்படும், என்று மாண்புமிகு உணவு மற்றும் பொதுவிநியோகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்கள் அறிவித்தார்.

உடனே இருக்கையில் இருந்து எழுந்த தாமரைக்கனி ''வெளி மாநிலங்களுக்கு எங்களை அனுப்பப் போவதாக கூறினீர்கள். அடுத்த மாதம் உள்ளாட்சி தேர்தல் வருகிறது. எனவே எங்களை மாநிலம் விட்டு மாநிலம் கடத்த வேண்டாம். அதற்குப்பின் எங்களை அனுப்பி வைத்தால் நல்லது'' என்று வேண்டுகோள் விடுத்தார்.

பேரவைத் தலைவர் திரு. பழனிவேல் ராஜன் ''அதற்குத் தான் உங்களை வெளியூருக்கு அனுப்புகிறோம்'' என்று சொல்ல, உடனே சபையில் உறுப்பினர்கள் அனைவரும் கொல்லென்று சிரித்தனர்.





நீரை, நீர் விரையமின்றி, குழாய்கள் மூலமாகக் கொண்டு சென்று, பயிரின் வேர்ப்பாகத்தில் 'டிரிப்பர்கள்' மூலமாக நீர்கொடுக்கப்படுகிறது.

**நன்மைகள்**

1. பாசனநீர் சேமிப்பு 50% நீர் ஆவியாதல் நீர்க்கசிவு போன்ற இழப்புகள் இல்லை.
2. வேர்ப்பகுதியில் அளவான ஈரத்தன்மை, சீரான காற்றோட்டப்' வீணாகாத உயிர்ச் சத்துக்கள் பயிர்கள் சீராக வளர உதவுகிறது. 30% கூடுதல் விளைச்சல் கிடைக்கிறது.
3. களைகள் குறைகின்றன.
4. வேலை ஆட்கள் எண்ணிக்கை குறை கிறது.
5. நிலத்தைச் சமன்படுத்தத் தேவை யில்லை.
6. உப்பு நீரையும், தீங்கின்றிப் பயிர் வளர உபயோகிக்க முடியும்.
7. மின்சக்தி குறைப்பு, டீசல் செலவு மிச்சம்.
8. மர வகைகளுக்கு மிகச் சிறந்த முறையில் பயன்படும்.
9. இரவு, பகல் எந்நேரமும் பாசனம் செய்யலாம்.
10. அரசு மானியம் வழங்கப்படுகிறது.

**2. தெளிப்பு நீர்ப் பாசனம்**

வானிறங்கி வரும் மழை நீர்போல, செடிகள் மீது தெளிப்பு நீர் விழுகிறது. செயற்கை மழையாகப் பொழிந்து நீர் விரையமாவதைத் தடுக்கிறது. குறைவான தண்ணீர், கூடுதல் பரப்பு உயர்ந்த உற்பத்தித் தெளிப்பு நீர்ப்பாசனத்தின் மகத்துவமாகும்.

**நன்மைகள்.**

1. இயக்குவது சுலபம். தேவையான நீர் பாய்ச்சியவுடன் மின்விளக்கை அணைப்பதுபோல் நிறுத்திவிட முடியும்.
2. நீர்க்கசிவு இல்லை.
3. குழாய்கள் மூலம் நீர் முழுமையாகப் பயிர் மேல் தெளிக்கப்படுகிறது.
4. நீரின் தேவை 25 முதல் 50 பங்கு குறைகிறது.
5. கூடுதல் பரப்பு சாகுபடிக்கு வழி அமைகிறது.
6. சீரான நீர்த்தெளிப்பு.
7. பூமியில் எல்லா இடங்களிலும் ஒரே அளவு ஆழத்திற்கு நீர் ஊறி இருக்கும்.
8. பயிர் வளர்ச்சி சீராக இருக்கும்.
9. நிலத்தைச் சமன் செய்யத் தேவை யில்லை:
10. மண் அரிப்பு இல்லை. மண் வளம் காக்கப்படுகிறது.
11. பாத்தி முறைப்பாசனத்தில் பயன் படுத்தும் நீரில் பாதி அளவைப் பயன்படுத்தி, பருத்தி, கடலை போன்ற பயிர்களில் கூடுதல் மகசூல் எடுக்க முடியும்.
12. மின்சாரம், டீசல் செலவு குறைவு, ஆட்கள் தேவை குறைவு. அரசு மான்யம் உண்டு.

**பாசன சங்கம்**

இயற்கையில் கிடைக்கின்ற மழை நீர்பாசன நீர்த்தேக்கங்கள், ஏரிகள் போன்றவற்றில்







தேக்கப்படுகிறது. இந்நீரைப் பயன்படுத்துவதில், பாசனச் சங்கங்கள் சிறந்த முறையில் பணியாற்ற முடியும். தலைமடை முதல் கடைமடை வரை நீர்ப்பாசனம் சீராக இருக்க, கடைமடை சாகுபடியாளருக்கு நீர்ப்பாசனம் உறுதி செய்யப்படுவதற்கும், விளைச்சல் உறுதிப்படுத்தப்படுவதற்கும், பாசனச் சங்கம் பாடுபட முடியும்.

**பாசனச் சங்கத்தின் பயன்கள்**

1. நீர் மேலாண்மையைப் பாசன சங்கம் ஏற்றுக்கொள்ளும்.
2. வாய்க்கால்களைச் சுத்தப்படுத்தப்படும் பணி ஆண்டுதோறும் செய்யப்படும்.
3. குடிமராமத்துப்பணிகளைச் சங்கம் செய்யும்.
4. நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு.
5. பராமரிப்புப் பணிக்கு அரசை எதிர் நோக்கும் அவசியம் இல்லை.
6. தங்கம் சாதிக்காததைச் சங்கம் சாதிக்கும். சுலபமாக அரசை அணுகிட சங்கம் துணையாக இருக்கிறது.

நீர் மேலாண்மை இன்றைய தேவை என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

பெருகி வரும் மக்கள் தொகை. நீர்வளத்தை உயர்த்த முடியாத சூழ்நிலை. கிடைக்கும் மழை நீரைச் சிக்கனமாய்ப் பயன்படுத்தும் நேர்த்தி, தேவையறிந்து நீர்ப்பாய்ச்சுதல், நவீன பாசன முறைகளில் நாட்டம், நீர் விரையம் தடுக்கப் பாசன சங்கம் எனப் பல வழிகளில் விவசாயிகள் அக்கறை காட்டவேண்டும்.

நெல்லை உற்பத்தி செய்யலாம். நீரை உற்பத்தி செய்யமுடியாது. இருபங்கு ஹைட்ரஜனும் ஒரு பங்கு ஆக்ஸிஜனும் சேர்ந்து தண்ணீர் வேண்டுமளவு ஆய்வகத்தில் தண்ணீர் உற்பத்தி செய்துவிட முடியும். உணவு உற்பத்திக்கு நீர் தரமுடியும் என்ற உத்திரவாதம் தரும் விஞ்ஞான சாதனை அண்மைக்காலத்தில் நிகழ வாய்ப்பில்லை.

எனவே கிடைக்கின்ற நீரைச் சேதப் படுத்தாமல் செம்மையான நீர்மேலாண்மையின் மூலம் நில வளம் காப்போம். பயிர்வளம் பெருக்குவோம். உணவின்றி வாடுகிற மனிதன் உலகில் இல்லை என்ற நிலை உருவாக உழைப்போம், உயர்வோம். ●

## பேரவையில் நகைச்சுவை

### தேனிலவு

தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள் மாவட்ட நிர்வாகம் போன்ற மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு திரு மோகன் சுந்தரசாமி (த.மா.க) பேசினார்.

அப்போது அ.இ.அ.தி.மு.க உறுப்பினர் திரு. தாமரைக்கனி இடையில் குறுக்கிட்டு உறுப்பினர் மோகன் கந்தசாமி இனி வரும் காலத்தில் தமிழ் மாநில காங்கிரஸ், ஆட்சிக்கு வரும் என்று கூறுகிறார். அப்படியானால் தி.மு.க.வுக்கும் தமிழ் மாநில காங்கிரசுக்கும் தேனிலவு முடிந்து விட்டதா? என்பதை அறிய விரும்புகிறேன், என்றார். உடனே மாண்புமிகு முதல்வர் கலைஞர் எழுந்து'' இதற்கு அண்ணா அவர்கள் ஒருமுறை, கூறியதையே நினைவுபடுத்த விரும்புகிறேன். அதாவது தேனிலவு முடிந்துவிட்டது. குடும்ப வாழ்க்கை நடைபெறுகிறது என்றார்.

அப்போது சபையில் உள்ள உறுப்பினர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.



# வெண்கலம் வென்ற இந்தியத் தங்கம்

அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிகளின் பதக்கப்பட்டியலில் இந்தியாவிற்குத் தனிநபர்பிரிவில் 44ஆண்டுகளுக்குப் பின்னர் பதக்கம் கிடைத்துள்ளது. 1952-ஆம் ஆண்டு ஹெல்சிங்கியில் நடந்த ஒலிம்பிக்கில் இந்திய மல்யுத்த வீரர் கே.டி. ஜாதவ் வெண்கலப் பதக்கம் வென்றார். அதன் பின்னர் ஒலிம்பிக்கில் தனி நபர் பிரிவில் பதக்கம் பெறும் இரண்டாவது இந்திய வீரர் என்ற பெருமை 23 வயதான லியாண்டர் பயஸுக்குக் கிடைத்துள்ளது.



லியாண்டர்குடும்பத்துக்குக் கிடைத்துள்ள இரண்டாவது வெண்கலப் பதக்கம் இதுவாகும். இதற்கு முன்னர் 1972 ஆம் ஆண்டு மியூனிச்சில் நடந்த போட்டியில் லியாண்டரின் தந்தை வைஸ் பயஸ் இந்திய ஆக்கி அணியில் பங்கேற்று இந்தியாவுக்கு வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுதந்தார்..

**இரண்டு பதக்கங்கள் வென்ற இணையற்ற குடும்பம்**

அட்லாண்டா ஒலிம்பிக்கில் வேறு எந்தப் பிரிவிலும் ஒரு பதக்கமும் வென்றிட இயலாத நிலையில் டென்னிஸ் மூலம் பயஸ் பெற்றுத் தந்துள்ள வெண்கலப் பதக்கம், இந்தியாவுக்கு ஆறுதல் அளிப்பதாக உள்ளது. வெண்கலப் பதக்கத்திற்காக நடந்த போட்டியில் பிரேசில் வீரர் பெர்னான்டோ மெலிஜெனியை 3-6, 6-2, 6-4 என்ற செட்களில் பயஸ் தோற்கடித்தார்.

**பரிசுகளும் பாராட்டுகளும்**

இந்தியாவின் மதிப்பைக் காப்பாற்றிய பயஸுக்குப் பரிசுகளும், பாராட்டுகளும் குவிந்த வண்ணம் உள்ளன.

லியாண்டர் பயஸுக்கு, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா பாராட்டுத் தெரிவித்துள்ளார். "ஒலிம்பிக்கில் அனைத்துப் போட்டிகளிலும் திறமையுடனும், உறுதியுடனும் விளையாடிய உங்களை (பயஸ்) பாராட்டுகிறேன்" என்று டாக்டர் சர்மா தனது வாழ்த்துச் செயதியில் குறிப்பிட்டுள்ளார்.

"பயஸின் முயற்சி நாட்டுக்கே பெருமை தேடித் தந்துள்ளது" என்று மாண்புமிகு பிரதமர்தேவெ கௌடா தனது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

பயஸுக்கு மாண்புமிகு இந்திய மனித ஆற்றல் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. எஸ்.ஆர். பொம்மை ரூ. 5 இலட்சம் பரிசளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.







மாண்புமிகு மத்திய இணையமைச்சர் தனுஷ்கோடி ஆதித்தன் தனது வாழ்த்துச் செய்தியில், "பயஸ், மிகப்பெரிய வெற்றிமூலம் பதக்கப் பட்டியலில் இந்தியாவை இடம் பெறச் செய்துவிட்டார். இதன் மூலம் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களுக்கு அளவில்லா மகிழ்ச்சியைத் தேடித் தந்திருக்கிறார். பயஸுக்கு ரூ. 2 லட்சம் பரிசு வழங்கப்படும். அதுமட்டுமின்றி அவர் தனது திறமையை வளர்த்துக் கொள்ளத் தேவையான நிதி உதவியும் வழங்கப்படும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பயஸுக்கு பிரபல டென்னிஸ் வீரர் ரமேஷ் கிருஷ்ணனும், அவரது தந்தையும் முன்னாள் டென்னிஸ் வீரருமான ராமநாதன் கிருஷ்ணனும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

**அணியின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி**

ஒலிம்பிக்கில் தனக்கு கிடைத்த வெண்கலப் பதக்கத்தைத் தனது பயிற்சியாளர் ஜெய்தீப் முகர்ஜிக்கும், சக வீரரும் நண்பருமான மகேஷ் பூபதிக்கும் அர்ப்பணிப்பதாகப் பயஸ் கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது:

"களத்தில் தனியாக விளையாடி வெற்றிப் பதக்கம் வென்றாலும் முகர்ஜியும், பூபதியும் இல்லாவிட்டால் எனக்கு இது கிடைத்திருக்காது, என்னுடனேயே இருந்து அவர்கள் அளித்த ஊக்கம்தான் எனது இந்த வெற்றிக்குக் காரணம்.

எனக்கு ஏராளமான ஆலோசனைகள் வழங்கியதோடு, எனது மன உறுதிக்கும் பலம் சேர்த்தனர். இந்த வெற்றி எனது திறமைக்கு மட்டும் கிடைத்த வெற்றி அல்ல. அணியின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி.

டென்னிஸுக்கு ஒரு பதக்கம்தான் கிடைத்திருக்கிறது. இன்னும் பல பதக்கங்கள் கிடைக்க வேண்டும். மற்ற நாடுகளில் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் ஒரு வீரரை உருவாக்க முடிகிறது. ஆனால் இந்தியாவில் ஒரு வீரரை உருவாக்கக் குறைந்தது 10 ஆண்டுகளாவது ஆகிறது. இந்த நிலைமை மாற வேண்டும்", என்றார் பயஸ்.

---

மாவட்டங்களை

## எப்படி அழைக்க வேண்டும்?

### முதல்வரின் அறிவுரை

தமிழகத்தில் தற்போது 29 மாவட்டங்கள் உள்ளன. அவைகளின் பெயர்களை நிர்வாக வசதிக்காகக் கீழ்க்கண்டவாறு அழைக்கவேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

1. நாகை - காயிதேமில்லத் 2. திருவாரூர் - ஏ.டி. பன்னீர்செல்வம் 3. திண்டுக்கல் - மன்னர் திருமலை 4. கரூர் - தீரன் சின்னமலை 5. வைகை - வீரன் அழகுமுத்து 6. தென்னார்க்காடு வள்ளலார் 7. விழுப்புரம் - இராமசாமி படையாட்சியார் 8. திருச்சிராப்பள்ளி - பெரும்பிடுகு முத்தரையர் 9. திருநெல்வேலி - கட்டபொம்மன் 10. பசும்பொன் - முத்துராமலிங்கத் தேவர் 11. திருவண்ணாமலை - சம்புவராயர் 12. பெரம்பலூர் - திருவள்ளுவர் 13. வட ஆர்க்காடு - அம்பேத்கர் 14. பெரியார் 15. அண்ணா 16. காமராஜர் 17 எம்.ஜி.ஆர். 18. சிதம்பரனார் 19. ராஜாஜி ஆகிய மாவட்டங்களுக்குப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

ஏனைய மாவட்டங்கள் விவரம் :

20. சேலம் 21. கோயம்புத்தூர் 22. புதுக்கோட்டை 23. தஞ்சாவூர் 24. மதுரை 25. இராமநாதபுரம் 26. தர்மபுரி 27. கன்னியாகுமரி 28. நீலகிரி 29. சென்னை

''என்ன நலமா?'' என்று கேட்பதில் அமெரிக்காவில் இப்போது ஒரு புதுமுறை பரவி வருகிறது!'' காலையில் ஒருவரைச் சந்திக்கும் போது -'' என்ன நலமா? நேற்று நன்றாகத் தூங்கினீர்களா?'' என்றும் கேட்டுக் கொள்கிறார்கள்.

## தெரிந்து கொள்வோம்

ஆஸ்திரேலியாவில் - இருபத்தோரு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வோர் ஆணும் பெண்ணும் தேர்தலில் தகுந்த காரணமில்லாமல் ஓட்டுப்போடாமல் இருந்தால் அதற்குத் தண்டனையாக அபராதத் தொகை ரூ. 80/- வரை செலுத்த வேண்டுமாம்.

பண்டைய நாளில், ரோமாபுரியில், காலண்டர் பழக்கத்தில் இல்லாதபோது ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று ஊர்ப்பணியாளர் ஒருவன் தெருத்தெருவாக வந்து மாதப் பிறப்பை அறிவிப்பானாம். ரோமன் மொழியில் அப்படிக் கூவுதலைக் 'களோர்' என்பர். இதிலிருந்துதான் காலண்டர் பிறந்தது.

பில்லியர்ட்ஸ் விளையாட்டிற்கான பந்து களைச் செய்வதற்காக ஆண்டுக்கு 600 யானைகள் உலகத்தில் கொல்லப் படுகின்றனவாம்.

திருக்குறளில் வரும் மலர்கள் இரண்டே இரண்டு அவை - அனிச்சமலர், குவளைமலர். ஒரே ஒரு பழம் – நெருஞ்சிப் பழம். மரங்கள் - பனை, மூங்கில். விதை – குன்றிமணி.

நன்கு பழுத்த மாம்பழம் வாயு உபாதைகளைச் சமனப்படுத்தும். உடலுக்கு ஊட்டம் தரும். வீரிய விருத்தி உண்டாக்கும். இரத்த சுத்தி ஏற்படுத்தும என்று 'சரக சம்கிதா' தெரி விக்கிறது.

# மீண்டும் மேலவை

தமிழக சட்டசபையில் ஜூலை 27ஆம் தேதியன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் 10 ஆண்டுகளுக்குப்பின்பு மேல்சபை மீண்டும் புத்துயிர் பெறுகிறது.

தமிழ்நாடு மேல்சபை கடந்த 1920-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சுதந்திரத்துக்குப்பின் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் 21.4.1952 முதல் தமிழக மேல்-சபை செயல்படத் தொடங்கியது. சபையின் மொத்த உறுப்பினர்கள் 72 பேர்களில் 12 உறுப்பினர்களை, மாநில கவர்னர் நியமித்து வந்தார். சட்டசபை, பட்டதாரிகள், ஆசிரியர்கள், உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து மற்ற உறுப்பினர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டனர்.

திரு. எம்.ஜி.ஆர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது கடந்த 14.5.1986-ல் மேல்சபையை நீக்குவதற்கான தீர்மானம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. 1.9.'86-இல் மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று 1.11.'86 முதல் அதற்கான சட்டம் நடைமுறைக்கு வந்தது.

கடந்த 1989-ஆம் ஆண்டில் கலைஞர் அவர்கள் மீண்டும் தமிழக முதல்வரானபோது மீண்டும் மேல்சபை ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது அதைச் செயல்படுத்துவதற்கு முன்பு ஆட்சி கலைக்கப்பட்டது.

தற்போது மீண்டும் சட்டமன்றத்தில் 27.7.96 அன்று இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்திற்குக் குடியரசுத்தலைவரின் முறையான ஒப்புதல் கிடைத்ததும் மேல்-சபை புத்துயிர் பெறும்.

## உழைப்பு

தற்காலத்தில் நாட்டில், 'உழைப்பு' என்ற சொல்லிற்கே, கஷ்டம் என்ற பொருள் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. சுவீகாரம் போவது, ஏதாவது பிரைஸ் அடிப்பது, புதையல் எடுப்பது போன்ற இலகு வழிகளில் வாழ்வதைத்தான் வாழ்க்கை என்று கருதத் தொடங்கிவிட்டார்கள்.

– கலைவாணர்








**புதிய கற்காலம்**
ஆசிரியர் : ராஜ்
பக்கம் : 128 - விலை ரூ. 30
நூலாசிரியரின் ஐந்தாவது சிறுகதைத் தொகுப்பான இந்த நூலில் - 'சாயம்' முதல் 'களவொழுக்கம்' ஈறாக 20 சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. கதைகளில் மட்டுமல்ல; 'சிதைந்து போன சோவியத் யூனியனின் நினைவிற்கு இப்புத்தகத்தைக் காணிக்கை' யாக்கியிருப்பதிலும் புதுமை தெரிகிறது.

**நிழல் கோபுரம்**
ஆசிரியர் : ராஜ்
பக்கம் : 151 - விலை ரூ. 30
'நிழல் கோபுரத்'திலிருந்து 'காற்றுக்கென்ன வேலி' வரையான சிறந்த 15 சிறுகதைகளின் தொகுப்பாக விளங்கும் நூல் இது. நூலாசிரியர்கள் காதலிக்கும், மனைவிக்கும் நூல்களைக் காணிக்கையாக்கும் இக்காலத்தில், இந்த நூலின் ஆசிரியர் இதைத் தன் மாமியாருக்குக் காணிக்கையாகச் செலுத்தி யிருக்கிறார்!
– இவ்விரு புத்தகங்களையும் வெளியிட்டோர் :
**சுஜயா பப்ளிகேஷன்ஸ்,**
42, காமகோடி நகர், 4வது குறுக்குத்தெரு,
வளசரவாக்கம், சென்னை - 600 087.

**தினசரி தியானம்**
தொகுப்பாசிரியர் : ஆர்.கே. பிரபு
தமிழாக்கம் : ஜெயமணி சுப்பிரமணியம்
பக்கம் : 184 - விலை ரூ. 20
'கோபமின்றி, துவேஷமின்றித் துன்பத்திற்கு உள்ளாவது என்ற உதயசூரியனின் முன்னிலையில் மிகமிகக் கடினமான உள்ளமும் மிகவும் ஆழ்ந்த அறியாமை இருளும் மறைந்து விடும்' - என்பது போன்ற மனதைப் பக்குவப்படுத்தும் கருத்துகளின் தொகுப்பு நூலாக விளங்கும் நூல் இது.

**காந்திய சிந்தனைகள்**
ஆசிரியர் : டாக்டர் மா.பா. குருசாமி
பக்கம் : 202 - விலை ரூ. 22
காந்தியடிகள் தம் வாழ்நாளில் மேற்கொண்ட பலவகை நிர்மாணப் பணிகள், சிறைவாசங்கள், தியாகங்கள் - ஆகியவற்றோடு அவரது ஆசிரம விரதங்களின் தொகுப்பாகவும் விளங்குகிறது இந்த நூல். இந்திய வரலாற்றை அறிய இதுவும் ஓரளவுக்கு உதவக்கூடும்.
– இந்த இரண்டு புத்தகங்களையும் வெளியிட்டோர்:
**''காந்தி இலக்கியச் சங்கம்,**
காந்தி மியூசியம், மதுரை - 625 020.

**கருணையம்மன் அந்நாதி**
**பதிப்பாசிரியர் : நா. பாக்கிய சுந்தரி**
பக்கம் : 104 - விலை ரூ. 22
தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறந்த இடம்பெறும் சிற்றிலக்கிய வரிசையில் 'கருணையம்மன் அந்தாதி' என்ற பிரபந்தமும் ஒன்று, தேவாரத் திருத்தலங்களில் ஒன்றான அவினாசி கோயில் சிறப்பைக்கூறும் இது, சுவடி வடிவிலிருந்ததைத் தேடிப் பிடித்து, அச்சேற்றியிருக்கிறார்கள்.

**ஒப்பிலக்கியம் :**
**கொள்கைகளும் செயல்முறைகளும்**
ஆசிரியர் : முனைவர் கா. செல்லப்பன்
பக்கம் : 72 விலை ரூ. 15
ஒப்பிலக்கியக் கொள்கை நூற்றாண்டுக்கு நூற்றாண்டு மாறுபடுகிறது; இது பற்றிய ஆராய்ச்சி, தமிழிலக்கியங்களுக்குப் புதிய வெளிச்சங்களைத் தரும்; அகன்ற இலக்கியக் கொள்கைகள் வளரவும் வழிவகுக்கும். இந்த அடிப்படையில், நூலாசிரியர் ஆற்றிய 2 நாள் சொற்பொழிவே இந்த ஆய்வு நூல். ஆசிரியரின் ஒப்பிலக்கியப் பட்டறிவின் வெளிப்பாடாக இது திகழ்கிறது.
– இவ்விரு நூல்களையும் வெளியிட்டோர் :
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
டி.டி.டி. ஐ. அஞ்சல், தரமணி
சென்னை - 600 113.

– இந்திரன்'



# யாருண்டு இனிமேலே உன்போல் நல்லோன்!

*நீரோடை நிலங்கிழிக்கும் நெடியபெருந் தமிழ் நாட்டில்*
*சீரோடு வாழ்ந்திருந்த கலையரசே! நீ,*
*வேரோடு சாய்ந்துவிழப் புயல்வீசும் என உணர்ந்தால்*
*கோடானு கோடிகரம் அப்புயலைத் தடுத்திருக்கும்!*

*"எதிர்ப்புகளை இளநகைப்பால் இடறிவிட்டு*
*இன்பத் திராவிடத்தின் விடுதலைக்குத் தலைமை ஏற்ற*
*என் தலைவன் அண்ணாவின் அருகிருப்பேன்,*
*என உரைத்து எழுந்திட்டாய்! அதற்குள்*
*சாவின் மடிதனிலே விழுந்திட்டாய்!*

*என்னுயிரே! இன்னமுதே! என்ன நினைத்(து)*
*உயிர்விட்டாய்?*
*"பொன்மலையைக் குவித்திட்டேன்:*
*இன்று புழுதிமலை*
*அடிவாரத்தில் கிடக்கின்றேன்" எனச் சொல்லிப்*
*புகழ் மலையின் உச்சிக்குப் போனாயோ?*

*புதுமணியே! புகழ் முத்தே!*
*பொதுவுடைமை முளைக்கின்ற 'ருசியா'வில்*
*கலைப் பயணம் நடத்துதற்குச் சென்றாயே;*
*அதுபோல எண்ணமிட்டோ பெரும் பயணம்*
*மேற்கொண்டாய்,*
*எம்மீது பெரும் பழியைச் சுமத்தி விட்டு!*

*கலையே... கற்பனையே!*
*அழகே.. அறிவே!*
*அன்பே... அறமே!*
*யாருண்டு இனிமேலே உன்போல் நல்லோன்!*
*நீயுண்டு! நின்புகழுண்டு... என்றென்றும் தமிழர்*
*நெஞ்சில்!*

**– 'கலைவாணரின் மறைவின் போது கலைஞர்' இயற்றிய கவிதை**








தமிழரசில் தாங்கள் வெளியிட்டிருந்த கலைஞரின் குறளோவியம் கண்டு பெரிதும் மகிழ்ந்தேன்; இதேபோல் கலைஞரின் கைவண்ணங்கள் அடிக்கடி இடம்பெறுமாறு செய்யுங்கள். தமிழரசை எங்களுக்கெல்லாம் மன நிறைவளிக்கும் இலக்கியப் பூங்காவாக்குங்கள்

**– ஆர். சீதா,**
பாளையங்கோட்டை

நீண்ட இடைவெளிக்குப்பின் புதிய பொலிவுடன் இலக்கிய மணம்கமழ வெளிவரும் தமிழரசு எங்களைக் களிப்புறச் செய்தது; தமிழாய்ந்த தமிழறிஞர்களைத் தமிழகம் மறந்துவிடுமோ? என்ற எங்கள் அச்சத்தைப் போக்கும் வகையில் அமைந்த தமிழரசுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுக்கள்.

**– ச. சிவ கோபால்**
ஆர்.என். பாளையம்

கவிஞர்கள், கதாசிரியர்கள் ஆகியோரின் இனிய படைப்புகளை இப்போது போலவே தமிழரசில் தொடர்ந்து வெளியிடுங்கள்; அதே சமயத்தில் முதல்வர் கலைஞர் அரசின் அருமையான திட்டங்களை தவறாமல் அச்சிட்டு ஏழை எளிய மக்கள் படித்தறியச் செய்யுங்கள்.

**– செ. காமராஜ்**
வேப்பூர் செக்கடி, செங்கம்

வரலாறு படைத்த புகைப்படங்கள், கட்டுரைகள் இன்று போல் என்றும் தமிழரசில் இடம்பெறட்டும்; மக்கள் குறைபாடுகள் பற்றிக் கேட்டிருப்பதும் மிகநல்ல ஏற்பாடு.

**– வி. வேணுகோபால்**
பரதகுடி, குடந்தை

புதுப்பொலிவுடன் பூத்திருக்கும் 'தமிழரசு' கண்டு மனம் பூரித்தது. தீண்டத் தகாத கையேடாய்க் கிடந்ததைத் தீந்தமிழ்ப் பெட்டகமாய் மாற்றிவிட்டீர். காலமெல்லாம் பேசும் வண்ணம் இதழ் மலர்ந்துள்ளது. அரசுச் செய்திகளும் ஆன்றோர் வாக்குகளும் மெருகூட்டுகின்றன. வாழ்க.

**– பொற்கண்ணன்**
ஈரோடு-11

'தமிழரசு' உள்ளடக்கத்தின் கனம் உவப்பளிக்கிறது. புதுமைப்பித்தன் கதை அற்புதம்; எத்தனை முறை படித்தாலும் அலுக்காத எழுத்துக்கள் அவை. பொன்மொழிகள் மூலமாக அயல் நாட்டு அறிஞர் பெருமக்களையும் பத்திரிக்கைக்குள் இழுத்து வந்திருப்பது பாராட்டுக்குரியது.

**– அமுதோன்**
சென்னை - 17

துறைதோறும் தமிழ் மணக்கும்படி தனியே ஓர் அமைச்சரையே நியமித்த முதல்வர் கலைஞர் மனம்போல் வெளிவரும் தமிழரசுக்கு எனது நல்வாழ்த்து.

**– வைரி. தரளம்**
கோவி. பாளையம்

## வாசகர் இதயம்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : என்.எஸ். பழனியப்பன் இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர் : இரா.பா. கார்மேகம், உதவி இயக்குநர் : எம் அண்ணாமலை
ஆசிரியர் குழு : எம்.வி.எம். அசோகன், அ. மதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள் : என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23





## ஆசிரியர் மடல்

அணையிலிருந்து
வரும் வெள்ளம்
ஆறுகளில் ஊர்ந்து ஓடி
கடை மடை கழனி தேடி
பயிர் பாதம் படிவதுபோல்

அரசின் திட்டங்கள் –

அடித்தட்டு மக்களின்
குடிசைக்கு எட்டும்போது
ஏற்படும் இன்பம் –
அன்னையவள் ஊட்டிடும்
அமுதம்
சிந்தாமல்
சிதறாமல்
மழலைவாய் சேரும்போது
மலர்கின்ற மகிழ்ச்சிக்குக்
கட்டியம் சொல்லும்!

எனவே –

கோட்டையிலிருந்து
குடிசைவரை செல்வோம்
எந்த இடையூறும்
இல்லாமல் செய்வோம்!
இதற்கெனவே –
தமிழரசில்
**எங்கள் ஊர்**
**பிரச்சினைக்கு**
இடம் ஒதுக்கி
உங்களோடு
வடம் பிடிக்கத்
தயாரானோம்!

இனிவரும்
இதழ் தோறும்
உங்கள் எழுத்து
எழுந்துநின்று
வலம்வரும்!

இப்போதோ –
போட்டிபோட ஈட்டிமுனையாய்
எத்தனைக் கவிதைகள்!
அத்தனையும் தேன் சுனைகள்!
தேர்ந்தெடுக்கும்
நடுவர் குழுவைத்
திக்குமுக்காடச் செய்த
தீந்தமிழ்ப் பலாச் சுளைகள்!
பவுர்ணமியின் ஒளிக் கீற்று!

பாற்கடலின் இன்ப ஊற்று!
இருப்பினும் –
தேனிலே எச்சொட்டில்
இனிப்பு மிகுதி?
எப்படித் தீர்ப்பு எழுத?

எனவே,
எடுத்துக்காட்டாய்
உங்கள் (இந்த) இதழில்
சுவைத்திட
இருதுளிகள் மட்டும்!
ஓரிரு துளி
அடுத்த இதழிலும்
கிட்டும்!









# இந்த இதழில்...


| | |
|---|---|
| நிர்வாகத்தில் தூய்மை, ஆட்சியில் எளிமை | 2 |
| 100 நாட்களில் ஆட்சியின் அரும்பணிகள் | 6 |
| சட்டப்பேரவையில் | 9 |
| அம்மா அப்பா | 10 |
| திரைப்பட விருது வழங்கும் விழா | 12 |
| படித்தவர் பண்பு | 16 |
| வெளிச்ச விளக்குகள் | 20 |
| செய்திச் சரம் | 22 |
| அம்மா எங்கே? | 26 |
| நூல் நயம் | 31 |
| இன்று புதிதாய்ப் பிறந்தோம் | 32 |
| வாதநோயும் சித்த மருத்துவமும் | 34 |
| தோட்டக்கலை வளர்க்கும் தர்மபுரி | 37 |
| வேலைவாய்ப்புகள் | 39 |
| வாசகர் இதயம் | 47 |
| ஆசிரியர் மடல்.. | 48 |



## தமிழரசு

2/4609.

திருவள்ளுவராண்டு - 2027

ஆவணித் திங்கள்: 17

மலர் :27 இதழ் : 5

1.9.1996

விலை ரூ. 3.

# நிர்வாகத்தில் தூய்மை
# ஆட்சியில் எளிமை :
# விடுதலை நாள் விழாவில்
# முதல்வர் கலைஞர் உறுதி

பொன்னாளாம் இந்நாள் - இந்தியச் சுதந்திரத்திற்குப் பொன் விழா ஆண்டு தொடங்கும் நாள் என்பதை எண்ணும் பொழுதும் - சுதந்திர தின வெள்ளி விழா ஆண்டினையும் தமிழகச் சட்ட மன்றப் பேரவையில் நானே முதலமைச்சராக இருந்து கொண்டாடினேன் என்பதை எண்ணும் பொழுதும் இரட்டிப்பு மகிழ்ச்சி கொள்கிறேன். இந்த மகிழ்ச்சியைத் தமிழக மக்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

இந்தியப் பெருநாடு விடுதலை பெற்ற இந்தத் திருநாளில், என் அன்பு வாழ்த்துக் களைத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக் கொண்டு - வீரசுதந்திரம் வேண்டி நின்று விடுதலைப் போரில் வீழ்ந்துபட்ட மான மறவர்களுக்கும் தியாகச் செம்மல்களுக்கும் வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

அண்ணல் காந்தி அடிகளும் ஆசிய ஜோதி நேருவும், திலகரும், தீனபந்துவும், திறன் மிகு சிதம்பரனாரும், தியாகச் செம்மல் பெரியாரும், பெருந்தலைவர் காமராஜரும், வித்தகர் ராஜாஜியும், வீரர் நேத்தாஜியும், எண்ணற்ற இந்திய நாட்டின் பெருவீரர்களும் சிந்திய ரத்தத்தில் பூத்த புரட்சி மலர்தான் இந்த நாட்டின் சுதந்திரம். அந்த மலரின் மணம், மாளிகைகளின் பலகணி வழியாக, தென்றலின் தோள்மீது ஏறி, வசதி படைத்தோர்க்கு மட்டுமே கிட்டும் என்ற நிலையை மாற்றி, ஏழை வீட்டுச் சாளரங்களிலும் நுழைந்திடும் வண்ணம் செய்திடல் வேண்டும் என்பதே நமது இடையறாத ஆசை!

இதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் 1947 ஆகஸ்டு 15, அந்நிய ஆதிக்கத்துக்குக் கணக்குத் தீர்த்த நாள் என்றும், ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுகிற ஆகஸ்டு 15, சுதந்திரத்தின் பயன்களைக் கணக்குப் பார்க்கிற நாள் என்றும் அழகுபடக் கூறினார்.



வெள்ளையர் ஆதிக்கத்தை வெளியேற்றுவது மட்டும் சுதந்திரத்தின் நோக்கமல்ல! மக்களுக்குச் சக வாழ்வு அளித்திடத் தொண்டாற்றி அதில் வெற்றி காண்பதும் முக்கியக் குறிக்கோள் அன்றோ?

ஒரு நாட்டுக் குடிமகனின் இன்றியமையாத தேவைகளான உணவு, உடை, உறையுள் இவைகளை நிறைவு செய்வதில் நாம் முழு வெற்றி பெற்றுவிட்டோமா? இல்லை என்று தானே பதில் எழுந்து தொல்லை தருகிறது மனத்துக்கு!

தமிழகத்தைப் பொறுத்த வரையில் நமது அதிகாரம், நமது வசதி வாய்ப்புகளுக்கேற்றவாறு இயன்ற வரையில் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண முயன்றுவருகிறோம்.

இன்றைய இந்தியா கூட்டாட்சி முறை என்னும் புதிய யுகத்தில் அடியெடுத்து வைத்துள்ளது. மத்தியில் ஆட்சிப் பொறுப்





பேற்றுள்ள ஐக்கிய முன்னணி அரசு, கூட்டாட்சித் தத்துவமெனும் உதயத்தை உணர்த்தும் வைகறை விடியலாகும். இந்தியாவின் பன்முகத்தன்மையைப் பாதுகாக்க நாட்டின் பல்வேறு மாநிலங்கள், சமுதாயங்கள், மொழிகள், மதங்கள் ஆகியவற்றின் விருப்பங்களை முழுமையாக அங்கீகரிக்க, ஓர் அரசு மத்தியில் நமக்குத் தேவை என்பதை இந்த அனுபவம் நமக்குத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இந்தக் கோட்பாட்டை மனதில் கொண்டுதான், ஐக்கிய முன்னணி அரசின் பொதுவான குறைந்த பட்சத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இங்கே தமிழகத்தில் நேர்மையான, இலஞ்ச லாவண்யமற்ற நிருவாகத்தை அளிப்பது என்ற உறுதியோடு இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்வரசு ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்று திங்களில், இந்நோக்கத்தை எய்துவதற்கு எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளைத் தமிழக மக்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். ஊழல் புரிவோருக்கு எதிராக அவர்கள் அரசியல்வாதிகளாக இருந்தாலும், அல்லது அதிகாரிகளாக இருந்தாலும் சரி - உறுதியான, கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் பல்வேறு நிருவாக நடைமுறைகளை எளிமைப்படுத்தும் பணியையும் நாம் தொடங்கியுள்ளோம். இதுவரை உயர்மட்டத்தில் குவிந்து கிடந்த அதிகாரங்களைப் பரவலாக்குதல் - நிருவாகத்தில் பல்வேறு நிலைகளை மக்கள் அணுகும் வகையில் எளிதாக்குதல், ஆகிய நடைமுறைகளையும் இவ்வரசு தொடங்கியுள்ளது. இந் நடவடிக்கைகள், நேர்மையான, பொறுப்பான நிருவாகத்திற்கு வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

> “இந்தியச் சுதந்திரத்திற்குப் பொன் விழா ஆண்டு தொடங்கும் நாள் என்பதை எண்ணும் பொழுதும் – சுதந்திர தின வெள்ளி விழா ஆண்டினையும் தமிழகச் சட்ட மன்றப் பேரவையில் நானே முதலமைச்சராக இருந்து கொண்டாடினேன் என்பதை எண்ணும் பொழுதும் இரட்டிப்பு மகிழ்ச்சி கொள் கிறேன்.”

இந்தியாவை உண்மையில் ஒரு கூட்டாட்சி அரசாக மலரச் செய்வதற்கு, அதிக அதிகாரங்களுடன் கூடிய மாநில சுயாட்சியின் அவசியம் குறித்து வலியுறுத்துகின்ற அதே தருணத்தில், அதே முறையில், அர்த்தமுள்ள குடியாட்சி அதிகாரங்கள் பரவலாக்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதிலும் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொள்கிறது. எனவே, இம்மாநிலத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புகள் அனைத்திற்கும், தேர்தல் விரைவில் நடைபெறவிருக்கிறது. இதன் வாயிலாகக் குடியாட்சி அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதன் பயன்களை இம்மாநில மக்கள் நன்கு உணர இயலும்.

வன்முறைக் கும்பலின் வன் செயலால், தமிழக மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு, காவல் துறையினரின் மீது மக்களின் நம்பிக்கை குலைந்து விட்டிருந்த நிலையில், இவ்வரசு பதவி ஏற்றது.

மாமூல் கேட்டுத் துன்புறுத்தும் கும்பலும், கொலை கொள்ளைகளில் தேர்ந்த குண்டர்கள் கூட்டமும், ஏனைய சமூக விரோத சக்திகளும், மக்களை

இந்தியாவின் ஐம்பதாவது சுதந்திரதினமான 15.8.'96 அன்று சென்னை கோட்டையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றிவைத்து உரையாற்றினார்.

காலை 8.20 மணிக்கு விழாவிற்கு வருகை புரிந்த முதல்வர் கலைஞர் அவர்களைத் தலைமைச் செயலாளர் திரு. கே.ஏ. நம்பியார் வரவேற்றார். பின்னர் முதல்வர் அவர்கள் காவல்துறையினர் அணிவகுப்பைப் பார்வையிட்டு அவர்கள் அளித்த மரியாதையை ஏற்றார். பின்பு சரியாக காலை 8.30 மணிக்குக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். தொடர்ந்து காவல் துறையில் இசைக் குழுவினால் நாட்டுப்பண் இசைக்கப்பட்டது. பின்னர், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் காலை 8.35 மணிக்கு கோட்டை கொத்தளத்தில் இருந்து சுதந்திர தின உரை நிகழ்த்தினார்.

சொன்னதைச் செய்வோம்!
செய்வதையே சொல்லுவோம்!

# 100 நாட்களில் ஆட்சியின் அரும்பணிகள்



மனை வரி ரத்து, நிலுவைத்
தொகையும் தள்ளுபடி.
✦
மருத்துவமனை பார்வையாளர்
கட்டணம் நீக்கம்.
✦
மாநில மனித உரிமைகள்
ஆணையம் அமைப்பு.
✦
மனுநீதித் திட்டம்
மீண்டும் செயலாக்கம்.
✦
பட்டா பாஸ் புத்தகம் வழங்க
ரூ. 24 கோடி நிதியொதுக்கீடு.
✦
புதிய மாவட்டங்கள் நான்கு உருவாக்கம்.
✦
'சிங்கிள்' டெண்டர் முறை அறவே நீக்கம்.
✦
நியாயவிலைக் கடைபொருட்கள்
குறித்த நேரத்தில் வழங்கல்.
✦
திருப்பெரும்புதூரில் கொரியா கார்
தொழிற்சாலை (ரூ. 2450 கோடி).
✦

சென்னை மாநகராட்சிக்கு
ரூ.200 கோடி, மற்ற மாநகராட்சிகளுக்கு
ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு.
✦
பொள்ளாச்சியில் தேங்காய் பதனிடும்
தொழிற்சாலை (ரூ.339 கோடி).
✦
கன்னியாகுமரியில் தேங்காய்
உட்பொருள் தொழிற்சாலை (ரூ.18 கோடி).
✦
செங்கல்பட்டு அருகே கண்ணாடி
தயாரிக்கும் தொழிற்சாலை (ரூ.550 கோடி).
✦
பொள்ளாச்சி அருகே ஏற்றுமதி
இறைச்சிக் கூடம் (ரூ.168 கோடி).
✦
தமிழ்நாடு எரிவாயுத் திட்டம் (ரூ.30 கோடி).
✦
மறைமலைநகரில் ஆப்டிகல் ஃபைபர்
கேபிள் திட்டம் (ரூ.41.57 கோடி).
✦
பள்ளி இறுதித் தேர்வில் முதல்
மூன்றுமாணவர்கட்கு மாவட்டந்தோறும்
மேற்படிப்பை அரசு ஏற்றல் (10வது, +2).
✦
முதல் 10 இடம் பெறும் பட்டதாரிகளற்ற
குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு
கல்விச்செலவை ஏற்றல்.
✦
+2 மாணவர்கள் வரையில்
இலவச பஸ் பயணம்.
✦





இலங்கைத் தமிழ் மாணவர்கட்கு
உயர்கல்வி கற்பதில் தடை நீக்கம்.
✦
21 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்
பள்ளிகளாகவும், 99 நடுநிலைப் பள்ளிகள்
உயர்நிலைப் பள்ளிகளாகவும் 80
உயர்நிலைப் பள்ளிகள் மேல் நிலைப்
பள்ளிகளாகவும் உயர்வு.
✦
85 புதிய தொடக்கப் பள்ளிகள் அமைப்பு.
✦
திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு
நிதியுதவி (ரூ.50 இலட்சம்).
✦
மூவலூர் இராமாமிர்தம் திட்டம் திருமண
உதவித் தொகை அதிகரிப்பு
(ரூ.5,000/- லிருந்து ரூ.10,000/-).
✦
டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார்
நினைவு மகப்பேறு திட்ட உதவித் தொகை
உயர்வு (ரூ. 300/- லிருந்து ரூ. 500/-).
✦
குடும்பத் தலைவர் இறந்தால்
குடும்பத்திற்கான நிதியுதவி உயர்வு
(ரூ.5,000/- லிருந்து ரூ.7,500/-).
✦
விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு
நிதியுதவி அதிகரிப்பு
(ரூ.10,000/- லிருந்து ரூ.15,000/-).
✦
இனக்கலவரங்களில் இறப்பவர்
குடும்பத்திற்கு ரூ.50,000/-.
✦







திரைப்படத் தொழிலாளர்
வேலை நிறுத்தத்திற்குத் தீர்வு.
✦
திரைப்படச் சண்டைக் காட்சியில்
உயிரிழப்போர், காயமடைவோருக்கு உதவி,
குறைந்த முதலீடு திரைப்பட மானியம் உயர்வு
(ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சம்).
✦
அரசு இடங்களில் படப்பிடிப்புக்
கட்டணம் குறைப்பு.
✦
அரசு விழாக்களில் எளிமை;
அரசு நிகழ்ச்சிகளில் சிக்கனம்.
✦
பத்திரிகையாளர் ஓய்வூதியம் உயர்வு
(ரூ.500/- லிருந்து ரூ.1000/-).
✦
8500 முன்னாள் கிராம
அதிகாரிகளுக்கு ஓய்வூதியம்.
✦
அர்ச்சகர்கள், கிராமப் பூசாரிகள்,
உலமாக்கள், ஓதுவார்கள் உதவித்
தொகை உயர்வு
(ரூ.400-லிருந்து ரூ.500).
✦
இரண்டாம் பசுமைப் புரட்சி
உருவாக்க வல்லுநர் குழு.
✦
பருப்பு, மஞ்சள், மிளகாய், புளி,
பனங்கற்கண்டு முழு வரிச்சலுகை.
✦

அச்சுறுத்திவந்தன. அக்கொடியோர் அச்சுறுத்தலை அகற்ற, இந்த அரசு எடுத்துள்ள உறுதியான நடவடிக்கையை அனைவரும் அறிவீர். இத்தகைய கடும் நடவடிக்கைகள் தொடரும். அரசியலைக் குற்றவாளிகளின் கூடாரமாக்குவதற்கும், குற்றவாளிகளே அரசியல் வாதிகளாக உருமாறுவதற்கும் நிச்சயம் முடிவு கட்டப்படும்.

இந்த அரசு களைகளை அகற்றுவதோடு நிற்காமல், தமிழ் மண்ணில் இரண்டாவது பசுமைப்புரட்சியை ஏற்படுத்தப் புதிய முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. ஆட்சிப் பொறுப்பேற்று நூறு நாட்கள் முடிவதற்குள் – அதற்குள்ளாகவே, ஏழையெளியோர், நடுத்தர மக்கள் அனைவரும் ஏற்றிப் போற்றிடும் அளவுக்கு அவர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளையே மையமாக வைத்து இந்த அரசு அறிவித்துள்ள திட்டங்களையும், செயல்முறைகளையும் நடுநிலையாளர் பாராட்டிப் போற்றுகின்றார்கள்.

இடைக்காலத்தில் பின்தங்கிவிட்ட தொழில் வளர்ச்சிக்குப் புத்துயிர் ஊட்டி தொழில்துறையில் தமிழகம் தொடர்ந்து முன்னேறுவதற்கான முயற்சிகளை இந்த மூன்று திங்களுக்குள்ளாகவே நிறைய



செய்திருக்கிறோம் என்ற மன நிறைவோடு உங்கள் முன்னால் நிற்கிறேன்.

சிறந்த அடிப்படை வசதிகளையும், தேர்ச்சி பெற்ற மனித ஆற்றலையும் பெற்றுள்ள தமிழ்நாட்டில் கணிசமான அளவுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிட வேண்டும் என்பதே இந்த அரசின் தலையாய நோக்கம்.

மக்களின் அத்தியாவசியத் தேவையான உணவுப் பொருள் பங்கீட்டு முறை சீரமைக்கப்படுவதற்குச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் - அரசு அலுவலர்கள் - நுகர்வோர் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குடும்ப அட்டை ஒன்றுக்கு இருபது கிலோ அரிசி தங்கு தடையின்றி உரியவர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் ஆயிரம் கோடி ரூபாய் மானியத் தொகையாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த அரசின் முதல் நடவடிக்கையே - ஒரு கோடியே 25 இலட்சம் மக்கள் பயன்பெறக் கூடிய வகையில் தரை வரியை ரத்து செய்ததாகும். பட்டா நிலங்களுக்கான வரி விகிதம் பழைய நிலைக்கு மாற்றப்பட்டது - எங்கள் மனப் பான்மைக்கு எடுத்துக் காட்டாகும்.

அண்மையில் வெளியிடப் பட்ட நிதிநிலை அறிக்கையின் மூலம் விற்பனை வரியில் பெரிய அளவில் செய்யப் பட்டுள்ள மாற்றம் ஏழையெளி யோர் பயன்படுத்தும் உணவுப் பொருள்களுக்கு அறவே வரி விலக்கு அளித்த செயல் - இவை எல்லாம் இது ஏழை, நடுத்தர மக்களுக்கான அரசு என்பதை எடுத்துக்காட்டும் கண்ணாடி யாகும்.

அடிப்படை வசதிகளைப் பெறுவது மக்களின் உரிமை! அந்த வசதிகள் நல்ல முறையில் மக்களுக்குப் பயன்படாமல் இருப்பது ஒரு நல்ல அரசுக்கு அடையாளம் அல்ல. இதனை உணர்ந்த இந்த அரசு, பொறுப் பேற்றவுடன் மக்களின் அடிப் படை வசதிகளில் இருக்கின்ற குறைகளைக் களைந்தெடுத்து, அவர்களுக்குத் தேவையான குடிநீர், சாலைகள், மின் விளக்குகள் போன்ற வசதி களைச் செய்து கொடுக்க போர்க்கால அடிப்படையில் பணியாற்றி வருகின்றது.

இலட்சக்கணக்கான மகளிருக்கு வேலைவாய்ப்பு- 12ஆம் வகுப்பு படிக்கின்ற (ப்ளஸ் 2) மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயணம் - மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் உயர் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்குப் பரிசு களும் வழங்கும் திட்டத்தோடு அவர்கள் படிப்புச் செலவையும் அரசே ஏற்றுக் கொள்ளும் என்ற அறிவிப்பு - பட்டதாரியே இல் லாத குடும்பங்களைச் சேர்ந்த உயர் மதிப்பெண் பெற்ற





மாணவர்கள் தொழிற் கல்வியைத் தொடர்ந்து படித்து முடிக்க நிதி உதவி அளிக்கும் சிறப்புத் திட்டம் - இவை போன்ற எண்ணற்ற திட்டங்கள் இந்த மூன்று மாதக் காலத்திற்குள் அறிவிக்கப்பட்டு - முறைப்படி செயல்படுவதை - எங்களை ஆட்சியிலே அமர வைத்த ஆன்றோர், சான்றோர் முதல் - அன்றாடம் உழைத்து வாழும் பாட்டாளி மக்கள் வரை அனைவரும் அறிவர்.

அரிய பெரிய திட்டங் களைத் தீட்டவும் - தீட்டிய திட்டங்களின் பயனை மக்கள் பெற்றிடவுமான அருஞ் சாதனையை இவர்கள் இயற்றிட வல்லவர்களோ என ஐயுறுபவர் எவராவது இருப்பின், அவர் களுக்கு நான் வழங்கும் உறுதியாவது;

எங்கோ சென்று கொண் டிருந்த மக்களின் வரிப்பணம் மக்களுக்கே பயன்படும் வரு மானமாக அரசின் கருவூலத் திற்கே வரத் தொடங்கியுள்ளது. இந்த வருமானத்தை மேலும் பெருக்கி, நேர்மையான முறை யில் நிர்வாகத்தை நடத்தி, விரிவாகவும் விரைவாகவும் ஏழை எளியோர், தொழிலாளர், நெசவாளர், விவசாயிகள், கிராமப்புறத்து மக்கள், நகர்ப் புறத்து மக்கள், சாதாரண சாமான்ய நடுத்தர வர்க்கத்தினர் துளி அளவு துன்பத்திற்கும் ஆளாகாமல் இந்த ஆட்சியின் பணி தொடரும் என்பதே யாகும்.

பிரச்சினைகள் பல நம்மைச் சூழ இருக்கின்றன. அவற்றைத் தன்னம்பிக்கையுடனும் தளராத ஊக்கத்துடனும் எதிர்கொண்டு வெற்றி பெறுவோம் எனச்



சூளுரைத்து இந்தச் சுதந்திர நன்னாளில் என் வாழ்த்துக்களை தெரிவித்து; அனைவரும் ஒருமுகமாக நின்று பெற்ற சுதந்திரம் பேணிக் காக்கவும் - ஜனநாயக மாண்பு உயர்ந்து நிற்கவும் - சபத மேற்க அணிவகுத்து வாரீர் என அன்புடன் அழைக்கிறேன்–

வணக்கம்.

***நீச்சலும் ஆட்சியும்!***

நீந்தக் கற்றுக்கொள்ளத் தண்ணீரில் இறங்கித்தான் ஆகவேண்டும்; இதனால் சிரமங்கள் எற்படத்தான் செய்யும். மூச்சுத் திணறும், மூக்கிலும் வாயிலும் தண்ணீர் புகுந்துவிடும். சுழலில் சிக்கிக்கொள்ளாமலும் இருக்க வேண்டும் என்ற பாதுகாப்போடுதான் இடுப்பிலே கயிற்றைக் கட்டிக்கொண்டு, கரையிலே ஒரு ஆளையும் நிறுத்திவைத்துவிட்டுத் தண்ணீரில் இறங்கியிருக்கிறோம். இத்தனை சங்கடங்களையும் ஏற்றால்தான் நீந்தக் கற்றுக்கொள்ள முடியும்.

மூழ்கிப்போகும் அளவுக்கு விவரம் தெரியாதவர்கள், இன்றையதினம் ஆட்சிக்கு வந்துவிடவில்லை!

– 1969ல் அறிஞர் அண்ணா ஆற்றிய சொற்பொழிவிலிருந்து.

கணிப்பொறி, தொலைக்காட்சிப் பெட்டி, காகிதம், பொறிகடலை, சாதாரண பிஸ்கட்டுகள், ஆயத்த ஆடைகள் வரிகுறைப்பு.

✦

குத்தகைக் காலத்தை இருபது ஆண்டுகளாக நீடிக்கும் புதிய கனிமக் கொள்கை.

✦

அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் மின் உற்பத்திப் பிரிவுகள்.

✦




சிறு துறைமுகங்களைச் சீராக்க 'கடல்சார் வாரியம்'.

✦

வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்தவர்களுக்கு ஆசிரியர் பணிக்கு முன்னுரிமை.

✦

தமிழ் ஆட்சி மொழித் துறைக்குத் தனி அமைச்சகம்.

✦

மெட்ராஸ் என்பதை 'சென்னை' என்று பெயர் மாற்றம்.

✦

தேவநேயப் பாவாணரின் அரிய நூல்கள் அரசுடைமையாக்கல்.

✦

மொழிக்காவலர், தமிழறிஞர், நலிந்த கலைஞர் உதவித் தொகை உயர்வு (ரூ.400/- லிருந்து ரூ.500/-).

✦

அயல்நாட்டு மது உற்பத்தியாளர்களிடம் வசூலிக்கும் வரியை உயர்த்தி அரசுக்குக் கூடுதல் வருவாய் (ரூ.65 கோடி).

✦

மொலாசஸ் ஏற்றுமதியில் நடந்த முறைகேடுகள் நீக்கம் (ரூ.10 கோடி).

✦

கிராமப்புறங்களுக்குத் தனியார் பேருந்துகள் செல்லமுடியாத முறைகேடான சலுகைகள் நீக்கம்.

✦

தொட்டிய நாயக்கர் மற்றும் உட்பிரிவுகளுக்குத் துணை வட்டாட்சியர்களே சாதிச் சான்றிதழ் வழங்க ஆணை.

✦

1.10 இலட்சம் கைத்தறி நெசவாளர் பயன்பெற சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் சலுகை பெறும் வயது வரம்பு 60வது ஆக உயர்வு.

✦

அரசு அலுவலர்கள் குடும்பப் பாதுகாப்பு நிதியை ரூ.60,000/- லிருந்து ஒரு லட்சமாக அதிகரிப்பு.

✦

10,000 ஆசிரியர்களுக்கு புதிதாகப் பணிவாய்ப்பு.

✦

முழு ஓய்வூதியம் பெறத் தேவையான பணிக்காலம் 33 ஆண்டுகளிலிருந்து 30 ஆகக் குறைப்பு.

✦

69% இட ஒதுக்கீட்டை நிலைநாட்ட உச்சநீதி மன்றத்தில் அயராத முயற்சி.

✦

பலமுனை விற்பனை வரி முறையினை மாற்றி ஒருமுனை விற்பனை வரியாகச் சீரமைத்தல்.

✦

கடந்த ஆட்சியினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட 10,000 காவலர்கள், 600 காவல்துறை உதவி ஆய்வாளர்கள் 1000 தீயணைப்புப் பணியாளர்கள் பணியமர்த்தல்.

✦





# சட்டப்பேரவையில் நகைச்சுவை

## மற்றவை வெண்திரையில்

"முன்பிருந்த அரசில் எல்லாத் துறையிலும் ஊழல் நடந்திருக்கிறது; அதுபற்றி சட்டப் பேரவையில் வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யப்படுமா?" என்று திரு. ஞானசேகரன் (த.மா.கா), சுப்பராயன் (இந்தியக் கம்யூ.) ஆகியோர் கேட்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் குறுக்கிட்டு - "ஒரே விஷயத்தை இருவரும் கேட்கிறீர்கள்; அவையில், சட்ட ரீதியாக எடுக்கப்படும் நடவடிக்கைகள்பற்றிச் சொல்ல முடியாது. பழைய காலத்தில் சினிமாதியேட்டரில் படம் பார்க்கச் செல்லும்போது கதைப்புத்தகம் தருவார்கள். அதில், முக்கால் பாகம் கதையை வெளியிட்டுவிட்டு 'மற்றவை வெண்திரையில் காணுங்கள்! என்று போட்டிருப்பார்கள். அதுதான் இதற்குப் பதில்!" என்றாரே பார்க்கலாம்.

அவையில் எழுந்த சிரிப்பலை ஓயச் சிறிது நேரம் ஆயிற்று.

## பாயசத்திற்குப் பிறகு கஞ்சியா?

தேனியில் உள்ள காவல்துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தைப் பெரிய குளத்திற்கு மாற்றுவது பற்றி சட்டப் பேரவையில் கேள்வியெழுப்பினார். திரு.எல். மூக்கையா.

"அதுபற்றி அரசு பரிசீலித்து வருகிறது" என்று மாண்புமிகு முதல்வர் கூறினார். மறுபடியும் எழுந்த திரு. மூக்கையா "பெரியகுளத்தில் குறிப்பிட்ட பகுதியில் காவல்நிலையம் ஏற்படுத்த முடியுமா?" என்று கேட்டார்.

உடனே முதல்வர் "பாயசமே தரப்படும் என்று சொல்லிவிட்ட பிறகு அவர் கஞ்சியைக் கேட்கிறார்!" என்றாரோ இல்லையோ, அவையினரெல்லாம் குபீரென்று சிரித்து விட்டனர்.

## சங்க காலத்தில் ஜீப்?

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சில் மனோகரன் சட்டப் பேரவையில் தமது துறைக்கான மானியக்கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதில் அளித்துப் பேசினார்.

"வருவாய்த்துறை அலுவலர்களுக்குப் புதிய ஜீப்புகள் வழங்கப்படுவதைக் கொள்கை விளக்கக் குறிப்பில் தூய தமிழில் 'புதிய ஈர்ப்புகள்' வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. **இதற்குக் காரணம் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறை அமைச்சர் தமிழ்க்குடி மகன்தான்.** சாதாரணமாக நாம் ஜீப்புகள் என்றுதான் சொல்வது வழக்கம். ஆனால், சங்க காலத்தில் அப்படிச் சொல்லப்பட்டதாக அவர் கூறுகிறார். சங்க காலத்தில் ஜீப்புகள் இருந்தனவா? எனக்குத் தெரியவில்லை!" என்றார் அமைச்சர். அவையில் சிரிப்பொலி எழுந்தது.

## தலைமுடியில் நரை

சமூக நலத்துறை மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதத்தில் டாக்டர் காஞ்சனா கமலநாதன் (தி.மு.க.) நல்ல அரசின் ஆட்சியில் தலைமுடி நரைக்காது. கறுப்பாகத்தான் இருக்கும் என்ற பொருளில் பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனைப் பார்க்கும் போது பாடிய பாடல் வரிகளைக் குறிப்பிட்டார்.

பின்னர் வேலூர் ஞானசேகரன் (த.மா.கா) பேசும்போது "நல்ல அரசின் ஆட்சியில் தலைமுடி நரைக்காது என்கிறார்; கடந்த 5 ஆண்டுக் கால ஆட்சியில் தலைமுடி நரைத்த என் போன்றவர்கள் என்ன செய்வது?" என்றபோது அவையில் சிரிப்பு அலை எழுந்தது.

முதல் அமைச்சரின் 73-வது பிறந்த நாளின்போது கவிதைப்பித்தன் பாடிய கவிதை வரிகளைத் திருமதி. காஞ்சனா கமலநாதன் கூறினார்.

'மழலைபோல் முகம் சிரித்தபடி, மை போடாமல் கருத்த முடி, அழகு நிறமோ தங்கப் பொடி, வயதோ 73 - எப்படி?' என்று அவர் கேட்டதைத் தொடர்ந்து "சரி சரி இப்போது நீ முடி" என்று துணைச்சபாநாயகர் பரிதி இளம் வழுதி கூறி அவையில் ஒரு கலகலப்பை உண்டாக்கினார்.

# அம்மா அப்பா

## மறைமலையடிகளார்

நிலை இயற்கைக்கு ஏற்றபடி அவ்வந் நிலங்களில் உறையும் பொருள்கள், சிற்றுயிர்கள், மக்கள் முதலியவற்றின் இயற்கைகளும் பல்வேறு வகைவகையாய்க் காணப்படுதலால், அவ்வந்நிலத்து மக்களின் குரலொலி களும் பலதிறப்பட்டுத் தோன்றுவனவாயினவென்று அறிதல் வேண்டும்.

பெரும்பாலுங் குளிர்மிகுந்த நாடுகளில் உறைவோரின் குரலொலிகள் உரத்த ஓசை வாய்ந்தனவாய் இருக்கின்றன. வெம்மை மிக்க இடங்களில் உள்ளாரின் குரலொலிகளோ மெல்லியவாயிருக்கின்றன; இரண்டிற்கும் நடுத்தரமான நிலங்களிலிருப்பவர் ஒலிகள் எடுத்த ஓசைக்கும் படுத்த ஓசைக்கும் நடுவாய் அமைகின்றன.

இவ்வுண்மை அவ்வந் நிலத்தின்கண் உள்ள பறவைகள் செய்யும் ஒலிகளின் வேற்றுமையாலும் நன்கு அறியப்படும். பனி மிகுந்த இங்கிலாந்து நாட்டில் உள்ள காக்கைகள் 'கிரா கிரா' என்று கரைகின்றன; சூடுங் குளிரும் ஒத்த நிலைமையில் அமைந்த இத் தமிழ்நாட்டுக் காக்கைகளோ 'கா, கா' என்று கரைகின்றன; ஆனதனால் ஆங்கில மொழியிற் காக்கைக்குக் 'குரோ' என்னும் பெயரும், நமது செந்தமிழ் மொழியில் 'காக்கை' 'காகம்' என்னும் பெயர்களும் வழங்கி வருகின்றன.

பனி நாடுகளிலிருப்பவர் மிடறு கரகரப்பாய் இருத்தல் இயற்கையாதலால், அவர்கட்கு இயல்பாக எழும் ஒலிகளிற் பெரும்பாலும் ரகரவோசை கலந்தே நிற்கும். குழந்தைகட்கு இயல்பாற் பிறக்கும் 'மா, பா' என்னும் முதல் ஒலிகளே இதற்குச் சான்றாம். பிள்ளைகள் வாயைத் திறக்குங்கால் அகரவொலி இயல்பாற் பிறக்கப் பிறகு திறந்த வாயின் இதழ்களை ஒன்று பொருத்துங்கால் மகரவொலி பிறக்க, இவ்வாறு வாயைத் திறந்து மூடுதலால் 'அம்மா' என்னுஞ் சொற்றோன்றித் தாய்க்குப் பெயராய் வழங்குதல் காண்கின்றோம். இங்ஙனமே, திறந்த வாயின் இதழ்களைச் சிறிது அழுந்தப் பொருத்துதலால் 'அப்பா' என்னுஞ் சொல் பிறந்து தந்தைக்குப் பெயராய் வழங்கப்படுகின்றன. இந்நிலவுலகத்தின்கண் உயிர் வாழும் எல்லா மக்களின் பிள்ளைகளும் அவர் ஒன்றோடொன்று வேறுபட்ட எத்தனைவகையான மொழிகளைப் பேசுவாராயினும், முதலில் இயல்பாகத் தோற்றுவிக்குஞ் சொற்கள் அம்மா அப்பா என்பவேயாம். இவ்விரண்டு சொற்களும் முதற்பிறக்கும் ஒலிகளாய் இருத்தலின், இவை எல்லா மொழிகளிலும் தாய்தந்தையரைக் குறிக்குஞ் சொற்களாகவே அமைவனவாயின.





உலகமெங்கும் ஒரேபடியாகத் தோன்றும் இவ்வியற்கை மொழிகளுங்கூட அவ்வந்நிலத்தின் றன்மையாற் சிறுசிறு வேறுபாடுடனுங் காணப்படா நிற்கின்றன. பனி மிகுந்த நாட்டில் உறைபவரான ஆங்கில மக்கள் மொழியில் 'மதர்' 'பாதர்' என்னுஞ் சொற்கள் தாய்தந்தையரைக் குறிப்பனவாய் இருக்கின்றன. பிள்ளைகட்கு முதலில் பிறக்கும் 'ம' என்னும் ஒலியே மதர் எனவும், அதன்பின் பிறக்கும் 'ப' என்னும் ஒலியே பாதர் எனவும் திருபெய்துகின்றன. இச்சொற்களில் ரகரவொலி விரவி நிற்றல் உற்றுணரற்பாலதாம். முன்னரே கூறியபடி, குறிராற் கரகரப்பான, மிடற்றின் கண்ரகரவொலி தோன்றல் இயல்பாதலின், மகார்க்கு இயற்கையே தோன்றிய இச்சொற்களிலும், மகார்க்கு இயற்கையே தோன்றிய இச்சொற்களிலும் அவ்ரகர வொலி விரவ, அவை மதர் பாதர் என ரகர வீற்றால் முடிந்தன.

நமது தமிழ் நாடாகிய இவ்விந்தியாவிற்புகுந்த ஆரியரும் வடக்கே மேருமலையைச் சூழ்ந்த பனி நாடுகளில் உறைந்தவர்களாதலின், அவரது ஆரிய மொழியின் கண் தாய் தந்தையரைக் குறிக்குஞ் சொற்களும் 'மாத்ரு' 'பித்ரு' என் ரகரவொலி விரவி நிற்கின்றன. இங்ஙனமே பனி நாடுகளில் வழங்கும் எல்லா மொழிகளிலும் தாய் தந்தையரைக் குறிக்கும் இப் பொதுச் சொற்களில் ரகரவொலி விரவி நிற்றல் காணப்படும்.

இவ்வாறு அவ்வந்நிலத்தின் இயல்புக்கேற்ப ஆங்காங்குறையும் மக்களிடத்துப் பலவகை வேறுபாடுகள் உண்டாதலால் அவர்களிடத்து இயல்பாற் பிறக்கும் ஒலிகளும் பலதிறப்படுகின்றன. அவ்வந்நிலங்களில் வேறுபாடுகள் அளவுக்கு அடங்காதனவாய் இருத்தலால் அவ்வேறுபாடுகளுக்கு உட்பட்ட மக்களிடத்துத் தோன்றும் ஒலி வேறுபாடுகளும் அளவுக்கு அடங்காதனவாயிருக்கின்றன.

ஆகவே, உலகத்தில் வழங்கும் ஒலிகள் அத்துணையும் அளந்தறிந்து முடிவு கட்டல் எவர்க்கும் ஏலாமையின், அவற்றை அறியப்புகுதலும் 'எமது மொழி எல்லா ஒலி வேறுபாடுகளும் முற்றும் உடையது' எனச் செருக்கிக் கூறுதலும் பயன்படாதனவாம். ஆகவே, எல்லா ஒலிவேறுபாடுகளையும் அளந்தறியப் புகுதலை விடுத்து, எல்லா ஒலிகளும் பிறத்தற்கு முதலாய் உள்ள சில ஒலி எழுத்துக்கள் எவையென்று அறிந்துகொள்ளுதலே பயன்மிகுதியும் உடையதாகும். ஒரே மொழியினுள்ளும் ஓர் எழுத்தாதல் ஒரு சொல்லாதல் பலராற் பல்வேறு வகையாகச் சொல்லப்படுதலை உற்று நோக்கிக் காண்பார்க்கு யாங்கூறும் இவ்வுண்மை நன்கு விளங்காநிற்கும்.

**– மறைத்திரு மறைமலையடிகளார் எழுதி,**
**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட**
**'அறிவுரைக்கோவை' என்ற நூலிலிருந்து.**

***(மறைமலையடிகள் நினைவு நாள் - 30.9.1950)***

**உலகின் எல்லாத் திசைகளிலிருந்தும் சிந்தனைகள் வந்து சேருவதற்கு வசதியாக நமது வாசல் கதவுகளையும், ஜன்னல் கதவுகளையும் திறந்தே வைத்திருக்க வேண்டும்.**

**– பண்டித நேரு**



# திரைப்பட விருதுகள் வழங்கும் விழா

தமிழக அரசின் சார்பில் 1994 ஆம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படங்கள், நடிகர்கள், நடிகையர், தொழில் நுட்பக்கலைஞர்கள், கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகள் வழங்கும் விழா, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்றது. 18.8.96 அன்று சிறப்புற நடைபெற்ற இவ்விழாவில் - அமைச்சர்கள், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள், திரையுலகக் கலைஞர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். விழா எளிமையாகவும் அதே நேரத்தில் சிறப்பாகவும் நடைபெற்றது.

விழாவிற்கு மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டி அவர்கள் தலைமை ஏற்றார்.

மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு.வ. முல்லைவேந்தன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

பின்பு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிறந்த திரைப்படங்கள், நடிகர்கள், நடிகையர், தொழில் நுட்ப கலைஞர்கள் கலைத்துறை வித்தகர்கள் விருதுகளை வழங்கினார்.



விழாவில் கலந்து கொண்ட மேதகு ஆளுநர், 'சூப்பர் ஸ்டார்' ரஜினிகாந்த் ஆகியோருக்கு நினைவுப் பரிசுகளை அரசின் சார்பில் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

**ரஜினிகாந்த் வாழ்த்து**

திரு ரஜினிகாந்த் வாழ்த்துரை வழங்கிய போது கூறியதாவது:

''இங்கு விருது பெற்ற கலைஞர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகிறேன். நான் முதல்வர் கலைஞர் அவர்களை வாழ்த்திப் பேசுவதற்கு எனக்கு வயதோ, அறிவோ இல்லை. ஆண்டவன் ரூபத்தில் வந்து இந்தத் தமிழ் நாட்டைக் கலைஞர்தான் காப்பாற்றியிருக்கிறார். இப்போது கலைஞர் எப்படி ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதை மயிலாப்பூரிலிருந்து, சைதாப்பேட்டையிலிருந்து, டெல்லி நாடாளுமன்ற வட்டாரம் வரையில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நாடாளுமன்றத்திற்குள் பேசுகிற காலமும் வரும்.



இன்னொன்றையும் சொல்கிறேன். 89ல் சினிமா சம்பந்தப்பட்ட சம்பவம். அப்போது கலைஞர் முதல்வராக இருந்தார். என்னை அழைத்தார், நான் முதல்வர் வீட்டிற்குச் சென்றேன். திரு. மு.க. ஸ்டாலின் என்னை அழைத்துச்சென்றார். அப்போது கலைஞர் கேட்டார்,"பூம்புகார் புரொடக்ஷனில் நீங்கள் படம் பண்ண என்னை உங்களிடம் ஒரு வார்த்தை சொல்லச் சொல்லி அமிர்தமும், செல்வமும் சொன்னார்கள். அவர்கள் என்ன சொன்னார்கவோ அதை நான் உங்களிடம் சொல்லியிருக்கிறேன். நான் சொன்னேன் என்பதற்காக நீங்கள் படம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை:நீங்கள் படம்செய்யவில்லை என்றாலும் எனக்கு மகிழ்ச்சிதான், செய்தாலும் மகிழ்ச்சிதான். படம் செய்தாலும், செய்யா விட்டாலும் நீங்கள் எனக்கு நண்பர்தான். அவர்கள் உங்களிடம் கேட்டால் நான் சொல்லி விட்டதாகச் சொல்லிவிடுங்கள்'' என்றார்.

அதுதான் கலைஞர் அவர்களின் பெருந்தன்மை. அதற்காகத்தான் நான் இதைச் சொன்னேன்.







கலைஞர் அவர்கள் நல்ல ஆரோக்கியத்துடன், நல்ல மன நிம்மதியுடன் வாழ்கிற வரைக்கும் முதலமைச்சராகவே வாழ்ந்து மக்களுக்கு நல்லதைச் செய்ய வேண்டும் என்று ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன்.

**கலைஞர் பேருரை**

பிறகு, முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப்பேருரையாற்றினார். அதன் விவரம் வருமாறு:

" 1994 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஒரு குழுவின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட படங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட கலைஞர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட கலைத்துறை நிபுணர்கள் -இவர்களுக்காக 95ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருக்க வேண்டிய பரிசுகளை 96ஆம் ஆண்டு நாம்தான் வழங்க வேண்டும் என்ற மக்களின் தீர்ப்புப்படி, இன்றைக்கு அவர்களுக்கெல்லாம் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. அறிஞர் அண்ணா அவர்களுடைய பெயராலும், புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய பெயராலும், ராஜா சாண்டோ அவர்களுடைய பெயராலும், கலைவாணர் அவர்களுடைய பெயராலும், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களுடைய பெயராலும் இந்த அரசு விருதுகளை வழங்கியிருக்கிறது.

கலையுலகம் எனக்குத் தாய்வீடு அல்ல; அரசியல்தான் எனக்குத் தாயகம். கலையுலகம் நான் புகுந்த வீடு; புகுந்த வீட்டில் என்னுடைய பணிகளை நான் என்னால் இயன்ற அளவுக்கு ஆற்றியிருந்தாலும் கூட, சில மருமகள்களைப் போல எனக்குத் தாய்வீடு நினைவுதான் அதிகம். அந்த நினைவின் காரணமாகத்தான் இன்று உங்களுடைய தொண்டனாக, உங்களுடைய ஊழியனாக இந்த நாட்டுக்குச் சேவை புரிகின்ற சேவகனாக உங்கள் முன்னால் நின்றுகொண்டிருக்கிறேன்.



இங்கே பரிசுகளை - விருதுகளைப் பெற்றவர்களையெல்லாம் தனித்தனியாக நான் வாழ்த்துவதற்கு நேரம் இல்லை. நான் அவர்களையெல்லாம் தனித்தனியாகப் பாராட்ட, வாழ்த்த இயலாத நிலையில் அவர்களெல்லாம் என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் செய்ய வேண்டிய அந்தப் பணியைத் தம்பி ரஜினிகாந்த் அவர்கள் மிக அழகாக ஒவ்வொருவரையும் குறிப்பிட்டு, அவர்களையெல்லாம் வாழ்த்திப் பாராட்டிப் பேசியிருக்கின்றார். இப்படி என்னுடைய பணிகளை எப்போதும் தம்பி ரஜினிகாந்த் பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

**ஆளுநர் உரை**



இந்த விழாவின் நிறைவாக மேதகு ஆளுநர் அவர்கள் தலைமையுரையாற்றினார். அப்போது:"கலைஞரை நான் தினந்தோறும் கவனித்துக் கொண்டிருக்கிறேன். சட்டப் பேரவை நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அரசில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் கவனித்துக்கொண்டிருக்கிறேன். அவற்றின் மூலம் தமிழ்நாடு மீண்டும் சட்ட மீறல்களிலிருந்தும், இதர மோசமான நிலைமைகளிலிருந்தும் விலகுவதற்கான நடவடிக்கைகளை முதல்வர் கலைஞர் அவர்கள் எடுத்து வருகிறார்கள் என்பது தெரிகிறது.

சில தொழிலதிபர்கள் என்னைச் சந்தித்து, தாங்கள் முதலமைச்சரிடம் சுதந்திரமாகக் கருத்துக்களைச் சொல்ல முடிகிறது என்று கூறியுள்ளனர். இதன் மூலம் முதல்வர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் தொழில் மயமாக்கல்

மீண்டும் முக்கியப் பங்கு வகிக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் உட்பட நண்பர்கள் அனைவருக்கும் நான் கூறிக்கொள்ள விரும்புவதெல்லாம் 'நீங்கள் முதலமைச்சருக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்தால் உயர்ந்த வளமும், வரலாறும், எல்லாத் துறைகளிலும் உயர்ந்து நிற்கும்,' தமிழ்நாடு, பொருளாதார வளர்ச்சியிலும் முன்னிலை வகிக்கும். அதை நான் உறுதியாக நம்புகிறேன்.

திரையுலகிலிருந்து பல தலைவர்கள் வந்துள்ளனர். தென்னிந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்களே இந்தியாவில் அதிகப் படங்களைத் தயாரிக்கின்றனர். எனவே திரையுலகத்தினரையும் இன்று விருது பெற்றவர்

3. சிறந்த படம் - மூன்றாம் பரிசு :
**பவித்ரா**

4. சிறந்த படம் - சிறப்புப் பரிசு :
**மோக முள்**

5. பெண்களைப் பற்றி சிறந்த முறையில் பிரதிபலிக்கின்ற நல்ல தமிழ்த் திரைப்படம் -
**கருத்தம்மா**

**கலைஞர்களுக்கான விருதுகள் :**

1. சிறந்த நடிகர்
**திரு. சரத்குமார்**

2. சிறந்த நடிகை
**செல்வி ராஜஸ்ரீ**

3. சிறந்த நடிகர் சிறப்புப் பரிசு
**திரு. நாகேஷ்**



களையும் வாழ்த்துகிறேன். மீண்டும் தமிழ்நாடு அதற்குரிய பங்கையும், அங்கீகாரத்தையும் வாய்ப்பையும் பெறவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.''

இவ்வாறு மேதகு ஆளுநர் அவர்கள் பேசிய பின்னர், செய்தி-சுற்றுலாத்துறை, செயலர் திரு.துரை சுந்தரேசன் நன்றி கூறினார்.

## விருது பெற்றோர் விவரம் :

**சிறந்த படங்களுக்கான விருதுகள்**

1. சிறந்த படம் - முதல் பரிசு :
**நாட்டாமை**

2. சிறந்த படம் - இரண்டாம் பரிசு :
**நம்மவர்**

4. சிறந்த நடிகை சிறப்புப் பரிசு
**செல்வி ஊர்வசி**

5. சிறந்த இயக்குநர்
**திரு. ரவிக்குமார்**

6. சிறந்த கதையாசிரியர்
**திரு. ஈரோடு சௌந்தர்**

7. சிறந்த உரையாடல் ஆசிரியர்
**திரு. பாலகுமாரன்**

8. சிறந்த இசையமைப்பாளர்
**திரு. ஏ.ஆர். ரகுமான்**

9. சிறந்த பாடல் ஆசிரியர்
**திரு. வைரமுத்து**

10. சிறந்த பின்னணிப் பாடகர்
**திரு. எஸ்.பி. பாலசுப்ரமணியம்**





11. சிறந்த பின்னணிப் பாடகி
**செல்வி. ஸ்வர்ணலதா**

12. சிறந்த ஒளிப்பதிவாளர்
**திரு. ஜீவா**

13. சிறந்த ஒலிப்பதிவாளர்
**திரு. ஸ்ரீதர், திரு. சிவக்குமார்**

14. சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்)
**திரு. லெனின், திரு. விஜயன்**

15. சிறந்த ஆர்ட் டைரக்டர்
**திரு. தோட்டாதரணி**

16. சிறந்த சண்டைப் பயிற்சியாளர்
**திரு. ராக்கி ராஜேஷ்**

17. சிறந்த நடன ஆசிரியர்



**திரு. சுந்தரம், திரு. ராஜு**

18. சிறந்த ஒப்பனைக் கலைஞர்
**திரு. சசி**

19. சிறந்த தையற் கலைஞர்
**திரு. காசி**

20. சிறந்த குழந்தை நட்சத்திரம்
**மோனிஷா**

**லத்துறை வித்தகர்களுக்கான விருதுகள்**

1. அறிஞர் அண்ணா விருது
**திரு. ஆரூர்தாஸ்**

2. பாவேந்தர் பாரதிதாசன் விருது
**கவிஞர் வாலி**

3. ராஜா சாண்டோ விருது
**திரு. எஸ்.பி. முத்துராமன்**

4. கலைவாணர் விருது
**திரு. செந்தில்**

5. எம்.ஜி.ஆர். விருது
**விஜய்காந்த்**

## நமது சொந்தம் இந்த நாடு!

நாமக்கல் கவிஞர்

இளந்தமிழா உன்னைக்காண
இன்பம் மிகவும் பெருகுது!
இதுவரைக்கும் எனக்கிருந்த
துன்பம்சற்றுக் குறையுது!

வளந்திகழ்ந்த வடிவினோடும்
வலிமைபேசி வந்தனை
வறுமைமிக்க அடிமை நிற்கு
வந்த ஊக்கம் கண்டுநான்

தளர்ந்திருந்த சோகம்விட்டுத்
தைரியங்கொண் டேனடா!
தமிழர் நாட்டின் மேன்மைமிகத்
தக்ககாலம் வந்ததோ!

குளிர்ந்தஉன்றன் உள்ளம்போலக்
குறைவிலாது நின்றுநீ
குற்றமற்ற சேவைசெய்து
கொற்றமோங்கி வாழ்குவாய்!

தமிழனென்ற பெருமையோடு
தலைநிமிர்ந்து நில்லடா!
தரணியெங்கும் இணையிலாஉன்
சரிதைகொண்டு செல்லடா!

அமிழ்தமென்ற தமிழினோசை
அண்டமுட்ட உலகெலாம்
அகில தேச மக்களுங்கண்
டாசைகொள்ளச் செய்துமேல்

கமழ்மணத்தின் தமிழில்மற்ற
நாட்டிலுள்ள கலையெலாம்
கட்டிவந்து தமிழர்வீட்டில்
கதவிடித்துக் கொட்டியே

நமது சொந்தம் இந்த நாடு
நானிலத்தில் மீளவும்
நல்ல வாழ்வு கொள்ளச் சேவை
செய்துவாழ்க நீண்டநாள்!

**மாணவர் பக்கம்**

# படித்தவர் பண்பு



சுந்தரேசனின் ஒரே மகன் திருஞானம்; எப்போதும் ஏதாவது வால்தனம் செய்துகொண்டே இருப்பான். யாரையாவது வம்புக்கு இழுக்காவிட்டால், அன்று அவனுக்குத் தூக்கம் பிடிக்காது. உசிலம்பட்டியில் முக்கால் வாசிப்பேருக்கு, இதனாலேயே அவன் பிரசித்தம்.

வெளியில்தான் இப்படி என்பது இல்லை; வீட்டிலும்கூட சுட்டித்தனமாகத்தான் நடந்துகொள்ளுவான். அவன் தாயார் ஞானசுந்தரம் அவ்வளவாகப் படிக்காதவள். சுந்தரேசனோ கொஞ்சம் படித்திருந்தார். இதனாலேயே அவர் தனது மகன் திருஞானம் அதிகமாகப் படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். எப்பாடு பட்டாவது அவன் படிப்புக்காகச் செலவிட அவர் தயாராக இருந்தார்.

ஐந்தாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தான், திருஞானம். தேர்வில் எல்லாம் ஓரளவுக்கு நல்ல படியாகவே மதிப்பெண்கள் எடுத்துவந்தான். மனப்பூர்வமாகப் படித்தால், இன்னும் நல்லவிதமாக விளங்கமுடியும் என்று வகுப்புஆசிரியர்சொன்னார். ஆனால், படிப்பில் அவ்வளவாக அவனுக்கு ஊக்கம் இல்லை.

காரணம்–அவனுக்கு ஏற்றபடி நான்கைந்து கூட்டாளிகள் சேர்ந்தார்கள். அவர்களில் மூன்று பேர் படிப்பு வாசனையே இல்லாதவர்கள். அப்படிப்பட்டவர்களோடு சேர்ந்துகொண்டு திரிந்தால் ஒருவனுக்குப் படிப்பில் அக்கறை ஏற்படுமோ?

அரைப்பரீட்சை வந்தது. திருஞானம் மிகக் குறைந்த மதிப்பெண்களே வாங்கியிருந்தான்.

தந்தையாரிடம் கையெழுத்து வாங்கி வரும்படி மதிப்பெண் விவர அட்டை அவனுக்குக் கொடுத்திருந்தார்கள். தாயாரோ படிக்காதவள்; தந்தையிடமோ அதைக்காட்ட முடியாது.

இந்த நிலையில், திருஞானம் ஒரு காரியம் செய்தான். தன் தந்தையார் சுந்தரேசன் போடுவது போல அவனே கையெழுத்துப் போட்டு எடுத்துப் போய் வகுப்பில் கொடுத்து விட்டு வந்தான்.

இந்த விஷயம் சுந்தரேசனுக்குப் பக்கத்து வீட்டுப் பையன் பன்னீர் செல்வம் மூலம் தெரிந்துபோய்விட்டது. அவ்வளவுதான், பிரம்பை எடுத்துத் தனது கைவலிக்கிற வரை மகனை அடித்துவிட்டார் அவர். அதுமட்டுமல்ல; அன்று அவனுக்குச் சாப்பாடு போடக் கூடாது என்றும் தன் மனைவியிடம் சொல்லி விட்டுச் சென்றார்.

ஆனால், ஞானசுந்தரத்தின் தாயுள்ளம் அதற்குக் கட்டுப்படவில்லை; அவன் அடி வாங்கியதே போதும் என்று நினைத்தாள் அவள். அதனால், சுந்தரேசனுக்குத் தெரியாமல் அவனைச் சாப்பிடச் செய்தாள்.

அதற்கு மறுநாளே வேறொரு சம்பவம் நடந்துவிட்டது.

திருஞானம் தன் கூட்டாளிகளோடு சேர்ந்து கொண்டு, பக்கத்து வீட்டுப் பையன் பன்னீர்செல்வத்தை வழிமறித்துச் செம்மையாக உதைத்துவிட்டான். இதையறிந்த சுந்தரேசன் துடிதுடித்துப் போனார்.



பன்னீர்செல்வம் பக்கத்து வீட்டுப் பையன் என்பதனால் அல்ல அது; அவன் மிகவும் நன்றாகப் படிக்கக்கூடியவன். பரம சாது. அவன் தந்தை தியாகராஜனும், சுந்தரேசனும் மிக நெருங்கிய நண்பர்கள். இதனாலேயே தன் மகனின் போக்





கைச் சுந்தரேசனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

இந்தச் சம்பவம்பற்றி அறிந்ததும், தியாகராஜன் வீட்டுக்குப் போனார் சுந்தரேசன். அவர் மகன் பன்னீர்செல்வத்துக்கு மனப்பூர்வமான ஆறுதல் சொன்னார். மகனால் ஏற்பட்ட விபரீதத்திற்காகத் தியாகராஜனிடமும் அவர் மகனிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

''நமக்குள்ள என்னப்பா?'' என்றார் தியாகராஜன். அதுமட்டுமல்ல; ''திருஞானத்தை இப்படியே வளரவிட்டேன்னா.. வருங் காலத்துல இதாட்டமே ஊர்பூரா நீ மன்னிப்பு கேட்கும்படி இருக்கும். அவனைக் கொஞ்சம் பார்த்துக்க. அஞ்சுல வளையாததாஐம்பதுல வளையப்போவுது? கண்டிச்சு வை!'' என்றும் சொல்லி அனுப்பினார்.

நேரே வீட்டுக்குவந்தார் சுந்தரேசன். பெரிதாக ஏதோ நடக்கப்போகிறது என்று எதிர்பார்த்தாள் அவர் மனைவி ஞானசுந்தரம். அந்த பயத்தினாலேயே தனது மகன் திருஞானத்துக்குச் சீக்கிரமாகச் சாப்பாடு போட்டுப் படுக்க வைத்திருந்தாள்.

சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தாள் ஞானசுந்தரம். சுந்தரேசனோ, எதையுமே பேசவில்லை. உத்தரத்தையே பார்த்தபடி ஈஸிசேரில் மௌனமாகச் சாய்ந்திருந்தார்.

மெதுவாக அவர் முன்னால் போய் நின்றாள் அவள், ''என்னங்க, சாப்பாடு போடவா?'' என்று கேட்டாள்.

''இல்லே ஞானசுந்தரம், எனக்கு.. இன்னிக்குச் சாப்பாடு வேண்டாம்'' என்றார் சுந்தரேசன்.

திகைப்புடன், பதில் எதுவும் பேசாமல், தன் கணவரைக் கலக்கத்தோடு பார்த்தாள், அவள்.

''அடுத்த வீட்டு தியாகராஜனோட மகன் பன்னீர்செல்வம் இருக்கானே? அவன் இவனைவிடச் சின்னவன்தான். அவன் எப்படிப் படிக்கிறான்! ஆனா... ஒரு நாளாவது இவனைப்பத்தி நமக்குப் புகார் வராமெ இருந்தது உண்டா? திருஞானம் தப்பு பன்ற ஒவ்வொரு நாளும் ஒருவேளை அவனுக்குச் சாப்பாடு போடாதேன்னு நானும் சொல்லிக் கிட்டேவர்றேன். நீ கேட்கிறதில்லை. அதனால... அவன் செய்யிற தப்புக்காக நான் ஒரு வேளை பட்டினி கிடக்கப்போறேன்.'' என்று மிகவும் வருத்தத்தோடு சொன்னார் சுந்தரேசன்.

இதைக்கேட்ட ஞானசுந்தரம் அப்படியே மனம் இடிந்து போய் உட்கார்ந்தாள். அதைத் தொடர்ந்தாற்போல சுந்தரேசன் சொன்னது இன்னும் அவளைத் திடுக்கிடச் செய்தது.

''முழுப் பரீட்சையில் அஞ்சு ரேங்குக்கு உள்ளாற திருஞானம் மார்க் வாங்கிப் பாஸ் பண்ணனும்; இல்லியோ, மதுரைக்குக் கொண்டு போய் அவனை ஹாஸ்டல்ல சேர்த்துடப் போறதா நான் தீர்மானிச்சுட்டேன்!'' என்று சொல்லிவிட்டுப் படுக்கையை விரித்தார் அவர்.

அந்த ஒரே ஒரு நாள் மட்டுமல்ல; வரிசையாக இது போலப் பலநாட்கள் சுந்தரேசன் பட்டினி கிடக்க நேரிட்டது.

ஆண்டுத் தேர்வு வந்தது. அதன் முடிவும் தெரிந்தது. திருஞானம் வெற்றி பெற்றிருந்தான்; அதாவது இருபத்தைந்தாவது ரேங்கில்.



''இனிமேல் நல்லாப் படிப்பான்; விட்டுடுங்க'' என்று ஞானசுந்தரம் எவ்வளவோ மன்றாடினாள். சுந்தரேசன் கேட்கவில்லை. மதுரை-வண்டியூரில் உள்ள பள்ளிக்கூடம் ஒன்றில், அவனை ஆறாம் வகுப்பில் சேர்க்க இடம் பிடித்தார். அந்தப் பள்ளிக்கூட மாணவர் விடுதியிலும் அவனைத் தங்கவைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அதற்குப் பிறகாவது திருஞானம் மனம் திருந்தி நடந்தானா, நல்லபெயர் வாங்கினானா என்றால் அதுதான் இல்லை. அங்கே கண்காணிப்பாளராக இருந்த ஒருவர், அவன் கொடுத்த தொல்லை தாங்காமல் வேறு ஊர் விடுதிக்கு வேலை மாற்றம் வாங்கிக் கொண்டே போய்விட்டார்!

மாணவர் விடுதிக்குப் புதிய கண்காணிப்பாளராகக் குணசேகரன் என்பவர் வந்து

> **தோழமைதான் சமத்துவத்தின் கனி; சமதர்ம மணம்; இதைக் காணத்தான் சாதி தொலைய வேண்டும் என்றார் பாரதியார்.**
>
> **– அறிஞர் அண்ணா**

சேர்ந்தார். பெயருக்கேற்றபடி அவர் நல்ல குணவானாக இருந்தார். மாணவர்கள் எல்லோரிடமுமே மிகவும் அன்புடன் பழகினார். விடுதியைப் பொறுத்தவரை யார் என்ன குறை சொன்னாலும் உடனே அதை நீக்கிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்.

முன்பு இருந்த விடுதிக் கண்காணிப்பாளரைப் போலவே புதிதாக வந்த குணசேகரனையும் விரட்டிவிடத் திருஞானம் முயன்றான்.

விடுதிக் காவலாளி நவநீதம் ஒரு தடவை திருஞானம் பற்றிப் புதிய கண்காணிப்பாளரிடம் சொன்னான். அவனை அமைதிப்படுத்தினார், அவர்.

திருஞானம் என்ன தவறு செய்தாலும் கண்டு கொள்ள மாட்டார் அவர். ஒரு நாள் அவர் துவைத்துக் காயவைத்திருந்த வேட்டியில் இங்க்கை ஊற்றிவிட்டான், அவன்.

''நீங்க என்னை எவ்வளவு அவமானப்படுத்தினாலும் சரி தம்பி; எனக்குக் கோபம் வராது. ஏன்னா... உங்க மேல எல்லாம் நான் கோபப்பட்டுட்டேனா, நீங்க என்னை ஜெயிச்சுட்டதா அர்த்தம். அப்படி என்னை யாரும் ஜெயிக்க முடியாது. காற்றுள்ள போதே தூற்றிக்கணும்; சின்ன வயசுள்ள போதே படிச்சுக்கணும். என் வேட்டியில்பட்ட இங்க்கோட கறை சலவைக்குப் போட்டா போயிடும். ஆனா.. இந்த வயசுல உங்க மனசுல கறை விழுந்தா, படிப்புங்கிற சலவையாலதான் நீக்கமுடியுமே தவிர, வேற எப்படியும் அதை நீக்கமுடியாது. இதை மட்டும் மறந்துடாதீங்க'' என்றெல்லாம் எல்லோருக்கும் சொல்லுவது போல அவனுக்குப் புத்திமதி சொன்னார்.

அன்றிரவு, விடுதிக் காவலாளி ஒவ்வொரு அறையாகப் பார்த்துக்கொண்டு வந்தான். அப்போது அவனுக்கும் திருஞானத்திற்கும் விடுதிக்கண்காணிப்பாளர் பற்றிப் பேச்சு வந்தது. அவரைப் பற்றித் தாறுமாறாகப் பேசினான், அவன்.

''குணசேகரன் சார் தங்கம்னா தங்கம்; தன்னை யார் என்ன பேசினாலும் அவர் அதைப் பொருட்படுத்தமாட்டார். ஏன்னா, அவர் உன்னாட்டம் முட்டாள் இல்லே, நிறையப் படிச்சிருக்கார். தன்னை ஒரு நாய் கடிச்சுட்டா திருப்பிக் கடிக்கிறது சரியான மனுஷத்தனமில்லை; அப்புறம் நாய்க்கும் மனுஷனுக்கும் வித்தியாசம் தெரியாமெல்ல போய்டும்?'' என்றான் காவலாளி.

அவன் இப்படிச் சொன்னதும் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது, திருஞானத்திற்கு. அவனை ஓங்கி அடித்துவிட்டான். நவநீதம் அதைப் பொறுத்துக் கொண்டு போய்விட்டான். கன்னத்தைத் தடவிக் கொண்டே பேசாமல் போய்விட்ட அவனை வியப்போடு பார்த்தான், திருஞானம். அவன் மனம் 'நீ செய்தது சரிதானா?' என்று அவனையே கேட்டது. இரவெல்லாம் தூக்கமில்லை.

விடுதிக்காவலாளி சொன்ன முரட்டு வார்த்தைகள் நாளடைவிலேயே திருஞானத்தை நல்லவனாக்கிவிட்டன. அமைதியாக எல்லோரிடமும் பழகலானான். ஒழுங்காகப் படிக்க ஆரம்பித்துவிட்டான் அவன். அவனை எல்லோரும் அதிசயத்தோடு பார்க்கலானார்கள்.

இதைப் போலவே ஒரு கருத்தை நாலடியார் பாடல் ஒன்று நமக்குக் காரசாரமாகத் தெரிவிக்கிறது. இதோ அந்தப் பாடல்:

''கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்
பேர்த்து நாய் கௌவினார் ஈங்கில்லை - நீர்த்தன்றிக்
கீழ் மக்கள் கீழாய் சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயால் மீட்டு''

**பொருள் :**

நாயானது வெறிகொண்டு நம்மைக் கடித்துவிட்டதே என்பதற்காகத் திருப்பி அதைக் கடித்தவர்கள் உலகில் உண்டா? அதைப் போலத் தகுதியின்றிக் கீழ் மக்கள் தகாத சொற்களைத் தம்மீது வீசினால், மேன்மக்கள் அதே சொற்களை அவர்கள் மேல் திருப்பி வீசுவார்களோ? ஒருபோதும் அப்படிச் செய்ய மாட்டார்கள்!

***– 'நாலடியார் நீதிக் கதைகள்' நூலிலிருந்து***
***நன்றி : அண்ணாமலைப் பதிப்பகம், 1, கணபதி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.***





# எங்கள் ஊர் பிரச்சினை

'**எ**ங்கள் ஊர் பிரச்சினை' பகுதிக்கு வாசகர்களிடமிருந்து, கடிதங்கள் தினந்தோறும் வந்து குவிந்தவண்ணம் உள்ளன. தமிழ்நாட்டின் குக்கிராமங்கள், நகரங்கள் இப்படி எல்லா இடங்களிலிருந்தும் அந்தந்த ஊர்ப் பிரச்சினைகளைத் தாங்கி கடிதங்கள் வந்துள்ளன. அவைகளைப் பிரித்துத் தொகுத்துப் பிரச்சினைகளைப் பொறுத்து, உரிய அரசு அலுவலர்களுக்கு அனுப்பி, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத் 'தமிழரசு' இதழில் வெளியிடுகிறோம்.

விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலிருந்து 44 மாணவ, மாணவிகள் தங்கள் பள்ளிக்கு ஆசிரியர்கள் வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். அவைகளைப் பரிசீலித்து, தொடக்கக் கல்வி இயக்குநர் திரு. ரெ. நாராயணசாமி அவர்களைத் தொடர்பு கொண்டு நடிவடிக்கை எடுக்கச் சொன்னோம். அவரும் 'தமிழரசு'க்கு ஒத்துழைப்புக் கொடுத்து, மாணவ, மாணவிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைத்துள்ளார். மற்ற அலுவலர்களிடமிருந்து பதில்கள் வந்தவுடன் அவைகளும் தமிழரசில் வெளியிடப்படும். இப்பணி தொடரும்.

***– ஆசிரியர்***

விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், சின்னசேலம் ஒன்றியம், மட்டிகைக்குறிச்சி கிராமத்தில் இருநூற்று முப்பது மாணவர்கள் பயிலும் எட்டாம் வகுப்புவரை உள்ள எங்கள் ஊர் நடுநிலைப் பள்ளியில் இரு ஆசிரியர்களே உள்ளனர். நாங்கள் எப்படி கற்றுத் தேருவது. 'கற்கை நன்றே! கற்கை நன்றே! பிச்சைப் புகினும் கற்கை நன்றே!' பிச்சை - கேட்கின்றோம். ஆசிரியர்கள் நியமனப் பிச்சை கேட்கின்றோம். உரிய ஆசிரியர்களை நியமனம் செய்து எங்கள் புண்களைக் கண்களாக்குங்கள் என்று, உங்கள் தாள் பற்றி வணங்கி வேண்டுகிறோம்.

இப்படிக்கு,
**மாணவ, மாணவிகள்,**
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
மட்டிகைக்குறிச்சி,
ஏர்வாய்ப்பட்டிணம் அஞ்சல்,
கள்ளக்குறிச்சி

## தீர்வு

**வி**ழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் ஒன்றியம், மட்டிகைக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 250 மாணவ, மாணவியர் பயின்று வருவதாகவும் ஆனால் இரண்டு ஆசிரியர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர் எனவும் தமிழரசு பத்திரிகைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது தொடர்பாக கீழ்க் காணும் தகவல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மட்டிகைக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 30.6.96 அன்றுள்ளபடி மாணவர் பதிவு-வருகை கீழ்க்காணும்படி இருந்தது.

| | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| பதிவு | 91 | 107 | 198 |
| வருகை | 83 | 81 | 164 |

இப்பள்ளிக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் எண்ணிக்கை மொத்தம் மூன்று.

இதில் ஒரு பணியிடம் காலியாக உள்ளது. இந்த ஆசிரியர் பணியிடத்தினை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இப்பள்ளிக்கு மாணவர்கள் வருகை அதிகமாக இருப்பதால் மாற்றுப் பணி மூலம் இரண்டு ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
**ரெ. நாராயணசாமி,**
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை - 6.



# வெளிச்ச விளக்குகள்

தனியானதோர் ஆற்றங்கரையின்
அமைதியில்
நீண்ட நாணல்களின் மத்தியில்
நான் அவளைக் கேட்டேன்;
''மாதே,
உனது விளக்கைத்
திரையிட்டுக் கொண்டு
எங்கே செல்லுகின்றாய்?
எனது இல்லமெலாம்
இருண்டு தனிமையில் கிடக்கிறது.
எனக்கு உனது விளக்கைக் கொடு!''

அவள் தனது கருவிழிகளை உயர்த்தி,
அந்தி இருளில்
என் முகத்தை உற்று நோக்கினாள்.
''எங்கும் இருள் கவிய
அமைதியாக ஓடிக்கொண்டிருக்கும்
ஆற்றில் என் விளக்கை மிதக்க விடவே
நான் இங்கே வந்திருக்கிறேன்''
என்று அவள் பதிலிறுத்தாள்.

நீண்ட நாணல்களின்
மத்தியில் நின்று கொண்டு
மங்கலான சுடருடன்
அவளுடைய விளக்கு
வெள்ளத்தின் மீது
பயனின்றி மிதந்தோடுவதைக்
கூர்ந்து கவனித்தேன்.
குவியும் இரவின் மௌன அமைதியில்
நான் கேட்டேன்;
''மாதே!
உன் விளக்குகள் யாவும்
ஏற்றப்பட்டன; இன்னும்
உனது விளக்குடன் எங்கு செல்லுகின்றாய்?





எனது வீடு
விளக்கற்று இருண்டு கிடக்கிறது
உனது விளக்கை இரவல் கொடு?''

அவள் என்
வார்த்தையைக் கேட்டதும் –
என் முகத்தின்பால்
தன்னுடைய கருவிழிகளை உயர்த்தி,
ஒரு நிமிஷம்
ஐயமுற்று நின்றாள்.
''எனது விளக்கை
விண்ணிற்கு அர்ப்பணிக்கவே
நான் வந்திருக்கிறேன்'' – என்று
பதிலளித்தாள்.



நான் நின்று கவனித்தேன்;
அவளுடைய வெளிச்சம்
வெட்டவெளியில்
பயனற்று எரிந்துகொண்டிருந்தது.

மதியின் ஒளிமுகம்
காணாத நள்ளிருளில்
நான் அவளைக் கேட்டேன் –
''மாதே அந்த விளக்கை
உன் இதயத்தினருகே பிடித்துக்கொண்டு
எதைத் தேடுகிறாய்?
என் வீடு தனிமையில் இருண்டு கிடக்கிறது
எனக்கு உனது வெளிச்சத்தைக் கொடு!''

ஒரு நிமிஷம் நின்று சிந்தித்தாள்;
இரவில் என் முகத்தை
உற்று நோக்கிக் கூறினாள்;
''வெளிச்ச விழாவைக் கொண்டாடவே
நான் எனது இந்த விளக்கைக்
கொண்டுவந்திருக்கிறேன்!''

**நான் கவனித்தேன்,**
அவளுடைய சிறு விளக்கு,
வெளிச்சங்களின்மத்தியில் பயனற்று மறைந்தது!
ஆனால், அவளுடைய புன்னகை
என்னுள் மின்னலிட்டுக் கொண்டிருந்தது!

**– தாகூரின் தோஞ்சலி**
**நன்றி : கற்பகம் புத்தகாலயம்,**
**18, ராஜாபாதர் தெரு, சென்னை - 600 017.**

# செய்திச் சரம்

### அண்டார்ட்டிகாவைக் காப்போம்

சுற்றுப்புறச் சூழல் கேடுகளின் உச்சகட்டமாக உலக தட்ப வெப்ப நிலை உயர்வினால் அண்டார்டிகாவில் உள்ள பனிக் கட்டிகள் உருக ஆரம்பித்து விட்டது. இந்நிலை தொடருமேயானால் உலகெங்கும் உள்ள பல தீவுகள் அரிய தாவரவகைகள் மற்றும் விலங்கினங்கள் அழியும் அபாய நிலையில் உள்ளது. இத்தகைய அழிவுகளை உலகிற்கு எடுத்துரைத்து, சுற்றுப்புறச் சூழல் மாசுபாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த திரு. சா. சீனுவாசராவ், இரா. ஞானசேகரன் ஆகியோர் உலகப் பயணமாக ''அண்டார்ட்டிகாவை பாதுகாப்போம்'' என்ற முழக்கத்தோடு மாருதி சென் வாகனத்தில் பயணம் கொள்கின்றனர்.

இவர்கள் பயணத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 13.8.96 அன்று சென்னை உழைப்பாளர் சிலை அருகில் கொடியசைத்துத் துவக்கி வைத்து, தனது உரையில் இந்த இளம் இளைஞர்களின் பயணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 2 இலட்சம் வழங்குவதாக அறிவித்தார். இந்த எளிய நிகழ்ச்சிக்குப் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ் அவர்கள் தலைமை ஏற்றார். சட்டமன்றப் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பேராசிரியர் தீரன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு சைதை கா. கிட்டு, எடப்பாடி கணேசன், திரு மணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

### திரு.வி.க. விருது

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் பெயரால் ஆண்டுதோறும் சிறந்த தமிழறிஞர் ஒருவருக்கு 1979 முதல் திரு.வி.க. விருது வழங்கிச் சிறப்புச் செய்வது அரசின் நடைமுறையில் உள்ளது. 1979ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை 17 தமிழறிஞர்களுக்கு 'திரு.வி.க. விருது' வழங்கப் பட்டுள்ளது. 1996-ஆம் ஆண்டு தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது, முனைவர் மா. நன்னன் அவர்களுக்கு வழங்கப் பெறுகிறது. விருதுத் தொகை ரூ. 20,000/- ஆக உயர்த்தி வழங்கப்பெறுகிறது.

### இடைக்கால நிவாரணம்

தமிழ்நாடு அரசு, 1.1.1996க்கு முன் பணியிலிருந்து ஓய்வு பெற்ற/ பணியிலிருக்கும் போது இறந்துவிட்ட திங்கள் ஒன்றுக்கு ரூ. 150/- கருணைத் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்திய/ ஓய்வூதியம் இல்லாத பணியாளரமைப்பைச் சேர்ந்த மாநிலப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் மாவட்டப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு 1.4.1995 முதற்கொண்டு, மாதம் ஒன்றுக்கு ரூ. 50 என்ற அளவிற்குட்பட்டு மேலும் 10 விழுக்காடு கருணைத் தொகையுடன் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 என்ற குறைந்த பட்ச அளவிற்குட்பட்டு இடைக்கால நிவாரணத் தொகை வழங்க முடிவெடுத்து உள்ளது.

### காணாமல் போன மீனவர் மீட்பு

கடந்த ஜூன் மாதம் தமிழகத்தில் வீசிய புயல், மழையிலே சிக்கி கடலிலே மீன் பிடிக்கச் சென்று காணாமல் போன மீனவர்கள் பகுதி பகுதியாக சென்னை வந்து கொண்டிருக்கின்றனர். கடைசியாக 13.8.96ல் ஐந்து மீனவர்கள் பங்களாத்தேஷிலிருந்து சென்னை திரும்பியிருக் கின்றனர். இதற்கு முன்பு 22-7-96 அன்று மூன்று மீனவர்கள் டாக்கா நகரிலிருந்து சென்னை வந்து சேர்ந்தனர். மேலும் 12 மீனவர்கள், பங்களா தேஷில் இருப்பதாக இந்தியத் தூதுவரகம் மூலமாகச் செய்தி வந்ததின் பேரில், அவர்களையும் பத்திரமாகத் தமிழகத்திற்கு அழைத்துவர இரண்டு அதிகாரிகள் தமிழக அரசின் சார்பாக அனுப்பி வைக்கப்படுகின்றனர்.





### வீட்டுவசதி பற்றி கலந்துரையாடல்

வீட்டுவசதித் திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் அவற்றைத் தீர்வு செய்து விரைவில் திட்டங்களை நிறைவேற்றுவது குறித்தும் மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் மத்திய நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் டாக்டர். யு. வெங்கடேஸ்வரலு அவர்களுடன் 7.8.96 அன்று தலைமைச்செயலகத்தில் கலந்துரையாடினார்.

ஏற்கெனவே செயல்படுத்தி வந்த நடைபாதை வாசிகளுக்கான குடியிருப்பு திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த மத்திய அரசு மான்ய உதவி அளிக்க வேண்டும் எனவும், மத்தியதர வர்க்கத்தினருக்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டி விகிதம் குறைக்கப்பட வேண்டும் எனவும், வீடு கட்ட அளிக்கப்படும் கடன் தொகை திருப்பியளிப்பதற்கான கால அளவு 10 ஆண்டு என்பதை 15 ஆண்டுகள் என உயர்த்திட வேண்டும் எனவும், ஹட்கோ 'நிறுவன நிர்வாகக்' குழுவின் அமைப்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தை சேர்ந்த ஒருவரை உறுப்பினராக சேர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு மத்திய நகர்புற அமைச்சர் அவர்கள் பேசுகையில் தமிழ்நாட்டின் கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்படும் எனவும், அக்டோபர் 7 ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை புதுதில்லியில் ஒரு கருத்தரங்கு வீட்டு வசதித் திட்டங்கள் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்யப்படும் எனவும் குறிப்பிட்டார்.

உலகக் குடியிருப்போர் நாள் (World Habitat Day) என்ற வகையில் நடைபெறும் எனவும் தெரிவித்தார்.

### காவிரி நீர்த்தேக்கம் – அரசின் நிலை

கர்நாடக அரசு மேகதாதுவில் பல் பயன் பெறும் வகையில் ஒரு நீர்த் தேக்கத்தைக் காவிரி நதியில் கட்ட ஒரு திட்டம் தீட்டியிருப்பதாக பெங்களூரிலிருந்து வெளியான செய்தி சில நாள் இதழ்களில் 9.8.1996 அன்று வெளிவந் துள்ளது. இது குறித்து தமிழக அரசின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

கர்நாடக அரசு தீட்டியதாகக் கூறப்படும் திட்டத்தைப் பற்றியோ அதன் விவரங்களைப் பற்றியோ தமிழக அரசுக்கு ஒருவிதத் தகவலும் இல்லை. 5.8.1996-ல் இரு மாநில முதலமைச்சர் களும் சந்தித்துப் பேசியபொழுது இந்தப் பொருள் அதில் இடம்பெறவில்லை. தமிழக அரசு அப்படிப்பட்ட திட்டத்திற்கு இசைய வில்லை.

அப்படி ஒரு திட்டம் வகுக்கப்பட்டால், அதன் முழு விவரங்களும், காவிரி ஆற்றின் கீழ்ப்பகுதி மாநிலங்களில் நிலையான பாசனத்திற்கு அத்திட்டத்தால் ஏற்படும் விளைவுகள், பாதிப்பு எல்லாவற்றையும் ஆராய் வது முதல் தேவை. இது இன்றியமையாதது. இவ்வித ஆய்வுக்காக வாய்ப்பு இன்றி மத்திய அரசின் ஒப்புதலுக்கும் நிதி ஒதுக்கீட்டுக்கும் இத்திட்டத்திற்குக் கூட்டு ஆதரவு அளித்து பிரேரணை செய்ய இந்த அரசு முன்வராது.

காவிரி நீரைப் பல்பயன்பெறும் திட்டத்திற்கு உபயோகிப்பதானால் அந்நீரில் பாசனத் தேவைகள் முதற்கண் முன்னுரிமை பெற்றவை. பிற உபயோகங்கள் எல்லாம் பாசனத் தேவைகளுக்குக் கட்டுப்பட்டவை. அத் திட்டங்களைப் பூர்த்தி செய்யும் வகையிலேயே பிற உபயோகங்கள் அமைதல் வேண்டும். எடுத்த எடுப்பிலேயே, இந்த அடிப்படைக் கட்டுப்பாட்டை உத்தேசத் திட்டம் கடைப் பிடிக்கவில்லை என்பது வெளிப்படை.

1982-ஆம் ஆண்டிலே அன்றைய, முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், இந்தியப் பிரதமர், மத்திய அமைச்சர்கள், அன்றைய கர்நாடக முதல் அமைச்சர் திரு. குண்டுராவ் ஆகியோருக்கு எழுதிய கடிதத்தில் மேலே கூறிய கருத்துக்களைத் தெளிவுபடுத்தி இருக்கிறார். அக் கடிதத்தில் கர்நாடக அரசு தன்னிச்சையாக எந்தத் திட்டங்களையும் மேற்கொள்ளக்கூடாது. கீழ் பாசனம் உள்ள மாநிலங்களில் பாசன உரிமைகளுக்கு முழு பாதுகாப்பு அளிக்காமல் அத்திட்டத்தை அனுமதிக்கலாகாது என்றும் மத்திய அரசுக்கு வலியுறுத்தப் பட்டுள்ளது. இந்த நிலையை தமிழக அரசு உறுதிப் படுத்துகிறது.

செய்திச் சரம்

# படமும் செய்தியும்



மலேசியாவில் நடைபெறும் காமன் வெல்த் பாராளுமன்றக் கருத்தரங்கில் கலந்துகொள்ளச் சென்ற மாண்புமிகு தமிழக சட்டப்பேரவைத் தலைவர் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார் (16.8.96).



தமிழ்நாடு மின்வாரிய நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் சங்க இரண்டாவது மாநில மாநாட்டை, சென்னையில் துவக்கிவைத்துச் சிறப்புரையாற்றிய மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு என். வீராசாமி அவர்களுக்குச் சங்கத்தின் சார்பில் நினைவுப் பரிசு வழங்கினார் (18.8.96).



முன்னாள் இந்திய கிரிக்கெட் விளையாட்டுக் குழுவின் தலைவர் திரு. அசாருதீன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார் (19.8.96).



மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் திரு எர்ரான் நாயுடு அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி உடன் உள்ளார்.

றந்த முன்னாள்
நமர் அமரர்
ஜீவ்காந்தியின்
ந்த
ளையொட்டி,
ானாரது
த்துக்கு
ண்புமிகு தமிழக
ல்வர் கலைஞர்
ர்கள் மலர் தூவி
நசலி
லுத்தினார்.
தைத் தொடர்ந்து,
லமைச்
யலகத்தில் மத
லிணக்க
திமொழியும்
த்துக்
ாள்ளப்பட்டது
3.96).



தென்னகப் பண்பாட்டு மையம், அகில இந்திய மரபு மற்றும் கிராமிய நடன நிகழ்ச்சிகளை, மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி அவர்கள் தொடங்கி வைத்தார். மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் உடன் உள்ளார் (13.8.96).



சென்னை உணவு மற்றும் பொதுவிநியோகக் கழகங்கள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. வே. தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர் (16.8.96).



# அம்மா எங்கே ?

பசவராஜ கட்டிமணி

**"பாலீஷ்... பூட் பாலீஷ்!"**

ரெயில்வே ஸ்டேஷன், பஸ் நிற்கும் இடம், சினிமா கொட்டகை, நாடகக் கொட்டகை, உணவு விடுதிகள், டீக் கடை முதலியவற்றின் அருகே என்னுடைய இந்தக் கூக்குரலை நீங்கள் கேட்டிருப்பீர்கள்.



**"...என், குரல் காதில் விழுந்தவுடன் நீங்கள் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொள்கிறீர்கள். புருவத்தை நெறிக்கிறீர்கள். பார்வையைக் கடுமையாக்கிக் கொள்கிறீர்கள். அந்தப் பார்வை அம்பின் தாக்குதலுக்குப் பயப்படுபவன் நான் அல்ல..."**

இந்தக் கூவல் உங்களுக்கு அலுப்பைத் தரும் அளவுக்குப் பழக்கப்பட்டிருக்கும். பூந்தோட்டத்தில் உங்கள் புதிய மனைவியுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாலும் சரி; தினசரியைப் பாடித்துக் கொண்டு ரெயிலுக்காகக் காத்திருந்தாலும் சரி; டிக்கட் வாங்கவென்று கியூவரிசையில் நின்றிருந்தாலும் சரி; அவசர அவசரமாக ரயிலிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தாலும் சரி; பசியோடு சாப்பிடுவதற்காக ஓடிக் கொண்டிருந்தாலும் சரிதான். நான் அதையெல்லாம் கவனிப்பதில்லை. என் நினைவு ஒன்றுதான்; பூட் பாலிஷ். என் லட்சியம் ஒன்றுதான்; ஓரணா சம்பாத்தியம்.

என், குரல் காதில் விழுந்தவுடன் நீங்கள் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொள்கிறீர்கள். புருவத்தை நெறிக்கிறீர்கள். பார்வையை கடுமையாக்கிக் கொள்கிறீர்கள். அந்தப் பார்வை அம்பின் தாக்குதலுக்குப் பயப்படுவன் நான் அல்ல. அவையெல்லாம் எனக்குப் பழகிவிட்டவை. நீங்கள் முரட்டுக் குரலில், "வேண்டாம்" என்றாலும் பின்னடையாமல் கீழே உட்கார்ந்து உங்கள் பூட்ஸ்களில் கைவைப்பேன். 'அதிகம் இல்லை ஐயா' ஒரே அணா. சுத்தமாகப் பாலிஷ் செய்வேன். கண்ணாடிப்போல் பளபளவென்று செய்து கொடுப்பேன். என்று பணிவுமிக்க குரலில் சொல்வேன். என் தோளிலிருந்து தொங்கும் சிறு பையைத் தரையில் வைத்து அதிலிருந்த பிரஷ்ஷையும் பாலிஷ் டப்பியையும் எடுத்துத் தயார் செய்வேன். இந்தச்சந்தர்ப்பத்தில் எப்படிப்பட்டவர்களுக்கும், 'பாலிஷ் போடச் சொல்லலாமா?' என்று தோன்றாமல் இராது. என்ன, பிரமாதம்! ஓரணாதானே! சரி' என்று எண்ணிப் பாதரட்சைகளைக் கழட்டிக் கொடுப்பார்கள். அங்கேயே உட்கார்ந்துகொண்டு நான் என்னுடைய வேலையைத் தொடங்குவேன். முதலில் அவற்றின்மேல் படிந்த தூசியை' எல்லாம் துடைப்பது, பிறகு பாலிஷ் செய்வது, பிரஷ்ஷை வலக்கையிலும் பாதரட்சையை இடக்கையிலும் பிடித்து வேகமாகத் தேய்ப்பது. அப்போது என் கையின் ஓட்டத்தைப் பார்த்துக்கொண்டு நிற்பதே உங்களுக்கு இன்பமாக இருக்கும். பாதரட்சையின்மேல் பிரஷ்ஷை அசைத்த வண்ணம் என் கை எப்படித்தான் ஓடும்! எவ்வளவு கைதேர்ந்த வேலைக்காரனானாலும் அதைக் கண்டு வெட்கப்பட வேண்டும். இந்தத் திறமை சும்மா வந்துவிடுமா? அதற்கும் அனுபவம் வேண்டும், சுவாமி! அனுபவம் வேண்டும்! இந்த வித்தையின் நெளிவு சுளிவெல்லாம் தெரிந்திருக்க வேண்டும்.





என் கன்றிய முகத்தையும் அழுக்கு உடையையும் பார்த்து என் வயதைத் தெரிந்து கொண்டு, 'இவனுக்கென்ன பிரமாத அனுபவம் இருக்கப் போகிறது?' என்று சொல்லாதீர்கள். என் ஐந்தாம் வயதில் தொடங்கி இதுவரையிலும் பத்து வருஷ காலம் பூட் பாலிஷ் தவிர வேறு வேலையே எனக்கு இல்லை. பூட் பாலிஷ் என்றால் நான் - நான் என்றால் பூட் பாலிஷ் என்னும்படி நான் அத்துடன் ஒன்றிப் போய்விட்டேன். என்னைப் பொறுத்தமட்டில் வேறு உலகமே இல்லை. பூட் பாலிஷே என் உலகம். அதை விட்டால் எனக்கு வேறு கதியே இல்லை.

நீங்கள் ஆச்சரியப் படுகிறீர்கள் அல்லவா? அப்படி ஆச்சரியப்படக் காரணம் இல்லை சுவாமி! இந்த உலகத்தில் என்னைச் சேர்ந்தவன் நான் ஒருவன்தான். அப்பா அம்மாவின் முகத்தை நான் பார்த்ததே இல்லை. என் அப்பா யார், அம்மா யார் என்பதே எனக்குத் தெரியாது. எனக்கு நினைவு தெரியும் வயதில் பிச்சைக்காரன் ஒருவன் என்னை வளர்த்துக் கொண்டிருந்தான். என்னைப் போலவே பரதேசிகளாக இருந்த பத்துப் பனிரெண்டு சிறுவர்கள் அவனுடன் இருந்தார்கள். நகருக்கு வெளியே யிருந்த பாழடைந்த தருமச் சத்திரம் ஒன்றில் நாங்கள் எல்லோரும் வசித்துக் கொண்டிருந் தோம். சிறுவர்கள் எல்லோருக்கும் இதே வேலைதான்; பூட் பாலிஷ். காலையிலிருந்து இரவு வரையில் நாங்கள் எல் லோரும் வேலை செய்துவந்த பணத்தைக் கொண்டுவந்து அவனிடம் கொடுப்போம். அவன் எங்களுக்கெல்லாம் சாப்பாடு போட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய பெயர்கூட எனக்குத் தெரியாது; பாவம்! கிழவன். இருமல் நோயினால் உடம்பு வெகு பலவீனமாகி எப்பொழுதும் படுக்கையிலேயே படுத்துக் கொண்டிருந்தான்.

அந்த நிலையிலும் எழுந்திருந்து தர்ம சத்திரத்தின் ஒரு மூலையில் இருந்த கல்லடுப்பில் அரிசியைக் கொதிக்க வைத்து நாங்கள் வரும் வேளைக்குச் சாப்பாட்டைத் தயாரித்து வைத்துக்கொண்டிருப்பான். எங்கள் எல்லோரையும் தன் வயிற்றில் பிறந்த குழந்தைகள் போலப்பார்த்துக் கொண்டு அன்புடன் சாப்பிடச் செய்வான். நாங்கள் எல்லோரும் அவனைத், 'தாத்தா' என்று அழைப்போம். கிழவன் ஒரு நாள் இறந்துவிட்டான். நாங்கள் மறுபடியும் அநாதைகளா



னோம்; எங்கள் கூட்டம் கலைந்துவிட்டது. நாங்கள் எல்லோரும் எங்கள் காலை ஊன்றிக்கொண்டு வாழ்க்கையை நடத்தக் கற்றுக்கொண்டோம்.

ஒருநாள்-அந்த நாள் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. எனக்கு உடம்பு சரியில்லை; சுட்டது. ''இன்றைக்கு வேலைக்குப் போகவேண்டாம். குழந்தை சுகமாகப் படுத்துக்கொள்'' என்று சொல்லித் தாத்தா என்னை ஒரு கோணிப் பையின் மேல் படுக்கவைத்திருந்தார். வேறொரு கோணிப்பையைப் போர்த்துக்கொண்டு ஜுரத்தினால் கனத்துவிட்ட கண்களை மூடிக்கொண்டு நான் படுத்துக் கொண்டிருந்தேன். என் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு என் நெற்றியைத் தடவிய வண்ணம் தாத்தா இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தார். ''ஜுரம் வந்து நீ இங்கே விழுந்து கிடக்கிறாய். உன்னுடைய தாய் இப்போது எங்கே இருக்கிறாளோ? எவ்வளவு சுகப்படுகிறாளோ?...''



**''...என் தாய் சாகவில்லை. உயிரோடிருக் கிறாள். சுகமாகக் காலந் தள்ளுகிறாள் என்பது தெரிந்ததும் என் உள்ளம் பயங்கரமாக ஓலமிடத் தொடங்கியது...''**

''என் தாய்?....''

என் தாய் உயிருடன் இருக்கலாம் என்பது அப்போதுதான் தெரிந்தது. எல்லோருக்கும் தாய் ஒருத்தி இருப்பதுபோல் எனக்கும் இருக்கத்தான் வேண்டும் என்பதுதான் எனக்குத் தெரியும். ஆனால் நான் பிறந்ததுமே அவள் இறந்து போயிருக்க வேண்டும். என் தந்தையும் இறந்திருக்க வேண்டும் என்று நான் நினைத் திருந்தேன். ஆனால் என் தாய் சாகவில்லை. உயிரோடிருக் கிறாள். சுகமாகக் காலந் தள்ளுகிறாள் என்பது தெரிந்ததும் என் உள்ளம் பயங்கரமாக ஓலமிடத் தொடங்கியது; தாய்... என் தாய்... நான் அவளைக் காண வேண்டும்... அவளுடைய மடியில் முகத்தை மறைத்துக் கொண்டு படுக்கவேண்டும்'' என்றெல்லாம் தோன்றியது.

''எங்கிருக்கிறாள் தாத்தா. என் அம்மா?'' என்று கேட்டேன்

தாத்தா என் தலைமயிரைக் கோதிக்கொண்டே என்னைச் சமாதானப்படுத்தும் தோரணையில், ''எங்கிருக்கிறாளோ, யாருக்குத் தெரியும் அப்பா? எங்கேயோ இருப்பது மட்டும் நிஜம்.''

''நீ அவளைப் பார்த்திருக்கிறாயா தாத்தா?''

''இல்லை குழந்தை. பார்த்திருந்தால் நீ ஏன் இங்கிருக்கிறாய். இந்த நிலை ஏன்? வேறு ஏதாவது ஏற்பாடு செய்திருப்பாள்.''

கிழவர் இன்னும் ஏதேதோ சொன்னார். அதெல்லாம் எனக்குப் புரியவில்லை. என் தாய்க்கு மணமாகு முன்பே யாரோ அவளைக் கெடுத்து விட்டானாம். அதன் பயனாக நான் பிறந்தேன். அவள், சமூகத்துக்குப் பயந்து குழந்தையாக இருந்த என்னைக்கொண்டு வந்து அனுமார் கோவிலில் வைத்துவிட்டுப் போனாளாம். அதெல்லாம் வேறு ஏதோ ஊரில் நடந்தது. கோவிலுக்குச் சற்று தூரத்தில் தங்கியிருந்த தாத்தா என்னைக் கண்டு இரங்கி எடுத்து வளர்த்தாராம். அப்பொழுது அவரோடு வசித்து வந்த பிச்சைக்கார தம்பதிகள் என்னைக் குழந்தைப்போல பார்த்துக் கொண்டார்களாம் அந்த பிச்சைக்காரியின் பாலைக் குடித்துத்தான் நான் வளர்ந்தேன். சில நாட்களுக்குப் பின் அவளும் இறந்து விட்டாளாம்.'' என் அம்மா என்னை அப்படி ஏன் விட்டுவிட்டுப் போனாள் தாத்தா?'' என்று கேட்டேன்.

''அதெல்லாம் உனக்குப் புரியாது. சில பெரிய மனிதர்கள் வீட்டில் அப்படி அடிக்கடி நடப்பதுண்டு. அதையெல்லாம் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டாம். சும்மாப் படுத்துக்கோ குழந்தை; உனக்கு நிறைய ஜுரம் வந்திருக்கிறது.''

''என் அம்மா இப்பொழுதும் உயிரோடு இருப்பாளா தாத்தா?''

''இருக்கத்தான் வேண்டும். வேறொருவனைக் கல்யாணம் செய்து கொண்டு சுகமாகக் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கலாம்.''

''அவளுக்கு என் நினைவு இருக்குமா தாத்தா?''

''கட்டாயம் இருக்கத்தான் வேண்டும். அன்று சமூகத்துக்குப் பயந்து அவள் உன்னை விட்டுவிட்டுப் போகநேர்ந்தது. ஆனால் பெற்ற வயிறு வருந்தாமல் இருக்குமா, தம்பி? இன்னும் அவள் உன்னை நினைத்துக் கொண்டிருக்கலாம். உனக்காகக் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கலாம்.''





தாத்தாவினுடைய இந்தச் சொற்களால் எனக்குத் துக்கம் பொங்கிவந்தது. என்றும் காணாத அந்தத் தாயை நினைத்து விக்கி விக்கி அழுதேன்.

''என் தாய்... தாத்தா! நான் என் அம்மாவைப் பார்க்க வேண்டும். ஏதாவது வழி செய். அம்மாவைத் தேடு'' என்று அழுதேன்.

தாத்தா பேசாமல் உட்கார்ந்துகொண்டு என்னைச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார்.

அன்றுமுதல் இரண்டொரு வருஷகாலம் எனக்கு அம்மா பைத்தியம் பிடித்திருந்தது. பூட்பாலிஷ் செய்துகொண்டு அங்குமிங்கும் அலையும் போதெல்லாம் புடவைத் தலைப்பைக் கண்டபோதெல்லாம் அந்தப் பெண்மணியின் முகத்தை ஆவலுடன் பார்த்துக்கொண்டு நிற்பேன். சின்னஞ்சிறு குழந்தைகளை இடுப்பில் எடுத்துக் கொண்டு ரயிலேறும் சுமங்கலிகளைக் கண்ட போதெல்லாம் என் உள்ளம் கொந்தளிக்கும். ''அவர்களுள் யாராவது என் அம்மாவாக இருக்கலாமோ? என்ற ஆசை மேலிட்ட கண்களோடு பெருமூச்சு விட்டுக் கொண்டு நிற்பேன். பட்டுச் சேலை உடுத்துச் சொகுசாக அலங்காரம் செய்துகொண்டு சினிமாவுக்குப் புறப்படும் பெண்களைப் பார்த்துக் கொண்டே நின்று, ''இவர்களுள் யாராவது ஒருத்தி என் அம்மாவாக இருக்கலாம்'' என்று நினைப்பேன்.

ஒருநாள் இந்த மாதிரி நாடகக் கொட்டகை ஒன்றின் வாயிலில் நிற்கும்போது நடுத்தர வயதுள்ள தம்பதிகள் இருவர் காரிலிருந்து இறங்கினார்கள். அவர்கள் பெரும் செல்வர்கள் என்பது தெளிவாக தெரிந்தது. வாயிலின் மூலையில் நின்று கொண்டு பார்வையில் ஆசை கொப்புளிக்க நான் அந்த அம்மாவைப் பார்த்துக் கொண்டிருந்தேன். தற்செயலாக அவளுடைய பார்வையும் என் பக்கம் திரும்பியது. என் நெஞ்சு, படபடவென்று அடித்துக்கொள்ளத் தொடங்கியது. என்னை அவள் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தாள். வெண்மையான அந்த பரந்த முகத்தில் எப்படிப்பட்ட பாசம்.. பெரிய பெரிய அந்த அழகிய கண்களில் எத்தனை அன்பு! என்றோ இழந்துவிட்ட சொந்தக் குழந்தையைக் கண்டவுடன் இழுத்து அணைத்து எடுத்துக் கொள்ளத் துடிக்கும் தாய் போலவே அவள் என்னைப் பார்த்தாள். மகிழ்ச்சியின் மிகுதியால் என் உடம்பெல்லாம் நடுங்கத் தொடங்கியது. அப்பாடா! கடைசியில் என் தாய் கிடைத்துவிட்டாள்! கடவுள் இரங்கிவிட்டார். என் தாயை எனக்குத் திருப்பிக் கொடுத்து விட்டார். ''அம்மா... என் அம்மா! ஐயோ; எத்தனை நாட்களாக உனக்காகக் காத்திருந்தேன். உன் தோள்களில் உட்கார்ந்து உன் புடவைத் தலைப்பில் முகத்தைப் புதைத்துக் கொள்ள எவ்வளவு ஆவலாக இருந்தேன். அம்மா!...''

என்னுடைய அழுக்கு உடை, கன்றிய முகம், குளிக்காமல் அழுக்கேறிய உடம்பு, சிக்குப் பிடித்து நாறும் தலை எல்லாவற்றையும் நான் அப்பொழுது மறந்துவிட்டேன். நான் ஒரு பூட்பாலிஷ் பையன் என்னும் நினைவு அப்போது எனக்கு இருக்கவில்லை. அன்பின் அற்புதமான மாயையால் நான் இவ் வுலகையே மறந்துவிட்டு வேறொரு கனவுலகில் சஞ்சரிப்பதுபோல் இருந்தது. ஆவலுடன் இரண்டு கைகளையும் நீட்டி அம்மாவை அணைத்துக் கொள்ளவிருந்தேன். அவள் ஒரு கணம் நின்ற இடத்திலேயே நின்றாள். என்னை ஆவலுடனும், ஏக்கத்துடனும் கூர்ந்து பார்த்துத் தன் கைப்பையிலிருந்து ரூபாய் நாணயம் ஒன்றை எடுத்து என் கையில் கொடுத்தாள். அருகில் இருந்த அவளுடைய கணவர் நாடகத்துக்கு நேரம் ஆகிவிட்டதென்று அவசரப்படுத்திக்கொண்டிருந்தார். அவள் கடைசித் தடவையாக என்னை அன்புடன் பார்த்துவிட்டு ஒரு பெருமூச்சுடன் மெதுவாக நடந்துசென்றாள்.



**''... அம்மா... என் அம்மா! ஐயோ; எத்தனை நாட்களாக உனக்காகக் காத்திருந் தேன். உன் தோள்களில் உட்கார்ந்து உன் புடவைத் தலைப்பில் முகத்தைப் புதைத்துக்கொள்ள எவ்வளவு ஆவலாக இருந்தேன். அம்மா!...''**

அன்று எனக்கு வாழ்வே வேண்டாம் என்று ஆகிவிட்டது. அந்த அம்மாள் கொடுத்த ரூபாயைச் சாக்கடையில் வீசி விட்டுத் தியேட்டரின் எதிரில் இருந்த டீக்கடைத் திண்ணை மேல் அழுதுகொண்டே விழுந்து கிடந்தேன். எல்லோருக்கும் ஒரு தாய் இருப்பாள். எனக்கும் இருக்கிறாள். ஆனால் நான் அவளைப் பார்க்க முடியாது. அவளுடன் சேர்ந்து இருக்கமுடியாது. ஐயோ! என்று புரண்டுகொண்டிருந்தேன்.

நாடகம் முடிந்தபின் வீட்டுக்குப் போகும் பொழுதாவது அவளுக்குத் தயை வந்து என்னைக் கண்டுபிடித்து ஒரு வேளை அழைத்துக் கொண்டு போகலாமோ? என்றும் வீண்



''...அன்றிரவெல்லாம் எனக்குத் தூக்கம் வரவில்லை. வரும் என்றே தோன்றவில்லை. கண்ணீர் சிந்திக்கொண்டு பித்தனைப்போல் நகரத்தில் தெருவெல்லாம் சுற்றிக்கொண்டிருந்தேன்...''

ஆசை ஒன்று இருந்தது. இரவு மூன்று மணி வரை யில் தலைவாசலில் காத்து நின்றிருந்தேன். ஆனால், அவள் என் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. கணவனுடைய கையோடு கை கோத்துக்கொண்டு சிரித்த வண்ணம் வந்தவள், தயாராக நின்றிருந்த காரில் ஏறிப்போய் விட்டாள்.

அன்றிரவெல்லாம் எனக்குத் தூக்கம் வரவில்லை. வரும் என்றே தோன்றவில்லை. கண்ணீர் சிந்திக்கொண்டு பித்தனைப் போல் நகரத்தில் தெருவெல்லாம் சுற்றிக்கொண்டிருந்தேன். அலைந்து அலைந்து கால் கடுத்த பின் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று ஒரு மூலையில் படுத்துக் கொண்டேன்.

இன்றும் அந்தப் பைத்தியம் என்னை விடவில்லை. நடு வயதுப் பெண் ஸ்திரீகளைக் கண்ட போதெல்லாம் அவர்களுள் ஒருத்தி என் அம்மாவாக இருக்கலாமோ என்று புலம்பிக் கொண் டிருப்பேன். எனக்குத் தாய் இருந்தும் இல்லாதது போல் தான். அவளை நினைத்து அழுவதால் பலன் இல்லை. அவளும் என்னைப் பார்ப்பது சாத்தியம் இல்லை. என்னைக் கண்டாலும் தன் மகனென்று அவளால் கண்டு பிடிக்க முடியாது. நான் இதுவரையில் கண்ட பெண்களில் என்னைப் பெற்றவளும் இருந்திருக்கலாமோ என்னவோ? ஆனால் அவள் இவள் தான் என்று எப்படி அறிய முடியும்?

தெரிந்ததா? இந்த உலகத்தில் எனக்கு யாரும் இல்லை. என் பெயர் என்ன என்பதும் எனக்குத் தெரியாது. ஜனங்கள் என்னைக் கூப்பிட விரும்பினால் ''ஏ பூட் பாலிஷ்'' என்றே கூப்பிடுவார்கள். அந்தப் பெயரே எனக்கும் பழக்கமாகி விட்டது. பிறவியிலேயே பரதேசியாகப் பிறந்தவனுக்கு என்ன பெயராக இருந்தால் என்ன? தாய் இருந்தும் இல்லாததுபோல், தந்தை யார் என்பதும் தெரியவில்லை. எல்லோரும் இருக்கலாம். ஆனால், இந்தப் பலவிதமான உலகத்தில் நான் மட்டும் பரதேசி! என்னைப் பெற்ற தந்தை இந்த உலகத்தில் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. இந்த உலகத்தில் என்னைப் பெற்ற தாயும் அதை ஒப்புக்கொள்ள முடியாது. நான், என்னைப் போன்ற பரதேசிகள் எங்கள் வாழ்வு விசித்திரமான வாழ்வு. நாய்களின் பிழைப்பு பரவாயில்லை. எங்கள் வாழ்வு யாருக்கும் வேண்டாம். நாய்க் குட்டிகள் கூடத் தம் பெற்றோருடன் சேர்ந்திருக்கும். எங்களுக்கு அந்த அதிருஷ்டமும் இல்லை. இந்தத் தண்டனைக்கு நாங்கள் என்ன பாவம் செய்தோம்? நாங்கள் வாழ்வது தான் எதற்காக? ஆனாலும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வாழ்வதற்கு இந்தப் பூட் பாலிஷ் இருக்கவே இருக்கிறது. அதே தான் என்னுடைய சொத் தெல்லாம். அதை விட்டால் எனக்கு வேறு கதி இல்லை. எந்த ஆசையும் இல்லை.

''பாலிஷ் _ ஒரே அணா சார். அதிகம் இல்லை. பாலிஷ்! பூட் பாலிஷ்!''

*- சாகித்திய அக்காடமியின் 'கன்னடச் சிறுகதைகள்' என்ற தொகுப்பிலிருந்து..*

**தமிழாக்கம் : எஸ்.கே. சேதாதேவி**
**நன்றி : பாரி நிலையம் சென்னை -1.**

> ஒருவனது அழகு அவனுடைய உடலமைப்பில் இல்லை; அவனது குணநலனைப் பொறுத்தே அமையும்.
>
> – காந்தியடிகள்








**சமய நெறியும் மனித வாழ்க்கையும்**

ஆசிரியர் : தி. சேஷாத்திரி
பக்கம் : 40 விலை ரூ. 50.00

மனித வாழ்க்கையானது சமய நெறியுடன் பின்னிப் பிணைந்து கிடக்கிறது என்று இதில் விளக்கியிருக்கிறார், நூலாசிரியர்.

**காந்திவழிக் கதைகள்**

ஆசிரியர் : மா.பா. குருசாமி
பக்கம் : 59 விலை ரூ. 6.00

காந்தியக் கருத்துகளை மையமாகக் கொண்ட 9 சிறுகதைகள் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன.

**அகிம்சை**

ஆசிரியர் : அப்துல் ரசாக்
பக்கம் : 156 விலை ரூ. 16.00

அகிம்சைபற்றி ஆங்கிலத்தில் நிறைய நூல்கள் இருக்கின்றன; அவற்றுக்கீடாக 11 கட்டுரைகளோடு இந்நூல் உருவாக்கப்பட்டிருக்கிறது.

**இரத்த அழுத்தத்திற்கு இயற்கை மருத்துவம்**

ஆசிரியர் : தர்மசந்த சராவகி
தமிழாக்கம் : வி.ஜி. கிருஷ்ணமூர்த்தி
பக்கம் : 88 விலை ரூ. 10.00

அண்மைக்காலமாக நாட்டில் பரவலாக அதிகரித்துவருகிறது இரத்த அழுத்த நோய். அதை இயற்கை மருந்துவத்தின் மூலமே குணப்படுத்திவிட முடியும் என விளக்குகிறது இந்தப் புத்தகம்.

– மேற்கண்ட 4 நூல்களையும் வெளியிட்டோர்: காந்திய இலக்கியச் சங்கம் மதுரை.
கிடைக்குமிடம் : காதி கிராமோத்யோக் பவன், சென்னை - 600 002. மதுரை - 625 001

**தமிழர் காசு இயல்**

ஆசிரியர் : நடன. காசிநாதன்
பக்கம் : 194 விலை ரூ. 45.00

தமிழ்நாட்டில் பல்வேறு காலகட்ட அரசியல் சூழலில் வெளியிடப்பட்ட காசுகள் பற்றிய வரலாற்று நூல் இது. டாக்டர் ம.பொ.சி. அவர்களின் அறக்கட்டளைக்காக நூலாசிரியர் ஆற்றிய சொற்பொழிவின் வெளியீடு.

**இலக்கியத்தின் நோக்கமும் பயனும் (தொகுதி - 2)**

பக்கம் : 336 விலை ரூ. 60.00

தலபுராணம், திருப்புகழ், தூது இலக்கியம், தேவாரம், பதினெண் கீழ்க்கணக்கு, பரணி இலக்கியம், பிள்ளைத்தமிழ், இலக்கியம், புறப்பொருள், பெருங்கதை, சீவக சிந்தாமணி, முதலிரு காப்பியங்கள் – ஆகிய தலைப்புகளின் கீழ், மாதக் கருத்தரங்குகளில் தமிழறிஞர்கள் அளித்த அரிய கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது.

– இவ்விரு புத்தகங்களையும் வெளியிட்டோர்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி.டி.டி.ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை - 600 113.

**கா வி ரி நதியின் வரலாறு**

ஆசிரியர் : பி.எல். ராஜேந்திரன் எம்.ஏ.,
பக்கம் : 280 விலை ரூ. 50.00
வெளியிட்டோர் : உமா பதிப்பகம்
58, ஐயப்ப செட்டித் தெரு,
மண்ணடி, சென்னை - 600 001.

காவிரியைப்பற்றிப் புராணங்களில், வரலாறுகளில், சரித்திரத்தில் என்னவெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது என்று மட்டுமல்ல; காவிரி நதிநீர்ப் பிரச்சினை என்று - எப்படி - ஏன் தொடங்கியது? அதன் தற்போதைய நிலை என்ன என்பதையும் தெளிவாக விளக்குகிறது இந்த நூல்.

**– இந்திரன்**

# இன்று புதிதாய்ப் பிறந்தோம்....




**ஆ**த்மாக்களே!
இனியும்,
புறாக்களின் சிறகுகளில்
வேண்டாம் துப்பாக்கி ரவைகள்.

மனிதர்களே!
அவதாரங்களின் பெயரால்,
தேசியக் கால்வாய்களில்
வேண்டாம் நர பலிகள்.

தோழர்களே!
இரங்கற்பாகூட எழுதாமல்
மதங்களுக்குப்
புதைகுழி வெட்டுங்கள்.
நாமெல்லாம் மனிதர்கள்;
புதிதாய்ப் பிறந்த மனிதர்கள்!
ஆம்!
நாம் சராசரிகள் இல்லை!

**- மா. விஜயகுமார்,**
மதுரை - 9

**பா**ரத விடுதலை நாளின் நினைவு
பற்றிடும் போதினிலே - ஒரு
வீரமும் எழுச்சியும் வெற்றியும் மகிழ்ச்சியும்
வீறுது நெஞ்சினிலே! - நாம்

தீரர் பரம்பரை வழியினர் என்னும்
தெம்பு பிறக்கிறது - புகழ்
ஆரம் அணிந்தவர்க்கு அஞ்சலி செலுத்திட
ஆவல் சிறக்கிறது!

புயலென இடியெனக் கடலென முழங்கிய
பூட்கைகொள் மறவர்களை - இங்கு

**(பாராட்டுக்குரிய பாடல்கள்)**

அயலவன் கண்டு பயந்து நடுங்கி
அகன்றனன் விரைவினிலே - அவன்

இயற்றிய பாதகக் கொடுமைகள் கொலைகள்
எண்ணி முடியாதே! - நம்
உயிரை உரமாய்ப் போட்டுக் கண்ட நல்ல
விடுதலை நாளிதுவே!

**கொடுமுடி கவிஞர் க.அ. பிரகாசம்.**

**நா**ற்புறத்துச் சுவர்வேலி நம்மவரை ஒன்றாக்கித்
துப்பாக்கிச் சாம்பல் உதிர்த்துக்
காற்றோடு கலந்துவிடச் சாலியன்வா
லாபாக்கில்

சுதந்திரமாம் வீர வுணர்வைச்
சொல்லிடவே உயிர்வேள்வித் தியாகத்தில்
துள்ளிட்ட

பகத்சிங்காம் வீர மகன்போல்
தென்னாட்டி ' வாஞ்சியெனத் திலகனெனும்
வ.உ.சி.

தியாகத்தின் குருதி மலர்கள்
வெந்து தணியாத வீரவரிக் கவியாத்த
செந்தணலாம் பாரதியே போல்
பாட்டுத் திறத்தாலே கவித்தேரை இழுத்திட்ட
பட்டுக்கோட்டை யார் திறம்போல்
நாட்டும் நாவன்மை சொற்களிலே நளினவரி
ப.ஜீவா கொள்கைத் திறம்போல்
இங்கே மீட்டுத்தரவே இன்று புதிதாய்ப்
பிறந்தோம்
இறவாப்புகழோடு மலர்ந்தோம்!

**- இளசைஅருணா**







''**எ**ன்றுபுதிதாய்ப் பிறந்தோம்?'
என்றே எண்ணி
என்னுள்ளே நான்நினைத்தேன்...
இனிய அன்னை
வயிற்றிலிருந்து வந்தோமே
அந்த நாளா?
வரிவரியாய் எழுத்தெண்ணிக்
கற்ற நாளா?
கண்வழியாய் உள்புகுந்த
காதல் நாளா?
கனதனமாம் பெருஞ்செல்வம்
சேர்த்த நாளா?
எந்நாளில் நாம்புதிதாய்ப்
பிறந்தோம்? ஆ! ஆ...!
எந்நாளாம்... எந்நாளாம்!
எந்த நாளாம்?

**- அமுதபாரதி**

**அ**ன்று முதல் இன்று வரையிலும்
இடிபட்ட வாழ்க்கை - காரணம்
மனிதனில் மதம், ஜாதியெனும்
இடர்ப்பாடுகள்!
மதமெனும் துப்பாக்கியிலிருந்து வெளிவரும்
கலவரமெனும் குண்டுகள்
இம்மண்ணில் எத்துணை உயிர்களை
மண்ணோடு மண்ணாக்கியிருக்கும்!
முதல் நாள் சமைத்ததை மறுநாள்
உண்ண மறுக்கும் நாம்
மதம் என்னும் பழமையான எண்ணத்திலிருந்து
மாறுவது எப்போது?
மனித இனம் உயர்ந்து நிற்கும்





இந்தக் காலத்தில்
அவனியில் பிளவுகள் எதற்கு?
பிறந்த குழந்தையின் எண்ணத்தைப்போல்
நாமும் ''இன்று புதிதாய்ப் பிறந்தோம்''
என்றெண்ணுவோம்.

**- கலைவாணி**

**சா**தித்தீக் குழம்புகளால்
சலசலக்கும் எரிமலைகள்

மதங்களின் விலங்குகளால்
மாலையிட்ட மனங்கள்

தீயின்றி நோயின்றி
தீய்க்கின்ற தீண்டாமை..

நெல்விதைக்கப் புல் முளைக்கும்
நிலைகெட்ட கல்விப்புண்

ஊமைக் காயத்தால்
உருகிவிட்ட இலக்கியங்கள்...

ஊமையாய்க் குருடாய் செவிடாய்
உலகில் சிலநாள் திரிந்தபின்

இன்று புதிதாய்ப் பிறந்தோம்
என்று விழித்துப் பார்த்தான்;

நேற்றைய வாழ்வின் மிச்சத்தில்
நாற்ற மெடுத்த நாடு!

அதை மாற்ற முயலுவோம்
முறையோடு!

**பா. திருநாவுக்கரசு**

**வா**த நோய் கண்டு அவதிப்படும் பலரை நீங்கள் பாத்திருப்பீர்கள். அவர்கள் படும் அவதி, சொல்லி முடியாதது ஆகும். இந்த நோய்க்கு அலோபதி மருத்துவமே நல்லது என்பார்கள் சிலர்; அது சரியல்ல. வாதநோய்க்கு ஏற்ற சிகிச்சை முறை மிகப் பழங்காலத்திலேயே நம் தமிழ் நாட்டில் இருந்திருக்கிறது. அதற்குச் சான்றான ஓலைச்சுவடிகள் பல இன்னும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

வாத நோயை வளி நோய் என்றும் கூறுவார்கள். இதற்கு வளிக்குற்றம், தன்னுடைய அளவில் மிகுந்து - குத்தல், குடைதல், நோதல், தொழில் அற்றுப்போதல் முதலியவைகளை உண்டாக்கிப் பல வகைப்பட்ட வாத நோய்களைப் பிறப்பிக்கும் குணம் இயல்பாக உண்டு.

### முன்குறி குணங்கள்

வாத நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உடலில் நோதல், குத்தல், பிளத்தல் போற்காணல் நரம்பு முதலியன குன்றல், நடுக்கல், இறுக்கமாதல், நீர்ப் பசையின்மை, தசை, நரம்பு அசைதல், இளைத்தல், குடைதல், அடிபட்டது போன்று வலித்தல், தளர்ச்சி, மரத்துப்போகுதல், சிறுநீரும் எருவும் (ஆசனவாய்) கட்டுப்படுதல், நீர்வேட்கை, எலும்புக்குள் குடைதல், நீட்டவும் முடக்கவும் அசைக்கவும் முடியாதிருத்தல் ஆகியவை வாத நோய்க்குறி குணங்கள் ஆகும்.

### நோய் விவரம் :

ஒவ்வொரு மருத்துவரும் அவரவர் மனப்பான்மைக்கு ஏற்ப வாதநோயின் வகை எண்பது எனவும், எண்பத்துநான்கு எனவும் கூறுவர். யூகிமுனி நூலில், எண்பது வகை வாதநோய் எனக்கூறப்பட்டு உள்ளது. அதிலும் குறிப்பிடத்தக்கவை 65 ஆகும்.

# வாதநோயும் சித்த மருத்துவமும்

**டாக்டர் பி. பாலசுப்பிரமணியம்**

யூகிமுனி தம் நூலில் வலி நோயை வகுத்த முறையைப் பின்வருமாறு கூறலாம்:

1. வாதஸ்தம்பம் 2. வாதகர்ஷ்ணம் 3. கரஸ்தம்பம் 4. தலஸ்தம்பம் 5. பூசுவாதம் 6. காளாஞ்சகவாதம் 7. ஊருஸ்தம்பவாதம் 8. வாதகர்ணம் 9. குரிஷகிரிஷ்வாதம் 10. நரித்தலைவாதம் 11. கும்பவாதம் 12. மலைத்தகம்பவாதம் 13. கூனிவாதம் 14. ஆகுனிவாதம் 15. அகேஷபவாதம் 16. வாதஉபகதம்



17. நெற்றிசூலைவாதம் 18. கர்ணகுலைவாதம் 19. செலிபடுவாதம் 20. பக்கவாதம் 21. பக்ஷவாதம் 22. பேய்வாதம் 23. பிராயணாலயவாதம் 24. கீழ்வாயு (சந்து வாதம்) 25. சகவவாதம் 26. அற்புதவாதம் 27. உரகாரிவாதம் 28. அஸ்வதம்பவாதம் 29. நேத்திர பவுத்திர வாதம் 30. மகாவாதம் 31. தண்டகவாதம் 32. அஷ்டதற்திர வாதம் 33. வசனாவாதம் 34. மிருத்வவாதம் 35. உதர வாதம் 36. மூத்திர உதரவாதம் 37. அக்கில வாதம் 38. சவ்விரங்க வாதம் 39. ஊர்த்து வவாதம் 40. அஞ்ஞானத் தம்பம் 41. சிரக்கம்ப வாதம் 42. வச்சிரரூபவாதம் 43. கண்டகிராக வாதம் 44. யோனி சூலைவாதம் 45. கர்ப்பசூலை வாதம் 46. அஷ்டசூலை வாதம்





> **அன்பை விலைகொடுத்து வாங்க முடியாது; உண்மை அன்பைப் பெறத் தியாகம் செய்தாக வேண்டும்.**
>
> **- டாக்டர் எம்.ஜி.ஆர்.**

47. தந்தவாயு 48. வாதசுரோஷிதம் 49. குடல் வாதம் 50. உதரவாத சுரோணிதம் 51. வாதகர்ண சூலை 52. பித்தகண்ண சூலை 53. கபகர்ணசூலை 54. உதிரவாத சுரோணிதம் 55. மூடுவாதம் 56. வசுவாதம் 57. வாதத்தலைநோக்காடு 58. பித்ததலை நோக்காடு 59. சன்னிவாத நோக்காடு 60. ஒருதலையின் வர்த்தம் 61. சூரியவர்த்தம்நோக்காடு 62. சந்திரவர்த்த நோக்காடு 63. கானவாத சூலை 64. இரத்தபித்த நோக்காடு 65. கிருமி கர்ணசூலை.

இப்படி வாதநோய்களைக் கூறி விட முடியுமே தவிர, இப்போதைக்கு அவைபற்றி விளக்கம் அளிக்க காலநேரம் போதாது; ஆகவே முக்கியமான சிலவற்றின் குறி குணங்களைக்கூறி உங்களுக்கு விளக்க விரும்புகிறேன்.

### காளாஞ்சகவாத குறிகள்

இந்நோயில் கை, கால், தொடை, மூட்டு இவைகளில் பிடிப்பது போன்றும், முறுக்குவது போலவும், குடைதல் போலவும் நொந்து நடக்க முடியாத நிலை உண்டாகும். உடல் மெலிந்து மூட்டுகள் தோறும் முடங்கி கரடு கட்டிக் கொள்ளும். உடல் மிகவும் வெளுத்துத் தினவெடுத்து சொரி, சிரங்கு உண்டாகும், பசி இருக்காது.

### ஊர்த்தம்ப வாதம்:

இந்நோயில் வலியானது தன் அளவில் குறைந்து அடித்தொடைகள் இரண்டையும் பற்றி, கை, கால், விரல்களைச் சுற்றி கனத்து சாணியைப்பூசியது போல உணர்ச்சி உண்டாக்கி, தலை பாரமாக இருத்தல், உடல் வீங்கித் திமிர் உண்டாகி நடக்க முடியாத வண்ணம் செய்யும்.

### நரித்தலைவாத குறிகள்:

இந்நோயில் முழங்கால் மூட்டில் செந்நீர் நிரம்பி சிவந்து வீங்கி நீட்டவும், நிற்கவும், முடியாமல் நரியின் தலையைப் போல் மிகுதியாய் வீங்கிக் காணப்படும். நாடித் துடிப்பும் அதிகரிக்கும். வலி இருக்கும், பசி எடுக்காது.

### நெற்றி சூலைவாதம்

வாதப் பிணியால் இருபுருவங்களின் இடையில் குடைதல், மூக்குத் தண்டு, குரல்வளையில் வலி, குடைதல் முதலியன தோன்றும், கை, கால், உடல் முழுவதிலும் கடுப்பை உண்டாக்கும். தூக்கத்தையும், மயக்கத்தையும் பெருக்கி தலையில் குத்தலை உண்டுபண்ணும்.

### பக்கவாதம்

பக்கவாதப் பிணியால் உடல் முற்றும் வாயு மிகுந்து பரவி, நாடி மெலிந்து அசைவற்று உடலைத் தாங்க முடியாத வலி உண்டாக்கி பக்கத்தில் இசிவு (வலி உண்டாகும்), கை, கால், கோணுதல், உடல் வெளுத்தல், வியர்த்தல் என்னும் குறி குணங்கள் இந்நோயில் காணப்படும்.



### சிகிச்சை முறை மருத்துவம்

1. கழிச்சல் உண்டாக்கக் கோடசூரி மாத்திரை3, சஞ்சீவிமாத்திரை2, அஷ்டபைரவம் 3முதல் 4 மாத்திரை, மேகநாதகுளிகை மாத்திரை 2. நோயின் தன்மை உடல் வலிமை தெரிந்து மருத்துவரின் ஆலோசனைப்படி தரப்பட வேண்டும்.

2. சுழற்சி எண்ணெய்:

வாதநாச எண்ணெய், வாதகேசரி தைலம் (வெளி உபயோகத்திற்கு மட்டும்)

3. அகத்தியர் குழம்பு 1 முதல் 2 குன்றி அளவு தகுந்த அனுபானத்துடன் கொடுக்க வேண்டும்.

### 2. சிகிச்சை முறை இரண்டு : உள் மருந்துகள்

1. அயவீரச்செந்தூரம் 1 முதல் 2 குன்றி அளவு

2. ஆறுமுகச்செந்தூரம் 1 முதல் 2 குன்றி அளவு

3. சிலாசத்து பற்பம் 2 முதல் 4 குன்றி அளவு

4. சண்டமாருதம் செந்தூரம் 1 முதல் 2 குன்றி அளவு

5. வெள்ளி பற்பம் 1 முதல் 2 குன்றி அளவு

மேலே குறிப்பிட்ட மருந்துகளைத் திரிகடுகு சூரணம் அல்லது அமுக்கரா சூர்ணம் 200 மி. கிராம் அளவுடன் கலந்து கொடுக்கலாம். அனுபானமாகத் தேன், நெய், வெண்ணெய் சேர்த்துத் தர வேண்டும்.

நோயுடன் சுரம் உள்ள பொழுது வசந்தகுசுமகரம் அல்லது பிரம்மானந்த மாத்திரை கலந்து கொடுக்க வேண்டும்.

### மேல்பூச்சு எண்ணெய் :

வாதகேசரி தைலம், எட்டிக்கொட்டை எண்ணெய், உளுந்துதைலம், நாராயணத் தைலம் பூச வேண்டும். எதைச் செய்வதானாலும் சரி; மருத்துவர் ஆலோசனைப்படி தான் கேட்டுச் செய்ய வேண்டும்; இது மிகவும் அவசியம்.

**சோறு மனிதனுடைய முதல் பசி; காதல், மனிதனுடைய இரண்டாம் பசி**

**– வி.ச. காண்டேகர்**

## கை மருந்துகள்

* பஸ்ஸில் பயணம் செய்யும்போது ஏற்படும் வாந்தி நிற்கக் கூந்தலை அவிழ்த்து முகர்ந்து கொண்டு வந்தால் வாந்தி வராது.

* வயிற்றில் உள்ள கீரைப்பூச்சியைப் போக்கத் தேங்காய்ப் பாலெடுத்துக் காலையில் வெறும் வயிற்றில் குடித்து விட வேண்டும். சில மணிநேரத்தில் இரண்டு அல்லது மூன்றுமுறை வயிற்றால் போகும். அத்துடன் கீரைப்பூச்சிகள் அவ்வளவும் வெளியேறிவிடும்.

* நார்த்தங்காய்த் தோலை உரிந்து வைத்துக் கொண்டு வலது பக்கத்தில் தலைவலித்தால், இடது காதிலும், இடது பக்கத்தில் வலித்தால் வலது காதிலும் சிறிது சாறு பிழிந்தால் ஒற்றைத் தலைவலி மறையும்.

* கால் வீக்கம் குறையச் செம்மண்ணைத் தண்ணீரில் கரைத்து அடுப்பில் சுடவைத்தால் கெட்டியாகச் சூடாக இருக்கும். இந்த மண்ணைக் கை பொறுக்கும் பக்குவச் சூட்டுடன் காலில் தடவவேண்டும். இதனை இரவில் செய்ய வேண்டும். காலையில் கால் வீக்கம் வற்றிவிடும். யானைக்கால் வியாதிக்கு இது உதவாது. காலில் போடக்கூடாது.

* துளசிச் சாறு எடுத்து அதை இரவில் தடவி மறுநாள் முகம் கழுவினால் முகப்பரு குணமாகும்.

* சாதிக்காயைச் சந்தனக்கல்லில் உறைத்து இரவில் தினமும் முகத்தில் பூசி வந்தால் பருக்கள் இருந்த இடம் தெரியாமல் போகும்.

**– 'துணுக்கு மலர்கள்'**
**டாக்டர். ந.க. மங்கள முருகேசன்**







# தோட்டக்கலை வளர்க்கும் தர்மபுரி

தர்மபுரிமாவட்டம் என்றாலே ''மாங்கனி'' தான் நினைவிற்கு வரும். இம்மாவட்டத்தில் நிலவும் உலர் வெப்பநிலையும், கிடைக்கும் மழையளவும், நிலத்தின் தன்மையும் ''மா'' சாகுபடி செய்ய மிகவும் ஏற்றதாக உள்ளது. இம் மாவட்டத்தில் சராசரி மழையளவு 850 மி.மீட்டர். கிடைக்கும் மழையினைப் பயன்படுத்தி நல்ல வருவாய் கிடைக்கவும், சுற்றுப்புறச் சூழல் நன்கு அமையவும் ஏற்ற பணப்பயிராக விளங்குவது ''மா'' மட்டுமே.

ஆண்டொன்றுக்கு சுமார் 2000 எக்டர் பரப்பளவில் மாச்சாகுபடி அதிகரித்துக் கொண்டே வருகிறது. மாச் சாகுபடி பரப்பளவில் 42 சதவிகித பரப்பளவிற்கு மேல் தர்மபுரி மாவட்டத்திலேயே உள்ளது. மாம்பழ உற்பத்தியினைக் கணக்கில் கொண்டால் தமிழ் நாட்டின் உற்பத்தியில் 50 சதவிகிதம் தர்மபுரி மாவட்டத்திலேயே தான் விளைகிறது.

''மா'' வில் - நீலம், பெங்களூரா, மல்கோவா, அல்போன்சா, செந்தூரா, தோதத், ஹிமாயுதீன், பாதிரி போன்றவை பயிரிடப்படும் முக்கிய ரகங்களாகும். பெங்களூரா மற்றும் அல் போன்சா இரகங்கள் 60 சதவிகித பரப்பில் உள்ளது. இவ்விரு ரகங்களும் பழம் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு மிகவும் ஏற்ற ரகங்களாகும்.

மாம்பழங்கள் ஏப்ரல், மே, ஜுன், ஜுலை மாதங்களில் முறையே 10 சதம், 48 சதம், 22 சதம், 10 சதம் பழங்கள் அறுவடைக்குத் தயாராகின்றது.

உற்பத்தி செய்யப்படும் பழங்களில் 28 சதவிகிதம் தர்மபுரி மாவட்டத்திலேயே உண்பதற்காகவும், 10 சதவிகிதம் மாம்பழக்கூழ் தயாரிப்பதற்காகவும், 41 சதவிகிதப்பழங்கள் அண்டை மாவட்டங்களுக்கும், 21 சதவிகிதம் அண்டை மாநிலங்களுக்கும் கணிசமான அளவு அல்போன்சா, பங்கனப்பள்ளி போன்ற ரகங்கள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப் படுகிறது.

### பழம் பதனிடும் தொழிற்சாலைகள்

1. அமிர்தம் அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் – பையூர்
2. தேவராஜ் பழம் பதனிடும் தொழிற்சாலை - கிருஷ்ணகிரி
3. நெக்டார் பழரசத் தொழிற்சாலை - பாகலூர், ஓசூர்
4. டிராப்பிக்கான் பழரசத் தொழிற்சாலை - சிப்காட், ஓசூர்
5. கன்வில் பழரசத் தொழிற்சாலை - தளிநெடுஞ்சாலை, ஓசூர்
6. ஸ்டார் பழரசத் தொழிற்சாலை - தேன்கனிக்கோட்டை
7. டேஸ்ட் பழரசத் தொழிற்சாலை - ஓசூர்

தொழிற்சாலைகள் தவிர 20க்கும் மேற்பட்ட



## மாணவர்கள்

**உ**ழவன், வயலில் விளைந்த நெல்லை சாப்பாட்டிற்கென்று தனியாகவும், விதைக்கென்று தனியாகவும் பிரித்துவைத்துக் கொள்கிறான். சாப்பாட்டிற்கு எடுத்துவைத்த நெல் தீர்ந்துவிட்டால், எக் கஷ்டம் அடைந்தாவது கடையில் காசுகொடுத்தாவது அரிசி வாங்கி உண்பானேயொழிய விதை நெல்லைத் தொடுவதற்கு ஒருநாளும் அவனுக்கு மனம்வராது. ஆகையால், அரசியல் உழவனாகிய நான் விதை நெல்லாகிய மாணவ முத்துக்களை அரசியலுக்கு ஒரு நாளும் இழுக்கமாட்டேன்.

**– அறிஞர் அண்ணா**

– 1969ல் பச்சையப்பன் கல்லூரி விழாவில் பேசியதிலிருந்து.

குடிசைத் தொழிற்சாலைகளும், ஊறுகாய் தயாரிக்கும் நிலையங்களும் உள்ளன.

மாங்கனிக்கு அடுத்ததாக சப்போட்டா, மாதுளை, கொய்யா போன்ற பழவகைகள் பயிரிடப் படுகின்றன.

இம்மாவட்டத்தின் சாகுபடியில் 1606 எக்டர் பரப்பில் 5780 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப் படுகிறது. இம்மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட உரிகம் புளி சாகுபடி பரப்பளவு, ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே வரு கிறது. புளியின் பழம் பதனிடும் நிலையம் (பிரதர்ஸ் கோல்ட் ஸ்டோரேஜ்) கிருஷ்ண கிரியில் உள்ளது. தர்மபுரி பகுதியிலும் புளிகள் பதப்படுத்தும் நிலையம் உள்ளது.

இம்மாவட்டத்தில் 13,461 எக்டேர் பரப் பளவில் மரவள்ளி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அரூர் வட்டாரத்தில் 11,645 எக்டேரிலும் பாலக்கோடு வட்டாரத்தில் 1196 எக்டேரிலும் பென்னகரத்தில் 163 எக்டேரிலும், கிருஷ்ணகிரி 157 எக்டேர் மற்றும் ஊத்தங் கரையில் 108 எக்டேரிலும் சாகுபடி செய்யப் பட்டுவருகிறது. சுமார் 2001 இலட்சம் மெட்ரிக் டன் மகசூல் கிடைக்கிறது.

மரவள்ளிக் கிழங்கிலிருந்து சிப்ஸ், கிழங்கு மாவு, கிழங்கு ரவை, ஜவ்வரிசி போன்றவை தயாரிக்கப் படுகிறது. இங்கு 42 சேகோ பேக்டரிகள் அரூர் பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ளன.

கெர்க்கின்ஸ் என்ற வெள்ளரிக்காய் ரகமும் இம்மாவட்டத்தில் சுமார் 300 எக்டேரில் பயிரிடப்பட்டுவருகிறது. கெர்க்கின்ஸ் அறு வடை செய்யப்பட்டு வெளி நாடுகளுக்கு, ஏற்றுமதி செய்யப்படுகிறது. கெர்க்கின்ஸ் பதப்படுத்தும் தொழிற்சாலை (மேக்ஸ் ஓர்த் அன்ச்சாட்) ஒசூர் பகுதியில் உள்ளது.

மலர் சாகுபடியினைப் பொறுத்தவரை ரோஜா, மல்லிகை, சாமந்தி, நிலச்சம்பங்கி, கனகாம்பரம் போன்ற மலர்ப்பயிர்கள் சுமார் 677 எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ரோஜா மலர்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. ஒசூர் பகுதியில் உள்ள தட்பவெப்ப நிலையால் பசுமை இல்லங் களில் ரோஜா மலர்கள் வளர்க்கப்-பட்டு வெளி நாடுகளுக்குக்கீழ்க்கண்ட நிறுவனங்கள் அனுப்பி வருகின்றன.

1. மஞ்சுஸ்ரீ ப்ளான்டேஷன் லிமிடெட் ஒசூர்
2. சுவர்ணா ஃப்ளோரிக் லிமிடெட் பாகலூர் ஒசூர்

ஹாரிசன் மலையாளம் பிளேன்டேஷன் லிமிடெட், ஒசூர் போன்றவைகளாகும். தற்போது 15க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் ரோஜா மலர் ஏற்றுமதி செய்யத் தயார்நிலையில் உள்ளன.

ஒசூர் பகுதியானது மலைப்பகுதிகள் உள்ள தட்பவெப்ப நிலைகள் போன்று உள்ளதாலும், மண் வளமுடையதாக உள்ளதாலும் இங்கு சமவெளிப் பகுதிகளில் உள்ள மா, கொய்யா, மாதுளை, சப்போட்டா போன்ற பழப்பயிர்கள் தவிர உருளைக்கிழங்கு, முட்டைக்கோசு, காரட், பீட்ரூட், தக்காளி போன்ற பயிர்களும் நன்கு விளைகின்றன. தக்காளியில் வீரிய ரகங்கள் சுமார் 1200 எக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப் பட்டுவருகிறது.

விதைகள் மற்றும் வீரிய ரகங்கள் மூலம் உற்பத்தியினைப் பெருக்குவதுடன் ''திசு வளர்ப்பு'' முறையின் மூலம் வாழை, அழகு தாவரங்கள் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பி வருகின்றனர். ''திசு வளர்ப்பு'' முறை யினை ஹாரீசன் மலையாளம் பிளான் டேஷன் லிமிடெட் கம்பெனியின் சிறந்த முறையில் 'திசு வளர்ப்பு' மூலம் செடிகள் உற்பத்தி செய்கின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில் நிலவுகின்ற தட்ப வெப்ப நிலை மற்றும் மண்ணின் தன்மைக்கேற்ப சமவெளிப் பகுதிகளில் விளையும் பயிர்கள் தவிர மலைப் பிரதேசப் பயிர்களும் பயிரிடப் படுவது மட்டுமின்றி அனைத்துத் தோட்டக் கலைப்பயிர்களும் இம் மாவட்டத்தில் விளை கின்றதால் ''இம்மாவட்டத் தினைத்'' தோட்டக் கலை மாவட்டம் என்றே அழைக்கலாம்.

இம்மாவட்டத்தில் அகில இந்திய மாங்கனி கண்காட்சி 1992 ஆம் ஆண்டு முதற்கொண்டே தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. இதனால் ''மா'' பரப்பு ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன.





# வேலை வாய்ப்புகள்

பேராசிரியர் முனைவர் கா.மு. பாதுசா

மக்கட்தொகை பெருகி வரும் வளரும் நாடுகளில் வேலை வாய்ப்புக்கள் விரைந்தும், தொடர்ந்தும் உருவாக்கப்பட வேண்டும். மனித ஆற்றல், முறையாக வளர்க்கப்பட வேண்டும். அதற்குத் தக்க வகையில் கல்வித் துறையில் திறன்களை வளர்க்கும் கல்வி முறையினை உருவாக்க வேண்டும். மனித ஆற்றல் திட்டமிடும் பணி முறையாகவும், தொடர்ந்தும் செயல் படுத்தப்பட வேண்டும். அப்போது தான் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பெறும், இன்றைய தினம் நமது நாட்டில் பல்வேறு துறைகளில் கல்விக்கூடங்கள் அதிகரித்து வந்த போதிலும் அனைவருக்கும் கல்வி என்ற இலக்கினை நாம் இன்னும் அடைய முடியவில்லை. அத்துடன் பல்வேறு நிலைகளில் கல்வியினைப் பெறுகின்றவர்கள் திறன்களை வளர்த்துக்கொண்ட போதிலும், இன்னும் முழுமையாக வேலை வாய்ப்பினைப் பெற முடியவில்லை.

*பேராசிரியர் முனைவர் கா. மு. பாதுசா, கிரசெண்ட ஆட்சிப்பணி பயிற்சி மைய இயக்குனர் உயர் கல்வித்துறையில் விரிவுரையாளர், பேராசிரியர், துறைத் தலைவர், முதல்வர் என்று தொடர்ந்து 30 ஆண்டுகாலமாகப் பணியாற்றி வருகிறார். பல்வேறு அரசுப் பணிகளுக்கான வேலை வாய்ப்புகளைப் பற்றி, இந்தக் கட்டுரையில் தெளிவுபட விளக்குகிறார். தமிழக அரசின் விருதினையும் சீதக்காதி அப்பா நினைவு இலக்கிய விருதினையும் பெற்றவர் இவர். சென்னை கிறித்துவக்கல்லூரியில் பயின்று புதுக்கல்லூரியில் பணியாற்றி பின்னர் இளையாங்குடி டாக்டர் ஜாகீர் உசேன் கல்லூரியின் முதல்வராகவும், மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் தொலைக்கல்வி இயக்க இயக்குநராகவும் பணியாற்றியவர். மாணவர்களுக்குப் படிப்புத்துறைகள் வேலைவாய்ப்புகள் பற்றிய செய்திகளைத் தொடர்ந்து கால் நூற்றாண்டு காலத்திற்கு மேலாக இவ்வாறு பொதுநல நோக்குடன் வழங்கி வருகின்ற நெறியாளர்.*

எனவே, மனித ஆற்றல் திட்டமிடல் (Man Power Planning) செம்மையாக இல்லை என்று கூறலாம். படித்தவர்களிடையே கூட வேலை வாய்ப்பினைப் பல்வேறு விரும்பத்தகாத விளைவுகளை உருவாக்க வல்ல சூழலையும் நாம் அறிவோம். எனவே, வேலை வாய்ப்புக்களை இனங்கண்டு அதற்குரிய திறன்களை வளர்க்கத் தக்க வகையில் இளைஞர்கள் தங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான், அவர்கள் வாழ்வு வளம் பெறும். நாடும் வளர்ச்சி பெறும்.

### தேர்வாணையங்களின் பணி

இந்திய நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்கள் வேலை வாய்ப் பினைத் தொடர்ந்து பெருக்கி வருகிறது. குறிப்பாக, அரசுத் துறைகளில் ரெயில்வே, மற்றும் பொது நிறுவனங்கள் வேலை வாய்ப்பினை உருவாக்கிவருகின்றன. வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்றன மண்டல வாரியாக வேலை வாய்ப் பினைத் தொடர்ந்து உருவாக்கிவருகின்றன. தனியார்துறையிலும் வேலை வாய்ப்புக்கள் தொடர்ந்து உருவாகி வருகின்றன. கூட்டுத் துறையிலும், வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்

> மக்களுக்குத் தேவைப்படுவது திறமையல்ல, குறிக்கோள், ஆற்றல் அல்ல, உழைக்கும் உறுதி.
> – புல்லர் · லிட்டன்

படுகின்றன. பொதுத்துறையைச் சார்ந்த நிறுவனங்கள் (மத்திய அரசு, மாநில அரசு) வேலை வாய்ப்பினை விளம்பரப் படுத்துகின்றன. மத்திய அரசின் பணிகளுக்கு மையத் தேர்வாணையம் (UPSC) மாநில அரசுகளின் பணிகளுக்கு மாநில அரசுத் தேர்வாணையங்களும் (SPSC) பொறுப்பேற்று, போட்டித்தேர்வுகளை முறைப்படி நடத்துகின்றன.

வேலை வாய்ப்பு நிலையங்களில் பதிவு செய்வோருக்கு முன்னுரிமை வழங்கப் படுகின்றது. தனியார் நிறுவனங்களும் கூட பயிற்சியாளர்களுக்குரிய வாய்ப்பினைக் கட்டாயம் கொடுக்கப்படவேண்டுமெனசட்டம் வலியுறுத்துகிறது. மைய, மாநில அரசின் துறைகள் தவிர, நாட்டின் முப்படைகளுக்கும் தேவையானவர்களை முறைப்படுத்தித் தேர்ந்தெடுக்கின்றனர்.

தனியார் நிறுவனங்களும் தங்களுக்கு வேண்டிய வேலை ஆட்களை விளம்பரப் படுத்தித் தேர்ந்தெடுக்கின்றனர். பன்னாட்டு நிறுவனங்களும் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளித்து நிரந்தர வேலைகளில் வைத்துக்கொள்ளுகின்றனர். எனவே, வேலை தேடும் இளைஞர்கள் திட்டமிட்டுப் படித்து, பயிற்சி பெற்று தகுதியான வேலையினைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளலாம். இப்பொழுதெல்லாம் வேலை தேடும் இளைஞர்களை நெறிப்படுத்தி வழிகாட்டுதல்கள் வழங்கப் படுகின்றன. தொழிற்கல்விக் கூடங்களில் மாணவர்கள் படிக்கும் போதே திறமையான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப் படுகிறது. வேலைக்கு அமர்த்துபவர்கள் தங்களுக்குத் தேவையானவர்கள் பற்றிய விவரங்களை மக்கள் தொடர்புச் சாதனங்கள் வழியாக வெளியிடுகின்றார்கள். வேலை வாய்ப்புப் பற்றிய கருத்தரங்குகள், அங்காடிகள் (Career Fairs) வேலை வாய்ப்புக் காட்சிகள் (Career Exhibitions) முதலியன தொடர்ந்து நடைபெறுகின்றன. மத்திய அரசு வேலை வாய்ப்புகள் பற்றிய செய்திகளை Employment News என்ற இதழ் மூலம் வழங்கி வருகின்றது.

### இளைய சமுதாயம் முன்வருக

இளைஞர்கள் வேலைவாய்ப்புச் செய்திகளைக் குறித்த காலத்தில் அறிந்து தொடர்ந்து செயல்பட வேண்டும். விண்ணப்பங்களை முறைப்படி நிறைவு செய்து கால வரையறைக்குள் குறித்த நேரத்தில் அனுப்பி நேர்முகத் தேர்விற்குச் செல்ல வேண்டும். அரசும், தனியாரும் தருகின்ற வாய்ப்புக்களை இளைய சமுதாயம் இனங்கண்டு விரைந்து பயன்படுத்த முன்வர வேண்டும். குறிப்பாக, சில குறிப்பிட்ட இனங்களுக்குத் தகுதியானவர் விண்ணப்பிக்காததால் காலியிடங்களும் உள்ளன. ஷெட்யூல்டு பிரிவினர், அகதிகள், பழங்குடியினர், மலை வாழ் மக்கள் போன்றோருக்குச் சில நிறுவனங்கள் வழங்குகின்ற வேலை வாய்ப்புகள் கூட இன்னும் சரியாகத் தெரியவில்லை. வேலை வாய்ப்பில் ஒதுக்கீடுகள் அடிக்கடி அறிவிக்கப் பட்ட போதிலும் கூட, சில குறிப்பிட்ட பணிகள் இன்னும் காலியாக உள்ளன. இந்த இடங்களை நிரப்புவதில் சட்ட சிக்கல்களும் எழுகின்றன. எனவே, வேலைவாய்ப்பினை நன்கு அறிந்திடும் வண்ணம் இளைஞர்களுக்கு அவ்வப்போது, வழிகாட்டுதல்கள் வழங்கப்பட வேண்டும். இதோ, சில குறிப்பிட்ட துறைகளில் வேலை வாய்ப்புக்கள் பற்றிய செய்திகள் இங்கே தரப்படுகின்றன.

**அட்டைப் பட விளக்கம்**

முதலாம் அட்டை:

50-வது சுதந்திர தினமான 15.8.96 அன்று சென்னைக் கோட்டையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்று வைக்கிறார்.

இரண்டாம் அட்டை:

சுதந்திரதின விழாவின் போது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், உடல் ஊனமுற்ற சிறார்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நான்காம் அட்டை:

தமிழ்நாடு திரைப்பட விருது வழங்கும் விழா





### 1. மைய அரசுப் பணிகள்



மையத் தேர்வாணையம் (U.P.S.C) ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ்., உள்ளிட்ட இருபத்தேழு பணிகளுக்கான தேர்வுகளை ஆண்டுதோறும் நடத்திவருகிறது. தேர்வினை எழுதுகின்றவர் இந்தியக் குடியுரிமை பெற்றவராக இருத்தல் வேண்டும். தேர்வு எழுதுகின்ற ஆண்டில் ஆகஸ்டு முதல் நாள் அன்று குறைந்த பட்சம் இருபத்து ஒன்று வயது நிறைந்தவராகவும் அதிக பட்சம் 28 வயது நிரம்பியவராகவும் இருத்தல் வேண்டும். பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) அதிகபட்ச வயதுவரம்பு முப்பத்திஒன்றாக உயர்த்தப்பட்டுள்ளது. அதிக பட்ச வயது வரம்பில் குறிப்பிட்ட பலருக்குத் தளர்த்தப்பட்டது. இதுபற்றி ஆண்டுதோறும் தரப்படுகின்ற அறிக்கைகளைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இத்தேர்வினை எழுத நான்கு முயற்சிகளில் மட்டுமே அனுமதிக்கப்படுவர். ஆனால் அண்மையில் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு (OBC) ஏழு முயற்சிகளாக உயர்த்தப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் டிசம்பர் மாத இறுதியில் தேர்வுத் திட்டம் பற்றிய அனைத்து விவரங்களும் அறிவிப்பு அறிக்கையில் இடம்பெறும். முதல் நிலைத் தேர்வு ஜூன் மாதத்தில் ஒரே நாளில் காலையிலும், மாலையிலும் நடைபெறும். ஒவ்வொரு நாளும் இரண்டு மணிநேரம் நடக்கும். வினாக்கள் (Objective) புற வய வினாக்களாகவே இருக்கும். முதல்தாள் முதல் நிலைத் தேர்வுக்கென அறிவிக்கப்பட்ட இருபத்தி நான்கு விருப்பப் பாடங்களில் ஒன்றினைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்தத் தேர்விற்கான பாடத் திட்டத்தினை ஒவ்வொரு ஆண்டும் மையத் தேர்வாணயம் அறிவிக்கும். இத்தேர்வில் போட்டியாளர்கள் பெறும் மதிப்பெண்கள் தர நிர்ணயத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. ஆனால், முதல்நிலைத் தேர்வில் தகுதி பெற்றோர் மட்டுமே முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப் படுவர். மேலும் விருப்பப் பாடங்களின் தரமும் இளநிலை பட்டப் படிப்பளவிலேயே அமையும்.

இரண்டாவது பகுதி (Paper II) பொது அறிவினைச் சோதிப்பதாகும். இந்தப் பிரிவிற்கான விடைகளைச் சராசரி கல்வியறிவுள்ள மாணவர் கூட எழுத முடியும். இத்தாளுக்கான பாடத் திட்டம் தெளிவாக வரையறுக்கப் படாவிட்டாலும், பொது அறிவியல், மனத் திட்டத்தினை அறியும் சோதனை, புள்ளியியல், இந்திய வரலாறு, நாட்டு விடுதலைப் போராட்டம், இந்திய அரசியல், பொருளியல், பூகோளம், இன்றைய நாட்டு சர்வதேச நடப்புகள் (Current affairs) பன்னாட்டு அமைப்புகள், கலை, பண்பாடு, திரைப்படம், இலக்கியம், வரைபடங்கள், அட்டவணை இன்னபிற பகுதியினின்று வினாக்கள் இடம் பெறும். இத்தாளுக்கு 180 மதிப்பெண்கள் தரப்படுகிறது.

### முதன்மைத் தேர்வு

முதல்நிலைத் தேர்வு ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் இறுதியில் அறிவிக்கப்படும். தேர்வுத் திட்டம் பற்றிய அனைத்து விவரங்களும் அறிவிப்பு விளம்பரத்தில் இடம் பெறும்.

இத்தேர்வில் வெற்றி பெற்றோரைத் தேர்வாணையம் படிவம் அனுப்பி முதன்மைத் தேர்விற்கு அழைக்கும். அதாவது முதல்நிலைத் தேர்வு முடிவு ஆகஸ்டு மூன்றாவது வாரத்தில் அறிவிக்கப்படும். ஆண்டுதோறும் நவம்பரில் முதன்மைத் தேர்வு தொடங்கும்.

> சும்மாயிருந்து துருப்பிடித்து அழிவதைவிட உழைத்துத் தேய்ந்து அழிவது சிறந்தது.
> – ரிச்சர்டு கம்பர்லேண்ட்

முதன்மைத் தேர்வில் ஒவ்வொரு தாளும் மூன்று மணி நேரம் நடக்கும். வினாக்கள் மரபு வகை கட்டுரை அமைப்பில் இருக்கும். வினாக்கள் ஆங்கிலத்திலும், இந்தியிலும் இருக்கும். வினாத்தள்களின் தரம் பி.ஏ. ஆனர்ஸ் / முதுநிலை அளவில் இருக்கும். குறிப்பாகத் தொழில் சார் விருப்பப் பாடங்களைப் பொறியியல் - மருத்துவம் - சட்டம் - வேளாண்மை - கால்நடையியல் துறைகளில் இளநிலைப் பட்ட வகுப்பு அளவிற்கே வினாக்கள் இடம்பெறும்.

முதல்நிலைத் தேர்விற்கு அறிவிக்கப்பட்ட விருப்பப் பாடங்களோடு மானுடவியல் (Anthropology) மேலாண்மை விருப்பப் பாடங்கள் கூடுதலாக அனுமதிக்கப்பட்டுள்ளன. முதன்மைத் தேர்விற்காக விருப்பப் பாடங்களில் இந்திய அரசியலமைப்பில் எட்டாவது அட்டவணையிலுள்ள (23 மொழிகள்) இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆக, நாற்பத் தெட்டு பாடங்களுக்கும் தனியாகப் பாடத்திட்டங்கள் ஆண்டு தோறும் அறிவிக்கப் படுகின்றன.

***முதன்மைத் தேர்வு – தாள்கள்***

| தாள் | பாடம் | காலம் | மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| தாள்1 | அட்டவணையில் தரப்பட்டுள்ள இந்திய மொழிகளுள் ஒன்று | 3 மணி | 300 |
| தாள் 2 | ஆங்கிலம் | 3 மணி | 300 |

இவ்விரு தாள்களும் கட்டாயமானவை. ஆனால், இவ்விரு தாள்களிலும் பெறுகின்ற மதிப்பெண்கள் தகுதிதானே தவிர தரத்திற்கல்ல.

ஏனைய அனைத்துத் தாள்களும் இவ்விரு தாட்களில் தகுதி பெற்ற பின்னரே மதிப்பீடு செய்யப்படும்.

| தாள் | பாடம் | காலம் | மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| தாள் 3 | கட்டுரை (இந்திய மொழிகளுள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்) | 3 மணி | 200 |
| தாள் 4, 5 | பொது அறிவு | 3 மணி | 300 |
| தாள் 6,7 | விருப்பப் பாடம் | 3 மணி | 300 |

தாட்கள் 3 விருந்து 9 வரையுள்ள தேர்வுகள் மொத்த மதிப்பெண்கள்: 2300

நேர்முகத் தேர்விற்கு எழுத்துத் தேர்வில் தரத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படுவர். நேர்முகத் தேர்விற்கான மதிப்பெண்கள்: 300, ஆக மொத்த மதிப்பெண்கள் 2300.

**விருப்பப் பாடங்களின் வகைகள் (Type of Optionals)**

விருப்பப் பாடங்களின் தேர்வில்தான் வெற்றியமைகிறது என்பது அறிந்ததே. போட்டியாளர்கள் தீவிர கவனம் செலுத்தி முதல்நிலைத் தேர்விற்கும், முதன்மைத் தேர்விற்கும் தேர்ந்தெடுக்க வேண்டும். மையத் தேர்வாணையம் விருப்பப் பாடங்களை ஆறு வகையாக வகுத்திருக்கிறது.

**பொறியியல் (Engineering)**

கட்டுமானப் பொறியியல்
மின் பொறியியல்
எந்திரவியல்

**மொழிகள் (Languages)**

அசாமி, வங்காளி, குஜராத்தி, இந்தி, கன்னடம், காஷ்மீரி, மராத்தி, மலையாளம், ஒரியா, பஞ்சாபி, பாலி, பாரசீகம், சமஸ்கிருதம், சிந்தி, தமிழ், தெலுங்கு, அரபி, ஜெர்மனி, பிரெஞ்சு, ருசியம், ஆங்கிலம், சீனம்.

**அறிவியல் (Science)**

வேளாண்மை, கால்நடை வளர்ப்பும் பாதுகாப்பும், தாவரவியல், விலங்கியல், வேதியியல், பூதவியல், நிலவியல், கணிதம், புள்ளியியல்.

**கலையியல் (Humanities-A)**

மானிடவியல், வரலாறு, சட்டம், மேலாண்மையியல், பொது நிர்வாகம், தத்துவவியல், அரசியலும் அறிவியலும், பன்னாட்டு உறவு, சமூகவியல்.

**கலையியல் (Humanities-B)**

வணிகவியலும் கணக்கீடும், பொருளியல், பூகோளம், உளவியல்.

***கால அவகாசம்:***

ஏறக்குறைய முதன்மைத்தேர்வு ஒரு மாத காலம் நடைபெறும். பொது அறிவு இருதாள்களைத் தொடர்ந்து எழுதிய பின்விருப்பப் பாடங்களுக்கான தேர்வுகளும் உடனே தொடங்கி விடுகின்றன. இதற்குப் பின்னர் தான் மொழி இலக்கியப் பாடங்களுக்கான தேர்வு நடைபெறும். இறுதியாகச் சிலரே விருப்பத் தேர்ந்தெடுக்கும் மருத்துவம் போன்ற விருப்பப் பாடங்களுக்கான தேர்வு நடைபெறும்.

> **மகத்தான பணியைத் தொடங்குகிறது அறிவு: அதை முடிக்கிறது உழைப்பு.**
> **– ஜோஸப் ஜுபேர்**







விருப்பப் பாடத்தைத் தேர்ந்தெடுக்கும் சிலர் இரு விருப்பப் பாடங்களைத் தேர்வுகளுக் கிடைப்பட்ட காலத்தைக் கணக்கில் கொண்டும் தேர்ந்தெடுக்கின்றனர். கால அவகாசம் இருப்பினும் படித்த பலவற்றை மீண்டும் ஒரு முறை ஆழமாகத் திருப்பிப் பார்க்க இந்நாட்கள் பயன்படும்.

விருப்பப் பாடத்தைப் பற்றிய தீர்மானம் செய்யச் சிறிது காலதாமதமானாலும், ஒன்றைத் தீர்மானித்தபின் தொடர்ந்து உழைப்பதே வெற்றிக்கு வழி செய்யும்.

***ஐ.இ.எஸ். (I.E.S.) ஐ.எஃப்.எஸ். (I.F.S.) முதலிய தேர்வுகள்:***

மையத் தேர்வாணையம் அனைத்திந்திய பணிக்கான தேர்வுகள் மற்றும் 25-க்கும் மேற்பட்ட மைய அரசுப் பணிகளுக்கான தேர்வுகள் (Group A, Group B) நடத்துவதோடு -

Indian Engineering Services
Indian Economic Services
Indian Statistical Services
Indian Forest Services
Indian Geological Services
National Defence and Naval Academy Examinations
Combined Defence Services Examinations
Combined Medical Services Examinations
Departmental Competitive Examination
Special Class Railway Apprenticeship Examination

போன்றவற்றினையும் நடத்துகின்றன:

பெரும்பாலான போட்டியாளர்கள் அனைத்திந்திய அரசுப் பணியாளர்களுக்கான தேர்வுகளை மாத்திரமே எழுதிவிட்டு ஏனைய தேர்வுகளைப் பற்றி எண்ணுவதில்லை. ஏனைய தேர்வுகளும் அவற்றினைப் போலவே, சிறப்பு வாய்ந்தவைகள். ஆனால், இத்தகைய தேர்வுகளுக்கு அவ்வப்போது மையத் தேர்வாணையம் வெளியிடுகின்ற அறிக்கைகளைத் தொடர்ந்து கண்காணித்துப் பாடத் திட்டங்களை அறிந்து சரியான நேரத்தில் விண்ணப்பங்களைப் பெற்று நிறைவு செய்து சரியான காலத்திற்குள் மையத் தேர்வாணையத்திற்கு அனுப்ப வேண்டும்.

நேரடியாகத் துறை சார்ந்த பாடங்களிலும், பொது அறிவிலும் தேர்வு நடத்தப் பெற்றுத் தகுதிபெற்ற போட்டியாளர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு மைய அரசுப் பணியில் சேர வாய்ப்புள்ளது என்பதனை உணர வேண்டும். முதல்நிலைத் தேர்வு என்ற பொதுத் தேர்வு இதற்கு இல்லையென்பதையும் உணர்த்துவதுதான் இப்பகுதியில் தலையாய நோக்கம். கடந்த பல ஆண்டுகளின் இத் தேர்விற்கான வினாக்களையும், பாடத் திட்டங்களையும் கருத்தில் கொண்டு உடனடியாகச் செயல்பட வேண்டும்.

### Indian Economic Services

| S.No. | Subject | Parts | Type | Duration | Marks |
|---|---|---|---|---|---|
| 1. | General English | I | Objective | 3 | 100 |
| 2. | General Studies | I | Objective | 3 | 150 |
| 3. | General Economics | I&II | Short Answers & Essay | 3(1+2) | 200 |
| 4. | General Economics | II | " | 3(1+2) | 200 |
| 5. | Indian Economics | I & II | " | 3(1+2) | 200 |

II. Viva

Indian Statistics Service

| S.No. | Subject | Parts | Type | Duration | Marks |
|---|---|---|---|---|---|
| 1. | General English | I | Objective | 3 | 150 |
| 2. | General Studies | I | " | 3 | 150 |
| 3. | Statistics I | I | " | 3 | 200 |
| 4. | Statistics II | I | " | 3 | 200 |
| 5. | Statistics III | I | Essay type | 3 | 200 |

II. Viva for successful candidates.

### Indian Forest Services:

தாவரவியல், வேதியியல், நிலவியல், கணிதவியல், இயற்பியல், விலங்கியல், புள்ளியியல், வேளாண்மையியல், பொறியியல், வனவியல், இளநிலைப் பட்டதாரிகள் இத்தேர்வினை எழுதலாம். இப்பணிக்கான அறிவிப்பு ஜனவரி / பிப்ரவரியில் அறிவிக்கப் படும். ஆகஸ்ட் மாதத்தில் எழுத்துத் தேர்வு நடைபெறும். பொது அறிவு, பொது ஆங்கிலம் கட்டாயமான தாள்கள்.

துறை சார்ந்த பாடங்களில் ஏதேனும் இரண்டினைத் தேர்ந்தெடுத்து எழுதவேண்டும். நேர்முகத் தேர்வும் உண்டு. குறிப்பாக வேளாண்மை, வேளாண் அறிவியல், இணைந்த விருப்பப் பாடங்களும், வேதியியலும், பொருளியலும் இணைந்த விருப்பப் பாடங்களும் தவிர்க்கப் பட வேண்டும்.



### Indian Engineering Services

இத்தேர்விற்கான அறிவிப்பு மார்ச் மாதத்தில் வெளியிடப்படும். ஆகஸ்டு மாதத்தில் தேர்வு எழுத வேண்டும்.

ஆகஸ்ட் முதல் நாளில் 20 வயது நிரம்பியவராகவும், 28 வயதுக்குட்பட்டும் இருத்தல் வேண்டும். வயது வரம்பு (விதி விலக்கினை மையத் தேர்வாணையம் அறிக்கையின் மூலம் அறிந்து கொள்ள வேண்டும். பொருளியல் இளநிலை பட்டதாரிகளும் M.Sc., Wireless Communication, Electronics, Radio Physics or Radio Engineering பாடம் படித்தவர்களும் இத் தேர்வு எழுதத் தகுதி பெற்றவர்கள்.

**தேர்வு முறைகள்:**

| S.No. | Subject | Time | Marks |
|---|---|---|---|
| 1. | General Ability Test (Part A English + Part B General Studies) | 2 | 200 |
| 2. | Relevant Engineering Subject Paper I | 2 | 200 |
| 3. | Relevant Engineering Subject Paper II | 2 | 200 |
| Section II – Conventional Papers: | | | |
| 4. | Relevant Engineering Subject | 3 | 200 |
| 5. | Relevant Engineering Subject | 3 | 200 |

நேர்முகத் தேர்வும் உண்டு. General Ability Test Part A English Grammar and Usage சிறப்பிடம் பெறுகின்றன. Part B. General Studies. நாட்டு நடப்புகள், பொது அறிவியல், இந்திய வரலாறு, பூகோளம் பகுதியிலிருந்து வினாக்கள் தொடுக்கப்படுகின்றன.

### Geologist Examination

நிலவியலில் பயனுறு நிலவியல், 'மரைன்' நிலவியல் முதுநிலைப் பட்டம் பெற்றவர்கள், Associateship in Applied Geology of School of Mines, Dhanbad, M.Sc., in Mineral Exploitation, Karnataka University போன்ற தகுதியினைப் பெற்றோர் இத்தேர்வு எழுதத் தகுதியிடையோர். ஜனவரி முதலாம் ஆண்டு நாள் 21-வயது நிரம்பியவராகவும், 30 வயதுக்குட்பட்டும் உள்ளோர் இத்தேர்வினை எழுதலாம். அக்டோபர் மாதத்தில் இத்தேர்வு பற்றிய விவரம் வெளியிடப்படும். ஏப்ரலில் தேர்வு நடைபெறும்.

எழுத்துத் தேர்வில் objective type multiple choice answer, General English, Geology Paper I, II, III, Hydrogeology முதலியன இடம் பெறும். பின்னர் நேர்முகத் தேர்வு நடைபெறும்.







### Combined Medical Services:

M.B.B.S., படித்தவர்கள் இத்தேர்வினை எழுதலாம். ஜனவரி முதல் நாள் 30 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும். அக்டோபர் மாதம் இத்தேர்வு பற்றிய விளம்பரம் வெளியிடப்படுகிறது. மார்ச் மாதத்தில் ஒரே நாளில் இத்தேர்வு நடைபெறும்.

எழுத்துத் தேர்வில், General Medicine including Paediatrics, Surgery including ENT, Opthalmology, Dermatalogy and Orthopaedics, Preventive Medicine and Community Health including Family Welfare, Maternal and Child Health and other National Programmes, Objectries and Gynecology, பின்னர் நேர்முகத் தேர்வு நடைபெறும். தவிர, Combined Defence Services, NDA, Assistant Engineer (PWD) Limited Departmental Competitive Exams, Assistant Grade Exams, Special Class Railway Apprentices Examination போன்றவற்றை மையத் தேர்வாணையம் நடத்துகிறது.

### Combined Defence Service Examination

இத்தேர்வு ஒவ்வொரு வருடமும் மே மாதத்தில் நடத்தப்படுகிறது. இத்தேர்வில் வெற்றிபெறுவதன் மூலம், வெற்றிபெற்றவர்கள் கீழ்க்காணும் இடங்களில் ஏதேனும் ஒன்றிற்குப் பயிற்சிக்காக அனுப்பப்படுவார்கள்.

*(1)* இந்திய இராணுவப் பயிற்சி முகாம், டேராடூன்.
(Indian Military Academy, Dehradun)

*(2)* கப்பற் படை முகாம், கோவா
(Naval Academy, Goa)

*(3)* விமானப்படை நிலையம், பேகம்பேட், ஹைதராபாத்
(Air Force Station, Begampet, Hyderabad)

*(4)* அலுவலர் பயிற்சி முகாம், சென்னை
(Officers' Training Academy, Madras)

இத்தேர்வுக்கான பாடத்திட்டம் கீழ்க் கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது. எழுத்துத் தேர்வும், நேர்முகத் தேர்வும் உண்டு.

எழுத்துத் தேர்வில், ஆங்கிலம், பொது அறிவு, ஆரம்பநிலை கணிதம், ஆகியவை உள்ளன.

நேர்முகத் தேர்வில் அறிவைச் சோதிக்கும் சில தேர்வுகளும், நேர்முகத் தேர்வும் நடைபெறும்.

***(2) வங்கிப் பணிகள்:-***

நம் நாட்டில் வங்கிப் பணிகளுக்கான தேர்வுகளும் முக்கிய இடம் வகிக்கின்றது. குறிப்பாகத் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் சில ஒன்றாக இணைந்தோ, அல்லது தனித்தோ போட்டித் தேர்வுகளை நடத்தி, தங்கள் நிறுவனங்களுக்குத் தேவையான நபர்களை பணிக்கு அமர்த்திக் கொள்கின்றனர். பாரதவங்கி (State Bank of India) Central Recruitment Board என்ற குழுவின் மூலம் தங்கள் நிறுவனத்தில்

> **உனக்குப் பெருமை வேண்டுமானாலும், உற்சாகம் வேண்டுமானாலும் பிற மனிதனுக்குத் தொண்டு செய்வதன் மூலம் தேடிக்கொள்.**
>
> – தந்தை பெரியார்

ஏற்படும் காலியிடங்களுக்கு ஏற்பப் போட்டித் தேர்வுகளை நிர்ணயித்து அதில் வெற்றி பெறுபவர்களில் சிறந்தவர்களை நேர்முகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுத்துப் பணிக்கு அமர்த்தப்படுகின்றனர். மற்றும் பல வங்கிகள் தங்களுக்குத் தேவையான நபர்களைப் போட்டித் தேர்வின் மூலமே தேர்வு செய்கின்றன. மாநில வாரியாக BSRB எனப்படும் "Banking Service Recruitment Board" என்ற குழு போட்டித் தேர்வுகளை நடத்தி, தகுதியானவர்களை வங்கிகளில் பணி நியமனம் செய்கின்றது.

இத்தேர்வுகள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் பகுதி Probationary Officer எனப்படும் வங்கி அலுவலர்களுக்கானது. இரண்டாவது பகுதி குமாஸ்தாவாகப் பணி புரிபவர்களுக்கானது (Clerical Jobs).

இவற்றில் Probationary Officer பதவிக்குத் தகுதி இளநிலைப் பட்டங்களில் ஏதேனும் ஒன்று என வரையறுக்கப்பட்டுள்ளது. இத் தேர்வுக்குப் போட்டியிடுபவரின் வயது 21 முதல் 28 வரை இருத்தல் வேண்டும்.

இத்தேர்வில் ஆங்கிலம், பொது அறிவு, கணித நுண்ணறிவு, தன்னறிவு (Mentability Reasoning) போன்ற பகுதிகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும். இக்கேள்விகள் புறவய (Objective type) வினாக்களாகவே இருக்கும். இத்துடன் ஆங்கில அறிவை சோதிக்கும் ஆங்கிலக் கட்டுரை, சுருக்கி வரைதல் போன்ற கேள்விகளும் கேட்கப்படும்.

வங்கிக் குமாஸ்தாப் பணிகளுக்கான (Bank Clerical Jobs) தேர்வில் பள்ளி இறுதி மாணவர்கள் முதல் முதுநிலைப் பட்டதாரி மாணவர்கள் வரை இத்தேர்வில் பங்கு கொள்கின்றனர். பங்கு கொள்பவர்களின் குறைந்த பட்ச வயது 18 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

> எங்களுக்குத் தேசம்தான் தெய்வம்; தேசத்தின் மக்கள்தான் எங்கள் சொத்து, சுகம் எல்லாம். அதற்கு ஆபத்து வரும்போது எங்கள் உயிர்களை உருவிக் கொடுத்தாவது தேசத்தைக் காத்துநிற்போம்.
>
> – முத்துராமலிங்கத்தேவர்

> *படித்தவன் உழவேண்டும்; உழுபவன் படிக்க வேண்டும். படிப்பவன் அறிவுப் பசியைத் தீர்க்க உழுபவன் உற்பத்தியைப் பெருக்க இருசாராரும் இணைந்தால்தானே ஏற்றம் காண முடியும்.*
>
> *– அறிஞர் அண்ணா*

இத்தேர்விலும் ஆங்கிலம், கணித நுண்ணறிவு, பொது அறிவு, பிழை கண்டறிதல், தன்னறிவுச் சோதனை (Reasoning) இவைகள் புறவய வினாக்களாகக் கேட்கப்படும். இத்துடன் அந்தந்த மாநில மொழிகளிலேயே கட்டுரை வரைதல் போன்ற கேள்விகளும் இருக்கும்.

வங்கிப் பணிக்கான தேர்வுகள், குறிப்பிட்ட சில வருட இடைவெளியிலோ, அல்லது மாத இடைவெளியிலோ நடத்தப்படுவது இல்லை. எவ்வப்பொழுது, காலியிடங்கள் ஏற்படுகின்றனவோ, அக்காலியிடங்களைப் பொறுத்துத் தேர்வுகள் அக்குறிப்பிட்ட வங்கிக்கான தேர்வுக் குழுவின் மூலம் விளம்பரப்படுத்தப்படும்.

**(3) இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (Life Insurance Corporation of India)**

இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் பணி காலியிடங்களுக்கு ஏற்ப மண்டல வாரியாகத் தேர்வு அறிவிப்பு செய்கிறது.

இந்நிறுவனமும் குமாஸ்தாப் பணிகளுக்கான (Clerical) தேர்வுகளையும், துணை நிர்வாக அலுவலர் பதவிக்கான (Assistant Administrative Officer) தேர்வுகளையும் தனித்தனியே நடத்தி, தகுதியானவர்களைப் பணி நியமனம் செய்கிறது.

மேற்கூறப்பட்ட வங்கிப் பணிகளுக்கான வயது வரம்பு கல்வித் தகுதிகள் இத்தேர்வுகளுக்கும் பொருந்தும். பெருகி வரும் மக்கள் தொகைப் பெருக்கம், வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற காரணங்களினால் இத்தேர்வுகளில் பங்கு கொள்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

தொடர்ச்சி அடுத்த இதழில்....





# வாசகர் இதயம்

'தமிழரசு' இதழ் மிகவும் மாறுபட்டுப் பொலிவுடன் வெளிவருவது கண்டு மகிழ்ச்சி; மற்ற நூல்களிலிருந்து சிறந்த படைப்புகளை எடுத்து வெளியிடுவது ஒரு நல்ல ஏற்பாடு. காலாடிப்பேட்டைக்கு ஏன் அப்பெயர் வந்தது என்கிற ரா.பி. சேதுப்பிள்ளை கருத்துக்கு நான் முரண்படுகிறேன். கால்களை ஆட்டி நெசவு செய்வோர் மிகுந்துள்ள பேட்டை என்பதனாலும் அந்தப் பெயர் வந்திருக்கலாம் அல்லவா?

**– செந்தமிழ்க்கிழார்**
சென்னை - 600 032

தமிழரசு ஏட்டின் அமைப்பு, உள்ளடக்கம் எல்லாமே அற்புதம். வளரட்டும் இப்பணி.

**– பி. மகேஸ்வரி**
பாளையங்கோட்டை

அப்துல் ரகுமானின் 'ஹைகூ' பற்றிய கட்டுரை, ஆசிரியர் மடல் எல்லாமே என் மனசைப் பறித்தது. ஆசிரியர் பொறுப்பு வகிக்கும் அற்புத சாட்சிக்கு அன்புப் பூச்செண்டு.

**– வெற்றிப் பேரொளி**
திருக்குவளை

சட்டமற்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய நிதிநிலை அறிக்கையும், அதன் மீதான பதிலும் தனியே பாதுகாக்கப்பட வேண்டிய அளவில் இருந்தது; அதைத் தனி இணைப்பாக வெளியிட்ட 'தமிழரசு'க்கு எங்கள் பாராட்டு.

**– ச.சிவகோபால்**
ஆர்.என். பாளையம்

'தமிழரசு' 1.7.96 இதழில் வந்த அறிஞர் அண்ணா பற்றிய பெட்டிச் செய்தி ஒன்றில் கடைசியாக அவர் கலந்துகொண்ட கலைவாணர் சிலைதிறப்பு நிகழ்ச்சி 14.11.69 என்றிருப்பது தவறு; அத் தேதி 14.1.69 என்று இருந்திருக்க வேண்டும்.

**– தலைமை ஆசிரியர்**
வடகடம்பாடி

தமிழரசு துவங்கப் பெற்ற நாளிலிருந்து எங்களுக்கு இதழ் கிடைத்து வருகிறது. முன் எப்பொழுதும் இல்லாத வகையில் இப்பொழுது தமிழரசு இதழ் செழிப்பாகவும், அரசின் சாதனைகளை சுவைபட விளக்குவதோடு அறிவு பூர்வமான செய்திகளையும் தாங்கி வெளிவருகின்றன. மகிழ்ச்சி வாழ்த்துக்கள்.

**– T.V.G. பிரபாகர்**
திருச்சிராப்பள்ளி - 620 002.

திருமதி ஆஷா பூர்ணாதேவி அவர்கள் எழுதிய ''காலாட்படை'' என்னும் தொடரில் சேரிக்குழந்தைகள் என்னும் வாசகம் எழுதி உள்ளார். அந்த வாசகத்தைப் படிக்கும் போது சிறிது வேதனையாக இருந்தது. எங்கள் குழந்தைகள்தான் இப்படி இருக்கிறதா? இதுபோல எழுதப்படும் வாசகங்களை இனியாவது தவிர்க்கவும்.

**– N. ஆறுமுகம்,**
தர்மபுரி - 636 701.

'தமிழரசின்' 16.6.96ந் தேதி இதழ் கண்டேன். பல குறுகிய கருத்து வளம் மிக்க செய்திகள், உடல் ஆரோக்கியத்துக்கென தனி தகவல்கள் கொடுத்துள்ளீர்கள். கண்ணுற்று மகிழ்ந்தேன்.

**– எஸ். வேலுச்சாமி, பி.காம்.**
சிவகாசி மேற்கு - 626 124.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : என்.எஸ். பழனியப்பன் இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர் : இரா.பா. கார்மேகம், உதவி இயக்குநர் :எம் அண்ணாமலை
ஆசிரியர் குழு : எம்.வி.எம். அசோகன், அ. மதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள் : என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927



# ஆசிரியர் மடல்

சிந்தனை செய் மனமே!

'கண்ணுதற் பெருங்கடவுளும்
கழகமோடமர்ந்து
பண்ணுறத் தெரிந்து
ஆய்ந்த பசுந்தமிழ்....'

தொண்டர் நாதனைத்
தூதிடை விடுத்ததும்,
முதலை உண்ட பாலனை விடுத்ததும்,
எலும்பு பெண்ணுருவாக் கண்டதும்
தண்டமிழ்ச் சொலே...'

– என்றெல்லாம் நாம்
பழையதைச் சொல்லிப்
புதிய பூரிப்பில் ஆழ்கிறோம்!

கல்தோன்றி மண்தோன்றாக்
காலத்தே முன்தோன்றி
மூத்தகுடி எனக்
குடிப்பெருமை பேசிக்
குதூகலிக்கிறோம்!

எல்லாம் சரிதான்! ஆனால்...
இந்திய அரசால் போடப்பட்டுள்ள
செம்மொழிகள் பட்டியலில்
இலக்கணத் தெளிவும்
இலக்கிய வளமும் பெற்றுள்ள
நம் தமிழ்மொழி இடம்பெறவில்லை!

டில்லியில் நடைபெற்றதோர் விழாவில்,
வடமொழி, அராபி, பாரசீகம் ஆகிய
மும்மொழி அறிஞர்களுக்குக்
குடியரசுத் தலைவர் அவர்கள்
விருது வழங்கியிருக்கிறார்.
அம்மொழிகளெல்லாம் செம்மொழிகளாம்!
ஆனால் நம் மொழி?

செப்புமொழி பதினெட்டுடையாள்
எனில் சிந்தனை ஒன்றுடையாள்
என்று பாரதி போற்றிய பாரதத்தாய்
நம் தமிழ்த்தாயை ஓரங்கட்டுவதேன்?

'தமிழாய்ந்த தமிழன்தான்
தமிழ்நாட்டின் முதலமைச்சாய்
வருதல் வேண்டும்' என்ற
புரட்சிக்கவிஞரின் கனவை
நனவாக்கியாயிற்று!

தமிழ் வளர்ச்சிக்கெனத்
தனியொரு துறையும் கண்டாயிற்று!

இந்நிலையில்
நம் தாயாம் தமிழ்மொழி
செம்மொழி இல்லையென்றால்?
தமிழறிஞர்கள் சிந்திப்பார்களாக!















# இந்த இதழில்.......


ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தில் மாநிலங்களுக்குப் பங்கு – முதல்வர் கலைஞர் 2

மந்திரக் கவிஞர் 5

அண்ணாவின் ஆதரவும், பெரியாரின் பரிவும் 6

கலைவாணர் விழாவில் 10

சுவைமிகு சொல்லாடல் 12

சொன்னால் நம்பமாட்டீர்கள் 14

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம் 16

காலத்தின் காதுகளில் 19

எங்கள் ஊர் பிரச்சினை 20

அறிவியல் துளிகள் 21

செய்திச் சரம் 22

புரியவில்லை - சிறுகதை 26

தோல் நோய்கள் 35

[redacted]

வாசகர் இதயம் 47

ஆசிரியர் மடல் 48


2164-609




## தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027
புரட்டாசித் திங்கள்: 1
மலர் :27 இதழ் : 6
16.9.1996
விலை ரூ. 3.



ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் 'ஜீவன் சுரக்ஷா' என்ற புதிய ஓய்வூதியத் திட்டத்தை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு தேவகவுடா அவர்கள் சென்னையில் 24.8.1996 அன்று தொடங்கிவைத்தார். மாண்புமிகு முதல்வர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி, மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம், தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.கே. மூப்பனார், மத்திய அமைச்சர்கள் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், திரு தனுஷ்கோடி ஆதித்தன், திரு. என்.வி.என். சோமு, திரு. டி.ஆர். பாலு, மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். இவ் விழாவில் அகில இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிறுவனத்தலைவர் ந.மோ. கோவர்தன் வரவேற்புரையாற்றிட, ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர், திரு. கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

# ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தில் மாநிலங்களுக்குப் பங்கு

**– முதல்வர் கலைஞர்**

மாண்புமிகு பிரதமர் அவர்கள் தமது தொடக்கவுரையில் குறிப்பிட்டதாவது: ''ஜீவன் சுரக்ஷா திட்டத்தை அறிமுகம் செய்ததன் மூலம் எல்.ஐ.சி. போதுமான அளவுக்கு ஓய்வூதிய நிதியைப் பெற்றிருக்கும் என்று நம்புகிறேன். முதல் கட்டத்திலேயே அது 200 கோடியை எட்டும் என்று எல்.ஐ.சி. நம்புகிறது.

இத்திட்டத்தின் மூலம் எல்.ஐ.சி. தனிப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் மூலம் பாதுகாப்பு அளிப்பதுடன் மிக முக்கியத் தேவைகளான நெடுஞ்சாலைத்துறை, தொலைத் தொடர்புத்துறை போன்றவற்றில் திட்டங்களை அமல்படுத்துவதற்கும் நீண்டகால நிதி உதவி அளிக்கிறது.

இந்த நேரத்தில் மாநிலத் திட்டங்களுக்கும் பாரபட்சமின்றி எல்.ஐ.சி. உதவி அளிக்கும் என்று முதல்வர் கருணாநிதி அவர்களுக்கு நான் உறுதியளிக்க விரும்புகிறேன். அதற்கான ஏற்பாடுகளை நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் செய்வார்.

ஐக்கிய முன்னணி அரசு அமைய இத் தமிழ்நாட்டைச் சேர்ந்த முதல்வர் கலைஞர் கருணாநிதியும், மூப்பனாரும், பெரும் பங்கு ஏற்றனர். அவர்கள் இருவரும் டெல்லியில் - மத்திய ஆட்சிக்கு வலுவான இரண்டு தூண்கள் என்றால் மிகையாகாது.

எனவே மூத்த தலைவர் முதல்வர் கருணாநிதி அவர்களுக்கும், மூப்பனார் அவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது; கைவிடுவது என்ற பிரச்சினைக்கே இடமில்லை! எந்தப் பிரச்சினையிலும் எந்த மாநிலத்தின் நலனுக்கும் பாதிப்பு ஏற்படாமல் நாம் இணைந்தே செயல்படுவோம்.''

மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆற்றிய தலைமை உரையிலிருந்து:

''ஆயுள் காப்பீட்டுக் கழகம் நாட்டுப் பணியில் நாற்பது ஆண்டுகள் ஈடுபட்டு ஆற்றியுள்ள பணிகளைப் பாராட்டுகின்ற வகையிலும், மத்திய நிதி அமைச்சர் திரு. சிதம்பரம் அறிவித்த ஆயுள் பாதுகாப்பு உறுதித்திட்டம் - 'ஜீவன் சுரக்ஷா' என்பதற்குத் தமிழ் மொழி பெயர்ப்பு 'ஆயுள் பாதுகாப்பு உறுதித் திட்டம்.' அதனை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் வகையிலும் இந்த விழா நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த விழாவிற்கு வருகைதந்துள்ள - பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு முதன் முதலாகத் தமிழகத்திற்கு வருகை தந்துள்ள - அதிலும் குறிப்பாகத் தமிழகத்தின் தலைநகரமான சென்னை மாநகரத்திற்கு வருகை தந்துள்ள அன்புக்குரிய பிரதமர் தேவகவுடா அவர்களைத் தமிழக மக்களின் சார்பாக வருக வருக என்று வரவேற்கின்றேன்.

இந்த நிகழ்ச்சிக்குத் தலைமையேற்க என்னைப் பணித்த மத்திய நிதி அமைச்சர், அன்புச் சகோதரர் சிதம்பரம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கை ஆக்குகிறேன்.

சென்னைக்கு உள்ள தனிச்சிறப்புகளிலே ஒன்று, ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் பதினான்கு மாடிக் கட்டடம். மாநிலத்தில் மின்வசதி, குடிநீர் வழங்கல், வீட்டு வசதி உட்பட சமூக, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த துறைகளின் மேம்பாட்டிற்காகக் குறைந்த வட்டியில் ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடன் உதவி செய்து வருகின்ற காட்சிகளை இங்கே வீடியோவில் கண்டீர்கள்.

ஆனால், அண்மைக் காலத்தில் ஆயுள் காப்பீட்டுக் கழகம் தமிழ்நாட்டில் கூட்டுறுவனத்துறைக்கு அனுமதி வழங்கி வந்துள்ள தொகையின் அளவு குறைந்துவிட்டது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதாவது 1989-90ல் அனுமதிக்கப்பட்ட மொத்த உதவித் தொகை நாற்பத்தி ஆறு கோடி ரூபாய். 1990-91ல் அனுமதிக்கப்பட்ட மொத்த உதவித் தொகை ஐம்பத்து ஆறு கோடி ரூபாய்.



ஆனால் 1994-95ல் அனுமதிக்கப்பட்ட உதவித் தொகை வெறும் ஐந்து கோடி ரூபாய். இப்படி அனுமதிக்கப்பட்ட உதவித் தொகையில்- உண்மையில் வழங்கப்பட்ட மொத்தத் தொகையின் கணக்கைப் பார்த்தால் கூட, 1989-90ல் நாற்பது கோடி ரூபாய், 1990-91ல் நாற்பத்து ஆறு கோடி ரூபாய். ஆனால் 1993-94ல் பத்தொன்பது கோடி ரூபாய். 1994-95ல் இருபத்து நான்கு கோடி ரூபாய்.

சதவிகிதக் கணக்கில் பார்த்தால் ஆயுள் காப்பீட்டுக் கழகம் அனுமதித்த மொத்த உதவித் தொகையில் தமிழ் நாட்டின் பங்கு 1989-90ல் 7.96 சதவிகிதம் 1994-95ல் இது 0.36 சதவிகிதம் என்ற அளவுக்குக் குறைந்துவிட்டது. இப்படி குறைந்ததற்கான காரணத்தை நான் கூற விரும்ப வில்லை. உங்களுக்கே தெரியும். தெரிந்ததைத் திரும்பத் திரும்ப

சொல்ல வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தால் தெரிவிக்கவில்லை.

நடப்பு ஆண்டிலிருந்து தமிழ்நாட்டிலுள்ள கூட்டுநிறுவனத்துறைகளுக்கு ஆயுள்காப்பீட்டு நிறுவனத்தினுடைய உதவித் தொகை, அதன் அளவு உயரும் என்று நான் நம்புகின்றேன். உயரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு உதவிட வேண்டும் என்றும் மத்திய நிதி அமைச்சரை உங்கள் சார்பாக வேண்டுகின்றேன்.

1996-97ஆம் ஆண்டிற்கான மத்திய வரவு செலவுத் திட்டத்தில் நிதியமைச்சர் சிதம்பரம் அறிவித்துள்ள இரண்டு புதிய ஈட்டுறுதித் திட்டங்களையும் நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். நாடும் வரவேற்கிறது. அதிலே ஒன்றுதான் ஆயுள் பாதுகாப்பு உறுதித் திட்டம் - 'ஜீவன் சுரக்ஷா' இரண்டாவது; மக்கள் மருத்துவப் பாதுகாப்புத் திட்டம் 'ஜன் ஆரோக்யா', 'ஜன்' என்றால் மக்கள். 'ஆரோக்யா' என்றால் நலம். மக்கள் மருத்துவப் பாதுகாப்புத் திட்டம். இதில் ஆயுள் பாதுகாப்பு உறுதித் திட்டம் இந்திய நாட்டின் நடுத்தர வர்க்கத்திற்கு மிகவும் பொருத்தமான ஒரு திட்டமாகும். இத்திட்டம் பணியில் இருந்து ஓய்வு பெறும்போது, இத்திட்டத்தில் சேருவோருக்கு ஒரு ஊதியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றது. மக்கள் மருத்துவப் பாதுகாப்புத் திட்டம் குறைந்த செலவில் மருத்துவப் பாதுகாப்புத் திட்டமாக அமைகிறது.

இந்த இன்சூரன்ஸ் திட்டம் டெல்லியில் இருந்து மாத்திரம் வெற்றிகரமாகச் செயல்பட முடியாது என்பது என் கருத்து. இந்தத் திட்டத்திற்குப் பஞ்சாயத்துக்கள்கூட தங்களின் ஒத்துழைப்பை வழங்கிட வேண்டும். வீட்டுக்கு வீடு, குடும்பத்திற்குக் குடும்பம் இத்திட்டத்தைப் பரவலாக்க வேண்டும். இத்திட்டம் பரவலாக்கப்பட வேண்டுமேயானால் மாநில அரசுகளுக்கு இதிலே உரிமை தரப்பட வேண்டும் என்று பிரதமரையும் நிதி அமைச்சரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

தனியாருக்கோ, கூட்டுத் துறையிலோ இத்திட்டம் விடப்படலாமா என்பது இப்போது விவாதப் பொருளாக இருந்து வருகிறது. நாடாளுமன்றத்திலும் அதுபற்றிப் பேசப்பட்டது. ஏடுகளிலும் அத்தகைய கருத்துக்கள் வந்துகொண்டு உள்ளன. எனவே, இத்திட்டத்தில் மாநில அரசுகளுக்கு உரிமை வழங்குவதில் தவறு இருக்க முடியாது. அதுபற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்று மத்திய அரசையும் பிரதமரையும், நிதி அமைச்சரையும் நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே வங்கிகளெல்லாம் இப்போது மத்திய அரசின் பொறுப்பிலேதான் உள்ளன. அதற்கு மாறாக மாநில அரசுகளே வங்கிகளை நடத்துகிற அனுமதியைப் பெற மத்திய அரசு வழிவகைகளை வகுக்கலாம். அனைத்திந்திய அளவிலே செயல்படும் நிதி நிறுவனங்கள் அனைத்துமே, மும்பை மற்றும் கல்கத்தா போன்ற நகரங்களைத்தான் தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு



வருகின்றன.

இதனால் இந்த நிதி நிறுவனங்களின் நிதி உதவி வழங்குகின்ற நோக்கத்தில், அருகில் உள்ள மாநிலங்களுக்கு அதிக முன்னுரிமை வழங்கப்படுகிறது என்ற ஐயப்பாடும் எழுகிறது. இந்த ஐயப்பாட்டைப் போக்கவும், பரவலாக்கப்பட்ட பொருளாதாரச் சூழ்நிலையிலே நாட்டின் அனைத்துப் பகுதிகளும் ஒரே அளவில் வளர்ச்சி அடைவதற்கான வழிவகை செய்யவும், ஒரு பெரும் அளவிலான அனைத்திந்திய வளர்ச்சி நிதி உதவி நிறுவனம் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோளாகும்.

எனவே 1996-97-ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள ''அடிப்படை வசதி மேம்பாட்டு நிதி நிறுவனத்தின்'' தலைமையிடத்தை, சென்னையில் அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.''







இருண்டதோர் பாரதத்தில்
இயற்கையில் எழுந்த வெய்யோன்
மருண்டதோர் மனித ஜாதி
மருட்சிக்கு மருந்தாய் நின்றோன்
அருந்திறன் உள்வாய் தோன்றி
ஆக்கிய கவிதை ஊற்று
வருஞ் சமுதாய முற்றும்
வகைபடச் சொன்ன மேலோன்!

இந்திய ஒருமைப் பாட்டை
எப்பொழுதோ உரைத்தான்
சந்திர மண்ட லத்தைத்
தான்பார்க்க நினைத் திருந்தான்
யந்திரத் தொழில் நுட்பங்கள்
அனைத்தையும் கனவு கண்டோன்
மந்திரக் கவிஞன் அம்மா
மாகாளி தந்த சக்தி!

எத்தனை தீர்க்க ஞானம்
எத்தனைப் புதிய சொற்கள்
எத்தனை உணர்ச்சி வேகம்
எத்தனை பக்தி மோகம்
இத்தனைக் கருத்தைச் சொன்ன
இயற்கவி வாழ்ந்த நாளில்
எத்தனைப் பேருணர்ந்தார்?
இப்பொழு துணர்கின் றாரே!

– கவியரசு கண்ணதாசன்
(1981-ல் பாடியது)

# மந்திரக் கவிஞர்

## கவியரசு கண்ணதாசன்

# அண்ணாவின் ஆதரவும், பெரியாரின் பரிவும்

- கலைஞர்

நான் எழுதி நடித்த 'பழனியப்பன்' நாடகத்தை நூறு ரூபாய்க்கு வாங்கிக் கொண்டவர் 'திராவிட நடிகர் கழகம்' என்ற பெயரால் ஒரு கலை மன்றத்தைத் துவக்கி, கழகப் பிரசார நாடகங்களை நடிப்பது என்ற தீர்மானத்துடன் என்னை அணுகினார். நானும் அதற்கு ஒப்புதல் அளித்து, முதல் முதலாக நாடகக் குழு விழுப்புரத்தில் முகாமிட்டது. என்னையும் அந்த மன்றத்தில் இணைந்து நடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். நான் எழுதும் நாடகத்தில் மட்டுமே நடிப்பது என்ற நிபந்தனையுடன் அதற்கு ஒப்புக் கொண்டேன்.

**"கருணா, போய் வருகிறேன்!"**

ஒரு நாள் நாடகத்திற்குத் தலைமை வகிக்கப் பெரியார் வந்திருந்தார். இன்னொரு நாள் அண்ணா வந்திருந்தார். அவரிடத்திலேயே நாடக மன்ற உரிமையாளர் பத்து ரூபாய் கடன் கேட்டு வாங்கிய நிகழ்ச்சியையும், அண்ணா புன்னகையோடு அந்தப் பத்து ரூபாயைக் கொடுத்த நிகழ்ச்சியையும், நாடகம் முடிந்து ஊருக்குப் போகுமுன், அண்ணா அவர்கள் என் முதுகில் தட்டி, "கருணா, போய் வருகிறேன்" என்று அன்பொழுகக் கூறியதையும் என்னால் மறக்கவே முடியாது.

திராவிடம் திராவிடர் என்ற உத்வேகத்தை நாட்டில் எழுப்புவதற்காகத் 'திராவிட நாடு' என்கிற கிழமை இதழை அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் துவக்கினார்கள். அதனையொட்டித் 'திராவிடர் கழகம்' என்ற பெயரால் ஒரு துணை மன்றம் போன்ற அமைப்பினை அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் உருவாக்கினார். அந்தத் துணை அமைப்பு எதிர்காலத்தில் நாடு தழுவிய இயக்கமாக ஆகுமென்று அன்று யாரும் எதிர்பார்த்திட்டதில்லை.

நீதிக் கட்சியின் பொதுச் செயலாளராக அண்ணா அவர்கள் இருந்ததால் கட்சி வளர்ந்திடவும், புதிய வேகம் கொண்டிடவும், புதிய குறிக்கோள் பெற்றிடவும் வழிமுறை காண வேண்டுமென்று அண்ணா அவர்கள் துடித்தார்கள். நீதிக் கட்சியில் இருந்த பெரும் தலைவர்கள் மாட மாளிகை, மல்லிகை மஞ்சம், கூட கோபுரம், கொட்டு முழக்கு என்றெல்லாம் ஆடம்பரப் பிரியர்களாக இருந்தார்கள். குடிசைகளும், அங்கேயெழும் குரல்களும் அவர்கள் காதில் விழ வாய்ப்பில்லை. அத்தகையோர் பிடியிலிருந்த நீதிக்கட்சியை அண்ணா விடுவிக்க முயன்றார்.

1944 ஆம் ஆண்டில் தான் சேலத்தில் நீதிக் கட்சி மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் கட்சித் தலைவர் பொறுப்பிலிருந்து பெரியாரை இறக்கிவிட நீதிக்கட்சிச் சீமான்களும், கோமான்களும் முயன்றார்கள். அப்படி நடைபெற்றுவிடாமல் பெரியாரின் தலைமையைக் காப்பாற்ற அண்ணா நாடெங்கும் சூறாவளிப் பயணம் செய்து, கட்சித் தொண்டர்களின் ஆதரவைப் பெருக்கினார்.

எதிர்ப்புகளை முறியடிக்கவும் நீதிக் கட்சியை ஏழைகளின் இல்லத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்ற தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளவும், இந்திய விடுதலையில் தனக்கிருந்த அழிக்க முடியாத பற்றினை வெளிப்படுத்திக் கொள்ளவும் அண்ணா அவர்கள் சேலம் மாநாட்டில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். சரித்திரப்புகழ் படைத்த அந்தத் தீர்மானத்திற்கு 'அண்ணாதுரை தீர்மானம்' என்று பெயர்.

**அண்ணா ஏற்படுத்திய புதிய திருப்பம்**

'நீதிக்கட்சி' என்ற பெயரை மாற்றித் 'திராவிடர் கழகம்' என்று பெயரிடப்பட வேண்டுமென்றும், வெள்ளையன்







ஆட்சியால் தரப்பட்ட 'சர்', 'ராவ்பகதூர்', 'திவான் பகதூர்' போன்ற பட்டங்கள் துறக்கப்பட வேண்டுமென்றும், கௌரவ நீதிபதி மற்றும் நியமனப் பதவி கொண்டவர்கள் அவைகளை இராஜினாமா செய்யவேண்டுமென்றும், தங்களுடைய பெயருக்குப் பின்னால் உள்ள சாதிப் பெயரை விட்டொழிக்க வேண்டுமென்றும் அண்ணாவின் தீர்மானம் முழக்கமிட்டது.

35 மணி நேர விவாதத்திற்கு அந்தத் தீர்மானம் உள்ளாகியது. கட்சியின் ஆய்வுக் குழு அண்ணாவின் தீர்மானத்தை வன்மையாக எதிர்த்தது. பின்னர் பொது மாநாட்டினில் அண்ணாவின் தீர்மானத்தை ஆதரித்தும், எதிர்த்தும் கருத்துரைகள் வழங்கப்பட்டு, பிறகு இறுதியில் அண்ணா விளக்கவுரை வழங்கினார். அதனைக் கட்சித் தோழர்களும், பொது மக்களும் தங்கள் ஆர்வமிகுந்த கையொலிகளால் வரவேற்றவாறு இருந்தனர். அதனைக் கண்ட நீதிக் கட்சிப் பெரிய மனிதர்கள் ஒவ்வொருவராக மாநாட்டை விட்டு வெளியேறினார்கள். இறுதியில் அண்ணா தீர்மானம் இடி முழக்கமெனக் கையொலிகளுக்கிடையே நிறைவேறியது. பெரியார் தலைமையை அண்ணா காப்பாற்றியது மட்டுமல்ல, நீதிக் கட்சிக்கு ஒரு புதிய திருப்பத்தையும் தந்தார்.

புதுவையில் கழக மாநாடு ஒன்றை நடத்தத் திட்டமிட்டு, அதற்கான ஏற்பாடுகளில் அனைவரும் முழுமூச்சாக ஈடுபட்டோம். இரவெல்லாம் நாடக வேலை, பகலில் மாநாட்டு வேலை!

மாநாடு, சீரும் சிறப்புமாக நடைபெற எல்லா ஏற்பாடுகளும் எங்கள் எண்ணம் போல் முடித்துவிட்டனர்.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, அழகிரிசாமி மற்றும் கழகத் தலைவர்கள் மாநாட்டில் பங்கு கொண்டனர்.

மாநாடு காலை பத்து மணிக்குத் தொடங்கிற்று. மாநாட்டில் கலகம் விளைவிக்கத் திட்டமிட்டவர்களும் ஒன்று, இரண்டு, பத்து நூறாக, மாநாட்டு முகப்புக்கெதிரிலே கூடி எதிர்ப்பு முழக்கங்கள் செய்திடத் தொடங்கினர்.

"திராவிடத் தலைவர்களே! திரும்பிப் போங்கள்!" என்பதே அவர்களது கூச்சலாக இருந்தது.

"வா! என்றழைப்பதுதான் தமிழர் பண்பு, போ என்று கூறக் காரணம் யாதோ?" என்று தொடங்கி, அறிஞர் அண்ணா அவர்கள் அரியதோர் உரையாற்றினார்கள். அந்த உரையினைத் தொடர்ந்து கழகக் கொடியை ஏற்றிவைத்தார்கள். கொடி ஏற்றப்பட்ட அடுத்த வினாடியே கொடி மரத்தை வீழ்த்திவிட்டார்கள் எதிரிகள்.

அவ்வளவுதான். அமளி தொடங்கிவிட்டது. பெரியாரையும், அண்ணாவையும், ஏனைய



தலைவர்களையும்
வண்டிகளிலும்
ரிக்ஷாக்களிலும் ஏற்றிப்
பாதுகாப்பாக
அனுப்பிவிட்டுப்
பாரதிதாசனும், நானும்,
காஞ்சி கல்யாணசுந்தரம்
ஆகியோரும் வீதியில்
நடந்து வந்து
கொண்டிருந்தோம்.

**அந்தச் சம்பவம் இனிக்கிறது!**

திடீரென ஒரு பெருங்கூட்டம் எங்கள் மூவரையும் சூழ்ந்து கொண்டது. நாங்கள் மூவரும் திசைக்கொருவராக ஆகிவிட்டோம். பாரதிதாசனை யாரோ அழைத்துக் கொண்டு ஓடி ஒரு வீட்டில் ஒளித்து விட்டார்கள். அவரது காலணியொன்று தெருவிலே கிடந்தது. அதனைக் கருவியாகக் கொண்டு என்னைத் தாக்கினார்கள். பெரிய லாடம் அடிக்கப்பட்ட பூட்ஸ்!

அது எப்படியிருந்திருக்கும் என்று கூற வேண்டியதில்லை. அப்பொழுது வலித்தது. ஆனால் இப்பொழுது நினைத்தாலும் அந்தச் சம்பவம் இனிக்கிறது.

அந்த நீண்ட தெருவில் ஒரேயொரு வீட்டில் மாத்திரம் கதவு திறந்திருந்தது. வாயிற்புறத்தில் இரண்டொரு பெண்கள் நின்று கொண்டு இருந்தார்கள். நான் வீட்டிற்குள்ளே நுழைந்தேன். வீட்டிற்குள்ளே நுழைந்த என்னை அந்தப் பெண்கள் தடுக்கவில்லை. திண்ணையில் இருந்தவாறு எந்தவிதச் சலனமும் இன்றி இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வீட்டிற்குள் சென்ற நான் தொடர்ந்து வந்த கூட்டத்தினர் என்னைப் பிடித்து விடாமலிருக்கக் கதவைச் சாத்தினேன். அதற்குள் கூட்டத்தினர் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தனர். நான் கதவிடுக்கின் மறைவில் நின்றுகொண்டு அந்த வீட்டை ஒருமுறை பார்த்தேன். தாழ்வாரத்திலும் கூடத்திலும் மதுப் புட்டிகள் இறைந்துகிடந்தன. காலி செய்யப்பட்ட புட்டிகளும், காலி செய்யப்படாத புட்டிகளும் ஏராளமாக இருந்தன. அந்த வீடுதான் கலகக்காரர்கள் சதித் திட்டம் தீட்டிய இடம் என்பதைப் பிறகு புரிந்து கொண்டேன். உள்ளே நுழைந்தவர்கள் கதவின் மறைவில் இருந்த என் தலை மயிரைப் பிடித்திழுத்துத் தெருப்புறத்தில் தள்ளினார்கள். 'க்யூ' வரிசையில் நிற்பது போல நின்று கொண்டிருந்த கலகக்காரர்கள் ஆளுக்கொரு அடி என்னை அடித்தார்கள். நான் மயக்கமுற்றேன். சுருண்டு விழுந்தேன். நான் இறந்து விட்டதாகக் கருதி, சாக்கடை ஓரத்தில் தூக்கியெறிந்துவிட்டுப் போய்விட்டார்கள்.

> **ஒரு தொழிற்சாலையில் வேலை செய்வோர், அதன் பங்காளிகளாக இருந்து செயல்பட வேண்டுமேயல்லாமல், கூலிக்காரர்களாக இருந்து குறைபட்டுக்கொண்டே இருக்கக்கூடாது.**
>
> **– தந்தை பெரியார்**

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இரண்டு மணி நேரம் கழித்துதான் நான் கண் விழித்துப் பார்த்தேன். எங்கேயோ வீட்டுத் தாழ்வாரத்தில் நான் படுக்க வைக்கப்பட்டிருந்தேன். முதிர்ந்த ஒரு தாயும் ஒரு சிறுமியும் ஓர் இளைஞனும் என் அருகே இருந்தார்கள். நான் கண் விழித்துப் பார்த்தபோது அந்தத் தாய் சொன்ன வார்த்தை என் நெஞ்சில் அப்படியே பதிந்துவிட்டது.

''ஐயோ, யார் பெற்ற பிள்ளையோ இப்படிச் சாகக் கிடக்கிறதே?'' என்பதுதான் அந்தத் தாயின் வாயிலிருந்து வந்த கனிவு மிக்க வாசகம்.

இதற்கிடையில் காலையில் கலைக்கப்பட்ட கழக மாநாடு, மீண்டும் மாலையில் கூட்டப்பட்டு அழகிரிசாமி அந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் சொன்ன வாசகம் தான், ''காலையில் சில கவலை தரத்தக்க நிகழ்ச்சிகள் நடந்ததாகக் கேள்விப்பட்டேன். நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும். இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்'' என்பதாகும்.

**காயங்களுக்கு மருந்திட்ட பெரியார்!**

என்னுடைய நிலைமை என்னவாயிற்று என்று தெரியாமல் தலைவர்கள் ஊரெல்லாம் ஆள் அனுப்பித் தேடியிருக்கிறார்கள். பெரியாரும் அண்ணாவும் என்னைக் காணாமல் துடித்துப் போயினர். விடியற்காலை நாலு





மணிக்குத் தலைவர்கள் தங்கியிருக்கும் இடம் தெரிந்து அவரிடம் போய்ச் சேரப் புறப்பட்டேன். மீண்டும் என்னைத் தெருவில் கண்டால் கலகக்காரர்கள் உயிரைப் பறித்துவிடக்கூடுமென்று அஞ்சிய எனக்கு உதவி செய்த வீட்டார், என்னை மாறுவேடத்தில் போகுமாறு வலியுறுத்தினர். அவர்களே அதற்கான ஏற்பாடுகளையும் செய்து, முஸ்லீம் வேடத்தில் என்னை அனுப்பி வைக்கத் திட்டமிட்டனர். கைலி, நீண்ட ஜிப்பா, தலையில் குல்லாய் இவைகளுடன் ரிக்ஷா ஏறி, தலைவர்கள் இருக்குமிடம் சென்றேன். பெரியார் கண்ணுறங்காமல் என்னைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார். என்னைக் கண்டதும் ஆரத்தழுவிக் கொண்டு, ''சுகமாக இருக்கிறாயா?'' எனத் தழுதழுத்த குரலில் கேட்டார்.

அதற்குப் பிறகு அவரே என் காயங்களுக்கெல்லாம் மருந்திட்டார். ''என்னுடன் வா, போகலாம்'' என்று ஆணையிட்டார். நானும் அவருடன் புறப்படத் தயாரானேன்.

**இந்தச் சம்பவத்திற்குப் பிறகுதான் பெரியாரின் ஈரோட்டுக் 'குடியரசு' அலுவலகத்தில் துணையாசிரியனாகப் பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.**

''குடியரசு துணை ஆசிரியனாக இரு!'' என்று பெரியார் பணித்ததோடு மட்டுமல்லாமல், அந்த இதழில் என்னைக் கட்டுரைகள் எழுத அனுமதித்து, அதனைப் படித்து மகிழ்ந்தார். எனக்கு மாதம் நாற்பது ரூபாய் சம்பளம். அதிலும் பிற்பகலும் இரவும் பெரியார் வீட்டில் சாப்பிடுவதற்காக இருபது ரூபாய் பிடித்துக் கொள்வார்கள். காலைச் சிற்றுண்டிக்கு, மாலைச்சிற்றுண்டிக்கு மாதம் பத்து ரூபாய் ஆகிவிடும். இதர செலவுகள் ஐந்து ரூபாய், மீதம் ஐந்து ரூபாயை என்னை அண்டி வந்த அருமை மனைவிக்கு - பத்மாவிற்கு மாதந்தோறும் திருவாரூருக்கு மணியார்டர் செய்து வந்தேன்.

எப்படியோ பிள்ளை சம்பாதிக்கிறான் என்று என்னைப் பெற்ற தாய்க்கும் தந்தைக்கும் உற்ற சகோதரிகளுக்கும் பெருமகிழ்ச்சிதான்.

காலை எட்டு மணிக்கெல்லாம் பெரியார் வீட்டில் அவர் முன்னால் அமர்ந்து அன்று வருகிற தபால்களை அவர் பார்த்து அது பற்றிய விளக்கங்களை அறிவித்து அதனைச் செயல்படுத்துகிற வழிவகைகளை நாங்கள் தொடங்கிவிட வேண்டும். பிறகு அலுவலக வேலை. மாலையில் பெரியார் அலுவலகம் வருவார்.

'குடியரசு' இதழில் நான் எழுதிய அண்ணாமலைக்கு அரோகரா!' என்ற கட்டுரையைப் பெரியார் பெரிதும் பாராட்டினார். திருவண்ணாமலை தீபத்தைப் பற்றிய கட்டுரையாகும் அது. அதற்குப் பிறகு பெரியாரைக் கவர்ந்த மற்றொரு கட்டுரை 'தீட்டாயிடுத்து' என்ற துணைத் தலையங்கமாகும்.

ஒவ்வொரு நாளும் இரவு பெரியார் வீட்டில் உணவு முடிந்ததும், பெரியார் தன் வீட்டு மாடியில் காற்றோட்டமான பகுதியில் எங்களை உட்கார வைத்துக் கொண்டு சமுதாயச் சீர்திருத்தங்கள், அரசியல் மாற்றங்கள் இவைகளைப் பற்றியெல்லாம் நீண்ட நேரம் விளக்கங்கள் அளிப்பார். எங்களுக்குத் தூக்கம் வருவதைத் தெரிந்து கொண்ட பிறகே அவர் தூங்கக் கிளம்புவார்.

ஓராண்டுக் காலம் 'குடியரசு' அலுவலகத்தில் பணியாற்றிப் பெரியாரிடம் கல்வி கற்கும் மாணவனாக இருந்தேன். அதற்குப் பிறகு கோவையிலிருந்து எனக்கொரு அழைப்பு வந்தது. திரைப்படத்திற்கு வசனம் எழுத வேண்டுமென்ற அழைப்புத்தான் அது. அழைப்பை அனுப்பியவர், ஏ.எஸ்.ஏ.சாமி அவர்களாவார். என்னுடைய நண்பர் முத்து கிருஷ்ணன் என்பவரின் துணையுடன் கோவை சென்று, திரு. சாமியிடம் விவரங்களை அறிந்தேன். கோவை ஜுபிடர் நிறுவனத்தின் சார்பில் எடுக்கப்பட்ட 'ராஜகுமாரி' என்ற படத்திற்கு நான் வசனம் எழுத வேண்டுமென்று கூறப்பட்டது. பெரியாரிடம் தெரிவித்தேன். அவரும் போய் வா! என்று விடை கொடுத்தார்.

– 'நெஞ்சுக்கு நீதி'
என்னும் நூலிலிருந்து

> ***உயர்ந்த உள்ளங்களுக் இடையில் தான் தூய்மையான தோழமை மலரமுடியும்***
>
> ***– சார்லஸ் கிங்ஸ்லி***

# கலைவாணர் விழாவில் கேட்டவை..

இயல், இசை, நாடக மன்றத்தில் இதற்குமுன் தலைவராக இருந்தவரோ குன்னக்குடி; இப்போதுள்ள என் ஊரோ காரைக்குடி; அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் ஊரோ இளையான்குடி; மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் புகழ் பெற்றுத்தந்த ஊர்களில் ஒன்று கல்லக்குடி.

**– திரு. இராம. நாராயணன்**

கலைவாணன் அவர்கள் கடைசியாகக் கலந்துகொண்டது அண்ணாவின் படத்திறப்பு விழா; அண்ணா அவர்கள் கடைசியாகக் கலந்துகொண்டதோ கலைவாணர் சிலைதிறப்பு விழா.

**– நடிகர் சிவகுமார்**

சிவாஜிகணேசன், எம்.ஜி.ஆர். போல நீண்ட காலம் திரையுலகில் நிலைத்திருந்து புகழ்பெறும் நடிகர்கள் இன்று யாரும் இல்லை. அதற்குக் காரணம் நாடகத் தொழில் நசித்துப் போய்விட்டதுதான்.

**– நடிகர் வி.கே. இராமசாமி**

திரைப்படங்களின் மூலமும் சமுதாய விழிப்புணர்ச்சியை உண்டாக்கமுடியும் என்று நிரூபித்தவர் கலைவாணர்..

**– திரு.ஏ. நடராஜன்**

எங்களால் மக்களைச் சிரிக்க வைக்க மட்டும்தான் முடிந்தது; கலைவாணரால் மக்களைச் சிரிக்கவைக்கவும், சிந்திக்க வைக்கவும் முடிந்தது.

**– நடிகர் செந்தில்**

முன்னாள் மன்னர்கள் முத்தமிழை வளர்க்க ஆட்சி செய்தார்கள்; இன்று முத்தமிழே ஆட்சி செய்கிறது; அதனால்தான் கலைவாணர் விழா இந்தனைச் சிறப்பாக நடக்கிறது.

**– நடிகர் எஸ்.ஏ. சந்திரசேகர்**

அழியாத வரலாற்றின் கிழியாத தாளாக விளங்குகிறார் கலைஞர் என்பதன் காரணமே, இப்படி மதிக்கப்பட வேண்டியவரை மதித்துப் பழகியதால்தான்.

**– அரசு மணிமேகலை**

கலைத்துறைக்கே ஆக்சிஜன் போன்றவர் நமது கலைஞர்; அதனால்தான் என்போன்றவர்களல்லாம் இந்தச் சமுதாயத்தில் இன்றைய தினம் மதிப்போடு வாழமுடிகிறது. அதற்கு வழிவகுத்தவரே கலைவாணர்தான்.

**– நடிகர் ராதாரவி**







வில்லேருழவரைப் பகைத்துக்கொண்டாலும் கொள்ளலாம், சொல்லேருழவரைப் பகைத்துக்கொள்ளக்கூடாது என்று குறளார் சொன்னதை மெய்ப்பித்த அரசு நடத்தும் இவ்விழாவில், என்போன்றோர் பங்கேற்பதில் பெருமை கொள்கிறோம்.

**– சாரதா நம்பிஆரூரன்**

எப்போதும் சிரித்துக்கொண்டே இரு என்றெழுதிக் கையெழுத்துப் போட்டார் ஒரு நடிகர்; அப்படிச் செய்தால் பைத்தியம் என்று கூறிவிடுவார்கள்; சிந்திக்கவும் செய் என்று சொன்னவர் கலைவாணர்.

**– எம்.என்.ராஜம்**

சிரிக்கவும் சிந்திக்கவும் செய்த பெருமை கலைவாணருக்கு மட்டுமல்ல; கலைஞருக்கும் உண்டு என்பதை நான் உணர்ந்திருக்கிறேன்.

**– நடிகர் விஜயகாந்த்**

சிரிப்பு நடிகர் பலரையும் உருவாக்கினவர் கலைவாணர்; காரணம் நம்மை யாரும் அசைக்க முடியாது என்ற தைரியம்தான். அதேபோல், பாடல் எழுதத் தெரிந்த கலைஞரே தன்படத்தில் என்னையும் பாட்டெழுதச் செய்தார். அத்தகைய துணிவு மிக்கவரின் நல்லாட்சியில் தமிழ்நாட்டு மக்களெல்லாம் மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

**– கவிஞர் வாலி**



மக்களை மகிழச் செய்வதை மாபெரும் தொண்டாகக் கருதினார் கலைவாணர்; அத்தகைய தொண்டனாக இருப்பதில் நானும் பெரும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

**– இயக்குநர் கே. பாலச்சந்தர்**

தம் நடிப்புத்திறமையால் நம்மையெல்லாம் சிரிக்கவைத்து, நாட்டைச் செழிக்கவைத்தவர் கலைவாணர். அவருக்கு விழா எடுத்துப் பெருமைகொள்கிறது இந்த அரசு.

**– மாண்புமிகு அமைச்சர்
திரு தமிழ்க்குடிமகன்.**

## வளரட்டும் நாடகக் கலை!

நாடகக் கலை வீழ்ந்துவிட்டது; அந்த நிலையை மாற்றியமைத்து, நாடகங்கள் தொடர்ந்து நடைபெற்று அவைகளைப் பார்த்து நடிகர்கள் உண்மையான நடிகர்களாக வளரவேண்டும்; அதற்கு அரசு உதவவேண்டும் என்று கலையுலகின் மூத்த நண்பரான வி.கே. ராமசாமி அவர்கள் இங்கே கேட்டுக் கொண்டார். இப்பொழுதுகூட நான் அந்தக் காரியத்தைச் செய்யத் தயாராக இருக்கிறேன். அதேநேரத்தில், வி.கே. ஆர். அவர்களையும் இங்குள்ள நடிகப் பெருமக்களையும் கலையுலக நண்பர்களையும் கேட்டுக்கொள்கிறேன் - இந்தக் கலைவாணர் அரங்கத்தையேகூட அதற்காக ஒப்படைக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. நாள்தோறும் அல்ல; வாரம் ஒரு நாடகமாவது இங்கே நடத்துகிறோம். என்று சொல்வீர்களேயானால் இலவசமாகக் கலைவாணர் அரங்கத்தைத் தருவதற்கே அரசு தயாராக இருக்கிறது. இதை வி.கே.ஆர். அவர்களும், இங்கே வீற்றிருக்கின்ற கலை உலகப் பெருமக்களும் ஒரு அறைகூவலாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கலைவாணர் பெயரால் கேட்டுக் கொள்கிறேன்.

**– மாண்புமிகு முதல்வர் கலைஞர்**

***(3.9.96 அன்று சென்னை - கலைவாணர் அரங்கில் நடைபெற்ற கலைவாணர் நினைவு நாள் விழாவின்போது .)***

# சுவைமிகு

## பெண் காவலர்கள் உடை மாற்றம்

**கா**வல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன்:

''பெண் போலீசார் தற்போது அணிந்திருக்கும் உடை அவர்களுக்கு இறுக்கமாக இருக்கிற ஒரு சூழ்நிலை காணப்படுகிறது. பெண் டாக்டர்கள், பெண் வக்கீல்கள் சேலை கட்டி மேலே கோட் அணிகின்றனர். அதுபோல் பெண் போலீசாரும் சேலை கட்டி, காக்கி கோட் போட்டு கொண்டையில் பூ வைக்க அனுமதிக்கவேண்டும்...''

உடனே அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் அளிக்கையில், ''எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிற அளவுக்கு அவர்கள் ஜோடிக்கப்படுவார்கள்'' என்று கூறியதும் பேரவையில் பலத்த சிரிப்பொலி எழுந்தது!

## மேல் மாடம் இல்லாத மனிதர்கள்

**த**மிழக சட்டமன்றத்தில் திரு. மு.க. ஸ்டாலின் (தி.மு.க.) அவர்கள் பேசும் போது கலைஞர் எழுதிய ''உதயசூரியன்'' நாடகத்தில் இருந்து சில பகுதிகளை மேற்கோள் காட்டினார்.

அதன் பின்னர் விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசிய முதலமைச்சர் அவர்கள், மு.க. ஸ்டாலின் பேசிய போது குறிப்பிட்ட பாடல்களைப் பாடினார். வசனங்களையும் மளமளவென்று பேசினார். தொடர்ந்து அவர் பேசும்போது - ''ஸ்டாலின் இதனைப் படித்துப் பார்த்துச் சொல்லி இருப்பார்; நான் இன்று ஞாபகத்தில் வைத்துச் சொல்கிறேன்'' என்று கூறினார்.

உடனே எழுந்த திரு. எஸ். திருநாவுக்கரசு (அ.தி.மு.க.) அவர்கள்:

''பழைய பாடல்கள் தன்னாலேயே ஞாபகத்துக்கு வருகிறதா, மேல் மாடத்தைப் பார்த்தவுடன் ஞாபகத்துக்கு வருகிறதா?'' என்று சிரித்தபடி கேட்டார்.

அவையின் மேல்மாடத்தில், அன்றைய தினம் முதல் அமைச்சர் அவர்களின் மனைவியார் வந்து அமர்ந்து இருந்ததுதான் இதற்குக் காரணம்.

உடனே எழுந்த முதல்வர் அவர்கள் சிரித்துக்கொண்டே - ''ஞாபகம் மாடத்தில்தான் இருக்கிறது. சில பேர்களுக்கு மாடமே இருப்பதில்லை'' என்று உச்சந்தலையில் கை வைத்துக் காட்டிப் பேசினார். உடனே சட்ட சபையில் எழும்பிய சிரிப்பலை அடங்க இரண்டு நிமிடம் பிடித்தது.

## பால்பண்ணைத் தொழிலாளர்கள்

**த**மிழக சட்டப்பேரவையில் தொழிலாளர் நலத்துறை மானிய விவாதத்துக்குப் பிறகு இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் ஒரு





கோரிக்கையை எழுப்பினார். அவர் கூறியதாவது:

''மாதவரம் பால் பண்ணையில் பணிபுரிந்த தொழிலாளர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் 1980-ல் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். அதில் ஒரு பகுதியினருக்கு 1989-ல் கலைஞர் முதல்வராக வந்த போது மீண்டும் வேலை கொடுத்தார். மீதி உள்ளவர்களுக்கும் வேலை தரவேண்டும். 1980 முதல் சர்வீஸ் போட்டு பணியில் சேர்ந்துக் கொள்ள வேண்டும். தாயிடம் தான் பால் கேட்டுக் குழந்தை அழும். அப்படி உங்களைக் கேட்கிறோம். கலைஞர் அவர்கள் இதில் நல்ல முடிவு அறிவிக்கவேண்டும்.''

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அதற்கு இவ்வாறு பதில் அளித்தார்:

''நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 1989-ஆம் ஆண்டு 489 தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்தோம். சுப்பராயனும் மற்ற தொழிற்சங்கத் தலைவர்களும் அமர்ந்து ஆலோசித்துத் தொழிலாளர்களின் பட்டியலைக் கொடுத்தால், அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள அரசு தயாராக இருக்கிறது.

1980ல் இருந்து சர்வீஸ் கணக்கிட்டு வேலை தரவேண்டும் என்று சுப்பராயன் கேட்டார். என் பெயரில் ''கருணை'' என்பது நீளமாக - அதிகமாக இருக்கிறது. ''நிதி'' என்பது குறைவுதான். எனவே நிதி நிலையைப் பொறுத்து எல்லாவற்றையும் யோசித்துச் செய்வோம். பால் இல்லை என்று சொல்கிற பாவி அல்ல இந்தத் தாய்.'' என்று முதல்வர் அவர்கள் கூறியதும் அனைவரும் சிரித்துவிட்டனர்.

## என்ன கோபமோ?

''**மா**ம்பழத்தில் ருசிமிக்கது சேலத்து மாம்பழமா, தருமபுரி மாம்பழமா? என்று பேரவைத் தலைவர்தான் ருசிபார்த்து முடிவுசொல்ல வேண்டும்'' என்றார் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள்.

திரு. தாமரைக்கனி (அ.தி.மு.க.) அவர்கள் உடனே எழுந்து ''எங்கள் ராஜபாளையத்தில் விளையும் பஞ்சவர்ணம் மாம்பழம் ருசிமிக்கது; நான் வேண்டுமானால் கொண்டுவந்து தருகிறேன்; பேரவைத் தலைவரே சாப்பிட்டுப் பார்த்துச் சொல்லட்டும்'' என்றார்.

சிரித்தபடி பேரவைத் தலைவர் இவ்வாறு சொன்னார் ''பொதுப் பணித்துறை அமைச்சருக்கும், தாமரைக்கனி அவர்களுக்கும் என்மீது என்ன கோபமோ தெரியவில்லை. நான் சர்க்கரை வியாதிக்காரன், என்னைப் போய் மாம்பழம் தின்னச் சொல்லுகிறார்கள்!''

அவர் இவ்வாறு கூறியதும் உறுப்பினர்கள் அனைவருமே சிரித்துவிட்டனர்.

# சொல்லாடல்

# சொன்னால் நம்பமாட்டீர்கள் !

— சின்ன அண்ணாமலை —

திருச்சியில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டு சென்னைக்கு ரயில் ஏற ஜங்ஷனுக்கு வந்தேன். முதல் வகுப்பு டிக்கெட் கையிலிருந்தாலும் அந்த வண்டியிலே இடமில்லாமல் அங்குமிங்கும் போய்க் கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு போலீஸ் ஆபீசர் என்முன்னால் வந்து '' உங்களை சி.எம். கூப்பிடுகிறார்'' என்றார். ''யார்-திரு அண்ணா அவர்களா?'' என்றேன். ''ஆம்'' என்றார். ''சரி'' என்று அவரைப் பின்பற்றி அண்ணா இருந்த கம்பார்ட்மெண்ட்டுக்குப் போனேன். அண்ணா என்னை அன்புடன் வரவேற்று, ''சென்னைக்குத் தானே?'' என்றார்.

''ஆம்'' என்றேன்.

''என்னுடன் பிரயாணம் செய்வதில் ஆட்சேபமில்லையே?'' என்றார்.

''ஆட்சேபமில்லை; ஆனால்.. தங்களுக்கு அசௌகரியமாக இருக்குமே?'' என்றேன்.

''எனக்கு ஒரு அசௌகரியமுமில்லை, சொல்லப்போனால் உங்களுக்குத்தான் அசௌ கரியமாக இருக்கும்'' என்றார்,' சிரித்தபடி.

''எனக்கென்ன அசௌகரியம்?'' என்றேன் நான்.

''சீக்கிரத்தில் தூங்கவிடாமல் வெகுநேரம் நான் பேசிக் கொண்டிருப்பேன்'' என்றார், அவர்.

''தங்கள் பேச்சைக் கேட்க எவ்வளவோ பேர் தவம் கிடக்கிறார்கள். வலிய வரும் சீதேவியை இழந்து விடுவேனா?'' என்று சொல்லி அவருடன் பிரயாணத்தைத் துவக்கினேன்; ரயில் நகர ஆரம்பித்ததும்,

''தங்களிடம் முதல்வகுப்பு டிக்கட் இருக்கிறதா?'' என்று கேட்டார்.

''வித்-அவுட்டில் வருவதாக நினைத்து விட்டீர்களா? இதோ எனது முதல்வகுப்பு டிக்கட்.'' என்று டிக்கெட்டைக்காண்பித்தேன்.

''என் தம்பிமார்களில் சிலர் இப்படி என்னுடன் ஏறிக்கொண்டு அந்தத் தைரியத்தில் டிக்கட் வாங்காமல் பிரயாணம் செய்ததுண்டு; அவர்களுக்காக நான் டிக்கட் வாங்கிவிடுவது வழக்கம்-அதனால்தான் கேட்டேன்.'' என்றார்.

''நான் உங்களை நம்பிப் பிரயாணம் செய்பவனில்லையே?''

''நீங்கள் சொல்லும் அரசியல் கருத்து எனக்குப் புரிகிறது. திருச்சிக்கு எங்கே வந்தீர்கள்?'' என்று கேட்டார்.

''ஒரு காங்கிரஸ் பொதுக்கூட்டத்திற்காக வந்தேன்'' என்றேன்.

''ரொம்பத் தாக்கிப் பேசினீர்களோ?'' என்று சொல்லிவிட்டு, ''நீங்கள் தாக்கிப் பேசினாலும் நானும் என் தம்பிமார்களும் கோபப்படுவதில்லை ; ஏனென்றால் அதிலுள்ள நகைச்சுவை எங்களைச் சிரிக்க வைத்து விடுகிறது.'' என்றார்.

''வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷிப் பட்டம்'' என்றேன்.

''அதுசரி, தி.மு.க. ஆட்சி எவ்வளவு நாள் இருக்குமென்று நினைக்கிறீர்கள்?'' என்று ஒரு எக்கச்சக்கமான கேள்வியைக் கேட்டார். நான் சிறிது யோசனை செய்தேன். ஆனால் அண்ணாவோ, ''எதற்கு யோசனை செய்





கிறீர்கள்? உங்கள் மனதில் இருப்பதைச் சொன்னால்தானே எனக்கும் சில விஷயங்கள் புரியும்'' என்றார்.

''நூல் தீருகிறவரை கழி சுற்றிக் கொண்டே யிருக்கும்'' என்றேன்.

''விளக்கம் தேவை'', என்றார்.

''இந்தி எதிர்ப்பு என்ற மாயை தீரும்வரை தி.மு.க. ஆட்சி இருக்கும்.'' என்றார்.

''இதுதான் காங்கிரஸ்காரர்களுடைய அபிப்பிராயமா?'' என்றார்.



''பெரும்பாலோருடைய எண்ணம்.'' என்றேன்.

''அதுசரி. 67 தேர்தலில் காங்கிரஸ் தோற்றதற்கு என்ன காரணம் என்று சிந்தித்தீர்களா?'' என்றார்.

''என் சொந்த அபிப்பிராயம் 62 தேர்தலில் தங்களைக் காஞ்சிபுரத்தில் தோற்கடித்ததுதான் 67-ல் காங்கிரஸ் தோற்றதற்குக் காரணம்.'' என்றேன்.

''எப்படி?'' என்றார்.

''தங்களை 62-ல் வெற்றிபெற விட்டிருந் தால், தாங்கள் இவ்வளவு முனைப்பாக வேலைசெய்து, தங்களுக்குப் பரம எதிரியான ராஜாஜிகூடவெல்லாம் சேர்ந்து கூட்டணி அமைத்திருக்கமாட்டீர்கள். எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கொண்டிருந்திருப்பீர்கள். காலம் ஓடியிருக்கும். இதை நான் அப்போதே காமராசரிடம் சொன்னேன். காஞ்சிபுரம் தேர்தல் கூட்டங்களில் பேசவும் மறுத்துவிட்டேன்.'' என்றேன்.

''தாங்கள் சொல்வது மனித இயல்பை ஒட்டிய சங்கதிதான். இருந்தாலும், மக்கள் எங்களை ஆட்சியில் அமர்த்தியபிறகு மக்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டாமா?''

''மக்களுக்கு மதிப்புக் கொடுப்போம். ஆனால், உங்கள் கட்சியை நாங்கள் மதிக்க முடியவில்லையே!'' என்றேன்.

''பந்தை காங்கிரஸ்காரர்களாகிய நீங்கள் எங்கோ வீசி எறிய, அது உங்கள் மீதே வந்து தாக்கும்போது நீங்கள் வேறு யாரையும் குறைகூறிப் பயன் இல்லை!'' என்றார்.

பின்னர் இருவரும் படுத்துத் தூங்கி விட்டோம். காலை எழுந்ததும் செங்கற்பட்டு ஸ்டேஷனில் அன்புடன் எனக்குக் காலை ஆகாரத்தை. அவரே பரிமாறினார். அது முடிந்ததும், என்னிடமிருந்த ஒரு புத்தகத்தை வாங்கிப் பார்த்தார். அது நான் எழுதிய நாவல், தலைப்பு ''மானமே பெரிது,'' என்பதாகும். ''இந்த நாவல் நம் சந்திப்பின் நினைவாக என்னிடமே இருக்கட்டும், அதில் அன்பளிப்பு என்று எழுதிக் கையெழுத்துப் போட்டுத் தாருங்கள்'' என்று புத்தகத்தை நீட்டினார். கையெழுத்துப் போட்டுக் கொடுத்தேன். மாம்பலம் ஸ்டேஷன் வந்ததும் அண்ணாவிடம் விடைபெற்றுக்கொண்டு ரயிலைவிட்டு இறங்கினேன்.

சொன்னால் நம்பமாட்டீர்கள், உண்மையில் என் மனதில் அதுவரையில் அண்ணாவைப் பற்றி இருந்த துவேஷ எண்ணம், ஸ்டேஷனை விட்டு ரயில் போனதைப் போல் என் இதயத்தை விட்டுப் போய்விட்டது.

– 'குமுதம்' இணைப்பு – 1970.

# கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம்



சென்னை மாநகரம் தமிழ் நாட்டின் தலை நகரமாகவும், நம் நாட்டின் நான்காவது பெரிய நகரமாகவும் உள்ளது. சென்னை மாநகரம் மற்றும் சென்னைப் பெருநகரப் பகுதி ஆகியவற்றின் மக்கட் தொகை முறையே 40 இலட்சம் மற்றும் 60 இலட்சமாகும்.

சென்னை மாநகரின் மைய வணிகப் பகுதியான ஜார்ஜ் டவுனில், இரும்பு, காய்கறிகள், பழவகைகள், மலர், எழுதுப் பொருட்கள் மற்றும் காகிதம், துணிவகைகள், தானிய வகைகள் ஆகியவற்றின் மொத்த விற்பனைகளும் மற்றும் குடியிருப்புப் பகுதிகள், அலுவலகங்கள் ஆகியவை குவிந்துள்ளன. இப்பகுதிக்கு வருவோர் அதிகமாகி வருவதால் இட நெருக்கடி, சுகாதாரக் குறைவு, போக்குவரத்து நெரிசல் போன்ற இன்னல்கள் ஏற்படுகின்றன.

இந்த மைய வணிகப் பகுதிக்குப் பெரிய அளவில், பொது மக்களால் மட்டுமின்றி நேரடித் தொடர்புடைய எல்லாத் தரப்பினர்களும், வியாபாரிகள், தொழிலாளர்கள், வாகனங்கள், ஆகியவற்றால் தூய்மை பாதிக்கப்படுகிறது. எனவே மேற்கூறப்பட்ட மைய வணிகப் பகுதியின் இடையூறுகளைச் சாத்தியமான முறையில் களையும் பொருட்டு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நகரத்திலிருந்து அதிக தூரத்தில் இல்லாத மற்றும் நெரிசல் இல்லாத இடங்களில் மொத்த விற்பனைகளுக்கு ஒரு புதிய அங்காடி வளாகத்தையும் மற்றும் நகர அளவினான பேருந்து மற்றும் சரக்குந்து முனையங்களையும் அமைக்கத் திட்டமிட்டது. அந்த வகையில், ஜார்ஜ் டவுன் பகுதியின் நெரிசலைத் தவிர்ப்பதற்கும் மற்றும் அப்பகுதிகளில் சுகாதாரமான சூழ்நிலையை

**சென்னை–கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் 28.8.96 அன்று திறந்து வைக்கப்பட்டது. காய், கனி, மலர் அங்காடிப் பிரிவுகளுக்கு முறையே பெரியார், அண்ணா, காமராஜர் பெயர்களை அப்போது அவர் சூட்டினார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து:**

**"கொத்தவால்சாவடியில் மிகுந்த போக்குவரத்து நெரிசலில் 4 ஏக்கர் பரப்பளவில் கடைகளை வைத்திருந்த வியாபாரிகளுக்கு, 300 ஏக்கர் பரப்பளவில் வசதியாக வியாபாரம் செய்வதற்குரிய ஏற்பாடுகள் இங்கு செய்யப்பட்டுள்ளன.**

**எங்களுக்கு வீட்டு வசதி தேவை என்று வியாபாரிகள் கோரினர். அவர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தரப்படும்.**

**இரண்டு நாட்களுக்கு முன்பு அதிகாலை 5 மணிக்கு வந்து இந்த அங்காடி வளாகத்தில் கட்டப்பட்டுள்ள கடைகள் முழுவதையும் சுற்றிப் பார்த்தேன். கழிப்பறைகள் மேலும் அதிகமாகக் கட்டுவதற்கான யோசனைகளைக் கூறியுள்ளேன். வீடுகள் கட்டுவதற்கான இடம் குறித்தும் பரிசீலித்தேன்.**

**இந்த மொத்த விற்பனை அங்காடியின் விற்பனையை ஒழுங்குபடுத்தவும், பராமரிக்கவும் அரசு அதிகாரிகள், வியாபாரிகள்-சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய ஏழுபேர் கொண்ட சந்தை மேலாண்மைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அங்காடியின் பராமரிப்புச் செலவு முழுவதையும் ஓராண்டுக்கு அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வியாபாரிகள் கோரினர். அங்காடியைப் பராமரிக்கத் தேவையான முழு ஒத்துழைப்பை எம்.எம்.டி.ஏ.வும், அரசும் அளிக்கும்.**

**கொத்தவால் சாவடி காரணமாகத் தற்போது சுகாதாரக் கேட்டுடன் பாரிமுனை பேருந்து நிலையம் விளங்குகிறது. கோயம்பேட்டில் பேருந்து நிலையம் அமைக்கப்படும். ஏற்கெனவே பேருந்து வசதி இருந்தாலும், கூடுதல் பேருந்து வசதிக்கு அரசு ஏற்பாடு செய்யும்".**







உருவாக்கும் பொருட்டும் கோயம்பேட்டில் அழுகு பொருட்கள், துணிவகைகள், தானிய வகைகள் ஆகியவற்றிற்கான அங்காடி வளாகமும், சாத்தான்காட்டில் இரும்பு மற்றும் எஃகு அங்காடி வளாகமும், மாதவரத்தில் பேருந்து மற்றும் சரக்குந்து முனையமும் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

**வியாபாரிகள் விருப்பம்**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இத்திட்டத்தின் நோக்கங்களை வியாபாரிகளின் சமூகத்தினர்களுக்கு எடுத்துரைத்திருந்தது. வியாபாரிகளில் பெரும் பகுதியினர் கோயம்பேடு செல்வதற்குத் தங்கள் எண்ணத்தை மட்டுமின்றி தங்கள் விருப்பங்களையும் தெரிவித்திருந்தனர். இந்த வியாபாரிகள், இந்தத் திட்டம் அவர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அளிக்கவிருக்கும் பயன்பாடுகளை மட்டுமின்றி அவர்களுக்குத் தற்போதைய இடங்களில் கிடைக்காத, ஆனால் புதிய அங்காடியில் கிடைக்கவிருக்கும் உடைமை-உரிமையின் பாதுகாப்பினை உணர்ந்தனர். மேலும் அவர்கள் இதைத் தங்கள் எதிர்காலத்திற்குச் செய்யும் ஒரு முதலீடாகவே நினைத்தனர்.

**கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம்**

கோயம்பேட்டில் 295 ஏக்கர் நிலப் பரப்பளவில், இந்த மொத்த விற்பனை அங்காடி வளாகமானது, அழுகு பொருட்கள் மற்றும் துணிவகைகள் ஆகியவற்றின் மொத்த விற்பனைகளையும் மற்றும் அதனுடன் கூடிய தேவையான வசதிகளையும் உள்ளடக்கியது. இத்திட்டத்தின் அமைவிடம் அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் 60.04 ஏக்கர் நிலப்பரப்புகளையும் மற்றும் தனியார் வசமான 235.68 ஏக்கர் நிலப்பரப்பினையும் கொண்டது.

இதுவரை 166.05 ஏக்கர் தனியார் வசமான நிலப்பரப்பு கையகப்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் மீதமுள்ள 69.63 ஏக்கர் நிலப்பரப்பு, பல்வேறு நில எடுப்பு நிலைகளில் உள்ளது. கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் ஒட்டியுள்ள பகுதிகள் கையகப்படுத்தப்பட்டவுடன், தானிய அங்காடி (சுமார் 80 ஏக்கர் நிலப்பரப்பளவில்) மற்றும் துணி அங்காடி (சுமார் 22 ஏக்கர் நிலப்பரப்பில்) ஆகியவற்றின் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

முதல் கட்டமாக, ரூபாய் 77 கோடி பொருட்செலவில், மலர் 456 கடைகள், கனி 436 கடைகள் மற்றும் காய்கறி 1422 கடைகள் ஆகியவற்றைக் கொண்ட அழுகு பொருள் அங்காடிகளில் விரிவாக்கம் மேற்கொள்ளப் பட்டது. இவ்வங்காடிகளில் கட்டப்பட்டுள்ள கடைகளின் தரைப்பரப்புகளின் அளவு 150 சதுர அடியிலிருந்து 2400 சதுர அடி வரை வேறுபடுகிறது. இங்கு உணவகங்கள், பெட்டிக்கடைகள், கிடங்குகள், காவல் நிலையம், தீயணைப்பு நிலையம், தொலைபேசி இணைப்பகம் மற்றும் இதர வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. இந்தக் கடைகள் 1987-ஆம் வருடத்திலிருந்து ஜார்ஜ் டவுன் வியாபாரிகளுக்குச் சலுகை

விலையிலும் மற்றும் வேறு இடங்களில் வியாபாரம் செய்துவரும் பிற வியாபாரிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன. இந்தியாவில் வேறு இடங்களில், விவசாயப் பொருட்கள் உற்பத்திச் சந்தைக் குழுவால் விரிவு செய்யப்படும் அழுகுபொருட்களுக்கான அங்காடிகள் போல் அல்லாமல் இந்தப் புதிய அங்காடி, அதன் வடிவ அமைப்பிலும் அங்கு உள்ள வசதிகளைப் பொறுத்த மட்டிலும் தன்னிகரற்றதாகும்.

இம்மூன்று பொருட்களுக்கான (மலர், கனி மற்றும் காய்கறி) அழுகுபொருள் அங்காடிகளைத் திட்டமிடுதலிலும் மற்றும் வடிவமைப்பதிலும் அவைகளின் தனிப்பட்ட இயற்கைத் தேவைகளான உட்புற இடவசதிகள், விற்பனைப் பகுதிகள் சரக்குகளை ஏற்றி இறக்கும் பகுதிகள், சேமித்து வைக்கும் பகுதிகள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு போதுமான வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் இவைகள், பொதுப்பணிகளான பேருந்து வசதிப் பகுதிகள், உணவகங்கள் மற்றும் சரக்குந்து வாகனங்களை நிறுத்தி வைக்கும் பகுதிகள் ஆகியவற்றுடன் தொடர்புடையன. அழுகும் தன்மையுடைய உணவுப் பொருட்களினால் ஒரு குறித்த அளவில் திடக்கழிவுகள் உற்பத்தியாகும். இவற்றினைச் சுத்தம் செய்யும் பொருட்டு, பாதசாரிகள் பயன்படுத்தும் பகுதிகள் மற்றும் பொருட்கள் உள்வந்து மற்றும் வெளியே செல்லும் வழிகளைப் பாதிக்காத வண்ணம் கடைகளின் பின்புறத்தில் தனிச்சந்துகள் அமைக்கப் பட்டுள்ளது. இந்த மனைப்பிரிவு, பொருட்கள் உள்வரும் பணியும், பொருட்கள் வெளியே செல்லும் பணியும் பாதிக்கப்படாமல், அவைகள் தனித்தனியாகப் பிரிக்கப்படும் வகையில் விரிவு செய்யப்பட்டுள்ளது.

**சந்தையைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய சட்டம்**

இச்சந்தைகளைப் புதிதாக உருவாக்குவதற்கோ, அல்லது வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கோ தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கோ அல்லது அரசு சார்ந்த நிறுவனத்திற்கோ சட்ட வழிமுறைகள் எதுவும் கிடையாது. எனவே, அவ்வப்போது குறித்துரைக்கப்படும் பொருட்களுக்கான மொத்த விற்பனை அங்காடிகளின் இருப்பிடத்தை ஒழுங்குமுறைப் படுத்தவும், இச்சந்தைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் மேலாண்மை செய்யவும் உதவும் சந்தைக்குழுவை நிறுவுவதற்கும் மற்றும் இது சம்பந்தமான இதர நடவடிக்கைகள் எடுக்க வழிசெய்யவும் ஒரு புதிய சட்டத்தை உருவாக்க அவசியம் நேரிட்டது. ''தமிழ்நாடு குறித்துரைக்கப்பட்டப் பொருட்களின் சந்தைகள் (இருப்பிடத்தை முறைப்படுத்துதல்) சட்டம்'' என்ற ஒரு சட்டம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் இயற்றப்பட்டு, அது தற்போது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

**சந்தை மேலாண்மை**

இந்த அங்காடி வளாகம், மேற்குறிப்பிட்ட சட்டத்தின் மூலம் அமைக்கப்படும் சந்தை மேலாண்மைக் குழுவால் நிர்வகிக்கப்படும். இக்குழுவில் அரசு அதிகாரிகளும், மற்றும் வியாபாரிகளின் பிரதிநிதிகளும் அங்கத்தினராக இருப்பர். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், இந்த அங்காடிகளின் வளர்ச்சி முழுவதுமாக நிறைவு பெற்றவுடன் அங்காடியும், மற்றும் பிற பொது சொத்துக்களையும், சந்தை மேலாண்மைக் குழுவிடம் அதனைப் பராமரிப்பதற்கு ஒப்படைத்துவிடும்.

**நிதி**

முதற்கட்டமாகச் செயற்படுத்தப்படும் அழுகு பொருட்கள் அங்காடி வளாகத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 77 கோடியாகும். இத்திட்டத்திற்கு, அரசு கடனாக ரூ. 14.32 கோடி மற்றும் ஹட்கோ கடனாக ரூ. 15 கோடியும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. இந்தத் திட்டத்திற்குத் தேவைப்படும் நிதியின் எஞ்சியுள்ள பகுதியானது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் திட்ட மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்தும், ஒதுக்கீடுதாரர்களிடமிருந்தும் தவணை முறையில் வசூலிக்கப்படும் நிதியிலிருந்தும் பெறப்படுகிறது.







# எங்கள் ஊர் பிரச்சினை

***பிரச்சினை :***

*எங்கள் ஊரான மேட்டூர் அணை தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி, இங்கு படித்தவர்கள் நிறைந்துள்ளனர். இங்கு மேநிலைப்பள்ளிகளும், உயர்நிலை மற்றும் நடுநிலை, துவக்கப்பள்ளிகளும் பல உள்ளன. இது வட்டத் தலைமையிடமாகவும், சார் ஆட்சியர் அலுவலகம் கொண்டதாகவும் உள்ளது. இங்கு எல்லா வசதிகளும் இருந்தும்கூட இப்பகுதிக்கெனத் தனியாகப் பொது நூலகம் இன்றுவரை இல்லை. குக்கிராமங்களில் கூட இன்று பொது நூலகம் அமைந்துள்ளதைப் பார்க்கமுடிகின்றது. ஆனால் வரலாற்றுச் சிறப்பு மிக்க அணையைக் கொண்டுள்ள மேட்டூரில் பொது நூலகம் இல்லாதது வருந்தத் தக்கது. இதற்குத் தாங்கள் ஆவன செய்தால் மேட்டூர் வாழ் படித்த மக்கள் நன்றி உடையவர்களாக இருப்பார்கள்.*

*கா.பெரியசாமி, எம்.ஏ., பி.எட்.,*
*எல்.டி.சி. 5, இந்திராநகர்,*
*மேட்டூர் அணை - 636 401.*

***பிரச்சினைக்கான தீர்வு:***

*பார்வையில் காணும் அரசுக் கடிதத்தில் 625 ஊர்ப்புற நூலகங்கள் அனுமதிக்கப்பட்டுள்ள அரசு ஆணையில் மேட்டூர் அணையிலும் புதிய நூலகம் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு புதிய நூலகம் திறப்பதற்கு அவ்வூர் பொதுமக்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து தரும் பட்சத்தில், நூலகம் உடனடியாகத் திறக்க ஆவன செய்யப்படும்.*

*1. நூலகம் உடனடியாகத் திறக்க வாடகையற்ற இலவசக் கட்டிடம். 2. பிற்காலத்தில் இந்நூலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட குறைந்த பட்சம் 5 சென்ட் காலிமனை. 3. குறைந்தபட்சம் ரூ. 2.000/- மதிப்புள்ள தளவாடங்கள் 4. குறைந்தபட்சம் 200 உறுப்பினர்கள். 5. குறைந்தபட்சம் ரூ. 1000/- செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.*

*மேற்கூறிய நிபந்தனைகளை மேட்டூர் அணை ஊர்பொதுமக்கள் நிறைவேற்றித்தரும் பட்சத்தில் உடனடியாக நூலகம் திறக்க ஆவன செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*மேலும், மேட்டூர் அணையில் கிராமப்புற நூலகம் திறப்பதற்கு மேற்கூறிய நிபந்தனைகளை நிறைவேற்றி, அதற்கான கருத்துருவை அனுப்பிவைக்குமாறு சேலம் மாவட்ட நூலக அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இரா. கண்ணன். எம்.ஏ., எம்.எட்.*
*பொது நூலக இயக்குநர்,*
*பொது நூலகத்துறை,*
*சென்னை -2*

***பிரச்சினை:***

*எங்கள் ஊர், அலங்கா நல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட தெத்தூர் கிராமம் ஆகும். மேற்படி ஊரைச்சுற்றி 13 சிறு ஊர்களும், 15 ஆயிரத்திற்கும்மேற்பட்ட மக்கள் தொகையும் உள்ளது. இவ்வூரில் அரசு பொது மருத்துவமனை 10 ஆண்டுகளுக்கு முன் டாக்டர், நர்ஸ் தங்கி இருந்து, பொதுமக்களுக்குச் சிறப்பாகச் சேவை செய்துவந்தனர். ஆனால், தற்போது வெறும் மருத்துவ இடம்தான் உள்ளது. டாக்டரோ அல்லது நர்ஸ்சுகளோ தங்குவது இல்லை. அவசர பேறுகால வயிற்றுப்போக்கு, பூச்சிக்கடி இதுபோன்ற அவசர நேர காலங்களில் முதலுதவி சிறிதும் கிடையாது. அவ்வாறு செல்வதென்றால் 30 கி.மீட்டர் தூரமுள்ள மதுரைக்குத்தான் செல்லவேண்டும். அப்படி செல்லவேண்டுமானால் போக்குவரத்து பஸ் வசதியோ, தொலைபேசி வசதியோ கிடையாது. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நேரத்தில் சிகிச்சை செய்து உயிர்களைக்காப்பாற்றிட, டாக்டர்களையோ அல்லது நர்ஸ்சுகளையோ அந்த அந்த இடங்களிலேயே தங்கி இருந்து சேவை புரிந்திடச் செய்ய அரசு முன்வரவேண்டுகிறேன்.*

*பெ. பால்ராஜ், தலைவர்,*
*தெத்தூர் அஞ்சல், பாலமேடு (வழி)*
*மதுரை மாவட்டம் - 625 503*

***பிரச்சினைக்கான தீர்வு:***

*பார்வையில் கண்ட கடிதத்தில் கேட்டுள்ளபடி, பாலமேடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உள்ளிட்ட தெத்தூர் துணை சுகாதார நிலையம் அரசு கட்டிடத்தில் நல்ல முறையில் இயங்கி வருகிறது. இந்தச் சுகாதார நிலையத்தில் சுகாதாரச் செவிலியாகத் திருமதி குணசீலி நவநீதம் அவர்கள் 1.12.88 முதல் தம் பணிகளைச் செய்து வருகிறார். அவர் தெத்தூர் நாராயணபுரம், கோவிங்கு பட்டி, கங்காமுத்தூர் ஆகிய 4 கிராமங்களுக்குமாகச் சேர்த்து 4154 மக்கள் தொகைக்குத் தாய்சேய் நல மற்றும் தடுப்பூசிப் பணிகளைச் செய்துவருகிறார். அவர் அந்த ஊரில் தங்கிப் பணி செய்து வருகிறாரா? உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறாரா? என்பது போன்ற விவரங்களை அறிந்து, துணை சுகாதார நிலையத்திலேயே தங்கி தம் பணிதனைச் செய்ய சுகாதார செவிலியர்களுக்குத் தக்க அறிவுரை வழங்குமாறு மதுரைத் துணை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.*

*டாக்டர் விஜயராகவன், இயக்குநர்,*
*பொது சுகாதாரம் மற்றும்*
*நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம், சென்னை - 600 006.*





# அறிவியல் துளிகள்

பச்சைத் தாவரங்களில் மின்சாரம் பாயும்; காரணம் அது ஈரப்பசையுள்ளதாக உயிரோடு இருக்கிறது. ஆனால், உலர்ந்த மலர்ப் பலகையில் மின்சாரம் பாய்வதில்லை; காரணம் அதில் உள்ள ஈரப்பசைக்குக் காரணமான எல்லா செல்களும் இறந்துவிடுகின்றன.

நாம் பூமியிலிருந்து பார்த்தால், மற்றகோள்களெல்லாம் ஒளியுடன் காணப்படுகிறதல்லவா? அதேபோல எந்தக் கோளிலிருந்து பார்த்தாலும் பூமியும் அதேபோல் ஒளிமயமாகத்தான் காணப்படும். இதற்குக் காரணம் பூமியும் சூரிய ஒளியைப் பிரதிபலிப்பதுதான்.

பூத்தாலும் காயா மரமும் உள என்கிறோமே? செம்பருத்தி, போகன் வில்லா போன்ற செடிகள் கூட அவ்வகையைச் சேர்ந்தவைகளேயாகும்; பூக்கும் - ஆனால் காய்க்காது. காலகாலமாக இவை விதையிலா இனப்பெருக்கம் செய்வதே இதற்குக் காரணம் என்கிறார்கள் அறிவியலறிஞர்கள். அதாவது அச்செடிகளின் தண்டை வெட்டியே பல தலைமுறையாகப் பழகிவிட்டதால் மலடாகி விடுமாம் அவை. ஆகவேதான் பூக்கும், ஆனால் காய்க்காது என்கிறார்கள்.

விண் கற்கள் என்று எரி நட்சத்திரங்கள் குறிப்பிடப்படும்; இவற்றைப் பார்க்கக்கூடாது என்று சொல்லுவார்கள்; ஏன் தெரியுமா? அவை அதிக ஒளியுடனிருந்தால் காணும் கண்களின் பார்வை பாதிக்கப்படும். இதனால் பொதுவாக அப்படிச் சொல்லுவது வழக்கம்.

மூளைக்காய்ச்சல் என்பது குழந்தை பிறந்த சில மணி நேரங்களில், சில நாட்களில், சில வாரங்களில் ஏற்படும்; இதைவிடக் கொடுமை, பிறக்கிற குழந்தைக்கே இருப்பதுமுண்டு என்கிறார்கள். மூளையின் மேலே உள்ள ஜவ்வு அழற்சி காரணமாக Nennigitis தவிர - மூளையின் உட்புறம் ஏற்படும் அழற்சி காரணமாக Encephalitis என்ற இரண்டு வகையான மூளைக் காய்ச்சல்கள் உண்டாகும். பலவகைக்கிருமிகள் காரணமாகவோ அல்லது வைரஸ் காரணமாகவோ கூட இந்நோய் வரக்கூடும்.

தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தைகளை விட புட்டிப்பால் குடிக்கிற குழந்தைகளுக்கே வயிற்றுப் போக்கு போன்ற நோய்கள் வரும் வாய்ப்பு 14 மடங்கு அதிகமாம்; டில்லியில் மருத்துவ மேதைகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பூமியின் மேல் மண்டல காற்று மண்டல அடுக்குகளில் ஒருவகை நீலநிற ஒளிச் சிதறல்கள் உண்டு; இதனாலேயே வானம் நீல வண்ணமாகக் காணப்படுகிறது. ஆனால் விண்வெளியில் வானம் கறுப்பாகத் தான்இருக்கும்.

## உள்ளாட்சித் தேர்தல்

தமிழ்நாட்டில் வருகிற அக்டோபர் 9, 12 ஆகிய நாட்களில் இரண்டு கட்டமாக உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும். இதுபற்றிய அதிகார பூர்வமான அறிக்கை செப்டம்பர் 3 ஆம் தேதி வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டில் 384 ஊராட்சி ஒன்றியங்கள், 28 மாவட்டப் பஞ்சாயத்துகள், 634 நகரப் பஞ்சாயத்துகள், 102 நகராட்சிகள், 6 மாநகராட்சிகள் இருக்கின்றன. 4.2 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க இருக்கின்றனர்.

உள்ளாட்சித் தேர்தல் அட்டவணை

| | |
|---|---|
| மாநிலத் தேர்தல் ஆணையம் தேர்தல் அறிக்கை வெளியிடுதல் | 3.9.1996 |
| தேர்தல் நடத்தும் அதிகாரி தேர்தல் அறிவிப்பு வெளியிடுதல் | 3.9.1996 |
| வேட்புமனு தாக்கல் | 3.9.1996 |
| கடைசி நாள் | 10.9.1996 |
| வேட்புமனு பரிசீலனை | 11.9.1996 |
| வேட்புமனுவைத் திரும்பப்பெற கடைசி நாள் | 13.9.1996 |
| முதற்கட்ட வாக்குப் பதிவு | 9.10.1996 |
| இரண்டாம் கட்ட வாக்குப் பதிவு | 12.10.1996 |
| வாக்கு எண்ணிக்கை | 14.10.1996 |
| தேர்தல் முடிவுறும் நாள் | 17.10.1996 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றத்தின் முதல் கூட்டம் உறுதிமொழி எடுத்தல் மற்றும் தலைவர் / துணைத்தலைவர் / துணை மேயர் தேர்தல் | 25.10.1996 |

## பாராட்டு விழா

தலைமைச் செயலகச் சங்கம் சார்பில், தலைமைச் செயலக வளாகத்தில் 27.8.'96 அன்று நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டார். சங்கத் தலைவர் திரு. முருகேசன் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

## சட்டப் பேரவை

தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதல் கூட்டத்தொடர் மே மாதம் 22ஆம் தேதி முதல் ஜூன் 1 ஆம் தேதி வரை நடைபெற்றது. இரண்டாவது கூட்டத் தொடர் ஜூலை 16ஆம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 31 வரை நடைபெற்றது. மாலையிலும் 2 நாள் நடைபெற்றது.

ஆகமொத்தம் 199 மணி நேரம் நடந்த இக் கூட்டத்தில், எதிர்க்கட்சியினர் மட்டுமே 63 மணி நேரம் பேசியிருக்கின்றனர். அவர்களுக்கு 294 முறையும், ஆளுங்கட்சியினருக்கு 184 முறையும் வாய்ப்பளிக்கப்பட்டது. இக்கூட்டத்தொடரில் 60 மானியக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

நிறைவு நாளன்று பேசிய சட்டமன்றத் துணைத்தலைவர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்- ''ஒன்பதாவது' முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நான்காவது முறையாக முதலமைச்சராகியுள்ள கலைஞர் வீற்றிருக்கும் இப்பேரவையில் நாமெல்லாம் உறுப்பினராக இருப்பது நமக்கெல்லாம் பெருமை'' என்று குறிப்பிட்டார்.

இப்பேரவைக் கூட்டத்திற்கு 61,265 பார்வையாளர்கள் வருகை தந்திருந்தனர்.

## செய்திச் சரம்

### காவிரி நீர் பேச்சுவார்த்தை

காவிரி நதிநீர் பற்றிய இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தை 4.9.96 அன்று பெங்களூரில் நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு. ஜே.எச். படேலும் இப்பேச்சு வார்த்தையை நடத்தினர்.

அடுத்த சுற்றுப் பேச்சு வார்த்தை இம்மாத இறுதியில் நடைபெறும்.

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின் முடிவில் செய்தியாளர்களைச் சந்தித்த நமது முதல்வர் அவர்கள், ''இரு மாநிலங்களையும் சேர்ந்த விவசாயிகளின் நலன் காப்பதாக, இரண்டுமாநிலங்களின் நல்லெண்ண உணர்வுகளை நீடிப்பதாகவே எங்கள் பேச்சுவார்த்தை நடந்தது. நிச்சயமாக நல்ல தீர்ப்பை எதிர்நோக்கிக் கொண்டிருப்பதாகவே நான் உணர்கிறேன்'' என்றார். அப்போது கர்நாடக முதல்வர் அவர்களும் உடனிருந்தார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களோடு காவிரி நதிநீர் குறித்த பேச்சுவார்த்தைக்காக மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் திரு. ஆர்க்காடு வீராசாமி, திரு. துரைமுருகன், திரு. ஆலடி அருணா ஆகியோருடன் அரசு உயர் அதிகாரிகளும் சென்றிருந்தனர்.





# சென்னைக்கு கிருஷ்ணா நீர்

கிருஷ்ணா நீர் எப்போது வரும் என்று உறுப்பினர்களும், சென்னை நகரத்து மக்களும் பெரிதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற நேரம் இது. இந்தத் திட்டம் 1977-ஆம் ஆண்டு வாக்கில் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும், ஆந்திரா மாநிலத்தினுடைய முதல்வராக இருந்த அருமை நண்பர் என்.டி.ஆர். அவர்களும் மற்றும் இரண்டு மாநில முதலமைச்சர்களும் கலந்துகொண்டு, அன்று பிரதமராக இருந்த அன்னை இந்திராகாந்தி அவர்களுடைய முன்னிலையில் சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட திட்டம். அந்த ஒப்பந்தமும் அன்றைக்கு ஆனது.

ஆனால், பல ஆண்டுகள் அந்தத் திட்டம் கிடப்பிலே இருந்து இடையிடையே எழுந்து நடமாடி, வருமா, வராதா என்கிற அளவிற்கு எதிர்பார்த்திருந்த இந்தச் சூழ்நிலையில் கழக ஆட்சி, 1989-90-ல் பொறுப்பேற்ற நேரத்தில் அப்போது ஆந்திராவிலே முதலமைச்சராக இருந்த ராமராவ் அவர்களையும் அதன் பின்னர் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற இன்றைய தமிழக ஆளுநர் சென்னாரெட்டி அவர்களையும் அடிக்கடி சந்தித்து, அந்தத் திட்டத்தை விரைவுபடுத்தியது; தொடர்ந்து சந்திக்க இயலாத ஒரு சூழ்நிலையில், ஆட்சி கலைக்கப்பட்டது; இப்போது முன்பிருந்த ஆட்சி தங்களால் இயன்ற அளவிற்கு முழுவதும் இல்லாவிட்டாலும், ஓரளவு இந்தத் திட்டத்திற்கான வசதிகளைப் பெருக்குகின்ற முயற்சியிலே ஈடுபட்டாலும்கூட முழுமை பெறாது இருந்த இந்தச் சூழ்நிலையில், இன்றைக்குத் தமிழக அரசு ஆந்திர அரசோடு கலந்து பேசியது.

இந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்ற வேண்டும் என்று கேட்ட நேரத்திலே 15 டி.எம்.சி. என்பதிலே, முதல் கட்டமாக 3 டி.எம்.சி.தான் தர முடியும் என்றும், அப்படி ஒரு ஒப்பந்தத்திற்கு ஏற்கெனவே இருந்த அரசு கையெழுத்துப் போட்டுக் கடிதமே அனுப்பிவிட்ட காரணத்தால், எங்களுக்கு இருந்த சந்தேகத்தின் காரணமாகப் பொதுப்பணித்துறை அமைச்சர் துரைமுருகன் ஐதராபாத்திற்கே செல்ல நேரிட்டு - ஒரு புதிய ஒப்பந்தம் போல, 15 டி.எம்.சி. தருகிறோம். முதல் கட்டமாக 3 டி.எம்.சி. தருகிறோம் என்று அவர்கள் ஒப்புக்கொண்டு அந்த முதல் கட்டமான 3 டி.எம்.சி. தண்ணீர் ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அவர்களுடைய முயற்சியால் சென்னை மாநகருக்கு வர இருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– முதல்வர் கலைஞர்
28.8.'96 அன்று சட்டப் பேரவையில்
ஆற்றிய உரையிலிருந்து.





'ரக்ஷா பந்தன்' விழா வினையொட்டி மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் கையில் ராஜஸ்தான் சங்கத்தைச் சேர்ந்த சிறுமியர் ராக்கி அணி வித்தனர் (28.8.96).

ஆசிரியர் நாள் விளையாட்டுப் போட்டி மற்றும் பரிசளிப்பு விழாவினை சென்னை எழும்பூர் இராசரத்தினம் விளையாட்டுத் திடலில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் தொடங்கி வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார் (3.9.96).



# படமும் செய்தியும்



பெங்களூர் சென்ற மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை, மாண்புமிகு கர்நாடக மாநில முதல்வர் திரு. ஜே.எச். படேல் அவர்கள் அன்புடன் அந்த மாநில முறைப் படி வரவேற்றார்கள் (4.9.96).



கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 125-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சென்னையில் அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் மாலை அணி வித்து மரியாதை செலுத்தினார். சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் திரு. எஸ். இராமகிருஷ்ணன், உடன் உள்ளார் (5.9.96).

உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையின்படி, தமிழகத்திற்குக் காவிரிநீரை வழங்குவது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு. ஜே.எச். படேல் அவர்களும் பெங்களூரில் உள்ள விதான் சௌதாவில் பேச்சு வார்த்தை நடத்தினார்கள் (4.9.96).



தமிழ்நாடு வர்த்தகக் கழகம் சார்பில் திருச்சியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்குத் தமிழ்நாடு வர்த்தகக் கழகத் தலைவர் திரு. ஜே.ஜே.எல். ஞானராஜ் செங்கோல் வழங்கினார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு என். வீராசாமி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு ஆகியோர் அருகில் உள்ளனர் (2.9.96).



# புரியவில்லை

-சாராதோமஸ்

பூர்வாஷ்ட நட்சத்திரம் இப்பொழுதுதான் உதித்திருக்கிறது. தேவகி அம்மாவிற்கு நிலைகொள்ளவில்லை. ஒரே கவலை நாளைய பொழுது விடிவதற்குள் செய்வதற்கு இன்னமும் நூறு காரியங்கள் இருக்கின்றன. உதவி செய்ய காரியஸ்தர் ராமன் நாயரும் வேலைக்காரி சாரதாவும் இருக்கிறார்கள் என்பதென்னவோ உண்மைதான். ஆனாலும், தானே முன் நின்று கவனித் தாக வேண்டுமே. வரப் போகும், பிள்ளைகள், நாட்டுப் பெண்கள், பேரக் குழந்தைகளுக்கு எந்தவிதமான சிரமமும் இருக்கக்கூடாதல்லவா! இதுவரையிலும் எந்தக்குறையும் இருக்கும் படியாகத் தான் விட்டதில்லையே!



இன்று காலையில் துபாயிலிருந்து உண்ணி போன் செய்தான். ஓணம் பண்டிகையின்போது என் பிள்ளைகள் எல்லோரும் என்னுடன் இருப்பார்கள் என்று உறுதியாகிவிட்டது. அப்பு, சரளாவும் குழந்தைகளுடனும், கேஷி, பத்மினி தங்கள் குழந்தைகளுடனும் வரப்போகிறார்கள் என்று முன்னரே கடிதம் போட்டிருக்கிறார்கள். உண்ணி வருவதுதான் சந்தேகமாக இருந்தது. அவன் மனைவிக்கு இது மூன்றாம் மாதம். அதனால் டாக்டர் பிரயாணம் செய்யக்கூடாது என்று கூறியிருக்கிறாராம். இதனால்தான் தாங்கள் நிச்சயமாக வருவோம் என்று முன்கூட்டியே அவர்களால் தெரிவிக்க முடியவில்லை. மற்ற இரண்டு பிள்ளைகளும் வரும்போது உண்ணி மட்டுமே வராமலிருப்பது அவளுக்கு என்னவோபோலிருந்தது. நேற்றுவரை அவளது புடவைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு திரிந்த குட்டி மகன் அல்லவா அவன்! அவன் பெரியவனாவது, படித்து, கடல் கடந்து வேலைக்குப் போனது, திருமணம் செய்துகொண்டது எல்லாம் கனவு போலிருக்கிறது. உண்ணி பக்கத்தில் இல்லாவிட்டால் அம்மாவிற்கு ஓணம் பண்டிகையோ, பிறந்தநாளோ கொஞ்சமும் ரசிக்காது என்று பெரிய பையன்கள் இருவரும் சொல் வதுண்டு.

ஹூம்... கமலாவின் அண்ணன் என்.ஓ.சி. எடுத்துக் கொண்டு வேலைக்காக வெளிநாடு சென்றதில் பிரச்சனை ஒருவாறு தீர்ந்து விட்டது. இனி உண்ணி நிம்மதியாய் வீட்டிற்கு வரலாம். வரப்போகிறான்.

**... அவனுக்கு, இந்த வீடு, இந்த கிராமம், ஓணம் பண்டிகை சித்திரைவிஷு கோவில் உற்சவர்கள் எல்லாமே ரொம்பவும் பிடிக்கும். சின்ன வயதிலும் அப்படித்தான், இன்றும் அப்படித் தான், இருந்தாலும் திருமணம் வரைதான் இதெல்லாம் என்று சொல்லலாம்...**

அவனுக்கு, இந்த வீடு, இந்த கிராமம், ஓணம் பண்டிகை சித்திரைவிஷு கோவில் உற்சவர்கள் எல்லாமே ரொம்பவும் பிடிக்கும். சின்ன வயதிலும் அப்படித்தான், இன்றும் அப்படித் தான், இருந்தாலும் திருமணம் வரைதான் இதெல்லாம் என்று சொல்லலாம். இப்பொழுதெல்லாம் வருடத்திற்கொருமுறை ஏதாவதொரு விசேஷ தினத்தன்று வருகிறான். வந்தால் பிறகு என்ன? நண்பர்களுடன் கொண்டாட்டம் தான். அரட்டையும் கேலியும் கிண்டலும், உறங்கிக்கொண்டிருந்த வீடு விழித்துக்கொண்டு விடும். ஒரே கலகலப்புதான்.

கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த வழக்கம் சற்று மாறியுள்ளது என்பது தெரிகிறது.





இதற்காக நான் யாரையும் குற்றம் சொல்லப் போவதில்லை. பிள்ளைகளுக்குத் திருமணமாகி குடும்பஸ்தராகிவிட்டார்கள் என்பதை மறந்துவிடக் கூடாதல்லவா! அவர்களுக்கு எத்தனையோ பிரச்சினைகள் இருக்கும். வயது காலத்தில் என்னைத் தனியாக விட்டு விட்டுப் போக உண்ணிக்கு மனமில்லை.

அவனுடைய வற்புறுத்தலால்தான் நான் அவனுக்கு மனைவியைத் தேடினேன். காசு பணம் ஒரு பெரிய விஷயம் அல்ல. வரப்போகிற மருமகள் எனக்கு உதவியாக, என்னைக் கவனித்துப் பணிவிடைகள் செய்பவளாக இருக்கவேண்டும் என்பதுதான் உண்ணியின் விருப்பமாக இருந்தது. ஆனால், விடுமுறையில் அவன் துபாய் சென்று திரும்பியதும் மருமகப் பெண் முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு விட்டாள். பிறகென்ன? நானே பணம் செலவழித்து, டிக்கட் வாங்கி, அவளை உண்ணியிடம் அனுப்பிவைத்தேன். ஏன் என்றால் என்னால் அவளுடைய துயரம், அலட்சியம், பட்டும் படாததுமான போக்கைப்பார்த்து சகித்துக் கொண்டிருக்க இயலவில்லை. அவள் புறப்பட்டுப்போய் மூன்று வருஷமாகிறது. இதோ, இருவருமாய் இப்பொழுதுதான் முதன் முறையாக வீட்டிற்கு வரப்போகிறார்கள்.



**... ஒரு நாள் வயலிலிருந்து திரும்பியவர் வெட்டுண்ட வாழை மரம் போலல்லவா வாசற்படியில் சாய்ந்துவிட்டார். இந்நிலையி லும் நான் மனம் சோர்ந்து விடவில்லை. அவர் ஒப்படைத்து விட்டுப்போன பிள்ளைகளைத் தவிர இந்த உலகில் எனக்கு யார் இருந்தார்கள்? ...**

மூத்தவன் அப்பு ஐந்து வருடங்களுக்கொருமுறைதான் வருவான். அமெரிக்காவிலிருந்து வந்துபோக அவனுக்கும் குடும்பத்தினருக்கும் நிறைய செலவாகிறது. தன் தம்பிகளிடம் ஐந்து வருடங்களுக்கொருமுறை ஓணம் பண்டிகையின்போது நானும் வருகிறேன். நீங்களும் வாருங்கள். எல்லோரும் ஒன்றாக இருக்கலாம் என்று கூறுவான். ஓணம் பண்டிகை என்பதால் மட்டுமல்ல. சிராவண மாதத்தில் ''கனிஷ்டா'' வில் என் பிறந்த தினம் வருகிறது. சரியாக இன்னும் மூன்று நாட்களுக்குப் பிறகு எனக்கு எழுபது வயதாகிவிடும். என நினைத்தவாறே கடந்தகால நினைவுகளில் தேவகி ஆழ்ந்து போவாள்.

அவருடைய அந்த உருவம் கண் முன்னே நிழலாடியது. வீட்டின் வெளிமுற்றத்தில், தோட்டத்தில் எப்பொழுதும் ஏதாவதொரு வேலையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு இருப்பதுதான் அவரது இயல்பு. கறுப்பு நிறம்தான். ஆனால் கட்டுமஸ்தான உடல் ''தேவு... தேவு...'' என்று எதற்கெடுத்தாலும் அவளைக் கூப்பிட்டுக் கொண்டேயிருப்பார். சின்னச்சின்ன மூன்று குழந்தைகள். ஆனாலும் நான் எதற்கும் தயங்கமாட்டேன். ஒன்றை இடுப்பிலும், ஒன்றைக் கையிலும் பிடித்துக் கொண்டு அவருக்கு உதவி செய்யப் போய்விடுவேன். இருவருமாய் பாடுபட்டு, வியர்வை சிந்தி உழைத்தோம். ஹூம் அது ஒரு காலம்.

ஒரு நாள் வயலிலிருந்து திரும்பியவர் வெட்டுண்ட வாழைமரம் போலல்லவா வாசற்படியில் சாய்ந்துவிட்டார். இந்நிலையிலும் நான் மனம் சோர்ந்து விடவில்லை. அவர் ஒப்படைத்து விட்டுப்போன பிள்ளைகளைத் தவிர இந்த உலகில் எனக்கு யார் இருந்தார்கள்? அவர்களுக்கும் என்னை விட்டால் ஒருவருமில்லை. பிள்ளைகளை வளர்த்துப் பெரியவர்களாக்கினேன். படிக்க வைத்தேன். பணத்திற்குக் கஷ்டப்படத் தேவையில்லாமல், அவர் சொத்து சேர்த்து வைத்து விட்டுப் போயிருந்தார். அவர் இல்லையே என்ற குறையைத் தவிர வேறெந்தக் குறையும் இருக்கவில்லை.

நினைவுகளில் எத்தனை நேரம் கழிந்ததோ, அடடா! நேரமாகிவிட்டதே என நினைத்தவளாய் - ''சாரதா! ஓ! சாரதா!'' என்று உரக்க அழைத்தவண்ணம் நேரா ய்சமையல் அறைக்குச் சென்றேன்.

ஹூம் - அப்புவிற்கும், சரளாவிற்கும் மேல் மாடி அறையைத் தரவேண்டும். அவர்களுக்கு இத்தனைப் பெரிய வீட்டில் அந்த ஒரு அறைதான் பிடிக்கிறது. இங்குதான் கொஞ்சம்

'பிரைவசி' உண்டு. கீழே எல்லோரும் எப் பொழுதும் வந்து போய்க் கொண்டிருப் பார்கள். ரேகா, ரஷிம் இரண்டு பேரையும் என்கூட வைத்துக் கொள்ளப்போகிறேன். வீடு சத்திரம் போலாகிவிட்டது. இதில் தனிமை ஏது? அந்த இரண்டு பேத்திகளுக்கும் என் அறை பிடிப்பதில்லை. பழைய வாசனை வருகிறதாம். போனமுறை வந்திருந்தபோது அந்த இரண்டும் தன் அப்பாவிடம் இங்கிலீஷில் சொன்னது என் காதிலும் விழுந்தது. சரி உங்களுடனேயே மாடி அறையில் இருக்கட்டும் என்று நான் சொன்னதும் அப்பு வேண்டாம் எனக் கூறித் தடுத்துவிட்டான். அமெரிக்காவில் குழந்தை களை அப்பா, அம்மாவுடன் படுக்க வைத்துக் கொள்ளமாட்டார்களாம்...

அப்புறம் கேசியின் குடும்பம் இருக்கிறது. படுப்பது பற்றியெல்லாம் அவர்கள் விசேஷமாக எதையும் வற்புறுத்துவது இல்லை. பம்பாயில் ஜன சந்தடியும், நெருக்கமும் நிறைந்த இடத்தில் ஒரு பெரிய வீட்டின், நாலாவது மாடியில் இரண்டு அறைகளில் அவர்களின் குடித்தனம் நடக்கிறது. அவர்களுக்குக் கீழேயுள்ள பெரிய ஹாலைக் கொடுத்தாலே போதும்.

உண்ணிக்கென்ன! வராந்தாவில் கிடக்கும் சோபாவே போதும். வந்தால் மட்டுமென்ன! வீட்டில் இருக்க அவனுக்கு நேரமெங்கே இருக்கிறது! பழைய நண்பர்களை சகாக்களைத் தேடிக்கொண்டு போய்விடுவான். கோவில் குளத்தங்கரை, மண்டபம் என அவன் பொழுது கரைந்துவிடும். அவன்வராமல் நான் சாப்பிடு வதில்லை. காத்திருக்கிறேன். என்பதால் நடுநிசிக்குள் கட்டாயம் வீடு வந்து சேர்ந்து விடுவான்.



தேவகி அறைகளைப் பெருக்கி சுத்தம் செய்து, படுக்கை, தலையணை, விரிப்புகளைத் தட்டி, வெயிலில் போட்டு கட்டில் களில் விரிக்கும்படி சாரதாவிற்கு உத்தரவிட்டாள். எதை எதை எங்கு போட வேண்டும் என்று கூறித் திட்டமிட்டாள். ஒரு வேலையாயிற்று; இனி சாப்பாடு, சமையலைப்பற்றிக் கவனிக்க வேண்டும்.

பிள்ளைகளின் ருசியே இப் பொழுது மாறிவிட்டது. முன் னைப்போல, உப்பும், புளிப்பும் காரமுமாய் எதுவும் அவர் களுக்குப் பிடிப்பதில்லை. வெறும் சாம்பார், அதிகம் புளிப்பு இல்லாத காளான், கொஞ்சமாக உப்பும் காரமும் கூடிய ஊறுகாய், இப்படி ஏதாவது சமைத்தாலும் அவர்களுக்கு ரசிப்பதில்லை. மீனும், மாமிச மும் இல்லாமல் ஒரு வேளை சாப்பாடுகூட தொண்டையில் இறங்குவதில்லை. ஆனால் ஓணம் மாதிரி பண்டிகை பருவ நாட்களில் இதெல்லாம் எப்படி... சீச்சி! பண்டிகையன்று, வழக்கமான சமையல்தான் செய்யப்போகிறேன். இந்தச் சீர் எல்லாம் வேண்டாம். குழந்தைகளுக்கு வெல்லம் என்றால் நிரம்பப் பிடிக்கும். வெல்லப் பாயசம் பண்ணப் போகிறேன்.

'அவர்' காலத்திலிருந்தே இருந்துவரும் கிரமத்தை நான் விடப்போவதில்லை. நம் வயலில் விளைந்த அரிசி, தேங்காய்ப் பாலும் கூட்டி, பக்கத்து மனைக்காரன் அவநாச்ச னுடைய சுத்தமான வெல்லத்தைப் போட்டுத்





தான் அவருக்குப் பாயசம் செய்ய வேண்டும். எல்லோரும் ருசித்துச் சாப்பிடுவார்கள். அந்த வெல்லப் பாயசத்தை உறிஞ்சி சாப்பிடுகையில் அவரது முகம் என்னமாய் மலர்ந்துபோகும். திருப்தி தெரியும்! அந்த முகத்தில், ஹூம்... இதையெல்லாம் ஏன் நினைக்கிறேன். நினைக்காமல்தான் இருக்கவேண்டும்.

அப்பு இன்று மத்தியானமே பிளேனில் வந்துவிடுவான். என்றாலும் இன்றைய ராத்திரிப் பொழுது சரளாவின் வீட்டில்தான் கழியும். அமெரிக்காவிலிருந்து கொண்டு வரும் விசேஷமான சாமான்களையெல்லாம் பங்கிடு செய்ய வேண்டாமா? அங்குதான் அதெல்லாம் நடக்கும். அவளுடைய பக்கத்து வீட்டுக்காரி அந்த ரேவதி டீச்சர் முன்பு நம் வீட்டில் குடியிருந்தாளே? அவள்தான் இதையெல்லாம் சொன்னாள். எனக்கு ஓணத்தின்போது வஸ்திரம் கொடுக்க அப்பு மறந்ததேயில்லை. இருந்தாலும் சரளா தன் பிறந்த வீட்டுக்காரர்களுக்கு என்னென்னவோ, விலை யுயர்ந்த சாமான்கள் எல்லாம் கொண்டு வந்து தருகிறாள் என்பது காதில் விழ்ந்ததும் - நமக்கும் ஒரு மகள் இல் லையே என்று தோன்றுகிறது.



... சரியாய் ஐந்து வருடங்களுக்குப் பிறகு மூன்று பிள்ளைகளும் ஒன்றாக வீட்டில் இருக்கப்போகிறார்கள். நான் உயிரோடு இருக்கும்போது அவர்களுக்கு இங்கே எந்தக் குறையும் நேரக் கூடாது. கூடிக் களிக்கட்டுமே!

சாகும்வரை அவருக்கு, நமக்கொரு பெண் குட்டி யில்லையே என்ற குறை யுண்டு. அப்பொழுதெல்லாம் எனக்குப் பிள்ளைகள் இருக் கிறார்கள் என்று பெருமிதப் பட்டுக் கொள்வேன். இப் பொழுது மட்டும் இந்த எண்ணம் ஏன் வருகிறது? மனம் சஞ்சலப்பட்டுப் போய்விட்டதாஎன்ன?

எல்லா ஏற்பாடுகளையும் கவனித்து முடிக்க சந்தியா காலம் ஆகிவிட்டது. மாடியிலிருந்து படுக்கை அறையில் பேசிய வாளியில் ஜலம் நிரப்பிக் கொண்டு போய் வைக்கச் சொன்னேன். காலை டிபனுக்கு வீட்டிற்கு வந்து விடுவதாக அப்பு எழுதியிருக்கிறான். அவனும் சரளாவும் குளிக்க, துவைக்க சிரமம் இல்லாமல் இருக்க வேண்டாமா? இதற்குத்தான் குளியல் அறையில் தண்ணீர் நிரப்பச் சொல்லு கிறேன்.

படுக்கப் போகுமுன் தேவகி அம்மாள் ஒருமுறை நின்று நிதானித்து எல்லாம் சரியாக, ஏற்பாடாக இருக்கிறதா என்று பார்த்து விட்டுத்தான் படுக்கச்சென்றாள்.

சரியாய் ஐந்து வருடங்களுக்குப் பிறகு மூன்று பிள்ளைகளும் ஒன்றாக வீட்டில் இருக்கப்போகிறார்கள். நான் உயிரோடு இருக்கும்போது அவர்களுக்கு இங்கே எந்தக் குறையும் நேரக்கூடாது. கூடிக் களிக்கட்டுமே! அந்த ரேவதி டீச்சர் -'' தேவகி அம்மா! உங்கள் மருமகள்மார்கள் ரொம்பவும் கொடுத்து வைத்தவர்கள். புக்ககத்தில் அவர்களுக்கு எந்தக் குறையும் இல்லை. சிரமமோ, கஷ்டமோ கிடையாது. எல்லாம் பார்த்துப் பார்த்துச் செய்து வைக்கிறீர்கள். சுகமாய் இளைப்பாற வேண்டும். அவ்வளவுதானே, ஆனால், தேவகி அம்மா! அவர்களுக்கு இதன் அருமை எங்கே தெரிகிறது! என்னுடைய மாமியார் இருக் கிறாரே! ஒவ்வொரு சனிக் கிழமையும் நான் வரும் வழி யைப் பார்த்துக் கொண்டிருப் பார். நான் வீட்டிற்குள் காலடி வைத்ததுமே தன் பெண்ணின் வீட்டிற்குப் புறப்பட்டுப் போய்விடுவார். என் புருஷன், தன் அம்மாவிற்கு வாரத்தில் இரண்டு நாள் விடுமுறை வேண்டும் என்று கண்டிப் பாய்க் கூறிவிட்டார். வாரத் தில் ஐந்து நாட்கள் அவர் பெயருக்குத்தான் சமையல் சாப்பாடு என்று ஏதோ செய்கிறார். குடித்தனம் என்று எதையும் அக்கரையுடன் கவனிப்பதில்லை. வீட்டில் எல்லா வேலையும் அப்படி அப்படியே கிடக்கும். நான் தான் பார்த்துச் செய்ய வேண்டும். ஒரு மூச்சுப்பிடித்துக்' காரியத்தில் இறங்கினால், திங்கட்கிழமை இங்கு வந்துதான் அப்படா என்று மூச்சு விடுகிறேன்'' என்பாள்.

ரேவதி டீச்சர் சொல்வது சரிதான். நான் இந்த வீட்டில் ஒருநாள் இல்லாவிட்டால் தெரியும். அவர்களுக்கு என் அருமை என்னவென்று இப்பொழுது புரியாது.

எல்லாம் அவர்கள் இஷ்டம்போல் இருக்கட்டும், செய்யட்டும் எனக்கென்ன?

என் மகன் கேசி, தன் மனைவியிடம் ஏதோ கிசுகிசுக்கிறானே! எனக்குத் தெளிவாகக் கேட்கவில்லை - சொல்லுகிறான் - ''நீ சாரதாவிடம் சொல்லு, அப்பாவின் அறையை நமக்காகத் திறந்துவிடச் சொல்லு, பம்பாயில் இரண்டு அறைக்குள் குழந்தை குட்டிகளுடன் என்ன தாம்பத்திய சுகம்! இங்கு வந்தாலும் அதே கதிதான். நமக்கென்று அறையில்லை... இந்தத் தடவையாவது கொஞ்சம் 'பிரைவசி'யை ... தனிமையின் ஆனந்தத்தை அனுபவிப்போமே!''

என்ன இது! என் பிள்ளையா! என் கேசியா பேசுகிறான்! அவன் மனத்திற்குள் இத்தனை சுயநலமா ஒளிந்துகொண்டிருந்தது... ஆனால் ஒருவிதத்தில் அவன் சொல்வதிலும் உண்மையிருக்கிறது. எத்தனையோ வருடங்களுக்கு ஒருமுறை அவன் வீட்டிற்கு வருகிறான். அவனுக்குக் கிடைக்காத இந்த சௌகரியத்தை, அவன் விரும்பும் வசதியை நான் செய்து கொடுத்திருக்க முடியும். கொடுத்திருக்கலாம். இருந்தாலும், நான் போய்விட்டேனே என்று வருத்தப்படுவதற்குப் பதிலாக, என் பிள்ளை.. இதற்குமேல் அவர்கள் பேசுவது எதுவும் காதில் விழவில்லை. காதை மூடிக்கொண்டு வராந்தா சுவற்றில் சாய்ந்துகொண்டு உட்கார்ந்துவிட்டேன்.



எத்தனை நேரம் இப்படி உட்கார்ந்திருந்தேனோ் தெரியவில்லை.

வாசலில் இன்னொரு கார் வந்து நிற்கிறது. அப்புதான் வந்திருக்கிறான். பாண்ட், ஷர்ட் அணிந்த இன்னும் மூன்று பேர் அவனுடனிருந்தனர். அப்படியென்றால், சரளா, இந்து, பிந்து வரவில்லையா? நான் இல்லை என்பதாலா?

சாப்பிடும்போது அவர்கள் கீழே இறங்கி வருவார்கள். நான் இல்லையே.. சாப்பாடு யார் பரிமாறி கவனித்துக் கொள்வார்கள்? சிரமமாக இருக்குமல்லவா' அதனால்தான்.. இல்லை... அப்புவுடன் வந்திருப்பவர்களை இராமன் தாயாருக்குத் தெரியும் போலிருக்கிறது. அவர்களுக்குள் குசலம் விசாரித்துக் கொள்கிறார்கள். சிரிக்கிறார்கள். கேசியும், பத்மினியும் படியிறங்கிச் சென்று அவர்களை வரவேற்கிறார்கள். இன்னமும் அவர்கள் யார் என்பது புரியவில்லையே! யாராக இருக்கும்! பத்மினி உரக்கச் சிரித்துக்கொண்டே ''மதனி, குழந்தைகளின் டிரஸ் பிரமாதம்! அம்மா உயிரோடு இருந்தால் உங்களையெல்லாம் அடையாளம் தெரிந்து கொள்ளச் சிரமப்பட்டிருப்பார். மதனியார், பேத்திகள் யாரென்று அவருக்குத் தெரிந்திராது'' என்றாள்.

இதென்ன இது! அப்புவுடன், பாண்ட் போட்டுக்கொண்டு, தலை மயிரைக் கழுத்தளவு வெட்டிக்கொண்டு வந்திருப்பவர்கள் சரளாவும், இந்தும், பிந்துவுமா? பகவானே! என்னைத் தாண்டிக்கொண்டு செல்லும் சரளா, பத்மினியிடம் தாழ்ந்த குரலில் ''இந்த டிரஸ் எவ்வளவு வசதியாய், சௌகரியமாய் இருக்கிறது தெரியுமா? அங்கெல்லாம் இந்த மாதிரி டிரஸ் போட்டுக்கொண்டு பழக்கமாகிவிட்டது. இதுவரை இங்கு வரும்போது வேஷத்தை மாற்றிக்கொண்டு விடுவோம். வருவதற்கு 6 மாதம் முன்னே தலைமயிரை வெட்டிக்கொள்ள மாட்டோம். தலை மயிரை வளர்த்திக் கொண்டு விடுவேன். புடவை கட்டுவேன். இங்கு வரும்போது பாரதீய பெண்மணியாக வராவிட்டால் அம்மா கோபித்துக்கொள்வார். கடுமையாக நாலு வார்த்தை சொல்லுவார். போனமுறை நான் நைட்டி, போட்டுக் கொண்டதற்குத்தான் எத்தனை எதிர்ப்பு? கேசி, உண்ணியின் எதிரே நான் சற்றும் வெட்கமில்லாமல் திரிந்தேன் என்று கடித்துகொண்டார். அப்பொழுதே நான் அப்புவிடம் ''இனிமேல் அம்மா இறந்த பிறகுதான் இனி நான் இந்தியா வருவேன்'' என்று சொல்லிவிட்டேன். என் பிறந்தவீட்டில் இப்படி அம்மா.. அம்மா என்று மாய்ந்து போகும் வழக்கமெல்லாம் கிடையாது.. இந்த அப்புவின் போக்கெல்லாம் ரொம்பப் பழங்காலம். அதனால்தான்.... பத்மினி இந்தமுறை எதற்காக வந்திருக்கிறோம் தெரியுமா? பாகப் பிரிவினைக்குத்தான்.''

இதற்குமேல் கேட்டுக்கொண்டிருக்க என்னால் இயலவில்லை. இரண்டு பெண்களுக்கு அம்மாவாக இருக்கும் சரளாவா இப்படிப் பேசுகிறாள். அவளால் எப்படி இப்படி





யெல்லாம் பேசமுடிகிறது? நாளைக்குத் தனக்கும் இம்மாதிரி நிலை ஏற்படும் என்று யோசித்துப் பார்க்கவில்லையா அவள்?

நைட்டி என்ற பெயரில் உள்ளாடையெல்லாம் தெரியும்படியான மெல்லிய உடையை அணிந்துகொண்டு அவள் காப்பி சாப்பிடக் கீழே வந்ததும் உண்மையிலேயே அதிர்ந்து போன நான் அவளைக் கண்டித்தேன். அப்பொழுது உண்ணிக்குத் திருமணமாகி இருக்கவில்லை. கட்டை பிரம்மச்சாரி அவன். கேசியும் தனியாகத்தான் வந்திருந்தான். மனைவியைக் கூட்டி வரவில்லை. மைத்துனர்களுக்கு தாய்க்குச் சமமான ஸ்தானத்தில் இருப்பவள் இப்படி ஆடை அணிந்து சங்கோஜமில்லாமல் வருவது சரியா?... என்று அவள் உடனே முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு மேலே போய்விட்டாள். ஆனால் நான் உயிரோடு இருக்கும்வரை மீண்டும் இந்த வீட்டிற்கு வரமாட்டேன் என்று அவள் இப்படி கடுமையானதொரு முடிவை எடுத்திருப்பாள் என்று நான் நினைத்துப் பார்த்ததில்லை. அப்படியென்றால் எனது மரணம் அவளுக்கொரு வெற்றி, அவளுடைய பிரதிக்ஞை வென்றுவிட்டது. ஹூம்.. கொஞ்சமும் பாசமோ, அன்போ இல்லாத மருமக்கள்மார்களிடமிருந்து சீக்கிரமே விலகி' தூரப்போய்விட வேண்டும்.



என் பேரன் பேத்தி இருக்கிறார்களே அவர்கள் உடம்பில் ஓடுவது என் ரத்தம்தானே! அவர்களுடன் என் அறையில் இருந்து கொள்கிறேன்.

ரேகாவும், ரஷ்மும் மிகுந்த உற்சாகத்துடன் அறையைச்சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தனர். இரண்டு பேருமே ரொம்ப சந்தோஷமாக இருந்தனர். அவர்களது இங்கிலீஷ் பேச்சும், சிரிப்பும் புரியாவிட்டாலும் அவர்களை கண்நிறையப் பார்த்துக்கொண்டிருப்பதே சந்தோஷமாக இருந்தது. பெரியவருக்குப் பதினாலு வயதாகிறது. ஒருவரும் அவளைச் சின்னப் பெண் என்றுகூற முடியாது. நல்ல வளர்த்தி, உற்றுப்பார்த்தால்... 'அவரைத்' தன் தாத்தாவைக் கொண்டிருக்கிறாள் என்று தோன்றும். அகன்ற நெற்றி, கூர்மையான மூக்கு, தடிமனான உதடுகள், எல்லாம் அப்படியே அச்சு, அவள் உரக்கச் சிரித்தால் வலது பக்கத்துப் பற்கள் தெரியும். அதுகூட அவரைப்போலவேதான். எனக்குப் புல்லரித்தது. தூறலில் நனைவது போன்ற இனிமை.

அவர்களுக்குப் பால் கொடுக்கச் சாரதா வந்ததும் கொச்சைமலையாளத்தில் அவளுடன் அவர்கள் பேசியதைக் கேட்டதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவர்கள் இருவருக்கும் மட்டும் அந்த அறை கிடைத்ததில் அவர்களுக்கு ரொம்ப ரொம்ப மகிழ்ச்சியாம். நல்லவேளை பாட்டியில்லை; என்னுடைய எண்ணெய்வாசனை, குறட்டை, இருமல்... அவர்களால் கொஞ்சம்கூட சகித்துக்கொள்ள முடியவில்லையாம்.

இனி இங்கே இருக்கக்கூடாது. என் பேத்திமார்களுக்குக்கூட நான் இருப்பதில் மகிழ்ச்சி இல்லை. கனத்த உள்ளத்துடன் வெளியேறினேன்.

முற்றத்தில் அப்புவும் இராமன் நாயரும் நின்றுகொண்டிருந்தனர். ராமன் நாயர் கொணர்ந்திருந்த சோடா பாட்டிலை அப்பு தன் கையில் வாங்கிக் கொண்டான். இராமன் நாயர் சிரித்துக் கொண்டே ''சாரே இனி நீங்கள் பட்டறையிலேயே தாராளமாய் குடிக்கலாம். நான் என் வீட்டிலே கோழி சமைத்துக் கொண்டு வருகிறேன். இனிஅம்மா பார்த்து விடுவாளே என்ற தொந்தரவெல்லாம் இல்லை...'' என்றான்.

அப்புவும் இதைக் கேட்டுச் சிரிக்கிறான். ''இராமான்நாயர் நீ சொன்ன பிறகுதான் இது நினைவு வருகிறது. சாப்பாடு பரிமாறச் சொல்லு. நான் மேலே போய் பாட்டிலை எடுத்து வருகிறேன். இது ரொம்ப நல்லதாகப் போயிற்று.''

நான் வியப்பினால் கல்லாயச் சமைந்து போனேன். ''இது ரொம்ப நல்லதாகப் போயிற்று!'' எது? எனக்கு ஏதும் புரியவில்லை. நான் இறந்து போனதா? அல்லது பகல் சாப்பாட்டுக்குப் பிறகு எல்லோரும் காண அமர்ந்து விஸ்கி குடிப்பதா? எது ரொம்ப நல்லதாகப் போயிற்று?''

அதிகமாக யோசிக்க என்னால் இயலவில்லை. மெதுவாக அடி எடுத்து வைத்து

'நானில்லாவிட்டால் இந்தப் பிள்ளைகளும், மருமகள்மாரும் என்னதான் செய்வார்களோ! ஈசுவரா!' என்றெல்லாம் எண்ணி எண்ணி மனத்திற்குள் மாய்ந்தவாறே தேவகி புரண்டு படுத்தாள். உறக்கமே வரவில்லை. கண்ணயர்ந்தபோது விடிவேளை நெருங்கி விட்டது. அப்பொழுதான் அவள் ஒரு விசித்திரமான கனவு கண்டாள்.



விடிந்து கொண்டிருக்கும் வேளை, இன்று ராமன் நாயர் சீக்கிரமாகவே வந்துவிட்டான். அவன் பின்னாலேயே சாரதாவும் வந்தாகி விட்டது. பிள்ளைகள் வரப்போகிறார்களே என்று இருவருமே சீக்கிரம் வந்துவிட்டார்கள் போலிருக்கிறது. நேற்று நானே - 'காலையில் சீக்கிரம் வந்துவிடுங்கள்' என்று கூறியிருந்தேன். தினம்போல் வராந்தா கதவைத் தட்டாமல் ராமன்நாயர் சாவியால் கதவைத் திறக்க முயற்சிக்கிறான் அவனுக்கென்ன வந்து விட்டது? திமிரா? கதவைத் திறக்கிறானே! அவன் மட்டுமல்ல அந்த சாரதாவும்கூட இருக்கிறாள்.

இதென்ன? நானும் அல்லவா வெளியே நிற்கிறேன். நான் வீட்டில் இல்லையா? இந்த ஐம்பது வருஷங்களில் இப்படி ஒருநாள் கூட நடந்தது இல்லையே! எங்கே போனாலும் இரவுக்குள் வீட்டிற்குத் திரும்பிவிடுவேன். திரும்பி வந்துவிட வேண்டும் என்பது அவருடைய நியமம். அதாவது விருப்பம். அவர் இறந்த பிறகுதான் இந்த நியமத்தை மீறுவதில்லை. இப்பொழுது இது எப்படி நேர்ந்தது? என்னை சொல்லாமல் கொள்ளாமல் வீட்டிலிருந்து வெளியேற்றி விட்டார்களா? ஐயோ! இதென்ன? நான் எப்படி, இப்படி வெளியே நிற்கிறேன். ஐயோ! என் நாடி நரம்பெல்லாம் தளர்ந்துவிட்டது. முதலில் வியப்பாக இருந்தது. கவலையாக மாறி விட்டது. ராமன்நாயர்கதவைத்திறந்ததும் நான் அவனைத் தொடர்ந்து வீட்டிற்குள் சென்றேன்.

ராமன்நாயர் சாரதாவிற்கு ஏதேதோ உத்தரவிட்டுக் கொண்டிருந்தான். திடீரென ஏதோ நினைத்துக் கொண்டவன்போல் வடக்குத் திக்கைப் பார்த்து ''சாரதா! இதோ பார்! முதலில் அம்மாவின் திண்ணையை அலம்பி அங்கு விளக்கு ஏற்றிவை. மற்ற வேலைகளையெல்லாம் பிறகு பார்க்கலாம்'' என்றான். என்ன இது! அம்மாவின் திண்ணையையா? அப்பொழுதுதான் நான் இறந்து விட்டேன் என்பது புரிந்தது. பகவானே பிள்ளைகள் வந்தால் அவர்களை யார் கவனிப்பார்கள்! அவர்களுக்கு வேண்டியதையெல்லாம் யார் செய்வார்கள்? நான்தான் உயிரோடு இல்லையே! என்னால் என்ன செய்ய முடியும்? இந்த சாரதா ஏன் கல்லுபோல் அசையாமல் நிற்கிறாள். என்ன வந்துவிட்டது இவளுக்கு? ராமன்நாயர் சொன்னது இவள் காதில் விழவில்லையா என்ன? ராமன்நாயர் கேட்டான் - அடியே சாரதா! ஏனிப்படி மரம்மாதிரி நிற்கிறாய்?

சாரதா உதட்டைச் சுழித்துக்கொண்டு முணுமுணுத்தாள் - ''ஹூம், விளக்கு ஏற்றுகிறேன். அந்தக் கிழவி இருந்தவரையில் என்னை மூச்சு விடக்கூட மாட்டாள். விரட்டிக் கொண்டே இருப்பாள். ஒவ்வொரு காசாக, சேர்த்துச் சேர்த்துப் போன வருஷம் ஓணம் பண்டிகைக்கு, காலுக்குக் கொலுசு வாங்கிப் போட்டுக்கொண்டேன். ஒருநாள் கூட கொலுசு போட்டுக்கொண்டு என்னை இங்கே நடமாட விடவில்லை. அந்தக் கிழவி. வேலைக்காரியெல்லாம் கொலுசு போட்டுக்கொண்டு இங்கே வேலை செய்யக் கூடாதாம்.''

ஹூம் - என்ன நன்றிகெட்டதனம் இந்த வேலைக்காரர்களுக்கு! கொலுசுக்குப் பணம் போதவில்லை என்றதும் நான்தானே சுளையாக முப்பது ரூபாய் தூக்கிக் கொடுத்தேன்? இன்றுவரை அதைத் திருப்பிக் கொடுக்கும் பேச்சையே காணோம். அந்தச் சிறுக்கி வீட்டிற்குள் கொலுசு போட்டுக் கொண்டு நடமாடக்கூடாதென்று கண்டிப்பாகச் சொன்னேன். காரணம் தெரியுமா? காலையில் பால்





கறக்க வரும் மாட்டுக்காரனிலிருந்து மாலையில் தென்னையிலிருந்து கள் இறக்க வரும் - மரமேறிவரை எல்லோரிடமும், சீண்டலும் சிங்காரமுமாய் இருப்பாள் அந்தச் சிறுக்கி. இதுமட்டுமா? உண்ணி வயசுபிள்ளையும் வீட்டில் இருப்பான்.

பெண்களைப் பற்றிய உண்ணியின் பலவீனமும் எனக்குத் தெரிந்துதானே! அவன் மீதும் ஒரு கண் வைத்திருக்க வேண்டும் அல்லவா? ஹூம்.. இந்த வேலைக்காரிகளிடம் நன்றியையும் அன்பையும் எதிர்பார்ப்பது அதுவும் இந்தக் காலத்தில்... வீண்தான் என்று அப்பு அடிக்கடி சொல்லுவானே!

அந்த ராமன் நாயர் தன் தோள்களைக் குலுக்கிக் கொண்டு சொல்லுகிறான் - ''அடி முட்டாள் பெண்ணே! அதெல்லாம் கடந்து போன விஷயம். இனி இந்தக் கிழவியின் பிள்ளைகளை அல்லவா நாம் சந்தோஷப் படுத்த வேண்டும். அப்பத்தான் அவர்கள் போகும்போது, பத்து ஐம்பது சந்தோஷமாய்க் கொடுத்துவிட்டுப் போவார்கள். கிழவி இருந்தால் கொடுக்கவிட மாட்டாள். நல்லவேளை சனி ஒழிந்தது!''



ஐயோ - என்ன இது? ராமன் நாயரா இப்படிப் பேசுகிறான்! என்பால் இத்தனை வெறுப்புடன், எவ்வளவு இகழ்ச்சியாகப் பேசுகிறான்! நான் அவனைச் சம்பளத்திற்கு வைத்திருக்கும் வேலைக்காரன்போல் ஒருக்காலும் நடத்தியதேயில்லையே! அவனது மூன்று பெண்களின் கல்யாணத்தின் போதும், அவன் புது வீடு கட்டிய போதும் நான் எவ்வளவு தாராளமாய் என் கையைவிட்டுப் பணம் செலவழித்தேன் என்பதையெல்லாம் மறந்துவிட்டானா... என் மனம் வெதும்பியது. இந்த இராமன் நாயர் கூறுவதிலும் உண்மை இல்லாமையில்லை; என் பிள்ளைகள் வீண்செலவு செய்வதைத் தடுப்பது என் கடமையல்லவா? ராமன் நாயருக்கு இதைப் புரிந்து கொள்ளப் புத்தி இல்லையா என்ன? நான் இல்லாமல் போவது தனது அதிர்ஷ்டம் என்பதுபோல் பேசுகிறானே!

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம். என் சமாதி - அதுதான் திண்ணையை அலம்பி விட்டுவிட்டு சாரதா வாளியை எடுத்துக் கொண்டு கிணற்றுப் பக்கம் ஓடுகிறாள்.

என்ன இது? வெளிவராந்தாவில் தண்ணீர் வைக்கவில்லையா? வெகுதூரப் பயணம் செய்துவிட்டு வருகிறார்கள். கை கால் கழுவிக் கொண்டுதானே உள்ளே வரவேண்டும். இந்த சாரதாவிற்கு இது தெரியவேண்டாமா! புத்தி மட்டு அவளுக்கு.

நான் வராந்தாவில் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். மௌனமாய்தான் பின்னால் பெட்டி படுக்கைகளோடு இராமன் நாயர் நிற்கிறான். இரண்டுநாள் பயணத்தின் களைப்பும், அழுக்கும், குழந்தை நிறம் மங்கித் தெரிகிறார்கள்.

வீட்டு வாசலுக்கு வந்தபின் கேசி கண நேரம் மௌனமாய் நிற்கிறாள். கண்களில் துக்கத்தின் சாயலா? என் நினைவினாலோ? பாவம் கேசி! எனது மறைவு அவனுக்குத் துக்கத்தைத் தந்திருக்கும். அடுத்த கணம் பத்மினியின் ஏளனம் நிறைந்த குரல். தன் காலில் தண்ணீர் விடும் சாரதாவை நோக்கி ''நீ போ அந்தப்பக்கம்! இனி செருப்பை அவிழ்த்துவிட்டு யார் காலை அலம்பிக் கொள்ளப் போகிறார்கள்? யாருக்குப் பயப்படணும்? இனி இந்த வீட்டில் என் சௌகரியப்படி இருக்கலாம்.''

மருமகள் தனக்கு இனி முழு நிம்மதியும் சுதந்திரமும் கிடைத்துவிட்டதை உணர்த்துகிறாள் போலும், அப்படியென்றால் நான் உயிருடன் இருந்தது அவளுக்குத் தடையாக, உறுத்தலாக இருந்ததோ! என் மகன் கேசி. அவள் பேசுவதைக் கேட்ட பின்னும் பேசாமலிருக்கிறானே! மறுத்து ஏதும் சொல்லமாட்டானோ! அவனும் அவளுடன் சேர்ந்தல்லவா சிரிக்கிறான். வெளியேயுள்ள அழுக்கும், அசுத்தமும் கூடிய செருப்பை அப்படியே சுத்தமான வீட்டிற்குள் போட்டுக்கொண்டுவருவது சரியல்ல, வரக்கூடாது என்ற அளவுக்குப் புரிந்து கொள்ளும் புத்தி கிடையாதா? இன்றுவரை இவர்களுடைய சுகம் சந்தோஷத்தைப் பற்றித்தான் என் எண்ணம், செய்கை, கவலையெல்லாம் இருந்தது.. இனி! மனம் பாரமாய் கனத்தது. அவர்களுடன் கூட வீட்டில் நுழைய, காலடி எடுத்து வைக்க மனம் வரவில்லை.

வராந்தாவிற்கு மீண்டும் வந்தேன். சுவற்றில் சாய்ந்தவாறு அமர்ந்து என்னை ஆசுவாசப் படுத்திக்கொண்டேன். இனி உண்ணி வர வேண்டியது ஒன்றுதான் பாக்கி. இன்று அவன் கட்டாயம் வந்துவிடுவான். அவனையும் ஒருமுறை கண்ணாரப் பார்த்துவிட்டு...

ஆனால் உண்ணிக்குப் பதிலாக தபால் காரன்தான் வந்தான். இராமன் நாயர் கடிதத்தை வாங்கிக்கொண்டு உள்ளே வந்ததும், அது உண்ணியின் கடிதமாகத்தானிருக்கும் என்று நினைத்தேன. என்ன எழுதியிருக்கிறானோ என்று தெரிந்து கொள்ள ஒரே ஆவலாக இருந்தது. என்னவாக இருக்கும்! இந்த முறையும் கமலா நோய்ப்படுக்கையில் படுத்து விட்டாளா? என்ன உடம்போ! குழந்தை வேண்டும் என்று அவளுக்குத்தான் பாவம் எத்தனை ஆசை! எத்தனை வேண்டுகோள். பிரார்த்தனைகள் செய்துகொண்டிருக்கிறாள்.

உரக்கச் சிரிக்கும் சத்தம். அப்படியென்ன சிரித்துக் களிக்க அவன் எழுதியிருக்கிறான்! குழந்தைகள் பேசிக்கொள்வது காதில் வீழ்ந்தது.... இதென்ன! கமலா மூன்று மாதம் கர்ப்பமாய் இருக்கிறாள் என்ற செய்தி பொய்யாம். இங்கு வந்தால் அம்மா தன் கூட கொஞ்ச நாட்கள் இருக்கும்படி கூறுவாளாம். இதிலிருந்து தப்பிக்கத்தான் உண்ணி அப்படி எழுதினானாம். இந்தத் தடவை ஊருக்கு வந்து வீட்டில் போர் அடித்துக்கொண்டிருப்பதைவிட அவர்கள் ஐரோப்பாவிற்குச் சுற்றுலா போகி றார்களாம். ஹூம் அம்மாவிற்கு இது எத்தகைய ஏமாற்றத்தை அளிக்கும். எத்தனை நிராசை அடைவாள்! என்ற குற்ற உணர்வுகூட அவர்களுக்குத் தோன்றவில்லையே!

மனத்தில் விரக்தி மெல்ல மெல்லப் பரவியது. உண்ணிக்கு மட்டுமென்ன மற்ற எவருக்குமே குற்ற உணர்வு தோன்றாமல் இருக்கட்டும். இனி இந்த வீட்டிலிருந்து எனக்கு, முற்றிலும் அன்னியமாகப் போய்விட்ட இந்த வீட்டிலிருந்து பற்றுக்கள், கவலைகள் ஏதுமின்றி நிர்விகாரமான மனத்துடன் நான் போய்விடுவேன்.

நான் எங்கே போய்விட்டேன்! எனக்கு எதுவுமே புரியவில்லை. நான் கண் விழித்தபோது பொழுது நன்றாக விடிந்து விட்டிருந்தது. இருந்தாலும் நான் பரபரப் படையவில்லை. ஐந்து வருடங்களுக்கொரு முறை எந்த நாளை எதிர்பார்த்துக் காத்திருக் கிறேனோ அன்றைய தினத்தின் முக்கியத்து வத்தை நினைத்தோ, செய்ய வேண்டியிருந்த நூறு காரியங்களைப் பற்றியோ பரபரப் படையாமல் மனம் சோர்ந்து போனவளாய் படுத்திருந்தேன். மிகவும் அசதியாக இருந்தது.

இந்த வீட்டிற்கு நான் இன்றியமையாத வளா? அல்லது வேண்டப்படாத, தேவை யில்லாத ஒருத்தியா?

புரியவில்லை!

நன்றி : வானதி பதிப்பகம், வெளியிட்ட 'இந்திய பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள்' என்ற நூலிலிருந்து...
ஸ்ரீமதி சாராதோமஸ் அவர்களின் மலையாள சிறுகதை, தமிழாக்கம் சரஸ்வதி ராம்நாத்

அட்டைப்பட விளக்கம்:

முதல் அட்டை :

மாண்புமிகு இந்தியப்பிரதமர் திரு. தேவகவுடா அவர்கள் சென்னை வந்தபோது விமானநிலையத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வரவேற்றார் (24.8.96).

இரண்டாம் அட்டை:

சென்னை மாநகரில் கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்துவைத்தார் (28.9.96).

நான்காம் அட்டை :

தந்தை பெரியார் (தோற்றம்: 17.9.1879 - மறைவு: 24.12.1973)
அறிஞர் அண்ணா (தோற்றம்: 15.9.1909- மறைவு: 2.2.1969) நினைவாக.





மருத்துவக் கட்டுரை

# தோல் நோய்கள்

டாக்டர் ஜி. இளங்கோவன்

மனிதனுக்கும் சரி, விலங்கினத்திற்கும் சரி; நல்ல தோற்றத்தையும் பொலிவையும் தருவது தோல் ஆகும். ஐம்புலன்களில் முதன்மையானதும், தோல் ஆகும். ஏனைய உறுப்புகளான வாய், கண், மூக்கு, செவி என்பனவற்றுக்குத் தனி வடிவம் இருப்பதுபோல், தோலுக்கெனத் தனிவடிவம் இல்லாததால்தான் அதனை ஒரு உறுப்பாக எண்ணிப்பார்க்க யாருக்கும் தோன்று வதில்லை. எனினும், ஏனைய நான்கு புலன்களையும் ஒன்றாக இணைத்து, உடலெங்கும் ஒரு போர்வை போல வியாபித் திருக்கும் பெரிய உறுப்பு தோல் ஆகும். இரத்த மண்டலம், தசை மண்டலம், நரம்பு மண்டலம், எலும்பு மண்டலம் போலத் தோலும் ஒரு முக்கிய மண்டலமாகப் பணியாற்றுகிறது. முக்கியமாக மற்றவர் மனதில் எளிதில் இடம் பிடிக்கும் இனக்கவர்ச்சி சாதனம் தோல்தான்.

**தோலின் முக்கியப் பணிகள்**

அழகையும் ஆரோக்கியத்தையும் கொடுக் கும் தோல், உடலில் பாக்டீரியாக்களோ, நோய்க்கிருமிகளோ எளிதில் புகாதபடி பாதுகாப்பு அளிக்கிறது.

சுற்றியுள்ள காற்று, வெப்பமாக இருக்கும் போது உடல் வியர்த்து, குளிர்ச்சியடையவும், சுற்றிலுமுள்ள காற்று குளிராக இருக்கும் போது உடல் நடுங்கி, வெப்பத்தைத் தேடிக்கொள்ளவும் இப்படி உடல் வெப்பத்தை ஒரே சீராக வைத்துக்கொள்ள இயற்கையிலேயே படைக்கப்பட்ட ஒரே சாதனம் தோல்தான்.

வலி, அழுத்தம், மென்மை, வெயில், குளிர் போன்றவற்றைத் தொட்டு உணரும், நரம்பு மண்டலத்தின் அனைத்துப் பணிகளுக்கும் அவைகளின் உணர்ச்சியை வெளிப்படுத்தவு மான தொடு உணர்வுள்ள உறுப்பு தோல் மட்டுமே.

வெப்ப நாடுகளில் உள்ளவர்கள் வெயி லைத்தாங்கிக் கொள்வதற்கு வசதியாகக் கருப்பு நிறமாகவும், குளிர் நாடுகளில் உள்ளோர் உடல் வெப்பத்திற்குத் தேவையான, சூரியனின் புற ஊதாக் கதிர்களின் துணையோடு டி. வைட்டமின் தயாரிப்பதற்கு ஏதுவாக வெள்ளை நிறமும், மிதவெப்ப நாடுகளில் உள்ளோர் சீரான வெப்பத்தைப் பெறுவதற் காகக் கருப்புமில்லாமல், வெள்ளையு மில்லாமல் ஒருவிதப் பழுப்பு நிறமாகவும் ஆக, வெவ்வேறு நிறங்களில் தோற்றம் தருவது தோல் ஆகும்.

நீரிலே நீண்ட நேரம் இருந்தாலும், நீர் பகாத தன்மை கொண்டது தோல் ஆகும்.

தினசரி சராசரியாக 1/2 லிட்டர் நீரையாவது வெளியேற்றும் நீராவிப்போக்கு எந்திரமாகப் புணிபுரிவது தோலாகும்.

சராசரி மனிதனின் தோலின் மொத்த எடை 4 1/2 கிலோ ஆகும். தோலில் 100 வியர்வைச் சுரப்பிகள் 4 மீட்டர் நரம்புகள், 10 மயிர்க்கால்கள், 15 எண்ணெய் சுரப்பிகள் 1 மீட்டர் இரத்தக் குழாய்கள் ஆகியவை உள்ளன என்று அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

இத்தகைய அதிசயப் பணியாற்றும் தோலைப் பற்றியும் அதன் பாதுகாப்பு பற்றியும், அதனைப் பற்றக்கூடிய நோய்கள் பற்றியும், அவற்றுக்கான சிகிச்சை முறை



யையும் நாம் அறிந்தால்தான் நமக்கு அழகுடல் அமையப் பெறும்.

**தோல் நோய்கள்:**

பொதுவாகத் தோலானது உடலுக்கு வெளியிலிருந்தும் தாக்கப்படலாம். உடலுக்கு உள்ளிருந்தும் தாக்கப்படலாம். இதனால் பலவிதமான தோல்நோய்கள் ஏற்படுகின்றன. ஏறக்குறைய 1500க்கும் மேற்பட்ட தோல் நோய்கள் உள்ளதாக அறிவியலார் கண்டறிந்துள்ளனர். இவற்றுள்ளும் சுமார் 25க்கும் கீழ் உள்ள தோல் நோய்களே தொற்றும் தன்மையுடையன.

மனிதர்களை அதிகம் தாக்கும் தோல் நோய்களின் விவரம் வருமாறு:

1. பாக்டீரியாவின் மூலம் பரவும் நோய்
2. வைரஸ் (Virus) மூலம் பரவும் வியாதி
3. காளான்(Fungus) மூலம் பரவும் வியாதி
4. எல்லாவிதமான கரப்பான் நோய் ஒட்டு கரப்பான் (Eczemes)
5. சோரியாசிஸ் (Psoriasis)
6. சொறி சிரங்கு (Scabies)
7. முகப்பரு (Acne)
8. தலைமுடி உதிர்தல்
9. நிறமாற்றம் (Pigmentary disorders)

**உணவுச் சத்துக் குறைவினால் ஏற்படும் தோல் நோய்கள்:**

சத்தான உணவை உட்கொள்ளவில்லையென்றால், வைட்டமின்கள் பற்றாக்குறையினாலும் பின்கண்ட தோல் நோய்கள் ஏற்படும்:

1. பெல்லக்ரா
2. புரதச் சத்துக் குறைவு நோய்
3. ஸ்கர்வி
4. தோல் நிற மாற்றங்கள்
5. வாய்ப்புண்
6. தவளைச் சொறி
7. மீன் தோல் நோய்

**தோல் வியாதியைக் கண்டுபிடிப்பதற்கான பரிசோதனைகள்:**

1. உட்ஸ் லேம்ப் (Woods Lamp) - இதன் மூலம் தலையில் பூஞ்சைக்காளான் மற்றும் போர்பைரியா (Porphyria) வியாதிகளைக் கண்டு பிடிக்கலாம்.
2. வைரஸ் பரிசோதனை (Virological Examination).
3. பாக்டீரியா பரிசோதனை (Bacteriological Examination).
4. இரத்தப் பரிசோதனை (VDRL).
5. காளான் பரிசோதனை (Scrapping for fungus).
6. தோல் பரிசோதனை (Skin Biopsy).
7. எச். ஐ. வி. பரிசோதனை (HIV Test).
8. அலர்ஜி தோல் பரிசோதனை
9. பேட்ச் பரிசோதனை (Patch Test).
10. இம்மூனோ ப்ளோரசன்ஸ் பரிசோதனை.

**வைரஸ்களினால் ஏற்படும் தோல் நோய்கள்**

நஞ்சு என்று பொருள் தரக்கூடிய வைரஸ் பாக்டீரியாவை விட, தோற்றத்தில் மிக மிகச் சிறியது; ஆனால், ஏற்படுத்தும் விளைவுகளில் மிகமிகக் கொடியது. ஒரு மைக்ரான் அளவுள்ள இது ஒரு சதுர மில்லி மீட்டரில் பத்து லட்சம் வைரஸ்கள்வரை கூடியிருக்கும். இதனை ஒரு மின்னணு நுண்ணோக்கியின் மூலம்தான் பார்க்க முடியும். வைரஸ்களுக்குத் தனியாக செல் அமைப்புக் கிடையாது. எனவே வைரஸ் உயிரிதான் வாழவும் சரி, இனப்பெருக்கம் செய்யவும் சரி, உயிருள்ள மற்றொரு செல் தேவை. எனவே, இது நமது உடலில் உள்ள உயிருள்ள செல்களைத் தாக்கி, அவற்றை முற்றிலும் மாற்றி, அவற்றையும் வைரஸ்களாக மாற்றிவிடும். நொடிக்கு நொடி மளமளவென்று இனப்பெருக்கமடைந்து இரத்தத்துடன் கலந்து - காய்ச்சல், தலைவலி போன்ற நோய்களைத்தரும். தோலில் கொப்புளங்களாக ஏற்படும் சின்னம்மை, பெரியம்மை போன்றவை வைரஸ் நோய்களே. மேலும் ஹேர்ப்ஸ் சிம்ப்ளக்ஸ், அக்கி, பரு, பால் உண்ணி மற்றும் எய்ட்ஸ் போன்ற தோல் நோய்களும் வைரஸால் ஏற்படுபவையே.

**அக்கி (Herpeszoster)**

உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து போகும்போது இந்த நோய்களைவைரஸ், நமது உடலின் உணர்ச்சி நரம்புகளைத் தொடர்ந்து தாக்கும். அவ்வாறு தாக்கும்போது சிறியநீர்க் கொப்புளங்கள் ஏற்படும். நாளடைவில்







கொப்புளங்கள் உடைந்து நீர் கசியும். கொப்புளத்தோல் பிரிந்து அடியில் சிவப்புநிறமாகத் தோற்றமளிக்கும். கிருமிகள் சேர்ந்து சீழ் பிடிக்கும். காய்ச்சல் வரும். வலி எடுக்கும். இரண்டு வாரங்களில் கண்ணிலும் நெற்றியிலும் கூட இந்நோய் தோன்றும்; இன்னும் சிலருக்கு இந்நோயின் விளைவாகச் சின்னம்மை கூட தோன்றும்.

**மருக்கள்**

இவை ஆண், பெண், குழந்தைகள், பெரியவர்கள் இப்படி யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். மருக்கள் பொதுவாகப் பார்ப்பதற்கு அருவருப்பாக இருக்குமே தவிர, அவற்றால் எந்தவிதமான தொந்தரவும் இல்லை. இவை பாதம், நகம், ஆண், பெண் பிறப்புறுப்புகளில் வரலாம். இந்நோய்க்கு பார்மலின் 10% என்னும் மருந்தை சிகிச்சைக்குப் பயன்படுத்தலாம். ஆண், பெண் பிறப்புறுப்புகளில் இவ்வித மரு உள்ளவர்கள், போடோபைலம் என்னும் மருந்தை மருத்துவரின் ஆலோசனைப்படி பயன்படுத்தலாம்.

**கரப்பான் படை நோய்**

மிக வேகமாகப் பரவும் தோல் நோய் ஆண், பெண், சிறியோர், பெரியோர் அனைவரையும் பாதிக்கக்கூடிய தோல்நோய் ஆகும். இந் நோயை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. வெளிப்புற மாறுதலால் ஏற்படும் கரப்பான்

2. உட்புற மாறுதலால் ஏற்படும் கரப்பான்.

**பொதுவாகத்தோலில் ஏற்படும் மாற்றம்**

சிவந்து, பொரிப்பொரியாக, கொப்புளங்களாக மாறி, நீர்கொட்டும் நாட்கள் ஆக ஆக, காய்ந்து செதில்கள் தடிக்க ஆரம்பிக்கும், இவ்வாறான கரப்பான்கள்:

1. ஒவ்வாமை கரப்பான் (Atopic Dermatitis) 2. எண்ணெய் கரப்பான் 3. ஒட்டுக் கரப்பான் எனப் பலவகைப்படும்.

**ஒவ்வாமை கரப்பான்**

இந்த நோயை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

- ★ 2 மாதத்திலிருந்து 2 வயது வரை ஏற்படுபவை
- ★ 2 வயது முதல் 10 வயது வரை ஏற்படுபவை
- ★ 10 வயதிற்கு மேல் ஏற்படுபவை.

முழங்கால்களின் பின்புறம், முழங்கைகளின் முன் புறம் காணப்படும். அரிப்பு அதிகமாக ஏற்படும். கன்னம் சிவந்து, சிறிய சிறிய கொப்புளங்கள் ஏற்படும். பின்னர் அவை உடைந்து பெரியதாக மாறும். பிறகு உடம்பு முழுவதும் படிப்படியாகப்பரவும். சொறியச் சொறிய கொப்புளங்கள் உண்டாகி, தோல் தடித்துக் காணப்படும். சில உணவுகள் மற்றும் உடைகள் ஒத்துக்கொள்ளாது.

**முதிர்வடைந்த ஒவ்வாமை கரப்பான்**

இந்நோய் குறிப்பாக முழங்கால் மற்றும் முழங்கைகளின் பின்புறம் தோன்றும். ஆரம்ப காலத்தில் தோல் சிவந்தும், தோல்செதில்கள் வெளிவந்தும் காணப்படும். பின்னர் கொப்புளம் ஏற்படும். அதன் கட்டிகள் உடைந்தும் புண்கள் ஏற்படும்.

**எண்ணெய்க் கரப்பான்:**

பெரும்பாலும் தோலில் எண்ணெய்ப் பசை அதிகம் உள்ளவர்களுக்கு இந்த வகையான கரப்பான் உண்டாகிறது. மஞ்சள் நிற எண்ணெய்ப்பசையுள்ள செதில்கள் தோலில் மேல்பாகத்தில் காணப்படும். பொடுகு, முகப்பரு போன்றவையும் இவற்றுடன் சேர்ந்து காணப்படும். உடலில், குறிப்பாகத் தலைப் பாகம் புருவங்கள் மூக்கின் ஓரம், மார்பு பாகம்,

# வேலை வாய்ப்புகள்

**(4) ஊழியத்தேர்வாணைக்குழு (Staff Selection Commission)**

இது ஒரு மத்திய அரசு அமைப்பு. போட்டித் தேர்வுகளின் மூலம் இது பணியாளர்களைத் தேர்வு செய்யும். இந்நிறுவனம் நடத்தும் தேர்வுகள் சில :

1. Clerks Grade Examination.
2. Inspectors of Central Excise and Income Tax Officers Examination.




மேற்கூறப்பட்ட குமாஸ்தா நிலைத் தேர்வுக்கான கல்வித் தகுதி இளநிலைப் பட்டதாரி வயது வரம்பு 21 முதல் 25 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்தேர்வு ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் இக்குழு (S.S.C.) வினரால் நடத்தப்படுகிறது. இத்தேர்வில் வெற்றி பெறுபவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். நேர்முகத் தேர்வில் வெற்றி பெற்ற பின்னரே பணி நியமனம் செய்யப்படுவர்.

இத்தேர்வில் வெற்றி பெறுபவர்கள் குழு X,Y என வகுக்கப்பட்டுள்ளன. குழு X அலுவலகங்கள் மைய அமைச்சகங்களுக்கும், (Ministries and Departments of Central Government) ஆகும். இவை டெல்லியில் உள்ளன.

குழு Y அலுவலகங்கள், "Subordinate and other offices of the Central Government located in different states" ஆகும்.

(i) இத்தேர்வுக்கான பாடத்திட்டம்
பகுதி 1 : எழுத்துத் தேர்வு
பகுதி 11 : தட்டச்சுத் தேர்வு

எழுத்துத் தேர்வு நான்கு பிரிவுகளாகக் கொண்ட, புற வய வினாக்களாக அமைக்கப்பட்டு இருக்கும்.

1. பொது அறிவு - 50 மதிப்பெண்கள்
2. ஆங்கில அறிவு - 50 மதிப்பெண்கள்





3. கணித அறிவு - 50 மதிப்பெண்கள்
4. பொதுத் திறன் - 50 மதிப்பெண்கள்

என 200 மதிப்பெண்களாகக் கொண்டது எழுத்துத் தேர்வு.

இதில் தட்டச்சுத் தேர்வு என்பது 10 நிமிட கால அளவில் நடத்தப்படும்; இது தகுதி பெறுவதற்காக மட்டும் தான்.

**(ii) Inspectors of Central Excise and Income Tax Officer's Examination**

இத்தேர்வும் ஊழியர் தேர்வாணைக் குழுவால் அறிவிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. இத்தேர்வு வருடத்திற்கு இரு முறை நடத்தப்படுகிறது. ஏப்ரல் மற்றும் அக்டோபர் ஆகிய மாதங்களில் இத்தேர்வு நடைபெறுகிறது.

கல்வித் தகுதி: இளநிலைப் பட்டதாரி.

(i) இத்தேர்வுக்கான பாடத்திட்டம் :
பகுதி 1 : எழுத்துத் தேர்வு
பகுதி 11 : நேர்முகத் தேர்வு

எழுத்துத் தேர்வு நான்கு பிரிவுகளாகப் புற வய (Objective) வினாக்களாகக் கொண்டிருக்கும்.

1. பொது அறிவு - 60 மதிப்பெண்கள்
2. ஆங்கில அறிவு - 40 மதிப்பெண்கள்
3. கணித அறிவு - 40 மதிப்பெண்கள்
4. பொதுத் திறன் - 60 மதிப்பெண்கள்

என 200 மதிப்பெண்களைக் கொண்டிருக்கும்.

இத்தேர்வில் வெற்றி பெறுபவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

இந்த ஊழியத்தேர்வாணைக்குழு (S.S.C.) நடத்தும் தேர்வுகளின் மூலம் ஒவ்வொரு வருடமும் இந்தியா முழுவதுமாக, ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர். ஆண்டு தோறும் நடத்தப்படும் இத்தேர்வுகளில் வெற்றி பெறுபவர்களில், நம் தமிழகத்தின் பங்கு மிகக் குறைந்தே காணப்படுகிறது.

**(iii) Divisional Accountants / Auditors / Upper Division Clerks etc.**

ஊழியர் தேர்வாணைக் குழு (S.S.C.) வால் நடத்தும் போட்டித் தேர்வுகளில் இதுவும் ஒன்றாகும். இத்தேர்வுகளில் வெற்றி பெறுபவர்கள் கீழ்க் கண்ட அலுவலகங்களில் பணி நியமனம் செய்யப்படுவார்கள்.

1. Divisional Accountants in the various offices of Accountant General under C & A.G.

2. Auditors in the offices of the Accountant General (Audit) and in various states and other Audit and Accounts Officers under the C & A.G.

3. Auditors in the Defence Department.

4. Junior Assistants in the various departmentalised Accounts offices in the Central Ministries / Departments.

5. Upper divisions clerks in the offices under the charge of various commissioners of Income Tax.

6. Upper division clerks in the offices under the formation of various collectorates of Central Excise and Customs.

இத்தேர்வில் பங்கு பெறுபவர்கள் வயது வரம்பு 21 முதல் 25 வரை என நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

இத்தேர்வில் பங்கேற்க ஒரு இளங்கலைப் பட்டத்துடன் சார்ட்டர்டு (C.A.) முடித்திருக்க வேண்டும்.

இத்தேர்வு 2 மணி நேரத்தில் எழுதப்படும் புற வய வினாக்களைக் கொண்டு அமைக்கப் பட்டிருக்கும். ஆனால், இதில் ஆங்கில அறிவு அக வய வினாக்களாக அமையும். இத்தேர்விற்கான மதிப்பெண்கள் 200.

இத்தேர்வில் வெற்றி பெற்றவர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

**(5) இரயில்வே மூலம் வேலை வாய்ப்புகள்:**

நம் நாட்டில் வேலை வாய்ப்பு அளிப்பதில் இரயில்வே 'ரிக்ரூட்மெண்ட போர்டு' (Railway Recruitment Board) மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. இது மாநிலங்களில் ஏற்படும் காலி இடங்களுக்கு ஏற்ப R.R.B. போட்டித் தேர்வுகளை அந்தந்தச் செய்தித்தாள்கள், Employment News (Weekly) மூலமாக விளம்பரம் செய்கின்றது. இத்தேர்வுகள் பட்டப்படிப்பு படித்தவருக்கு மட்டுமில்லாமல் பத்தாம் வகுப்பு முடித்து ஏதேனும் தொழிற்கல்வி கற்றவரும் கூட வேலை வாய்ப்பினைப் பெற உதவி செய்கிறது. இத்தேர்வுகளில் பங்கு பெறுபவர்களின் வயது வரம்பு 18 முதல் 30 வயது வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தோல் மடிப்பு முதலிய இடங்களை இந்த நோய் பாதிக்கும். சில சமயம் உடம்பு முழுவதுமே பாதிக்கப்படலாம்.

**சிகிச்சை:**

அடிக்கடி உடலைச் சோப்பு போட்டு, வெந்நீரில் குளிக்கவேண்டும். ஸ்டிராய்டு கிரீம் பயன்படுத்தலாம். தைலம் தடவலாம். ஸ்டிக் ராய்டு என்ற மருந்தையும் உட்கொள்ளலாம்.

**ஒட்டுக்கரப்பான் (Contact Dermatitis)**

உடலுக்கு ஒத்துக்கொள்ளாத பொருள் தோல் மீது பட்டால் சிலமணி நேரத்திலோ அல்லது சில நாட்களிலோ அந்த இடம் தடித்து வீங்கிவிடும்; இதனை ஒட்டுக்கரப்பான் என்பர். உடலில் ஒருசில இடத்தில் மட்டுமே அப்பொருள் ஒவ்வாமையை ஏற்படுத்தும் என்பதில்லை. உடலின் எப்பகுதியில் பட்டாலும், ஒட்டுக்கரப்பான் ஏற்படலாம். மீண்டும் மீண்டும் அப்பொருள் தோலில் படப்பட, மீண்டும் மீண்டும் ஒட்டுக்கரப்பான் வந்துகொண்டேயிருக்கும். இந்த ஒட்டுக் கரப்பானால் அரிப்பு, எரிச்சல் தோன்றும்; புண் உண்டாகும்.

இவ்வகை கரப்பான்கள் – செய்யும் தொழிலாலும், உடுத்தும் ஆடைகளினாலும், அணியும் காலணிகளாலும், பயன்படுத்தும் அலங்காரப் பொருட்களாலும், உண்ணும் உணவாலும், பயன்படுத்தும் மருந்துகளாலும், உலோகங்களாலும், தாவரங்களாலும் வரும் என்பதை மருத்துவ அறிவியலார்கள் கண்டறிந்துள்ளார்கள்.

இவ்வித ஒட்டுக் கரப்பான் நோயினைப் பற்றிக் கண்டறிந்த ஆரம்பகால அறிவியல் அறிஞர்கள் ஜட்சான், பஸிக் சுல்ஸ்பர்க்கர், ப்ரஜண்ட் பேமக் முதலானவர்கள் முக்கியமானவர்கள் ஆவர். தோல் நோயினால் பாதிக்கப்படும் மக்களில் 4 சதவிகிதம் முதல் 7 சதவிகிதம் வரை ஒட்டுக்கரப்பான் நோயினால் பாதிக்கப்படுகின்றனர் என்பதை இவ்வறிஞர்கள் கண்டுபிடித்துக் கூறினர். இவர்களுள் ஜட்சான் எனபவர் ஒட்டுக்கரப்பானைக் கண்டுபிடிக்க பேட்ச்டெஸ்ட் என்னும் பரிசோதனையை முதன் முதலில் அறிமுகப்படுத்தினார்.

உடம்பின் தோலில் சில ஒத்துக்கொள்ளாத பொருள்கள் படும்பொழுது, தோலிலுள்ள 'புரோட்டீன்' கலந்து முழு 'ஆன்டிஜனாக' உருவெடுத்து நிணநீர் வெள்ளணுக்கள் மூலமாக லங்கர்உறான் செல் உதவியுடன் அடைகிறது. அங்கிருந்து உடம்பில் எல்லாப் பாகங்களிலும் நோய் எதிர்ப்புச் சக்தி தாங்கியுள்ள வெள்ளணுக்கள் உடல் முழுவதும் பரவுகின்றன. இதனால் ஒட்டுக்கரப்பான் வேகமாகப் பரவுகிறது. இந்நோய் எல்லா வயதினருக்கும், பரம்பரைத் தன்மை காரணமாகவும் வர வாய்ப்புள்ளது.

**ஒட்டுக்கரப்பானில் இரண்டு பிரிவுகள்:**

தோலில் ஒத்துக்கொள்ளாத பொருள் படும்பொழுது சில மணி நேரங்களில் உண்டாகும் கரப்பான் ஒரு வகை. சில நாட்களில் உண்டாகும் கரப்பான் மற்றொரு வகை.

சாதாரணமாகச் சிலருக்கு உடம்பில் டெட்டால் (Dettol) ஹபினாயில் முதலிய பொருட்கள் பட்டவுடனேயே எரிச்சல் உண்டாகிப் புண் ஏற்படும். இதற்கு ஒட்டு உறுத்தல் கரப்பான் என்று பெயர்.

சிலருக்கு ஒவ்வாமைப் பொருள் உடலில் பட்ட சில நாட்கள் சென்ற பின்னர் தோலில் சில மாற்றங்கள் ஏற்பட்டு, அரிப்பு மற்றும் எரிச்சல் வந்தால் அதற்கு, ஒட்டு உணர்தல் கரப்பான் என்று பெயர்.

**நோய் அறிதல்:**

நோயாளி செய்யும் தொழில், பொழுது போக்கு, அன்றாடம் கையாளும் பொருள், உட்கொள்ளும் மருந்து மாத்திரைகள் மற்றும் வெளி தடவும் களிம்பு போன்றவற்றைத் தீர விசாரித்து அறியவேண்டும். அதன் பின்னர் அவருக்கு எந்தப் பொருளினால் ஒவ்வாமை வருகிறதோ, அந்தப் பொருள் எக்காரணத்தைக் கொண்டும் அவர் உடம்பில் படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

சில வேளைகளில் எந்தப் பொருளால் தனக்கு ஒவ்வாமை ஏற்படுகிறது என்பது, நோயாளிக்கே தெரியாமல் போகலாம். நோயாளிக்கே தெரியாமல் நீண்டநாள் பழக்கத்திலுள்ள ஒரு பொருள்கூட ஒவ்வாமை





உண்டாக்கலாம். அதைத் தெரிந்து கொள்ளாமலேயே அவர் அதனைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்திக்கொண்டும் வரலாம். எனவே, இதனைக் கண்டறிய நோயாளியின் பூரண ஒத்துழைப்பு அவசியமாகிறது.

பேட்ச்டெஸ்ட் என்னும் சோதனை மூலம் ஒவ்வாமைக் காரணத்தைக் கண்டறியலாம். இனி இவ்வகைக் கரப்பான்கள் தோன்றக் காரணமாக உள்ளவற்றை ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

**செய்யும் தொழிலும் ஒட்டுக் கரப்பானும்:**

தான் செய்யும் தொழில் மூலமாகச் சிலருக்கு ஒட்டுக் கரப்பான் வரலாம். விவசாயிகள், தோட்டக் கலைஞர்கள், மருந்தாளுநர்கள், மருத்துவச் செவிலியர்கள் போன்றோர் பயன்படுத்தும் இரசாயனப் பொருட்கள், கருவிகள், புகை, நெடி, ஆவி போன்றவை அவர்களுக்கு ஒவ்வாமை ஏற்படுத்தலாம். அதனால் அவர்களுக்கு ஒட்டுக்கரப்பான் நோயும் ஏற்படலாம்.

டி.டி.டி., லிண்டேன், ஆர்கனோ, பாஸ்பரஸ் காம்பவுண்டு போன்றவற்றால் விவசாயிகள், தோட்டக்கலை நிபுணர்களுக்கு ஒவ்வாமை ஏற்படுகிறது. மேலும் நீண்ட நேரம் சூரிய வெப்பக் கதிர்வீச்சில் வேலை செய்வோரின் தோலில் தடிப்புத் தன்மையும், இறுக்கமும் அதிகமாகி ஒவ்வாமையை ஏற்படுத்தும். ரேடியோகதிர் நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு முதற்கட்டமாக முடி உதிரும். தோலில் இரத்தம் கட்டும். எரிச்சல் ஏற்படும். புண் உண்டாகி ஒட்டுக் கரப்பான் பரவும்.

**உடுத்தும் ஆடையும் ஒட்டுக் கரப்பானும்:**

ஆடைகள் பகட்டாக இருக்கவேண்டும் என்பதற்காகத் தற்போது விதவிதமான ஆடைகளை உடுத்துகின்றனர். ஆனால் தற்கால ஆடைகள் பலவற்றிலும், இரசாயனப் பொருட்கள் கலந்திருப்பதைப் பலரும் அறிந்து கொள்வதில்லை. உடுத்தும் ஆடைகளில் கலந்திருக்கும் சாயம் (Dyes), பார்மல்டிஹைடு (Formaldehyde) ரெசின் (Resin) குரோமியம் (Chromium) போன்ற இரசாயன இழைகளை உடலில் ஏற்றுக்கொள்ள இயலாமல் போகவே, ஒட்டுக் கரப்பான் நோய் உண்டாகிறது. தற்போது கவர்ச்சிகரமாகவும் எடுப்பாகவும் தோற்றமளிக்க வேண்டும் என்பதற்காக



உடலோடு ஒட்டிய உடைகளை அணிந்து வருகின்றனர். இதனால், அதிக வியர்வை, அழுத்தம், அழுக்கு, உராய்வு போன்றவை ஏற்பட்டு ஒட்டுக்கரப்பான் தாக்குகிறது. அவ்வாறே முரட்டுத் தனமான ஆடைகளை அணியும்போது இரத்த நாளங்கள் அழுத்தப் பெற்று வலி, வீக்கம், நரம்புக் கோளாறு போன்றவை ஏற்படுகின்றன. இதனாலும் ஒட்டுக் கரப்பான் ஏற்பட்டு உடல் நலமும் பாதிக்கப்படுகிறது.

இந்நோயைத் தவிர்க்கவேண்டுமானால் எளிய காற்றோட்டமுள்ள ஆடையை அணிந்துகொள்வதுதான் சாலச் சிறந்தது.

**காலணிகளும் ஒட்டுக்கரப்பானும்:**

அணியும் காலணிகள் தற்போதெல்லாம் இரசாயனக் கலவையால்தான் உருவாகின்றன. தோல் செருப்புகளில் குரோமியம் மற்றும் தாவரப் பொருட்கள் கலந்திருக்கின்றன. இவை ஒவ்வாமையை ஏற்படுத்தும். இரப்பர் செருப்புக்களில் கலந்துள்ள மெர்காப்டோமிக்ஸ் (Mercaptomix) ஒவ்வாமைக்கு மூல காரணங்கள் ஆகும். சில சமயம் பிளாஸ்டிக் செருப்பு போடுபவர்களுக்கு பிளாஸ்டிக் செருப்பின் மேற்பட்டைக்கு அடியில், தோலில் வெண்குட்டம் ஏற்படும். மானோ பென்சைல் ஈதர் ஆப் ஹைடிரோகுயின் (Mono Benzyl Ether of Hydroquinine) என்னும் இரசாயனப் பொருள்தான் இதற்குக் காரணம். எனவே அணியும் காலணிகளையும் விழிப்புடன் பார்த்து அணியவேண்டும்.

எவ்விதத் தோல்வியாதியானாலும் சரி; அலட்சியம் செய்யாமல் உடனே மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுவது நல்லது.

**தேர்வுத் திட்டம் :**

R.R.B. இத்தேர்வுகளை இரண்டு பிரிவுகளாக வகுத்துள்ளது.

1. எழுத்துத் தேர்வு
2. நேர்முகத் தேர்வு

எழுத்துத் தேர்வில் 200 மதிப்பெண்களைக் கொண்ட புலனறி வினாக்கள் கீழ்க் கண்ட பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும்.

1. பொது அறிவு - 50 மதிப்பெண்கள்
2. பொது ஆங்கிலம் - 50 மதிப்பெண்கள்
3. கணித நுண் அறிவு - 50 மதிப்பெண்கள்
4. தன் அறிவு சோதனை - 50 மதிப்பெண்கள்

இது மட்டுமல்லாமல் போட்டியாளர்களின் ஆங்கில அறிவைச் சோதிப்பதற்காகச் சிறு ஆங்கில கட்டுரை அமைப்பு போன்ற கேள்விகள் இருக்கும்.

இத்தேர்வில் வெற்றி பெறுபவர்கள் RRB யினரால் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப் படுவர். தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அவரவர் மாநிலங்களிலேயே பணி நியமனம் செய்யப்படுவார்கள். RRB யின் மூலம் ஆண்டு தோறும் இந்தியா முழுவதிலும் மாநிலங்கள் வாரியாக நடத்தப் பெறும் தேர்வுகளின் மூலமாக ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வேலை வாய்ப்புப் பெறு கின்றனர். எனவே வேலை வாய்ப்பு அளிப்பதில் RRB முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதில் ஐயமில்லை.

**6. இந்திய ராணுவம் (Armed Forces)**

தரைப்படை, விமானப்படை, கடற்படை என்ற மூன்று பிரிவுகளிலும் பல்வேறு நிலைகளுக்கான தேர்வுகளும், தேர்வுகளை அணுக வேண்டிய முறைகள் பற்றியும் அவ்வப்போது வரும் அறிவிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து இளைஞர்கள் செயல்பட வேண்டும். (Employment News) மற்றும் வட்டார மொழிகளிலும் அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. இந்த அறிவிப்புகளில் கல்வித் தகுதி, வயது வரம்பு, பணிகளுக்கான பயிற்சி துவங்கும் காலம், எப்படி, யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்? என்பன போன்ற செய்திகள் வெளியிடப்படுகின்றன. மூன்று பிரிவினருக்கும், மூன்று துறைகளுக்கும் பொதுவாக நுழைவுத் தேர்வினை நடத்துகிற National Defence Academyயின் பயிற்சிகளுக்கு ஆண்டு தோறும் ஏப்ரல், அக்டோபர் மாதங்களில் அறிவிப்பினை மையத் தேர் வாணையம் வழங்குகிறது. அறிவித்த நாளி லிருந்து ஆறு வாரங்களுக்குள் விண்ணப் பத்தினை நிறைவு செய்து அளித்திட வேண்டும். எழுத்துத் தேர்வு இரண்டு நாள்களில் நடைபெறும்.

| தாள் | நேரம் | மதிப்பெண் |
|---|---|---|
| கணிதம் | 2.30 மணி | 300 |
| பொது நுண்ணறிவு சோதனை | 2.30 மணி | 600 |

வினாக்கள் புறவய வகையைச் சார்ந்தன. வினாக்கள் ஆங்கிலத்திலேயே இருக்கும். இரண்டு தேர்வுகளுக்கும் உரிய பாடத் திட்டங் களும் அறிவிக்கையிலேயே அறிவிக்கப்படும். பின்னர் உடற்கட்டுத் தகுதிகள் நடத்தப்பட்டு,








நேர்முகத் தேர்வும் நடத்தப்படும். அதன் பின்னர் மருத்துவத் தகுதியும் சோதிக்கப்படும். ஜனவரி முதல் நாளும், ஜூலை ஒன்றாம் நாளும் இரண்டு பயிற்சிகளை அகாடமி நடத்துகிறது. ஏறக்குறைய 300 பயிற்சியாளர்கள் ஒவ்வொரு தேர்வுக்கும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**கப்பல் படை (பொறியியல் பிரிவு)**

10+2 (இயற்பியல், வேதியியல், கணிதம்) இவற்றுள் குறைந்தபட்சம் 70 விழுக்காடு பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். இவர்களை (Service Selection Board) தகுதியின் அடிப் படையில் நேர்முகத் தேர்வும், உடற்கட்டுத் தேர்வும் நடத்தித் தேர்ந்து எடுக்கும். நான்கு ஆண்டுகள் கடற்படைப் பொறியாளர்களாகப் பயிற்சி பெற்ற பின்னர் இவர்கள் பணியில் அமர்த்தப்படுவர். 10+2 (உயிரியல்) படித்தவர்களை (Medical Crops) க்காகத் தேர்ந்தெடுப்பார்கள். பூனா நகரில் உள்ள இராணுவ மருத்துவக் கல்லூரியில் இவர்கள் பயிற்சி பெறுவர். ஆண்டு தோறும் 105 மாணவர்களும் 25 மாணவியர்களும் இப்பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

பட்டதாரி, பட்ட மேற்படிப்பு படித்தவர் களை இராணுவப் பணிக்கானப் பயிற்சிக்கு "Indian Military Academy" (IMA) - Dehradun, Naval Acadamy - Goa, Air Force Academy - Dundugal, Officer's Training School - Madras. ஆகிய இவைகள் தேர்ந்து எடுக்கிறது. மையத் தேர்வாணையம் இதற்கான விளம்பரங்களை மே மாதத்திலும், நவம்பர் மாதத்திலும் வெளியிடுகிறது. ஆண்டில் இரண்டு முறை தேர்வுகள் நடைபெறுகின்றன. மையத் தேர்வாணைய அறிக்கை இதனைப் பற்றிய முழு விவரங்களை வெளியிடுகிறது.

**தேர்வுத் திட்டம்**

| பாடம் | காலம் | மதிப் பெண்கள் |
|---|---|---|
| 1. ஆங்கிலம் | 2 மணி | 100 |
| 2. பொது அறிவு | 2 மணி | 100 |
| 3. ஆரம்ப நிலைக் கணிதம் | 2 மணி | 100 |

இப்பாடத் திட்டம் IMA, National Academy மற்றும் Air Force Academy க்கு உரித்தானது.

Officers Training Academy யில் சேர்வதற்கு கீழ்க்கண்ட பாடத்திட்டம் வரையறுக்கப் பட்டுள்ளது.

| பாடம் | காலம் | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. ஆங்கிலம் | 2 மணி | 100 |
| 2. பொது அறிவு | 2 மணி | 100 |

இத்தேர்விற்கான வினாக்கள் புறவய வினாக் களாகவும், ஆங்கிலத்திலும் இருக்கும்.

இந்திய இராணுவத்தின் மகளிருக்கான சிறப்பு நுழைவுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றது. காலியிடங்களுக்கு ஏற்ப விளம்பரங்கள் தரப்படுகின்றன. இதற்கான விளம்பரங்களை (Employment News) வெளி யிடுகிறது. விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

Additional Directorate General of Recruiting
(Women Entry Section)
West Block III,
R.K. Puram,
New Delhi - 110 066.

விளம்பரத்திலேயே விண்ணப்பப் படிவங் களும் இணைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**Para Military Forces**

இது மூன்று அமைப்புக்களை உள்ளடக்கியது.

(i) Indo Tibetian Border Force (ITDP)
(ii) Central Reserve Police Force (CRPF)
(iii) Border Security Force (BSF)

இப்பிரிவினர்கள் நமது நாட்டின் எல்லையில் பாதுகாப்பதோடு உள் நாட்டுப் பாதுகாப்புப் பணியினையும் செய்துவருகின்றனர். வீரச் செறிவு மிக்கவர்கள் இப்பணியில் சேரலாம். இப்பணிக்கான நுழைவுத் தேர்வு, எழுத்துத் தேர்வு, உடற் பயிற்சித் தேர்வு, நேர்முகத் தேர்வு என மூன்று தன்மையது. எழுத்துத் தேர்வில் இரண்டு நாட்கள், முதல் தாளில் பொது அறிவு, அடிப்படைத் திறன், கணித நுண்ணறிவுகள் சோதிக்கப்படுகின்றன. இரண்டாம் தாளில் ஆங்கிலம் (அ) இந்தி மொழிச் செம்மை சோதிக்கப்படுகிறது. தேசிய மாணவர் படையைச் சார்ந்தோருக்கும், சிறந்த விளையாட்டு வீரர்களுக்கும் தேர்வில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. இப்பணியில் சேர விழைவோர் கீழ்க்கண்ட முகவரிகளுக்குத் தொடர்பு கொள்ளலாம்.

(i) Deputy Director (Personal), BSF HQ Block
No. 10, C.G.O Complex, Lodhi Road,
New Delhi - 110 003.

(ii) Directorate General, Indo - Tibetian Border Police
(M.H.A.) Block 2, CGO Complex,
Lodhi Road, New Delhi - 110 003.

(iii) Central Reserve Police Force, CGO Complex
Lodhi Road, New Delhi - 110 003.

**கடற்கரைக் காவல் படையினர் (Coastal Guard)**

இதற்கான நேரடித் தேர்வும் பயிற்சியும் பற்றிய விளம்பரங்கள் (Employment News) வெளியிடப்படுகின்றன. எட்டாம் வகுப்புப் படித்தவர்கள் கூட Navik (Domestic Branch) சேர்ந்து பணியாற்ற முடியும். இவர்களுக்கு வயது 17 லிருந்து 22 வயது வரை இருக்கலாம். SC,ST பிரிவினருக்கும் 5 ஆண்டு விதி விலக்கு உண்டு. நல்ல உடற்கட்டு இருக்க வேண்டும். உயரம் 187 செ.மீ எடை 45 கிலோ இருக்க வேண்டும்.

பத்தாம் வகுப்புப் படித்தவர்கள் Navik (General Duty) யில் சேர்ந்துவிடலாம். இதே வயது வரம்பும், உடற்கட்டும் பொருந்தும்.

மெட்ரிக் படித்து மெக்கானிக்கல் எலக்ட்ரிக்கல், எலெக்ட்ரானிக் பொறியியல் டிப்ளமோ பெற்றவர்கள் 22 வயது நிரம்பியிருந்தால் Yantrik (Techical Branch) ல் சேர வாய்ப்பிருக்கிறது. SC/ST பிரிவினருக்கு உச்ச வயது வரம்பு 27 ஆகும். ஏனைய பதிவுகளுக்கான உடற்கட்டு இதற்கும் பொருந்தும். தமிழகத்தைச் சார்ந்தவர்கள் SC/ST பிரிவினர் இத்துறையில் சேர்ந்திட முயற்சி மேற்கொள்ளலாம். மேலும் இந்தத் துறையில் Officers Cadre பயிற்சியும், நியமனமும் நடைபெறுகின்றன. பட்டதாரிகள் Assistant Commandant (Central Duty) பதவிக்கு விண்ணப்பிக்கலாம். 12ம் வகுப்பு படித்தவர்கள் அல்லது Commercial Pilot Licence வைத்திருப்பவர்கள் Assistant Commandant பதவிக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் விவரம் வேண்டுவோர் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

> முயற்சி வளர்ந்து தேயும் நிலவு அல்ல; மேலே மேலே வளர்ந்து கொண்டிருப்பது.
>
> – பிளிங்க்டன்

Director (Training) Recruitment Cell, Coast Guard Head Quarters "E", Block Huttments, DHQ PO Delhi - 110 001.

**தொழிற் பாதுகாப்புப் படை (Industrial Security Force)**

பெரிய தொழிலகங்களை இப்படையினர் பாதுகாக்கின்றனர். பாட்னா பல்கலைக்கழகம் 'Post-Graduate 'Diploma in Industrial Safety Management' என்ற துறையில் பயிற்சி அளிக்கிறது. ஓராண்டு கால டிப்ளமோ படிப்பிற்குச் சேர இயற்பியல், வேதியியல், கணிதம் படித்த பட்டதாரிகள் அல்லது இளநிலைப் பொறியியல் பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம். பொறியியல் பட்டதாரிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. மொத்தம் உள்ள 50 இடங்களில் 10 இடங்கள் நிறுவனங்கள் அனுப்புகின்றவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. இப்படிப்பிற்கான நுழைவுத் தேர்வு இரு நிலையினது. 1. எழுத்துத் தேர்வு 2. நேர்முகத் தேர்வு.

எழுத்துத் தேர்வு 3 தாள்களைக் கொண்டது.

(1) கணிதம் (2) இயற்பியலும், வேதியியலும் (3) பொது அறிவு.

ஒவ்வொரு தாளுக்கும் 50 மதிப்பெண்கள் வினாக்கள் புறவய வினாக்கள் ஆகும். நேர்முகத் தேர்விற்கு 50 மதிப்பெண்களே. தென் மாநிலங்களைச் சார்ந்தவர்கள் இத்தேர்வு குறித்து மேலும் விவரங்கள் அறிய வேண்டுமானால் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ள வேண்டும்.

DIG. CISF (South Zone), TNHB Building, Anna Nagar East, Madras 600 102.

தமிழகத்தைச் சார்ந்தவர்கள் இத்துறையில் தங்கள் வாய்ப்புக்களைப் பெறுவதற்கு முயலவேண்டும்.

மைய விசாரணைக்கு (Central Bureau of Investigation)

இப்பொழுது நாடெங்கிலும் இந்த அமைப்பினைப் பற்றிப் பரவலாகப் பேசப்படுவதை நாம் அறிவோம். இந்த அமைப்பில் பணியாற்றுவதற்கு, பலத்த போட்டி இருக்கிறது. மையத் தேர்வாணையம் இதற்கான அறிவிப்பினை வெளியிடுகிறது.





இந்த அமைப்பில் Sub-Inspector Assistant Public Prosecutor, Senior Public Prosecutor Group 'D' போட்டித் தேர்வின் மூலம் நேரடியாகத் தேர்ந்து எடுக்கப்படுகின்றனர்.

Assistant Public Prosecutor பணிக்குக் குறைந்த அளவு 5 ஆண்டு பயிற்சியுள்ள இளநிலை சட்டப்பட்டதாரி விண்ணப்பிக்கலாம். DSP பதவிக்கு பத்தாண்டுப் பயிற்சியுள்ள சட்டப்பட்டதாரி விண்ணப்பிக்கலாம். Sub-Inspector பதவிக்கு Central Staff Selection Commision ஒவ்வொரு ஆண்டும் ஜுன் - ஆகஸ்டு மாதங்களில் போட்டித் தேர்வு நடத்தித் தேர்ந்து எடுக்கும். Sub-Inspector க்கான வயது வரம்பு 18 லிருந்து 25 வயது வரை பட்டதாரியாக இருக்கவேண்டும். அவருடைய உயரம் 5' 6", மார்பளவு 32' + 2".

ஆங்கிலத்திலும், பொது அறிவிலும் எழுத்துத் தேர்வு நடைபெறுகிறது. பின்னர் நேர்முகத் தேர்வு. தமிழகத்தினர் இத்துறையில் வேலைவாய்ப்பினைப் பெற முயற்சிக்க வேண்டும்.

**9. கம்பெனி செக்ரட்டெரிஷிப் (Company Secretaryship)**

ஒரு குழுமத்தின் சட்ட பூர்வப் பணிகளையும், பங்குகள் வழங்குவதையும்




கவனிப்பவர் கம்பெனி செகரெட்டரி ஆவார். இந்தத் துறை அண்மைக் காலங்களில் வாணிபக் குழுமங்கள் அதிகரித்து வருவதால் சிறப்புப் பெற்றுவருகிறது. முன்பெல்லாம் இந்தப் பயிற்சியினை மேற்கொள்ள விரும்புபவர் இளநிலைப் பட்டதாரியாக இருக்க வேண்டும். ஆனால் இப்பொழுது +2 முடித்தவர்கள் Foundation Course சேர முடியும். +2 படிக்கின்ற மாணவர்கள் கூட இப்பயிற்சியில் சேர முடியும். அனால் பயிற்சியில் சேர்ந்த ஆறு மாதங்களுக்குள் +2 தேர்வில் வெற்றி பெற்ற சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்குள் சேர்க்கப்பட்டவர்கள் டிசம்பர் மாதத்தில் தேர்வு எழுதலாம். செப்டம்பர் மாதத்திற்குள் சேர்க்கப்பட்டவர்கள் அடுத்த ஆண்டு ஜுனில் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். Foundation Course ல் நான்கு பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

அவைகளாவன.

Business Communication
Business Laws and Management
Principles of Accountancy
Economics and Statistics.

இந்தப் பயிற்சி அஞ்சல் வழியாக வழங்கப்படுகின்றது. மண்டலக் குழுக்களும் (Regional councils and chapters) இப்பயிற்சிக்கான வகுப்புக்களை நாடெங்கிலும் நடத்துகின்றது. விரும்புகின்ற மாணவர்கள் கட்டணம் செலுத்தி இப்பயிற்சியினைப் பெற்றுக்கொள்ள முடியும். இத்தேர்வினை ஆங்கிலத்திலோ, இந்தியிலோ எழுதலாம். பயிற்சிப் பாடங்கள் ஆங்கிலத்திலேயே இப்பொழுது வழங்கப்படுகின்றன. இப்பயிற்சிக்கான பதிவுக் கட்டணம் ரூ. 800/- ஆகும். இப்பயிற்சியில் வெற்றி பெற்றவர்கள் கம்பெனி செகரெட்டரிஷிப் கோர்ஸில் மாணவர்களாகப் பதிவு செய்யப்படுவர்.

நுண்கலை இளநிலைப்பட்டம் பெற்றவர்கள் தவிர ஏனைய பட்டதாரிகள் Foundation Course ல் இருந்து விதிவிலக்குப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் ICAI (அ) ICAWI நிறுவனங்களின் இறுதித் தேர்வினை எழுதியவர்களுக்கும் விதிவிலக்கு உண்டு.

Foundation Course ல் வெற்றிபெற்ற பின்னர் Intermediate, Final என்ற இரு நிலைகளில் பயிற்சி வழங்கப்படும். முதல்நிலை பயிற்சிக் காலம் 9 மாதங்கள் ஆகும். Final Course படிக்கின்ற மாணவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பணிக் குழுமங்களில் குறைந்தது 12 மாதங்கள் பயிற்சி பெறவேண்டும். மேலும் 4 மாத கட்டாயப் பயிற்சியினையும் பெறவேண்டும். இதில் 3 மாதங்கள் The Institute of Company Secretaryship of India (ICSI) அங்கீகரித்த ஒரு குழுமத்தில் பயிற்சி பெறவேண்டும். Registrar of Companies (or) Stock Exchange அல்லது அதற்குச் சமமான நிறுவனங்கள் ஆகிய ஏதாவது ஒன்றில் 15 நாட்களும் ICSI நேரடிப் பார்வையில் 15 நாட்களும் பயிற்சி பெறவேண்டும். இதன் பிறகுதான் பயிற்சியாளர்கள் Associate Membership of the ICSI என்ற நிலையினைப் பெற முடியும். இத்தகைய பயிற்சியைப் பெற்றவர்கள் வங்கிகள், நிதி நிறுவனங்கள், Stock Exchange, Company Law Boards, Department of Company Affairs, தனியார், பொது வணிகக் குழுமங்கள், அரசுத் துறைகளில் கம்பெனி செகரெட்டரியாகப் பணியாற்ற முடியும். உலகமயமாகும் இன்றைய சூழலில் இத்துறையினர் உயர் ஊதியம் பெறக்கூடிய வாய்ப்பினைப் பெற முடியும். தொடர்பு முகவரி:

# The Institute of Company Secretaries of India,
ICSI House, 22, Institutional Area,
Lodhi Road,
New Delhi - 110 003

சென்னை நுங்கம்பாக்கத்தில் இந் நிறுவனத்தின் மண்டல அலுவலகம் செயல் படுகிறது.

**10. கணக்கியலார் (ACCOUNTANCY)**

கணக்கர்கள் நிறுவனங்களின் நிதிநிலை பற்றிய திட்டமிடலையும் பதிவேடுகளையும் பாதுகாத்துச் செயலாற்றுகின்றனர். கணக்கியலார் இருவகைப்படுவர்.

1) Charted Accountants (CAS)
2) Cost and Works Accountants (CWA)

+2 முடித்தவர்கள் இப்பயிற்சியினை மேற்கொள்ளலாம்.

– ஓராண்டு காலத்தில் Foundation Course முடித்த பின்பு, பணியாற்றுகின்ற ஒரு CAவிடம் பயிற்சி பெறுவதற்குப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அனைத்திந்திய நிறுவனத்தின் 3 ஆண்டு பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும். ஓராண்டுகாலப் பயிற்சிக்குப் பின்னர் Intermediate தேர்விற்கும் அதற்குப் பின் ஆறு மாத காலப் பயிற்சிக்குப்பின் Final தேர்விற்கும் தயாராகிக்கொள்ள வேண்டும். இறுதித் தேர்வு எழுதி வெற்றிபெற்ற பின்னர் The Institute of Chartered Accountants of India என்ற நிறுவனத்தின் உறுப்பினராகப் பதிவு செய்யப் படுவர். இதற்கான மண்டல அலுவலகம் சென்னையில் உள்ளது. தென் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்.

Joint Director of Studies,
The Institute of Chartered Accountants of India,
# 122, Nungambakkam High Road,
P.B. No. : 3314,
Madras - 600 034.

இதற்கான பயிற்சி அஞ்சல் வழியாகவே வழங்கப்படுகின்றது. இப்பயிற்சியினைப் பெற்றவர்கள் CA என அழைக்கப்படுகின்றனர்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

## மருத்துவக் கண்டுபிடிப்புகள்

**எக்ஸ்ரே** – உள்ளுறுப்புகளின் நோயை நிர்ணயிக்கப் பயன்படும் எக்ஸ்ரே 1905-ல் வில்ஹேல்ம் ராண்ட்ஜென் என்பவரால் கண்டறியப்பட்டது.

**பேஸ்மேக்கர்** – இருதயம் ஒழுங்காக வேலை செய்ய முடியாமற் போகும்போது சிறு மின் அதிர்வுகளைக் கொடுத்து சரியாக இயங்கச் செய்யும் இச்சாதனத்தை 1952-ல் அமெரிக்க டாக்டரான பால் ஜோஸ் கண்டு பிடித்தார்.

**ஸ்டெதாஸ்கோப்** – இருதயம், சுவாசப்பையின் இயக்கத்தை அறிந்து கொள்ள மருத்துவர்கள் பயன்படுத்தும் ஸ்டெதாஸ்கோப்பை 1819-ல் பிரான்ஸ் நாட்டு ரெனி பென்னக் கண்டு பிடித்தார்.

**தெர்மாமீட்டர்** – உடல் வெப்பத்தை அறிய உதவும் இக்கருவியை 1593-ல் இத்தாலி நாட்டு கலிலியோ கண்டு பிடித்தார்.





## வாசகர் இதயம்

ஏதோ கடமைக்கு வாங்கிடும் நிலையில் வெளிவந்து கொண்டிருந்த 'தமிழரசு' அறிவுப் பெட்டகமாக மாறியிருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன். பாதுகாத்து வைக்கவேண்டிய இதழ் வரிசையில் தமிழரசு இடம் பெற்று விட்டது என்றே கூறலாம்.

–துரை. சந்திரசேகரன்,
பெரியார் இல்லம், வடலூர் - 607 303.

புதிய மாவட்டங்கள் உருவாக்கம் பற்றிய செய்திகளை மிகவும் தெளிவுபட வெளியிட்டிருந்தீர்கள்; மிக்க நன்றி.

– அ. கந்தசுவாமி
திருப்பூர்

'தமிழரசு' அரசு கெஸட்போலிருந்த நிலைமையை மாற்றி - சிறப்பான வலிமையான உள்ளடக்கத்தோடு வருவது புதுத் தெம்பளிக்கும் விஷயம். மாற்றத்திற்கு நல்வாழ்த்து.

– சே. காதர் மொகிதீன்
வந்தவாசி

புதிதாக மலர்ந்திருப்பது 'அரசு' மட்டுமல்ல, பயன்தரும் படைப்புகளோடு புதியபொலிவுடன் மலர்ந்து மணம் பரப்பும் தன்னிகரில்லாத் தமிழரசுமேயாகும்.

– குருசாமிராஜ்
காசிபாளையம்

முற்றிலும் பயன்படும் வகையிலும், படித்து மகிழத்தக்க அம்சங்களைத் தாங்கிக் கொண்டும் 'தமிழரசு' வெளிவருவது, உள்ளத்தை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்துகிறது. அரசின் திட்டங்களைப் பறைசாற்றும் வெறும் செய்தி ஏடாகமட்டுமன்றிப் பல்சுவையுடன் திகழ்வது மிகச்சிறப்பு.

– என். சண்முகம்
திருவண்ணாமலை

ஊட்டச் சத்து வழங்கும் பயறுவகைப் பயிர்கள் போன்ற வேளாண்மைக் கட்டுரையைப் பலரிடமும் படித்துக் காட்டினேன்; அதே போல மருத்துவக் கட்டுரைகளும். நல்ல பணி. தொடர்க.

– நல்லாசிரியர்
ப. முருகேசபாண்டியன்
கரப்பாடி, நாகூர்

பள்ளிகளை நேசிக்க வைப்போம் என்று தாங்கள் வெளியிட்டிருந்த கவிதை மிகவும் அற்புதம்; மாணவ மாணவிகள் விரும்பும் ப டி ய ா ன இப்படிப்பட்டவைகளைத் தொடர்ந்து வெளியிடுங்கள்.

– எஸ்.எஸ். வாசன்
தென்னலப்பாக்கம்,
வந்தவாசி

கையில் எடுத்தாலே தூங்கவைப்பதாக இருந்தது முந்தியஆட்சியில்வந்த 'தமிழரசு'; இந்தஆட்சியிலோ, எப்போது வரும் என்று ஏங்க வைக்கிறதே!

– நீடா. சி. இளஞ்செழியன்,
சாலியமங்கலம்

ஆசிரியர் மடல், அறிவியல் துளிகள் எல்லாம் தமிழரசைத் தரமுள்ள தாளிகை ஆக்குகின்றன; வளர்க. வெல்க.

– ச.வே. சுப்பிரமணியன்
தாத்தையங்கார்பேட்டை

ஆசிரியரும் வெளியிடுபவரும் : என்.எஸ். பழனியப்பன் இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
[illegible]
துணை இயக்குநர் : [illegible]
ஆசிரியர் குழு : [illegible]
[illegible] தொலைபேசி எண் : 568926, 568927
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002.

# ஆசிரியர் மடல்

'மந்திரி நமது மாநகர் தன்னில் மாத மும்மாரி
பொழிகிறதா?' என்று அரண்மனைக்குள்ளேயிருந்து கேட்கும்
மன்னராட்சிக் காலமல்ல இது; மக்களாட்சிக் காலம்!
திரைப்படம் ஒன்றில் இதனை முன்பு எழுதிப் புகழ்பெற்றவரும்
'நீரின்றமையாதுலகு' என்பதை நன்குணர்ந்தவருமான மாண்புமிகு
முதல்வர் கலைஞர் அவர்கள்,நாடு வளம்பெற...
நாட்டுமக்கள் நலம்பெற... மழைமாதம் வரும்வரை
பொறுத்திராமல், தக்க பல நடவடிக்கைகளை இப்போதே
விரைந்து மேற்கொண்டுள்ள மாதம் இது!
அவர்தம் பெருமுயற்சியால், ஆந்திரத்திலிருந்து
கிருஷ்ணா நதிநீர் வரும் மாதமும்கூட!
அதுமட்டுமல்ல; நீண்ட நெடுங்காலமாக
இருந்து வந்த காவிரி நதிநீர்ப்பிரச்சினை,
நமக்குச் சாதகமாகப் புதுத் திருப்பம் அடைந்திருக்கும்
மாதமும் ஆகும் இது! மாண்புமிகு தமிழ்நாடு -
கர்நாடக முதலமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்தி
நல்லதோர் முடிவெடுத்துள்ளனர்.
தந்தை பெரியார், அறிஞர் அண்ணா
பிறந்த இந்த மாதம்,இவற்றாலும் மாபெரும் பெருமை
பெறுகிறது; நம்மனம் மகிழ்வால் நிறைகிறது!

214609





தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே. எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| 6-4-98 | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.